Koviloor Digital Library

திருத்தொண்டர் வரலாறு

தெய்வச் சேக்கிழார்

Acc. No. 14765
5/5
Reference Book

பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/5

திருத்தொண்டர் வரலாறு

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 14765

பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்
தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005.

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை-600108.

Acc. No. 14765

Koviloor Digital Library

முதல் பதிப்பு : மார்ச், 2009
திருவள்ளுவர் ஆண்டு : 2040
உரிமை : ஆசிரியர்க்கு

விலை : ரூ. 175.00

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் :1572

நினைவில் வாழும்
நிறுவனர்

ச. மெய்யப்பனார்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச் செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடங்கள்:
மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608001. ✆:230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108. ✆:25361039
6, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை - 600017. ✆:24357832
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001. ✆:2622853
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641001. ✆:2397155
78, செரி சாலை, சேலம் - 636001. ✆:3207722
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620002. ✆:2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

Koviloor Digital Library

த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை

119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை-600 034.

நாள் : 10.03.2009

வாழ்த்துரை

உலகெலாம் என்று தொடங்கி உலகெலாம் என்று தம் காப்பியத்தை நிறைவு செய்தவர் தெய்வச் சேக்கிழார். அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் தம் காப்பியத்துள் செம்மையுற விளக்கியவர் தெய்வச் சேக்கிழார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளை யும் அடியார்கள் வாழ்வில் விளக்கிக் காட்டினாலும், சரியை - கிரியை இணைந்த தொண்டு நெறியையே சேக்கிழார் தம் காப்பியத்துள் முதன்மைப்படுத்தியுள்ளார்.

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனார் கூறுவதுபோலத் தொண்டு நெறியே காப்பியத்தின் தலைமைப் பண்பாகத் திகழ்கின்றது. மக்களுக்கும், மக்களை உள்ளிருந்து இயக்கும் மகேசனுக்கும் தொண்டு செய்து சிறந்தவர்கள் நாயன்மார்கள். அடியார்கள் வேண்டுவனவற்றைக் குறைவின்றி அளித்து அதன்வழி இறையருளைப் பெற்றவர்கள் நாயன்மார்கள். நாயன்மார்களாகிய திருத்தொண்டர்களின் வரலாற்றைத் தெய்வச் சேக்கிழாரின் அடியொற்றி மும்முறை தொடர் சொற்பொழிவு ஆற்றியவர் **பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் அவர்கள்.**

முதற்சொற்பொழிவு 64 வாரங்களும் இரண்டு மூன்றாவது சொற்பொழிவுகள் 108 வாரங்களும் ஆற்றியவர் பேராசிரியர் அவர்கள். இம்மூன்று சொற்பொழிவுகளையும் செவிமடுக்கும் வாய்ப்பினைப் பெற்றவன் நான். 1998ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி நகர் அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலில் நான் வழிபாடு செய்யச் சென்றபோது கணீரென்ற குரல் என்னை ஈர்த்தது. அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் பேராசிரியர் அரங்க. இராமலிங்கம். குரலின் ஈர்ப்பாலும் சொற்பொழிவினைக் கேட்கும் ஆர்வத் தாலும் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் மத்தியில் நானும் ஒருவனாக அமர்ந்தேன். அன்று முதல் எங்கள் இருவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. அந்நாள் முதல் பேராசிரியரின் சொற்பொழிவினைப் பலமுறை கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அதனால் ஆன்மிக இலக்கியங்களின்பால் என் கவனம் திரும்பிற்று. பின்னர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையராகப் பொறுப்பு கிட்டியபோது அது பெரிதும் உதவிகரமாக அமைந்தது. இவ்வகையில் பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் என்னைத் தடுத்தாண்ட்கொண்ட பெருந்தகையாவார். இரண்டாவது சொற்பொழிவு சென்னை, நுங்கம்பாக்கம், அருள்மிகு அகத்தீசுவரர் திருக்கோயிலில் 108 வாரங்கள் பேராசிரியர் நிகழ்த்தினார். அப்பொழி வினையும் பலமுறை சென்று கேட்கும் வாய்ப்பினை நான் பெற்றேன். மூன்றாம் தொடர் சொற்பொழிவு கலைஞர் கருணாநிதி நகர் அருள்மிகு சக்தி விநாயகர்

Koviloor Digital Library

திருக்கோயிலில் மீண்டும் 108 வாரங்கள் பேராசிரியர் நிகழ்த்தினார். பணிச்சுமை காரணமாக இச்சொற்பொழிவினை அவ்வப்போது கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன். நிறைவு விழாவில் கலந்து கொண்டு அதனை ஈடுசெய்தேன்.

நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மூன்றாவது தொடர் சொற்பொழிவில், தான் பேசப்போகும் கருத்தின் சுருக்கத்தினை நான்கு பக்க அளவில் தட்டச்சு செய்து ஒவ்வொரு வாரமும் திருக்கோயிலில் அனைவருக்கும் வழங்கி வந்தார். அவ்வாறு அவர் 108 வாரங்கள் வழங்கிய சொற்பொழிவின் சுருக்கங்கள் தொகுக்கப்பெற்று இன்று நூலாக உங்கள் கைகளில் தவழ்கின்றது. இந்த நூல், பெரிய புராணம் பற்றிய பிற நூல்களிலிருந்து சிலவகையில் மாறுபட்டு, சிறப்புற விளங்குகிறது. ஒவ்வொரு நாயன்மார் பற்றிச் சொல்லும் போதும், அவர் பற்றிய குறிப்பைச் சொல்லி, சுந்தரரின் திருத்தொண்டர் தொகையில் உள்ள தொடர்புடைய வரிகளைச் சுட்டிக்காட்டி, பின்பு அந்த நாயன்மார் வரலாறு, சேக்கிழாரின் இலக்கிய நயம் முதலியன எடுத்துரைக்கும் பேராசிரியரின் பாங்கு படித்து மகிழத்தக்கது. முத்தாய்ப்பாக, குறிப்பிட்ட நாயன்மார் தொடர்புடைய திருக்கோயில், ஊர் பற்றிய விவரமும் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளமை என் போன்றோருக்குப் பயனுள்ளதாகும். இந்நூல் சைவத் தமிழிலக்கிய வரிசையில் தமிழன்னையின் ஒரு சிறந்த அணிகலனாக விளங்கும். இந்நூல் அனைத்து நூலகங்களிலும், குறிப்பாக ஆன்மிக அன்பர்களிடமும் இருக்க வேண்டிய ஒரு கருத்துப் பெட்டகமாகும்.

பேராசிரியர் அரங்க. இராமலிங்கம் சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகத்தை 75 வாரங்கள் சொற்பொழிவு ஆற்றி நிறைவு செய்தவர். திருவாசக, திருமந்திர மாநாடுகளை ஆண்டுதோறும் சென்னையில் நடத்தி வருபவர். சித்தர் இலக்கிய மையம் ஒன்றை நிறுவி மாதந்தோறும் ஒரு சித்தரைக் குறித்து, சொற்பொழிவு செய்து வருபவர். நாளும் தெய்வத் தமிழ்ப்பணியை இடையறாது செய்து வருபவர். பேசா நாளெல்லாம் பிறவா நாளே என்று வாழ்பவர்.

தமிழகம் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் சென்று தெய்வத் தமிழ்ப்பணி செய்பவர். இலக்கியம் மற்றும் சமயம் தொடர்பான இருபத்திரண்டு நூல்களை எழுதியுள்ள பேராசிரியர் அரங்க. இராமலிங்கனார் தொடர்ந்து தொய்வில்லாமல் இத்தெய்வத் தமிழ்த் திருப்பணியினைச் செய்திட எல்லாம்வல்ல இறையருளை வேண்டுகிறேன்.

இறையருளும் குருவருளும் நிரம்ப வாய்க்கப் பெற்றுள்ள பேராசிரியர் அரங்க. இராமலிங்கனார் பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

த. பிச்சாண்டி

Koviloor Digital Library

அணிந்துரை

'வாக்கினால் சொல்ல வல்ல பிரான்' என்று சேக்கிழார் செய்யுள் திறத்தைச் சிவஞான சுவாமிகள் பாராட்டுவார். அப்பாராட்டு அடியை முனைவர் அரங்க. இராமலிங்கம் அவர்கட்கும், பொருத்திக் கொள்ளலாம்.

திருத்தொண்டர் புராணத்தைச் சென்னையிலேயே மூன்று முறை முற்றிலும் விளக்கி, முத்தெடுத்தவர் அவர், எதையும் தம் மனத்துள் வாங்கி அப்படியே சொல்லில் வார்த்தெடுக்கும் வல்லமை அவருக்கு வாய்த்துள்ள வரம்!

சங்கஇலக்கியம் முதல் இன்றைய கவிதை வரை சாரம் கண்டவர். புராணம் கூறும்போது வாழ்வியல், அறிவியல் முறை களோடு பொருத்திக் காண்பது அவர் பேச்சின் புதுமைப் போக்கு.

சமய நெறி சார்ந்து மேடையில் விளக்கம் சொல்பவர்கள் மனம், வாக்கு, மெய் இம்மூன்றும் தூயராய் விளங்க வேண்டுவது தொடர்ந்து வர வேண்டிய மரபு. அம்மரபைத் தொட்டுத் தொடர்ந்தவர் இவர். இளைய வயதில் அரங்க. இராமலிங்கனார்க்குச் சித்தர் நெறி, பத்தர் நெறி இவற்றில் ஈடுபாடு ஏற்பட்டுள்ளது அவர் செய்த முன்னைத் தவம்!

'முத்தி நெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை' என மணிவாசகர் 'மூர்க்கர்' எனத் தம் ஐந்து புலன்களைக் குறிப்பாகக் கூறுகின்றார்.

'முடுகுவர் இருந்து உள் ஐவர் மூர்க்கரே'

என அப்பரடிகள் ஐம்புலன்களை 'மூர்க்கர்' என்று வெளிப்படை யாகவே குறிக்கின்றனர். சான்றோர் பெருமக்கள் எல்லாம் புலன் களுக்கு அஞ்சியிருப்பது தெரிகின்றது.

சிவஞான போதமும், **'செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா அம்மலம்'** என்று மலம் சார்ந்த புலன்களைக் குறிக்கின்றது. இக்குறிப்புக்கள் போலவே திருத்தொண்டர் தொகையிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள். **'திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்'** எனப் புலன்களை வென்ற அடியாரையே முதன்மைப்படுத்திக் கூறுகின்றார். சேக்கிழார் பெருமானும் திருநீலகண்டக் குயவனாரையும் அவர் துணைவி யாரையும் **'வென்ற ஐம்புலனால் மிக்கீர்'** எனச் சிவபெருமான் பாராட்டுவதாகப் பாடுகின்றார். **'வென்ற ஐம்புலன்'** என்ற தொடரைத் திருத்தாண்டகத்துள் சிவபிரானைக் குறிக்க அப்பர் பயன்படுத்தி யுள்ளார்.

Koviloor Digital Library

"சைவ சமயத்தின் அடியார் பெருமைகளை எல்லாம் விளக்கும் பெரிய புராணத்தில் மனம், மொழி, மெய் இவற்றால் தூயராய்த் தொண்டு செய்த நிலைகளைக் காணலாம். அப்பெரிய புராணத்தைச் சொற்பொழிவு செய்து மக்களை நன்னெறிப் படுத்துவதில் ஆர்வம் காட்டுபவர் அரங்க. இராமலிங்கம் அவர்கள்.

அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்க விளக்கமாக இந்நூல் வெளிவருகின்றது. கந்தபுராண விரிவைக் 'கந்தபுராணச் சுருக்கம்' எனத் தருமையாதீன சம்பந்த சரணாலயர் செய்துள்ளார்.

அதுபோலவே **'திருத்தொண்டர் வரலாறு'** என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூலுள் திருத்தொண்டர் புராணங்களின் சுருக்கங்களைக் காணமுடியும். ஒவ்வோர் அடியாரின் பிறப்புத் தலம், அதன் இருப்பிடம், பிறந்த குலம், குருபூசை மாதம், நட்சத்திரம் என்ற குறிப்பும் உடன் உள்ளது. புராண முடிவில் குறிப்பிட்ட அடியார் தொண்டு பற்றி ஓரிரு வரிகளில் சிறந்தெடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அடியார்களின் வரலாற்றில் சேக்கிழார் குறிக்கும் சிறந்த பாடல்களின் தொகுப்பாகவும் இந்நூல் விளங்குகின்றது. அடியார்கள் வாழ்ந்த தலம் செல்ல இது வழிகாட்டியாகவும் உதவுவதை அறியலாம்.

சிறந்த செய்யுட்கள், அடியார் வரலாற்றுக் குறிப்பு, தொண்டின் சிறப்பு, இடையே விளக்கங்கள் எனப் புதிய முறையில் பெரிய புராணம் அன்பர்களுக்கு அருள்வழி காட்ட வேண்டும் என்ற நோக்கில் நுண்ணறிவோடும் சைவ உணர்வோடும் எழுதி வெளியிடும் என் இனிய நண்பர் அரங்க. இராமலிங்கம் அவர்களுக்கு எல்லாம் வல்ல கச்சி ஏகம்பப் பெருமான் திருவருள் என்றும் நிலவ இறைஞ்சுகின்றேன்.

அவர் எழுதியுள்ள இந்நூலைச் சைவ அன்பர்கள் கற்றுத் தெளிய வேண்டுகின்றேன். சைவ உலகம் அரங்க. இராமலிங்கனாரின் இதுபோன்ற பணிகளை இன்னும் எதிர்நோக்குகிறது.

அவர் தொண்டு சிறந்து ஓங்குக!

அன்பன்,
அருணை பாலறாவாயன்
தமிழ்ப்பேராசிரியர்

ஆனந்த பரவசம்
17ஏ, 2ஆவது முதன்மைச் சாலை
நியூ காலனி, குரோம்பேட்டை,
சென்னை-600 044.

Koviloor Digital Library

தொண்டர் உரை...

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்; ஆதியும் அந்தமும் இல்லாதவன்; பிறவா யாக்கைப் பெரியோன்; அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து இருப்பவன்; எல்லாம் வல்லவன்; எங்கும் இருப்பவன்; எல்லா வற்றிலும் நிறைந்தவன்; அருட்பெருஞ்சோதியன்; தனிப்பெருங் கருணையன் என ஆயிரமாயிரம் சொற்களால் இறைவனைப் போற்றிப் புகழலாம். அறிவுக்கு அப்பாலாய் அருள் ஒளியாய் ஒளிரும் அப்பொருளை எப்படி அடைய முடியும்...?

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகள் வழி இறைவனை அடையமுடியுமா? முடியாது என ஞான நூல்களும் அருளாளர்களும் கூறுகின்றனர். மேற்சுட்டிய நான்கு நெறிகள் அல்லாமல் வேறுபல நெறிகளில் சென்றாலும் இறைவனை அடைய முடியாது; ஆனால் அறிந்து கொள்ளலாம். இறைவனை அறிந்து கொள்வதற்கும் இறைவனிடம் அடைக்கலமாகி அவனிடம் இணைந்து கொள்வதற்கும் வேறுபாடு மிகுதி.

இறைவனை அடைவதற்கு ஒரே நெறிதான் இருக்கிறது. அந்நெறி அன்புநெறி. அன்பெனும் கயிற்றுக்கு மட்டுமே இறைவன் கட்டுப்படுவான். ஏனெனில் அன்புதான் சிவம்; சிவம்தான் அன்பு.

அன்பு சிவம் இரண்டுஎன்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. (திருமந்திரம். 270)

அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே
அன்பெனுங் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்கு உட்படு பரம்பொருளே
அன்பெனுங் கரத்தமர் அமுதே
அன்பெனுங் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே (அருட்பா - பரசிவ வணக்கம் - 1)

ஆகிய அருட்பாடல்கள் அருளாளர்களின் அனுபவம். அறுபத்து மூவர் வரலாறென்பது அன்பால் இறைவனுடன் இணையும் வரலாறு.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் (தி.கூ.சி. 8)

என ஒரே பாடலில் அடியார்களின் அன்பினைப் புலப்படுத்தி

Koviloor Digital Library

விடுகிறார் தெய்வச் சேக்கிழார். யோகிகள், சித்தர்கள், ஞானிகள் எல்லோரும் இறைவனை அறிவர். ஆனால் இறைவனே தேடிவந்து முன்னால் நிற்பது யாரிடம் என்றால், அன்போடு அகம் குழைந்து பக்தி செய்யும் அடியார்களுக்கு என்கிறார் திருமூலர்பிரான்.

உற்று நின்றாரொடும் அத்தகு சோதியை
சித்தர்கள் என்றும் தெரிந்து அறிவார் இல்லை
பத்திமையாலே பணிந்து அடியார் தொழ
முத்தி கொடுத்து அவர் முன்பு நின்றானே (284)

சித்தர், முத்தர், யோகியர், ஞானியர்களுக்கு முன்வந்து நிற்காத இறைவன் அன்பு ஒன்றுக்கு மட்டுமே மடியை வரிந்து கட்டிக்கொண்டு ஓடோடி வருகின்றான்.

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (குறள் 1023)

எனத் தெய்வப்புலவர் திருவள்ளுவரும் உரைத்திருப்பதை உணர்வுடையார் உணர்வர்.

அழுது அழுது அடி அடைந்தவர்களே திருத்தொண்டர்களாகிய நாயன்மார்கள். பெரியபுராணத் தொடர் சொற்பொழிவுகளை யான் மூன்று முறை நிகழ்த்துவதற்கு இறையருள் துணைநின்றது. 17.07.1998 தொடங்கி நவம்பர் – 1999 வரை 64 வாரங்கள் சென்னை கே.கே. நகர், அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலிலும்; அதன்பிறகு 19.03.2004 முதல் 07.04.2006 வரை 108 வாரங்கள் சென்னை, நுங்கம்பாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயி லிலும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். மூன்றாவது முறையாக சென்னை கே.கே நகர் அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலில் 5.01.2007 முதல் தொடங்கி 30.01.2009 வரை (108 வாரங்கள்) சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். யான் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் தற்பொழுது நூலாக வெளிவருகிறது.

பெரியபுராணம் தொடர்பாக யான் தொடர்ந்து சொற்பொழி வாற்றுவதற்குப் பெருந்துணையாக இருந்தவர் பேரன்பிற்குரிய தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையர் திருமிகு த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி. தம்முடைய அன்பான வாழ்த்துரையால் இந்நூலுக்கு மேலும் மெருகூட்டியுள்ள ஆணையர் அவர்களுக்கு மீண்டும் நன்றி. திருக்கோயிலில் சொற்பொழிவாற்றுவதற்கு ஒல்லும் வகையெல்லாம், உறுதுணையாக இருந்த திருவாளர்கள் கவிஞர் தென்னம்பட்டு ஏகாம்பரம், திரு. ந. தங்கையா, திரு. து. சந்திரசேகரன், திரு. ம. நடராசன், திரு. சு. பெத்தையா மற்றும் துணைநின்ற திருக்கோயில் அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி.

Koviloor Digital Library

அணிந்துரை அருளிய அறிஞர் அருணை பாலறாவாயருக்கும் நன்றி.

தொடர்ந்து பெரியபுராணச் சொற்பொழிவினைச் செவிமடுத்து எனக்கு உற்சாகத்தையும் உணர்வையும் ஊட்டிய சான்றோர்களுக்கும் பெரியோர்களுக்கும் தாய்மார்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர் என்பதற்கிணங்க உணவிடும் மாபெரும் அறம் மற்றும் உடை, உண்கலம், அடியார்க்கு வேண்டிய அனைத்து உதவிகள், ஆடை தூய்மை செய்து தரல், இறைவன் திருக்கோயில் தூய்மை செய்தல் - திருஅலகிடுதல், திருமெழுகிடல், பூமாலை கட்டுதல் ஆகிய திருப்பூந்தானம், குங்கிலியப்புகை நறுமணம் காட்டல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல், விளக்கெரித்தல், திருக்குளம் வெட்டுதல் எனப் பல்வேறு தொண்டுகளைச் செய்த திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களின் வரலாறு இந்நூலில் விளக்கமாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு வாரமும் யான் சொல்லச் சொல்ல எழுதி அதனைத் தட்டச்சு செய்து - படியெடுத்து திருக்கோயிலில் அனைவருக்கும் வழங்கிய என் மாணவர்கள் திரு. ப. முருகன், திரு. இரா. புகழேந்தி, திரு. பொன். இரமேஷ்குமார் ஆகியோருக்கு நன்றி. மெய்ப்புத் திருத்தி உதவிய முனைவர் சா. வளவன், முனைவர் சீதா ராமதாஸ், முனைவர் மு.அ. மாணிக்கவேலு ஆகியோருக்கும் நன்றி. இந்நூலினை முழுமையாகத் தட்டச்சு செய்து வடிவமைத்துக் கொடுத்த என் மாணவர் கவிஞர் ஆசூர் க. தங்கதாசனுக்கும் நன்றி. இந்நூலை வெளியிடும் மணிவாசகர் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. ச.மெ. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும், மேலாளர் திரு. இராம. குருமூர்த்தி அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

உடல்நிலை, மனநிலை, பணிநிலை, காலநிலை என வாழ்வியலில் சிக்குண்டு பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையில் ஒவ்வொரு வாரமும் அவசர கதியில் இச்சொற்பொழிவுச் சுருக்கங்கள் உருவாயின. எனவே, இச்சொற்பொழிவுகளில் (108 வாரம்) கூறியது கூறல் இருக்கலாம்; உணர்ச்சி நடை, அயற்சி நடை என எழுத்தில் மாற்றம் தெரியலாம்; நான்கு பக்கங்களுக்குள் செய்திகளைக் கொடுக்க வேண்டும் என்ற பக்க எல்லையினால் சில தலைப்புகளில் நான் இடறியிருக்கலாம். எப்படியிருப்பினும் குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் நீங்கள், இக்குறைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

Koviloor Digital Library

சென்னை திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகத்தை 75 வாரங்கள் தொடர்ந்து சொற்பொழிவாற்ற இறையருள் துணைநின்றது. பெரிய புராணம், திருவாசகம் ஆகிய தெய்வத் தமிழை ஒலிப்பதற்கும் திருமந்திரம் மற்றும் திருவாசக மாநாட்டினை ஆண்டுதோறும் நடத்துவதற்கும் சித்தர் இலக்கிய மையத்தின் வழி மாதந்தோறும் ஒரு சித்தரை அறிமுகப்படுத்துவதற்கும் துணைநிற்கும் இறையருளையும் குருவருளையும் வணங்கிப் போற்றிப் பணிவதைத் தவிர எளியேனால் செய்யக்கூடியது என்...!

இறுதியாக ஒரு சொல்...

திருத்தொண்டர் புராணம் என்கிற பெரிய புராணத்தில் மிக மிக நுட்பமான பல பாடல்களில் என்னைக் கவர்ந்தவை நான்கு. அவற்றின் கருத்து வருமாறு : இறைவனின் உருவம், அவனின் அறிவு வடிவமாகிய சோதி (ஒளி) - திருவடியாக ஒளிரும் அச்சோதியின் அளவிலா அளவு - அலகில் சோதி - ஆண் பெண் இரண்டும் கடந்த நிலை - அறிவுக்கும் கற்பனைக்கும் எட்டாது கோடி சூரியப் பிரகாசமான அற்புத வடிவம் - அணுவுள் அமைந்துள்ள உயிராகிய சிவப்பிரகாசம் - அதுவே பரசிவம். நம் ஊனுடம்பிற்குள் உள்ள தில்லைச் சிற்றம்பலமாகிய இருதயகமலத்துள் இடையறாது அற்புதக் கோலத்தோடு ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் அந்தப் பொன்னார் திருவடிகளைக் கண்டு கண்டு போற்றுவோம். போற்றி, போற்றி.

ஆடும்பாதம் - அறிவெனும் பாதம் - அழகிய பாதம் - தூக்கிய பாதம் - செந்தாமரைப் பூம்பாதம் எனப் பல்வேறு பெயர்களால் அருளாளர்கள் போற்றி வணங்கும் இடது பாதமாகிய அம்மையின் திருவடிகளுக்கு வணக்கம். வணக்கம்.

அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் ஆதாரமாகவும் தான் நிராதாரமாகவும் - ஏகன் ஆகவும் அனைத்து உலகங்களும் - உயிர்களும் இயங்குவதற்கு அச்சாணியாக - ஆதாரமாக ஊன்றி நிற்கும் பாதமாகிய சிவத்தையும் - இவையனைத்தையும் இயக்கும் திருவருள் வீழ்ச்சி எனப்பெறும் தூக்கிய பாதமாகிய சக்தியையும் (இவ்விரு இணையார் திருவடிகளை) கண்ணாரக் கண்டு உருகி உருகி வழிபடுவதே பத்திமை நெறி. இதற்குத் தன்னை இழந்த நலத்தால் தொண்டு செய்யவேண்டும். இதுவே பெரிய புராணத்தின் சாரம். இத்திருவடிகளே நம்முள் பிரம்மப் பிரகாசமாக ஒளிரும் நமசிவாயம். இமைக்கும் நேரம்கூட நம்மைவிட்டு நீங்காமல் நம்முள் ஒளிரும் சோதியே அது.

Koviloor Digital Library

நமசிவாயம் வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
(திருவாசகம் : 1-2)

பேரொளிப் பிழம்பாக நம்முள்ளே ஒளிரும் சோதியாகிய - திருவடியாகிய சிவசக்தியைக் கண்டு களிப்பவரே சித்தர், முத்தர், பத்தர், ஞானி, யோகி எல்லாம். சிவசக்தியாகிய கண்ணார் திருவடிகளை அடைவதற்காக அனைத்தையும் இழந்தவர்களே - துறந்தவர்களே நாயன்மார்கள்.

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் (முதற்பாடல்)

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி (தி.வா.அ.ச. - 1)

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி
(தி.வா.அ.ச. - 2)

வானாகி நிலனாகி அனலுமாகி
மாருதமாய் இருசுடராய் நீருமாகி
ஊனாகி உயிராகி உணர்வுமாகி
உலகங்கள் அனைத்துமாய் உலகுக்கப்பால்
ஆனாத வடிவாகி நின்றார்.... (திருஞானசம்பந்தர் புராணம் - 563)

தெய்வச் சேக்கிழாரின் இந்நான்கு பாடல்களையும் உணர்ந்து, உணர்ந்து, உருகி, உருகிப் போற்றினால் தெய்வம் உங்கள் முன்னால் வந்து காட்சி தரும். உங்களோடு பேசும் **கண்ணால் யானும் கண்டேன்** காண்க என மாணிக்கவாசகர் போல் நாமும் கண்ணாரக் கண்டு களிப்படையலாம்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழில் எடுத்துரைக்குமாறே.

146/314, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
10.02.2009

ஆரா அன்புடன்,
அரங்க. இராமலிங்கம்

Koviloor Digital Library

தமிழ்நாட்டிலுள்ள விழுப்புரம் மாவட்டம், தியாகதுருகத்தில் (மே, 1954) பிறந்தவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இளங்கலை, முதுகலை (1971-76) பயின்றவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் எம்.பில்., (1976-77) பிஎச்.டி., (1982) ஆய்வினைச் செய்தவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உயர்நிலை ஆய்வை (1982-84) முடித்தவர். நூற்றிற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், இருபத்திரண்டு நூல்களையும் எழுதியவர். **பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் விருது, திருமந்திரத் தமிழ்மாமணி, வள்ளல் பாண்டித்துரைத் தேவர் விருது, சித்தர்சீர் பரவுவார், இலக்கியச் செம்மல், திருத்தொண்டர் மாமணி, தமிழ்வாகைச் செம்மல், மன்னர் பாஸ்கர சேதுபதி விருது, வைணவச்சுடர், தமிழ்ப்பேரொளி, திருவருள் இயற்றமிழ்ப் புலவர், மெய்ந்நெறி வித்தகர், ஆன்மிகச் சுடர்** ஆகிய விருதுகளைப் பெற்றவர். **மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இந்தோனேசியா, சுவிட்சர்லாந்து** ஆகிய அயல்நாடுகளுக்குப் பன்முறை சென்று தெய்வத் தமிழை ஒலித்தவர்; ஒலிப்பவர். கன்னியாகுமரி மாயம்மாவின் அருளாசியினைப் பெற்றவர்.

சென்னைப் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி நிறுவனத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுபவர்...

Koviloor Digital Library

பொருளடக்கம்

1. பெரிய புராணம் – ஓர் அறிமுகம் 17
2. கடவுள் வாழ்த்து 21
3. திருமலைச் சிறப்பு 25
4. திருநாட்டுச் சிறப்பு 29
5. திருநகரச் சிறப்பு (மனு நீதிச் சோழர் வரலாறு) 32
6. திருக்கூட்டச் சிறப்பு 36
7. தடுத்தாட்கொண்ட வரலாறு 39
8. சுந்தரரின் தோழமை 43
9. தோழமை நெறி 47
10. தில்லைவாழ் அந்தணர் 51
11. திருநீலகண்டத்துக் குயவனார் 55
12. இயற்பகையார் 60
13. இளையான்குடி மாறர் 64
14. மெய்ப்பொருளார் 68
15. விறன்மிண்டர் 72
16. அமர்நீதியார் 76
17. எறிபத்தர் 80
18. ஏனாதியார் 85
19. கண்ணப்பர் 89
20. கண்ணப்பரின் அன்பு நெறி 95
21. குங்குலியக்கலயர் 99
22. மானக்கஞ்சாறர் 105
23. அரிவாள் தாயர் 108
24. ஆனாயர் 112

Koviloor Digital Library

25.	மூர்த்தியார்	116
26.	முருகர்	120
27.	உருத்திர பசுபதியார்	124
28.	திருநாளைப் போவார்	127
29.	திருக்குறிப்புத் தொண்டர்	131
30.	தொண்டை நாட்டுச் சிறப்பு	136
31.	சண்டேசுரர்	140
32.	திருநாவுக்கரசர் – வரலாறு	144
33.	திருநாவுக்கரசர் – பக்தி நெறி	149
34.	திருநாவுக்கரசர் – தொண்டு நெறி	153
35.	திருநாவுக்கரசர் – இயக்க நெறி	161
36.	குலச்சிறையார்	169
37.	பெருமிழலைக் குறும்பர்	173
38.	காரைக்கால் அம்மையார்	178
39.	காரைக்கால் அம்மையார் அருளிச் செயல்கள்	182
40.	அப்பூதியடிகள்	187
41.	திருநீல நக்கர்	192
42.	நமிநந்தி அடிகள்	196
43.	திருஞானசம்பந்தர் – வரலாறு I	200
44.	திருஞானசம்பந்தர் – வரலாறு II	204
45.	திருஞானசம்பந்தரின்–ஆளுமைத்திறமும் தலைமைத்துவமும்	208
46.	திருஞானசம்பந்தரின் புலமைத்துவமும்–இறைமைத்துவமும்	212
47.	திருஞானசம்பந்தரின் தல யாத்திரை	216
48.	திருஞானசம்பந்தர் – அருந்தமிழாகரர்	221
49.	ஏயர்கோன் கலிக்காமர்	226
50.	ஏயர்கோன் கலிக்காமர் வரலாற்றில் சுந்தரர் வரலாறு	230
51.	திருமூலர்	234
52.	திருமந்திரம்	239

Koviloor Digital Library

53.	தண்டியடிகள்	244
54.	மூர்க்கர்	248
55.	சோமாசிமாறர்	252
56.	சாக்கியர்	257
57.	சிறப்புலியார்	262
58.	சிறுத்தொண்டர்	267
59.	சிறுத்தொண்டர் சில சிந்தனைகள்	272
60.	கழறிற்றறிவார் (சேரமான் பெருமாள்)	277
61.	கழறிற்றறிவார் – சுந்தரர் தொடர்பு	282
62.	கணநாதர்	287
63.	கூற்றுவர்	291
64.	பொய்யடிமை இல்லாத புலவர்	295
65.	புகழ்ச்சோழர்	299
66.	நரசிங்க முனையரையர்	304
67.	அதிபத்தர்	308
68.	கலிக்கம்பர்	312
69.	கலியர்	316
70.	சத்தியார்	320
71.	ஐயடிகள் காடவர்கோன்	323
72.	கணம்புல்லர்	327
73.	காரியார்	330
74.	நின்றசீர் நெடுமாறர்	333
75.	வாயிலார்	336
76.	முனையடுவார்	340
77.	கழற்சிங்கர்	343
78.	இடங்கழியார்	347
79.	செருத்துணையார்	351
80.	புகழ்த்துணையார்	355
81.	கோட்புலியார்	359

Koviloor Digital Library

82. பத்தராய்ப் பணிவார் 363

83. பரமனையே பாடுவார் 366

84. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் 369

85. திருவாரூர்ப் பிறந்தார் 373

86. முப்போதும் திருமேனி தீண்டுவார் 376

87. முழுநீறு பூசிய முனிவர் 379

88. அப்பாலும் அடிசார்ந்தார் 383

89. பூசலார் 387

90. மங்கையர்க்கரசியார் 391

91. நேசர் 395

92. கோச்செங்கட்சோழர் 398

93. திருநீலகண்ட யாழ்ப்பாணர் 401

94. சடையனார் – இசைஞானியார் 405

95. வெள்ளானைச் சருக்கம் 408

96. கயிலை யாத்திரை 411

97. பெரியபுராணம் – ஒரு காப்பியம் 415

98. பெரியபுராணம் – ஒரு வரலாற்றுக் காப்பியம் 418

99. பெரியபுராணத்தில் இயற்கை 422

100. பெரியபுராணத்தில் இறைமை 425

101. பெரியபுராணத்தில் தொண்டு நெறி 429

102. பெரியபுராணத்தில் பக்தி நெறி 433

103. பெரியபுராணம் காட்டும் சமுதாயம் 436

104. பெரியபுராணத்தில் வாழ்வியல் சிந்தனைகள் 440

105. பெரியபுராணத்தில் சைவசித்தாந்தம் 444

106. பெரியபுராணத்தில் காப்பியச் சுவை 448

107. தெய்வச் சேக்கிழாரின் புதுமையும் புரட்சியும் 451

108. தெய்வச் சேக்கிழாரும் தெய்வத் தமிழும் 454

• பெரியபுராணத்தை அறிய துணைபுரியும் நூல்கள் 458

Koviloor Digital Library

திருத்தொண்டர் வரலாறு

1. பெரியபுராணம் - ஓர் அறிமுகம்

உலகெலாம் எனத் தில்லையில் திருநடனமிடும் அம்பலவாணர் அடி எடுத்துக் கொடுக்கத், தெய்வச் சேக்கிழார் அருளியது திருத்தொண்டர் புராணம். மாக்கதை எனச் சேக்கிழாரால் அழைக்கப்பெற்ற இப்பக்திப் பெருங்காப்பியம் அருளாளர்களால், பெரியபுராணம், தெய்வ மாக்கதை, எனப் போற்றப்பெற்றது. கி.பி. 300 தொடங்கி கி.பி. 900 வரையிலான தமிழக வரலாற்றைப் பதிவு செய்திருப்பதால் இக்காப்பியத்தை வரலாற்றுக் காப்பியம் எனவும் அறிஞர்கள் குறிப்பிட்டுப் போற்றுகின்றனர்.

தமிழில் தோன்றிய காப்பியங்களுள் சிலப்பதிகாரத்திற்குப் பிறகு தமிழ்க் காப்பியமாகவும், தமிழ் மண்ணிலே வாழ்ந்த அறுபத்துமூன்று அருளாளர்களின் வாழ்வியலைப் புகலும் பெருங்காப்பியமாகவும், முழுக்க முழுக்கத் தமிழ் மண்ணிற்கே உரிய பக்திப் பெருங்காப்பியமாகவும், சைவ சமயம் சார்ந்த முதல் காப்பியமாகவும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பக்திக் காப்பியமாகவும் பெரியபுராணம் திகழ்கிறது.

நாயன்மார் அறுபத்து மூவர் காலம்

பெரிய புராணத்தில் இடம் பெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் காலத்தைப் பின்வருமாறு பிரித்துரைக்கலாம்.

1. அப்பர், சம்பந்தர்க்கு முற்பட்டவர் (கி.பி. 300–600) 17 பேர்.
2. அப்பர், சம்பந்தர் காலத்தவர் (கி.பி. 600 – 660) 11 பேர்.
3. சுந்தரர் காலத்தவர் (கி.பி. 840–865) 13 பேர்.

இந்த நாயன்மார் 41 பேர் நீங்கலாகவுள்ள ஏனைய 22 பேரும்

Koviloor Digital Library

அப்பர், சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட வர்கள். (சுமார் கி.பி. 660 – 840).

அப்பர், சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300–600)

1. கோச்செங்கட்சோழன், 2. புகழ்ச் சோழர், 3. சண்டேசுவரர், 4. கண்ணப்பர், 5. காரைக்காலம்மையார், 6. திருமூலர், 7. மூர்த்தியார், 8. கூற்றுவர் 9. ஐயடிகள், 10. கணம் புல்லர், 11. அரிவாள்தாயர் (அரிவாட்டாய நாயனார்), 12. நமி நந்தி அடிகள், 13. தண்டி அடிகள், 14. சாக்கியர், 15. எறிபத்தர், 16. அமர்நீதி, 17. புகழ்த்துணை.

அப்பர், சம்பந்தர் காலத்து நாயன்மார் (கி.பி. 600 – 660)

1. திருநாவுக்கரசர், 2. திருஞானசம்பந்தர், 3. சிறுத்தொண்டர், 4. குங்கிலியக் கலயர், 5. முருக நாயனார், 6. திருநீலகண்ட யாழ்ப்பாணர், 7. திருநீல நக்கர், 8. அப்பூதி அடிகள், 9. நின்றசீர் நெடுமாறன், 10. மங்கையர்க்கரசியார், 11. குலச்சிறையார்.

அப்பர், சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட அடியார்கள் (கி.பி. 660 – 840)

1. பூசலார், 2. காரி, 3. அதிபத்தர், 4. கலிக்கம்பர் 5. கலியர், 6. சத்தியார், 7. வாயிலார் 8. முனையடுவார், 9. இடங்கழியார், 10. இயற்பகையார், 11. நேசர், 12. இளையான் குடிமாறனார், 13. மெய்ப்பொருளர், 14. திருநாளைப் போவார், 15. ஏனாதிநாதர், 16. ஆனாயர், 17. உருத்திர பசுபதியார், 18. திருக்குறிப்புத் தொண்டர், 19. மூர்க்கர், 20. சிறப்புலியார், 21. கணநாதர், 22. திருநீலகண்டர்.

சுந்தரர் காலத்து நாயனார் (கி.பி. 840 – 865)

1. சுந்தரர், 2. சடையனார், 3. இசைஞானியார், 4. நரசிங்க முனையரையர், 5. விறல் மிண்டர், 6. கோட்புலியார், 7. ஏயர்கோன் கலிக்காமர், 8. மானக்கஞ்சாறர், 9. பெருமிழலைக் குறும்பர், 10. சோமாசி மாறர், 11. சேரமான் பெருமாள், 12. கழற்சிங்கர், 13. செருத்துணையார்.

காலவரம்பைக் கடந்த தொகை அடியார்

1. தில்லைவாழ் அந்தணர், 2. பொய்யடிமை இல்லாத புலவர், 3. பத்தராய்ப் பணிவார், 4. பரமனையே பாடுவார், 5. சித்தத்தைச் சிவன்

Koviloor Digital Library

பாலே வைத்தார், 6. திருஆரூர்ப் பிறந்தார், 7. முப்போதும் திருமேனி தீண்டுவார், 8. முழுநீறு பூசிய முனிவர், 9. அப்பாலும் அடிச் சார்ந்தார்.

சுந்தரர் காலம் (கி.பி. 840 – 865)

பெரியபுராணத்திற்குச் சிறப்புடை முன்னூல்கள் இரண்டு. அவை சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை (11 பாடல்கள்), நம்பியாண்டார் நம்பி (இவர் முதலாம் இராசராசன் காலத்தவர். கி.பி. 985–1014) பாடிய திருத்தொண்டர் திரு அந்தாதி (89 பாடல்கள்) என்பன. இவற்றுள் சுந்தரர் திருத்தொண்டத் தொகையே காலத்தால் முற்பட்டது. அத்தொகையுள் தொகையடியார்கள் மற்றும் தனியடியார் களாகிய நாயன்மார்கள் பெயர்களும் குறிக்கப்பெற்றிருப்பதால் நாயன்மார்களின் கால எல்லை சுந்தரரின் காலம் என உணரலாம்.

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்

(திருத்தொண்டர் தொகை – 9)

என்று சுந்தரர் கூறுவது நந்திவர்மன்–3 (கி.பி. 840–865) என்பவனையே என்பது ஆய்வாளர்கள் முடிவு. சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை முதல் நூல். திருநாரையூர் பொல்லாப்பிள்ளை அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி வகைநூல். தெய்வச் சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் விரிநூல்.

b சீவக சிந்தாமணியின் காப்பியச் சுவையில் ஈடுபட்டிருந்த அநபாயச் சோழனை, சைவ சமயத்தில் நிலைநிறுத்தும் பொருட்டுச் சேக்கிழார் இக்காப்பியத்தை இயற்றினார்.

b தொண்டர்களின் வரலாற்றைத் தெய்வக் காப்பியமாக எழுதியதில் சோழன் மகிழ்ந்து, அவருக்குத் ''தொண்டர்சீர் பரவுவார்'' என்ற பட்டம் அருளி – யானை மீதமர்த்தி – விழா நடத்திச் சிறப்பு செய்தான்.

இரண்டாம் குலோத்துங்கனின் (அநபாயன்) அமைச்சராகப் பணியாற்றிய தெய்வச் சேக்கிழாரின் இயற்பெயர் இராமதேவன் எனக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. மாதேவடிகள், குன்றை முனிச் சேக்கிழார், அருண்மொழித்தேவர் என்பன இவருக்கு வழங்கப்பெற்ற வேறு பெயர்கள். தாம் பிறந்த குன்றத்தூரில் திருநாகேச்சுவரம் என்ற திருக்கோயிலைக் கட்டினார். 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த உமாபதி சிவம் என்றழைக்கப்பெறும் உமாபதி சிவாச்சாரியார் (சிறப்புப் பாயிரத்தோடு 104 பாடல்களில்) சேக்கிழார் வரலாற்றைச் சேக்கிழார்

Koviloor Digital Library

புராணம் என்ற நூலாக அருளியுள்ளார். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடிப் போற்றியுள்ளார்.

மார்கழித் திங்களில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று (ஆருத்ரா தரிசனம்) தில்லை ஆயிரங்கால் மண்டபத்தில் திருத் தொண்டர் வரலாற்றை எழுதத் தொடங்கி அடுத்த ஆண்டு மார்கழித் திருவாதிரை அன்று இத்தமிழ்ப் பெருங்காப்பியத்தை நிறைவு செய்தார் தெய்வச் சேக்கிழார்.

இத்தெய்வத் தமிழ்க்காப்பியம் இரண்டு காண்டங்களும் பதின்மூன்று சருக்கங்களும் உடையது; 63 தனியடியார்கள், 9 தொகையடியார்கள் என 72 அடியார்களின் வரலாற்றைப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பெருநூல். இசைஞானியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் ஆகிய மூவர் தவிர ஏனைய 60 அடியார்களும் ஆண்கள். ஒரு பாடலில் பாடப்பட்ட (சடையனார், இசைஞானியார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்) அடியார்களும் உளர். 1256 திருவிருத்தப் பாடல்களில் சேக்கிழார் பாடிப் பரவிய திருஞானசம்பந்தரும் இப்புராணத்துள் உள்ளார். 4286 திருவிருத்தப் பாடல்களில் (63+9=72) சிவன் அடியார்களின் பெருமையினைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பெருங்காப்பியம்தான் திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு நெறிகளில் வாழ்ந்த அருளாளர்களின் அரிய பெரிய வாழ்வியல் களஞ்சியம்தான் பெரியபுராணம். திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களின் ஒருகண் அன்பு; மற்றொருகண் தொண்டு. அன்புநெறியையும் அதனால் விளைந்த தொண்டு நெறியையும் விளக்கவந்த தெய்வமாக்கதையே பெரியபுராணம்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். (தி.கூ.சி. 8)

Koviloor Digital Library

2. கடவுள் வாழ்த்து

ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே (நன்னூல்)

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத் தோள்நல்லார்க்கு அணியும் போல்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

கடவுள் வணக்கம், பொருளடக்கம் இவையிரண்டும் பாயிரத்தில் இடம்பெற வேண்டும் என்பது மரபு.

தில்லைப் பொன்னம்பலக் கூத்தனார் உலகலொம் என அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் 'உலகெலாம்' எனத் தொடங்கிப் பெரியபுராணத்தை உலக நூலாகப் படைத்துள்ளார். முதலடி முதல் எழுத்து 'உ'. மூன்றாம் அடி முதலெழுத்து 'அ' இறுதியடி 'ம்' என்று நிறைவுறும். 'ஓம்' என்ற பிரணவ மறைபொருளைச் சேக்கிழார் குறிப்பாக உணர்த்தியுள்ளார். இறைவன் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன். ஆனால் நிலவையும் கங்கையையும் சூடிய திருவுருவ வடிவில் அடியவர்க்கு எளியவனாய்க் காட்சி தருபவன். சிலம்பணிந்த, சிவ சக்தியின் திருவருள் உலகை மலரச் செய்து உய்விக்க இறைவன் திருவடியை வாழ்த்தி வணங்குவார்.

சோதியின் சுடர் எங்கும் நிறைந்து விளங்கும். அதுபோல இறைவன் அருள் எங்கும் நிறைந்து விளங்கும். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த அம்மெய்ப்பொருளைத் தாயுமானவரும் போற்றியுரைப்பார்.

சோதி நிறம் சொக்கையா – உனக்குச்
சொன்ன வரம் தந்தாரோ

எனத் தாலாட்டும் பாடுவர்.

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ் சோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் சோதி

என்பார் அருட்பிரகாச வள்ளலார்.

தனிப்பெரு மறைச் சொல்லின் முன்னோடியாகச் சேக்கிழாரின் அலகில் சோதியன் என்ற தொடர் திகழும். ஆதியும் அந்தமும் இல்லா

அரும்பெருஞ்சோதி என்பார் மாணிக்கவாசகர். பொன்னம்பலத் தாடும், இறைவனைப் பொன் போன்ற உள்ளத்தில் காண இயலும்.

உலகுஎலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்;
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்;
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்;
மலர்சி லம்புஅடி வாழ்த்தி வணங்குவாம். (பாடல் 1)

வாழ்த்த வாயும்நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை (திரு அங்கமாலை)

என்ற அப்பர் பாடற் கருத்தைச் சேக்கிழார் கடவுள் வாழ்த்தில் சிறப்பித்துக் கூறுவார்.

கடவுளை வாழ்த்தும் தகுதி நமக்குண்டா? என்ற ஒரு கேள்வி எழும். இறைவனை வாழ்த்தும்போது இறையுள் ஒடுங்கிய எல்லா உயிர்களையும் வாழ வைக்கும் அன்பு நெறியும் தொண்டுநெறியும் பெரியபுராண உயிர்க் கொள்கைகளாகும். ஆதலால் எல்லா உயிர் களையும் வாழ்த்தி வணங்குதற்குப் பதிலாக எல்லா உயிர்களையும் தன்னுள் அடக்கிய இறைவனைச் சேக்கிழார் வாழ்த்தி வணங்குகிறார்.

மேலும் கடவுளை ‘வாழ்த்துதல்’ என்பதற்கு அவன் பெயர், புகழ், பெருமை இவற்றைப் ‘போற்றுதல்’ என்பதே பொருள். எனவே கடவுளை வாழ்த்துவது ஒரு வழிபாடு ஆகும்.

இறைவனை வாழ்த்தி வணங்குதலால் பிறந்ததன் பயனையும், பேரின்பத்தையும் அடையலாம் எனக் கடவுள் வாழ்த்தின் பயனை விளக்கிக் கூறுவார்.

விநாயகப் பெருமானின் தடக்கையும் தாழ்செவியும் கருத்துள் இருத்தித் திருத்தொண்டர் மாக்கதை பாடத் தொடங்குவார். இறைவனைக் கையால் வணங்கலும் அவன் சிறப்புகளைச் செவியிற் கேட்டலும் இன்றியமையாதன என்ற கருத்தைக் கணபதி வாழ்த்தில் குறிப்பாகப் புலப்படுத்துவார். செவியில் இறைவன் புகழைத் தாழ்ந்து பணிந்து கேட்டல் வேண்டும்.

எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்குஅருள் செய்திடத்
தடக்கை ஐந்துஉடைத் தாழ்செவி - நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம். (பாடல் 3)

Noolaham Digital Library

அவையடக்கம்

தெரிவு அரும்பெருமைத் திருத்தொண்டர் தம்
பொரு அரும்சீர் புகலல்உற்றேன் முற்றப்
பெருகு தெண்கடல் உற்றுஉண் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்கும் தகைமையேன். (பாடல் 6)

'ஆற்றோடு தண்ணீர் அடித்துச் சென்றாலும் நாய்க்குத் தண்ணீர் நக்கித்தான்' என்ற பழமொழிக்கேற்ப நாய் நக்கித்தான் தண்ணீர் பருகும். அந்த நாய், ''பெருங்கடல் நீரினை முழுதும் நக்கிப்பருகி விடுவேன்'' என்று ஆசைப்படுதல் போலப் பெருஞ்சீர் பெற்ற திருத்தொண்டர் வரலாற்றைப் பேசலுற்றேன் என்று சேக்கிழார் பெருமான் அவையடக்கம் கூறுவார். பெருமை பொருந்திய மெய்ப்பொருள் அடியார் பற்றிப் பேசும் இந்த நூலும் பெருமை பெறும் என்பதில் ஐயமில்லை.

இங்குஇதன் நாமம் கூறின் இவ்உல கத்து முன்னாள்
தங்குஇருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை, ஏனைப் புறஇருள் போக்கு கின்ற
செங்கதிரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்.
(பாடல் 10)

கதிரவன் உலகின் புற இருள் நீக்குவான். திருத்தொண்டர் புராணம் எனும் நூல் அக இருளைப் போக்கும். அகத்தினுள் இருள் சூழ்வதால் செய்யும் செயல்களினால், அறியாமை இருள் சூழ்ந்து உலகம் ஆழ்ந்த துன்பத்தில் மூழ்கித் துன்புறுகிறது. வெண்மை அறிவுக் குறியீடு. எனவே கலைமகள் வெள்ளைத் தாமரைமீது அமர்ந்திருப்பதாகக் குறிப்பர். சிவம் வெண்மை. பார்வதி பச்சை: வெண்மையான பேரறிவுப் பெரும்பொருளான சிவத்தைச் சுற்றிப் பற்றிக் காத்து நிற்கிறது பச்சைக் கொடியாகிய பார்வதி. இதுவே வாழவைக்கும் வாழை மரத்தின் நுட்பம். இருவரின் இணைவால் செவ்வேல் என்ற 'ஞானப்பூ' வெளிப்படும். அதன் வளர்நிலை ஞானவேலாகக் காட்சி தரும். இந்நுட்பங்களை உணர்வுடையோர் உணர்ந்து உய்தி பெறுவர்.

மனம், மொழி, மெய் என்ற மூன்றில் மனம் தூயதானால், ஏனைய மொழியும், மெய்யும் தூய்மையாகும்.

''மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும்'' என்பர் தெய்வப் புலவர்.

Koviloor Digital Library

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பது அகத்தியரின் அருள்வாக்கு.

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன் என்பது தெய்வப்புலவரின் திருவாய்மொழி.

மனத்தூய்மை கொண்ட திருத்தொண்டர்கள் வரலாறு கற்று நம் மனம் தூய்மை பெற்றால் அங்கு இறையருள் தங்கும். அப்படிப் பட்ட தொண்டர் உளத்தில் இறைவன் ஒடுக்கம். ஆதலால் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்றார் அவ்வை. தெய்வத் தன்மை வளர்க்கும் தொண்டர்கள் வரலாறு கூறுவதால் இந்நூல் திருத்தொண்டர் புராணம் எனும் திருப்பெயர் பெற்றது.

கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும் நூற்பெயரும் நூற்பயனும் அநபாயச் சோழனது அவை பற்றிய செய்திகளும் பாயிரத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

3. திருமலைச் சிறப்பு

(40 பாடல்கள்)

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

இலக்கண நூல்கள் காப்பியங்களைப் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இரண்டாகப் பகுத்துக் கூறும். அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் விளக்கிக் கூறுவது பெருங்காப்பியம். மேற்கண்டவற்றில் ஒன்றிரண்டு குறைந்து வருவது சிறுகாப்பியம். பெருங்காப்பியம் தன்னேரில்லாத தலைவனைக் கொண்டு விளங்க வேண்டும். நானில வருணனை, ஞாயிறு திங்களின் தோற்றப் புனைவு, திருமணம், தூது, போர் வெற்றி முதலானவை பெற்றுச் சருக்கம், காண்டம் ஆகிய பெரும்பிரிவுகளும் பெற்றிருத்தல் வேண்டும். பெரியபுராணம் தன்னேரில்லாத தலைவனாகிய சுந்தரனாரைக் காப்பியத் தலைவனாகப் பெற்றுள்ளது. ஆங்காங்கே வாழ்வும் போராட்டங்களும் உள்ளன. சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் திருமண நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

காப்பியத்தில் பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் என்ற இருவர் இடம்பெறுவர். நம் சேக்கிழார் பெரியபுராணத்தின் பாட்டுடைத் தலைவன் அடியார் உள்ளமாம் அம்பலத்துக் கூத்தாடுபவன். கூத்தப்பெருமான் எழுந்தருளிய எண்ணற்ற இடங்களுள் திருக்கயிலாய மலையும் ஒன்று. அந்த மலையைத் திருமலை எனச் சேக்கிழார் கூறுவார்.

திருமலைச் சிறப்பு

வெண்ணீறு பூசிய சிவபெருமானைப் போன்று வெண்பனி மூடிய பொன்மலை விளங்கும். மூவுலகும் நான்மறைகளும் எண்ணற்ற மாதவம் செய்தவரும் புண்ணியம் திரண்டுள்ளது போன்று கயிலை மலை விளங்கும்.

புண்ணிய கயிலை மலை மனத்தால் எண்ணினும் மொழியால் வாழ்த்தினும் மெய்யால் வணங்கினும் புண்ணியம் புகழ் வந்தெய்தும் குறிப்பைச் சேக்கிழார் புலப்படுத்துவர்.

அண்ணல்வீற் றிருக்கப் பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண்டுள்ளது போல்வது.

Koviloor Digital Library

ஒளிமிகும் உலகம் என்னும் மாணிக்கக் கொடியில் பூத்த வெள்ளை மலர்போல் கயிலைமலை உலகில் உயர்ந்து விளங்கும். ஒளி உலகில் இருள் நீக்குதல் போல் இறைவன் அருள் ஒளியை நினைத்து வணங்கும் உயிர்களின் மல இருள் நீங்கும்.

நான்மறை ஒலியும் விஞ்சையர் வீணை இசை ஒலியும் மழை எனக் கைம்மாறு கருதாது தானம் செய்யும் மக்கள் தரும் தானத்தைப் பெற்றுத் தரமாக வாழ்ந்து, இறைவன் வரம் பெற்று நிறைந்து விளங்கும்.

மனத்திற் கழகு தருவது மானம்
தனத்திற் கழகு தருவது தானம்
வருவது இங்கு வரமாகும்
தருவது இங்கு தரமாகும்

இமயவரைக் கோயில் நாயகன் நந்தி எம்பெருமான். நம் தீ என்பது நந்தி என்பதாகும். நம் தீயைக் கீழ்நோக்கி வரும் காற்றால்மேல் நோக்கி எழுப்பிக் குண்டலினி ஆற்றலைப் பெறும் தவப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

திருத்தொண்டர் மாக்கதை ஆக்கத்திற்குத் துணை செய்த செங்கோல் அநபாயச் சோழன், திருமனம்போல் கயிலை மலை உயர்வாக விளங்கும். இத்தகைய திருமலையில் ஆலால சுந்தரன் என்ற அடியவன் மலர் கொய்யும் அனிந்திதை, கமலினி ஆகிய மங்கையர் மீது மனம் போக்கிய நிலை கண்ட சிவபெருமான் ஆணைப்படி புவியில் அவதரித்த சுந்தரமூர்த்தி, அடியார் பெருமை கூறும் திருத்தொண்டத் தொகை தருவதற்காக,

ஆதி மூர்த்தி அவன் திறம் நோக்கியே,
மாதர்மேல் மனம் வைத்தனை, தென்புவி
மீது தோன்றி,அம் மெல்லிய லாருடன்
காதல் இன்பம் கலந்து அணைவாய் என, (பாடல் 27)

என்று அருளினார்.

பாற்கடலில் தோன்றிய ஆலமாகிய நஞ்சினை ஏந்தி வந்து சிவன் பால் தந்த சுந்தரர் ஆலால சுந்தரர் ஆனார்.

கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்;
செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுடமாய் மயங்கும் வழி,
ஐயனே! தடுத்துஆண்டுஅருள் செய் என, (பாடல் 28)

கலங்கிய ஆலால சுந்தரர் தன்னை ஆட்கொண்டருள வேண்டினார்.

Koviloor Digital Library

எண்டிசை புகழ் புண்ணியம் உடையது தென்திசை. தென்திசையில் புலிக்கால் முனிவன் சிவனைப் பூசித்த திருப்பதியாம் பெரும்பற்றப்புலியூர், சிவபெருமான் சூடிய பொன்னம்பலமாகிய சிதம்பரம், புவித்தாயின் இதயமாக விளங்கும் திருஆரூர், கம்பையாற்றில் தவம் செய்து பொன்னம்பலனைத் தழுவிய கருத்தம்மாவாகிய பார்வதி வரம் பெற்ற காஞ்சி, கங்கையணிந்த சிவன் எழுந்தருளிய திரு ஐயாறு, தேசம் புகழும் சீர்காழியாகிய தோணிபுரம் ஆகிய அருட்புகழ் நிறைந்த பூசை செய்யத் தகுந்த புண்ணியத் தலங்கள் உள்ளன.

தேசம் எல்லாம் விளக்கிய தென்திசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூசனைக்குப் பொருந்தும் இடம்பல;
பேசில் அத்திசை ஒவ்வா பிற திசை. (பாடல் 36)

சுந்தரர் பெருமான் தொண்டர்களின் பெருமைகளைத் திருத் தொண்டத் தொகை எனும் நூலில் தொகுத்துக் கூறினார். திருத் தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு திருநாரையூரில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திரு அந்தாதி அருளினார்.

ஐயாறு இறைவனை வழிபட்டால் ஐம்பொறி, ஐம்புலன், ஐம்பூதம் என்பன அழகிய நெறியில் நமக்கு அமையும், சிதம்பரம் நினைந்து வழிபடின் சித்தும் சித்தமும் தெளிவுறும். நிந்தை இல்லாத வாழ்வை அனிந்திதை போல் பெற இறைவழிபாடு தேவை. இதய கமலத்தில் இறையருள் எழுந்தருளச் செய்தல் பிறவி எடுத்த பயனாகும். சுந்தர வாழ்வு பெறச் சுந்தரர் பெருமான் அறநெறியைப் பின்பற்றல் வேண்டும்.

பொரு அருந்தவத் தான்புலிக் காலனாம்
அருமுனி எந்தை, அர்ச்சித்தும் உள்ளது;
பெருமை சேர்பெரும் பற்றப் புலியூர்என்று
ஒருமையாளர் வைப்பு ஆம் பதி ஒங்குமால். (பாடல் 31)

பூதம் யாவையின் உள்அலர் போதுஎன,
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதல் மங்கை இதய கமலம்ஆம்
மாதுஓர் பாகனார் ஆரூர், மலர்ந்ததால். (பாடல் 33)

நங்கள் நாதன்ஆம் நந்தி தவம்செய்து,
பொங்கு நீடுஅருள் எய்திய பொற்பது;
கங்கை, வேணி மலரக் கனல்மலர்
செங்கை யாளர், ஐயாறும் திகழ்வது. (பாடல் 35)

Koviloor Digital Library

உலகம் உய்யவும் சைவம் நின்றுஓங்கவும்
அலகுஇல் சீர் நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துஉறை
குலவு தண்புனல் நாட்டுஅணி கூறுவாம். (பாடல் 40)

என்று சேக்கிழார் திருநாட்டுச் சிறப்புக்குத் தோற்றுவாய் செய்து திருமலைச் சிறப்பை நிறைவு செய்வார்.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. (குறள் – 124)

அடியார்கள் அருளைப் போன்று அளக்கலாகா அளவும் மெய்ப்பொருளும் பெற்று, இன்ப துன்பங்களில் நடுங்காத நடுவுநிலை தவறா உள்ளமும் வறுமையுற்ற சமுதாயத்திற்கு அருளும் பொருளும் உதவும் பண்பும் கொண்டு விளங்கவேண்டும். மலை தன்னிடத்துள்ள மரம், செடி, கொடிகளை எப்போதும் வாழ வைக்கும். அதுபோல உண்மையான தொண்டர்களாக அடியார்கள் விளங்கவேண்டும்.

Koviloor Digital Library

4. திருநாட்டுச் சிறப்பு

திருத்தொண்டர்கள் பலர் அவதரித்த சோழநாட்டுச் சிறப்பு இப்பகுதியில் இடம்பெறும். இமயத்தில் புலிக்கொடி பொறித்த சோழனுடைய காவிரி நாட்டுச் சிறப்பைச் சிவன் திருப்பெயர் தாங்கிய சேக்கிழார் பெருமான் விளக்கிக் கூறுவர். 'சே' என்பது எருதைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி. 'சே' ஆகிய எருதை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்டவர் சிவபெருமான். சேக்கிழார் என்பது சிவபெருமான் திருப்பெயர்களுள் ஒன்று. செய் என்பது திருத்தம் செய்யும் நிலத்தைக் குறிக்கும். செய்யை உழுவதற்கு உதவும் எருது 'சே' எனப்பெற்றது.

பொன்னியாற்றின் சிறப்பு

பொன் கொழித்து வரும் காவிரி பொன்னி எனப் பெற்றது. திருமகட்குப் பொன்னி, பொன்னியம்மாள் எனும் பெயர்கள் உள்ளன. இந்திரன் சீர்காழிச் சிவ வழிபாட்டுக்குரிய அப்பூங்காவின் வாட்டம் போக்கக் கணபதி பெருமானை வேண்ட அவர் காக்கை உருவில் அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்துச் சீர்காழிக் 'கா'விரிந்து செழிப்பாக உதவினார். அகத்தியன் தந்த காவிரி ஆறு மண்மடந்தை யின் மார்பில் தவழும் முத்துமாலை எனச் சோழநாட்டின் அழகு சிறக்க விளங்கியது. சோழநாட்டு உயிர்களை வளர்த்திடும் செவிலித்தாய் காவிரி. காவிரி சிவனார் தலை இலங்கும் கங்கை போன்ற சிறப்புடையது. அகத்தியர் கங்கை நீரைக் கமண்டலத்தில் ஏந்தி வந்தார். அந்தக் கங்கை நீர் அடங்கிய கமண்டலத்தைக் கணபதி பெருமான் கவிழ்த்துக் காவிரியாக ஓடச் செய்தார். பச்சைப் பசுங்கொண்டலாகிய பார்வதி நாச்சியாரின் கருணை போன்று விளங்கும். கருணை வேற்றுமையின்றி எல்லா உயிர்களையும் வாழ வைப்பதுபோல் காவிரித்தாய் எல்லா உயிர்களையும் பேணி வளர்த்தலை ஒழுக்கம் எனக் கொண்டாள். சிவத்தலங்கள் வழியாகப் பாய்ந்தோடும் காவிரி சிவத்தலங்களை வழிபடும் அடியார் போன்ற சிறப்புடையது. நீராடும் மங்கையர் குங்குமமும் சந்தனமும் கலந்து காவிரி தெளிவின்றிக் கலக்கமுற்று விளங்கியது. குளங்களுக்குக் காவிரி வாய்க்கால் வழியே சென்று நீருட்டியது. காவிரி நீர் மதகு தாண்டிப்பாயும் ஓசை விண்ணின் அப்பாலும் மோதியது.

ஒண்து றைத்தலை மாமதகு ஊடுபோய்,
மண்டுநீர், வயலுள் புக, வந்தெதிர்

Koviloor Digital Library

கொண்ட மள்ளர், குரைத்தகை ஓசைபோய்,
அண்டர் வானத்தின் அப்புறம் சாருமால். (தி.நா.சி. 10)

காவிரியில் நீராடி வழிபடும் அடியவர் வாகை இன்பம் பெறுவர் என்னும் கருத்தை இப்பாடல் குறிப்பாகக் காட்டும். நாற்றைப் பறிக்கும் நங்கையர் கண்களும், நாற்றுமுடி வயலில் சேர்க்கும் நல்ல ஆடவர் கண்களும் பேசும் காதல் காட்சிகள் கழனிகள்தோறும் மலிந்து காணப்பெற்றன.

மருத வளம்

முத்துச் சொரியும் சங்குகள் நிறைந்த வயலில் பணிசெய்யும் வனிதையர் சங்கு இடறி நடை தளர்வர். வயல்களில் கரும்புகள் போல் செந்நெல் செழித்து வளர்ந்துள்ளது. கமுகைப்போல் கரும்பு பருத்து வளர்ந்துள்ளது. மங்கையர் அமுதமொழி பேசினர். மலர்த் தேனைப் பெய்து ஆமை அடுப்பில் ஏற்றி அரக்கு நிற ஆம்பல் மலர் நெருப்பூதும் சிறுமகளிர் வயல் வரப்பில் விளையாடினர். கரும்பாலை ஆர்ப்பொலியும் சோலை மது உண்டு மகிழும் வண்டொலியும் நான்மறை ஒலியும் கடலொலியை வென்று விளங்கும். அன்னம் ஆடும் பொய்கையில் எருமை நீராடத் துள்ளி வானை முட்டும் கமுக மரத்தைக் கடந்து வளைந்து பாயும் கன்னி வாளை மீன் வளைந்த வானவில் ஒத்து விளங்கும்.

அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத், துதைந்துஎழும்
கன்னி வாளை, கமுகின்மேல் பாய்வன;
மன்னு வான்மிசை வானவில் போலுமால் (தி.நா.சி. 19)

சோலை வளம்

வண்டு மது உண்ணும் சோலைப் பொய்கையில் துள்ளி விளையாடும் கெண்டை மீன்கள் சோலையில் உள்ள மரக் கனிகளைச் சாடும்.

வயல் வளம்

அடியார் சிந்தைபோல வயலில் நெற்கதிர்கள் பூத்து மலர்ந்து விளங்கின. அடியார் அன்பினால் கூடித் தலைவணங்கல் போல் முற்றிய நெற்கதிர்கள் தலைசாய்ந்து விளங்கின. நெற்குவியல்களும் மீன்குவியலும் முத்துக்குவியலும் குன்றுபோல் உயர்ந்து விளங்கும்.

Koviloor Digital Library

மங்கல மணம்

மங்கல வினைகளும் மணம் செய்யும் ஆரவாரமும், தாழை மலர் மணமும் மணம் பரப்பும் சண்பக மலர்களும் மங்கையர் முக மலர்களும், திருமகள் உறையும் தாமரை மலர்களும் எங்கும் நிரம்பி உள்ளன. மேகமும் யானையும் யாகமும் சடங்கும் இன்பமும் மகிழ்வும் யோகமும் தவமும் செம்பஞ்சுக் குழம்பு அடி மலர்களும், வண்டொலிக்கும் குழல் மணமும் எங்கும் நிறைந்துள்ளன.

மேகமும் களிறும் எங்கும்; வேதமும் கிடையும் எங்கும்;
யாகமும் சடங்கும் எங்கும்; இன்பமும் மகிழ்வும் எங்கும்;
யோகமும் தவமும் எங்கும்; ஊசலும் மறுகும் எங்கும்;
போகமும் பொலிவும் எங்கும்; புண்ணிய முனிவர் எங்கும். (தி.நா.சி. 31)

மங்கல ஒலிகள்

வீதிகளில் விழா ஒலியும் விருந்தினர் அருந்தி மகிழும் ஒலியும் பறவை விலங்கொலியும் நிறைந்து விளங்கிய சோழ நாட்டில் நமசிவாய என்ற ஐந்தெழுத்து ஒலிகேட்டுப் பிணிகள் வர அஞ்சும். சோழநாட்டை ஒரு குடை நிழலில் மக்கள் மகிழ்வுற அநபாயச் சோழ மன்னன் ஆண்டான்.

மெய்ப்பொருள்

நாற்றுப் பாவிய இடத்திலிருந்து குறிப்பிட்ட பருவத்தில் வேறு வயலில் நட்டால் அப்பயிர் பயன்தரும். அதுபோல ஒரு பெண் பிறந்த வீட்டிலிருந்து சென்று புகுந்த வீட்டில் நல்ல குழந்தைகளை ஈன்று, புகுந்த வீட்டின் புகழையும் பிறந்த வீட்டின் புகழையும் நாற்றுப் போன்று பதியச் செய்ய வேண்டும். எனவே பெண் நாற்றுப் போன்றவள். நாற்று அன்னார் என்ற சொல்லே மருவி நாத்தனார் என ஆயிற்று.

நல்தமிழ் வரைப்பின் ஓங்கும்; நாம்புகழ் திருநாடு, என்றும்
பொன்தடந் தோளால் வையம் பொதுக்கடிந்து இனிது காக்கும்
கொற்றவன் அநபாயன் பொன் குடைநிழல் குளிர்வது என்றால்
மற்றுஅதன் பெருமை நம்மால் வரம்புஉற விளம்பல் ஆமோ. (தி.நா.சி. 35)

சோழநாட்டுத் திருநகர் ஆகிய திருஆரூர்ச் சிறப்பை அநபாயன் வாயிலாக விளக்கும் கருத்துக்குத் தோற்றுவாய் செய்து திருமலைச் சிறப்பைச் சேக்கிழார் நிறைவு செய்வார்.

Koviloor Digital Library

5. திருநகரச் சிறப்பு

(மனுநீதிச் சோழர் வரலாறு)

இப்பகுதியில் திருஆரூர்ச் சிறப்பும் அதைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்ட மனுநீதிச் சோழன் வரலாறும் இடம்பெற்றுள்ளன.

திருஆரூர்ச் சிறப்பு

வேத ஓசை, வீணை ஓசை, வானவர் பாடும் தோத்திர ஓசை, மாதர் ஆடல் பாடல் முழவோசை எங்கும் திருஆரூரில் நிறைந்துள்ளன. பல இசைக் கருவி ஒலி, மணித் தேரொலி, யானை பிளிறும் ஒலி, குதிரை கனைக்கும் ஒலி, ஆடலரங்கு எங்கும் மாதர் சிலம்பொலி ஆகியன நிறைந்துள்ளன.

தேவர் அடியார்களாகிய பெண்கள் இறைவனைப் பதியாகக் கொண்டு வழிபட்டுக் கொண்டாடும் பதியிலார் ஆவார். கணவன் மனைவி இழந்தோராகிய இருபாலரையும் 'பதியிலார்' என்றே சேக்கிழார் குறிப்பிடுவர். ஆங்கிலத்தில் பெண் விதவையை Widow என்றும் மனைவி இழந்தாரை Widower என்றும் குறிப்பிடுவர். ஆனால் சேக்கிழார் இருபாலரையும் பதியிலார் என்ற ஒரு பொருட்சொல்லால் குறிப்பிடுவர்.

பதியிலார் குலத்துப் பிறந்து இறைவனைப் பதியாகத் தொழுது சுந்தரர் பெருமானைப் பதியாக அடைந்த பெருமை கொண்ட பரவையார் அவதரித்த இடம் திருவாரூர். பரவையாருக்குத் தூது சென்ற சிவபெருமான் திருவடி பட்ட தெருக்கள் உடையது. பெண்கள் குங்குமக் குழம்பில் பூந்தாது வீழ்ந்து குங்குமச் சேறு படிந்த இடம் திருவாரூர் ஆகும். அங்கு மக்கள் இறைவன் மீது பாடும் பதிகங்களைக் கேட்ட கிளிகள் பதிகங்கள் பாடின. பூவைகள் கேட்டன. ஆரணங்களாகிய வேதங்களும், வாரணங்களும் முழங்கின. அத்தகைய திருஆரூரைச் சூரிய குலத்துத் தோன்றிய மனுநீதிச் சோழன் நீதி தவறாமல் ஆண்டு வந்தான்.

நிலமகட்கு அழகு ஆர்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி

Koviloor Digital Library

மலர்மகட்கு வண்தாமரை போல்மலர்ந்து
அலகுஇல் சீர்த்திருவாரூர் விளங்குமால் (தி.ந.சி. 12)

மனுநீதிச் சோழன் வரலாறு

மனுநீதிச் சோழன் மக்களைக் கண்ணும் ஆவியும் போலக் காத்து வந்தான். ஆகம விதிப்படி பூசை நடைபெறக் கோயில்கட்கு நன்கொடை அளித்தான். திரு ஆரூர் வீதிவிடங்கப் பெருமான் அருளால் மன்னற்கு உலகுபோற்றும் ஓர் ஆண்மகவு பிறந்தது. வீதிவிடங்கப் பெருமான் அருளால் தோன்றிய மகவுக்கு வீதிவிடங்கன் எனப் பெயர் சூட்டினான். வீதிவிடங்கன் ஆய தெய்வத் திருக்கலைகள் அனைத்தும் அமைவுறக் கற்றான். வளரும் கதிரவன்போல் வளர்ந்த இளவரசன் படைகள் சூழத் தேர்மிசை மேகம் தவழும் மாட வீதி வழியே கோயில் வழிபாட்டிற்குச் சென்றான். மன்னன் தரும சிந்தையைச் சோதிப்பதுபோல் ஓர் இளம்பசுங்கன்று ஒன்று தேர்க்காலில் துள்ளி ஓடிவந்து மாண்டது. கண்ட தாய்ப்பசு நடுங்கி விழுந்து அழுது அரற்றியது. அதைக் கண்ட வீதிவிடங்கன் தேரிலிருந்து வீழ்ந்தான். சோர்ந்தான். நிலை தளர்ந்தான், மதி மயங்கினான், அழுது அரற்றினான்.

மற்றுஅது கண்டு மைந்தன் வந்ததுஇங்கு அபாயம் என்று
சொல் தடு மாறி நெஞ்சில் துயர்உழந்தது அறிவு அழிந்து
பெற்றமும் கன்றும் இன்றுஎன் உணர்வுஎனும் பெருமை மாளச்
செற்ற, என் செய்கேன்? என்று தேரில்நின்று இழிந்துவீழ்ந்தான் (தி.ந.சி. 24)

மன்னனுக்கு என்னால் பழி வந்தது என இளங்கோ வீதிவிடங்கன் துன்புற்றான். பசு தன் குறை தீர்க்க வேண்டி அரண்மனை வாயிலில் கட்டிய மணியைக் கொம்பால் அசைத்தது. மன்னன் மதியமைச்சர் அவையைக் கூட்டினான். "இதுபோன்ற நிகழ்வில் மனுநீதியில் சொல்லியவாறு பசுவினைப் போல ஒன்று பொன்னால் செய்து அந்தணர்க்குத் தானம் ஈந்தால் பாவம் போகும்" என்று அமைச்சர் கூறினார். மன்னன் "பாவம் போகும். மற்று இந்தத் தாய்ப்பசுவின் துயரம் போகுமா?" என வினவி எரியிடைத் தோய்ந்த கமலம்போல் முகம் வாடினான். ஆவினைப் போல் தானும் மகனை இழந்து உழத்தலே தருமம் என்று உரைத்துத் தேர்க்காலில் இட்டு மைந்தனை மாய்க்க ஓர் அமைச்சரை வேண்டினான். அந்த அமைச்சர் தன் உயிரைத் தானே மாய்த்துக் கொண்டார். மன்னன் தன்னால், தன் பணியாளரால், பகைவரால், கள்வரால், பிற உயிர்களால் மக்கட்குத் தீங்கு வராமல் ஆள்தலே தமிழ்நீதி என்றுரைத்தான்.

மாநிலம் காவலன் ஆவான் மன்உயிர் காக்கும்காலைத்
தான்அதனுக்கு இடையூறுதன்னால், தன் பரிசனத்தால்,
ஊனம்மிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்கள் தம்மால்,
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம்காப்பான் அல்லனோ? (தி.ந.சி. 36)

Koviloor Digital Library

என மனுநீதிச் சோழன் தன் குலம் விளக்க வந்த ஒரே மகனைத் தானே தேரோட்டி அவனுயிர் இழக்க ஏதுவானான்.

ஒருமைந்தன் தன் குலத்துக்குஉள்ளான் என்பதும் உணரான்
தருமம்தன்வழிச் செல்கை கடன்என்று தன்மைந்தன்
மருமம்,தன் தேர்ஆழி உறஊர்ந்தான் – மனுவேந்தன்
அருமந்த அரசுஆட்சி அரிதோ?மற்று எளிதோதான்? (தி.ந.சி. 44)

வேந்தனின் நீதிநெறி தவறாமை உலகுக்குணர்த்த சிவபெருமான் கன்றும், அமைச்சரும், வீதிவிடங்கனும் உயிர்த்தெழ அருள் புரிந்தார்.

பொன் தயங்கு மதில்ஆரூர்ப் பூங்கோயில் அமர்ந்த பிரான்,
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு, தன்அடியார்க்கு
என்றும்எளி வரும்பெருமை ஏழுலகும் எடுத்து ஏத்தும். (தி.ந.சி. 49)

மனுநீதிச் சோழன் தமிழ்நீதிச் சோழன்

பொன்னால் கன்று செய்து அந்தணர்க்குக் கொடுத்துப் பாவம் போக்காமல் ஆவின் துயர் துடைக்கத் தன் அருமை மைந்தன்மீது தேர் செலுத்தியதனால் சோழன் தமிழ்நீதிச் சோழன் ஆனான். வழிபாட்டிற்கு எளிமை தேவை. ஆடம்பர வழிபாடு தேவையில்லை என்பதை விளக்குதற்கே வள்ளலார் மனுநீதிச் சோழன் வரலாற்றை மனுமுறைகண்ட வாசகம் என்ற உரைநடை நூலாக எழுதினார். அந்த நூலில் சோழன் கூறுவது போல எதிர்மறையில் நாற்பத்து மூன்று தனி மனித ஒழுக்கங்களை வற்புறுத்தி உரைப்பர்.

"நல்லோர், மனத்தை நடுங்கச் செய்தேனோ!
நட்டாற்றில் கைவ்ய நழுவ விட்டேனோ!
வலிய வழக்கிட்டு மானம் கெடுத்தேனோ!
வரவு போக்கு ஒழியவழி அடைத்தேனோ!
தானம் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
தருமம் பாராது தண்டம் செய்தேனோ!
கலந்த சிநேகரைக் கலகம் செய்தேனோ!
களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
மனம்ஒத்த நட்புக்கு வஞ்சகம் செய்தேனோ!
மண்ணோரம் பேசி வாழ்வு அழித்தேனோ !
குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ!
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!
ஊன்சுவை உண்டு உடல் வளர்த்தேனோ!
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!
பொது மண்டபத்தைப் போயிடித்தேனோ!

Koviloor Digital Library

ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ!
அன்புடையார்க்குத் துன்பம் செய்தேனோ!
வேலையிட்டுக் கூலிகுறைத் தேனோ!
வெய்யிலுக் கொதுங்கும் விருட்சத்தை அழித்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாரா திருந்தேனோ!
பகைகொண்டு அயலோர் பயிரை அழித்தேனோ!
கோள் சொல்லிக் குடும்பம் கலைத்தேனோ!
கலங்கி ஒளிந்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ!
கற்பழிந் தவளைக் கலந் திருந்தேனோ!
கணவன் வழிநிற் போரைக் கற்பழித்தேனோ!
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!
கருப்பம் அழித்துக் களித் திருந்தேனோ!
கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ!
குருவை வணங்கக் கூசி நின்றேனோ!
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ!
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
சிவனடியாரைச் சீறி வைதேனோ!
சுத்தானிகளைத் தூஷணம் செய்தேனோ!
மாதா, பிதாவை வைது நின்றேனோ!
தந்தைதாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ!
தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ!
என்னபாவம் செய்தேனோ இன்னதென்று அறியேனே.

மனுமுறை கண்ட வாசகம்

தனி மனித ஒழுக்கம் சீராக இருந்தால் உலகில் தீவிரவாதம் தலை தூக்காது. ஆன்மநேயம் ஓங்கும். ஆன்ம நேயமில்லாத ஆன்மிகம் உயிரற்ற உடல் போன்றது. மக்கள் உடல்; மன்னர் உயிர் என்கிறது புறநானூறு. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற புறநானூற்றின் கருத்திற்கு மறுப்பாகக் கம்பர் மக்கள் உயிர் மன்னன் உடல் என்ற கருத்தை 'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்' என்ற அடியில் கூறுகிறார். மன்னனே உயிர் என்ற புறநானூற்றுக் கருத்திலிருந்து மாறுபட்டுப் புதுநெறி வகுக்கிறார் கம்பர். அவர் வகுத்த புதுநெறிக்கு உரிய ஒப்பற்ற சான்றாக மனுநீதிச் சோழனைச் சொல்லலாம்.

Koviloor Digital Library

6. திருக்கூட்டச் சிறப்பு

திருக்கோயிற் சிறப்பு

திருக்கூட்டம் என்பது சிவன் அடியார்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. திருக்கூட்டச் சிறப்பு எனும் இப்பகுதியில் சேக்கிழார் சிவன் அடியார்களின் பெருமைகளைச் செப்புகிறார். இப்பகுதி பதினொரு பாடல்களைக் கொண்டது.

பூத நாயகர் புற்றுஇடம் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலில்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூது எயில்திரு வாயில்முன் ஆயது; (தி.கூ.சி. – 1)

எனும் முதல் பாடல் இறைவன் இருக்கும் பூங்கோயில் பற்றியது.

பூஆர் திசைமுகன் இந்திரன் பூமிசை
மாவாழ் அகலத்து மால்முதல் வானவர்
ஓவாது எவரும் நிறைந்துஉறைந் துள்ளது
தேவா சிரியன் எனும்திருக் காவணம். (தி.கூ.சி. – 2)

எனும் இரண்டாவது பாடல் நான்முகன், இந்திரன், திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் நீங்காமல் வசிப்பது தேவாசிரியன் எனும் மண்டபம் ஆகும் என்று கூறுகிறது.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றுஒளியால், நிறைதூய்மையால்
புரந்த அஞ்செழுத்து ஓசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது; (தி.கூ.சி. – 3)

எனும் மூன்றாம் பாடல் ஆயிரம் பாற்கடல்கள் ஒன்றாகி உள்ளதைப் போல் தேவாசிரியன் மண்டபம் திகழ்கிறது என்று கூறுகிறது.

நான்காம் பாடல் அனைத்து அகிலங்களுக்கும் காரணமான இறைவன் தாள் பணிவோரே அனைத்து அகிலங்களையும் ஆள்வதற்கு உரியோர் என்றும் அனைத்து அகிலங்களில் உள்ளோரும் மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். ஆதலால் அது அனைத்து அகிலங்களும் ஒன்றாகச் சேர்ந்ததைப் போல் விளங்கியது என்றும் கூறுகிறது.

அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்
அகில லோகமும் ஆளற்கு உரியர் என்று

Koviloor Digital Library

அகில லோகத்து உளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வது; அதன்இடை. (தி.கூ.சி. – 4)

அடியார் இயல்புகள்

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்தழைந்து விதிர்ப்புஉறு சிந்தையார்;
கைத்திருத்தொண்டு செய்கடப் பாட்டினார்;
இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார்; (தி.கூ.சி. – 5)

எனும் ஐந்தாம் பாடல் கூறும் அடியார் இயல்புகள்

1. இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றோர்.
2. அன்பால் உடல் நடுக்கமும் மயிர்ப்புளகமும் அடையும் மனமுடையோர்.
3. தொண்டு செய்வதைக் கடமையாகக் கொண்டோர்.

மாசு இலாத மணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்;
தேசி னால்எத் திசையும் விளக்கினார்;
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்; (தி.கூ.சி. – 6)

எனும் ஆறாம் பாடல் கூறும் அடியார் இயல்புகள் :

1. மேனியில் பூசப்பட்ட திருநீற்றின் தூய்மையை அகத்திலும் உடையோர்.
2. அவர் பெருமையைப் பிறர் பேச இயலாத சிறப்பினர்.

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதுஓர் பாகர் மலர்த்தாள் மறப்புஇலார்;
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்;
கோது இலாத குணப்பெருங் குன்றுஅனார்; (தி.கூ.சி. – 7)

எனும் ஏழாம் பாடல் கூறும் அடியார் இயல்புகள்:

1. பூதங்கள் ஐந்தும் தம் நிலையில் கலங்கினாலும் மாதொரு பாகரின் மலர்த்தாளை மறக்காதோர்.
2. பெரியோரால் ஓதப்பட்ட அன்புவழி நிற்போர்
3. குற்றமற்ற குணத்தில் குன்று போன்றோர்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்;
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்; (தி.கூ.சி. – 8)

எனும் எட்டாம் பாடல் கூறும் அடியார் இயல்புகள்.

Koviloor Digital Library

1. ஆக்கமும் அழிவுமற்ற செல்வத்தோர்
2. மண் ஓடு, செம்பொன் இரண்டையும் ஒன்றாய் நோக்குவோர்.
3. இறை அன்பால் இறையை வணங்குதலே அன்றி வீடுபேற்றையும் வேண்டுதல் இலாத மன வலிமை உடையோர்.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலது ஒன்றுஇலார்;
ஈர அன்பினர்; யாதுங் குறைவுஇலார்;
வீரம் என்னால் விளம்பும் தகையதோ? (தி.கூ.சி. – 9)

எனும் ஒன்பதாம் பாடல் கூறும் அடியார் இயல்புகள்.

1. உருத்திராக்கத்தை மாலையாக அணிவோர்
2. கந்தை ஆடையர் (கந்தை - முழங்கால் அளவுள்ள ஆடை)
3. கடமையாய் இறைபணி அன்றி வேறு ஒன்று இலார்
4. குளிர்ந்த அன்பினர்
5. எக்குறையும் இல்லாதோர்

வேண்டு மாறு விருப்புஉறும் வேடத்தர்;
தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்;
நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன் என்அறிந் தேத்துகேன்? (தி.கூ.சி. – 10)

எனும் பத்தாம் பாடல் கூறும் அடியார் இயல்புகள்.

1. அடியார்கள் வேண்டியவாறு பற்பல வேடங்கள் பூணும் தாண்டவப் பெருமானின் தனித் தொண்டர்கள்.
2. நீண்ட புகழை உடையோர்

இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்
அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம். (தி.கூ.சி. – 11)

இங்ஙனம் திருக்கூட்டச் சிறப்பிலே சேக்கிழார் இறை அடியாரின் இயல்புகளைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

Koviloor Digital Library

7. தடுத்தாட்கொண்ட வரலாறு

(203 பாடல்கள்)

திருத்தொண்டர் புராணம் கருவாகி உருவாகக் காரணமான திருத்தொண்டத் தொகை இயற்றிய சுந்தரர் பெருமான் வரலாறு பெரிய புராணத்தில் முதற்கண் வைக்கப்பெற்றது. சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகை முதல் நூல். திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருஅந்தாதி வழிநூல் பெரியபுராணம் சார்பு நூல். சிவன் பெயர் தாங்கிய சேக்கிழார் பெருமான் சிவனடியார் வரலாற்றைத் தெளிவாக விரித்துரைப்பது பொருந்திய செயலாகும். அறியாமையால் நெறி தவறிச் செல்லுங் கால் தலைசிறந்த ஆன்மாக்களை இறைவன் தடுத்தாட்கொண்ட வரலாறு எடுத்துக்காட்டாக அமைகிறது. கயிலைமலைப் பூங்காவில் பூசனைக்குப் பூக்கொய்யப் புகுங்கால் கமலினி, அனிந்திதை என்ற தெய்வப் பெண்கள்பால் ஆலால சுந்தரரின் மனம் சென்றது. தம் அடியாராகிய ஆலால சுந்தரரைப் பூவுலகில் சென்று இந்த இரு மங்கையரோடு இன்பம் துய்த்தபின் இவ்வுலகெய்துக என்று கூறியருளினார் இறைவர். திருமறையவர் வாழும் திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரில் வேதியர் குலத்து மேம்பட்ட சடையனார்க் கும் இசைஞானியார்க்கும் சுந்தரனார் மகவாய் அவதரித்தார். நம்பி ஆரூரர் என்று பெயர் சூட்டி ஐம்படைத்தாலி, சதங்கை, நெற்றிச் சுட்டி, செம்பொன் அரைஞாண் ஆகியவற்றைக் குழந்தைக்கு அணிந்து அழகுபடுத்தினர்.

காத்தற் கடவுளாகிய திருமாலுக்குரிய வில், வாள், தண்டு, சங்கு, சக்கரம் ஆகிய ஐம்படைகளைப் பொன்னால் செய்து குழந்தைக்கு அணிவது திருமால் காப்பால் குழந்தை நன்கு வளர்தல் வேண்டும் என்னும் காரணத்திற்காகவே. இன்றும் குழந்தைகள் அரைஞாண் இடுப்பில் அணிவர். சுந்தரர் சிறுதேர் உருட்டித் தெருவில் விளையாடும் நாளில் அந்நாட்டரசர் நரசிங்க முனை யரையர் கண்டு சுந்தரர் பெற்றோரிடமிருந்து மகன்மை கொண்டார். ஸ்வீகாரம் என்ற சொல்லுக்குத் தூய தமிழ்ச் சொல் மகன்மை கோடல். சேக்கிழார் பல நல்ல தமிழ்ச் சொற்களை நமக்கு இங்கு வழங்குவார்.

அரசர் பிள்ளையாய் வளர்ந்தாலும் மணப்பருவம் எய்தியதும் சுந்தரர் குலத்திலேயே பெண் கொள்ள ஏற்பாடு செய்தனர். சடங்கவி

Koviloor Digital Library

சிவாச்சாரியார் தன் மகளைத் தர மனமிசைந்தார். சடங்கவி மனமொப்பி விடுத்த மண ஓலையை மணமகன் வீட்டார் மனம் உவந்தேற்றனர். பூமாலைப் பந்தலில் மணப்பந்தல் கால் நாட்டினர். பண்வாழ்த்த முரசியம்ப வாழ்த்திப் பொன் நாண் காப்பு மணமகனுக்கு இட்டனர். எச்செயலும் இறைவன் திருக்காப்பில் இனிது நிறைவேறவே காப்புக் கட்டும் வழக்கம் ஏற்பட்டது.

மாமறை விதிவழாமல் மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குல் மங்கலம் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான். (த.கொ.பு. – 13)

திருமணக்கோலம் காணக் கதிரவன் தோன்றினான். ஆனால் திருமணம் காணமுடியவில்லை என்ற குறிப்பைச் சேக்கிழார் காட்டுவர்.

மணக்கோலம் காண நூலணி மார்பராகிய ஆரூரர் மாலையும் தாரும் பொங்கத் திருமஞ்சனமாட்டும் சாலை புகுந்தார். மஞ்சன நீராட்டிப் பின் பட்டாடை சார்த்தினர். மார்பில் தாரும்,தலையில் கண்ணியும் அணிந்தனர். கண்போல் இரண்டிரண்டு மலர்களாகத் தொடுப்பது கண்ணியாகும். இறைவன் திருவடி மனத்தில் எண்ணி நம்பி ஆரூரர் திருநீறு சாத்திக் கொண்டார். சுந்தரர் மணம் நடக்க இருந்த புத்தூர் மணம் வந்த புத்தூர் ஆனது. திருமணச் சடங்கு தொடங்கும்போதே ஆலாலசுந்தரராகிய அடியார்க்கு வாக்கு அளித்தவாறு சிவபெருமான் வேதியர் வடிவில் வந்து தடுத்து ஆட்கொள்ள வந்தார்.

சுந்தரனை அடிமை என வாதாடினார். சுந்தரர் மூல ஓலை என நினைத்து வேதியர் கொணர்ந்த ஓலையைக் கிழித்தார். திருவெண்ணெய்நல்லூருக்கு வந்து வழக்காட விரும்பிச் சிவனார் சுந்தரரை அழைத்துச் சென்றார். வழிவழி அடிமை என்று நம்பி ஆரூரர் எழுதிக் கொடுத்த ஓலையில் கண்டவாறு சுந்தரர் பெருமானுக்கு ஆளாயினமை ஒப்புக் கொண்டார். பித்தன் என்று பாட வேண்டினார் இறைவர்.

பித்தாபிறை சூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்காளாயினி அல்லேன் என லாமே. (7ஆம் திருமுறை. 1)

இது இந்தளப் பண். இந்தப்பண் பாடும் நேரம் காலை 10-11. இறைவன் ஆரூரரை ஆட்கொண்ட நேரம் அஃதே. இறைவன் ஆட்கொண்ட தன்மையைச் சேக்கிழார் பாடுவார்.

Koviloor Digital Library

கொத்துஆர்மலர்க் குழலாள்ஒரு கூறுஆய் அடியவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ் வியன் நாவலர் பெருமான்
பித்தாபிறை சூடிஎனப் பெரிதுஆம் திருப்பதிகம்
இத்தாரணி முதல்ஆம் உலகு எல்லாம்உய எடுத்தார். (த.கொ.பு. 74)

திலகவதியார், திருநாவுக்கரசர் திருத்தொண்டு செய்த திருவதிகை வீரட்டானம் தொழுதார். திருமால் வாமனனாய் வந்து மாபலியிடம் மண் இரந்த திருமாணிக்குழிச் சிவனை ஆரூரர் வழிபட்டார். தில்லையில் நம்பி ஆரூரர் கூத்தப்பெருமானை வழிபடும் போது ஐந்து பேரறிவும் கண்களே ஆயின. அந்தக்கரணங்கள் நான்கும் புத்தி, மனம், அகங்காரம் மூன்றை ஒழித்துச் சிந்தை ஆயின. இராசசம், தாமதம் ஒழிந்து சத்துவம் வலிமை மிகுந்தது. அம்பல வாணர் கூத்துக் காட்சி இன்பத்தில் திளைத்தார்.

ஐந்துபேர் அறிவும் கண்களேகொள்ள அளப்புஅரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேஆகக் குணம்ஒரு மூன்றும் திருந்துசாத்து விகமேஆக,
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லைஇல் தனிப்பெருங்கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறுஇலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.
(த.கொ.பு. – 106)

மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதுஆம் இன்பம் ஆம்.
(த.கொ.பு. 107)

என நெகிழ்ந்தார். மகிழ்ந்தார். உருகினார். உயிர்த்தெழுந்தார். உமாதேவியின் தோழியாக விளங்கிய கமலினி திருஆரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் தோன்றினார். நம்பிஆரூரர் பரவையார் அழகில் ஈடுபட்டார். காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்ற அகப்பொருள் துறைகளைச் சேக்கிழார் காட்டிச் சுந்தரர் பரவையார் காதலை விளக்குவர். பரவையாரின் தெய்வத் தன்மையைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புஉடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
வில்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ?
அற்புதமோ? சிவன்அருளோ? அறியேன்என்று அதிசயித்தார்
(த.கொ.பு. 140)

பரவையார் சுந்தரரைக் கண்டு வியந்த காட்சியால் சுந்தரரின் தெய்வத்தன்மை புலனாகும்.

Koviloor Digital Library

முன்னேவந்து எதிர்தோன்றும் முருகனோ? பெருகுஒளியால்
தன்நேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்ஏர்செஞ் சடைஅண்ணல் மெய்அருள் பெற்றுஉடையவனோ?
என்னே! என் மனம்திரித்த இவன்யாரோ? என நினைத்தார்.

(த.கொ.பு. – 144)

இறையருளால் பரவையார் திருமணம் நடைபெற்றது. சுந்தரர் சங்கிலியால் பிணைக்கப்பெற்றுப் பரவையார் கடலில் விழுந்தார் என்பர் சேக்கிழார். நிந்தையில்லாத அனிந்திதை சங்கிலியாராகத் திருவொற்றியூரில் வேளாள நங்கையாகப் பிறந்து வளர்ந்திருந்தார். சுந்தரர் சங்கிலியாரையும் மணந்தார். பிரியேன் எனக் கொடுத்த சத்தியத்தை மீறிப் பிரிந்ததால் கண்போன்ற சங்கிலியாரைப் பிரிந்து கண்கள் இழந்தார். இறையருளால் ஞானக்கண் பெற்ற சுந்தரர் இறைவனைப் பாடி ஊனக் கண்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்றார்.

இறைவனைத் தூது போக்கிய சுந்தரர் செயலால் சினங்கொண்ட ஏயர்கோன் கலிக்காமர் வயிற்று நோயால் வருந்தினார். ஏயர்கோன் தம் வயிற்றைக் கத்தியால் கிழித்துக் கொண்டார். செய்தி அறிந்த சுந்தரர் தாமும் உயிர்நீக்கத் துணிந்தார். இறையருள் முன்னின்றது. இருவரும் இணைந்தனர். வானவர் மலர் மாரி பொழிந்தனர். ஏயர்கோன் கலிக்காமர் நலம் பெற்றுச் சுந்தரரைத் தழுவி வணங்கினார்.

அருள்மிகு பக்தஜனேஸ்வரர் திருக்கோயில்
திருநாவலூர் அஞ்சல் – 607 204
உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

8. சுந்தரரின் தோழமை

4,286 பாடல்களுள் திருஞானசம்பந்தர் வரலாற்றை 1256 பாடல்களில் கூறிய தெய்வச் சேக்கிழார் இரண்டாவது பெரிய வரலாறாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றைச் 760 பாடல்களில் கூறியுள்ளார். மூன்றாவதாகத் திருநாவுக்கரசர் வரலாற்றை 429 பாடல்களில் கூறியுள்ளார்.

விறன்மிண்டர் வரலாற்றில் தெய்வச்சேக்கிழார் குறிப்பிடும் செய்திகள் தடுத்தாட்கொண்ட புராணத்தில் இல்லை. அடியார் திருக்கூட்டத்தை வணங்காமல் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளும் புறம்பு; அவரை ஆதரிக்கும் சிவபெருமானும் புறம்பு எனக் கூறப்பெறும் செய்திகளைத் தடுத்தாட்கொண்ட புராணத்தில் குறிப்பிடாமல் தெய்வச்சேக்கிழார் தவிர்த்துள்ளார்.

இறைவன் சுந்தரருக்குத் திருவாரூரில் காட்சிக் கொடுத்ததைப் பின்வருமாறு தெய்வச் சேக்கிழார் செப்புகிறார்.

திருவடிச் சிறப்பு

மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்ந்து,
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்த ரத்தும் அளித்துஎதிர் நின்றன; (த.கொ.பு. 191)

உனது திருவடித்தாமரைகள் வேதங்களான வண்டுகள் மொய்த்து ஒலிக்க, அன்புடன் நினைப்பவரின் உள்ளத்தில் பெரிய பரமானந்தம் என்ற நல்ல தேனைப் பொழிய, அதனைப் பெறத் தகுதியற்ற என்னிடத்தும் பெறுமாறு தந்து எதிரே தோன்றி நின்றன.

ஞாலம் உய்ய நடம்மன்றுள் ஆடின;
காலன் ஆர்உயிர் மாளக் கறுத்தன;
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன. (த.கொ.பு. 192)

தங்கள் திருவடித் தாமரைகள் உலகம் உய்யும் பொருட்டு அம்பலத்திலே பெருங்கூத்தை ஆடின. கூற்றுவனின் உயிர்

நீங்குமாறு துன்புறுத்தின. மாலை சூடிய கூந்தலையுடைய உமையம்மையார் தம் செங்கையால் தடவச் சிவந்தன.

நீதி மாதவர் நெஞ்சில் பொலிந்தன;
வேதி யாதவர் தம்மை வேதிப்பன;
சோதியாய் எழும் சோதியுள் சோதிய;
ஆதி மால்அயன் காணா அளவின. (த.கொ.பு.193)

அத்திருவடித்தாமரைகள் நீதியில் நிற்கும் தவமுடையோரின் உள்ளத்தில் ஒளிவீசித் திகழ்வன. அறியாதவரையும் அறிவித்துத் திருத்துவன. ஒளிப் பிடிப்புக்கெல்லாம் ஒளி அளித்து ஒளிர்வன. முன்பு திருமாலும் நான்முகனும் அளந்து காண இயலாத அளவையுடையன.

வேத ஆரணம் மேல்கொண்டு இருந்தன;
பேதை யேன்செய் பிழைபொறுத்து ஆண்டன;
ஏதம் ஆனவை தீர்க்க இசைந்தன;
பூத நாத! நின் புண்டரீ கப்பதம். (த.கொ.பு. 194)

பூதகணங்களின் தலைவரான தங்களின் திருவடித் தாமரைகள், வேதங்கள் என்ற யானையின் மீது நிற்பன. நான் செய்த பிழைகளைப் பொறுத்தருளி என்னை ஆண்டன. மேலும் வரக்கூடிய குற்றங்களை யெல்லாம் போக்கவும் இசைந்து நிற்பன.

இறைவனே அருளிய அடியார் சிறப்பு

பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனம்மேல் ஒன்றும் இல்லார்;
அருமைஆம் நிலையில் நின்றார்; அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையும்கடந்து நின்றார்; இவரைநீ அடைவாய்; என்று
(த.கொ.பு.196)

இறைவர், அவ்வடியவர்கள் பெருமையினால் எம்மைப் போன்றவர்; இயல்பாய் எம்மைத் தமக்கே உரிமையாய்ப் பெற்றார். எம்முடன் ஒன்றி நின்ற நிலையினால் உலகத்தை வென்றவர். அதனால் பின்னால் வரவிருக்கின்ற ஊனங்கள் ஏதும் இல்லாதவர். மற்றவர் எவரும் நிற்பதற்கரிய நிலையிலே நின்றவர்கள். அன்பு நிறைவதால் இன்பத்தையே அனுபவிப்பார்கள். இம்மை மறுமைகளைக் கடந்து நிலைபெற்றவர்கள். இத்தகையவரான இந்த அடியார்களை நீ அடைவாயாக! என்று உரைத்தருளினார்.

Koviloor Digital Library

தோழமை நெறிக்குச் சான்றான சுந்தரரின் வாழ்வியல் நிகழ்வுகள்

1. திருமாலும், பிரமனும் காணமுடியாத ஜோதி வடிவமான இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள மானிட வடிவில் வந்தமை.
2. சுந்தரரின் அன்பெனும் பிடியில் அகப்பட்டமை.
3. சித்த வடத்தில் வலியவந்து திருவடி அளித்தமை.
4. சீர்காழியில் அம்மையப்பராகத், தோணியப்பர் காட்சியளித்தமை.
5. தில்லையில் தன் ஆனந்தக் கூத்தின் அழகைக் காட்டியமை.
6. திருவாரூரில் பரவையாருடன் திருமணம் செய்வித்தமை.
7. திருவாரூரில் இறைவன் தானே முன்வந்து தன் திருவடிகளைக் காட்டியது.
8. இறைவனே அடியார் பெருமைகளை எடுத்துக் கூறியது.
9. திருவாரூரில் வாழ்நாள் முழுமையும் உண்பதற்குக் குண்டையூர் கிழார் வழியாக நெல் அளித்தது.
10. திருப்புகலூரில் செங்கற்களைப் பொன்கற்களாக மாற்றித் தந்தது.
11. திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தில் பன்னிரண்டாயிரம் (12,000) பொன் பெற்று, அதனைத் திருவாரூர் கமலாலயக் குளத்தில் எடுத்தது.
12. திருக்கருகாவூர் செல்லும் வழியில் இறைவன் சுந்தரருக்கும் அவர் அடியார்களுக்கும் பொதிசோறும் குடிநீரும் அளித்தது.
13. திருக்கச்சூர் ஆலயத்தில் சுந்தரர் பசித்திருந்தபோது இறைவன் அவருக்காகக் காண்பவர் மனமெல்லாம் உருக, உச்சி வெயிலில் பிச்சை எடுத்து உணவும் கறியமுதும் அளித்தது.
14. திருவோண காந்தன் தளி ஊரில் பொற்காசுகள் பெற்றது.
15. திருவொற்றியூரில் சங்கிலியாரை மணப்பதற்குத் துணை புரிந்தது.
16. என்னிடம் பேரன்பு கொண்டவன், மேரு மலையை விடத் தவ வலிமை கொண்டவன் என்று சங்கிலியாரிடம் இறைவன் கூறியது.

Koviloor Digital Library

17. எனக்கு இரண்டு கண்கள் போய்விட்டன. உனக்கு மட்டும் மூன்று கண்கள் எதற்கு? என்னும் தொனியில் முக்கண்ணா என முறையிட்டது.

18. திருமுல்லைவாயில் அடுத்து இருக்கக் கூடிய திருவெண் பாக்கத்தில் (இருகண்களையும் இழந்த சுந்தரர்) இத்திருக்கோயி லினுள் நீர் மகிழ்ந்து வீற்றிருக்கின்றீரோ என விண்ணப்பம் செய்ய இறைவர் அவருக்கு ஊன்றுகோல் ஒன்றை மட்டும் கொடுத் தருளி நாம் இங்கு உள்ளோம் நீர்போம் என்று அன்னியர் போல் (உரிமை காரணமாக) இயம்பினது.

19. உன்னைக் காணும்படி கண்ணை அளித்திடல் வேண்டும் எனக் கச்சி ஏகாம்பரரிடம் (காஞ்சிபுரம்) வேண்ட அம்மை அருள் நோக்கால் இடக் கண் பெற்றது.

20. திருவாரூரில் சுந்தரர் வலக்கண்ணைப் பெற்றது.

21. வாழ்ந்து போதிரே என உரிமையோடு இறைவனிடம் முறை யிட்டது.

22. இறைவன் தன் பூத கணங்களுடன் திருவாரூர் தெருக்களில் இரண்டு முறைதூது போனமை.

23. ஏயர்கோன் கலிக்காம நாயனாரை உயிர்ப்பித்தமை.

24. சேரமான் பெருமாள் நாயனாரோடு தொடர்பு கொண்டு இரண்டு முறை அவர் நாட்டுக்குச் சென்றது.

25. அவினாசியில் (திருப்புக்கொளியூர்) முதலை கொண்ட பாலகனை உயிர்ப்பித்தது. இரண்டாண்டுகள் கழிந்தபின் இல்லாத மடு, இல்லாத நீர், இல்லாத முதலை, இல்லாத சிறுவன் இவை அனைத்தையும் உருவாக்கிச் சிறுவனை உயிர்ப்பித்தது.

26. தேவர்கள் புடைசூழ அயிராவணம் என்ற வெள்ளை யானை மீது கயிலை அடைந்தமை.

Koviloor Digital Library

9. தோழமை நெறி

தெய்வச் சேக்கிழார் அருளிய தெய்வ மாக்கதையாகிய திருத்தொண்டர் புராணத்தில் காப்பியத் தலைவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாறு ஐந்து இடங்களில் பேசப் பெறுகிறது.

1.	தடுத்தாட்கொண்ட புராணம்	- 203 பாடல்கள்
2.	ஏயர்கோன் கலிக்காம நாயனார்புராணம் (409 பாடல்களில்)	- 350 பாடல்கள்
3.	கழறிற்றறிவார் நாயனார் (எ) சேரமான் பெருமாள் நாயனார் புராணம் (175 பாடல்களில்)	- 150 பாடல்கள்
4.	விறன்மிண்டர் நாயனார் புராணம் (11 பாடல்களில்)	- 04 பாடல்கள்
5.	வெள்ளானைச் சருக்கம்	- 53 பாடல்கள்
	மொத்தம்	760 பாடல்கள்

4,286 பாடல்களுள் திருஞானசம்பந்தர் வரலாற்றை 1256 பாடல்களில் கூறிய தெய்வச் சேக்கிழார் இரண்டாவது பெரிய வரலாறாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றைச் 760 பாடல்களில் கூறியுள்ளார். மூன்றாவதாகத் திருநாவுக்கரசர் வரலாற்றை 429 பாடல்களில் கூறியுள்ளார்.

விறன்மிண்டர் வரலாற்றில் தெய்வச்சேக்கிழார் குறிப்பிடும் செய்திகள் தடுத்தாட்கொண்ட புராணத்தில் இல்லை. அடியார் திருக்கூட்டத்தை வணங்காமல் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளும் புறம்பு; அவரை ஆதரிக்கும் சிவபெருமானும் புறம்பு எனக் கூறப்பெறும் செய்திகளைத் தடுத்தாட்கொண்ட புராணத்தில் குறிப்பிடாமல் தெய்வச்சேக்கிழார் தவிர்த்துள்ளார்.

தோழமைநெறியின் நுட்பத்தைத் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கூறுவதை உய்த்து உணர்வோம்.

இந்த இடம் அன்பர்கள் நன்கு சிந்திக்கத் தக்கது. "நான் உன்னைத்

Koviloor Digital Library

தோழனாக்கிக் கொண்டேன்'' என்றும், ''இன்று முதல் நீ எனது தோழன்'' என்றும், ''நான் உன் தோழன்'' என்றும் பெருமான் கூறவில்லை. ''தோழராக நம்மை உனக்குத் தந்தோம் என்பதில் எத்துணை ஆழம் உளது! தந்ததுஉன் தன்னை'' என்பார் மணிவாசகர். மாலயனாதி வானவ அடிமைகளே; குபேரன் அரிதில் முயன்று தோழாரானார். சுந்தரரை இறைவன் வலிதில் தாமே தோழராக்கிக் கொண்டார். (பெரியபுராணம் பக். 46)

தோழமை நெறிக்குப் பெரியபுராணத்திலும் தேவாரப் பாடல்களிலும் அகச் சான்றுகள்

1. திருமாலும், பிரமனும் காணமுடியாத ஜோதி வடிவமான இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள மானிட வடிவில் வந்தமை. (த.கொ.பு: 28) (தேவாரம்: 7225 மற்றும் 7917)
2. சுந்தரரின் அன்பெனும் பிடியில் அகப்பட்டமை (த.கொ.பு: 45,46)
3. சித்த வடத்தில் வலியவந்து திருவடி அளித்தமை (த.கொ.பு: 86,87,88) (தேவாரம்: 7607 - 7617)
4. தில்லையில் தன் ஆனந்தக் கூத்தின் அழகைக் காட்டியமை (த.கொ.பு: 106, 107)
5. சீர்காழியில் அம்மையப்பராகத், தோணியப்பர் காட்சியளித்தமை (த.கொ.பு: 112, 113)
6. திருவாரூரில் பரவையாருடன் திருமணம் செய்வித்தமை. (த.கொ.பு: 152,178,179,180)
7. திருவாரூரில் இறைவன் தானே முன்வந்து தன் திருவடிகளைக் காட்டியது. (த.கொ.பு: 191, 192, 193, 194)
8. இறைவனே அடியார் பெருமைகளை எடுத்துக் கூறியது (த.கொ.பு: 196)
9. திருவாரூரில் வாழ்நாள் முழுமையும் உண்பதற்குக் குண்டையூர் கிழார் வழியாக நெல் அளித்தது. (ஏ.கோ.க: 11)
10. பூதங்கள் மலையளவு நெல்லைத் திருவாரூரில் சேர்த்தமை (ஏ.கோ.க: 25) (தேவாரம் : 7423)
11. திருப்புகலூரில் செங்கற்களைப் பொன்கற்களாக மாற்றித் தந்தது. (ஏ.கோ.க: 50)
12. கோவை - திருப்பேரூரில் கயிலைத் திருநடனத்தைக் காட்டியது (ஏ.கோ.க: 89, 90)
13. திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தில் பன்னிரண்டாயிரம் (12,000) பொன் பெற்ற, அதனைத் திருவாரூர் கமலாலயக்

Koviloor Digital Library

குளத்தில் எடுத்தது. தங்கத்தின் தன்மையினைச் சோதித்து அறிந்தமை (ஏ.கோ.க: 107-109 மற்றும் 130-135) (தேவாரம்: 7473-7482 மற்றும் 7659-7669

14. மீண்டும் தில்லை - சிதம்பரம் அடைந்து - பேரூர் நடனக் காட்சியை நினைவுபடுத்திப் பாடுதல் (ஏ.கோ.க: 115)

15. திருக்கருகாவூர் செல்லும் வழியில் இறைவன் சுந்தரருக்கும் அவர் அடியார்களுக்கும் பொதிசோறும் குடிநீரும் அளித்தது. (ஏ.கோ.க:156-162) (தேவாரம்: 7513-7518)

16. திருக்கச்சூர் ஆலயத்தில் சுந்தரர் பசித்திருந்தபோது இறைவன் அவருக்காகக் காண்பவர் மனமெல்லாம் உருக, உச்சி வெயிலில் பிச்சை எடுத்து உணவும் கறியமுதும் அளித்தது. (ஏ.கோ.க: 177- 181) (தேவாரம்: 7639-7648)

17. திருவோணகாந்தன்தளி எனும் ஊரில் அளவில்லாத பொற்காசுகள் பெற்றது. (ஏ.கோ.க:191) (தேவாரம்: 7266, 67, 68)

18. திருவொற்றியூரில் சங்கிலியாரை மணப்பதற்குத் துணை புரிந்தது. (ஏ.கோ.க: 236-266=30)

19. என்னிடம் பேரன்பு கொண்டவன், மேரு மலையை விடத் தவ வலிமை கொண்டவன் என்று சங்கிலியாரிடம் இறைவன் கூறியது. (ஏ.கோ.க: 239)

16. எனக்கு இரண்டு கண்கள் போய்விட்டன. உனக்குமட்டும் மூன்று கண்கள் எதற்கு? என்னும் தொனியில் முக்கண்ணா (7777) என முறையிட்டது. (தேவாரம்: 7774, 7777, 7778)

17. திருமுல்லைவாயில் அடுத்து இருக்கக் கூடிய திருவெண் பாக்கத்தில் (இருகண்களையும் இழந்த சுந்தரர்) இத்திருக்கோயி லினுள் நீர் மகிழ்ந்து வீற்றிருக்கின்றீரோ என விண்ணப்பம் செய்ய இறைவர் அவருக்கு ஊன்றுகோல் ஒன்றை மட்டும் கொடுத் தருளி நாம் இங்கு உள்ளோம் நீர்போம் என்று அன்னியர் போல் (உரிமை காரணமாக) இயம்பினது. (தேவாரம்: 8126- 8136)

18. உன்னைக் காணும்படி கண்ணை அளித்திடல் வேண்டும் எனக் கச்சி ஏகாம்பரரிடம் (காஞ்சிபுரம்) வேண்ட அம்மை அருள் நோக்கால் இடக் கண் பெற்றது. (ஏ.கோ.க: 287) (தேவாரம்: 7848, 7858)

19. ஒரு கண் இல்லையே. இங்கே எனக்கு உயர் உறவு நீரே என்றது. (ஏ.கோ.க: 296)

20. வாழ்ந்து போதிரே என உரிமையோடு இறைவனிடம் முறையிட்டது. (தேவாரம்: 8188 -8198)

Koviloor Digital Library

21. திருவாரூரில் சுந்தரர் வலக்கண்ணைப் பெற்றது. பல முறை விழுந்து - பணிந்து - உருகிப்பரவி - வணங்குதல் (ஏ.கோ.க: 310, 311)

22. இறைவன் தன் பூத கணங்களுடன் திருவாரூர் தெருக்களில் இரண்டு முறைதூது போனமை. (ஏ.கோ.க: 331-340 மற்றம் 358 - 368)

23. ஏயர்கோன் கலிக்காம நாயனாரை உயிர்ப்பித்தமை. (ஏ.கோ.க: 404-405) (தேவாரம்: 7786 மற்றும் 7787)

24. சேரமான் பெருமாள் நாயனாரோடு தொடர்பு கொண்டு இரண்டு முறை அவர் நாட்டுக்குச் சென்றது. (கழறிற்றறிவார் -1-175) (தேவாரம்: 7670-7679)

25. அவினாசியில் (திருப்புக்கொளியூர்) முதலை கொண்ட பாலகனை உயிர்ப்பித்தது. (வெள்ளானைச் சருக்கம்: 9-12) (தேவாரம்:8157-8166)

26. தேவர்கள் புடைசூழ அயிராவணம் என்ற வெள்ளை யானை மீது கயிலை அடைந்தமை. (வெ.ச: 31-34) (தேவாரம்: 7256 - 7265 மற்றும் 8241-8250)

சுந்தரர் தேவாரம் (முக்கியப் பாடல்கள்)

1. பொன்னார் மேனியனே - திருமழபாடி - 7463

2. நீள நினைந்தடியேன் - திருக்கோளிலி - 7423

3. மற்றுப் பற்றெனக்கின்றி - திருப்பாண்டிக்கொடுமுடி - (7712-7721) - நமசிவாய திருப்பதிகம்

   நமசிவாயதிருப்பதிகம் - உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம் உரைத்து மெய் உணர்வு அறா ஒருமை நிலவிய சிந்தையுடன் - (ஏ.கோ.க. 88).

4. எட்டு அங்கத்தாலும் ஐந்து அங்கத்தாலும் நிலத்தில் தோய வணங்குதல் (ஏ.கோ.க. 98)

5. திருவாரூர் பதிகம் 4190 - 4199 மற்றும் 4200-4209மற்றும்4345 -4355மற்றும் 4356-4

6. சுந்தரரின் முக்கிய தேவாரத் திருப்பாடல்கள். 7283,7286, 7347 7357 7463 7565, 7647, 7751, 7817, 7827, 8147, 8156, 8209, 8241.

Koviloor Digital Library

10. தில்லைவாழ் அந்தணர்

(10 பாடல்கள்)

திருத்தொண்டத் தொகையை ஆரூரர் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பாடுவர். எழுபிறவி நீங்கி இறை இன்பத்தை எட்டிப் பிடித்த அடியார்கள் பெருமை கூறுவதால் ஆரூரர் திருத்தொண்டத்தொகையை எண்சீர் விருத்தத்தில் பாடுவர். திருத்தொண்டத் தொகையில் முதன்முதலில் சிவநெறியில் நின்று சிவபெருமான் பூ செய் (பூசை) நெறி மேற்கொண்ட தில்லை வாழ் அந்தணர் பெருமைபாடுவர்.

தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் (திரு.தொகை 1:1)

பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையாள் சிறுவிரல் ஆழி (மோதிரம்)
உமையவள் இறையவர் பாகத்தொடுக்கம்
இறைவரோ தொண்டர்தம் உள்ளத்தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே

என்பது அருந்தமிழ் அவ்வையின் அருள்வாக்கு. எனவே நம்பி ஆரூரர் தில்லைக் கூத்தப்பெருமானுக்கு நாள்தோறும் திருமுழுக் காட்டிப் பூசை செய்யும் தில்லைவாழ் அந்தணர் பெருமையை முதலில் எடுத்துரைப்பர்.

முதற்சருக்கம் இறைவன் எழுந்தருளிய கைலை பற்றிய கைலை மலைச் சருக்கம். இரண்டாம் சருக்கம் தில்லைப் பெருமானுக்குத் தொண்டு செய்யும் தில்லை வாழ் அந்தணர் பெருமை கூறும் தில்லைவாழ் அந்தணர் சருக்கம். தில்லைவாழ் அந்தணர்கள் ஆறு ஆதாரம் கடந்து ஏழாம் ஆதாரமாகிய குண்டலினி ஆற்றலை எட்டிப் பிடிக்க முயல்வார். ஆதலின் தில்லை வாழ் அந்தணர் புராணம் முழுமையும் அறுசீர் விருத்தத்தால் ஆக்கப் பெற்றுள்ளது.

இறைவன் பெருமை

இறைவன் ஆதியானவன், நடுவானவன், அளவற்ற அருளானவன், சோதியாகவும், அருள் உணர்வருளும் உணர்வாகவும் விளங்குபவன். ஆணாகவும், பெண்ணாகவும் அனைத்து உயிர்களாகவும் இருந்து தில்லையில் நடம்புரியும் இறைவா போற்றி! இறைவன் கற்பனை

Koviloor Digital Library

கடந்த சோதிப் பிழம்பு. நம் கண்களுக்குத் தெரியாதவன். இறைவன் கற்பனைகள் தந்த (கற்பனை கடந்த) சோதி வடிவாகக் காட்சி தருவதால் நம் கண்களுக்கு நாம் உருவாக்கிய சோதி வடிவில் தெரிகிறான். கருணை வடிவானவன். அற்புத அழகன். மறைமுடியானவன். தெய்வ உலகாக விளங்கும் தில்லைச் சிற்றம்பலத்தில் திருநடனஞ் செய்யும் திருவடி உடையவன்.

பிரிக்க முடியாத ஏகப் பொருளாகவும், எல்லா உலகங்களிலும் நிறைந்த அநேகப் பொருளாகவும் விளங்குபவன் இறைவன். **ஏகன். அவனே அநேகன்.**

தில்லைவாழ் அந்தணர் பெருமை

தில்லை வாழ் அந்தணர்கள் ஆணவாதி மலம் அழிக்கும் திருநீற்றுத் திருக்கோலம் கொண்டவர்கள். கூத்தப்பெருமானுக்குத் தொண்டு செய்யும் பெரும்பேறு பெற்றோர். பெரியோர் செல்லும் நன்னெறியில் வாழும் பண்புடையோர். பெருமான் மீது அன்பு கொண்டு தவமியற்றி வாழ்பவர். மறைகளால் இறைவனைத் துதித்துப் போற்றி வாழ்பவர். மன்னுயிர்கள் வாழக் ''காருக பத்தியம், ஆகவனீயம், தக்கிணாக்கினியம்'' என்ற முத்தீ வளர்த்து முத்தி தேடுபவர். அறநெறி செல்லும் தத்துவ நெறியாளர்கள். மறை நான்கும் ஆறு அங்கமும் கற்றுத் தெளிந்தவர்கள். சிவபெருமானுக்கு அடிமை செய்து வாழும் சீரும் சிறப்பும் உடையவர்கள். குற்றமற்ற மரபில் நல்லொழுக்கம் பூண்டு வாழ்பவர்கள். ஓதல், ஈதல், வேள்வி செய்தல், கற்பித்தல், ஏற்றல், வேள்வி செய்வித்தல் என்ற அறுதொழிலும் வழுவாமல் செய்து உலகத் துன்பம் நீக்குபவர்கள். திருநீற்றைப் பெருஞ்செல்வமாகக் கருதும் சைவ நெறியைச் செல்வம் எனக் கொண்டு வாழ்பவர்கள்.

நான்கு நெறி கொண்ட நல்லோர்

சரி என உலகம் கூறும் சரியான நல்ல செயல்களாகிய சரியை என்ற தொண்டினைச் சரீரத்தால் சரியாகச் செய்பவர். கிரியாகிய மலை போன்று உயர்ந்த நற்செயல்களாகிய கிரியை செய்து உலகை வாழவைப்பவர். மலை, மழைக் காலத்தில் உண்ட நீரால் கோடையில் தன்கண் வாழும் உயிர்களைச் சுனைநீராலும் அருவி நீராலும் காத்து வாழ வைக்கும். அதுபோலத் தில்லை வாழ் அந்தணர்கள் அறியாமை யெனும் கோடையாகிய பல துன்பங்களில் வாழ்வோர்க்கு உதவு பவர்கள். தில்லைவாழ் அந்தணர்கள் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவாகவும் தருநிழலாகவும்

Koviloor Digital Library

அனைவர்க்கும் விளங்கினர்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறியிலும் வாழ்கின்ற தவமுடையோர், இல்லறத்தார் செய்யும் தானத்தையும், துறவறத்தார் செய்யும் தவத்தையும் ஒருசேரச் செய்பவர்கள். தகுதியான நெறிகளையே வாழ்வின் பகுதியாகக் கொண்டவர்கள். உள்ளத்தில் ஊனம் இல்லாதவர்கள். உலகம் போற்றும் மானமும் பொறுமையும் பெற்ற இல்லறத்தை நல்லறமாகப் பெற்றவர்கள். தில்லைவாழ் அந்தணர் தெய்வத் தன்மை உடையவர். செம்மையான உள்ளத்தில் அடக்கம் உடையவர். தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் சைவப்பற்றில் ஒப்பற்று விளங்குபவர்.

வாய்மை தவறாத தில்லை வாழ் அந்தணர் போல் சிறந்து விளங்கிய திருநீலகண்டரை அடுத்து வைத்துச் சேக்கிழார் பாடுவர். **அந்தணர் என்போர் அறவோர்** என்று திருவள்ளுவர் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் தில்லை வாழ் அந்தணர்கள். அறம் உரைக்கும் அறவாணராக விளங்கியமையைத் திருநீலகண்ட புராணம் உரைக்கும்.

ஆதிஆய் நடுவும் ஆகி அளவுஇலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணும்ஆய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி! (தி.வா.அ. – 1)

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி,
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேல்ஆம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புஉற நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி! (தி.வா.அ. – 2)

போற்றிநீள் தில்லை வாழ்அந் தணர்திறம் புகலல்உற்றேன்;
நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக்கு உரிய தொண்டுஆம்
பேற்றினார்; பெருமைக்கு எல்லை ஆயினார் பேணி வாழும்
ஆற்றினார்; பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார் (தி.வா.அ. – 3)

பொங்கிய திருவில்நீடும் பொற்புடைப் பணிகள்ஏந்தி,
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்து, மற்றும்
தங்களுக்கு ஏற்ற பண்பில் தகும்பணித் தலைநின்றுஉய்த்தே,
அங்கணர் கோயில் உள்ளார் அகம்படித் தொண்டு செய்வார். (தி.வா.அ. – 4)

வருமுறை எரிமூன்று ஓம்பி, மன்உயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு, தத்துவ நெறியில் செல்லும்
அருமறை நான்கி னோடு ஆறு அங்கமும் பயின்று, வல்லார்;

Koviloor Digital Library

திருநடம் புரிவார்க்கு ஆள்ஆம் திருவினால் சிறந்த நீரார்.(தி.வா.அ. – 5)

மறுஇலா மரபின் வந்து மாறுஇலா ஒழுக்கம் பூண்டார்;
அறுதொழில் ஆட்சியாலே அரும்கலி நீக்கி யுள்ளார்;
உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளம் மிக்கார்;
பெறுவது சிவன்பால் அன்பாம் பேறுஎனப் பெருகி வாழ்வார். (தி.வா.அ. – 6)

ஞானமே முதலாநான்கும் நவைஅறத் தெரிந்து மிக்கார்;
தானமும் தவமும் வல்லார்; தகுதியின் பகுதி சார்ந்தார்;
ஊனம்மேல் ஒன்றும் இல்லார் உலகுஎலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி மனைஅறம் புரிந்து வாழ்வார். (தி.வா.அ. – 7)

செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வவே தியர்கள் ஆனார்
மும்மை ஆயிரவர் தாங்கள் போற்றிட முதல்வ னாரை
இம்மையே பெற்று வாழ்வார்; இனிப்பெறும் பேறு ஒன்று இல்லார்
தம்மையே தமக்கு ஒப்பான நிலைமையால் தலைமை சார்ந்தார். (தி.வா.அ. – 8)

இன்றுஇவர் பெருமை எம்மால் இயம்பல்ஆம் எல்லைத்து ஆமோ?
தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத் தொகைமுன் பாட
அன்றுஅவன் தொண்டர் தம்மை அருளிய ஆரூர் அண்ணல்
முன்திரு வாக்கால் கோத்த முதல்பொருள் ஆனார் என்றார் (9)

அகல்இடத்து உயர்ந்த தில்லை அந்தணர் அகிலம் எல்லாம்
புகழ்திரு மறையோர் என்றும் பொதுநடம் போற்றி வாழ
நிகழ்திரு நீல கண்டக் குயவனார், நீடு வாய்மை
திகழும்அன்பு உடைய தொண்டர் செய்தவம் கூறல் உற்றாம் (10)

தில்லைவாழ் அந்தணர்கள் வழக்குத் தீர்த்து வைக்கும் நீதிபதிகளாக இருந்தமையைத் திருநீலகண்டர் புராணத்தால் அறியலாம். எனவே அடுத்துத் திருநீல கண்ட நாயனார் புராணம் இடம் பெறுகிறது.

அருள்மிகு சிவகாமி உடனுறை நடராசர் திருக்கோயில்
சிதம்பரம் அஞ்சல் - 608 001.
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

Koviloor Digital Library

11. திருநீலகண்டத்துக் குயவனார்

(44 பாடல்கள்)

பிறந்த ஊர் : தில்லை என வழங்கும் சிதம்பரம்
குலம் : மண்பாண்டங்கள் செய்யும் குயவர்
குருபூசை மாதம் : தை
நட்சத்திரம் : விசாகம்
காலம் : அப்பர், சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் (கி.பி. 660-840)

'திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்' (திரு.தொகை 1:1)

தில்லைவாழ் அந்தணர் புராணத்தின் பின் தில்லைவாழ் வேட்கோவர் (குயவர்) குலத்துத் திருநீலகண்டக் குயவனார் புராணம் இடம் பெற்றுள்ளது. திருநீலகண்டர் புராணம் பெரியபுராணத்தில் தனி அடியார்க்கு ஆக்கப் பெற்ற முதற்புராணம். மனையாளொடு இருந்துகொண்டே பல்லாண்டுகள் உடல் உறவு கொள்ளாத சிறந்த துறவியாக வாழ்ந்த திருநீலகண்ட நாயனாரைச் சுந்தரர் 'திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்' என்று சிறப்பிப்பார். இல்லற இன்பம் நுகர இருமனைவியரை மணந்த சுந்தரர் இல்லறத் துறவின் பெருமையை உணர்ந்து முதற்கண் திருநீலகண்ட நாயனார் புராணத்தைக் கூறுவர்.

திருநீலகண்டர் பெருமை

பொய்ம்மை நீக்கி வாய்மையை அறமாகக் கொண்டவர். சிவனடியார்க்குப் பணி செய்யும் விருப்புடையவர். உலகம் போற்றும் நன்னெறியில் இல்லறம் நடத்தி வந்தவர். சைவ நெறிச் சார்பே மெய்ப்பொருள் எனக் கொண்டு வாழ்ந்தவர். உண்கலமாக உதவும் மண்கலம் செய்யும் தொழில் நடத்தி வந்தவர். அடியார்க்கு வேண்டும் திருவோடு அளித்துத் தொண்டு செய்து வந்தவர்.

பொய்கடிந்து அறத்தின் வாழ்வார்; புனல்சடை முடியார்க்கு அன்பர்;
மெய்அடி யார்கட்கு ஆன பணிசெயும் விருப்பில் நின்றார்;
வையகம் போற்றும் செய்கை; மனைஅறம் புரிந்து வாழ்வார்;
சைவமெய்த் திருவின் சார்வே பொருள்எனச் சாரும் நீரார். (2)

பெருமையான திருநீலகண்டர் இளமை இன்பநாட்டம் மீதூரச் சிறுமையான வரைவின் மகளிராகிய விலைமகளிர் தொடர்பு கொண்டார்.

Koviloor Digital Library

கற்பிற் சிறந்த அவர் இல்லாளுக்குத் திருநீலகண்டரின் பரத்தையர் தொடர்பு நஞ்சாக உள்ளத்தை வருத்தியது. ஊடல் கொண்டார். ஊடல் புலவியாகிப் பெருஞ்சினமாக மாறியது. திருநீலகண்டர் மனைவியின் சினம் தணிக்கத் தன் தவற்றை உணர்ந்து கூறிப் பொறுத்தருள வேண்டினார். **தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்** (6) என்று சிவன்மேல் ஆணையிட்டுத் தீண்டத்தகாது என்றனர். எம்மை என்று **பன்மையாற் கூறினமையின் எந்த மாதரையும் மனத்தாலும் தீண்டேன்** என்று திருநீலகண்டர் மனைவியிடம் சத்தியம் செய்தார். மனைவியுடன் உடலுறவு கொள்ளாச் செய்தி அயலார் தெரியா வண்ணம் அடியார் வாழ்ந்து வந்தார். அளவிலா ஆண்டு இருவரும் இல்லறத் துறவியாக வாழ்ந்தனர்.

ஆதியார் நீலகண்டத்து அளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணைகேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி, எம்மைஎன் றத்னால் மற்றை
மாதரார் தமையும் என்தன் மனத்தினும் தீண்டேன் என்றார். (7)

கற்புறு மனைவியாரும் கணவர்க்குரிய கடமைகளைச் செய்து வந்தார். இருவரும் உடலுறவு கொள்ளாமையைப் பிறர் அறியா வகையில் ஒழுகி வந்தனர். இருவர் உடலிலும் முதுமை வந்து சாய்த்தது. ஆனால் சிவபெருமான்பால் அன்பு சாயாமல் இருந்தார். திருநீலகண்டர் பெருமையை விளக்க உளங்கொண்ட பெருமான் சிவயோகி வடிவில் வந்தார்.

சிவயோகத் திரு உரு

ஒளிபொருந்திய திருநீற்றுடன் மார்பில் நூல் அணிந்து வந்தார். முறுவல் கொண்டு பிச்சைப் பாத்திரம் ஏந்தித் திருநீலகண்டர் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். திருநீலகண்டர் அடியாரை முறையாகப் பூசை செய்து வழிபட்டார். **யான் செயும் பணியாது?** எனத் திருநீலகண்டர் வினவினார். யோகியார் ஒரு மண் ஓட்டின் பெருமை கூறி அதனைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டினார்.

திருநீலகண்டர் யோகியிடமிருந்து திருஓட்டினை வணங்கி வாங்கிக் கொண்டார். மனையில் ஒரு புறத்தில் திருஓட்டினை மறைத்துப் பாதுகாப்பாக வைத்தார். தொண்டரின் பெருமையை உலகினருக்கு உணர்த்த (**தொண்டரை விளக்கங் காண - 10**) பெருமான் மனையிலிருந்து திருவோட்டினை மறையச் செய்தார். பின்னர்த் திருநீலகண்டரிடம் யோகியாக வந்த பெருமான் **முன்பு உன்பால் தந்த மெய்யொளி விளங்கும் ஓடு தருக** (20) என வேண்டினர். திருநீலகண்டர் எங்கும் தேடினார். அவர் தந்த ஓடு கிடைக்கவில்லை. யோகியிடம்

Koviloor Digital Library

வெறுமனே வந்தார். ஒரு நொடியில் வந்தனை ஏன் என யோகியார் வினவினார். நீர் தந்த ஓடு எங்கும் கிடைத்திலது. ஆதலின் அதைவிட நல்ல பாத்திரம் தருவன் என நீலகண்டர் விடை கூறினார்.

யான் தந்த மண் ஓடு அன்றிப் பொன்ஓடு எனினும் கொள்ளேன். முன்னர் யான் தந்த ஓடு கொணர்க என யோகியார் திருநீலகண்டரிடம் கூறினர். உன்னிடம் கொடுத்த அடைக்கலப் பொருளை அபகரித்தாய். யாவரும் காண உனை வளைப்பேன் என்றார் யோகி.

ஆவதுஎன்? உன்பால் வைத்த அடைக்கலப் பொருளை வெளவிப்
பாவகம் பலவும் செய்து பழிக்குநீ ஒன்றும் நாணாய்;
யாவரும் காண உன்னை வளைத்து நான்கொண்டே அன்றிப்
போவதும் செய்யேன் என்றான் புண்ணியப் பொருளாய் நின்றான் (26)

உளத்தினால் கூடத் தங்கள் ஓட்டினை மறைத்திட - (திருட) நினைத்திலேன் என்றார் நாயனார். யோகியார் நாயனார் மகனைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்யச் சொன்னார். பொய் இல்லை உண்மையாகவே எனக்குப் புதல்வன் இல்லை என்று அடியார் கூறினார். மனைவியைப் பற்றிச் சத்தியம் செய்து கொடு என்றார் யோகி. அப்போது நீலகண்டர் ஒரு சத்தியத்தால் (மனைவியிடம் முன் செய்த சத்தியம்) மனைவியுடன் மூழ்க இசையவில்லை. உண்மையாகவே ஓடு காணாமல் போய்விட்டது என யான் மட்டும் சத்தியம் செய்து தருவேன் என்று கூறினார்.

தந்த ஓட்டினைத் தராமைக்காக உன்மனைவியோடு நீரில்மூழ்கிச் சத்தியம் செய்ய மறுக்கின்றாய். தில்லைவாழ் அந்தணர் பேரவையில் வந்து கூறுக என்று யோகியார் உரைத்தார். தில்லைவாழ் அந்தணர்களிடம் மனைவியோடு நீரில் மூழ்கிச் சத்தியம் செய்ய நீலகண்டர் மறுப் பதைப் பற்றி யோகியார் எடுத்துரைத்தார். மாமறையோர் சொல்வது பற்றித் தில்லைவாழ் அந்தணர்கள் திருநீலகண்டரிடம் வினவினர். மறைத்துவைத்த ஓடு பெயர்ந்தவிதம் அறியேன் என்று தொண்டர் தில்லைவாழ் அந்தணரிடம் உரைத்தார். உண்மையாகவே ஓடுகாணாமற் போனால் யோகியார் உரைத்தபடி மனைவியோடு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்தல் முறை எனத் தில்லைவாழ் அந்தணர்கள் உரைத்தனர்.

மனைவியைத் தீண்ட இயலாத காரணம் கூறமுடியாமல் திருநீலகண்டர் மனை சேர்ந்தார். சிதம்பரத்தில் உள்ள திருப்புலீச்சுரக் கோயில் பொய்கையில் ஒரு மூங்கில் கோலின் இருமுனை பற்றி மனைவியுடன் அடியார் நின்றார். மாதைத் தீண்டி மூழ்குமாறு அந்தணர் உரைப்ப அடியார் மனைவியைத் தீண்ட இயலாச் சூழ்நிலையை விளக்கி உரைத்தார். நீரில் மூழ்கிய அடியார்

Koviloor Digital Library

மனைவியோடு இளமை பெற்று எழுந்தார். சத்தியம் செய்த அன்று எந்த இளமையோடு இருந்தனரோ அதே இளமையில் இருந்தனர். வானவர் பூமழை பொழிந்தனர். யோகியார் அங்கில்லை. பெருமான் அம்மையப்பராய் விடை மீது காட்சி தந்தார்.

அந்நிலை அவரைக் காணும் அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலை நின்ற வேத முதல்வரைக் கண்டார் இல்லை;
இந்நிலை இருந்தவண்ணம் என்?என மருண்டு நின்றார்
துன்னிய விசும்பின்ஊடு துணையுடன் விடைமேல் கண்டார் (40)

இளமைக் கோலம் பெற்ற நீலகண்டர் மனைவியோடு இறைவனைத் தொழுதார். ஐம்புலன் வென்ற பெருமக்காள் என்றும் இன்றுள்ள இளமை நீங்காது நம்பால் இருக்க (42) என்று சிவபெருமான் அருள்புரிந்தார். அடியார் மனையாளுடன் நீங்கா இளமைபெற்று இறையடி நிழல் எய்தினார்.

விறல்உடைத் தொண்ட னாரும் வெண்நகைச் செவ்வாய் மென்தோள்
அறல்இயல் கூந்த லாள்அம் மனைவியும் அருளின் ஆர்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோகம் அதனை எய்திப்
பெறல்அரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்றார் அன்றே (43)

அயல்அறி யாத வண்ணம் அண்ணலார் ஆணை உய்த்த
மயல்இல்சீர்த் தொண்டனாரை யான்அறி வகையால் வாழ்த்திப்
புயல்வளர் மாடம் நீடும் பூம்புகார் வணிகர் பொய்யில்
செயல்இயற் பகையார் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன் (44)

மெய்ப்பொருள்

இறைவன் தந்த உடம்பை இறைவன் கேட்டால் தருவது முறை. இறைவன் நமக்கு அளித்த அரிய பொன் ஓடு உடம்பு. பொன்னைப் போன்றும் மணியைப் போன்றும் இறைவன் கொடுத்த உடம்பைப் பேண வேண்டும். பாதுகாக்க வேண்டும்.

உள்ளம்பெருங்கோயில் ஊனுடம்பாலயம் (திருமந்திரம்) இந்த உடம்பாகிய ஆலயத்தைத் தூய்மையாகப் போற்ற வேண்டும். சரியான மண்கலம் நல்ல விலைபோகும். சரியில்லாத மண்கலம் நல்லவிலை போகாது. அதுபோல ஒழுக்கம் உடையோரைச் சமுதாயம் உயர்வாக மதிக்கும். ஒழுக்கம் குன்றும் போது குன்று போன்ற புகழுடையோரும் புகழ் குன்றிப் போவர். யோகப் பயிற்சியால் உடம்பு என்ற மண்கலத்தைப் பொன்கலமாக மாற்றலாம் என்பதைத் தெரிவிக்கவே பெருமான் யோகி வடிவில் வந்தார்.

Koviloor Digital Library

நந்தவனத் திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிக் போட்டுடைத்தாண்டி கடுவெளிச் சித்தர் - 5

என்ற பாடல், உடலை மண்குடமாகக் கூறி அதனை வெற்றுக் குடமாய்ப் போட்டு உடைக்கும் அறியாமையை எள்ளி நகையாடு கிறது. திருநீலகண்ட நாயனார் தம் உடலாகிய மண்குடத்தைப் பொன் குடமாக மாற்றிக் கொண்ட புகழாளர். புலன் அடக்கிய ஒழுக்க சீலர்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல் **(குறள் 33)**

என்ற குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் திருநீலகண்டர். தம்மால் இயன்ற வகை திருநீலகண்டர் மனமொழிமெய்களால் தொண்டு செய்து அறத்தின் தலை நின்றார்.

* தமக்கும் மனைவிக்கும் இருக்கும் உறவற்ற நிலையை உலகி னருக்கு மறைத்து வாழ்ந்ததால், அவ்வொழுக்க நிலையினை உலகினருக்கு உணர்த்த (வெளிப்படுத்த) இறையவர் ஓட்டினை மறையச் செய்தார் என்பதை உணர்வுடையோர் உணர்வர்.

* அடியார்களுக்கு அளிக்கப்பெற்ற சோதனைகள் அனைத் திற்கும் விடை தொண்டரை விளக்கங் காண (10)

அருள்மிகு சிவகாமி உடனுறை நடராசர் திருக்கோயில்
சிதம்பரம் அஞ்சல் - 608 001.
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

Koviloor Digital Library

12. இயற்பகையார்

(24 பாடல்கள்)

பிறந்த ஊர் : காவிரிப் பூம்பட்டினம் (திருப்பல்லவனீச்சுரம்)

குலம் : வணிகர்

குருபூசை மாதம் : மார்கழி

நட்சத்திரம் : உத்திரம்

காலம் : அப்பர், சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் (கி.பி. 660-840)

'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' (திரு.தொகை 1:2)

உலக இயல்புகளைப் பகுத்தாய்ந்த நல்லடியார் இயற்பகையார். சோழநாட்டின் தலைநகர் பூம்புகார். பொன்கொழிக்கும் பொன்னியாகிய காவிரி பாய்வதால் புனிதம் பெற்ற கடற்கரையில் புகார் உள்ளது. புகாரில் வாழ்ந்த இயற்பகையார் சிவனடியார் யார் வந்தாலும் அவர் வேண்டும் பொருள்களை இல்லை என்னாது தரும் நல்ல மனமுடையவர். அடியார்க்கு வேண்டுவன செய்வதே பெருமை என எண்ணுபவர்.

தொண்டர் வேண்டுவதை மறுக்காத கொடை வளம் மிக்கவர் என்பதை உலகிற்கு விளக்க சிவபெருமான் வேதியராய் வந்தார். வேதியருக்குப் பூசைகள் செய்து தன்பால் வந்த காரணம் யாது? என அடியார் வினவினார். தான் வேண்டுவதை மறுக்காது வழங்க வேண்டுமென்று வேதியர் கூறினார். தன்னிடம் உள்ள பொருள் எதுவாயினும் மறுக்காது மனமுவந்து தருவதாக இயற்பகை கூறினார். உன் காதல் மனைவியை வேண்டி வந்தோம் என்று வேதியர் கூறினார். உடன்பட்ட இயற்பகையார் கற்பில் மேம்பட்ட தன் மனை யாளைக் கொண்டு வந்து அடியாரிடம் ஒப்படைத்தார். இயற்பகையார் மனைவியும், நீர் சொல்லியவாறு செய்வதைத் தவிர வேறு உரிமை எனக்கில்லை என்று கூறிக் கணவர் சேவடி பணிந்தனர்.

இன்றுநீர் எனக்குஅருள் செய்தது இதுவேல் என்உயிர்க்கு ஒரு நாத! நீர் உரைத்தது
ஒன்றை நான் செயும் அத்தனை அல்லால் உரிமை வேறுஉளதோ எனக்கு?
என்றுதன் தனிப்பெருங் கணவரை வணங்கத் தாழ்ந்து தொண்டனார்தாம் எதிர்வணங்கச்
சென்றுமாதவன் சேவடிபணிந்து திகைத்துநின்றனள் திருவினும் பெரியாள். (9)

இயற்பகை நாயனார் அடியாரிடம் யான் செயும் பணியாது எனப் பணிந்து வணங்கி நின்றார். தையல்தனைத் தடையின்றிக்

Koviloor Digital Library

கொண்டுபோகப் பாதுகாப்பாக ஊர் எல்லைவரை துணையாக வருக என்று அடியார் இயற்பகையிடம் வேண்டிக் கொண்டார். இயற்பகை நாயனார் வாள்கேடயம் ஏந்திச் சென்றார். தடுத்தாரைக் கொன்று வீழ்த்தினர். இயற்பகை நாயனார் பழிச்செயல் தடுப்போம் என உறவினரும் ஊராரும் வந்து வளைத்து நின்றனர். பழிச்செயல் செய்யக் கூடாது. மனைவியை மாற்றானுடன் அனுப்புதல் மிகுந்த குடிப்பழி தரும் என்று வாளும் வில்லும் கொண்டு தடுத்தனர். பெருமானே! அஞ்ச வேண்டாம். எதிர்த்தோரை அழிப்பேன் என்றார் இயற்பகையார். நின் மனையாளைப் பிறர்க்குக் கொடுக்க அனுமதியோம். அதைவிட மடிவோம். என்று உறவினர் கூறினர்.

ஏட! நீ என் செய்தாயால்? இத்திறம் இயம்புகின்றாய்;
நாடுஉறு பழியும் ஒன்னார் நகையையும் நாணாய்; இன்று
பாடவம் உரைப்பதுன்தன் மனைவியைப் பனவற்கு ஈந்தோ?
கூடவே மடிவதுஅன்றிக் கொடுக்கயாம் ஒட்டோம் என்றார் (18)

உங்களை விண்ணுக்கனுப்பி அடியாரைப் பாதுகாப்பேன் என்று இயற்பகையார் கூறினார். உறவினர் தடுத்தனர், தடுத்த உறவினரை இயற்பகையார் ஓடி வந்த கால்களையும், வலிமை காட்ட வந்த தோள்களையும் எதிர்த்துப் பேசிய வாய் உள்ள தலைகளையும் வெட்டி வீழ்த்தினார். குடல்கள் சரிந்தன. உடல்கள் வீழ்ந்தன. ஓடியவர் தவிர மற்றவர் அனைவரும் வீழ்ந்தனர். அஞ்சியவர்போல இறையவர் நடித்தார். அதுகண்ட இயற்பகையாரின் மனைவியார் இறைவரே அஞ்ச வேண்டாம்; இயற்பகை வெல்லும்(16) என இருபொருளில் அஞ்சற்க என்றார். அஞ்சாது செல்லுமாறு இறையவரிடம் இயற்பகையார் கூறினார்.

இயற்பகை நாயனார் ஊரின் எல்லைவரை சென்று அடியாரை வணங்கித் திரும்பிப் பார்க்காது மீண்டார். பார்க்கிலன் போனான் (இ.ப.28) எனத் தெய்வச் சேக்கிழார் இயற்பகையாரின் பெரும் துறவின் பெருமையை நுட்பமாகப் புலப்படுத்துகிறார். செயற்கரிய செய்த தொண்டராகிய இயற்பகை திரும்பிப் பார்க்காது சென்றார். பொய்யில்லாத் தொண்டராகிய இயற்பகையை அடியார் வடிவில் வந்த இறையவர் அழைத்தார்.

இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டுநீ வருவாய் ஓலம்!
அயர்ப்பிலா தானேஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்!
செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம்! என்றான்
மயக்கறு மறை ஓலிட்டு மாலயன் தேட நின்றான். (29)

என இறையவர் ஆறு முறை ஓலமிட்டு (அபயம்) இயற்பகையை அழைத்தார்.

Koviloor Digital Library

அடியேன் வந்தேன். பிழை செய்தார் யாவர் என்று இயற்பகை கேட்டுக் கொண்டே வந்தார். அந்தணர் வடிவில் வந்த பெருமான் மறைந்தார். இல்லாளைக் கண்டார். விடைமேற்காட்சி கொடுத்த சிவபெருமானைத் தொழுது பலவாறு போற்றினார்.

சொல்லுவது அறியேன் வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந்த அருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்பவெள்ளம் எனக்குஅருள் செய்தாய் போற்றி!
தில்லைஅம் பலத்துள் ஆடும் சேவடி போற்றி! என்ன. (32)

''இவ்வுலகில் என்பால் [illegible] கொண்ட குற்றமற்றவனே! நின்மனையாளொடு என்னை வந்தடைக'' என்று அருளி இருவர்க்கும் பெறுதற்கரிய வீடு பேறளித்தார். வானவர் பூமழை பொழிந்தனர். வேதங்கள் முழங்கின. ஞானமா முனிவர் போற்ற இயற்பகை நாயனாரும் இறந்த உற்றார் உறவினரும் சிவப் பேரின்பம் பெற்றனர்.

வானவர் பூவின்மாரி பொழிய, மாமறைகள் ஆர்ப்ப,
ஞானமா முனிவர்போற்ற, நலம்மிக சிவலோகத்தில்
ஊனம்இல் தொண்டர் கும்பிட்டு உடன் உறைபெருமை பெற்றார்
ஏனைய சுற்றத்தாரும் வானிடை இன்பம் பெற்றார். (35)

மெய்ப்பொருள்

பொன்னி நதி கடலைப் புனிதப்படுத்தல் போலப் பொய்யில் அடியார் பக்தி புகாரைப் புனிதப்படுத்தியது. திருமகள் தலைவனாகிய மாலும், கலைமகள் தலைவனாகிய அயனும் அடிமுடி காண முடியா தவன் இறைவன். கல்விச் செருக்காலும், செல்வச் செருக்காலும் இறைவனைக் காணமுடியாது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டைத் திருநீலகண்ட நாயனார்புராணம் உணர்த்தியது.

பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை என்ற மூன்று ஆசைகளில் பெண்ணாசை துறத்தல் மிக அரிது. திருநீலகண்ட நாயனார் பெண்ணாசை துறந்தார். இளமையில் புலனடக்கம் கொண்டார். இயற்பகை நாயனாரும் தன் மனையாளையே அடியார்க்காக துறக்கவும் வல்லவர் ஆனார். இல்லறத்தின் உயிராக விளங்கும் மனையாள் கணவன் சொற்கடவாத கண்மணியாக விளங்குதலை இயற்பகை நாயனார் வரலாறு உணர்த்தும். இல்லறத்தின் விருந்தோம்பற் சிறப்பு இளையான் குடி மாற நாயனார் புராணத்தில் விரித்துரைக்கப் பெறும்.

Koviloor Digital Library

இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை (குறள்: 47)

இயற்கை வாழ்வு இல்லறம். செயற்கை வாழ்வு துறவறம்.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று (குறள்: 49)

மனம், மொழி, மெய்களால் இயன்ற அறம் செய்து அறவழியில் இல்லறம் நடத்துதலே உலகில் பேரறம். பிறரால் பழிக்கப்படாத துறவற வாழ்வு நன்று எனலாமே அன்றி இல்லறத்தினும் சிறந்தது எனக் கூற இயலாது. இல்லறத்தானுக்குத்தான் பல வழியில் சோதனைகள் வருகின்றன. இவற்றைத் தாண்டி வென்றவனை மண்ணும் விண்ணும் போற்றும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள்:50)

இல்லறத்தில் திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார் போன்றோர் பல சோதனைக்குட்படுத்தப் பெற்றனர். இறையருளால் அவற்றைவென்று சிறப்பாக வாழ்ந்தனர். மனையறத்தின் மாண்பினைப் புலப்படுத்தும் விருந்தோம்புதல் மாபெரும் தவம். அத்தவ வேள்வியினைச் செய்தவர் இளையான்குடி மாற நாயனார். அவர் வாழ்ந்து காட்டிய இல்லற நெறியினை அடுத்துக் காண்போம்.

அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை பல்லவனேஸ்வரர்
அ/மி. பல்லவனேஸ்வரர் திருக்கோயில்
(பல்லவனீச்சுரம்) - காவிரிப்பூம்பட்டினம்
பூம்புகார் அஞ்சல், சீர்காழி வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம்
அ.கு.எண் - 609 105.

Koviloor Digital Library

13. இளையான்குடி மாறர்

(27 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	இளையான்குடி (இளையான்குடி பாண்டிய நாட்டில் இராமநாதபுர மாவட்டம், பரமக்குடிக்கு அருகில் உள்ள ஊராகும்.)
குலம்	:	வேளாளர்
குருபூசை மாதம்	:	ஆவணி
நட்சத்திரம்	:	மகம்
காலம்	:	அப்பர், சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் (கி.பி. 660-840)

'இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்' (திரு.தொகை 1:2)

இளையான்குடி என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் மாறனார் என்ற சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் குபேரனைப் போன்ற பெருஞ்செல்வந்தராய் வாழ்ந்து வந்தார். சிவனடியார்பால் அன்புடையர். ஏர்த்தொழில் வளத்தால் எல்லையற்ற செல்வம் பெற்றவர். சிவன்பால் வைத்த சிந்தை உடையவர். அடியார்களை இன்முகத்தோடு வரவேற்று இன்சொற் கூறுவார். அடியாரை ஆசனத்திருத்துவார். திருவடி விளக்கி அர்ச்சனை செய்வார். சிவனடியார்க்கு இனிய அமுதளிப்பார்.

ஆளும் நாயகர் அன்பர் ஆனவர் அளவுஇலார் உளம் மகிழவே
நாளும்நாளும் நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையில் நன்மையால்
நீளுமா நிதியின்பரப்பு நெருங்க செல்வம் நிலாவி,எண்
கோளினார்அள கைக்குஇருத்திய தோழனார்என வாழும்நாள். (5)

வறுமைப் பேறு

செல்வம் மேவியநாள் மட்டுமன்றி வறுமையுற்ற நாளிலும் தொண்டு செய்வார் என்ற அடியார் பெருமை அறிவிக்கப் பெருமான் உளம் கொண்டார். வளம் சுருங்கிய நாளிலும் தன்னிடம் உள்ள ஆடம்பரப் பொருட்களையும், தேவைப் பொருள்களையும் விற்றுக் கூட அடியார்களைப் பேணும் திருப்பணிக்கண் சிறந்து விளங்கினார்.

இன்னஆறுவ ளம்சுருங்கவும் எம்பிரான்இளை யான்குடி
மன்னன்மா றன்மனம்சுருங்குதல் இன்றி உள்ளன மாறியும்

Koviloor Digital Library

தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறுஇல் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கையர் ஆயினார் (7)

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. (குறள்: 220)

சிவன் தவவேடம் தாங்கிவருதல்

மால் பன்றியாகவும் அயன் அன்னமாகவும் அடிமுடி தேடிச் சென்று தோற்றனர். காளையையும், காரிகை பார்வதியையும் விடுத்துத் தவவேடம் கொண்டு வந்தார். மழைக்காலம் நள்ளிருள் பசியோடு வந்த பரமனை மாறனார் விருந்தெதிர் கொண்டார். ஈரமேனி துடைக்க ஆவன செய்தனர். மழை ஆதலின் வெளியேநிற்க முடியாத தவத்தார்க்குத் தங்க மனம் கொண்டு தங்க இடம் கொடுத்தனர்.

நமக்குணவில்லை யாயினும் மங்கை பங்கனாகிய சிவனடி யார்க்குத் தகுதியான உணவு தருதல் எங்ஙனம்? என மாறனார் மனைவியிடம் வினவினார்.

நமக்கு முன்புஇங்கு உணவுஇலை ஆயினும்
இமக் குலக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம்இன் அடிசில் தகவுஉற
அமைக்கு மாறுஎங் ஙனே?அணங்கே என (11)

பக்கத்தில் கடன் தருவாருமிலர். பொழுது போயிற்று. போவதற்கு இடமும் இல்லை. இத்தீவினைக்கென் செய்வது என்று மாறனார் மனைவி மனம் நொந்து கூறினார்.

வறுமை நீங்கப் பகலில் வயலில் விதைத்த செந்நெல் முளையை வாரிக்கொண்டு வந்தால் உணவாக்க இயலும் வேறு வழிதெரியவில்லை என்று மாறனார் மனைவி கூறினார். உடன்பட்ட நாயனார் நள்ளிருளில் நீர் சூழ்ந்த வயல் நோக்கி நடந்தார். நள்ளிருள் யாமத்தில் மழை பெய்து கொண்டிருந்தது. பறவைகள் உறங்கும் வேளையில் பெரிய கூடையைச் சுமந்து சென்றார். காலினால் தடவிச் சென்று கைகளால் நெல் முளையைக் கூடையில் வாரிக் கொண்டு வந்து மீண்டார்.

உள்ளம்அன்பு கொண்டுஊக்க, ஓர்பேர்இடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள் உறங்கும் வயல்புகப் போயினார்;
வள்ளலார்இளை யான்குடி மாறனார். (17)

தி-5

Koviloor Digital Library

காலினால் தடவிச் சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலிவாரி, இடாநிறையக் கொண்டு,
மேல்எடுத்துச் சுமந்து ஒல்லை மீண்டனர். (18)

மாறன் மனைவியார் நெல்முளைச் சேற்றை அலம்பினார். அடுப்பு மூட்ட விறகில்லை. மாறன் வீட்டுக் கூரை அலக்கினை அறுத்து வீழ்த்திக் கொடுத்தார். செந்நெல் முளையை அடுப்பில் ஏற்றி வறுத்து அரிசியாக்கி உலையில் பெய்து சோறு சமைத்தார். அடியார் பசியினால் வருந்துவார் என்று எண்ணிய மாறனார். புறக் கடையில் முளைத்த கீரைகளைப் பாசப்பழியை வேரொடு பறிப்பது போலக் கறிக்குப் பறித்தார். பறித்த கீரையைக் கழுவிப் பலவகைக் கறிகளாக்கிக் திருஅமுது சமைத்தார், மாறன் மனைவியார். இணை இல்லாத் தொண்டரை அமுது செய்யத் தூக்கத்திலிருந்து எழுப்பினார்.

வழிவரும் இளைப்பி னோடும் வருந்திய பசியி னாலே
அழிவுஉறும் ஐயன் என்னும் அன்பினின் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்து அவை கறிக்கு நல்க (21)

அடியேன் உய்ய அமுது செய எழுந்தருள்க என்று மாறன் அழைத்தார். சோதி தோன்றியது. மாறனாரும் மனைவியாரும் கண்டு திகைத்தனர். காளை வாகனத்தில் பெருமான் காட்சி தந்தார்.

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்டு அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்ற,
செழுந்திரு மனைவி யாரும் தொண்டரும் திகைத்து நின்றார் (24)

அன்பனே அடியார் பூசை செய்த நீ பெருநிதி படைத்த குபேரன் ஏவல் செய்ய என் பெரும் உலகில் இருப்பாயாக எனச் சிவன் அருள் செய்தார். இளையான்குடி மாற நாயனார் மனைவி, கணவன் குறிப்பறிந்து தொண்டு செய்தவர். அதுபோலக் கணவன் குறிப் பறிந்து நடந்து கொண்ட மனைவியைக் கொண்ட மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றுக்குத் தோற்றுவாய் அமைத்து இளையான்குடி மாறநாயனார் வரலாற்றை நிறைவு செய்வர்.

அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே

Koviloor Digital Library

முன்பெரும் நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பம்ஆர்ந்து இருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கும் மிக்கான் (26)

மெய்ப்பொருள்

பாசப் பழியை வேரோடு பறிப்பது போலக் கீரையை மாறனார் பறித்ததாகச் சேக்கிழார் உரைப்பர். ஆன்மாவிற்குப் பழிதருவன ஆணவம், கன்மம், மாயை என்ற பாசங்கள். நீரில் பாசம் வழுக்கலை உண்டாக்கும். பாசம் வாழ்வில் வழுக்கல் உண்டாக்கும். திருமால் பன்றி வடிவெடுத்துப் பெருமானின் திருவடி மலரைத் தேடிச் செல்வர். பிரமன் அன்ன வடிவெடுத்துச் சடைக்காட்டைத் தேடிச் செல்வர். பன்றி புவியில் நடப்பது. அன்னம் மண்ணில் நடக்கும்; விண்ணில் பறக்கும். விண்ணிலும் மண்ணிலும் உள்ள எல்லா உயிர்கட்கும் இறைவன் அருள்பவன். பன்றி நிலத்திலும், அன்னம் நீரிலும் வாழும். உயிர்கள் அனைத்தும் இறைவன் அருளாட்சியால் இயங்குவனவாகும்.

முளைத்த நெல் வறுத்தால் மீண்டும் முளைக்காது. அதுபோலப் பக்குவப்பட்ட ஆன்மா மீண்டும் பிறத்தல் இல்லை. விருந்தோம்பும் வேள்வி நடத்துவோர் இருக்கும் விதைப் பண்டத்தையும் விருந்தோம்பப் பயன்படுத்துவர்.

வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசை வான்புலம் (குறள்: 85)

இளையான்குடி மாறநாயனார் இக்குறளுக்கு இலக்கியமாக விளங்கினார். வயலில் விதைத்த முளை நெல்லை வாரிக் கொண்டு வந்து வறுத்து அமுதாக்கி அடியார்க்கு உணவிட்டு விருந்தோம்பினர். நற்குடிப் பிறந்தோர் விருந்தோம்பாமையை வறுமையாகக் கருதுவர்.

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை (குறள்: 153)

இளையான்குடிமாற நாயனார் புராணம் 27 பாடல்களைக் கொண்டது. 27 விண் மீன்களில் பிறந்தோரும் இளையான்குடிமாற நாயனார் புராணம் படித்தாலும் கேட்டாலும் சிவனருள் பேற்றிற் குரியராவர்.

Koviloor Digital Library

14. மெய்ப்பொருளார்

(24 பாடல்கள்)

பிறந்த ஊர் : திருக்கோவலூர் (விழுப்புரம் மாவட்டம்)

குலம் : சிற்றரசர்

குருபூசை மாதம் : கார்த்திகை

நட்சத்திரம் : உத்திரம்

காலம் : அப்பர், சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் (கி.பி. 660-840)

'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்' (திரு.தொகை 1:3)

சேதி நாடு மலயமானாடு என வழங்கப் பெற்றது. சேதி நாட்டரசர் மெய்ப்பொருள் நாயனார். நாயனாரின் இயற்பெயர் தெரியவில்லை. அடியார் வேடமே மெய்ப்பொருள் என நினைத்து வாழ்ந்ததால் இந்த நாயனார் மெய்ப்பொருள் நாயனார் என்று வழங்கப் பெற்றார். சங்கப் பாடல்களில் சில பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அந்தப் பாடலடியால் பெயர் பெற்ற புலவர் சிலர் உள்ளனர். செம்புலப் பெயல் நீரார், விட்ட குதிரையார், அணிலாடு முன்றிலார் என்ற பெயர்கள் பாடல் அடிகளால் பெற்ற பெயர்கள்.

மெய்ப்பொருள் நாயனார் மங்கைபங்கனாகிய சிவன் கோயில் எங்கும் ஏழிசைப் பாடல் ஆடல் நிகழ ஆவன செய்தார். அன்பர் வேடமே சிந்தை செய்வார். தேடிய செல்வமும் முன்னோர் செல்வமும் சிவனடியார்க்குக் குறைவறக் கொடுத்து வந்தார்.

தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும்என்று
நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சிபொங்கக் குறைவுஅறக் கொடுத்து உவந்தார். (4)

மெய்ப்பொருள் வேந்தனை வெல்லும் ஆசையால் முத்தநாதன் என்பவன் போர் தொடுத்தான். முத்தநாதன் காலாட்படை, யானைப் படை, குதிரைப்படை போன்றவற்றால் போர் செய்து பலமுறை மெய்ப்பொருள் வேந்தனிடம் தோற்றான். பன்முறை தோற்ற முத்தநாதன் மெய்ப்பொருள் வேந்தன் ஒழுக்கத்தையும், சைவப் பற்றையும் அறிந்து கொண்டான். மெய்ப்பொருள் வேந்தன் அடியார் வேடத்தை மெய்ப்பொருள் எனக் கருதி வணங்குபவன். ஆதலின் முத்தநாதன் பெருமையான சிவனடியார் வேடம்கொண்டு மெய்ப்

Koviloor Digital Library

பொருள் நாயனாரைக் கொல்லும் சிறுமையான எண்ணம் கொண்டு வந்தான். மெய் எங்கும் வெண்மையான திருநீறு பூசிக்கொண்டான். சடை தரித்துக் கொண்டான்.

விளக்குவெளியே சுடர்விட்டுக் கொண்டிருப்பினும் சுடரின் நடுவில் கருமை இருக்கும். அதுபோல ஒளிபொருந்திய அடியார் வேடம் புறத்தே கொண்டு அகத்தே மெய்ப்பொருள் வேந்தனைக் கொல்லும் தீய எண்ணம் கொண்டு பொய்த்தவ வேடத்தோடு முத்தநாதன் புகுந்தான்.

மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்த நாதன் (7)

கத்தி மறைத்து வைத்த புத்தகக் கவளியைக் கையில் ஏந்தி முத்தநாதன் மகரக் குழை ஆடும் மங்கையர் இருக்கும் மாடக் கொடிகள் ஆடும் வீதியின் வழியே வந்தான். ஒளி பொருந்திய தெருவை இருள் கொண்ட மனத்தோடு முத்தநாதன் கடந்து திருக்கோவலூரில் உள்ள அரண்மனை அடைந்தான். அடியார் வேடம் கண்ட காவலர் முத்தநாதனை அனுமதித்தனர். மெய்க் காவலன் 'சமயம் நோக்கித் தாங்கள் எழுந்தருள வேண்டும். எம் இறைவர் இப்போது துயில் கொள்கின்றார்' என்று கூறினான்.

யான் மன்னற்குறுதி கூறப் போகிறேன் நீ இங்கேயே நில் என்று கூறி முத்தநாதன் மெய்ப்பொருள் வேந்தன் அரசியோடு துயிலும் பள்ளியறை சேர்ந்தான். முத்தநாதன் வருகை அறிந்த வேந்தன் மனைவி வண்டு மொய்க்கும் மாலை அணிந்த வேந்தனைத் துயில் எழுப்பினாள். சிவத்தொண்டரைக் கண்ட மெய்ப்பொருள் வேந்தன் எதிரே சென்று தொழுதான்.

மங்கலம் பெருக என் வாழ்வு வந்து அணைந்தது. தங்கள் வருகையின் காரணம் யாது? என வேந்தன் வினவினான். உங்கள் நாயகனாராகிய சிவன் உரைத்த ஆகம நூல் ஒன்று என்னிடம் உள்ளது. அது எங்கும் கிடைக்காது என்று முத்த நாதன் உரைத்தான். இதனைவிடப் பெரும்பேறு வேறுண்டோ? என்று மெய்ப்பொருள் வேந்தன் உரைத்தான். நின் மனைவியைத் தவிர யானும் நீயும் வேறு இடத்திருத்தல் வேண்டும் என்று முத்தநாதன் கூறினான். குறிப்புணர்ந்த திருமகள் போன்ற வேந்தன் மனைவி அங்கிருந்து அகன்றாள். இனி அருள் செய்யும் என்றான் வேந்தன்.

Koviloor Digital Library

பேறுஎனக்கு இதன்மேல் உண்டோ? பிரான் அருள்செய்த இந்த
மாறுஇல்ஆ கமத்தை வாசித்து அருள்செய்ய வேண்டும் என்ன
நாறுபூங் கோதை மாது தவிரவே நீயும் நானும்
வேறிடத்துஇருத்தல் வேண்டும் என்றுஅவன் விளம்ப வேந்தன் (13)

விரும்பிக் கண்மூடி அடியாரை வணங்கும்போது புத்தகம் அவிழ்ப்பது போலக் கவளியில் மறைத்து வைத்திருந்த கத்தியால் முத்தநாதன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். மெய்ப்பொருள் வேந்தர் மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது அடியார் வேடமே மெய்ப்பொருள் என்ற தம் கொள்கையில் வென்றார். முத்தநாதன் புகுந்தபோதே மனம் அங்கு வைத்த தத்தன் முத்தநாதனை வாளால் கொல்ல முற்பட்டபோது தத்தா நமர் என வேந்தர் தடுத்தார்.

கைத்தலத்து இருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்துஅவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள் எனத் தொழுது வென்றார். (15)

மறைத்துஅவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண் கூடி வாளினால் எறியல் உற்றான்
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் தத்தா நமர்எனத் தடுத்து வீழ்ந்தார் (16)

குருதியொடு சாய்ந்த வேந்தனிடம் தத்தன் யான் செய்வது யாது? என வினவினான். **எம்பிரான் அடியார்க்கு இடையூறு நேரா வண்ணம் கொண்டு போய் விடுக** என வேந்தன் ஆணையிட்டான். வேந்தன் வீழ்ந்த செய்தியறிந்த மக்கள் பொய்த்தவ வேடம் கொண்ட முத்தநாதனைக் கொல்லச் சூழ்ந்தனர். **இத்தவ வேடங்கொண்டவன் இடையூறின்றிச் செல்ல வேண்டும்** என்பது இறைவன் ஆணை எனக்கூறி முத்தநாதனைக் கொல்ல வந்த மக்களைத் தத்தன் தடுத்தான். வஞ்சனை வேடத்தானைப் பாதுகாப்பாகக் கொண்டு போய் விட்டுவந்த செய்தியைத் தன் மன்னனிடம் உரைத்தான். மன்னன் **இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய வல்லார்?** என்று தத்தனின் கடமை உணர்வைப் போற்றிப் புகழ்ந்தான்.

சென்றடி வணங்கி நின்று செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன் என்று கூற
இன்றெனக்(கு) ஐயன் செய்த தியார்செய்ய வல்லார்? என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார் (21)

அமைச்சர் முதலானோரை அழைத்து, யான் பாதுகாத்தது போலச் சைவ நெறியைப் பாதுகாத்து வருமாறு வேந்தன் உரைத்தான்.

Koviloor Digital Library

அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம் விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற்று அன்பு பாதுகாத்து உய்ப்பீர் என்று
புரவலர் மன்றுள் ஆடும் பூங்கழல் சிந்தை செய்தார். (22)

சிவபெருமான் நாயனார் முன் காட்சி தந்து தன் திருவடியை வணங்கும் பேறு கிடைக்க அருள் செய்தார். தன்னுயிர் கொன்ற முத்தநாதனுக்கும் அருள் செய்த மெய்ப்பொருள் நாயனார் பொறுமை பக்தி உலகில் தலை சிறந்த நிலையில் போற்றப் பெறுகிறது.

மங்கலச் சொல்லாட்சி

முத்தநாதன் மெய்ப்பொருள் வேந்தனைக் கொலை செய்தான் என்ற செய்தியைத் **"தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய"** என்ற தொடரால் குறிப்பர். நாறுபூங்கோதை, திருமகள் என்ற மங்கலச் சொற்களால் மெய்ப்பொருள் வேந்தன் மனைவியைச் சேக்கிழார் குறிப்பிடுவர்.

"வண்டலர் மாலையான்" என்று மெய்ப்பொருள் நாயனாரைக் குறிப்பிடுவர். மன்னனுக்கு இறுதி வரப்போவதை மாலை வாட்டத்தைக் கொண்டு குறிப்பிடுவர். மங்கலம் இழக்கப்போகும் தேவியைத் **"திருமகள்"** என்று மங்கலச் சொல்லாற் குறிப்பிடுவார். "மங்கலம் பெருக மற்று என் வாழ்வு வந்து அணைந்தது" என்ற மெய்ப்பொருள் வேந்தன் உரை, அவன் வாழ்வில் மங்கலம் அணையப் போவதை உணர்த்தும். மறைத்து + அவன் புகுந்தபோதே, தத்தனையே ஏமாற்றி அதாவது மறைத்து + அவன் = மறைத்தவன் **என இருபொருள் தோன்ற முத்தநாதன்** மறைத்துப் புகுந்தான்; பொய்த்தவவேடம் கொண்டு புகுந்தான். வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருட்கு அடியேன் எனச் சுந்தரர் மெய்ப்பொருள் வேந்தனைப் போற்றுவர்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (குறள்;987)

என்ற குறள் சான்றாண்மைக்கு மெய்ப்பொருள் நாயனார் வாழ்வு இலக்கியமாக அமைந்துள்ளது. மெய்ப்பொருள் நாயனார் வாழ்க்கை நமக்குப் புலப்படுத்தும் மெய்ப்பொருள் யாதெனின், பொறுமையும் சகிப்புத் தன்மையுமே ஒருவரை இறைவனின் தண்நிழலில் சேர்க்கும் என்பதாகும்.

Koviloor Digital Library

15. விறன் மிண்டர்

(11 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	**செங்குன்றூர் (செங்குன்றூர் என்பது திருவாங்கூர் கொல்லம் துறைமுகத்திலிருந்து கீழ்த் திசையில் சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ளது.)**
குலம்	:	**வேளாளர்**
குருபூசை மாதம்	:	**சித்திரை**
நட்சத்திரம்	:	**திருவாதிரை**
காலம்	:	**சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840-865)**

'விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டருக்கு அடியேன்' (திரு.தொகை 1:3)

சிவனடியாராகிய பரசுராமன் வாழ்ந்த நாடு சேர நாடு. சேர நாட்டு ஊர்களுள் செங்குன்றூர் என்பதும் ஒன்று. செங்குன்றூர்த் தெருக்களில் கரும்பில் விளையும் முத்தும், மழை முத்தும், யானைக் கொம்பில் விளையும் முத்தும், மூங்கிலில் விளையும் முத்தும், புன்முறுவல் முத்தும் நிறைந்திருந்தன.

அன்னம் வாழும் வயல் சூழ்ந்த செங்குன்றூரில் சிவபெருமான் மீது மிகுந்த பற்றுக் கொண்ட விறன்மிண்டர் என்ற நாயனார் வாழ்ந்து வந்தார். நதியும் மதியும் சூடிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் எங்கும் சென்று வழிபட்டு வந்தார். அடியார் கூட்டத்தைத் தொழும் அன்புடையவராய் விளங்கினார். முப்புரம் எரித்த திருஆரூர்த் தியாகராசப் பெருமானை வணங்கினர். திருஆரூர்க் கோயில் தேவாசிரிய மண்டபத்தில் கூடி வணங்கும் சிவனடியாரை வணங்காது சென்ற வன்தொண்டராகிய சுந்தரரை விறன்மிண்டர் புறத்தொண்டராகக் கருதினர்.

விறன் மிண்டர் இறைவன் அடியார் பக்தி உடையோரை அகத்தொண்டர் என்றும் ஏனையோர் புறத்தொண்டர் என்றும் கருதினர். சிவனடியாரைத் தொழாது சென்ற சுந்தரர்க்கு அருளிய சிவபெருமானும் சைவர்க்குப் புறத்தார் எனக் கருதினார்.

அடியார் மீது கொண்ட பற்றைச் சுந்தரர் திருத்தொண்டத் தொகை என்ற நூலைப் பாடி வெளிப்படுத்தினார். ஒரு வகையில் விறன்மிண்டர் திருத்தொண்டர் பெருமை வெளிப்படுத்தும் திருத்தொண்டத்தொகை தோன்றக் காரணமாயிருந்தவர் எனலாம்.

Koviloor Digital Library

திருத்தொண்டத்தொகை நூற்பெருமை உணர்ந்த விறன்மிண்டர் அடியார்பெருமை அறிவார்யார்? என எண்ணி மகிழ்ந்தார்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று தொடங்கிச் சுந்தரர் 11 ஆசிரிய விருத்தங்களால் திருத்தொண்டத் தொகை பாடினார்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

ஒவ்வோர் அடியார்க்கும் நான்கு சீர்கள் பயன்படுத்துவர். அடியார்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு நெறிகளிலும் தவறாதவர்கள். திருத்தொண்டத்தொகை முழுமையும் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களில் ஆயநூல். அடியார்கள் எழு பிறப்பொழிந்து இறைவன் திருவடி இன்பப் பேறு பெற்றவர்கள் என்பதை எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் உணர்த்துவர். நஞ்சுண்டு நஞ்சை அமுதாக்கிய சிவபெருமான் பெருமை அளப்பரிது. சைவத் தொண்டு செய்து சைவ நெறி நின்று இறைவன் திருவடிக்கண் பற்றுக் கொண்ட அடியார்களுள் விறன் மிண்டர் ஒருவராக விளங்கினார். திருத்தொண்டத் தொகை பிறக்கக் காரணமாய் இருந்த விறன்மிண்டர் அடியார் சங்கம பக்தியில் ஆழமான பற்றுக் கொண்டவராக விளங்கினார். **விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்** என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் விறன்மிண்டரைப் போற்றிப் புகழ்வர். சோலையில் குளிர்மை பெற்ற குன்றையூர் போல விறன்மிண்டர் தொண்டும் அடியார்க்குக் குளிர்மை தந்தது.

விரைசெய் நறும்பூந் தொடைஇதழி வேணியார்தம் கழல்பரவிப்
பரசுபெறுமா தவ முனிவன் பரசுராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனும் திருந்து நிலனின் செழுவளமும்
வரையில் வளமும் உடன்பெருகி மல்குநாடு மலைநாடு (1)

மலை போன்று பெருமை பெற்ற விறன்மிண்டர் வாழ்ந்தநாடு மலைநாடு என்ற சேரநாடு.

Koviloor Digital Library

வாரி சொரியும் கதிர்முத்தும் வயல்மென் கரும்பின் படுமுத்தும்
வேரல் விளையும் குளிர்முத்தும் வேழமருப்பின் ஒளிர்முத்தும்
மூரல் முறுவல் வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்கும்
சேரர் திருநாட்டு ஊர்களின்முன் சிறந்த மூதூர் செங்குன்றூர். (2)

முத்து, தான் பிறந்த இடத்திற்கு உதவாமல் கோத்தணிந்தவர்க்குப் பயன்படும். அதுபோல் சிவனடியார்கட்குப் பெருந்தொண்டு செய்து வந்தார்.

விறன்மிண்ட நாயனார் புராணப் பாடல்கள்

என்னும் பெயரின் விளங்கிஉலகு ஏறும் பெருமை உடையதுதான்
அன்னம் பயிலும் வயல்உழவின் அமைந்த வளத்தால் ஆய்ந்தமறை
சொன்ன நெறியில் வழியொழுகும் தூயகுடிமைத் தலைநின்றார்
மன்னும் குலத்தின் மாமறைநூல் மரபில் பெரியோர் வாழ்பதியாம். (3)

அப்பொன் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்
செப்பற்கு அரிய பெரும்சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறஎறிவார் எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பால் பரிவுஉடையார் எம்பிரானார் விறன்மிண்டர். (4)

நதியும் மதியும் புனைந்தசடை நம்பர் விரும்பி நலம்சிறந்த
பதிகள் எங்கும் கும்பிட்டுப் படரும் காதல் வழிச்செல்வார்
முதிரும் அன்பின் பெருந்தொண்டர் முறைமை நீடு திருக்கூட்டத்து
எதிர்முன் பரவும் அருள்பெற்றே இறைவர்பாதம் தொழப்பெற்றார் (5)

பொன்தாழ் அருவி மலைநாடு கடந்து கடல்சூழ் புவிளங்கும்
சென்றுஆள் உடையார் அடியவர்தம் திண்மை ஒழுக்க நடை செலுத்தி
வன்தாள் மேருச் சிலைவளைத்துப் புரங்கள் செற்ற வைதிகத்தேர்
நின்றார் இருந்த திருஆரூர் பணிந்தார் நிகர்ஒன்று இல்லாதார். (6)

திருஆர் பெருமை திகழ்கின்ற தேவாசிரிய னிடைப்பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்துஅணையாது
ஒருவாறு ஒதுங்கும் வன்தொண்டன் புறகுஎன்று உரைப்பச் சிவன்அருளால்
பெருகா நின்ற பெறும்பேறு பெற்றார் மற்றும் பெற நின்றார். (7)

சேண்ஆர் மேருச் சிலைவளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம்
பேணாது ஏகும் ஊரனுக்கும் பிரான்ஆம்தன்மைப் பிறைசூடிப்
பூண்ஆர் அரவம் புனைந்தார்க்கும் புறகுஎன்றுஉரைக்க மற்றுஅவர்பால்
கோணா அருளைப் பெற்றார்மற்று இனியார் பெருமை கூறுவார். (8)

Koviloor Digital Library

ஞாலம் உய்ய நாம்உய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓலம் இடவும் உணர்வுஅரியார் அடியார் உடனாம் உளதுஎன்றால்
ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தார்ஆர்? (9)

ஒக்க நெடுநாள் இவ்உலகின் உயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றித் தொண்டு பெற்ற விறன்மிண்டர்
தக்க வகையால் தம்பெருமான் அருளி னாலே தாள்நிழல்கீழ்
மிக்க கணநா யகர்ஆகும் தன்மை பெற்று விளங்கினார். (10)

வேறுபிறிதுஏன்? திருத்தொண்டத் தொகையால் உலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணர்ஆம் பிரானார் விறன்மிண் டரின்பெருமை
கூறும் அளவுஎன் அளவிற்றே? அவர்தாள் சென்னி மேல்கொண்டே
ஆறை வணிகர் அமர்நீதி அன்பர் திருத்தொண்டு அறைகுவாம். (11)

விறன்மிண்ட நாயனார் புராணம் முழுதும் அறுசீர் விருத்தங்களால் அமைந்துள்ளது. விறன்மிண்டர் ஆறு ஆதாரம் கடந்து ஏழாம் ஆதாரமாகிய குண்டலினி ஆற்றல் பெற்று இறைவன் திருவடி இன்பம் பெற்றார். இவ்வுண்மை புலப்படுத்தவே சேக்கிழார் விறன் மிண்டர் புராணத்தை அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களால் அமைத்தார். இது தொல்காப்பியர் கூறும் அடியாகிய **நோக்கு** எனும் செய்யுளுறுப்பாகும். குருபக்தி, இலிங்க பக்தி, சங்கம பக்தி என்ற மூன்றனுள் விறன்மிண்டர் அடியார் சங்கமபக்தி கொண்டவர்.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக.

✱ பெரியபுராணத்தில் சேக்கிழார் கூறாத கதைப்பகுதி திருவாரூர்த் தலவரலாற்றில் கூறப்பெற்றுள்ளது. ஆர்வலர் உண்மை உணர்ந்து தெளிக.

Koviloor Digital Library

16. அமர்நீதியார்

(49 பாடல்கள்)

பிறந்த ஊர் : பழையாறை

குலம் : வணிகர்

குருபூசை மாதம் : ஆனி

நட்சத்திரம் : பூரம்

காலம் : அப்பர், சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 – 600)

'அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்' (திரு.தொகை 1:4)

சோழநாட்டின் தலைநகர் பழையாறை. பழையாறை தேரோடும் வீதிகள் நிறைந்தது. பழையாறை பெருமை மிக்க பதியாகும். பழையாறையில் அமர்நீதியார் என்ற வணிகர் குலத்தவர் வாழ்ந்து வந்தார். அவர் பொன், முத்து, மணிகள், பூந்துகில் முதலியன பெற்ற பெருஞ்செல்வர். சிவன் சேவடியே சிந்தனை செய்வார். சிவனடிஹ யார்க்கு அமுதளித்து ஆதரித்து வந்தார். சிவனடியார்கட்குக் கோவணம் தந்தருள்வார். செல்வத்தின் பயன் ஈதல் என்ற கொள்கை யைக் கொண்டு வாழ்ந்து வந்தார். திருநல்லூர் இறைவனை வழிபட்டார். திருநல்லூரில் அடியார்கள் உண்ணத் திருமடம் அமைத்தார்.

சிந்தை செய்வது சிவன்கழல் அல்லதுஒன்று இல்லார்
அந்தி வண்ணர்தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக்
கந்தை கீளுடை கோவணம் கருத்துஅறிந்து உதவி
வந்தசெல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார். (3)

நல்லூர் மடத்தில் அடியார்கட்கு அமுது அளித்து இறைவனை வழிபட்டு வந்தார். அடியாரின் கொடைப் பெருமை உலகிற்குக் காட்ட விரும்பிய சிவபெருமான் பிரமசரிய வடிவில் வந்தார்.

சிவனார் பிரமசரிய வடிவம்

திருநீறும் பூணூலும் அணிந்திருந்தார். அரையில் கோவண ஆடை அணிந்திருந்தார். கோவணத்தில் திருநீற்றுப் பையும் தருப்பைப் புல்லும் தாங்கி இருந்தார். அமர்நீதி மடத்தை அடைந்த யோகியைக் கண்ட அமர்நீதியார் முகமலர்ந்து வணங்கினார். என்

Koviloor Digital Library

மடத்திற்குத் தங்கள் வருகை நிகழ்ந்தது என் தவப்பயன் எனக் கூறி மகிழ்ந்தார். அடியார்க்குக் கோவணமும் அமுதும் தந்து அடியார்களைப் பேணும் நும்மைக் காண வந்தோம் என்று யோகியார் உரைத்தார்.

அமுதளிக்கும் மடம் பெருமை பெற அமுதருந்தியருளுமாறு அமர்நீதியார் யோகியாரை வேண்டினார்.

பேணும் அன்பரை நோக்கி நீர்பெருகிய அடியார்க்கு
ஊணும் மேன்மையில் ஊட்டிநல் கந்தைகீள் உடைகள்
யாணர் வெண்கிழிக் கோவணம் ஈவது கேட்டுக்
காண வந்தனம் என்றனன் கண்நுதல் கரந்தோன் (11)

பொன்னி நீராடி வருவோம். இந்தக் கோவணம் பெருமை மிக்கது. யான் காவிரி நீராடி வருமளவும் பத்திரமாக வைத்திருக்கவும் என்று கூறிப் பெருமான் கோவணத்தைத் தண்டிலிருந்து அவிழ்த்துத் தந்தார். நீராடி விரைந்து வருக என்று அமர்நீதியார் கோவணத்தை வணங்கி வாங்கிக் கொண்டார். பத்திரப்படுத்தி வைத்திருந்த கோவணத்தை இறைவன் மறையும்படிச் செய்தார். காவிரியாடி வந்தாரோ கங்கையாடி வந்தாரோ என்னும்படி யோகியார் மழையில் நனைந்து வந்தார்.

பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின நெறிமேல்
சங்கை இன்றியே தப்பினது என்றுதம் சரக்கில்
எங்கு நாடியும் கண்டிலர் என்செய்வார்? நின்றார்
அங்கண் வேதியர் பெருந்தொடக் கினில் அகப் பட்டார் (21)

வைத்த கோவணம் எங்குச் சென்றதென அறியேன். வேறு புதிதாக நெய்த கோவணம் கொணர்ந்தேன். பிழை பொறுப்பீர் என்று அமர்நீதியார் பணிவாகக் கூறினார். அமர்நீதியாரே! கோவணம் ஒருநாளுக்குள் எங்குப் போய்விடும். வேறு கோவணம் கொடுப்பது என்ன நீதி? வணிகர் என்பதைக் காட்டிவிட்டீர் என்று வேதியர் நெருப்புத் துள்ளியதுபோல் சினம் கொண்டார்.

ஐம்பொறி கலங்கிய அமர்நீதியார் பிழைபொறுக்க வேண்டினார். கோவணத்திற்குப் பதில் கோடிக்கணக்கான பட்டாடைகளும் அணிமணிகளும் தருவதாக உரைத்து அமர்நீதியார் வேதியரைப் பலமுறை பணிந்தார்.

செயத்தகும் பணிசெய் வன்இக் கோவணம் அன்றி
நயத்த குந்தன நல்ல பட்டாடைகள் மணிகள்
உயர்த்த கோடி கொண்டருளும் என்று உடம்பினில் அடங்காப்
பயத்தொடும் குலைந்து அடிமிசைப் பலமுறை பணிந்தார் (28)

Koviloor Digital Library

அணியும் என் கோவணம் மட்டும் தந்தால் போதும் என்று வேதியர் கூறினர். கோவணத்திற்கு இணையாகப் பூந்துகில்கள் தருதற்கு இசைந்தருளுமாறு அமர்நீதியார் பணிந்து வேண்டினர். நன்றென உடன்பட்ட வேதியர் வேறு ஒரு கோவணம் தந்தார். வேதியர் புதியதாய்த் தந்த கோவணத்தைத் துலாக்கோலில் ஒரு தட்டிலும், பூந்துகில் பட்டாடைகளை மற்றொரு தட்டிலும் அமர்நீதியார் இட்டார். கோவணத் தட்டுத் தாழ்ந்தது.

முட்டுஇல் அன்பர்தம் அன்புஇடும் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட்டு அருளொடும் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டும்துகில் அநேககோ டிகள்இடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு. (35)

கோவணத் தட்டுத் தாழ்ந்தது கண்டஞ்சிய அமர்நீதியார் தன் தனம் முழுதும் ஒரு தட்டில் இடுவதற்கு அனுமதி வேண்டினர்.

அமர்நீதி முழுத்தனங்கள் இட்டுக் கோவணத்திற்கு இணை யானால் போதும் என யோகியார் உரைத்தார். தன் பொன்பொருள் அனைத்தும் ஒரு தட்டில் வைத்தார். அப்போதும் கோவணத் தட்டு நேர் நிற்காமல் தாழ்ந்தே இருந்தது. ஏழுலகும் பெருமான் கோவணத்திற்கு ஈடாகாது. அழியாத தனம் அனைத்தும் வைத்தேன். யானும் என் மனைவியும் மகனும் துலையில் இருக்க அருள் புரிய வேண்டும் என்று அமர்நீதியார் வேண்டினர். ஆன்மாக்களை உலகத் துன்பக் கடலிலிருந்து கரை ஏற்றும் பெருமான் அதற்கு உடன்பட்டார். தன் மனைவி மக்களோடும் துலையில் ஒரு தட்டில் அமர்ந்து திருநீற்றின்பாலும் சிவன்பாலும் சிவனடியார்பாலும் பிழை இல்லாது அடிமை செய்து வாழ்ந்தோம் ஆகில் தட்டு நேர் நிற்க என்று கூறி நமச்சிவாய என்ற அஞ்செழுத்தை ஓதித் திருநல்லூர் இறைவனை மனத்தில் எண்ணி வணங்கினார்.

இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் அடிமை
பிழைத்தி லோம்எனில் பெரும்துலை நேர்நிற்க என்று
மழைத்தடம் பொழில்திரு நல்லூர் இறைவனை வணங்கித்
தழைத்த அஞ்செழுத்து ஓதினார் ஏறினார் தட்டில். (43)

உண்மை அன்புடன் அடியார் மனைவி மகனுடன் துலைத் தட்டில் ஏறியதும் கோவணமும் குறையிலாத அடியார் அன்பும் சமனாய் நின்றதால் துலைத்தட்டுகளும் சமனாய் நின்றன. மண்ணவர் தொண்டர் பெருமை உணர்ந்து மகிழ்ந்து வணங்கினர். விண்ணவர் கற்பகப் பூமழை பொழிந்தனர். வேதியர் நல்லூர்

Koviloor Digital Library

மங்கைபாகன் வடிவில் காட்சி தந்தார். அமர்நீதியார்க்கும் அவர் மகனார்க்கும், மனைவியார்க்கும் சிவபதம் தந்தருளினார்.

அண்டர் பூமழை பொழியமற்று அதனிடை ஒளித்த
முண்ட வேதியர் ஒருவழி யான்முதல் நல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே விசும்பினில் பாகம்
கொண்ட பேதையும் தாமுமாய்க் காட்சிமுன் கொடுத்தார். (46)

அடியார்தம் மனைவி மகனொடு ஆதிமூர்த்தியாகிய இறை வனுடன் துலையே விமானமாகச் சிவபுரி அடைந்தார். மாலும் அயனும் அறியா வெண்ணெய் நல்லூர் அண்ணலாகிய சிவபெருமான் சுந்தரர் பெருமானுக்குத் தந்த பேரருள்போல் அமர்நீதியாருக்கும் தந்தருளினார்.

நாதர் தம்திரு வருளினால் நல்பெரும் துலையே
மீது கொண்டுஎழு விமானமது ஆகிமேல் செல்லக்
கோதுஇல் அன்பரும் குடும்பமும் குறைவுஅறக் கொடுத்த
ஆதி மூர்த்தி யாருடன் சிவபுரியினை அணைந்தார். (48)

மெய்ப்பொருள்

இறைவன் அன்புக்கு உலகில் எப்பொருளும் ஈடாகாது. உலகப் பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மை உடையன. அன்பு ஒன்றே அழியாதது. அடியார் தம்மையே தர முன்வந்த போது துலை சமமானது. அடியார் பொன்னாசையும் பெண்ணாசையும் மகவாசையும் துறக்க முன்வந்தபோது இறையருள் வந்து ஆட்கொண்டது. கோவணம் மானம் காப்பது. அமர்நீதியார் சிவன்பால் கொண்ட இணையிலா அன்பு அடியாரின் பக்தி மானம் காத்தது. பொருட்பற்று, மகப்பற்று, மனைவி பற்று ஆகியன அனைத்தும் நீங்கி, இறைவன் திருவடிப் பற்றே பற்றாக அமர்நீதி நினைத்ததும் துலைத்தட்டுகள் சமமாக நின்றன.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (குறள் 350)

யான் என்பது அகப்பற்று, புறப்பற்று மனைவி மகப்பற்று, பொன் பொருள் பற்று. இவ்விரு பற்றும் நீங்கியதும் அமர்நீதியார் இறை யருளைப் பெற்றார்.

அருள்மிகு சோமேசர் திருக்கோயில் பழையாறை
பட்டீஸ்வரம் அஞ்சல் - 612 703.
கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

Koviloor Digital Library

17. எறிபத்தர்

(49 பாடல்கள்)

பிறந்த ஊர் : கருவூர்

குலம் : தெளிவில்லை

குருபூசை மாதம் : மாசி

நட்சத்திரம் : அஸ்தம்

காலம் : அப்பர், சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 – 600)

'இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்' (திரு.தொகை 2:1)

சோழநாட்டின் (தற்போது கொங்கு நாட்டின் பகுதியாக மாறிவிட்டது.) தலைநகராகிய கருவூரில் எறிபத்த நாயனார் தோன்றினார். மக்கள் வாழ்வுக்குக் கருவாக விளங்கும் பொருள் வளமும் அருள் வளமும் கொண்டு கருவூர் விளங்கியது. அநபாயச் சோழன் தலைநகர் கருவூராகும்.

கருவூர் வளம்

கருவூர் மதில் சுவர்களில் மேகம் சூழும். மாளிகையில் வானம் சூழும். மனை வாயில்களில் மாணிக்கக் கற்கள் சூழ்ந்து நிறைந்திருக்கும். மங்கையர் கூந்தலில் வண்டுகள் சூழ்ந்திருக்கும். மதிமுகப் பெண்கள் கூட்டம் வீதியில் சூழ்ந்திருக்கும். வானவர் சூழ்ந்த இந்திரனின் பொன்னமராவதியை விடக் கருவூர்ச் சிறந்து விளங்கும். எறிபத்த நாயனார் எப்போதும் அடியாரைச் சூழ்ந்து வருவார் என்ற உள்ளுறைக் கருத்து நமக்குப் புலனாகிறது. மங்கையர் கூந்தலில் வண்டாடும் தெருவில் ஒளி ஆடும் மாடக்கொடிகள் கதிரவனைத் தாண்டி ஆடும். கருவூரைப் புவி கொண்டாடும். கருவூரில் அன்பர் சிந்தை நீங்காச் சிவனார் எழுந்தருளியுள்ள ஆனிலை என்னும் கோயில் சிறந்து விளங்கியது. ஆன்மாக்களை நன்னெறியில் நிலைபெறச் செய்யும் பெருமான் எழுந்தருளியுள்ளமையால் அக்கோயில் ஆனிலை எனும் பெயர் பெற்றது.

மாமதில் மஞ்சு சூழும் மாளிகை நிரைவிண் சூழும்
தூமணி வாயில் சூழும் சோலையில் வாசம் சூழும்
தேமலர் அளகம் சூழும் சிலமதி தெருவில் சூழும்
தாம்மகிழ்ந்து அமரர் சூழும் சதமகன் நகரம் தாழ (3)

Koviloor Digital Library

எறிபத்தர் பெருமை

மறை கடந்த (மறைகள் தந்த) பெருமானை வழிபட்டுச் சிவனடியார்கட்குத் தொண்டு செய்தவர் எறிபத்த நாயனார். அடியார்களைக் காக்கக் கையில் பரசு வைத்திருப்பார். ஆனிலைச் சிவபெருமானுக்குச் சிவகாமி ஆண்டார் என்ற அடியார் வாய்கட்டிப் பூப்பறித்து நிரப்பிய பூக்குடலை மாலையொடு கருவூர்த்தெருவில் தண்டூன்றி நடந்து சென்று கொண்டிருந்தார்.

சிவகாமியாண்டார் ஓலம்

புகழ்ச்சோழனின் பட்டத்து யானை அட்டமி நாளன்று நீர்த்துறையில் நீராடி வரும்போது மதங்கொண்டு ஓடி வந்தது. மக்கள் பதறி ஓடினர். சிவகாமியாண்டார் யானையைக் கண்டதும் விரைந்தார். யானை பூக்குடலையைப் பறித்துச் சிதறியது. சிவகாமியாண்டார் மூப்பால் விரைந்து செல்ல முடியாமல் சினந்து 'சிவதா' என்று சிவ நாமம் சொல்லி ஓலமிட்டார். யானைத்தோல் போர்த்த பெருமானே! எளியவர்க்குதவும் வளமையான அருள்வடிவே! தெளிந்த ஞானம் உடையோர்க்கு அருள்தரும் அமுதே! ஆளும் மதியும் சூடிய பெருமான் சடைக்குரிய பூசை மலரை யானை சிந்துவதோ! முப்புரம் எரித்த சிவனே! அடியார் துயர் துடைக்கும் கருணை முகிலே! மாலயன் அறியாப் பெருமானே! முடியா முதலாவதாக சிவதா!'' என ஓலமிட்டுச் சிவகாமி ஆண்டார் வருந்தினார்.

களியா னையின்ஈர் உரியாய் சிவதா!
எளியார் வலியாம் இறைவா சிவதா!
அளியார் அடியார் அறிவே சிவதா!
தெளிவார் அமுதே சிவதா! சிவதா! (16)

அடியாரின் ஓலம் கேட்ட எறிபத்தர் அடியார்க்குத் தீங்கு செய்தது களிறென்று உணர்ந்து கொலை மழுவை எடுத்து வந்தார். யானை சென்ற வழியைச் சிவகாமியாண்டார் வாயிலாக அறிந்து யானையை நோக்கி நெருப்பும் நெய்யும் எனச் சினந்து விரைந்து சென்றார். சிவபெருமான் உரித்த யானை போன்ற வலிமை பெற்ற யானையைக் கண்டார். விண்ணவரும் மண்ணவரும் எதிர்த்தாலும் அடியார்க்குத் தீங்கு செய்த யானையைத் துண்டித்துக் கொல்வேன் என்று கூறிப் பாய்ந்தார்.

அடியார் பூக்குடலையைச் சிதறச் செய்த துதிக்கையைத் துணித்தபோது யானை கதறி வீழ்ந்தது. யானைமேல் இருந்த மூன்று பாகரையும் இரு மருங்கிலும் சென்ற இரு பாகரையும் வெட்டி

Koviloor Digital Library

வீழ்த்தினார். அடியார்க்குத் துன்பம் செய்த யானையை அடக்காத பாகர்களும் குற்றவாளி எனத் தண்டித்தார். பட்டவர்த்தனமும் பட்டப் பாகரும் பட்டார். எறிபத்தர் அடியார் மீது கொண்ட அன்பு தலையான தாயன்பாகும். தாய்தன் குழந்தைக்குத் தீங்கு வந்தபோது தன் துன்பம் நோக்காது குழந்தை துன்பம் போக்குவாள். அதுபோல் அடியார், களிறால் தமக்கு வரும் துன்பம் நோக்காது களிற்றைத் தண்டித்தார்.

பாய்தலும் விசைகொண்டு உய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழல் உமிழ்கண் வேழம் திரிந்துமேல் கதுவ அச்சம்
தாய்தலை அன்பின் முன்பு நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினால் துணித்தார் தொண்டர். (24)

பட்டவர்த்தனம் என்ற யானை கொல்லப்பெற்ற செய்தியைக் காவலர் மன்னற்குரைத்தனர். யார் செய்தார் என்று கேளாமல் சோழன் சிங்கம் போலச் சீறி எழுந்தான். படைத் தலைவரும், குதிரை தேர்ப்படையும் புடை சூழப் புகழ்ச் சோழ மன்னன் யானை வீழ்ந்த இடம் நோக்கிப் புறப்பட்டான். சங்கு, தாரை, தாளம், பேரிகை, துடி முழங்கச் சோழன் குதிரை மேல் ஏறிப் புறப்பட்டான். படை ஒலியும் யானை முழக்கமும் தேர்மணி ஒலியும் வீரர்கள் ஆர்ப்பொலியும் ஊழிக்கடல் ஒலிபோல் ஒலித்தன. யானை சென்ற தெரு வழியே மன்னன் வந்தான். யானையோடு பாகர் வீழ்ந்த தெருவடைந்தான்; பகைவரைக் காணான். முழுப்படையுடன் ஆண்யானை போல் நின்ற அடியாரைக் கண்டான்.

பொன்னருவி வீழும் குன்றமெனக் குருதி கொப்பளிக்கப் புரண்ட யானையின் முன்பு சிவனடியாரைப் பார்த்தான். யானையைக் கொன்றவர் சிவனடியார் என்றறியாத மன்னன் யானையைக் கொன்றவர் யார்? என முழங்கினான். அரசனிடம், பட்டத்து யானையை எதிர்ப்பார் எவருமிலார். மழுப்படையுடன் நிற்கும் இவ்வடியாரே என்றனர்.

யானை பிழை செய்தால் அன்றிச் சிவனடியார் கொல்லார் எனச் சோழன் மனத்துள் எண்ணிப் படையைத் திருப்பிப் போக ஏவிவிட்டு வேந்தன் வெற்றிக் குதிரையிலிருந்து இறங்கினான்.

குழைஅணி காதினானுக்கு அன்பர்ஆம் குணத்தின்மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார் பிழைத்ததுஉண்டு என்றுஉட் கொண்டு
மழைமத யானைச் சேனை வரவினை மாற்றி மற்ற
உழைவயப் புரவிமேல்நின்(று) இழிந்தனன் உலக மன்னன். (37)

அங்குக் கேட்டதொன்று. யானை செய்த பிழைக்காக யானை யைக் கொன்றது மட்டும் போதுமா? வேறு ஏதேனும் தண்டனை வழங்க வேண்டுமா? என்று அடியாரிடம் அரசன் பணிந்து

Koviloor Digital Library

வினவினன். சிவகாமி ஆண்டார் என்ற அடியாரின் பூக்குடலையை எந்த யானையின் துதிக்கை பறித்து வீழ்த்தியதோ அந்தத் துதிக்கையை வெட்டி வீழ்த்தினேன். யானை தீங்கு செய்யும்போது விலக்காத பாகரையும் வீழ்த்தினேன் என்று எறிபத்தர் புகழ்ச்சோழனிடம் உரைத்தார்.

அன்பு மலையில் அரசனும் அடியாரும்

சிவனடியார்க்குத் தீங்கு செய்த இப்பெரும் பிழைக்கு இத்தண்டனை மட்டும் போதாது. பிழை செய்த யானைக்குரிய என்னையும் கொல்ல வேண்டும். தங்கள் குற்றமற்ற மழுவால் குற்றமுடைய என்னைக் கொன்றால் மழு, குற்றம் உடையதாகிவிடும். ஆதலின் என்னையும் கொல்க எனத் தன் உடைவாளை அடியார் கையில் அரசன் கொடுத்தான். வேந்தனை நோக்கி அடியார் ஈறிலாப் புகழுடைய வேந்தனின் அளவற்ற அன்பைக் கண்டேன் என மனத்துள் எண்ணிய அடியார் அந்த வாளால் வேந்தன் தன்னை மாய்த்துக் கொள்வான் எனக் கருதி அன்பு வேந்தனுக்குத் தீங்கு நேரா வண்ணம் அடியார் வாளை வாங்கிக் கொண்டார்.

வெந்தழல் சுடர்வாள் நீட்டும் வேந்தனை நோக்கிக் கெட்டேன்
அந்தம்இல் புகழான் அன்புக்கு அளவின்மை கண்டேன் என்று
தந்தவாள் வாங்க மாட்டார் தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற்று அஞ்சி வாங்கினார் தீங்கு தீர்ப்பார். (43)

அடியார் முன்பு அரசன் தொழுது நின்று தன்பிழை நீங்கத் தன்னை வாளால் கொன்று தன்பிழை தீர்த்துத் தனக்கு உதவியருளுமாறு வேண்டினான். யானையும் பாகரும் மடியவும் உடைவாளைத் தந்து தன்னையும் கொல்லுமாறு வேண்டும் அன்பு வேந்தனுக்குத் தீங்கு நினைத்துத் தனது உயிர் முடிப்பதே என் முடிவு என்று எண்ணிய அடியார் வேந்தன் வாளைத் தன் கழுத்தில் வைத்து அரியத் தொடங்கினார். வேந்தன் உளம் பதறித் தன் கைகளால் அடியார் தம்மைத் தாம் அரிந்து கொள்ளாவண்ணம் அவர் கையும் வாளும் பிடித்தான். அரசனும் அடியாரும் கொண்ட அன்பை வெளிப்படுத்த பெருமான் வாக்கு விசும்பில் எழுந்தது. தெய்வமுட்பட பெருமை உலகறியக் காட்டவே யானை மாலை சிந்தச் செய்த நிகழ்ச்சி கூத்தப்பிரான் அருளால் கூடிற்று என்ற வான்வாக்கு எழுந்ததும் வீழ்ந்த யானை, பாகரொடும் உறங்கி எழுந்தது போன்று உயிர்த்தெழுந்தது.

தொழுந்தகை அன்பின் மிக்கீர் தொண்டினை மண்மேல் காட்டச்
செழும்திரு மலரை இன்று சினக்கரி சிந்தத் திங்கள்
கொழுந்தணி வேணிக் கூத்தர் அருளினால் கூடிற்று என்றுஅங்கு
எழுந்தது பாகரோடும் யானையும் எழுந்தது அன்றே. (48)

வாளும் கையும் பற்றிய வேந்தன் திருவடியை அடியார் பணிந்து வணங்கினார். வேந்தனும் அடியார் கழல் போற்றி அவர்

Koviloor Digital Library

திருவடி பணிந்தான். பூக்குடலையில் பூக்கள் மீண்டும் நிரம்பின. சிவகாமியாண்டார் இறை அருளை வியந்து நின்றார். அந்தப் பட்டத்து யானை மேல் அடியாரை ஏற்றி வேந்தன் குதிரை மீது ஊர்ந்து வந்தான். மண்ணும் விண்ணும் வாழ்த்த அடியார் வேந்தனொடு ஆனிலைக் கோயிலை அடைந்தார்.

எறிபத்தர் சிவகணத் தலைமை பெறல்

சிவகாமி ஆண்டாரும் எறிபத்தரும் சிவனடியார் பேரன்பையும் சோழன் பெருமையையும் எண்ணித் தொண்டர் திருப்பணியில் தலை சிறந்து விளங்கினார். மண்ணில் நாள்தோறும் அடியார் தொண்டு செய்த எறிபத்த நாயனார் கயிலை மலையில் சிவகணத்தின் தலைமை பெற்றார். நாயனார் அன்பாண்மையும், தன்னையே கொல்ல வாள் தந்த புகழ்ச்சோழன் பேராண்மையும் பெருமான் அளக்க முடியுமே தவிர அடியார் பெருமையை மண்ணவர் அளந்தறிய இயலாது.

மற்றுஅவர் இனையஆன வன்பெருந் தொண்டு மண்மேல்
உற்றிடத்து அடியார் முன்சென்று உதவியே நாளும்நாளும்
நல்தவக் கொள்கை தாங்கி நலம்மிகு கயிலை வெற்பில்
கொற்றவர் கணத்தின் முன்ஆல் கோமுதல் தலைமை பெற்றார். (55)

அடியார் தொண்டாற்றிய எறிபத்தர் பெருமை போல, போர்ப் பயிற்சியால் வந்த ஊதியத்தை அடியாரைப் பேணக் கொடுத்த ஏனாதிநாத நாயனார் பெருமையும் அளவிடற்கரியதாம். எனவே எறிபத்த நாயனார் புராணத்தின் பின் ஏனாதி நாயனார் புராணம் வைக்கப்பெறும்.

ஆள்உடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்
நாளும்மற்று அவர்க்கு நல்கும் நம்பர்தாம் அளக்கில் அன்றி
நீளும்இத் தொண்டின் நீர்மை நினைப்பின்யார் அளக்க வல்லார்? (56)

மெய்ப்பொருள்

தாய் தனக்குத் தீங்கு வருமாயினும் குழந்தைக்குத் தீங்கு நேராமல் காப்பது போலத் தனக்கு யானையாலும் வேந்தனாலும் வரும் தீங்கு கருதாமல் சிவகாமி ஆண்டார்க்கு வர இருந்த தீங்கினை எறிபத்த நாயனார் விலக்கினார். மணிமேகலை பிறந்தநாள் விழாவின் போது கோவலன் தனக்கு வரும் துன்பம் கருதாது யானையின் பிடியி லிருந்து முதிய வேதியரைக் காத்த நிகழ்வு இங்கு நோக்கத்தக்கது.

அருள்மிகு பசுபதீஸ்பரர் திருக்கோயில் கரூர் - 639 001
கரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

18. ஏனாதியார்

(42 பாடல்கள்)

பிறந்த ஊர் : எயினனூர் (கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது.)

குலம் : சாணார்

குருபூசை மாதம் : புரட்டாசி

நட்சத்திரம் : உத்திராடம்

காலம் : அப்பர், சம்பந்தர்க்கு காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் (கி.பி. 660 – 840)

'ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்' (திரு.தொகை 2:1)

எயினனூர் வளம்

எயினனூர் சோலை வயல் வளம் சூழ்ந்தது. கரும்பும் நெல்லும் ஓங்கி வளர்ந்திருந்தன. எயினனூரில் ஈழக்குலச் சான்றோர் குலத்தில் ஏனாதி நாதர் தோன்றினார். ஏனாதி, காவிதி என்பன அரசர் தரும் சிறப்புப் பட்டங்களாகும். ஏனாதி பட்டம் பெற்றவர்க்கு நிலக்கொடை வழங்குவதும் உண்டு. அந்த நிலம் ஏனாதி என வழங்கப்பெற்றது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மேலைச்சிவபுரி, பொன்னமராவதி என்ற ஊர்கட்கு நடுவில் ஏனாதி என்ற சிற்றூர் உள்ளது. ஈழத்தி லிருந்து பல இனத்தவர் தமிழகம் வந்தனர். கேரளத்தில் வாழ்ந்த நாராயணகுரு என்ற சான்றோர் ஈழவ வேளாளர் குலத்தவர். அச்சான்றோர்தாம் நம் பெரியார் போல் ஒடுக்கப்பட்ட இனத்தவர் உயர்தற்குரிய சன்மார்க்க நெறி பரப்பிப் பாடுபட்டார்.

ஏனாதி நாதர் சிறப்பு

திருநீற்றுத் தொண்டினை வழிபாடாகக் கொண்டவர். மன்னன் படை வீரர்கட்கு வாட்பயிற்சியளிக்கும் தலைவராக விளங்கினார். வாட்பயிற்சி தந்து தேடிய வளமனைத்தும் மாலும் அயனும் அடிமுடி காணாச் சிவனடியார்கட்குச் செலவிட்டார்.

வாளின் படைபயிற்றி வந்த வளம்எல்லாம்
நாளும் பெருவிருப்பால் நண்ணும் கடப்பாட்டில்
தாளும் தடமுடியும் காணாதார் தம்மையும்தொண்டு
ஆளும் பெருமான் அடித்தொண்டர்க்கு ஆக்குவார் (4)

Koviloor Digital Library

பகைவர் போற்றும் பண்பாளராக ஏனாதிநாதர் விளங்கினார். படைப்பயிற்சி தருபவனாக அதிசூரன் என்பவனும் விளங்கினான். அதிசூரன் தன்னைவிட வாட்பயிற்சியில் மேம்பட்டவர் இல்லை என்று தருக்குக் கொண்டான். தருக்குக் கொண்ட அதிசூரனிடம் வாட்பயிற்சி பெற வருவார் தொகை குறைந்தது. ஏனாதி நாதர்க்கு வருவாய் பெருகியது. ஏனாதிநாதர் மீது பொறாமை கொண்ட அதிசூரன் பொழுது சாயும்போது தன் சுற்றத்தை அழைத்துக் கொண்டு ஏனாதி நாதரொடு போர்புரிய எண்ணினான்.

ஏனாதிநாதர் அதிசூரன் போர்

அதிசூரன் தன் வீரர் கூட்டத்தோடு ஏனாதிநாதரின் முற்றத்தை அடைந்து ஏனாதிநாதரைப் போருக்கு அழைத்தான். வலிமையுள்ள சிங்கக் குகைக்குச் சென்று வலிமையற்ற சிறுநரி போருக்கு அழைப்பது போல அதிசூரன் ஏனாதிநாதரைப் போர் செய்ய அழைத்தான். ஏனாதிநாதர் இடையில் கச்சணிந்து வாளும் கேடயமும் ஏந்திப்போர் முனையில் தன்படை வீரர் சூழ வந்து நின்றார்.

அதிசூரன் ஏனாதிநாதரிடம் நாம் இருவரும் அவரவர் வீரர் களுடன் போர் செய்வோம். நம்மிடையே வெற்றி பெற்றவர் மன்னர் படைக்கு வாட்பயிற்சி தரும் உரிமை பெறுவோம் எனக் கூறினான். ஏனாதிநாதரும் உடன்பட்டார். இருபடைகளும் போர் செய்தன. மேக மின்னல் போல ஒளிமிக்க வாளும் கேடயமும் கொண்டு போர் செய்தனர். வேற்படையினர் வேற்படையினரோடு மோதினர். வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள் கண்ணிலிருந்து புறப்பட்ட சினமென்னும் பொறிகள் போல் விளங்கின. கைகள் வாளால் வெட்டப்பட்டுத் துடித்தன. வேல்கள் மார்பில் பாய்ந்தன. அம்புபட்ட தோள்கள் நிலத்திடை வீழ்ந்தன. கழல் அணிந்த கால்களும், மாலை சுற்றப்பெற்ற தலைகளும் அறுந்து வீழ்ந்தன. போர்க்களத்தில் குருதி வெள்ளம் ஓடியது. குருதி வெள்ளத்தில் குறையுடல்கள் ஓடி அலைந்தன. படையால் துணிக்கப்பெற்ற உடல்குடல்கள் மிதந்து சென்றன. போர்க்களத்தில் உடல் துண்டங்களை உண்ணும் பருந்துகள் சூழ்ந்து நெருங்கின. வார்கழன்ற உடுக்கைகள் குருதி வெள்ளத்தில் புரண்டோடின. வாளொடு வீழ்ந்த உடல்கள் எங்கும் காட்சி தந்தன.

போர்க்கள அனுபவம் மிக்க வீரர்கள் பலர் பட்டனர். புற்றிலிருந்து பாம்பு வெளிப்பட்டது போல வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள் வீரர்களின் உயிர்களை உண்டன. மடிந்த வீரர்களின் விழிகள் அனற்பொறி கக்கின.

Koviloor Digital Library

வாளொடு நீள்கை துடித்தன மார்பொடு வேல்கள் குளித்தன
தோளொடு வாளி நிலத்தன தோலொடு தோல்கள் தகைத்தன
தாளொடு வார்கழல்இற்றன தாரொடு சூழ்சிரம் அற்றன
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் களத்தினில். (18)

ஏனாதிநாதர் வெற்றி

தம் படையில் வீழ்ந்தவர் போக எஞ்சியவர் பின்னிற்க ஏனாதிநாதர் சினந்தெழுந்தார். வாள் தீயுமிழ வீரர் கழல் ஒலிக்க ஏனாதிநாதர் வேற்படை வீரர்களின் தலையும், தோளும், காலும் துணித்தார். வீரர்கள் பலர் ஏனாதிநாதர் வாளுக்கு இரையாயினர். இறையருள் உணர்வு பெற்றவுடன் ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்கள் மறைதல் போலப் பல வீரர்கள் ஏனாதிநாதர் வாள் பட்டு மறைந்தனர்.

தலைப்பட்டார் எல்லாரும் தனிவீரர் வாளில்
கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதல் குற்றம் போல்ஆயினார். (27)

எஞ்சிய படைவீரரைக் கொண்டு அதிசூரன் போரைத் தொடர்ந்தான். ஏனாதிநாதர் வீரர்கட்குத் தோற்று அதிசூரன் புறமுதுகிட்டோடினான்.

அதிசூரன் சூழ்ச்சி

தோல்வியுற்று அதிசூரன் ஏனாதிநாதரை வஞ்சனையால் வெல்லக் கருதினான். பிறரைக் கொல்லாமல் நாமிருவர் மட்டும் போரிடுவோம் என்று அதிசூரன் ஏனாதிநாதர்க்குச் சொல்லி விடுத்தான். ஏனாதிநாதர் தனியே போரிடப் போர்க்களம் வருமாறுரைத்தார். வாளும் கேடயமும் கொண்டு பகை கொண்ட அடியார்க்கு ஏனாதிநாதர் தீங்கு செய்யார் என்பதறிந்தான் அதிசூரன். முன்பு நீறு அணியாத நெற்றியில் அதிசூரன் விரவ வெண் திருநீறு பூசி மனத்தில் ஏனாதிநாதரைக் கொல்லும் வஞ்சகக் கறுப்பு எண்ணம் கொண்டு கேடயத்தால் நீறுபூசிய நெற்றியை மறைத்துக்கொண்டு போர்க்களம் புகுந்தான்.

வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உள்நெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு
வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப் போர்வீரர்க்குச் சொன்ன இடம் புகுந்தான். (35)

Koviloor Digital Library

ஏனாதிநாதர் எதிர்த்துப் போரிட்டுக் கொல்லும் வேளையில், அதிசூரன் நீறுபூசிய நெற்றியை மறைத்திருந்த கேடயத்தை விலக்கியதும் கடையவன் நெற்றியில் திருநீறு கண்டார். அதிசூரன் நெற்றியில் நீறுகண்டபோதே நெற்றியில் நீறு கண்டேன். சிவபிரானின் சீரடியார் ஆயினார் என்று கூறி ஏனாதிநாதர் வாளும் கேடயமும் பயன்படுத்துவது நீக்கிக் கருதியது செய்யார்.

ஏனாதிநாதர் சைவப்பற்று

நிராயுதரைக் கொன்றார் என்ற பழி சிவனடியார்க்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக ஏனாதிநாதர் வாளுடன் போர் செய்வார் போல் நின்றார்.

கண்டபொழு தேகெட்டேன் முன்புஇவர்மேல் காணாத
வெண்திருநீற் றின்பொலிவு மேல்கண்டேன் வேறுஇனிஎன்?
அண்டர்பிரான் சீர்அடியார் ஆயினார் என்றுமனம்
கொண்டுஇவர்தம் கொள்கைக் குறிவழிநிற் பேன்என்று. (36)

வாளும் கேடயமும் வீசாமல் நின்ற ஏனாதிநாதர் முன்நின்ற பாதகனாகிய அதிசூரன் தன் கருத்தை முடித்தான். ஏனாதிநாதனார்க்கு இறைவன் காட்சி தந்தார். அதிசூரன் வாள் ஏனாதிநாதர்பாசம் அறுத்தது. ஏனாதிநாத நாயனார் மாதொரு பாகனாகிய சிவன் எழுந்தருளிய பொன்னம்பலம் அடைந்தார். ஏனாதிநாதர் திருநீற்றின் பெருமை காத்தார். கண்ணப்பர் சிவன் மீது அன்புநெறி காத்தார். எனவே ஏனாதிநாத நாயனார் புராணத்தின் பின் கண்ணப்ப நாயனார் புராணம் வைக்கப்பெற்றது.

மெய்ப்பொருள்

அதிசூரன் என்ற கொடியவன் பெயருக்கேற்ப வீரப் பண்புடையவன் இல்லை. சூர் என்பது தீண்டி வருத்தும் தெய்வம். அதிசூரன் சிவனடியாரைக் கொன்ற கொடியவன். ஏனாதி நாதரைக் கண்ட பகைவர் தோற்றோடியமைக்கு மெய்யுணர்வு பெற்ற அடியாரிடமிருந்து ஆணவம், கன்மம், மாயை போன்ற மலம் தோற்றோடியமைக்கு உவமையாகச் சேக்கிழார் கூறுவர்.

Koviloor Digital Library

19. கண்ணப்பர்

(186 பாடல்கள்)

பிறந்த ஊர் : **பொத்தப்பி நாட்டில் உள்ள உடுப்பூர்.**

குலம் : **வேடர்**

குருபூசைமாதம் : **தை**

நட்சத்திரம் : **மிருகசீரிடம்**

காலம் : **அப்பர், சம்பந்தர்க்கு முற்பட்டநாயன்மார் (கி.பி. 300 – 600)**

'கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்' (திரு.தொகை 2:2)

பொத்தப்பி நாவலர் போற்றும் தன்மையும் வளமிக்க சோலையும் பூ மலர்ந்த பொய்கையும் உடையது.

உடுப்பூர் வளம்

இன்று ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்துள்ளது. சென்னையிலிருந்து 110 கி.மீ. தொலைவில் உள்ளது. தற்பொழுது ஸ்ரீகாளத்தி என வழங்கப்பெறுகிறது.

உடுப்பூரில் முத்து வளம் கொழிக்கும் அருவிச் சாரல் அமைந்துள்ளது. யானைத் தந்தத்தால் வீட்டிற்கு வேலி கோலி யுள்ளனர். வளைந்த செவி கொண்ட நாய்கள் உள்ளன. விள மரத்தில் வார்வலை தொங்கவிடப் பெற்றுள்ளது. பன்றி, கரடி, புலி, மான் போன்ற ப்ார்வை விலங்கைக் கட்டி வைத்திருப்பர். பெண்புலியைக் கட்டி வைத்திருப்பர். மற்ற காட்டுப்புலி இந்தப் புலியைத் தேடி வந்து கொஞ்சிக் குலவும், உடன் காட்டுப் புலியை வலைக்குள் அகப்படுத்துவர். வேட்டுவச் சிறுவர்கள் புலிக்குட்டி யோடும் யானைக் கன்றோடும் விளையாடுவர். வேட்டுவ மகளிர் பெண்டுகளோடு விளையாடுவர்.

திண்ணன் பிறப்பு வளர்ப்பு

திண்ணனின் பெற்றோர் நாகன், தத்தை ஆவர். நாகன் பிறப்பின் சார்பால் கொல்லும் குற்றமே குணமாகக் கொண்டவன். தத்தை புலிப்பல் தாலி அணிந்தவள். பெண் சிங்கம் போன்றவள். நாகனும் தத்தையும் மகப்பேறு வேண்டிக் குறிஞ்சிக் கடவுளாகிய முருகப்பெருமானை வழிபட்டனர். கோயிலில் மாணிக்கமாலை

Koviloor Digital Library

தோரணம் கட்டினர். முருகன் கோயிலுக்குச் சேவலும் மயிலும் வளர்த்துவிட்டனர். முருகனுக்கு வெறியாட்டு விழா நடத்தினர். தத்தை கருவுற்றாள். பால் நிலாப் பெருங்கடலை ஈன்றது போலத் தத்தை ஆண்மகவு ஈன்றாள். வேட்டுவர் விழாக் கொண்டாடினர். கருமலை கருமேகத்தை ஏந்தியது போலத் திண்ணனை நாகன் ஏந்தி நின்றான். கருங்கதிரவன் போன்று திண் என்றிருந்தமையால் திண்ணன் எனப்பெயரிட்டனர்.

அரையில் மணம் பொருந்திய சந்தனக் கட்டையும், வேம்புக் கட்டையும் இழைத்துக் கட்டினர். மண்ணகத்துடியும் விண்ணகத் துந்துபியும் முழங்கின. தெய்வத்திற்குப் படைத்த பெருஞ்சோற்றை அனைவர்க்கும் வழங்கினர். புலி நகத்தைத் திண்ணனுக்கு நெற்றி யில் சுட்டியாக அணிந்தனர். பன்றிப் பல்லைத் தாலியாக மார்பில் அணிந்தனர். காலில் மணிச் சதங்கை அணிந்தனர். காசு கோத்து அரைஞாண் அணிந்தனர். தந்தத்தால் ஆன வேலி இட்ட இல்லத் தைத் திண்ணன் சுற்றி வந்தான். திண்ணனுக்கு முயல் குட்டி, பன்றிக் குட்டி, புலிக்குட்டி, நாய்க்குட்டி என்பன வேடிக்கை காட்டின.

அலர்பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுது குறத்திஊட்டிக் கொண்டுகண் துயிற்றிக் கங்குல்
புலரஊன் உணவு நல்கி புரிவிளை யாட்டின் விட்டுச்
சிலமுறை ஆண்டு செல்லச் சிலைபயில் பருவம் சேர்ந்தார். (27)

வில்வித்தை விழா

திண்ணன் வில்வித்தை விழா நாள் இதுஎனப் பறையறைந்து தெரிவிக்கப்பெற்றது. மலைநாட்டுத் தலைவர்கள் மணி, பொன், முத்து, தந்தம், மயில்பீலி, தேன், கிழங்கு முதலிய பல பரிசுப் பொருள்களைக் கொணர்ந்தனர். சிவன் இருக்கும் மேருமலை பாற்கடலில் நஞ்சுண்டாக்கியது. திண்ணன் கை வில் மலை ஊனை அமுதம் ஆக்கும். அந்த வில்லுக்குக் காப்புக் கட்டினர். இறைவன் காப்பில் தொடங்கும் செயல்கள் இனிது நிறைவுறக் காப்புக் கட்டும் வழக்கம் பண்டு இருந்தது. குற்றமற்ற ஆசிரியர் திண்ணனுக்கு வில்வித்தை கற்பித்தார். மங்கல வாழ்த்து முழங்கியது. திண்ணன் வில்வித்தையிற் சிறந்தவர் ஆயினர். வளர்பிறைபோல் வளர்ந்து பதினாறு வயதடைந்தார்.

வண்ணவெஞ் சிலையும் மற்றைப் படைகளும் மலரக் கற்றுக்
கண்அகல் சாயல் பொங்கக் கலைவளர் திங்க ளேபோல்
எண்ணிரண்டு ஆண்டின் செவ்வி எய்தினார் எல்லை இல்லாப்
புண்ணியம் தோன்றிமேல்மேல் வளர்வதன் பொலிவு போல்வார். (42)

Koviloor Digital Library

கன்னி வேட்டை

காட்டு விலங்குகள் தீங்கு தருதலின் அவற்றை வேட்டையாட வேடர் தலைவனை வேண்டினர். மூப்புக் காரணமாக வேட்டைக்குச் செல்ல இயலாத நாகன் தன்மகன் திண்ணனை வேடர் தலைவன் ஆக்கினான். திண்ணன் தலையில் கண்ணியும், கழுத்தில் மணிமகுடமும் சூட்டினர். தேவராட்டி தெய்வம் வாழ்த்தித் திண்ணனார்க்குத் தெய்வப் பிரசாதம் தந்தாள். திண்ணனைக் காக்கக் காட்டுத் தெய்வங்கட்குப் பலி இட்டனர். திண்ணன் தந்தையை வணங்கி வைகறையில் வேட்டைக்குச் சென்றான். காதில் சங்கால் ஆன தோடுகள் விளங்கின. முல்லை, குறிஞ்சி, வெட்சிப் பூக்களையும் மயிற்பீலியையும் அணிந்து கொண்டான். இடையில் சிவந்த வாரும் கல்லிலும் முள்ளிலும் நடக்க காலில் செருப்பும் அணிந்து கொண்டான். இடை வரும் விலங்குகளைத் தாக்கக் கையில் அம்புபோல ஆகுளி, பம்பை, கொம்பு முதலிய முழங்கின. கடவுட் பொறையாட்டி வாழ்த்த நாய்களும், வேடர்களும் சூழத் திண்ணன் வேட்டைக்குச் சென்றான்.

கோடுமுன்பு ஒலிக்கவும் குறுங்கண் ஆகுளிக்குலம்
மாடுசென்று இசைப்பவும் மருங்குபம்பை கொட்டவும்
சேடுகொண்டு கைவிளிச் சிறந்தஓசை செல்லவும்
காடுகொண்டு எழுந்தவேடு கைவளைந்து சென்றதே. (72)

காளத்தி தான் வாழ்ந்த கோகுலப் பொய்கை நீரைக் கலக்கியது போல வேடர்களும் நாய்களும் பன்றி, புலி, சிங்கம் முதலியன வாழும் கானகத்தைக் கலக்கினர். வலைகளைப் பரப்பினர். நாய்களை விட்டுக் காட்டு விலங்குகளைக் கலைந்தோடச் செய்து விரித்த வலையிற்பட ஆவன செய்தனர்.

வெஞ்சிலைக்கை வீரனாரும் வேடரோடு கூடிமுன்
மஞ்சுஅலைக்கும் மாமலைச் சரிப்புறத்து வந்தமா
அஞ்சுவித்து அடர்க்கும்நாய்கள் அட்டமாக விட்டுநீள்
செஞ்சரத்தி னோடுசூழல் செய்தகானுள் எய்தினார். (76)

மேற்காண் பாடல் விரைந்தோடிய வேடுவர் ஓட்டம் காட்டும் விரைவோசையில் அமைந்துள்ளது. ஆன்மாக்கள் மாயையில் மயங்கி ஆசைவலைப்பூட்டுப் பொறி புலப்பற்றால் துன்புறல்போல ஆகுளி பம்பை இசையில் மயங்கிய விலங்குகள் வலைகளிலும் பொறிகளிலும் அகப்பட்டுத் துன்புற்றன.

கல்லுக்குள் ஈரம்

வேட்டையாடும் வேடரின் வன்மையான மனத்தில் மென்மையான கழிவிரக்கம் இருந்தது. திண்ணனோடு சென்ற வேடுவர்கள்

Koviloor Digital Library

திண்ணனைப் போன்றே யானைக் கன்றுகளையும் சிறு விலங்குக் குட்டிகளையும் கருவுற்ற மான்களையும் கொன்றிலர். காட்டுப் பன்றி ஒன்று வலையறுத்து ஓடியது. அப்பன்றியைப் பின்பற்றி ஓடிய திண்ணன் அதை வீழ்த்தினான். திண்ணனை ஒட்டிய மலங்களின் வீழ்ச்சிக்கு அஃது அறிகுறியாகும். மாபெரும் பன்றியை வீழ்த்திய திண்ணன் காலில் நாணனும் காடனும் வீழ்ந்து வணங்கினர். தண்ணீர் இருக்கும் இடம் தேடியபோது காளத்தி மலையில் வழிந்தோடும் பொன் முகலியாறு கண்டனர். பொன்கொழித்து வரும் பொன்முகலியாற்று நீர் பருகினர். நாணன் காளத்தி மலையின் உச்சியிலிருக்கும் குடுமித் தேவராகிய சிவபெருமானைப் பற்றி உணர்த்தினான். காளத்தி மலையில் காலடி எடுத்து வைத்ததும் மெய்யுணர்வு திண்ணனைப் பற்றியது. நாணனுடன் திண்ணன் சென்று குடுமித் தேவரைக் கண்டார்.

திண்ணன் வழிபாடு

குடுமித் தேவர் தலையில் பச்சிலைப்பூ முதலியன இருந்தன. குடுமித் தேவர் இருந்த இடத்தைச் சுத்தம் செய்தான். நாணன் சிவாசாரியர் பூசை செய்த மலர்கள் என்பதைத் திண்ணனார்க்கு உணர்த்தினான். திண்ணன் பெருமான் விலங்குகளிடையே தனித் திருத்தலை உணர்ந்து வருந்தினான். காடன் சுட்டு வைத்திருந்த இறைச்சியில் சுவை பார்த்துச் சுவையான இறைச்சியைத் தேக்கிலையிலும், சூடும் மலரைத் தலையிலும், மஞ்சனமாட்டும் பொன்முகலியாற்று நீரை வாயிலும் வைத்துக் கொண்டான். திண்ணனார் குடுமித் தேவரை வாயில் உள்ள மஞ்சன நீரால் நீராட்டித் தலையில் சூடிய பூவால் அணிசெய்து தேக்கிலையில் வைத்த ஊனைப் படைத்தார். நீளிருள் முழுதும் பெருமானைக் காத்து நின்றார். ஐந்து நாட்களும் பூசை செய்தார். பூசை செய்யும் சிவகோசரியார் இறைச்சியும் பூவும் கண்டு இவ்வாறு செய்தவர் யார் என்று மனத்துன்பம் அடைந்தார். அன்று பெருமான் சிவகோசரியார் கனவில் பூசை செய்த திண்ணன் வடிவு எம் அன்பு வடிவம், அவன் அறிவு நமையறியும் அறிவு. அவன் செயல் எமக்கினியது. அவன் நிலை நாளை வந்தறி என்று திருவாய் மலர்ந்தருளினார். மறுநாள் சிவகோசரியார் மறைந்து நின்று திண்ணன் செய்யும் பூசையைக் காண நின்றார். திண்ணனார் குடுமித்தேவர் கோயிலை அடைந்து குடுமித்தேவர் கண்ணில் குருதி கொட்ட மனங்குலைந்து உடல்நடுங்கி ஊன் சிந்த பதைத்து வீழ்ந்தார். விலங்கோ வேறுயாரோ இந்தத் தீமை செய்ததார் என்று வெந்துயர் உற்றார். புண்ணுக்கரிய பச்சிலை தேடி அலைந்து பச்சிலைச் சாற்றைக் கண்ணிற் பிழிந்தார். குருதி வடிவது நிற்கவில்லை.

Koviloor Digital Library

உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி நினைவிற்கு வந்தது. தம் கண்ணை அம்பால் பெயர்த்துக் குருதி வடியும் கண்ணில் அப்பினார். குருதி வடிவது நின்றது. மகிழ்வால் குதித்தாடினார். மறுகண்ணிலும் குருதி வடிந்தது. மருந்து கண்டேன். மற்றிதனுக் கஞ்சேன் என்று மனத்துள் எண்ணித் திண்ணனார் தம் செருப்புக் காலால் குடுமித் தேவர்தன் கண்ணின் ஓரத்தில் மிதித்துக் கொண்டு தன் இடக்கண்ணை அம்பால் பெயர்க்க முயலும் போது தம் கையால் திண்ணன் கைகள் பற்றி நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என்று மும்முறை கூறி வலப்பக்கத்து நிற்பாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பேறுஇனிஇதன்மேல் உண்டோ? பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண்டு அஞ்சித் தம்கண் இடந்துஅப்ப உதவும்கையை
ஏறுஉயர்த் தவர்தம் கையால் பிடித்துக்கொண்டு என்வலத்தில்
மாறுஇலாய் நிற்கஎன்று மன்னுபேர் அருள்பு ரிந்தார். (185)

பார்த்த சிவகோசரியாரும் சிவப்பேரின்பம் எய்தினார். வானவர் பூமழை பொழிந்தனர்.

மெய்ப்பொருள்

விலங்கைக் கொன்று அதன் தோலை உடுக்கையாகவும், இருக்கையாகவும் பயன்படுத்திய வேட்டுவரிடையே தன்னலம் கருதாது இறைவன் குருதி வடியும் கண்ணில் தன் கண்ணப்பிய திண்ணனாகிய அருளாளன் தோன்றினான். பொன்கொழித்து வரும் பொன்முகலியாற்று நீர் அருந்தியதும் குடுமித்தேவர் அருளால் திண்ணன் உள்ளம் பொன் மயமாகியது.

ஆகுளி பம்பை போன்றவற்றின் இசையில் மயங்கிய விலங்குகள் வலையிலும் கண்ணியிலும் பட்டுத் துன்புறும். அதுபோல ஆன்மாக்கள் உலகமாயையில் ஈடுபட்டு இருவினை வலையிலும் மும்மலக் கண்ணியிலும் பட்டுத் துன்புறுகின்றன. இருவினையாவன நல்வினை, தீவினை என்பன. நல்வினை பொன்விலங்கு. தீவினை இரும்பு விலங்கு. இருவினையும் விலங்குகளே. மும்மலமாவன ஆணவம், கன்மம், மாயை என்பன. தன்னைத் தானே பெரிதாக எண்ணும் தன்மை ஆணவம். அது பிறர் நலம் கருதாதது. கன்மம் அறிந்தும் அறியாமலும் செய்யும் வினைகள். மாயை உயர்ந்தோர் உண்டு என்பதை இல்லை என்று கூறும் பண்பும், உண்மையைப் பொய் என்றும் பொய்யை உண்மை என்றும் கருதும் பண்புமாகும். இது எல்லாச் சமயங்கட்கும் பொது உண்மை. எனவே ந.சி. கந்தையா பிள்ளை, இரா.பி. சேதுப்பிள்ளை, கா.சுப்பிரமணிய

Koviloor Digital Library

பிள்ளை போன்றோர் சைவ சமயம் உலகப் பொதுச் சமயம் என்றனர். ஆறு நாள் பூசை நெறியின்பின் திண்ணன் இறையின்பம் பெறுவான். ஆன்மாக்கள் இறையருளால் ஆறு ஆதாரம் கடந்து ஏழாம் ஆதாரமாகிய குண்டலினி ஆற்றலால் இறவாப் பெருஞானமும் இறவாப் பெருவாழ்வும் அடைகின்றன. திண்ணன் தன் கண்களை இடந்தப்பும் போதுதான் வேட்டையாடப் பெறும் விலங்குகளின் துன்ப நிலை உணர்ந்து சைவ நெறியாளனாகும் வாய்ப்புக் கிடைக்கிறது. பிறவற்றின் துன்பம் உணரும் மனப்பாங்கே சைவம்.

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பது பொய்யாமொழிப் புலவர் (த.வா.கோவை) வாக்கு. சிவ வழிபாட்டால் சிறப்புப் பெற்றவர் திண்ணனார். பெயருக்கேற்ப பக்தியில் திண்மை பெற்று விளங்கினார். கண் பெயர்த்துச் சிவன் கண்ணில் அப்பி இறைவன் வலப்பக்கம் இடம்பெற்ற கண்ணப்பரை அடியார்கள் புகழ்ந்து பாடினர்.

அப்பனில்லாத குடுமித்தேவர் திண்ணனை அப்பா என அழைத்தல்

அம்மையப்பனில்லாத பெருமானாகிய அம்மையப்பர் காரைக்காலில் தோன்றிய நகரத்தார் குல நங்கையாகிய புனிதவதியை அம்மையே என்றழைத்தார். சிறந்த உறுப்பாகிய கண்ணைக் கொடுக்க முன்வந்த திண்ணனாரைக் கண்ணப்ப என்று அன்பொடு அழைத்தார். தந்தை கண்போன்ற ஞானக்கல்வி வழங்குபவர். கண்ணை வழங்கிய திண்ணனார்க்குப் பெருமான் சிவ ஞானம் வழங்கினார். காரைக்கால் அம்மையாரை அம்மை என்றும் திண்ணனாரைக் கண் அப்ப (கண் போன்ற அப்பா) என்றும் அழைத்தார்.

Koviloor Digital Library

20. கண்ணப்பரின் அன்பு நெறி

திண்ணனார் கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார். கூடும் அன்பினில் கும்பிடும் கொள்கை உடையவர். எந்த உறுப்பையும் கொடுக்க முன்வராத உலகில் திண்ணனார் சிறந்த கண்ணைக் கொடுத்தார். கண் தானத்திற்கு வழிகாட்டியவர் திண்ணனார். அன்பில்லார் எல்லாம் பொருளாலும் தமக்கே உரியராய்த் தன்னலம் மிக்கு விளங்குபவர். ஆனால் அன்புடைய திண்ணனார் போன்றோர் தம்மையே பிறர்க்கு நல்கும் தகவுடையோராக விளங்கினர். தம்மையே பெருமானுக்கு உடைமையாக்கிய திண்ணனாரை மாணிக்க வாசகர் கோத்தும்பிப் பதிகத்தில் புகழ்வர். தும்பிகளில் கோவின் அருளால் கோவாக விளங்கும் தும்பி பிறர்க்குதவும் தேனைப் பல மலர்களிலிருந்தும் எடுத்துத் தொகுக்கும். அதுபோலத் திண்ணனார் காடெங்கும் தேடி அலைந்து பன்றி, மான் முதலிய வற்றின் ஊனைச் சுட்டுச் சுவை பார்த்துப் பெருமானுக்கு ஊட்டினார். பல இடங்களில் கிடைத்த அழகிய மலர்களால் ஆன மாலையைப் பெருமானுக்குச் சூட்டினார். பொன் கொழித்து வரும் பொன்முகலி யாற்று நீரால் பெருமானை அன்புடன் மஞ்சன நீராட்டினார்.

மாணிக்கவாசகப் பெருமான் பாண்டியன் குதிரை வாங்கத் தந்த பொருள் கொண்டு திருப்பெருந்துறையில் பெருமானுக்குக் கோயில் கட்டித் திருப்பணி செய்தார். ஆனால் திண்ணனாரோ தம் கண்களையே பெருமானுக்குக் கொடுத்தார். எனவே தம் தொண்டு நெறியை விடத் தம் கண்களைக் கொடுத்த திண்ணனாரின் அன்பு நெறி சிறந்ததெனக் கண்ணப்பரைத் தம் கோத்தும்பிப் பதிகத்தில் மாணிக்கவாசகர் பின்வருமாறு பாராட்டினர்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணை
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி

(திருவாசகக் கோத்தும்பிப் பதிகம்)

கண்ணப்பர் திருஞான சம்பந்தரைப் போலப் பதினாறு வயதில் சிவப்பேரின்பம் பெற்றார். கண்ணப்பர் அன்புநெறித் தொண்டால் தாம் மட்டுமே சிவப் பேரின்பம் அடைந்தார். ஆனால் திருஞான சம்பந்தர் அன்புநெறியாலும் தொண்டு நெறியாலும் சம்பந்தப்

Koviloor Digital Library

பெருமான் திருமணம் காண வந்த அனைவரும் சிவப்பேரின்பம் எய்தினர்.

கூடும் அன்பு

இறைவனைத் தொழுதால் அன்பு கூடும். அன்புநெறி ஒன்றுதான் எல்லோரும் ஒன்று கூடுதற்குரிய நெறியாகும். சிவபெருமானைக் காணும் முன்பே திண்ணனார்க்கு அன்பு பெருகத் தொடங்கிற்று. ஆறுநாளில் அன்பு நெறியால் இறைவன் வலப் பக்கத்தில் நிலைத்து நிற்கும் பேறு பெற்றார். உமையம்மைக்குத் தன் இடப்பாகம் கொடுத்த சிவபெருமான் கண்கொடுத்த கண்ணப் பர்க்குத் தன் வலப்பக்கம் கொடுத்தார். அன்பு நெறி ஒன்றே உலகில் எல்லோரும் கூடும் நெறியாகும். அன்பு எவ்விதத் துன்பமும் இன்றி எவர்க்கும் கொடுக்கும் தன்மை உடையது. அன்பு என்ற சொல்லில் அ என்பது உயிர் எழுத்து. ன் என்பது மெய்யெழுத்து. பு என்பது உயிர்மெய் எழுத்து. உலகில் உயிர்மெய் அமைதி பெற்று வாழ அன்பே மிக உயர்ந்த நெறியாகும். அ என்பது தமிழில் முதல் எழுத்து. ன் என்பது தமிழின் கடை எழுத்து. பு என்பது ஈரிதழ்களும் ஒன்றாக இணையும்போது பிறக்கும் எழுத்து. உலகில் கடைநிலையில் உள்ள சீவான்மாவும் முதல் நிலையில் உள்ள பரமான்மாவும் ஒன்றுகூட அன்பு நெறியே காரணமாகும்.

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (திருமந்திரம்)

பட்டினத்தார் பாராட்டு

பட்டினத்தார் அன்பு நெறி கொண்ட கண்ணப்பரையும், துறவு நெறி கொண்ட திருநீலகண்டரையும் பக்தி நெறி கொண்ட சிறுத்தொண்டரையும் பாராட்டுவர். பட்டினத்தார் கண்ணையே தர முன்வந்த கண்ணப்பரைப் பாராட்டுவர். மாது சொன்ன சூளால் இளமைதுறந்த திருநீலகண்டரின் துறவினையும் பக்தி நெறியாளராகிய சிறுத்தொண்டரையும் பாராட்டுவர். பட்டினத்தார் தன் மகன் மருதீசன் வறட்டி வாங்கி வந்தவுடன் சினந்தார். கெட்டி மகனாக இருக்க வேண்டிய செட்டி மகன் மட்டி மகனாக எருமுட்டை வாங்கி வந்தது பற்றி வருந்தினார். எருவை உடைத்தார். மாணிக்கக் கற்கள் எருவினுள் இருந்து சிதறின. காதறுந்த ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே என்று மகன் எழுதி வைத்த ஓலை பட்டினத்தார் ஞானக்

Koviloor Digital Library

கண்ணைத் திறந்தது. மகவாசை துறக்க இயலாத பட்டினத்தார் மகவரிந்து பெருமானுக்குப் படைக்க முன்வந்து மகவாசை துறந்த சிறுத்தொண்டரை முதற்கண் வைத்துப் பாராட்டுவர்.

தீண்டுவீர் ஆயின் எம்மைத் திருநீலகண்டம் என்று மனைவி சொன்ன சூளால் எண்பதாண்டுகள் தன் மனைவியைத் தீண்டாது இளமை கழிந்த திருநீல கண்டரை அடுத்துப் பாராட்டுவர். சிவபெருமானுக்குச் சிறந்த உறுப்பாகிய தன் கண்ணைக் கொடுத்த கண்ணப்பரைப் பாராட்டுவர். கண்ணப்பர் அன்பு நெறி சிறந்த தாதலின் அதன் சிறப்புக் கருதி கண்ணப்பரை இறுதியில் குறிப் பிடுவர்.

வாளால் மகவரிந்(து) ஊட்டவல்லேன் அல்லேன் மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்லேன் அல்லேன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லேன் நானினிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே (பட்டினத்தார்)

கங்கை வேடனும் காளத்தி வேடனும்

இருவரும் கைம்மாறு கருதாது அன்பு நெறித் தொண்டில் ஈடுபட்டனர். திண்ணன் பெருமானைப் பிரிந்திருக்க இயலாது துன்புறுவான். குகனும் இராமனைப் பிரிய மனமில்லாமல் இருப்பான். நாட்டு அரசனாகிய இராமன் காட்டு அரசனாகிய தன்னைத் தம்பியாக ஏற்றுக் கொண்ட உள்ளத்தழகிலும், இராமன் உடல் அழகிலும் ஈடுபட்ட குகன் இராமனைப் பாராட்டுகிறான்.

இங்ஙனம் பார்த்த **கண்ணை ஈர்கிலாக் கள்வனேன்** யான் என்று இராமன் உடல் அழகிலும் உள்ளத்தின் அருளழகிலும் ஈடுபட்ட குகன் கூறுவான். திண்ணன் வேட்டை யாடிய பன்றி மானிறைச்சியைச் சுவைத்துச் சிவபெருமானுக்குப் படைத்தான். குகனும் இராமனுக்குத் தேனும் மீனும் திருத்திக் கொணர்ந்தான். இராமன் தவ உள்ளம் குகனுக்குத் தெரியாது. தெரிந்தால் தேன் மட்டும் கொணர்ந்திருப்பான். அரசகுலத்தவர் அசைவ உணவுண்ணும் வீரர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

எனவே அரசனாகிய இராமனுக்கு மீன் கொணர்ந்தான். தேன் மலை உச்சியில் கிடைப்பது. மீன் கடலின் ஆழத்தில் கிடைப்பது. குகன் இராமன்பால் கொண்ட நட்பின் ஆழத்தையும் உயரத்தையும் முறையே மீனும் தேனும் காட்டின.

மறுநாள் கங்கையைக் கடக்கும் படகுடன் வருமாறு குகனிடம் இராமன் கூறும்போது குகன் இராமனைப் பிரிய மனமின்றிப் பிரிந்தால் தன் கண்களைப் பறித்துக் கொள்ளும் குறிப்பால் இங்ஙனம் பார்த்த

Koviloor Digital Library

கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான் என்று இராமனிடம் கூறினான். காளத்திநாதர் கண்களில் குருதி கண்டவுடன் தன் கண்ணைப் பறித்துச் சிவன் கண்ணில் அப்பினான். இராமனைக் குகன் தன் கண் போன்றவனாகக் கருதினான். காளத்தி நாதரைத் திண்ணன் கண்ணாகக் கருதினான். குகன் இராமனுக்காகத் தன் உற்றார் உறவினரைக் கூடப் பிரியத் தயங்கவில்லை. திண்ணன் பெருமானுக்காகத் தன் தாய் தந்தை சுற்றம் அனைவரையும் பிரிந்தான். இறைவனையே தன் தாய் தந்தை சுற்றம் எனக் கருதினான்.

மெய்ப்பொருள்

காடன் உடற்பசி போக்க வேட்டைக்கு வழி கூறினான். நாணன் திண்ணன் உள்ளத்திற்கு ஞான இன்பமளிக்கும் குடுமித்தேவர் திருக்காட்சிக்கு வழி வகுத்தான். காடன் தீமைக்கு நாணாத அஞ்ஞான வடிவம். எனவே விலங்கு உணவு உண்ணும் விலங்குணர்விற்கு வழி கூறினான். நாணன் தீமைக்கு நாணும் மெய்ஞ்ஞான வடிவினன். எனவே குடுமித்தேவைக் கும்பிடும் ஞானவழியைக் காட்டினான். மேருமலையாகிய வில் பாற்கடல் கடைந்து பெருமானுக்கு நஞ்சு கொடுத்தது. திண்ணனார் கைவில்லாகிய மலை பெருமானுக்கு ஊன் அமுதம் கொடுத்தது. கண்ணப்பர் போலவே அன்புடைய கலயனாரும் கழுத்தில் கயிற்றைக் கட்டிச் சாய்ந்த சிவலிங்கத்தை நேராகச் செய்தார். தன் கழுத்து நெரிந்து தன்உயிர்க்கு அஞ்சாக் கலயனார் வரலாறு தன் கண்கள் சிவனார்க்கு ஈந்த கண்ணப்பர் வரலாற்றின் பின் வைக்கப் பெற்றது. திண்ணன் பசுஞானமும் பாச ஞானமும் அற்றுப் பதிஞானம் பெற்றமையால்' இடப்பக்கம் அம்மையைக் கொண்ட சிவபெருமான் வலப்பக்கத்தில் திண்ணனைக் கண்ணப்பனாக்கி ஏற்றுக் கொண்டார்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும். (குறள்:71)

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு. (குறள்: 72)

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. (குறள்: 76)

அன்பின் முதிர்வால் விளைவது பக்தி.

அருள்மிகு ஞானப்பூங்கோதை உடனுறை காளத்திநாதர் திருக்கோயில்,
காளத்தி அஞ்சல் - 517 644. சித்தூர் மாவட்டம்,
ஆந்திர மாநிலம்.

Koviloor Digital Library

21. குங்குலியக் கலயர்

பிறந்த ஊர் : திருக்கடவூர்

குலம் : அந்தணர்

குருபூசை மாதம் : ஆவணி

நட்சத்திரம் : மூலம்

காலம் : அப்பர், சம்பந்தர் காலத்து நாயன்மார் (கி.பி. 600 – 660)

'கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்' (திரு. தொகை 2:2)

கலயனார் அவதரித்த திருக்கடவூர்ச் சிறப்பு

பொன்கொழிக்கும் பொன்னியாகிய காவிரி பாயும் சோழநாட்டுத் திருப்பதிகளுள் திருக்கடவூரும் ஒன்றாகும். அடியார் மார்க்கண்டன் உயிரைக் கவர வந்த கூற்றுவனைக் காலால் உதைத்த திருத்தலமாகும். திருக்கடவூரில் பெருமான் திருப்பெயர் அமிர்த கடசேுவரர். வழிபாடு, வளமுள்ள மரணமிலாத் தவ வாணாள் (வாழ்நாள்) தருவதாகும். வயல்களெல்லாம் செந்நெல் நிறைந்திருக் கும். இல்லங்களில் நெல்கொட்டி வைத்ததுபோக எஞ்சியதை வயலிலேயே குவித்து வைத்திருப்பர். வயல் வரப்புகளில் செந்நெல் தந்த முத்துகள் நிறைந்திருக்கும். இம்மை வாழ்வுக்குரிய வளம்பெற்ற திருக்கடவூர் மக்கள் மறுமை இன்பம் பெறுதற்கு இறைவனார்க்குப் பெருவேள்விகள் செய்யும் வேள்விச் சாலைகள் நிறைந்துள்ளன. நீர் தாங்கும் அணை எல்லாம் கழுநீர் மலர்கள் நிறைந்துள்ளன. கமுகு மரங்கள் மேகங்களைத் தழுவிக்கொண்டிருக்கும். திருக்கடவூரைச் சுற்றிலும் உள்ளோர் திருக்கடவூரின் சீர்களைப் போற்றுவர். ஓதல், ஓதுவித்தல், கற்றல், கற்பித்தல், ஈதல், ஏற்றல் இப்படிப் பல்வேறு பணிகளில் முழுமனத்தோடு ஈடுபட்டிருக்கின்றனர். தடாகக் கயல்மீன்கள் அங்கும் இங்குமாகப் பாய்ந்து தாமரைப் பூக்களும் பால்மணம் வீசி அசைந்து ஆடிக்கொண்டிருக்கும்.

பெயர்க்காரணம்

இத்தகைய வளமைமிக்க திருக்கடவூரிலே குங்குலியக் கலய நாயனார் என்று ஒருவர் இருந்தார். அவர் மார்பில் முந்நூல் அணிந்த ஓர் அந்தணர். செஞ்சடைச் சிவபெருமானின் திருவடிகளை நாள்தோறும் வணங்குபவர். சிந்தையிலே சிவனையே வைத்து,

Koviloor Digital Library

நெஞ்சு உருகி அன்பு பெருகி நிற்கும் சிவனடியார் நல்லொழுக்கம் நிறைந்த உத்தமர், மார்க்கண்டேய முனிவருக்காக எமனைத் தமது திருக்காலால் உதைத்தருளிய அமிர்தகடேசராகிய சிவபிரானுக்குத் திருக்கோயிலிலே நாள்தோறும் நறுமணம் மிக்க குங்குலியத் தூபம் இடுவதுதான் அவருடைய திருத்தொண்டு ஆகும். ஆதலால் அவரைக் குங்குலியக் கலயர் என்றே எல்லோரும் அழைத்து வந்தனர்.

கங்கைநீர் கலிக்கும் சென்னிக் கண்ணுதல் எம்பி ராற்குப்
பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுஉறப் போற்றிச் செல்ல
அங்குஅவர் அருளி னாலே வறுமைவந்து அடைந்த பின்னும்
தங்கள்நா யகர்க்குத் தாம்முன் செய்பணி தவாமை உய்த்தார். (7)

கலயனாருக்குச் சோதனை

இப்படியான திருப்பணியில் கலயனார் தன் வாழ்க்கையை வாழ்ந்துவர ஆண்டவனின் திருவருளால் (சோதனையால்) அவரிடம் வறுமை குடியேறியது. ஆனாலும் செல்வம் இருந்த காலத்தில் எம்பெருமான் சிவபெருமானுக்குக் குங்குலியத் தூபமிடும் திருத் தொண்டை எப்படிச் செய்து வந்தாரோ அப்படியேதான் வறுமையுற்ற காலத்திலும் செய்து வருகிறார். அவருக்கு வறுமைத் துன்பம் மேலும் மேலும் அதிகரித்தது. அதனால் அவர் தம்முடைய சொத்து, கைப்பொருள் ஆகிய எல்லாவற்றையும் இழந்தார். உண்ண ஒரு கவள உணவின்றி உடுக்க உடையுமின்றித் தவியாய்த் தவித்தார். அவர் குடும்பம் மனைவி, மக்களோடும் இரண்டு நாள் முழுப் பட்டினியாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இக்கொடுமை தாளமுடியாது அவரது மனைவி வயிற்றுக் கொடுமையைப் (பசியை)ப் போக்க மங்கலம் பொருந்திய தன் தாலியைக் கழற்றிக் கொடுத்து "தாலியை விற்று நெல்வாங்கி வாரும்" என்றார். தாலியை எடுத்துக் கொண்டு கலயனார் கடைத்தெரு வழியாகச் சென்றார்.

யாதுஒன்றும் இல்லை ஆகி இருபகல் உணவு மாறிப்
பேதுஉறு மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தம் கணவனார் கலய னார்கைக்
கோதுஇல்மங் கலநூல் தாலி கொடுத்து 'நெல்கொள்ளும்' என்றார் (9)

வணிகன் எதிர்ப்படுதல்

குங்குலிய நாயனார் கடைவீதி வழியாகச் செல்லும் தருணத்தில் வணிகன் ஒருவன் இறை பூசைக்கேற்ற நறுமணப் பொருள் (சாம்பிராணி போன்ற) பொதியொன்றைச் சுமந்துவர அதைப்பார்த்த கலயனார் "இது என்ன பொதி?" என்று வினவ அதற்கு அந்த வணிகன் குங்குலியப் பொதி என்று சொல்ல கலயனார் அகம்

Koviloor Digital Library

மகிழ்ந்து செஞ்சடைப் பெருமான் பூசைக்கேற்ற நறுமணம்' பொருந்திய குங்குலியம் இது என்றார். நான் பெறும் பேற்றை இன்றே பெற்றேன். என்று சொல்லி, அவனிடம் நான் பொன் தருகிறேன் நீர் அந்தக் குங்குலியப் பொதியை எனக்குக் கொடும்'' என்றார்.

அப்பொழுது அதனைக் கொண்டு நெல்கொள்வான் அவரும் போக
ஒப்பில்குங் குலியம் கொண்டுஓர் வணிகனும் எதிர்வந் துற்றான்
'இப்பொதி என்கொல்?' என்றார்க்கு உள்ளவாறு இயம்பக் கேட்டு
முப்புரி வெண்ணூல் மார்பர் முகம்மலர்ந்து இதனைச் சொன்னார்.(10)

இப்படிப் பெற்றுக்கொண்ட குங்குலியப் பொதியைச் சுமந்து மகிழ்ச்சியோடு வீரட்டானத் திருக்கோவில் சென்று எம்பெருமானுடைய வழிபாட்டிற்குரிய பொருள்கள் வைத்திருக்கும் பண்டக சாலையில் எல்லாக் குங்குலியத்தையும் சேமித்து வைத்தார். இந்த மகிழ்ச்சிக் குரிய வெள்ளத்தில் திளைத்த கலயனார் தம் மனைவி மக்களின் பசி தம் வறுமைத் துன்பம் எல்லாவற்றையும் அவர் மறந்து சிவத் தொண்டில் பேரன்பு பொங்கச் சிவபிரானின் திருவடிகளைப் போற்றித் தொழுதுகொண்டு குங்குலியப் பணிபுரிந்து சிவசிந்தை யுடன் சிவனாரின் திருக்கோயிலிலேயே தங்கியிருந்தார்.

கலயனார் வீட்டில் நடந்த திருப்பம்

கலயனார் திருக்கோயிலில் தங்கியிருக்க வீட்டில் மனைவி மக்கள் பசியாற நெல் வாங்கி வருவார் என எதிர்பார்த்துக் காலம்கடந்து பசிக்களைப்பால் அயர்ந்து உறங்கிவிட்டனர். அதுசமயம் இறைவன் திருவருளால் குபேரன் தன் பெருஞ்செல்வத்தைப் பூமியில் கொண்டு வந்து நிறைத்து, கலயனார் வீடு முழுவதும் பொற்குவியலும் நெற்குவியலும் பிற வளங்களும் ஏராளமான செல்வத்தை நிரப்பி வைத்தான். கலயனாரின் மனைவியின் கனவில் எம்பெருமான் தோன்றி, வீட்டில் செல்வம் நிறைந்துள்ளது என்பதை வெளிப்படுத் தினார். உடனே அந்த அம்மணி எழுந்து இல்லத்தை நோக்க கனவில் கண்ட அனைத்துச் செல்வங்களும் தம் இல்லத்தில் குவிந்து கிடப்பதைக் கண்டார். மனிதர்களே! சற்றுச் சிந்தியுங்கள் கண்ணபிரான் கீதையிலே சொன்னதைப்போல் குங்குலியக் கலயனார் கடமையைச் செய்கிறார் பலனை எதிர்பார்க்கவில்லை. அதாவது கொண்ட கடமையால் ஆழ்ந்த அன்பும் பக்தியும் நிலைத்ததால் எதிர்பாராத திருப்பம் தன் குடும்பத்தில் நிகழ்கிறது. தன் குடும்பத்தாருக்கும் நன்மை பயக்கிறது. ஒருவன் செய்யும் நல்வினை அவனைச் சார்ந்தவர்களுக்கும் இன்பத்தைத் தருகிறது. சிவபெரு மானின் திருவருளினால்தான் பொன்னும் நெல்லும் அரிசியும்

Koviloor Digital Library

நிறைந்திருக்கிறது என்பதை உணர்ந்த கலயனார் மனைவி இருகரம் கூப்பி இறைவனை வணங்கித் துதித்து, தம் கணவருக்கு உணவு சமைப்பதற்காகச் சமையலறைக்குச் சென்றார்.

கலயனாரின் கடமை உணர்வு

குங்குலியக் கலயனாரோ இறைவனின் திருக்கோயிலிலே திருத்தொண்டு செய்து வருகிறார். மேலும் சிந்தையெல்லாம் சிவமயமாக நெகிழும் அன்புடனே அவர் வீற்றிருக்கிறார். காலனைக் காலால் உதைத்த காலனார் அக்கலயனாருக்குத் தம் திருவருளை உணர்த்த விரும்பினார். அதனால் கலயனார் அறியும்படியாக ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. ''கலயா! நீ மிகவும் பசித்திருக்கிறாய்! உன்னுடைய வீட்டுக்குச் சென்று பாலுடன் கலந்த இனிய சோற்றை உண்டு, பசித்துன்பத்தை ஒழிப்பாயாக!'' என்று இறைவனே, அசரீரி வாக்கால் உணர்த்தினார்.

அந்த அருள்வாக்கைக் கலயனார் கேட்டார். இறைவனின் திருவருட் கட்டளையை மறுத்து வீட்டுக்குப் போகாமல் கோயிலிலேயே தங்கியிருக்க அஞ்சினார்.

அதனால் அவர்தம் தலைமீது இருகை வைத்துக் கூப்பிச் கும்பிட்ட படியே சங்கரனாரின் கோவிலை விட்டுப் புறப்பட்டு மாடவீதியருகிலுள்ள தன் மனையை அடைந்தார்.

இல்லத்தில் சென்று புக்கார் இருநிதிக் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திருமனை யாரை நோக்கி
வில்ஒத்த நுதலாய்! இந்த விளைவுஎலாம் என்கொல்? என்ன
அல்ஒத்த கண்டன் எம்மான் அருள்தர வந்தது என்றார். (19)

வீட்டினுள் புகுந்தார். அங்கே பெருநிதிக் குவியல் இருப்பதைக் கண்ட கலயனார் வியப்புற்று மகாலட்சுமி போன்ற மனையாளை நோக்கி இந்தச் செல்வங்களெல்லாம் எவ்வாறு உண்டாயின என வினவ, ''திருநீலகண்டரான சிவபெருமான் திருவருட் செல்வம் இவையெல்லாம்'' என்று கலயனாரின் கட்டிளம் மனைவி சொல்ல, குவிந்திருக்கும் பெருஞ்செல்வத்தின் வளமைச் சிறப்பையெல்லாம் கலயனார் பார்த்துப் பார்த்து என்னையும் ஆட்கொள்ள எந்தை எம்பெருமான் திருவருள் இருந்த வண்ணம்தான் என்ன என்று வியந்து போற்றி இறைவனைக் கைகூப்பித் தொழுதார்.

கலயனார் மனைவி தம் கணவரை மற்ற சிவ அடியார்களுடன் இருத்தி விதிப்படி தூபதீபம் ஏற்றிப் பூசித்து இனிமையான அன்னம்

Koviloor Digital Library

பரிமாறி அவர்களுக்குத் திருவமுது செய்வித்தார். அதை அருந்தி அந்தண வேதியரான கலயனார் அளவில்லாத இன்பத்தில் ஆழ்ந்தார் சிவபிரானின் திருவருளால் உலகில் நிறைந்த செல்வத்தை இறைவன் தொண்டின்மூலம் குங்குலியக் கலனயனார் பெற முடிந்தது. நல்ல அன்னம், செழுமையான காய்கறிகள், தயிர், நெய், பால் முதலான வற்றோடு மட்டுமன்றிப் பேரன்போடும் சிவனடியார்களுக்கு விருந் திட்டு உதவிபுரிந்து குணத்தில் மேம்பட்டு குங்குலியக் கலயனார் வழக்கம்போல் தம் திருப்பணியைக் குறைவறச் செய்துவந்தார்.

சேனையும் ஆனை பூண்ட திரளும்எய்த்து எழாமை நோக்கி
'யானும்இவ் விளைப்புற்று எய்க்கும் இதுபெற வேண்டும்' என்று
தேன்அலர் கொன்றை யார்தம் திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்தல் உற்றார். (27)

நண்ணிய ஒருமை அன்பின் நார்உறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க
ஒண்ணுமோ? கலய னார்தம் ஒருப்பாடு கண்ட போதே
அண்ணலார் நேரே நின்றார்; அமரரும் விசும்பில் ஆர்த்தார். (28)

இப்படியாக வாழ்ந்துவரும் கலயனார் திருப்பனந்தாள் என்னும் ஊரில் ஒரு பெண்ணின் பூசையை முன்னிட்டு சிவபெருமான் தம் திருமேனியைச் சிறிது சாய்த்ததால் சிவலிங்கத் திருவுருவம் சிறிது சாய்ந்திருந்தது.

சோழ மன்னன் அந்தச் சாய்வைப் போக்கி இறைவனை வழிபட வேண்டுமென விரும்பினான். அதனால் தன் படைபலத்தை வைத்து யானைகளையும் சேனைகளையும் பூட்டிச் சிவலிங்கத்தை இழுத்து நிமிர்த்த முயற்சி செய்தார். ஆனால் முடியவில்லை. மன்னன் கவலையோடு இரவும் பகலும் இருக்க இச்செய்தி கலயனாருக்குத் தெரியவர மன்னன்மீது விருப்பமுற்று சடையப்பரைத் தரிசிக்கவும் விரும்பித் திருக்கடவூர் பெருமானை வணங்கிவிட்டு முத்தி வளர்க்கும் அந்தணர் வாழும் திருப்பனந்தாளை வந்தடைந்தார். வந்தபின்பு சிவலிங்கத்தை நிமிர்த்த முயலும் இத்திருப்பணியில் நானும் ஈடுபட்டு யானை சேனைகள்போல் நானும் இளைத்து எய்க்கும் பேறு பெறவேண்டும் என்று கலயனார் தீர்மானித்தார். பிறகு சிவபெருமானின் திருமேனியில் மலர்களால் ஆன வலிமையான கயிற்றைத் தம் கழுத்தில் கட்டிக்கொண்டு கலயனார் இழுத்தார். இறைவனோடு ஒன்றிய அவரது அன்புக் கயிற்றுக்கும் சிவலிங்கம்

Koviloor Digital Library

அசையாது நிற்குமோ? கலயனாரின் மனத்தில் எழுந்த அன்பின் ஒருமைப்பாட்டைக் கண்ட திருப்பனந்தாள் இறைவன் தம் சாய்வு நீங்கி நிமிர்ந்தார். சிவலிங்கம் நிமிர்ந்து விட்டது! அதைக்கண்ட தேவர்கள் மகிழ்ந்து துதித்து ஆரவாரத்துடன் மலர்மாரி பொழிந்தனர். வாடி வறண்ட கானகம் மழை பொழியப்பெற்றுக் களிப்பதுபோல் சேனைகளும் யானைகளும் மகிழ்ச்சியடைந்தன. சோழ மன்னன் கைகூப்பிக் கும்பிட்டு குங்குலியக் கலயனாரின் திருவடிகளில் தலைவைத்து வணங்கி, "நாயனாரே சிவலிங்கத்தை நேராக நிமிர வைத்து எம்பெருமானாகிய சடையப்பரின் செந்நிலையை நான் தரிசிக்கும்படிச் செய்தீர்! திருமாலும் அறியாத எம்பெருமானின் திருவடி மலர்களை நேரில் காணவல்லவர்கள் சிவனடியார்களே யன்றி வேறு யார்தான் உண்டு?" என்று சோழ மன்னன் மெய்த்தொண்டராகிக் குங்குலியக் கலயனாரை இருகரம் கூப்பி வணங்குகிறார்.

கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புஉறும் அன்பு மேல்மேல் மிக்குஎழும் வேட்கை கூர
ஒருப்படும் உள்ளத் தன்மை உண்மையால் தமக்கு நேர்ந்த
திருப்பணி பலவும் செய்து சிவபத நிழலில் சேர்ந்தார். (34)

அருள்மிகு அபிராமி உடனுறை அமிர்தகடேஸ்வரர்
அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடையூர் – 609 311.
மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம்.

அருள்மிகு மலர்க்குழல் மின்னம்மை உடனுறை பிரமபுரீஸ்வரர்
திருக்கடவூர் மயானம், திருமெய்ஞ்ஞானம்
திருக்கடையூர் அஞ்சல் – 609 311.

அருள்மிகு பெரியநாயகி உடனுறை செஞ்சடையப்பர்
தாலவனேஸ்வரர் திருக்கோயில்,
திருப்பனந்தாள் – 612 504
கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

22. மானக்கஞ்சாறர்

(37 பாடல்கள்)

பிறந்த ஊர் : சோழ நாட்டுக் கஞ்சாறூர்
குலம் : வேளாளர்
குருபூசை மாதம் : மார்கழி
நட்சத்திரம் : சுவாதி
காலம் : சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840-865)

"மலைமலிந்த தோள்வள்ளல் மானக் கஞ்சாறன்" (திரு. தொகை 2:3)

கஞ்சாறூர் வளம்

தேனும் கனிச்சாறும் பாய்ந்து கரும்பு வயல் மணக்கும். களை எடுக்கும் கடைசியர் கண்போல் செங்கழுநீர் மலர் சிவந்திருக்கும். நெற்கதிர் முற்றித் தலைவணங்கும். கடைசியர் கருங்கூந்தல் கருமேகம்போல் விளங்கும். கருமேகம் கண்டாடும் மயில்போல் கடைசியர் கயல் விளங்கும். மறு உள்ள மதி கடைசியர் முகம் கண்டு தோல்வியுறும். கடைசியர் கண்ணழகைக் கயல் காட்டும்.

வனத்தின் அழகை நெல்வயல் காட்டும். கமுக மரத்தின் கழுத்தில் நெல்குலை உராயும். நகில் கொடியும், துகில் கொடியும் வெயில் படாமல் மறைக்கப் பூரண கும்பங்கள் பொலிந்து விளங்கும். இத்தகைய கஞ்சாறூரில் சேனாபதி மரபில் மானக்கஞ்சாறர் தோன்றினார்.

புயல்காட்டும் கூந்தல்சிறு புறம்காட்டப் புனமயிலின்
இயல் காட்டி இடைஒதுங்க இனம் காட்டும் உழத்தியர்கண்
முயல்காட்டும் மதிதோற்கும் முகம்காட்டக் கண்மூரி
கயல்காட்டும் தடங்கள் பல கதிர்காட்டும் தடம்பணைகள் (3)

மானக்கஞ்சாறர்

மானக்கஞ்சாறர் பண்புடைய வடிவர். இறைவன் திருவடியைப் பாடும் தீராத பற்றுடையர். தொண்டர்க்குப் பணிசெய் வதைப் பெரும் பேறாகக் கருதுபவர். அடியார் குறிப்பறிந்து கொடுப்பதில் தலைசிறந்தவர். சிறந்த மகவு பெற இறைவனை வேண்டினார்.

Koviloor Digital Library

குழையணிந்த கூத்தப் பெருமான் திரு அருளால் மழைக்குதவும் கற்புடைய மனைவி மகிழப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்.

பலரும் போற்றும் வகையில் பெண்மகவு வளர்ந்தது. காப்பணிந் தார். பொன் குழை அணிவித்தார். மணிமேகலையும் சிற்றாடையும் அணிவித்தனர். பெண் மகவு சிற்றில் இழைத்து வளர்ந்து பெண்ணுக் குப் பெண் ஆசை கொள்ளும் அமுதப் பருவம் அடைந்தாள்.

மகளை மணம்பேசல்

இடைவருத்தும் மார்பகம் பெருத்து கொடி இடையுடைய மகள் மணப் பருவம் அடைந்தாள். குலவிளக்காய் விளங்கும் மகளை மணம்பேச வந்தனர்.

திருமகட்கு மேல்விளங்கும் செம்மணியின் தீபம்எனும்
ஒருமகளை மன்உலகில் ஓங்குகுல மரபினராய்க்
கருமிடற்று மறையவனார் தமர்ஆய கழல்ஏயர்
பெருமகற்கு மகட்பேச வந்துஅணைந்தார் பெருமுதியோர் (16)

ஏயர்கோனுக்குப் பெண்தர இசைந்தனர். இருதிறத்தார்க்கும் பொருந்திவரும் மணநாளைச் சோதிட வல்லுநர் குறித்தனர். மண முரசொலிக்க ஏயர்கோன் கஞ்சாறூர் அடைந்தனர்.

சிவனாரின் தவக்கோலம்

செவிகளில் நித்திலக் குண்டலங்கள் அசைந்தன. அரை யில் பட்டிகை அணிந்திருந்தார். கழுத்தில் உருத்திராட்ச மணி மாலை அசைந்தது.

மருங்கில் பிறப்பறுக்கும் அருமறைக்கோவணம் விளங்கியது. கோவணத்தின்மீது உடையணிந்திருந்தார். திருவடிகளில் திருப் பஞ்சமுத்திரை விளங்கியது.

அவரைக்கண்ட மானக்கஞ்சாறர் மனம் மகிழ்ந்தார்.

பெருமானாகிய அடியார் மங்கலம் பெருக வாழ்த்தினார். மானக் கஞ்சாறர் தன்மகளைப் பெருமான் திருவடியில் பணியச் செய்தார்.

நல்தவராம் பெருமானார் நலம்மிகும்அன் பரைநோக்கி
உற்ற செயல் மங்கலம்இங்கு ஒழுகுவதுஎன் எனஅடியேன்
பெற்றதொரு பெண்கொடிதன் வதுவைஎனப் பெருந்தவரும்
மற்றுஉமக்குச் சோபனம்ஆ குவதுஎன்று வாய்மொழிந்தார். (27)

திருவடி பணிந்த மணமகளின் மலர்க் கூந்தல் நோக்கி, நும்மகள் கூந்தல் நம் பஞ்சவடிக்காம் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

Koviloor Digital Library

தம்சரணத்து இடைப் பணிந்து தாழ்ந்துஎழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத்து எனவளர்ந்த மலர்க்கூந்தல் புறம்நோக்கி
அஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த்து அணங்குஇவள்தன் மயிர் நமக்குப்
பஞ்சவடிக்கு ஆம்என்றார் பரவஅடித் தலம் கொடுப்பார். (29)

மானக்கஞ்சாறர் சிறிதும் கவலையின்றி மகிழ்வுடன் மணமகளாக நிற்கும் தன்மகளின் மலர்க் கூந்தல் பற்றி அறுத்து இறைவன் திருக்கரங்களில் கொடுத்தார்.

வாங்குவார் போல்நின்று அடியார் காளை வாகனத்தில் மங்கைபங்கனாய்க் காட்சி தந்தார். வானவர் மலர் மழைபொழிய அடியார் பெருமானைத் தொழுது வணங்கினார்.

''நீ நம்பால் கொண்ட பேரன்பை உலகறியச் செய்தோம்'' என்று கங்கை அணிந்த திருச் சடையார் திருவாய்மலர்ந்தருளினார். உடன் சிவனருளால் மணமகள் கூந்தல் வளர்ந்து அழகியதாய் விளங்கியது.

வானவர் சூழ்ந்து வணங்க மானக் கஞ்சாறர் இறைவனாரின் கருணைத் திறம்போற்றித் தொழுதார். தொண்டர் துதிசெய ஏயர்கோன் கலிக்காம நாயனார் மானக்கஞ்சாறர் திருமகளைக் கைப்பிடித்தார். ஏயர்கோன் கலிக்காம நாயனார் மானக்கஞ்சாறர் பக்தித்திறம் அறிந்து வியந்தார். பூங்கொடியை மணந்து மதில் சூழ்ந்த பழைய ஊரைச் சென்றடைந்தார்.

மனம்தளரும் இடர்நீங்கி வானவர்நா யகர்அருளால்
புனைந்தமலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம் புணர்ந்து
தனம் பொழிந்து பெரு வதுவை உலகுஎலாம் தலைசிறப்ப
இனம்பெருகத் தம்முடைய எயின்மூதூர் சென்றுஅணைந்தார் (36)

மெய்ப்பொருள்

மானக்கஞ்சாறர் மகப்பற்றற்று மகேசன் பற்றை மேற் கொண்டார். மகட்குப் புறஅழகு தரும் கூந்தலை விட அடியார்க்கு அக அழகு தரும் பக்தியே மேல் என மானக்கஞ்சாறர் தன்சுரிகையால் மகள் கூந்தலை அறுத்து அடியார் பஞ்சவடிக்கு உதவினார்.

தேனும் கனியும் வயல் கரும்பை வளர்த்தன.

மானக்கஞ்சாறர் அருளும் அன்பும் அடியார்கட்குப் பயன்பட்டு மானக்கஞ்சாறர் பக்தி வயல் செழிக்க உதவின.

அருள்மிகு கல்யாணசுந்தரி, பிருஹந்நாயகி உடனுறை
பஞ்சவடீஸ்வரர் ஆலயம், ஆனந்த தாண்டவபுரம்
மயிலாடுதுறை (வழி) - அஞ்சல் 609 103

Koviloor Digital Library

23. அரிவாள் தாயர்

(23 பாடல்கள்)

பிறந்த ஊர் : சோழநாட்டுக் கணமங்கலம்

குலம் : வேளாளர் குலம்

குருபூசை மாதம் : தை

நட்சத்திரம் : திருவாதிரை

காலம் : அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயனார் (கி.பி. 300–600)

"எஞ்சாத வாள்தாயன் அடியார்க்கும் அடியேன்" (திரு. தொகை 2:3)

சோழநாட்டுக் கணமங்கல வளம்

வண்டும் சுரும்பும் ஒலிக்க வயல் கரும்பு தேன்பொழியும். நெல்கதிர் முத்துச் சொரிந்தது. தாமரையாகிய களை ஏந்தும் உழவர் பதுமநிதி தாங்கும் குபேரன்போல் காட்சிதந்தனர். வயல் கயல் மீன்கள் பெண்கள் முகக் கண்களுக்கும் குவளை மலர்க்கும் வேற்றுமை தெரியாது மருண்டன.

அரிவாள்தாயர்

கணமங்கலத்தில் வேளாண் குலத்தில் அரிவாள் தாயர் தோன்றினார். அவர் 'தாயனார்' என்னும் பெயரைப் பூண்டார். அடிமுடி காணா அண்ணலின் புத்தம் புதுமலர்த் திருவடிகளைத் தொடர்ந்தவர். சிவனார் மாணடி தொழுது வாழ்ந்தார். இறைவனுக்கு நாள்தோறும் கீரையும் மாவடுவும் படைத்து வழிபடுவர்.

தாய னார்எனும் நாமம் தரித்துளார்
சேய காலம் தொடர்ந்தும் தெளிவுஇலா
மாய னார்மண் கிளைத்துஅறி யாதஅத்
தூய நாள்மலர்ப் பாதம் தொடர்ந்துள்ளார். (5)

செந்நெல் அரிசியால் செய்யப்பட்ட இனிய சோற்றுடன் செங்கீரையும் பசுமையாகச் செய்யப்பட்ட மாவடுவையும் கொண்டு அவற்றை நாள்தோறும் அமுதாகப் படைப்பார்.

மின்னு செஞ்சடை வேதியர்க்கு ஆம்என்று
செந்நெல் இன்அமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடுவும் கொணர்ந்து
அன்ன என்றும் அமுதுசெய் விப்பரால். (6)

Koviloor Digital Library

துன்பம் வந்தகாலத்தும் இறைவனைச் சிந்தையால் தொடர்ந்து பற்றிச் சென்று வழிபடுவார். வேதங்களின் முதல்வரான சிவபெருமான், அவர்க்கிருந்த மிகுந்த செல்வங்களை, அவை சென்றவழி காண இயலாத வண்ணம் மாற்றியருளினார்.

இந்த நல்நிலை இன்னல்வந்து எய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர்வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினார். (7)

மேவு செல்வம் களிறுஉண் விளங்கனி
ஆவதுஆகி அழியவும் அன்பினால்
பாவை பங்கர்க்கு முன்புபயின்றஅத்
தாஇல் செய்கை தவிர்ந்திலர் தாயனார். (8)

துன்பமான வறுமை ஏற்படவே, கூலிக்கு நெல்லறுத்தும், அதைக்கொண்டு இறைவனுக்கு நல்லமுதாக ஆக்கிப் படைத்தார். எந்தச் சூழலிலும் பெருமானுக்கு அமுது படைக்கும் தொண்டு தவறாது செய்துவந்தார். நாயனார் பெருமை உலகுக்கு உணர்த்த சிவனருளால் நாயனார் வறுமை உற்றார். யானை நோய் உற்ற உள்ளீடற்ற விளங்கனிபோல அடியார் வாழ்வு வளம் குறைந்த போதும் அமுது படைக்கும் தொண்டினை ஆற்றி வந்தார்.

அல்லல் நல்குரவு ஆயிடக் கூலிக்கு
நெல் அறுத்துமெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெலின் பெற்றன நாயனார்க்கு
ஒல்லை இன்அமு தாக்கொண்டு ஒழுகுவார். (9)

நெல்லறுக்கும் கூலி வேலையும் கிடைத்திலது - நெல் கிடைக்காத போது கீரை அமுது செய்து அமுது படைக்கும் திருப்பணி முட்டாது செய்து வந்தார். ஒருநாள் இறைவனுக்கு அமுது செய அரிசி, மாவடு, கீரை ஆகியன ஏந்திச் சென்றார். பின்னே அரிவாள் தாயர் இல்லாள் பசுஈந்த பால், தயிர், நெய், சாணம், கோமயம் என்ற திருமுழுக்குப் பொருள் ஏந்திச் சென்றார். பசியோடு பெருமானுக்கு அமுது படைக்கச் சென்றார். கால் தளர்ந்து அமுதப் பொருள்கள் அத்தனையும் சிந்தின.

முன்புபோல் முதல்வ னாரை அமுதுசெய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல் அரிசிமா வடுமென் கீரை
துன்புபோல் மனத்துத் தொண்டர் கூடையில் சுமந்து போகப்
பின்புபோம் மனைவியார் ஆன் பெற்றஅஞ்சு ஏந்திச் சென்றார். (14)

இறைவனுக்குரிய அமுது சிந்தியதைக் கண்ட அடியார் அரிவாளைத் தன் கழுத்தில் பூட்டி அரிய முயன்றார். அப்போது பெருமான் அரிவாள் ஏந்திய நாயனார் கைப் பிடித்தார். பெருமான் நாயனார் கைப்பற்றுங்கால் மாவடு மெல்லும் ஓசை விடேல் விடேல் எனக் கேட்டது.

மாசுஅறு சிந்தை அன்பர் கழுத்துஅரி அரிவாள் பற்றும்
ஆசுஇல்வண் கையை மாற்ற அம்பலத்து ஆடும் ஐயர்
வீசிய செய்ய கையும் மாவடு விடேல் விடேல்என்று
ஓசையும் கமரில் நின்றும் ஒக்கவே எழுந்தது அன்றே. (18)

அடியேன் அறியாமை கண்டும் அருள் செய்தாய். என் மாவடு அமுதை ஏற்பாய் போற்றி! மங்கையைப் பாகமாக உடைய மாதேவா போற்றி! செஞ்சடைப் பெருமானே! போற்றி!

திருக்கைசென்று அரிவாள் பற்றும் திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடுஅங்கு ஊறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
அருள்பெரும் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று. (19)

அடியனேன் அறிவி லாமை கண்டும்என் அடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்துஇங்கு அமுதுசெய் பரனே போற்றி!
துடியிடைப் பாகம் ஆன தூயநல் சோதி போற்றி
பொடிஅணி பவளமேனிப் புரிசடைப் புராண போற்றி! (20)

"நன்றுபுரிந்த நாயகனே! நின் இல்லாளொடு நம்முலகு அடைக" என்று சிவபெருமான் காளை வாகனத்தில் இருந்து திருவாய் மலர்ந்தருளினார்.

அரிவாள் வன் கழுத்தில் பூட்டும்போது பெருமான் அருள் கிடைத்த காரணத்தால் தாயனார் அரிவாள்தாய நாயனார் ஆயினார்.

பரிவுஉறு சிந்தை அன்பர் பரம்பொரு ளாகி உள்ள
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று மாவின்
வரிவடு விடேல்எனா முன் வன்கழுத்து அரிவாள் பூட்டி
அரிதலால் அரிவாள் தாயர் ஆயினார் தூய நாமம். (22)

அரிவாள் தாய நாயனார் செவியில் சிவபெருமான் 'விடேல் விடேல்' என்று மாவடு மெல்லும் ஓசை இனிமை தந்தது. குழலிசை

Koviloor Digital Library

'நமசிவாய' என்ற மந்திரம் இசைத்துச் சீர்பெற்ற ஆனாய நாயனார் வரலாறு அடுத்து இடம் பெற்றுள்ளது.

முன்இலை கமரே ஆக முதல்வனார் அமுது செய்யச்
செந்நெலின் அரிசி சிந்தச் செவிஉற வடுவின் ஓசை
அந்நிலை கேட்ட தொண்டர் அடிஇணை தொழுது வாழ்த்தி
மன்னும்ஆ னாயர் செய்கை அறிந்தவா வழுத்தல் உற்றேன் (23)

மெய்ப்பொருள்

சுரும்பும் வண்டும் ஒலிக்கக் கரும்பு தேன்பொழிந்தது. அதுபோல அரிவாள்தாயர் படைத்த அரிசியும் வடுவும் நாயனார்க்குச் சிவானந்தத்தேன் தந்தது.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி-614 713.
புகைவண்டி நிலையத்துக்கு வடக்கு திசையில்
சுமார் 2½ மைல் தொலைவில் உள்ளது.
இப்போது கணமங்கலத்திடல் எனப்படுகிறது.

Koviloor Digital Library

24. ஆனாயர்

(42 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	**மழநாட்டு மங்கலவூர்**
குலம்	:	**இடையர் குலம்**
குருபூசை மாதம்	:	**கார்த்திகை**
நட்சத்திரம்	:	**அஸ்தம்**
காலம்	:	**அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட அடியார் (கி.பி. 660 – 840)**

"அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்" (திரு. தொகை 2:4)

ஆன் என்பது பசுவைக் குறிக்கும் சொல். ஆன்மேய்க்கும் ஆயர்குலத்தில் தோன்றியவர் ஆன் ஆயர்.

ஆனாயர் தோன்றிய மழ நாட்டுவளம்

மழநாட்டுச் சோலையில் மதி வந்து ஏறிச் செல்லும். மேகம் நெற்போர்களின்மேல் ஏறி அமர்ந்து இளைப்பாறிச் செல்லும். உழத்தியர் மலர்க் குழலில் வண்டுறங்கும். தாமரைப் பூவில் மீன் உறங்கும். மாமரக்குளிர்நிழலில் எருமை உறங்கும். மருதநில உழவர் விரட்டிய பசு முல்லை நில வாவியில் பால் சுரக்க அதனை உண்ட மருதநில அன்னம் வாழும் குளத்தருகே உள்ள கரும்பாலைப்புகை வானில் மேகம் எனப்பரவியது. காட்டாறு உந்தித் தள்ளிய சங்கு கொடிவழியே தவழ்ந்து சென்று கமுக மர உச்சியில் முத்தீனும். முல்லை மலர்த்தேன் உண்ட வண்டு மருதநில நெல்வயலில் பாயும்.

பொங்கரில் வண்டு புறம்புஅலை சோலைகள் மேல்ஒடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேல்மழ நல்நாடாம்
அங்கது மண்ணின் அருங்கலம் ஆகஅதற் கேஓர்
மங்கலம் ஆனது மங்கலம் ஆகிய வாழ்மூதூர். (7)

மங்கலம் வாழும் ஊர் மங்கலவூர் எனப்பெற்றது.

ஆனாயர் குலம்

ஆனாயர் பிறந்த இடைக்குலம் சீர்மை மிக்கது. ஆனாயர் மனமொழி மெய்களால் சிவனார் இணையடி தொழுது வாழ்த்தி வணங்கினார். ஆனிரை வயிறாரப் புல் உண்ணச்செய்து நீர்

Koviloor Digital Library

ஊட்டுவார். அண்மையில் கன்று ஈன்ற பசுக்களைப் பாதுகாப்புடன் ஓட்டிச் செல்வர். கடித்த புல் உண்ணாது மயங்கி நிற்குமாறு குழலிசைப்பார்.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழிசையில் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தைக் குழலில் இசைப்பர்.

எடுத்தகுழல் கருவியினில் எம்பிரான் எழுத்துஅஞ்சும்
தொடுத்த முறை ஏழ்இசையின் சுருதிபெற வாசித்து
தடுத்தசரா சரங்கள்எலாம் தங்கவரும் தம்க ருணை
அடுத்தஇசை அமுதுஅளித்துச் செல்கின்றார் அங்குஒருநாள். (14)

நாயனார் திருக்கோலம்

வாசமலர்களும் பச்சிலையும் சேர்த்துக்கட்டிய கண்ணியைத் தலையில் அணிந்து கொண்டார். தலையில் வெண் காந்தளும் நெற்றியில் வெண்ணீறும் அணிந்திருந்தார். சேவடியில் செருப்பும், செங்கையில் பசுக்களுக்கு இரை வளைத்துக் கொடுக்கும் கோலும் ஆருயிர் மயங்க இசைக்கும் குழலும் கொண்டு கன்றுடன் பசுவை மேய்க்கும் புனிதப் பணி மேற்கொண்டார்.

கார்ப்பருவக் காரிகை

நீலமயில் அகவ முல்லைமலர் முறுவல் காட்ட மின்னாம் இடைதாங்கித் தாமரை முகம் அசைய கார்ப்பருவ நங்கை புவியரங்கில் ஆடவந்தாள்.

நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கொடிப் புறவம் பாட
கோலவெண் முகைஏர் முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலும்மின் இடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீடு அரங்கில் ஆட கார்எனும் பருவ நல்லாள். (19)

குழலிசைத்தல்

எங்கும் ஆனிரை பரப்பி இடையர் தொழுதேத்த வண்டு மது உண்ணும் மலர் சூழ்ந்த கொன்றை மரநிழலில் வந்துசேர்ந்தார்.

கொன்றைச் சரம் கொண்டு கொன்றைமரம் சிவனைப் போல் தோன்றவே **நமசிவாய** என்ற ஐந்தெழுத்தைக் குழலில் வைத்து இசைத்தார். குழலிசை எல்லா உயிர்கட்கும் இன்பம் தந்தது. விரல்கள் குழலின் துளைகளில் மாறி மாறி அமர்ந்து இசைப்பது மலரில் வண்டு

Koviloor Digital Library

தாது ஊதுவதுபோல் காட்சி தந்தது. புல்லாங்குழலில் ஏற்ற இறக்கம் தோன்ற ஆரோசை அமரோசைகளில் பண்ணிசைத்தார். இசைவல்லார் ஏற்ற இறக்க இசை முறைகளை ஆரோகணம், அவரோகணம் என்றுரைப்பர். மாலையில் இசைக்கும் சாதாரிப் பண்ணினை மாலையில் குழலில் இசைத்தார். நண்பகலில் பாலைப் பண்ணையும் குழலில் இசைத்தார். யாமத்தில் குறிஞ்சிப் பண்ணையும், வைகறையில் செவ்வழிப் பண்ணையும், எற்பாட்டில் நெய்தற் பண்ணையும் தமிழர் பொழுதிற்கேற்ற பண்ணிசைத்தனர். தாழிசை, நடுஇசை, உயரிசை (கீழ் ஸ்தாயி, மத்திய ஸ்தாயி, மேல் ஸ்தாயி) என்ற மூன்று நிலையிலும் குழலிசைத்துக் காட்டினார்.

பெருவண்ணம், இடை வண்ணம், வனப்பு, பாணி, தூக்கு முதலிய இசை நுட்பங்கள் தோன்ற ஆனாயர் குழலிசைத்தார்.

மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமம் கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரல்தொழில்கள் அளவுபெற அசைத்துஇயக்கிச்
சுந்தரச் செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண. (27)

குழலிசைப் பேரின்பம்

ஆனாயர் குழலிசையில் இசைத்த அஞ்செழுத்தொலி வானவர் செவிமுதல்பட்டுத் தெள்ளமுதத்தேன் என இன்பம் தந்தது. ஆனிரை அறுகம்புல் அருந்தி அசை போடாது நின்றன. கன்றுகள் தாயிடம் பால் உண்ண மறந்தன. மயில்கள் அசைவற்று அருகில் வந்தன. பறவைகள் இனம் இசையில் மயங்கின. இசைத்தல் வல்ல கோவலரும் ஆனாயர் இசையில் மயங்கினர். விஞ்சையர், சாரணர், அமரர், அரமகளிர் முதலிய விண்ணவரும் ஆனாயர் குழலிசை அமுதம் பருகி மகிழ்ந்தனர். இசை கேட்ட பாம்பு பகைகருதாது மயில் மீது மயங்கி விழும். சிங்கமும் யானையும் பகை மறந்து உடன் சாரும். புலிவாயின் அருகுள்ள மான் தான் கடித்த புல்லை உண்ணாது இசையில் மயங்கிநின்றது. இயங்கும் காற்றுக் குழல் இசை கேட்டு இயங்காது நின்றது. மரங்கள் மலர்க்கிளைகள் அசையாது நின்றன. அருவிகளும் காட்டாறும் இசைகேட்டு நின்றன. மேகங்கள் இசையில் மயங்கி மழைபொழியா! இடி இசை கேட்டு உலக முழுதும்இசை பரவ இடித்து முழங்காமல் இருந்தது. அசையும் அசையாப் பொருள்கள் யாவும் அஞ்செழுத்திசையில் மயங்கின. எழுகடலும் இசையில் மயங்கி ஓசையூட்டும் அலை எழுப்பாமல் அமைதியாக விளங்கின.

Koviloor Digital Library

மண்ணில் ஆனாயர் இசைத்த அஞ்செழுத்திசை விண்ணையும் மண்ணையும் இணைத்துப் பெருமான் செவியில் இன்பம் பெருகப் பாய்ந்தது. கண்ணுதற்பெருமானின் காளை வாகனமும் செவிசாய்த்துக் கேட்டது. கங்கை காதுகுளிரக் கேட்டாள்.

மெய்அன்பர் மனத்துஅன்பின் விளைத்த இசைக் குழல்ஒசை
வையம்தன் னையும் நிறைத்து வானம்தன் மயம்ஆக்கிப்
பொய்அன்புக்கு எட்டாத பொன்பொதுவில் நடம்புரியும்
ஐயன்தன் திருச்செவியின் அருகுஅணையப் பெருகியதால். (37)

சிவபெருமான் காட்சி அளித்தல்

அஞ்செழுத்துக் குழலிசைக்கு உருகிய கூத்தனார் ஆனாய நாயனார் முன் எழுந்தருளினார்.

''குழலிசைத்த கோலத்துடன் எம்பால் அணைக'' என்று பெருமான் திருவாய் மலர்ந்தருளினார். ஆனாய நாயனார் வேய்ங்குழலுடன் பேரம்பலம் அணைந்தார்.

சேக்கிழாரின் இசைப்புலமை ஆனாய நாயனார் புராணத்தின் வாயிலாக வெளிப்படுகிறது.

மெய்ப்பொருள்

வேய்குழல் ஏழுதுளை கொண்டது. ஐந்தெழுத்து மந்திரம் ஓதி ஏழாதாரம் கடந்து குண்டலினி ஆற்றல் பெற வேண்டும். அஞ்செழுத்து மந்திரமே எழுபிறவிப் பிணிபோக்கும். கார்ப்பருவம் போல் வாழ்வு செழிக்க அஞ்செழுத்து மந்திரம் துணையாகும்.

மழநாடு : இது திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே கொள்ளிடத்துக்கு வடபாகமும் வடகிழக்கு பாகமும் ஆகும். இந்த நாடு மேல் மழ நாடு, கீழ் மழநாடு என்று இருவகைப்படும். மேல் மழ நாட்டுக்கு லால்குடி (திருத்தவத்துறை) தலைநகர். கீழ் மழ நாட்டிற்குத் திருமழபாடி தலைநகர் இவை கல்வெட்டுக் குறிப்புகள்.

Koviloor Digital Library

25 மூர்த்தியார்

(49 பாடல்கள்)

பிறந்த ஊர் : பாண்டிய நாட்டு மதுரை

குலம் : வணிகர்

குருபூசை மாதம் : ஆடி

நட்சத்திரம் : கிருத்திகை

காலம் : அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயனார் (கி.பி. 300–600)

'மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்'' (திரு. தொகை 3:1)

பாண்டிய நாட்டின் சிறப்பு

பாண்டியநாட்டு மாடங்களில் மேகம் தவழும். பெண்களின் கண் முத்துப்போல் இன்ப நீர் சொரியும். பெண்களின் பற்கள் முத்தொளி வீசும். பாண்டிய நாட்டுக் கடல் அலைகள் முத்துக்களை அள்ளி வீசும். பொதியமலை தென்றலோடு தெய்வத்தமிழ்தரும்.

மதுரைச் சிறப்பு

மதுரைப் பெண்கள் யாழிசைபோல் மதுர மொழி கொண் டோர். மதுரைச் சோலை வண்டுகள் குழலிசை தரும். மதுரை யில் முத்தமிழ் அலைபாயும். தேன் தாமரையிலிருந்து பாயும்.

பந்தாடும் மங்கையர் செங்கையால் மார்பிலிருந்து சேலை விலகாது மானம் காப்பர். அவர்களின் கைகளுக்கு உதவுவது போல முத்து மாலையும், செவிக்குழைகளும் மார்பகச் சேலை விலகாமற் காத்தன.

மூர்த்தி நாயனார்

மதுரையில் பழங்குடியினரான வணிகர் குலத்தில் தோன்றிய மூர்த்திநாயனார் சிவபெருமான் திருவடிப் பற்றின்றி வேறுபற்றுக் கொள்ளாது விளங்கினார். ஆலவாய் ஆகிய மதுரைச் சிவன் கோயிலுக்குச் சந்தனக் காப்புக்குரிய சந்தனம் வழங்கும் திருத்தொண்டு செய்து வந்தார்.

திருப்பணிக்கு இடையூறு

வடுகக் கருநாடக வேந்தர் பாண்டிய நாட்டின் மீது நாற்படை யோடு வந்து போர் செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். மதுரை நகர்

Koviloor Digital Library

கருநாடக வேந்தர் கைப்பட்டது. பாண்டிய மன்னன் போற்றிய சைவ நெறியைப் பின்பற்றாது சமணர் சமயத்தைப் பின்பற்றினான். கருநாடக வேந்தன் சைவ அடியார்கட்குப் பெரிதும் துன்பம் விளைவித்தான். சந்தனக் காப்பிற்குச் சந்தனம் கிடைக்காமற் செய்தான். மனம் நொந்த அடியார் ''சைவ அடியார்கட்குத் தொல்லை தரும் பாதகன் மாய்ந்திடச் சைவமேன்மை போற்றும் உயர்ந்தவன் ஆட்சி பாண்டிய நாட்டில் மேவுக'' என்று கூறி வருந்தினார்.

புன்மைச் செயல்வல் அமண்குண் டரில் போது போக்கும்
வன்மைக் கொடும்பா தகன்மாய்ந் திடவாய் மைவேத
நன்மைத் திருநீற்று உயர்நல் நெறிதாங்கும் மேன்மைத்
தன்மைப் புவி மன்ன ரைச் சார்வது என்று? என்று சார்வார். (18)

தன்கை தேய்த்த சான்றோர்

சந்தனக் கல்லில் தன் முழங்கையை எலும்பு தெரியும் வகை தேய்த்தார். பெருமான் மூர்த்தியார் முன் காட்சி தந்தார்.

'பேரன்புடன் தொண்டு செய்யும் நீ உலகை நன்கு காத்து நம் உலகடைக' என்று திருவாய் மலர்ந்தருளினார். உடன் மெய்ப்பட்ட புண்தீர்ந்து ஒளியுள்ள மேனியுடன் திகழ்ந்தார்.

அன்பின்துணி வால்இதுசெய் திடல்ஐய உன்பால்
வன்புன்கண் எல்லாம் விளைத்தவன் கொண்டமண் எல்லாம் கொண்டு
முன்புஇன்னல் புகுந்தனமுற் றவும்நீத்துக் காத்துப்
பின்புஉன்பணி செய்துநம்பேர் உலகுஎய்துக என்ன. (22)

செல்வத்தைத் தேய்க்கும் படை

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள்ஒக்கும்.

''அல்லல்பட் டாற்றா(து) அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

அடியார் துன்புற சைவச் சான்றோர்கட்குத் தொல்லை தந்துவந்த கருநாடக வேந்தன் வாழ்நாள் முடிந்தது. 'சங்கரன் சார்பில்லார்க்கு வாழ்வு மின் போன்றது' என்ற கருத்து உண்மை ஆயிற்று.

அந்நாள் இரவின்கண் அமண்புகல் சார்ந்து வாழும்
மன்ஆகிய போர்வடு கக்கரு நாடர் மன்னன்
தன்நாளும் முடிந்தது சங்கரன் சார்பு இலோர்க்கு
மின்ஆம்என நீடிய மெய்ந்நிலை யாமை வெல்ல (24)

அடியாரை வருத்திய தீயோன் நரகத்திடை விரைந்து வீழ்ந்தான் மூர்க்கன் வீழ்ந்தவுடன் அவன் சுற்றமும் வீழ்ந்தது. மன்னன் மகப்பேறின்றி மாண்டான்.

மூர்த்தியார் ஆட்சிப் பேறு பெறல்

ஈமக்கடன் முடிந்ததும் அமைச்சர் கூடி, ''மன்னன் மகப்பேறின்றி இறந்ததால் ஆட்சிக்கு ஒரு மன்னனைத் தேர்தல் வேண்டும். கூழும் குடியும் இருப்பினும் அரசுக்குத்தலைமையான அங்கமான அரசன் இன்றேல் மற்ற அங்கங்களால் பயனில்லை. தலைவனில்லா நாடு உயிரற்ற உடல் போன்றது.

''யானைக்குக் கண்கட்டிவிட்டு யானையை விட்டுத் தலைவனைத் தேடும்முறை முன்னோர் கைக் கொண்டனர்'' என்று கூறி அர்ச்சனை செய்து யானையைக் கண் கட்டிவிட்டனர். யானை கோயிற் புறத்தே நின்ற மூர்த்தியார் முன்தாழ்ந்து மண்டியிட்டுத் தன் பிடரியில் ஏற்றிக் கொண்டது. அமைச்சர் வணங்கி வாழ்த்தும் ஒலி கடலொலியை வென்றது. சங்குகள், ஊதுகொம்புகள், போன்ற இசைக்கருவிகள் முழங்கின. மங்கை பங்கன் அருள் உடையவரே எங்கும் உலகாள்வர்.

மூர்த்தியார்க்குச் சிறப்புச் செய்தல்

மூர்த்தியாரை அரியாசனத்தேற்றிக் குடை நிழற்கீழ் ஆட்சி உரிமை தந்தனர். வேள்வி செய்து மந்திரம் ஓதிப் பொற்குட நீர் நாயனார் மீது தெளித்து ''தீமை நீங்கிச் சைவம் ஓங்கிப் புவியைத் தாங்கி அரசாள்க'' என மூர்த்தியார் சேவடி பணிந்தனர்.

வந்துற்றுஎழு மங்கல மாந்தர்கள் தம்மை நோக்கிச்
சிந்தைச் சிவமே தெளியும் திருமூர்த்தியார் தாம்
முந்தைச் செயலாம் அமண்போய் முதல்சைவம் ஓங்கில்
இந்தப்புவி தாங்கி இவ்இன்அரசு ஆள்வன் என்றார். (39)

மூர்த்திநாயனார் ''சிவபெருமான் அக்க மணிமாலையும், திருநீறும் சடை முடியுமே எனக்குரிய அரசச்சிறப்பு'', எனக் கூறினார். அணிமுடிதரித்திலர். சிவபெருமான் செஞ்சடை முடியே தன் மணிமுடி எனக் கொண்டார். மன்னன் சைவப்பற்றை அனைவரும் வியந்தனர். மூர்த்தியார் ஆலவாய்க் கோயில் சென்று பெருமான் அடி பணிந்தார். உருத்திராக்க மணியும் வேணியும் தரித்து உலக உயிர்கள் தீங்குறாமல் அரசாண்டார்.

Koviloor Digital Library

உயிர்கள் துன்புறா வகை ஆண்ட அருட்பேரரசனாக மூர்த்தியார் விளங்கினார். இறைவனாரின் அருட்பேருலகடைந்தார்.

அகல்பா றையின் வைத்து முழங்கையை அன்று தேய்த்த
இகல்ஆர்களிற்று அன்பரை ஏத்தி முருக னாராம்
முகில்சூழ் நறுஞ்சோலையின் மொய்ஒளி மாட வீதிப்
புகலூர்வரும் அந்தணர் தம்திறம் போற்ற லுற்றாம். (49)

மெய்ப்பொருள்

சந்தனக்காப்புத் தொண்டு செய்த மூர்த்தியார் பாண்டியப் பேரரசும், பரமனின் அருட்பேரரசும் ஒருங்கு பெற்றார். இறைவனுக்குச் செய்த சிறுதொண்டும் அளவிலாப் பெரும்பயன் தருதலை மூர்த்திநாயனார் புராணம் காட்டும்.

அருள்மிகு மீனாட்சி அம்மை உடனுறை சோமசுந்தரர்
திருக்கோயில், மதுரை - 625 001.

Koviloor Digital Library

26. முருகர்

(14 பாடல்கள்)

பிறந்த ஊர் : சோழநாட்டுத் திருப்புகலூர்
குலம் : அந்தணர்
குருபூசை மாதம் : வைகாசி
நட்சத்திரம் : மூலம்
காலம் : திருஞானசம்பந்தர் காலம். (கி.பி. 600 - 660)

'முருகனுக்கும் (உருத்திர பசுபதிக்கும்) அடியேன்' (திரு. தொகை 3:1)

பூம்புகலூர் வளம்

மங்கைபங்கன் வீற்றிருக்கும் பூம்புகலூர் பொய்கைகள் சூழ்ந்தது. பூம்புகலூர் மக்கள் அணிந்த வெண்மையான திருநீற்றொளிபட்டுக் கருமை வண்டுகளும் வெண்ணிறம் பெற்று விளங்கின. பொய்கையும் பூக்களும், வண்டுகளும் நிறைந்த வளமுடையது திருப்பூம்புகலூர். மக்கள் திருநீற்றொளியால் இருள் நீங்குவதால் பூம்புகலூர் எப்போதும் பகலாகவே இருந்தது. மக்கள் இசைவோடு இறைவனை நினைத்து இசையோடு பண்இசைப்பது போல வண்டுகள் தேன் உண்டு பண்ணிசைக்கும்.

தாது சூழும் குழல்மலையாள் தளிர்க்கை சூழும் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை வேணி நம்பர் விரும்புபதி
சோதி சூழும் மணிமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டு
போது சூழும் தடஞ்சோலைப் பொய்கை சூழும் பூம்புகலூர். (1)

நாம மூதூர் மற்றதனுள் நல்லோர் மனம்போல் அவர் அணிந்த
சேமம்நிலவு திருநீற்றின் சிறந்த வெண்மைத் திருந்தொளியால்
யாம இருளும் வெளியாக்கும் இரவே அல்ல விரைமலர்மேல்
காமர் மதுவுண் சிறைவண்டும் களங்கம் இன்றி விளங்குமால். (2)

நண்ணும் இசைதேர் மதுகரங்கள் நனைமென் சினையின் மருங்குஅலைய
வண்ண மதுரத் தேன்பொழிவ வாச மலர்வா யேயல்ல;
தண்என் சோலை எம்மருங்கும் சாரும் மடமென் சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழுந்தேன் பொழியுமால். (3)

Koviloor Digital Library

வயலில் வாழும் கயல் மீன்கள் வயல் மடையில் துயில் கொள்ளும். நண்டு வயல் கரையில் துயில் கொள்ளும். புகலூர் மக்கள் பாடும் பதிகப் பாடல்களைக் கேட்டுப் பயிற்சி பெற்ற வண்டுகள் பதியாகிய இறைவனை மக்கள் பாடும் பதிகப் பண்போல் பண்ணிசைத்தன.

மக்கள் பாடும் பதிகம் கேட்ட பொய்கைகளும், அடியார் வதனம்போல் மரைமலர் முகத்தில் இன்பக்கள்நீர் வடித்தன.

வண்டு பாடப் புனல் தடத்து மலர்ந்து கண்ணீர் அரும்புவன
கொண்ட வாச முகை அவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேஅல்ல
அண்டர் பெருமான் திருப்பாட்டின் அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும் துளித்த கண்ணீர் அரும்புமால் (4)

அந்தணர் குலத்தில் நான்மறை முதல்வராகவும், ஞானத்தில் தலைசிறந்தவராகவும் குற்றமற்ற அன்பில் உருகி, உருகி, உருகி முருக நாயனார் இறைமைத்தொண்டு செய்து வந்தார்.

முற்பிறப்பில் செய்த தவத்தால் இறைவன் சடைமேல் அணிய மலர்களால் மாலை கட்டிச் செல்வர். காலை எழுந்து புனிதநீராடி, ஆறு சூடிய பெருமான் திருவடியில் சாத்துதற்குரிய மலர்களைப் பூக்கூடைகளில் வைத்துக்கொள்வர்.

மரக்கொம்பில் பூத்தமலர், நிலத்தில் பூத்தமலர், நீரில் பூத்தமலர், கொடியில் பூத்த மலர் முதலிய மலர்களை மலையரசனாகிய சிவன் திருமுடியில் சூட்டுதற்குப் பறித்துச் சென்றார்.

கோட்டு மலரும் நிலமலரும் குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின்
தோட்டு மலரும் மாமலரும் சுருதி மலரும் திருவாயில்
காட்டு முறுவல் நிலவுஅலரக் கனக வரையின் பன்னக நாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல் புனைய லாகும் மலர்தெரிந்து. (8)

மலர்களை எல்லாம் தொகுத்துத் தனியிடத்தே வந்து கோவைகளாகவும், மாலைகளாகவும், தலையில் சூடும் கண்ணிகளாகவும் திருவடியில் சூட்டும் மாலைகளாகவும் மலர்களைத் தொடுப்பார்.

கொண்டுவந்து தனிஇடத்தில் இருந்து கோக்கும் கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமமுடன் இணைக்கும் வாச மாலைகளும்
தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளில் பிணைக்கும் பிணையல்களும்
நுண்தாது இறைக்கும் தொடையல்களும் சமைத்து நுடங்கு நூல்மார்பர். (9)

அன்றலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மாலைகளும், மணமலர் மாலைகளும், திருவடியில் சூட்டும் மாலைகளும், திருமுடியில்

சூட்டும் கண்ணிகளும் இறைவனுக்குப் படைத்து, பரமர் பதிகம் பாடி 'நமசிவாய' என்ற அஞ்செழுத்து மந்திரம் ஓதி நாவால் அர்ச்சனை புரிவார்.

ஆங்குஅப் பணிகள் ஆனவற்றுக்கு அமைத்த காலங்களின் அமைத்துத்
தாங்கிக் கொடுசென்று அன்பினொடும் சாத்தி வாய்ந்த அர்ச்சனைகள்
பாங்கில் புரிந்து பரிந்துள்ளார் பரமர் பதிகம் பற்றான
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவா நாவின் உணர்வினார். (10)

தள்ளுவன தள்ளிக் கொள்ளுவன கொண்டு தகுதியான மறை நூல்கல்வியும், ஞானமும் பொன்வள்ளத்தில் அகிலம் காக்கும் அம்மை பார்வதி கொடுக்க ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர்க்கு முருக நாயனார் நண்பராக விளங்கினார்.

ஞானசம்பந்தர் நட்பு

தள்ளும் முறைமை ஒழிந்திடஇத் தகுதி ஒழுகும் மறையவர்தாம்
தெள்ளு மறைகள் முதலான ஞானம் செம்பொன் வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்றுஅளித்த அம்மை முலைப்பால் உடன்உண்ட
பிள்ளையார்க்கு நண்பருமாம் பெருமை உடையர் ஆயினார். (11)

அன்ன வடிவுகொண்ட அயனும், பன்றி வடிவு கொண்ட திருமாலும் முடியும் அடியும் காண இயலாதவருமான ஈசுவரன் வழிபாடு தவறாமல் செய்து அஞ்செழுத்துப் பயின்ற நாவால் இறைவனைப் பாடிப் பரவுவார்.

முற்பிறவிப் பயனால் முருகநாயனார் ஞானசம்பந்தர் திருமணத் திற் கலந்து கொள்ளச் சென்று அடியவரோடு சிவபெருமான் திருவடி இன்பப் பேறு பெற்றார். இறைவனின் அருட்பொருள் பெற்றார்.

அங்கண் அமரும் திருமுருகர் அழகுஆர் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன்செய்த பூசை அதனால் புக்கருளிச்
செங்கண் அடல்ஏறுடைய வர்தாம் சிறந்த அருளின் பொருள்அளிக்கத்
தங்கள் பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார்வுற்றார். (13)

கருவில் திருவுடைய முருக நாயனார் புராணத்தின்பின் உருவில் திருவுடைய உருத்திர பசுபதி நாயனார் புராணம் இடம்பெறும்.

மெய்ப்பொருள்

"யாவர்க்கும் ஆம்இறைவற்கொரு பச்சிலை" – திருமந்திரம்

Koviloor Digital Library

என்ற அன்புநெறி (கிரி போன்று விளங்கும் கிரியா நெறி) பற்றி ஆண்டவன் திருவடி நிழல் அடையலாம் என்ற பக்தி இலக்கணத்திற்கு முருக நாயனார் இலக்கியமாகத் திகழ்ந்தார். மனத்தால் அஞ்செழுத்தைச் சிந்தித்தார். வாயால் வாய்மையொடு அர்ச்சனைகள் செய்தார். மலர்கள் பறித்து மாலைகளும் கண்ணிகளும் இறைவனுக்குச் சாத்தி மெய்த்தொண்டு செய்தார். மனமொழி மெய்களால் தொண்டு செய்த முருக நாயனார் ஞானசம்பந்தர் திருமணக் கூட்டத்தோடு கலந்து இறைவன் திருவடி நிழல் இன்பம் க்ண்டார். சரீரத்தில் மலர்கள் பறித்துப் பூமாலை தொடுத்தார். பூமாலைகளை இறைவன் திருமேனி சேர்க்கும் புனிதப் பணி செய்தார்.

அஞ்செழுத்தோதி யோக நிலைப்பயிற்சி பெற்றார். ஞான சம்பந்தர் திருக்காட்சியால் சிவஞானம் பெற்றார்.

சரியை,[1] கிரியை,[2] யோகம்,[3] ஞானம்,[4] என்ற நால்வகை நிலையும் ஒருங்கே பெற்ற அடியார்களுள் ஒருவர் முருக நாயனார் ஆவார்.

அருள்மிகு கருந்தார் குழலி அக்கினி புரீஸ்வரர் திருக்கோயில்
திருப்புகலூர், அஞ்சல் - 609 704. (வழி) திருக்கண்ணபுரம்,
நாகப்பட்டினம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

27. உருத்திர பசுபதியார்

(10 பாடல்கள்)

பிறந்த ஊர் : சோழநாட்டுத் திருத்தலையூர்

குலம் : அந்தணர்

குருபூசை மாதம் : புரட்டாசி

நட்சத்திரம் : அஸ்வினி

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட அடியார் (கி.பி. 660 – 840)

(முருகனுக்கும்) "உருத்திர பசுபதிக்கும் அடியேன்" (திரு. தொகை 3:1)

திருத்தலையூர் வளம்

மலர்கள் மலர்ந்த வயல்கள் சூழ்ந்தது சோழநாடு. பொன் கொழித்து வரும் காவிரி பாய்தலால் சோழநாடு பொன்னி வளநாடு எனப்பெற்றது. சோழவேந்தன் பொன்னிநாடன் என்றழைக்கப் பெற்றான். நிறைந்த பண்புள்ள குடிமக்கள் நிறைந்தது சோழநாட்டுத் திருத்தலையூர்.

திருத்தலையூர் மறையவர் வளர்க்கும் வேள்வித் தீ வான்நோக்கி வளரும். சோலை மலர்கள் தேன்தரும் வள்ளல்கள். பசுக்கள் பால், தயிர், நெய், கோமயம், சாணம் போன்றவற்றையும் இறைவன் கோயிலுக்கு அளிக்கும். திருத்தலையூர் மக்கள் தருமம், நீதி, சால்பு ஆகியவற்றைச் செயலில் காட்டி உலகுக்குக் கற்பிப்பர்.

உருத்திர பசுபதியார் சிறப்பு

திருத்தலையூரில் அந்தணர் குலத்தில் உருத்திர பசுபதியார் தோன்றினார். காளை வாகனம் கொண்ட சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வாழ்ந்து வந்தார். உருத்திராக்கம் அணிந்து சிவபெருமானை வழிபட்டார். பசு பதியாகி, சிவன்பாற் பற்றுக் கொண்ட அடியாரின் பெற்றோர் தன் மகவுக்குப் பசுபதியார் எனப் பெயரிட்டனர். பசு என்பது (ஆ) பசுமையான ஆன்மாவைக் குறிக்கும். பதி என்பது இறைவனைக் குறிக்கும் சொல். பாசம் என்பது ஆன்மாவைப் பற்றிய மலம். பாசம் ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். பதி என்ற சொல்லில் அகரமும் பசு என்ற சொல்லில்

Koviloor Digital Library

உகரமும் பாசம் என்ற சொல்லில் மகரமும் அடங்கியுள்ளன. அ,உ,ம் என்ற பிரணவ மந்திர மூல எழுத்தின் கூட்டு 'ஓம்' எனும் பிரணவ மந்திரமாகும்.

பாசம் நீங்கிப் பசு பதியைச் சேர வேண்டும். இதனைக் குறிப் பாகத் திருமுருகாற்றுப் படையில் ஒரு கை மார்பில் சின்முத்திரை காட்டி நிற்கும் என நக்கீரர் சின்முத்திரை பற்றிக் குறிப்பிடுவார்.

நீர்த்துறையில் கோட்டுமலர்மீது கருவண்டு பறக்கக் கரு வரால்கள் (மீன்) துள்ளி எழும்போது நீரில் நெருப்பும் புகையும் எழுவது போலத் தோன்றும். கழுத்தளவு நீரில் நின்று நீராடி, கைகுவித்து வணங்குவார்.

அல்லும் பகலும் வழிபட்ட உருத்திர பசுபதியார் வழிபாட்டைச் சிவபெருமான் உவந்தார். வேதநாயகரைக் காணும் உவப்புடன் சிவபுரி அடைந்தார்.

இறைவனாகிய பசுபதியார் திருநாமம் ஓதி பெருமான் திருஅருள் பெற்றுய்ந்தார். முத்தலைவேல் சிவனாரைப் போற்றிப் பெருமான் திருஅருள் பெற்ற உருத்திர பசுபதியார் அடிவணங்கி அடுத்து திருநாளைப் போவார் புராணம் சேக்கிழார் உரைப்பார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (குறள் எண்: 6)

மெய்ப்பொருள்

உடல் தூய்மை நீரால் அமையும் – உள்ளத் தூய்மை இறையுணர்வால் வளரும். இப்புராணம் முழுமையும் ஐஞ்சீர்ப்பாக் களால் ஆனது. ஐம்பொறி, ஐம்புலத்தூய்மையோடு இறைவழிபாடு செய்யின் பெரும்பயன்தரும் என்பது இதன்உட் பொருளாம்.

நிலத்தின் ஓங்கிய நிவந்துஎழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநல் நாட்டுக்
குலத்தின் ஓங்கிய குறைவுஇலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர். (1)

வான் அளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ;
தேன் அளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை;
ஆன் ஆளிப்பன அஞ்சுகந்து ஆடுவார்க்கு அவ்வூர்
தான் அளிப்பன தருமமும் நீதியும் சால்பும் (2)

Koviloor Digital Library

அங்கண் மாநகர் அதனிடை அருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க னார்அடி மைத்திறம் புரிபசு பதியார். (3)

ஆய அந்தணர் அருமறை உருத்திரம் கொண்டு
மாய னார்அறி யாமலர்ச் சேவடி வழுத்துந்
தூய அன்பொடு தொடர்பினில் இடைஅறாச் சுருதி
நேய நெஞ்சினர் ஆகிஅத் தொழில்தலை நின்றார். (4)

கரைஇல் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும்பு அறைந்திடக் கருவரால் பிறழும்
நிரைநெ டுங்கயல் நீர்இடை நெருப்புஎழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையுள் மேவி. (5)

தெள்ளு தண்புனல் கழுத்துஅள வாய்இடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேல் குவித்துத்
தள்ளு வெண்திரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரம் குறிப்பொடு பயின்றார். (6)

அரும றைப்பயன் ஆகிய உருத்திரம் அதனை
வருமுறைப் பெரும் பகலும்எல் லியும்வழு வாமே
திருமலர்ப்பொகுட்டு இருந்தவன் அனையவர் சிலநாள்
ஒருமை உய்த்திட உமைஇடம் மகிழ்ந்தவர் உவந்தார். (7)

காதல் அன்பர்தம் அருந்தவப் பெருமையும் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்துஅருள் செய்யமற் றவர்தாம்
தீதுஇ லாநிலைச் சிவபுரி எல்லையில் சேர்ந்தார். (8)

நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர்; அவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற. (9)

அயில்கொள் முக்குடு மிப்படை யார்மருங்கு அருளால்
பயில்உருத்திர பசுபதி யார்திறம் பரசி
எயில் உடைத்தில்லை எல்லையில் நாளைப்போ வாராம்
செயலு டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம். பாடல் – 10

திருத்தலையூர் : இது மாயவரம் – பேரளம் வழியில் கொல்லுமாங்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே இரண்டு மைலில் காட்டு வாய்க்காலின் தென்கரையிலுள்ள சிவத்தலமாகும்.

Koviloor Digital Library

28. திருநாளைப்போவார்

(37 பாடல்கள்)

பிறந்த ஊர் : சோழநாட்டு ஆதனூர் (திருப்புன்கூருக்கு அருகில் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.)

குலம் : ஆதிதிராவிடர்

குருபூசை மாதம் : புரட்டாசி

நட்சத்திரம் : ரோகிணி

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட அடியார் (கி.பி. 660 – 840)

'செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்' (திரு. தொகை 3:2)

ஆதனூர் வளம்

கொள்ளிட ஆறு இருபக்கமும் மணிகளைத் தாமரை மலர்க்கைகளால் தாங்கும் மேற்கா நாட்டைச் சார்ந்தது. ஆதனூர் திருநீற்றொளி நிறைந்தது. கரும்பின் சாறு கலக்கும் வயலில் வரால் மீன்கள் துள்ளி விளையாடும். நண்டு உழுத சால்வழியே சென்று மலர்ந்த தாமரையில் மகவு ஈனும். சோலை மரங்கள் வானில் உள்ள ஞாயிற்று மண்டிலத்தைத் தடவிக் கொடுக்கும். மேக மண்டலம் மழை தரும். பாளைவிரித்த தென்னையை வாளை மீன் தாக்கி மீண்டும் கீழ் நோக்கி வந்து பலாக்கனியைத் தாக்க, கனியின் சாறு கலந்த ஆற்று வெள்ளத்தில் வாளை நீந்தி வரும். பல வளங்களும் செறிந்த அவ்வூரில் மக்கள் வளம் பெருகி வாழ்ந்தனர்.

பாளைவிரி மணம்கமழும் பைங்காய்வன் குலைத்தெங்கின்
தாளதிர மிசைமுட்டித் தடங்கிடங்கின் எழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழம்மிதப்ப வண்பலவின்
நீளமுதிர் கனிகிழிதேன் நீத்தத்தில் எழுந்துஉகளும் (4)

புலைப்பாடி

ஆதனூர் மருங்கில் புலையர் வாழும் புலைப்பாடி உள்ளது. அங்குப் புலையர் உழவுத் தொழிலையும், குலத்தொழிலையும் செய்து வாழ்ந்தனர். சுரைக்கொடி படர்ந்த சிறுகுடில்கள் நிறைந் துள்ளன. புலையர் வீடுகளின் முற்றங்களில் கோழிக்குஞ்சுகளும் நாய்க் குட்டிகளும் அலைந்து திரியும்.

Koviloor Digital Library

அரையில் இருப்புமணி ஒலிக்கப் புலைச்சிறுவர் அவற்றைப் பிடிக்க ஓடுவர். மருத மர நிழலில் மகவைச் சிறுகோலில் உறங்க வைப்பர். வஞ்சி மரநிழலில் உடைந்த பானையோட்டில் பெட்டைக் கோழி முட்டையை அடைகாக்கும். மாமரத்தில் அடிக்கும் பறைதொங்கும். அண்மையில் குட்டிபோட்ட நாய்கள் தம் குட்டிகட்குப் பாதுகாப்பாக அங்குமிங்கும் அலைந்து கொண் டிருக்கும். காஞ்சி மர நிழலில் செங்கொண்டைச் சேவல்கள் மேய்ந்து கொண்டிருக்கும். காஞ்சிமர நிழலில் நெல் குற்றும் உலக்கைப் பாட்டொலி எங்கும் பரவலாகக் கேட்கும். பறவை ஒலியெங்கும் பரந்து ஒலிக்கும். குவளைமலர் மதுவைத் தரும். நெற்கதிர் கூந்தலில் சூடிய புலைச்சியர் கள்ளுண்டு களிப்ப பறை ஒலிக்கும்.

நந்தனார் சிவத்தொண்டு

இத்தகைய புலையர் வாழும் பகுதியில் சிவன் அடி வணங்கும் முதன்மைத் தொண்டராக நந்தனார் விளங்கினார். பிறந்தநாள் முதல் சிவன்பால் வைத்த சிந்தையராய் விளங்கினார். ஊரில் பறைத் தொழிற்குரிய வருவாய் கொண்டு புலைத்தொழிலைச் சார்ந்த பிற தொழிலும் செய்து வந்தார். கூர்வேல் ஏந்திய சிவன் கோவில் முரசுக்குரிய தோலும், முரசினை இழுத்துக் கட்டும் வார்களும், இசைக் கருவிகளாகிய வீணை யாழுக்குரிய நரம்புகளும் வழங்கி வந்தார். கோவில்திருவாயில் புறம் நின்று அன்பு மிகுதியால் பாடி ஆடினார்.

பிறந்துஉணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்தகையால்
சிறந்தபெருங் காதலினால் செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும்அயல் நினைவுஇன்றி வருபிறப்பின் வழிவந்த
அறம் புரிகொள் கையராயே அடித்தொண்டின் நெறி நின்றார். (12)

திருப்புன்கூர்ச் சிவத்தொண்டு

திருப்புன்கூர்ச் சிவன் சேவடி நேரே கும்பிட எண்ணி வாயிற் புறம் நின்றார். இறைவன் புகழ்பாடி நேரே கும்பிட நினைத்த அடியார் மனமகிழத் தம்திருமுன் கிடந்த நந்திஎம் பெருமானை விலகி இருக்க அருள் புரிந்தார். நேரே திருப்புன்கூர்ச் சிவனை வழிபட்டுக் கோவில் முன்திருக்குளம் உண்டாக்கித் தொண்டு செய்தார். திருப்புன்கூர்ச் சிவன் கோயிலை வலம்வந்து பணிந்து ஆதனூர் நண்ணினார்.

சீர்ஏறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்க்கு அதுநேர்வார்
கார்ஏறும் எயில்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போர்ஏற்றை விலங்க அருள் புரிந்தருளிப் புலப்படுத்தார் (17)

Koviloor Digital Library

தில்லைக் கூத்தப்பெருமானை வணங்கும் ஆர்வம்

சிவன்பதி பலவும் சென்று வழிபட்டார். திருத்தில்லை சென்று கூத்தப் பெருமானை வணங்க எண்ணினார். தில்லை மேவத் தன்குலம் தடையாக இருப்பதை எண்ணினார். நாளை போவேன் என்று எண்ணு வார். நாளை போவேன் என்றெண்ணிச் சில நாட்கள் கடந்தன. காற்றால் உதிரும் பூளைப் பூப்போன்ற பிறவிப் பிணி நீங்க, வாளை துள்ளும் வயல் நிறைந்த திருத்தில்லை எல்லையை அடைந்தார்.

தில்லையில் நந்தனார்

வேள்விப் புகையும் வேள்வி செய்யும் மடங்களும் நெருங்கிய தில்லையுள் புகத் தன் குலம் தடையாய் இருத்தலை எண்ணித் தயங்கினார். வேள்விக்கூடங்கள் நிறைந்த தில்லையில் மூவாயிரவர் இல்லங்கள் உள்ளன. கூத்தப்பெருமானை வணங்கும் வேட்கை பெருகிக் கூத்தப் பெருமான் திருக்காட்சி கிடைக்க இயலாமை எண்ணி வருந்துவர். இன்னல்தரும் இழிபிறவியைத் தடையாக எண்ணிய அடியார் துயின்றார்.

'இப்பிறவி போய் நீங்க எரி நெருப்பில் மூழ்கிக் கோயில் அடைவாய்' எனப் பெருமான் நந்தனார் கனவிலும், எரியமைத்துக் கொடுக்குமாறு தில்லை மூவாயிரவர் கனவிலும் திருவாய் மலர்ந்தருளினார்.

இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன் முன்அணைவாய் எனமொழிந்து
அப்பரிசே தில்லைவாழ் அந்தணர்க்கும் எரியமைக்க
மெய்ப்பொருள் ஆனார்அருளி அம்பலத்தே மேவினார். (28)

தில்லைவாழ் அந்தணர்கள் சிவன் திருவாய் மலர்ந் தருளியவாறு தீயமைத்த வகையினை நந்தனாரிடம் உரைத்தனர்.

நந்தன் இறையருள் பெற்றுய்தல்

இறைவனைக் கைதொழுது நெருப்பில் புகுந்தார். மாயப் பொய் உரு ஒழித்துப் புண்ணிய மாமுனி வடிவம் பெற்றார். செந்தீமேல் அந்தணர் போல் தோன்றிய நந்தனார் செம்மலர்மேல் எழுந்தருளிய (அந்தணன்) பிரமனைப்போல் தோன்றினார். வானவர் மலர்மாரி பொழிந்தனர். தில்லைக் கோபுரத்தைத் தொழுது நடமாடும் கூத்தன் திருக்காட்சி நந்தனார் கண்டார்.

'நந்தனார்' என்னும் பெயரைச் சேக்கிழார் குறிக்கவில்லை.

Koviloor Digital Library

அந்தணர்கள் அதிசயித்தார். அருமுனிவர் துதிசெய்தார்
வந்துஅணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசுஅறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையும் துணைஅடிகள் தொழுதிருக்க
அந்தம்இலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார். (36)

நந்தனார் மாசுடம்பு நீங்கத் தீயாம் மஞ்சன நீராடினார். சமுதாயக் குறிப்பறிந்த நந்தனார் தன் பிறவித் தீமை தொலைய தீமஞ்சனம் ஆடினார்.

இறைவனார் நந்தனார் குறிப்பறிந்து அருள்புரிந்தார். தொண்டர் குறிப்பறிந்து தொண்டு செய்யும் திருக்குறிப்புத் தொண்டர் வரலாறு அடுத்து இடம்பெறும்.

மெய்ப்பொருள்

தாழ்ந்த வாளைமீன் உயர்ந்த வானைத் தொட்டது. தாழ்ந்த நந்தனார் உயர்ந்த இறைவன் மனம் தொட்டார். வாளைமீன் தென்னையைத் தாக்கிப் பலாக்கனியில் மூழ்கியது. நந்தனார் குலத்தாழ்வு தாக்கினும் பக்திக் கனியில் மூழ்கினார். நந்தனார்தம் மாசினைச் சிவத்தொண்டு தீ எரித்துப் பொசுக்கியது.

நாற்சீர் நாலடிக் கலிவிருத்தப் பாக்களால் திருநாளைப் போவார் புராணம் அமைந்துள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளும் உணர்ந்த நல்லடியாராக நந்தனார் விளங்கினார். கோயில்கட்கு வார்முரசத் தோல் வழங்கினார். தேடிய பொருள் கொண்டு திருப்புன்கூர்ச்சிவன் கோயில் முன்திருக்குளம் அமைத்தார். சிவசிந்தனையில் இன்பம் கண்டார். இறைவன் அருளால் பிறவிப் பிணி நீங்கி வீடுற்றார்.

நாளை போவேன் எனச் சிவத்திருக்காட்சிச் சிந்தனை யில் நந்தனார் இருந்ததால் நந்தனார் திருநாளைப் போவார் எனச் சிறப்பு பெற்றார்.

மாடு, ஆடு முதலியன இறந்தபின்பும் அவற்றின் தோல், நரம்பு முதலியன முழவுக்கும் முரசுக்கும் இசைக்கும் யாழுக்கும் உதவும். அதுபோல ஆன்றோர் வாழும்போதும் வாழ்நாளுக்குப் பின்னும் சமுதாயத்திற்குப் பயன் உள்ளவர்களாக விளங்குவர்.

அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில்
திருப்புன்கூர் அஞ்சல், சீர்காழி வட்டம்,
அஞ்சல் - 609 112.

Koviloor Digital Library

29. திருக்குறிப்புத் தொண்டர்

(110+18+128 பாடல்கள்)

1. உமாதேவியாரின் தவம் – 32 அறங்கள்

2. தொண்டை நாட்டுச் சிறப்பு

3. பழையனூர் நீலியின் கதை

பிறந்த ஊர்	:	காஞ்சிபுரம் (தொண்டை நாடு)
குலம்	:	வண்ணார்
குருபூசை மாதம்	:	சித்திரை
நட்சத்திரம்	:	சுவாதி
காலம்	:	திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலம் (கி.பி. 660 – 840)

'திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்' (திரு. தொகை 3:2)

காமாட்சி தவச் சிறப்பு

தொண்டை நாட்டு வளம், காமாட்சித் தாயார் தவவளம் என்ற இரு பகுதிகளும் திருத்தொண்டர் பக்தி வளத்தோடு சேர்த்துச் சொல்லப்பெற்றுள்ளன.

தொண்டை நாட்டு வளம்

தொண்டை நாடு உமாதேவி இறைவனைத் தழுவத் தவம் புரிய மாதவம் செய்தது. தவம் சான்ற பெருங்குடிகள் நிறைந்தது. பழையனூர் நீலியால் வணிகனுக்கு உயிரிழப்பு வந்தபோது பழையனூர்ச் சான்றோர் வாக்குத்தவறாமல் உயிர் துறந்தனர். சேரன் தொண்டை நாட்டு வீரர்களோடு மணஉறவு வைத்துக்கொண்டான்.

நானில வளம்

நானில வளம் தொண்டை நாட்டின் வளத்தையும் சமுதாயத்தின் தேவை நிறைவு நிலையையும் (Self Sufficient Society) தெளிவுறக்காட்டுகிறது.

குறிஞ்சி நில வளம்

குறவர் (குன்றவர்) புவியிலுள்ள மாணிக்கங்களை அரித்து எடுத்துவிட்டுத் தினை விதைப்பர். கொடிச்சியராகிய மண்ணகக்

Koviloor Digital Library

குறத்தியரோடு விண்ணக மகளிர் சுனை படிந்தாடுவர். அருவி நீரில் நெய்தல் நிலக் கயல் மீனும், முல்லை நிலக் கலைமானும் துள்ளி விளையாடும். தேன் கலந்த தினை இடிக்கும் வள்ளைப் பாட்டொலி எங்கும் பரவும். மேகங்கள் மணிகளைச் சொரியும். வண்டு மலர்த்தேன் உண்டு, குறிஞ்சிப் பண்ணிசைக்கும். தினையை மயில்மேயாமல் மயில் சாயல் மங்கையர் காத்து வந்தனர்.

முல்லை நிலவளம்

பசுக்கள் மானுடன் கலந்து மேயும். கொன்றை பொன் சொரியும். கார்கால முல்லை மலர் புன்முறுவல் பூக்கும். பசு மேயும் புல்வெளிகள் பரந்தகன்று இருந்தன. குருந்த (சிறிய) மரமாகிய எலுமிச்சையில் முல்லைக் கொடிகள் படர்ந்து செழித்திருந்தன. ஆயர் மகளிர் பல்லழகைக் கவர்ந்த முல்லை தன் நகைமுகம் காட்டிப் புன்னகைப்பன போலப் பொலிந்தன.

குறவர் பல்மணி அரித்துஇதை விதைப்பன குறிஞ்சி
கறவை ஆன்நிரை மான்உடன் பயில்வன கானம்
பறவை தாமரை இருந்துஇறவு அருந்துவ பழனம்
சுறவ முள்மருப்பு அணங்குஅயர் வனகழிச் சூழல் (7)

மருத நில வளம்

நீர்த்துறைகள் கயல்மீன்களை அலைக்கரங்களால் அணைத்து ஒதுக்கும். பறவை தாமரை மலர்மீது இறால் மீனை வைத்துண்ணும். ஆறுகள் முத்தும் வண்டலும் அடித்துக்கொண்டு வரும். மக்கள் நெய் கலந்த நெற்சோறு உண்பர். கிளி மருத மரத்தில் கண்துயிலும். ஏர்த்தொழிலுக்கு உதவும் ஏரி எங்கும் தாமரை நிறைந்து இருக்கும். பிள்ளை தடவப் பெருகும் தாய்ப்பால் போல மணலை வருடப் பாலாற்றுத் தாய் மடைஉடைய நீர் சுரப்பாள். உழவர் நெல் விதைக்கும் ஒலியும், நாற்றுப் பறித்து நடுபவர் ஒலியும் எங்கும் நிறைந்துள்ளன. சேல் மீன்கள் இருகரையாய் அமைய, வரால் மீன்களும் வாளை மீன்களும் வெள்ளத்தைத் தடுத்தன. கமுகு வாழை நிறைந்த சோலைகள் மிக்கு உள்ளன.

பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
வெள்ள நீர்இரு மருங்குகால் வழிமிதந்து ஏறிப்
பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி. (22)

Koviloor Digital Library

நெய்தல் நில வளம்

மீனவ மகளிர் முத்துக்களை மணலில் உலர வைப்பர். மீனவ மகளிர் வலிய சுறா மீனின் முள்ளைப் பிடித்திழுக்கும் வன்மையர். மீன் கலந்த உணவு உண்பர். தாழை மலர் தாது சொரிந்து மணத்துடன் நிழல் தரும். பரதவர் வலை தொடுப்பர். பரத்தியர் செருந்தி மலரும் பவளமும் தொடுப்பர். சங்கு குளிப்பர். மணற்கேணியில் மங்கையர் குளிப்பர். நுளையர் உப்பளப்பர் – நுளைச்சியர் – முத்தளப்பர்.

கொடுவி னைத்தொழில் நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்
படும ணல்கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்
தொடுக டல்சங்கு துறையவர் குளிப்பன அவர்தம்
வடுவ கிர்க்கண்மங் கையர்குளிப் பனமணற் கேணி. (35)

காமாட்சித்தாயார் காஞ்சி மாவின் கீழ்
சிவனை இலிங்க வடிவில் வழிபடுதல்

அம்மை காஞ்சியில் கம்பையாற்றில் மணலால் சிவலிங்கம் பிடித்துப் பூசை செய்ய பெருமான் பணித்தார். கம்பையாற் றங்கரை மாமரவேரில் சிவனார் காட்சி தந்தார். தேவி அருச்சனை செய்யத் தொடங்கினாள். தேவி பூசனைக்குத் தெய்வ மகளிர் வனமலர் கொய்தனர். கொய்த மலர் கொண்டு உமாதேவி ஆகம விதிப்படி பூசை செய்தார்.

கம்பையாற்றில் வெள்ளம் பெருகுதல்

அம்மை பூசை வேளையில் பெருமான் திருவிளையாட்டால் கம்பை ஆற்றில் வெள்ளம் எழுகடல் வெள்ளம்போல் கரைபுரண்டோடியது. பூசனை செய்த அம்பிகை பக்தி வெள்ளம் பெருகித் தழுவியதும் பெருமான் குழைந்து கொடுத்தார். நிலத்திணை இயங்கு திணை எல்லாம் கம்பையாற்றை வந்து வணங்கின. ஏகாம்பரநாதர் வளைத்தழும்பும் மார்புத்தழும்பும் பெற்றுக் காட்சி தந்தார். பூசை முற்றவும் முடியவும் எண்ணான்கு (32) அறங்கள் இயற்றப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினார். புண்ணியத் திருக்காமக்கோட்டத்தில் தேவி முப்பத்திரண்டு வகை அறங்களையும் செய்தார். தேவி பூசை செய்த இடமாதலின் காஞ்சி கல்வியும் செல்வமும் நிறைந்து இருக்கின்றது.

எண்ண ரும்பெரு வரங்கள்முன் பெற்று அங்குஎம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடு செய்தருளி மனைஅ றம்பெருக் கும்கரு ணையினால்
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப் பொலிய முப்பதோடு இரண்டுஅறம் புரக்கும்.
(71)

Koviloor Digital Library

புண்ணியத் தீர்த்தங்கள்

காஞ்சியில் உள்ள இட்டசித்தி, மங்கல தீர்த்தம், சருவ தீர்த்தம் என்ற புண்ணியத் துறைகளில் விண்ணவரும் வந்து புனித நீராடிச் செல்வர். தாமரைத் தடாகநீர், நீர்சுரக்கும் மாநதியுடன் கலக்கும். நஞ்சு நீக்கும் பொய்கை ஒன்றும், சித்தர், இயக்கர், விஞ்சையர், கந்தருவர் ஆகியோர் வணங்கும் வெளி ஒன்றும் காஞ்சியில் உள்ளன. முனிவர்கள் வணங்கும் யோக பீடமும், அறம்புரக்கும் ஐயன்போக பீடமும் காஞ்சியில் உள்ளன. காஞ்சி உருத்திர சோலையை வணங்கினால் பிறப்பழியும்.

மதிலும் அகழியும்

கரிகாலன் புலிபொறித்த இமயம்போலக் காஞ்சி மதில் உயர்ந்து விளங்கும். அகழி நன்னீரும் காஞ்சி ஆறுகளின் நீரும் கடலுடன் கலந்து கடல்நீர் உவர்ப்பு மாறும்.

மக்கள் ஒற்றுமை

முல்லை நிலத்தார் முயலும் சேவலும் கொடுத்து நெய்தல் நில மீனவரிடமிருந்து மீன் பெற்றனர்; அவரை வரகு கொடுத்துப் பவளமும் முத்தும் பெற்றனர்.

மருத நில உழத்தியர் நெய்தல் நில முத்துக்களைத் தொகுத்தனர். நெய்தல் நில மீனவர் மருதநிலக் கமுகிலிருந்து உதிர்ந்த பாக்குகளைத் தொகுப்பர்.

மருதநில உழத்தியர் சாயலைப்பெறக் குறிஞ்சி நில மயில் நடந்து வந்தது. மகளிர் செம்பஞ்சுக் குழம்பு கலந்த நீர்நிலைகள் பவளக் கடல் போல் விளங்கின.

காஞ்சி நகர் வீதிகளில் போர்க்கருவி பயிலும் ஒலியும், பண்டமாற்று ஒலியும், வேள்வி மந்திர ஒலியும் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும். பெண்கள் நடமிடும்போது மணிகள் சிந்துதலால் காஞ்சி வீதிகளில் மலர் மழை பெய்ததுபோல் வீதிகள் ஒளியோடு சிறந்து விளங்கும்.

பழையனூர் நீலி கதை

ஓர் ஆடவன் பரத்தையரிடம் ஆசை கொண்டான். அவனைத் திருத்த அவன் மனைவி எவ்வளவோ முயன்றாள். ஒருநாள் அவன் ஒரு விழாவுக்குச் சென்ற வழியில் தன்னுடன் வந்த மனைவியைக்

Koviloor Digital Library

கொன்றான். கொலையுண்ட மனைவி நீலி என்னும் பேயானாள். அவளைக் கொலை செய்த கணவன் மாண்டபிறகு மறுபிறவியில் ஒரு வணிகனாகப் பிறந்தான்; அவனுக்கு ஒருமுன் பழி உள்ளதென்று ஒரு பெரியவர் அவனிடம் கூறி, வாள் ஒன்றைக் கொடுத்தார். அந்த வாள் அவன் கையில் இருக்கும் வரை அவனுக்கு எந்தத் தீங்கும் நேராது என்று அவர் சொல்லிவிட்டுச் சென்றார். ஒருநாள் அந்த வணிகன் வியாபார வேலையாகப் பயணம் செய்ய நேர்ந்தது. அப்போது பேயாய நீலி ஒரு மாயக் குழந்தையுடன் அவனைப் பின்தொடர்ந்தாள். இருவரும் பழையனூர் வேளாளர்கள் எழுபதின்மரிடம் வந்தடைந்தார்கள். நீலி என்னும் மங்கையுருவில் இருந்த அந்தப் பேய் "இவன் என் கணவன்!" என்னை வெறுத்துப் பரத்தையர் வயப்பட்டிருக்கிறான்" என்றாள். வணிகனோ "இவள் பேய்!" என்றான். அவளோ குல முறைகளை ஒழுங்காகச் சொல்லி மாயக் குழந்தையைக் கீழே விட்டாள். அக்குழந்தை செட்டி மீது தாவி விளையாடியது. அதைக்கண்ட வேளாளர்கள் அவர்கள் இருவரையும் கலந்து பேசுமாறு, அங்கிருந்த ஒரு மண்டபத்திற்கு அனுப்பி வைத்தார்கள். நீலியோ, 'இவன் கையில் வாள் இருக்கிறது. அந்த வாளால் என்னைக் கொன்று விடுவான்!" என்று பயத்துடன் கூறினாள். வணிகனோ, "இவள் பேய்! என் கையில் வாள் கட்டாயம் இருக்க வேண்டும்!" என்றான். அதைக் கேட்ட வேளாளர்கள் "உன் உயிருக்கு எங்கள் உயிரைக் கொடுப்போம்! வாளை எறிந்துவிட்டு அவளுடன் செல்வாயாக!" என்று வாக்குறுதி தந்தார்கள். வணிகன் நீலியுடன் மண்டபத்திற்குள்ளே நுழைந்தான். நீலி என்னும் பேய் மங்கை அவனைக் கிழித்துக் கொன்றாள். மீண்டும் அந்த நீலி, செட்டியின் தாயைப்போல் வேறு வடிவம் கொண்டு, வேளாளரை அடைந்து, "என் மகனைக் காணோம்! அவன் இங்கே வந்தான் என்று கேள்விப்பட்டு வந்தேன்!" என்று முறையிட்டாள். வேளாளர்கள் மண்டபத்துக் கதவைத் திறந்தார்கள். அங்கே வணிகன் மாண்டு கிடந்ததைக் கண்டார்கள். பிறகு பழையனூர் எழுபதின்மரும் தாங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற தீ வளர்த்து அதில் மூழ்கி உயிர் துறந்தனர்.

நல்திறம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்து
உற்றபோதுதம் உயிரையும் வணிகனுக்கு ஒருகால்
சொற்ற மெய்ம்மையும் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு. (3)

அருள்மிகு ஏலவார் குழலி உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 631 502. காஞ்சிபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

30. தொண்டை நாட்டுச் சிறப்பு

(திருக்குறிப்புத்தொண்டர்)

காஞ்சிபுரம் வளம்

'நமசிவாய' எனும் அடியார் ஆரவாரம் எங்கும் நிறைந் திருந்தது. அங்கு மக்கள் தம் தேவை நிறைவுற்று வாழ்ந்தனர். பூந்தாது துகள் வடிவில் இருந்தது. வேறு துகள் (குற்றம், தூசு) மக்களிடம் இல்லை. நீண்ட மாலைகள் தாழ்ந்தன. மக்கள் தாழ்ந்த நிலையில் பண்பிலும், செல்வத்திலும் இல்லை. குங்குமச் சேறு இழுக்குடையது. மக்களிடம் இழுக்கு (குற்றம்) இல்லை. காஞ்சி மக்கள் ஒழுக்கம் உடையவர்.

காஞ்சி மக்கள் இழுக்கம் இன்றி இருப்பதால் அனைவரும் உயர் பிறப்புடைய அடியார்களாய் விளங்கினர். மண்ணிலும் விண்ணிலும் உள்ளோர் காஞ்சியில் உள்ள ஏகாம்பரநாதரைத் தாம் இருக்கும் இடங்களில் இருந்து கொண்டே நினைத்தாலும் அவர்களின் நல்ல விருப்பங்கள் நிறைவேறும். மாதவிக் கொடி புறம் சூழும். மக்கள் புறம் சூழார். உலக வளமனைத்தும் காஞ்சியில் நிறைந்துள்ளது.

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை (மூதுரை : 10)

என்பது ஔவையின் வாக்கு. காஞ்சியில் உள்ள மக்கள் அனைவரும் நல்லோர். நல்லவர் ஒருவர் இருந்தாலும் அவர்க்காக மழை பொழியும். 'காஞ்சியில் அனைவரும் நல்லோர்' மழை வளத் துக்குக் குறைவில்லை.

வேதியர் வேள்வியே தீயது (தீ+அது). வேறு தீயது காஞ்சியில் இல்லை. மாதர் கூந்தல் மலர்கள் பிணிப்பு (கட்டப்பட்டு) உடையன. மக்களிடையே பிணி இல்லை. காஞ்சி வீதிகள் கவலை (பிளவு) உடையவை. மக்களிடையே கவலை இல்லை.

வேத வேதியர் வேள்வியே தீயன
மாதர் ஓதி மலரே பிணியன
காதல் வீதி விலக்கே கவலைய
சூத மாதவி யேபுறம் சூழ்வன (106)

Koviloor Digital Library

மாதர் இடை தளர்வதன்றி மக்கள் மனம் தளரார். மாடக் கொடி அசையுமே தவிர மக்கள் மனம் அசைந்து வருந்தார். முகபடாமிட்ட யானையே திகைக்கும். மக்கள் திகையார். சோலை மரங்கள் பயத்தனவே (பயன் தருவன) யன்றி மக்களிடையே பயமில்லை. சாயலர்கள் நுசுப்பே தளர்வன.

சாய லார்கள் நுசுப்பே தளர்வன
ஆய மாடக் கொடியே அசைவன
சேய ஓடைக் களிறே திகைப்பன
பாய சோலைத் தருவே பயத்தன. (107)

திருக்குறிப்புத் தொண்டர் அவதாரம்

காஞ்சியில் சென்றால் காலாட்டிச் சாப்பிடலாம் என்பது பழமொழி. அங்குப் பட்டு நெசவு அதிகம். நெசவுத் தொழிலுக்குக் காலாட்டியே ஆகவேண்டும். அதனால் மேற்கண்ட பழமொழி எழுந்தது. இன்று விசைத்தறிகள் வந்துவிட்டன. காஞ்சி நகர் முத்தி நகர் ஏழில் ஒன்று. இத்தகைய காஞ்சியில் மண்ணார் (ஏகாலி – வண்ணார்) குலத்தில் திருக்குறிப்புத் தொண்டர் அவதரித்தார். 'மண்ணுதல்' என்ற சொல் குற்றம் களைதல் என்ற பொருள் உடையது. துணிகளின் மாசினை மண்ணுதலின் (கழுவிக்களைதல்)அக்குலத்தவர் மண்ணார் எனப் பெற்றனர். போர்க்குச் செல்லும் வேந்தர் வாளையும், குடையையும் வணங்கி எடுக்கும் விழாக்கள் வாள் மண்ணு மங்கலம், குடை மண்ணுமங்கலம் எனப் பெயர் பெற்றன.

மனம்மொழி மெய்களால் தொண்டர் குறிப்பறிந்து தொண்டு செய்ததால் திருக்குறிப்புத் தொண்டர் எனச் சிறப்பிக்கப் பெற்றார்.

தேரின் மணி ஒலியும், குதிரை கனைப்பொலியும் தவிர மக்கள் கலங்கும் அவல ஒலியற்ற காஞ்சியில் அடியார்களின் உடை மாசினை (அழுக்கினை)க் களையும் திருத்தொண்டு செய்து தம் பிறவி மாசு போக்குவார் திருக்குறிப்புத் தொண்டர். அடியார் பெருமை உலகுக்கு அறிவிக்கச் சிவபெருமான் மாதவ வேடந்தாங்கி, குறுநடை கொண்டு அடியார் முன்வந்தடைந்தார்.

சிவயோகத் தவ வடிவம்

கருமேகம் என அழுக்குக் கந்தையுடன் வந்த இறைவரைக் கண்டு மயிர்ப்புளகம் கொண்டு வரவேற்றார் தொண்டர். கந்தையைச் சுத்தம் செய்து தருவதாகப் பெருமானிடம் தொண்டர் உரைத்தார். இக்கந்தை அழுக்கு எடுக்க முடியாது என்றாலும் இதன் அழுக்கை எடுக்காமல் விடமாட்டேன் என்றார் தொண்டர். மேல்கடலில்

Koviloor Digital Library

கதிரவன் விழுமுன் தருவதாயிருந்தால் அழுக்குடை தருவேன் என்று பெருமான் உரைத்தார்.

இக்கந்தையை வெளுத்து உலர்த்திப் பொழுது சாய்வதன் முன் தருவேன் என்றார் தொண்டர்.

அந்தி படுவதன் முன் தராவிட்டால் எளியேன் உடற்கு இடர்செய்தவர் ஆவிர் என்றார் பெருமான்.

தந்தருளும் இக்கந்தை தாழாதே ஒலித்துஉமக்குஇன்று
அந்திபடு வதன்முன்னம் தருகின்றேன் எனஅவரும்
கந்தைஇது ஒலித்துஉணக்கிக் கடிதுஇன்றே தாரீரேல்
இந்தஉடற்கு இடர்செய்தீர் என்றுகொடுத்து ஏகினார். (120)

அந்தத் துணியைத் துவைத்து மாசுபோக்கி உலர்த்துவதன் முன் இறைவன் திருஅருளால் மழை பொழிந்தது. விழிநுழையாவகை அடர்மழை பெய்தது. என் செய்வல் என அடியார் வருந்தினார். மழை பொழிந்தது. காற்று அடிக்கவில்லை. "துணி மாசுபோக்கும் கற்பாறையில் என் தலையை மோதி உயிர்துறப்பன்" எனப் பாறையில் தலையை மோதினார் தொண்டர். வளைந்த கம்பராகிய சிவபெருமான் அடியாரைப் பிடித்தார். விண்ணவர் மலர்மாரி பொழிந்தார். காளைமேற் காட்சி தந்த ஏகாம்பரநாதரை அடியார் வணங்கினார்.

பெருமான் கந்தையைத் (துணி) துவைக்க முடியாத திருக்குறிப்புத் தொண்டர் தன் கந்தை உடலை ஒழிக்க முயன்றார். வென்றார்.

காஞ்சி காமாட்சி அம்மையார் இறைவர் வழங்கிய இருநாழி நெல் கொண்டு வளர்த்த முப்பத்திரண்டு அறங்கள்

1. துன்புற்றோர்க்கு உணவும் உறையுளும் வழங்கும் சாலை.
2. கற்பவர்க்கு உணவு.
3. அறுசமயத்தவர்க்கு உண்டி.
4. பசுவிற்கு வாயுறை.
5. சிறைச் சோறு.
6. ஐயம்
7. தின்பண்டம் நல்கல்.
8. பற்றுக்கோடற்றவருக்குச் சோறு.
9. மகப்பேறு அற்றோர் சிவபுண்ணியப் பேற்றிற்கு ஆளாதல்.

Koviloor Digital Library

10. மகவு வளர்த்தல்.
11. மகவுக்குப் பால் வார்த்தல்.
12. பற்றுக்கோடற்றார்க்கு இறுதிக் கடன் செய்தல்.
13. பற்றுக்கோடற்றார்க்கு ஆடை வழங்குதல்.
14. சுண்ணம் வழங்குதல்.
15. நோய்க்கு மருந்து.
16. வண்ணார்க்கு உதவுதல்.
17. நாவிதர் உதவி.
18. கண்ணாடி வழங்கல்.
19. காதோலை நல்கல்.
20. கண்மருந்து கொடுத்தல்.
21. தலைக்கெண்ணெய் வழங்கல்.
22. பெண்போகம் நுகர்தற்காம் சூழலை வழங்கல்
23. பிறர்துயர் காத்தல்.
24. தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்.
25. மடம் அமைத்தல்.
26. குளம் தோண்டல்.
27. சோலைகளை உண்டாக்கல்.
28. உராயும் தறி அமைத்தல். (பசுக்களுக்கு கொட்டகை அமைத்தல்)
29. விலங்கிற் குணவு தருதல்.
30. ஏறுவிடுத்தல்.
31. விலைகொடுத்து உயிர் காத்தல்.
32. மகட் கொடை.

அருள்மிகு ஏலவார் குழலி உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோயில்,
காஞ்சிபுரம் 631 502. காஞ்சிபுரம் மாவட்டம்.

நன்றி : முனைவர் கு. சுந்தரமூர்த்தி, திருத்தொண்டர் புராணம், பக். 939–940.

Koviloor Digital Library

31. சண்டேசுரர்

(60 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	திருசேய்ஞலூர் (கும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் வழியில் 15ஆவது கி.மீ. தொலைவில் உள்ளது.)
குலம்	:	அந்தணர்
குருபூசை மாதம்	:	தை
நட்சத்திரம்	:	உத்திரம்
காலம்	:	அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயனார் (கி.பி. 300 – 600)

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச் சண்டிப் பெருமானுக் கடியேன் (திரு. தொகை 3:3)

திருச்சேய்ஞலூர் வளம்

பொன்னியாற்றின் தென்கரையில் உள்ள சேய்ஞலூரில் உள்ள அந்தணர் வெண்ணீற்று ஒருமை நெறியாளர். இறை பற்றாளர், இருபிறப்பாளர். முத்தீ வேள்வி செய்பவர். நான்மறை முறையாகப் பயின்றோர். ஐம்புல ஒழுக்கம் உடையோர். ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல் என்ற ஆறு தொழில் செய்வோர். ஏழுலகமும் போற்றும் மறையோர் வாழும் ஊர் சேய்ஞலூர்,

செம்மை வெண்ணீற்று ஒருமையினார் இரண்டு பிறப்பின் சிறப்பினார்
மும்மைத் தழல்ஓம் பியநெறியார் நான்கு வேதம் முறை பயின்றார்
தம்மை ஐந்து புலனும்பின் செல்லும் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழ்உலகும் போற்றும் மறையோர் விளங்குவது (2)

இந்த அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்று முதல் ஏழு வரை இடம்பெற்ற எண்ணலங்காரம் ஆகும்.

வேத பாடசாலை

வேதம் கற்பிக்கும் ஆசிரியரும் வேதங் கற்கும் மாணவர் களும் மதியும், மதிசூழ்ந்த விண்மீன்களும் போல் விளங்கினர்.

Koviloor Digital Library

வேள்விக் கூடம்

சாலைதோறும் வேள்விக் கூடங்கள் நிறைந்திருந்தன. வேள்வி அவியுணவை மாலும் அயனும் ஊர்கின்ற கருட அன்னப் பறவைகள் வந்துண்ணும். இவ்வேள்வியில் விண்ணவர்கள் கலந்து கொள்ள வருவர்.

இயற்கை வளம்

அரச வீதிகளில் பால் வழிந்தோடும். வயல் வரப்பில் நீரலைகள் முத்துக்களைக் குவித்துச் செல்லும். மடையில் குவளை பூக்கும். வயலில் நெற்கதிர் முற்றி விளைந்து நிறையும். வயலோரங்களில் கன்னல் செழித்து வளர்ந்து வளம் காட்டும். கமுகு பாளை விரிந்து விளங்கும். தாமரை மலர்களில் கயல் மீன்கள் தூங்கும். முல்லைக்கொடி காஞ்சி மரங்களில் படர்ந்து தவழும். சோழ நாட்டுத் தலைசிறந்த ஊர்களுள் சேய்ஞலூர் ஒன்று.

பண்ணின்பயன் நல்லிசை. பாலின்பயன் இன்சுவை. கண்ணின் பயன் நல்லொளி. கருத்தின்பயன் நமசிவாய என்ற அஞ்செழுத்து. விண்ணின் பயன்மழை. வேதப் பயன் சைவம். இவைபோல மண்ணின் பயனாகிய வளம் நிறைந்தது சேய்ஞலூர்.

பண்ணின் பயனாம் நல்இசையும், பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகுஒளியும், கருத்தின் பயனாம் எழுத்துஅஞ்சும்
விண்ணின் பயனாம் பொழிமழையும் வேதப் பயனாம் சைவமும்போல்
மண்ணின் பயனாம் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புஉடைத்தோ? (9)

சண்டீசர் அவதாரம்

சேய்ஞலூரில் காசிப கோத்திரத்தில் மாணிக்க மணியும் நஞ்சும் கொண்ட பாம்புபோல எச்சதத்தன் என்பான் வாழ்ந்து வந்தான். அவன் வாழ்வுத் துணையாள் சைவ அடியார்களைப் பேணும் பவித்திரை. (பவித்திரம் : தூய்மை) ஏழுலகும் உய்ய நடமிடும் கூத்தப் பெருமானைப் போற்றும் சைவ சமயம் வளர விசாரசருமர் இவர்கட்குப் புதல்வராய்த் தோன்றினார். ஐந்து வயது நிறையும் முன் மொட்டில் வாசம் வெளிப்பட்டாற்போல் வேதத்தின் ஆறங்கமும் பயின்று உணர்வு சிறந்து ஞான மணம் வீச விளங்கினார்.

அருள் உள்ளம்

சிவன்பால் தணியாக் காதல் கொண்டார். ஆநிரை மேய்ப்போன் இரக்கமின்றி ஆவினைக் கோல் கொண்டு தாக்கினான்.

Koviloor Digital Library

ஆவின்மேல் அருள்கொண்டு அடிப்பதை விலக்கினார். ஆவாகிய பசுவிடம் எல்லாத் தீர்த்தங்களின் புனிதங்களும் உள்ளன. எல்லாத் தேவர்களும் முனி கணங்களும் ஆவில் அடக்கம். பெருமான் திருமுழுக்கிற்குப் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய ஐந்தினையும் (ஐந்தெழுத்துப் போல) தருவது பசு. (அ:சிவன் – பதி; ஆ:சீவன் பசு) கோ - என்றால் வடமொழியில் 'பசு' என்பது பொருள். 'கோ' தரும் ஐந்து என்பதால் 'பஞ்ச கௌவியம்' எனப்பெற்றது.

பெருமான் நினைவோடு நாம் பூசும் வெண்ணீற்றிற் குரிய சாணம் தருவது. பெருமான் பிராட்டியோடு காட்சியளிக்கும் காளையைத் தந்தது பசுவன்றோ?

பயிர் காக்கும் வான்மழைபோல் ஆவினைக் காக்கும் பொறுப்பைத் தான்மேற்கொண்டார். விசார சருமர் மார்பில் பூணூல் தவழ அரைக் கோவணம் அணிந்து பசுக்கள் புல் மேயும் அளவு மேய்த்தார். உரிய நீர் ஊட்டிப்பால் உதவும் பொழுதில் பசுக்களை உரியோர் இல்லம் சேர்த்தார்.

தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாம்உடைய அல்லவோ நல்ஆன் இனங்கள் (19)

விசாரசருமர் பசுவின் பாலைத் திருமஞ்சனம் செய்து வணங்கி மனம் மொழி மெய்களால் ஒன்றி அர்ச்சனை செய்தார். பல நாட்கள் இங்ஙனம் பூசனை தொடர்ந்தது. பசுக்கள்பால் சொரிவது கண்ட ஒருவன் ஊரில் தெரிவிக்க ஊரவர் விசார சருமர் தந்தை எச்சதத்தனிடம் முறையிட்டனர். எச்சதத்தன் ஊர் மக்களிடம் பிழை பொறுக்க வேண்டினான்.

சிவபூசை

விசாரசருமர் பசுக்கள் தாமே குடம் குடமாய்ச் சொரிந்த பாலை இலிங்கத்தின்மேல் திருமுழுக்காட்டிப் பூக்கொண்டு அர்ச்சித்தார். பூசையினைக் கண்ட எச்சதத்தன் மகன் முதுகில் ஓங்கி அடித்தான். பூசனையில் ஈடுபட்டிருந்த விசாரசருமர் அடித்த அடியை அறிந்திலர். மஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிதைத்தான் எச்சதத்தன்.

தந்தை காலைச் சிதைத்தல்

விசாரசருமர் கோல் எடுத்து, திருமஞ்சனக் குடத்தை இடறிய தன் தந்தையின் காலில் ஏறிய, அது கோடாரியாக மாறித் தந்தையின் காலைத் துண்டித்தது. விசாரசருமர் முன்போல் பூசையில் ஈடுபட்டார்.

Koviloor Digital Library

பூதகணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்துஏத்த விமல மூர்த்தி திருஉள்ளம்
காதல் கூர வெளிப்படலும் கண்டுதொழுது மனம் களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார் பக்தி முதிர்ந்த பாலகனார். (53)

பூதகணங்கள் புடைசூழ சிவபெருமான் காட்சி தந்தார். ''தந்தை என்றும் பாராது பூசை சிதைத்த தந்தையை வெட்டினாய். இனிநாம் உனக்குத் தந்தை. யாம் எழுந்தருளும் கோயிலில் உண்பன, உடுப்பன உண்கலம் முதலியவற்றைப் பாதுகாக்கும் சண்டீசப் பதம் தந்தோம்'' என்று பெருமான் அருளினார். விசார சருமர் சண்டீசராய்ச் சிவலோகம் அடைந்து சிவன்மகன் ஆயினார்.

அண்டர் பிரானும் தொண்டர்தமக்கு அதிபன் ஆக்கி அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்குஆகச்
சண்டீசனும்ஆம் பதம்தந்தோம் என்றுஅங்கு அவர்பொன் தடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். (56)

சிவபெருமானுக்குச் சூட்டிய மாலை உடை அனைத்தும் சண்டீசருக்குரியவாகும்படிச் சண்டீசப் பதம் தந்தருளினார்.

மெய்ப்பொருள்

நன்கு மேய்ந்த பசு கறவாமல் தாமே பால் சொரியும். அதுபோல உலகெங்கும் இறைவன் தன் தண்ணளியினைக் கரவாமல் திருஅருள் பொழிகிறார். பசுவின்பால் மடியில்தான் வரும். அதுபோல இறைவன் உறையும் கோயிலாக மனத்தை ஆக்கி வழிபடும்போது இறைவன் அருள் நம் இருதய கமலத்துள் நிறையும். விசாரசருமர் மணலால் பிடித்த இலிங்கத்தில் பெருமான் எழுந்தருளினார். மனம் ஒன்றி, புலன் அடங்கி, உணர்வு சிறந்து பக்திமேலிட்டு அழஅழ அறிவெனும் ஜோதி புருவ மையத்தில் புலப்படும்; வெளிப்படும்; தொழிற்படும்.

அருள்மிகு சகிதேவி அம்மை உடனுறை சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் சேங்கனூர், திருப்பனந்தாள் அஞ்சல் - 612 504. திருவிடை மருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம்.

Koviloor Digital Library

32. திருநாவுக்கரசர் வரலாறு

(429 பாடல்கள்)

பிறந்த ஊர் : **திருவாமூர் – பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்.**

குலம் : **வேளாளர்**

குருபூசை மாதம் : **சித்திரை**

நட்சத்திரம் : **சதயம்**

காலம் : **அப்பரும் சம்பந்தரும் சமகாலத்தவர். (கி.பி. 600 – 660)**

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட
திருநாவுக்கு அரையன்தன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை 4:1)

திருமுனைப்பாடி நாட்டு வளம்

மண்ணில் துகள் (புழுதி) இருந்தது. மக்கள் மனத்தில் துகள் (குற்றம்) இல்லை. நல்லொழுக்கக் குடிமக்கள் நிறைந்து வாழ்ந்தனர். மணிமாடங்கள் நிறைந்து விளங்கின. வயலின் தானிய மணி களையும், தாமரை மலர்களையும் அடித்து வரும் நாட்டின் வனப்பு எண்ணில்லா வளம் பெருக பெண்ணை ஆறு ஓடிவரும். வாய்க் கால்களில் பெரிய வரால்கள் துள்ளி விளையாடும். கரும்புக் கணுக்களிலிருந்து தேனொத்த சாறு பொழியும். பால் பிடித்த நெற்கதிரும், பாக்குக் குலையும், முத்தும், குவளை மலரும் அகில் தூபமும், விருந்தும் திருமுனைப்பாடி நாடெங்கும் நிறைந்திருக்கும்.

கால்எல்லாம் தகட்டுவரால் கரும்புஎல்லாம் கண்பொழிதேன்
பால்எல்லாம் கதிர்ச்சாலி பரப்புஎல்லாம் குலைக்கமுகு
சால்எல்லாம் தரளம்நிரை தடம்எல்லாம் செங்கழுநீர்
மேல்எல்லாம் அகில்தூபம் விருந்துஎல்லாம் திருந்துமனை (4)

கரும்பு பொழிதேனும், கரும்புத் தோட்டத்தில் இடையில் கொழுத்த தேனும், பெருகி ஓடிய வெள்ளத்தைக் கரும்புச் சாற்றி லிருந்து காய்ச்சி எடுக்கப்பட்ட சர்க்கரைக் கட்டிகள் கொண்டு அடைப்பர். கதலிக் குலைகள் யானைத் துதிக்கை போலவும் கதிர்ச் செந்நெல் குதிரை முகம் போலவும், வண்டிகள் தேர் போலவும், வயல் உழவர்கள் காலாட்படை போலவும் விளங்கும் மருத நிலம் நாற்படை வேந்தனைப்போல் விளங்கும். குலையின் சுமைதாங்க மாட்டாத கமுகு மரங்கள் கூந்தல் சுமை ஆற்றா மகளிர் போல்

Koviloor Digital Library

நாணத்தால் தலைகவிழ்ந்து விளங்கின. வண்டுகளின் ஒலியைத் தவிர மக்கள் புலம்பல் ஒலி இல்லை. கருமேகம் போன்ற எருமையின் மடியில் செங்கண் வரால் மீன்கள் முட்ட எருமை சொரிந்த பால் வெள்ளலையாகப் பெருகிக் குளக்கரையில் மோதியது. வயலில் விளைந்த நெல்லை வீட்டில் போட இடமின்றி வயலோரத்தில் நெற்கூடமைத்து நிரப்பியிருந்தனர்.

வீட்டின் மாடங்களில் உள்ள பெண்களின் கூந்தலழகைக் காண மயிற்குலமும் முகில் (மேகக்கூட்டம்) குலமும் வந்தன. ஆலால சுந்தரரும், (திருநாவலூர்) திருநாவுக்கரசரும் (திருவாமூர்) பிறந்து சிறந்த நாடு திருமுனைப்பாடி நாடு (பண்ருட்டி – உளுந்தூர்பேட்டை இடையில் இவ்விரண்டு ஊர்களும் உள்ளன.).

திருஆமூர் வளம்

திரு ஆமூர் சைவநெறி தழைக்கும் ஊர். மார்பகம் சுமந்து மகளிர் இடை வருந்துமேயன்றி மக்கள் வருந்தார். சிலம்பும் மேகலையும் ஒலிக்குமேயன்றி மக்கள் அவல ஒலி இல்லை. மாடங்கள் ஓங்கி விளங்கும். தீங்குநெறி நீங்குமேயன்றித் திருநீங்காத் தன்மை உடையது. மலர்க்குவளையால் வயல் அழகுபெறும். மதிலில் மறு உள்ளது. மக்களிடம் மறு இல்லை. இருளில் கருமை உண்டு. மக்களின் உள்ளத்தில் கருமை எனும் குற்றம் இல்லை. கரையில்லாப் பெரு வளங்கள் நிறைந்துள்ளன. வழுவாத பெருமை யுடைய குடிமக்களுள் குறுக்கையர் குடி சிறந்தது. குறுக்கையர் குடியிற் சிறந்த புகழனார் மாதினியார் ஆகிய மனையறத் தம்பதிகட்குத் திலகவதியார் பிறந்தார். பிறந்த சில ஆண்டுகட்குப்பின் பல கலை களும் சைவமும் தழைத்தோங்க உலக மக்களின் அக இருளாகிய மருள்நீக்க மருள்நீக்கியார் தோன்றினார்.

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண்டு அகன்றதன்பின்
அலகுஇல்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல
மலரும்மருள் நீக்கியார் வந்துஅவதா ரம்செய்தார். (18)

திலகவதியார்க்கு மணம் பேசிய **கலிப்பகையார்** மகேந்திரப் பல்லவனின் படைத்தலைவர். 'கலிப்பகையார் போரில் விண்ணுலகு பெற்றவுடன் திலகதியார் இல்வாழ்க்கை துறந்தார். அரனார் ஐந்தெழுத்து ஓதி திருநீறு தரித்து திருவீரட்டனார் திருக்கோயிலில் (பண்ருட்டி, பண் உருட்டி) திருஅலகிட்டு, திருமெழுக்கிட்டுத் திருத்தொண்டு புரியலானார்.

Koviloor Digital Library

மருள்நீக்கியார் குளந்தொட்டும், காவளர்த்தும் (சோலை), புலவர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் தொண்டு செய்யலானார். பாடலி புத்திரம் (கடலூர்) சேர்ந்து சமண சமயம் சார்ந்து சமண சமயத்தார் தந்த **'தருமசேனர்'** என்னும் பட்டத்துடன் சிறந்து விளங்கினார்.

திலகவதியார், தம்பியார் சைவத்திற்கு மீளச் சிவனை வேண்டினர். முன்னமே தமையடைய தவம் செய்த மருள்நீக்கியாரைச் சிவனார் சூலை நோய் கொடுத்து ஆள்வதாகத் திலகவதி கனவில் கூறியருளினார்.

சூலை வேதனை தாங்கா மருள்நீக்கியார் திலகவதியார் தந்த திருநீறு அணிந்து **கூற்றாயினவாறு விலக்ககிலீர்** என்ற திருப்பதிகம் பாடிக்கோயிலை வலம் வந்தார். சூலை நோய் நீங்கித் தாய்ச் சமயமாகிய சைவத்திற்கு மீண்டார். சிவனால் திருநாவுக்கரசு என்றழைக்கப் பெற்றார். அழுக்காறு கொண்ட சமணர்கள் மகேந்திரப் பல்லவனிடம் முறையிட்டனர். மகேந்திரப் பல்லவன் அழைப்பைத் திருநாவுக்கரசர்,

நாம் ஆர்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்!
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை யில்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோ மல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை;
தாமார்க்குங் குடியில்லாத் தன்மை யான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகி னோமே!' (தேவாரம் 6 : 98 : 1)

என்று பாடி மறுத்தார். ஆணைப்படி நீற்றறையில் அடியார் இடப்பெற்றார். 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தால் எவ்விதத் துன்பமுமின்றி நலமுடன் இருந்தார்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. (தேவாரம்: 5 : 90 : 14)

என்று நீற்றறையில் இருந்தபோது பெற்ற இன்பத்தைப் பாடுவார். நஞ்சூட்டினான். கடலில் கல்லைக் கட்டி மிதக்க விட்டான். யானைக்காலில் இடறச் செய்ய முற்பட்டான். 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரம் திருநாவுக்கரசரைக் காத்தது. மகேந்திர வர்மன் நாவுக்கரசர் தவ வலிமை கண்டஞ்சிச் சைவன் ஆகினான். பல சிவன்கோயில்களை மன்னன் அமைத்தான். திருத்தூங்கானை மாடத்திறைவன் பூதத்தை ஏவி திருநாவுக்கரசர் மேனியில் இடபக்குறியும் மூவிலைச் சூலமும் பொறிக்கச் செய்தார்.

Koviloor Digital Library

திருமறைக்காட்டு அற்புதம்

திருமறைக்காட்டில் கோயில் கதவு அடைத்திருந்தது. மக்கள் வேறு வழியில் சென்று வழிபாடு செய்து வந்தனர். சம்பந்தரும் அப்பரும் திருக்கோயில் கதவு திறக்கவும் சாத்தவும் பாடி அருளினர்.

இறந்தவரை உயிர்த்தெழச் செய்தமை

திங்களூரில் அப்பூதி அடிகள் மகனைப் பாம்பு தீண்டியது. அப்பர் 'ஒன்று கொலாம் அவர் சிந்தை' என்ற பதிகம் பாடி மாண்ட மைந்தனை மீண்டும் எழுப்பினார். சிறுத்தொண்ட நாயனார், திருநீலநக்கர், முருகனார் ஆகிய அடியார்களோடு திருச்செங் காட்டங்குடி இறைவனை வழிபட்டார்.

திருவீழிமிழலையில் பஞ்சம் நீக்கியமை

திருவீழிமிழலையில் பஞ்சத்தால் மக்கள் வாடியபோது அப்பரும், சம்பந்தரும் திருவீழிமிழலை இறைவனைப் பாடிப் பொற்காசு பெற்று மக்களைப் பஞ்சகாலத்தில் காத்தருளினர்.

பழையாறை இறைவனைச் சமணர் மறைத்தனர். இறை வழிபாடு நடத்த அப்பர் உண்ணா நோன்பு மேற்கொண்டார். வரலாற்றில் முதல் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தியவர் அப்பரே. இறைவன் அடியார் வேதனை துடைக்க மன்னன் கனவில் உரைத்தார். மன்னன் ஆணைப்படி பழையாறைக் கோயில் புதுப்பிக்கப்பெற்றது. மறைக்கப்பெற்றிருந்த சிவலிங்கம் ஜோதிலிங்கமாய்ச் சுடர்விட்டது.

இறைவன் திருக்காட்சி

கைலையில் இறைவனைக் காண அப்பர் சென்றார். கைலையில் அவர் மார்பால் தவழ்ந்து சென்றார். இறைவன் முனிவர் வடிவில் வந்து திருவையாற்றில் காட்சி கொடுப்பதாகத் திருவாய் மலர்ந்தருளினார்.

பிரணவ தேகத்துடன் திருவையாறு அடைந்தார். அப்பர் கண்களுக்கு எல்லா உயிரினங்களும் அம்மை அப்பராகத் தோன்றின.

'மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்றபோது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

எனப்பாடிப் போற்றி வணங்கினார்.

Koviloor Digital Library

ஐவர்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர், முருக நாயனார் ஆகிய ஐவரும் ஐந்தெழுத்து போல ஒருங்கிணைந்து திருப்புகலூர் இறைவனை வழிபட்டனர்.

இறுதியில் தமது 81–வது வயதில் திருப்பூம்புகலூரில் இறையடிச் சோதியில் கலந்தார்; நிறைந்தார். தள்ளாத வயதிலும் தள்ளாது சைவத் தொண்டு செய்த அப்பரைப் பெருமான் தன்னகத்துக் கொண்டார்.

மெய்ப்பொருள்

பெண்ணை ஆறு மணிகளையும் தாமரை மலர்களையும் அடித்துக் கொண்டு வந்ததாகச் சேக்கிழார் பாடினர். தாமரை மலர் திலகவதியாரையும், மணிகள் என்பது திருநாவுக்கரசரையும் குறிக்கும் அடையாளங்களாகும். தனக்கு மிஞ்சுவது தானமும் தருமமும் என்ற பழமொழிக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் அப்பர். ஒருவர் வாழ்வில் மிஞ்சுவது அவர் செய்த தானமும் தர்மமுமே ஆகும். மற்றொன்றும் அவர்க்கு உதவாது. அப்பர் செய்த தானமும், தருமமும் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரமும் அப்பரைப் பல நேரங்களில் வந்து காத்தன.

திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை. பல திசைகளிலும் உள்ள ஆன்மாக்கள் மீது வேறுபாடற்று அன்பு செலுத்துவார்க்குத் தெய்வம் துணைசெய்யும். 'சங்கநிதி பதுமநிதி' என்பதற்கேற்ப நீர்ச் செல்வமும், நிலச்செல்வமும் பெற்றிருப்பினும் கங்கை சூடிய சிவனுக்கு அடியார் அல்லராயின் அவர் அடி பணியோம். தாழ்ந்த குலத்தவர் கூத்தப்பெருமான் அன்பராயின் அவர்தாம் நாம் வணங்கும் கடவுள்" என்பது அப்பர் கொள்கை.

அருள்மிகு திரிபுரசுந்தரி உடனாய வீரட்டானேஸ்வரர்
வீரட்டானேஸ்வரர் திருக்கோயில்
திருவதிகை – 607 106.
பண்ருட்டி அஞ்சல், கடலூர் மாவட்டம்.

Koviloor Digital Library

33. திருநாவுக்கரசர் (பக்தி நெறி)

பக்திக்குப் பல சோதனைகள் வரும். அந்தச் சோதனைகளை எல்லாம் இறைவனின் ஐந்தெழுத்து மந்திரமே துணை எனக் கொண்டு வென்றவர் அப்பர்.

திலகவதியார் பக்தி நெறி

கணவர் என்று மணம் பேசிய நிலையில் கலிப் பகையார் போர்க்களத்தில் உயிர்நீத்தார். திலகவதியார் தாய் தந்தையும் விண்ணுலகடைந்தனர். திலகவதியார் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள எண்ணும்போது தம்பி தமக்கையின் திருவடிகளில் வீழ்ந்து 'தாங்கள் இன்றேல் யானும் உயிர் துறப்பேன்' என்றார். தம்பிக்காக உயிர் வாழ எண்ணினார். சைவ உலகிற்கு ஒரு சிறந்த அடியாரை அளித்த பெருமை திலகவதியாரைச் சாரும். திலகவதியார் திருஅதிகை வீரட்டானம் சேர்ந்து சிவச் சின்னம் தாங்கி 1. திருஅலகிடல் (பெருக்கித் தூய்மை செய்தல்), 2. திருமெழுக்கிடல் (தண்ணீர் விட்டுக் கழுவி தூய்மை செய்தல்), 3. திருத்தாமம் (மலர்மாலை தொடுத்தல்) 4. திருமஞ்சனம் (அபிஷேகத்திற்குரிய பொருள்களைக் கொணர்தல்) முதலிய திருக்கோயில் பணிகளைச் செய்து வந்தார். தம்பி சமணசமயம் சேர்ந்ததால் சிவபெருமானைப் பக்தியுடன் வேண்டி வழிபட்டார். பெருமான் திலகவதி கனவில் ''முன்னமே முனியாகித் தவம் செய்த நின் தம்பியைச் சூலை கொடுத்து ஆட்கொள்வோம்'' என்றனர். மருள் நீக்கியார் என்ற தருமசேனரைச் சூலை நோய் வருத்தியது. சமணர் மணி, மருந்து, மந்திரங்களால் மருள்நீக்கியாரின் சூலை நோயைப் போக்க முயன்றும் இயலவில்லை. மருள்நீக்கியார் தமக்கையின் கையால் திருநீறு பெற்று நெற்றியில் இட்டுக் கோயிலை வலம் வருமுன் வயிற்று நோய் தீர்ந்தது. திலகவதி யாரின் பக்தியே மருள்நீக்கியார் சூலை நோயைப் போக்கியது.

திருவாளன் திருநீறு திலகவதி யார்அளிப்பப்
பெருவாழ்வு வந்ததுஎனப் பெருந்தகையார் பணிந்துஏற்றுஅங்கு
உருஆர அணிந்துதமக்கு உற்றஇடத்து உய்யும்நெறி

Koviloor Digital Library

தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம்வந்தார் (67)

மருள்நீக்கியார் பக்தி நெறி

சூலை நோயுற்ற மருள்நீக்கியார் தமக்கையாரிடம் பக்தியோடு திருநீறு பெற்று ஆழ்ந்த பக்தியோடு நெற்றியில் இட்டுக் கொண்டு 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்ற பதிகம்பாடிக் கோயிலை வலம் வந்தார். உடல் சூலை நோய் அகன்றது. இறைவன் **நாவுக்கரச** என வாழ்த்தினார். மருள்நீக்கியார் நாவுக்கரசர் ஆனார். மன்னன் மகேந்திர வர்மன் சமணர் தூண்டுதலால் நாவுக்கரசரை அழைத்தான். சங்கரனுக்கு அடிமையான தான் சாதாரண மனிதனுக்கு அடிமை இல்லை என மறுத்தார்.

நீற்றறை நீர் அறை ஆதல்

மகேந்திர வர்மன் நாவுக்கரசரை நீற்றறையில் இட்டுத் தண்டிக்க ஆணையிட்டான். ஐந்தெழுத்து மந்திரத்தின் வலிமையால் நாவுக்கரசர்க்கு வெம்மை நீற்றறை வண்டு மொய்க்கும் மலர்கள் நிறைந்த தண்மையான (குளிர்ச்சியான) பொய்கையாகிய நீர் அறை ஆயிற்று.

நஞ்சு அமுதாதல்

நஞ்சூட்டி நாவுக்கரசரைக் கொல்ல முயன்றனர். பாற்கடல் நஞ்சு பரமனுக்கு அமுதாயிற்று. அதுபோல, பரமனுடைய பக்தராகிய நாவுக்கரசர் கொண்ட பக்தியால் நஞ்சு அமுதமாயிற்று. சமணர் அடியார்க்களித்த நஞ்சுகலந்த பாற்சோறு அமுதம் ஆயிற்று.

சமணர் வினை சமணரைச் சுட்டமை

சமணர் ஏவலால் மன்னன் அடியாரைக் கொல்ல யானையை ஏவினான். **சுண்ணவெண் சந்தனச் சாந்து** என்ற திருப்பதிகம் பாடிச் சிவனை வழிபட்டார். அவ்வளவில் நாவுக்கரசரை வலம் வந்து யானை தன்னை ஏவிய சமணரை விரட்டிப் பலரை அழித்தது.

கல்லைக் கலமாக மிதக்கச் செய்தமை

கல்லோடு பிணைத்து நாவுக்கரசரைக் கடலில் இடுமாறு மன்னன் ஏவினான். **சொற்றுணை வேதியன்** என்ற பதிகம் பாடிக் கல்லைக் கலமாக மிதக்கச் செய்தார். கடல் தன் அலைக்கரங்களால் நாவுக்கரசரை 'அர' என்றொலித்துக் கரை சேர்த்தது.

அத்திருப் பதியினில் அணைந்த அன்பரை
மெய்த்தவக் குழாம்எலாம் மேவி ஆர்த்துஎழ
எத்திசை யினும் அர என்னும் ஓசைபோல்

Koviloor Digital Library

தத்துநீர்ப் பெருங்கடல் தானும் ஆர்த்ததே. (132)

மூவிலைச் சூலமும் ரிஷபச் சின்னமும் மேனியில் பொறிக்கப் பெறல்

சமணர் உணவுண்டு அந்நெறியில் ஒழுகிய இம்மேனி தூய்மை யுற விடையும் மூவிலைச் சூலமும் பொறித்தருளுமாறு திருத்தூங்கானை மாடத்து இறைவனிடம் **"பொன்னார்ந்த திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்"** என்ற பதிகம் பாடி வேண்டினர். இறையருளால் சிவகணத்தைச் சேர்ந்த பூதம் வந்து நாவுக்கரசர் திருத்தோளில் மூவிலைச் சூலமும் விடைச் (எருது) சின்னத்தையும் பொறித்தது.

நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
ஆடகமே ருச்சிலையான் அருளால்ஓர் சிவபூதம்
மாடுஒருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுஉயர்மூ இலைச்சூலம் சினவிடையி னுடன் சாத்த! (152)

அடியார் மேற்பக்தி

திருநீலநக்கர், குங்குலியக் கலயனார், முருக நாயனார், சிறுத் தொண்டர், அப்பூதி அடிகள் ஆகிய அடியார்களைச் சம்பந்தருடன் சென்று கண்டு அளவளாவினார் அப்பர். அப்பூதி அடிகளார் நாவரசரைத் தன் இல்லத்தில் விருந்துண்ண அழைத்தார். வாழை இலை நறுக்கும்போது அப்பூதி அடிகளார் மகனைப் பூநாகம் தீண்டியது. அடியார் விருந்துண்ண இடையூறு வருமே என்று மகன் உடலை மறைத்து வைத்தனர். அப்பர் மூத்த மகனைப் பற்றி அப்பூதி அடிகளிடம் வினவ அப்பூதி அடிகள் நிகழ்ந்தது கூறினார். அப்பர் திங்களூர்ப் பெருமானை வேண்டிப் பாடி அப்பூதி அடிகளார் மகனை உயிர்த்தெழச் செய்தார்.

அருந்தனயன் உயிர்பெற்ற அதுகண்டும் அமுதுசெயாது
இருந்ததற்குத் தளர்வுஎய்தி இடர்உழந்தார் துயர்நீங்க
வருந்தும்அவர் மனைப்புகுந்து வாகீசத் திருமுனிவர்
விருந்துஅமுது செய்தருளி விருப்பினுடன் மேவும்நாள். (209)

திருமறைக்காட்டுத் திருக்கதவம் திறக்கப்பாடியமை

திருமறைக் காட்டுக் கோயில் கதவுகள் திருக்காப்பிடப் பட்டிருந்தன. மக்கள் சுற்றிச்சென்று அல்லல் தீர்க்கும் அரனை வழிபட்டனர். திருஞான சம்பந்தர் அப்பரிடம் கோயில் கதவின் திருக்காப்பு நீங்கப்பாடுமாறு வேண்டினர். அப்பர் **பண்ணின்நேர் மொழியாள்** என்ற பதிகம் பாடினர். கதவு திறக்கக் காலம் தாழ்ந்தது. **இரக்கம் ஒன்று இல்லீர்** என்று அப்பர் உருக்கமான பக்தியுடன் பாடக் கதவின் திருக்காப்பு நீங்கியது. அப்பர்

Koviloor Digital Library

வேண்டிக் கொண்டவாறு சம்பந்தர் கதவம் திருக்காப்பிடப் பாடியதும் கதவுகள் திருக்காப்பிட்டுக் கொண்டன.

இறைவன் அருளால் திருஅமுது பெறல்

பல தலங்கட்குச் சென்று களைப்படைந்த அப்பர்பெருமான் திருப்பைஞ்ஞீலி செல்ல முனைந்தார். அப்பருக்குப் பசி வருத்தம் மிக, திருப்பைஞ்ஞீலிப் பெருமான் அந்தணர் வடிவில் அடியார் பசி நீக்கக் காவும் குளமும் அமைத்துப் பொதிசோறும் கொண்டு அடியவர்க் கெதிரே இருந்தார். இங்கு நான் கொண்டுவந்த பொதி சோறு உண்டு, குளத்தின் நீர் குடித்து இளைப்புப் போக்குக என்று இன்மொழி கூறினார். அமுதுண்டு நீருண்டு தளர்வொழிந்தார் அப்பர். திருப்பைஞ்ஞீலிக்குத் தானும் வருவதாக அந்தணர் வடிவில் வந்த இறைவன் திருவாய் மலர்ந்தருளினார். அப்பர் உடன் சென்று கொண்டிருக்கும்போதே இறைவன் தன்னை மறைத்தருளினார். பக்தருக்காக இறைவன் தாயினும் சாலப்பரிந்து வந்து உணவூட்டித் தன்னையும் காட்டி யருளினார்.

அப்பரின் உருவச்சிறப்பு

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துஉருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே (140)

அப்பரின் நெகிழ்ச்சி

அங்கங்கள் அடங்கஉ ரோமம்எலாம் அடையப்புள கங்கள் முகிழ்த்துஅலரப்
பொங்கும்புனல் கண்கள் பொழிந்துஇழியப் புவிமீது விழுந்து புரண்டுஅயர்வார்
இங்குஎன்செயல் உற்ற பிழைப்பு அதனால் ஏறாத பெருந்திடர் ஏறிடநின்
தங்கும் கருணைப் பெருவெள்ளம் இடத்தகுமோ எனஇன்னன
தாம்மொழிவார் (72)

அப்பரின் உருக்கம்

கையும் தலைமிசை புனைஅஞ் சலியன கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன கரணங்களும்உடன் உருகும் பரிவின பேறுஎய்தும்
மெய்யும் தரைமிசை விழும்முன்பு எழுதரும் மின்தாழ் சடையொடு நின்றுஆடும்
ஐயன் திருநடம் எதிர்கும்பிடும் அவர்ஆர்வம் பெருகுதல் அளவுஇன்றால்.
(167)

அப்பரின் அருள்வலம்

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற கழல்வணங்கி அருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணிஓட்டும் திருவீதி புரண்டுவலம் கொண்டு போந்தே
எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின் எல்லையினை இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திருநாரை யூர்பணிந்து பாடிச் செல்வார். (179)

Koviloor Digital Library

34. திருநாவுக்கரசர் தொண்டு நெறி

இளமையிலேயே தாய் தந்தையை இழந்து தமக்கை திலகவதியார் ஆதரவில் வளர்ந்த நாவுக்கரசர்க்கு இளமை யிலேயே தொண்டு நெறி ஆழப் பதிந்ததில் வியப்பில்லை.

"வருத்தம் மிகுதி சுட்டுங்காலை
உரித்தென மொழி வாழ்க்கையுள் இரக்கம்" (தொல்.பொருள்)

வாழ்வில் அளவுக்கு அதிகமாகத் துன்பம் அனுபவித்தவர் பெரும்பாலும் பிறரிடம் இரக்கம் உள்ளவராக இருப்பர் என்பது தொல்காப்பியர் கருத்து. நாவுக்கரசர் இளமையிலே பெற்றோரை இழந்தார். தமக்கைக்கு மணம் பேசிய மணமகனாக இருக்க வேண்டிய படைத் தலைவர் கலிப்பகையார் மகேந்திர வர்மர் ஆணைப்படி போர்க்களம் சென்று வீடு பெற்றார். இளமையிலேயே இன்னல் வயப்பட்ட திருநாவுக்கரசர் இரக்கம் கொண்டு உயிர்கட்குத் தொண்டு செய்யும் தொண்டு நெறியில் சிறந்து விளங்கினார்.

அறத்தொண்டு

இளமையிலே நிலையாமை உணர்வு ஆழமாகப் பதிந்த அப்பர் தம் செல்வம் அனைத்தும் கொண்டு அறச்சாலைகளும் தண்ணீர்ப் பந்தரும் அமைத்தார். நீரும் நிழலும் கனியும் தரும் சோலைகள் அமைத்தார். குடிக்கும் நீர்த்துறைகள் அமைத்தார். இல்லை என வந்தோர்க்கு இல்லை எனாது அளித்தார். விருந்து பேணினார். நாவலர்க்கு வேண்டு வன தந்தார். நானிலத்தவர்க்கு எல்லார்க்கும் தரும் ஈகைத் துறையில் தலைசிறந்து விளங்கினார்.

காவளர்த்தும் குளம்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்துஅளித்தும் விருந்துஅளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும் நால்நிலத்து உள்ளோர்
யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார். (36)

தொண்டிற்கு வித்திட்ட தூயவர்

திருநாவுக்கரசர் தமக்கை திலகவதியார் கணவன் என்று மணம் பேசிய நிலையிலேயே கலிப்பகையார் என்ற படைத்தலைவரை இழந்தார். அதன்பிறகு திருமணம் செய்து கொள்ளவில்லை. உடல் முழுதும் சிவச்சின்னம் தரித்து திருஅதிகை வீரட்டானம் சென்று

Koviloor Digital Library

கோவிலில் திருஅலகிடல், திருமெழுக்கிடல், மாலை தொடுத்துக் கொடுத்தல் போன்ற தொண்டுகளைச் செய்து வந்தார். தமக்கை யாரின் தொண்டு நெறிதான் திருநாவுக்கரசரை உழவாரப்படைத் தொண்டர் ஆக்கியது. சூலை நோய் நீக்கிய திரு அதிகை வீரட்டா னேசுவரர் கோயிலிலேயே உழவாரப் படைத் தொண்டினைத் தொடங்கினார். கோயில் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக்கலைச் சிறந்த தொண்டாகக் கருதினார். கோயில் உடம்பு போன்றது. உடம்பை அகமும் புறமும் சுத்தமாக வைத்திருப்பது போலவே கோயிலையும் அகத்தையும் புறத்தையும் சுத்தமாக வைத்திருக்கும் தொண்டு நெறியை உழவாரப்படை கொண்டு செய்தார்.

மனமொழிமெய்த் தொண்டு நெறி

மனத்தால் அனைவர் நலமும் நாடினார். வாக்கால் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை இடைவிடாது ஓதினார்.

செல்லும் ஊர்களிலெல்லாம் உழவாரத் தொண்டு செய்த பின்பே கோயிலை வணங்கச் செல்வார். உழவாரத் தொண்டின் போது கண்ட நவமணிகளைக் குப்பை எனக் கருதினார். கோயில் தூய்மை ஒன்றே அப்பர் நோக்கமாக இருந்தது. திருவீழிமிழலை, திருப்பைஞ்ஞீலி, திரு ஆரூர், திருநல்லூர், திருத்தில்லை, திருப்புகலூர், திருவொற்றியூர் போன்று செல்லும் இடங்களில் எல்லாம் உழவாரத் தொண்டினை இடைவிடாது செய்தார்.

மையல்துறைஏறி மகிழ்ந்துஅலர்சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவும் சிவசின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அறாஉணர்வும் ஈறுஇன்றி எழும்திரு வாசகமும்
கையில் திகழும் உழவாரமுடன் கைக்கொண்டு கலந்து கசிந்தனரே. (77)

திருவீழிமிழலையில் பஞ்சத்தில் மக்கட்குத் தொண்டு

ஞானசம்பந்தரையும் அப்பரையும் திருவீழிமிழலை அடியார்கள் வரவேற்றனர். திருவீழிமிழலைச் சிவபெருமானை வழிபட்டனர். சிலநாள் அடியார் இருவரும் அங்குத் தங்கி இருந்தனர். மழை சுருங்கியது. பொன்கொழித்துவரும் பொன்னியாகிய காவிரியும் பருவம் மாறியது. நீருமில்லா வறுமையால் பல உயிர்கள் வாடின. வறுமையும் வறட்சியும் மிகுந்தன. அடியார் இருவரும் வாடினர். இறைவன் இருவர் கனவிலும்,

உம்மை வழிபடும் அடியார்க்குத் துன்பம் தீர்க்கின்றோம்.

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

Koviloor Digital Library

கிழக்கு வாயிலில் சம்பந்தர்க்கும் மேற்கு வாயிலில் அப்பர்க்கும் படியிற் பொற்காசு கிடைத்தது. அப்பொற்காசு கொண்டு திருவீழிமிழலை யின் வறுமை போக்கினர். மெய்த்தொண்டு செய்த வாகீசர் வாசி இல்லாக் காசு பெற்றார். வாய்த்தொண்டு மட்டும் செய்த சம்பந்தர் வாசியுடன் காசு பெற்றார். இருவர் மடங்களிலும் மக்கள் வயிறார உண்டனர். பஞ்சம் நீங்க மழை பொழிந்தது. இரண்டு அடியார்களும் நீலகண்டர் உறையும் கோயில்கள் பலவும் சென்றனர்.

ஆறு சடைமேல் அணிந்தருளும் அண்ணல் வைத்த படிக்காசால்
ஈறுஇலாத பொருள்உடைய இருவ ருடைய திருமடங்கள்
சோறுநாளும் தொண்டர்மகிழ்ந்து உண்ண உண்ணத் தொலையாதே
ஏறு பெருமை புவிபோற்ற இன்புஉற்று இருக்கும் அந்நாளில். (261)

திரு ஆரூர் உழவாரத் தொண்டு

திரு ஆரூர்க் கோயிலில் உழவாரத் தொண்டு செய்யும்போது நாவுக்கரசர் செம்பொன்னும் நவமணியும் கண்டார். அவற்றைப் புல்லோடும் ஒக்க எண்ணிப் பூங்கமலப் பொய்கையில் வீசி எறிந்தார்.

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்குஎவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினில்ஏந்தி
வம்புஅலர்மென் பூங்கமல வாவியினில் புக எறிந்தார். (417)

மெய்ப்பொருள்

சமயத் தொண்டர்கள் சமுதாயத் தொண்டர்களாக விளங்கினர். இறைவனால் படைக்கப்பெற்ற உயிர்கட்குச் செய்யும் தொண்டினையே இறைதொண்டாக எண்ணினர். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கருதினர்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்
நடமாடக்கோயில் நம்பவர்க்கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே. (திருமந்திரம்)

Koviloor Digital Library

அழுது அழுது அடி அடைந்த அப்பர்

1. பக்தரின் பரவசநிலை

அங்கங்கள் அடங்கஉ ரோமம்எலாம் அடையப்புள கங்கள் முகிழ்த்துஅலரப்
பொங்கும்புனல் கண்கள் பொழிந்துஇழியப் புவிமீது விழுந்து புரண்டுஅயர்வார்
இங்குஎன்செயல் உற்ற பிழைப்பு அதனால் ஏறாத பெருந்திடர் ஏறிடநின்
தங்கும்கரு ணைப்பெரு வெள்ளம்இடத் தகுமோ என இன்னன தாம்மொழிவார். (72)

2. நாவரசர் தோற்றம்

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துஉருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே (140)

3. அருளாளராகிய அப்பரின் தோற்றம்

கண்டார்கள் கைதலை மேல்குவித்து இந்தக் கருணை கண்டால் (141)

4. இடைவிடாது ஒழுகும் நிலை

ஆங்குஅவர்தம் திருத்தோளில் ஆர்ந்ததிரு இலச்சினையைத்
தாம்கண்டு மனம்களித்துத் தம்பெருமான் அருள்நினைந்து
தூங்குஅருவி கண்பொழியத் தொழுதுவிழுந்து ஆர்வத்தால்
ஓங்கியசிந் தையர்ஆகி உய்ந்தொழிந்தேன் எனஎழுந்தார். (153)

5. சிதம்பரத்தில் உருகுதல்

ஓலம் பெருகிய நிலைஏழ் கோபுரம் முறையே கொடுதொழுது உள்புக்கார்.(164)

கையும் தலைமிசை புனைஅஞ் சலியன கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன கரணங்களும்உடன் உருகும் பரிவின பேறுஎய்தும்
மெய்யும் தரைமிசை விழும்முன்பு எழுதரும் மின்தாழ் சடையொடு நின்றுஆடும்
ஐயன் திருநடம் எதிர்கும்பிடும் அவர்ஆர்வம் பெருகுதல் அளவுஇன்றால்.
(167)

இத்தன் மையர்பல முறையும் தொழுதுஎழ என்றுஎய்தினை? என மன்றுஆடும்
அத்தன் திருஅருள் பொழியும் கருணையின் அருள்பெற் றிடவரும் ஆனந்தம்
மெய்த்தன் மையினில் விருத்தத் திருமொழி பாடிப் பின்னையும் மேன்மேலும்
சித்தம் பெருகிய பரிவால் இன்புறு திருநே ரிசை மொழி பகர்கின்றார். (168)

6. தில்லை வீதியில் உருள்வலம் வருதல்

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற கழல்வணங்கி அருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணிஓட்டும் திருவீதி புரண்டுவலம் கொண்டு போந்தே
எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின் எல்லையினை இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திருநாரை யூர்பணிந்து பாடிச் செல்வார். (179)

Koviloor Digital Library

7. அப்பர் – சம்பந்தர் முதல் சந்திப்பு (சீர்காழி)

பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேன் என்றுஅரசு உவப்பப் பெருகும்ஞான
வள்ளலார் வாகீசர் தமைவணங்கப் பெற்றதற்கு மகிழ்ச்சி பொங்க
உள்ளநிறை காதலினால் ஒருவர்ஒரு வரில்கலந்த உண்மையோடும்
வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார் கழல் வணங்கும் விருப்பின் மிக்கார். (184)

8. நல்லூரில் நைந்துருகுதல்

நனைந்துஅனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார் என்று
புனைந்த திருத்தாண்டகத்தால் போற்றிசைத்துப் புனிதர்அருள்
நினைந்துருகி விழுந்துஎழுந்து நிறைந்து மலர்ந்து ஒழியாத
தனம்பெரிதும் பெற்றுவந்த வறியோன்போல் மனம்தழைத்தார் (196)

9. திருவாரூரில் அப்பரின் பரவசநிலை

கண்டு தொழுது கரசர ணாதி அங்கம்எலாம்
கொண்ட புளகங்கள் ஆக எழுந்துஅன்பு கூரக்கண்கள்
தண்துளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து. (222)

10. திருவாரூரில் அப்பரின் அருள்மிகு தோற்றம்

மார்புஆரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வுஆகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொன் தாளே
சார்வுஆன திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்துஏத்திப் பரவிச் செல்வார். (225)

11. திருப்பூம்புகலூரில் அப்பரின் உருக்கம்

அத்திரு மூதூர் மேவிய நாவுக் கரசும்தம்
சித்தம் நிறைந்தே அன்பு தெவிட்டும் தெளிவெள்ளம்
மொய்த்துஇழி தாரைக் கண்பொழி நீர்மெய்ம் முழுதுஆரப்
பைத்தலை நாகப்பூண் அணிவாரைப் பணிவுற்றார். (238)

12. திருவீழிமிழலையில் அப்பரின் உருக்கம்

சென்றுஉள் புகுந்து திருவீழி மிழலை அமர்ந்த செங்கனகக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி முக்கண் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ் விழுந்தார் எழுந்தார் விம்மினார். (252)கை க ள்
குவித்துக் கழல்போற்றிக் கலந்த அன்பு கரைந்துஉருக
மெய்யில் வழியும் கண்அருவி விரவப் பரவும் சொல்மாலை
செய்ய சடையார் தமைச்சேரார் தீங்கு நெறிசேர் கின்றார் என்று
உய்யும் நெறித்தாண்டகம் மொழிந்து ஆங்கு ஒழியாக் காதல் சிறந்துஓங்க. (253)

Koviloor Digital Library

13. திருமறைக்காட்டில் அடியார்களின் கண்ணீர்

அங்கு நிகழ்ந்த அச்செயல்கண்டு அடியார் எல்லாம் அதிசயித்துப்
பொங்கு புளகம் எய்திடமெய் பொழியும் கண்ணீர் பரந்துஇழிய
எங்கும் நிகரொன்று இல்லாத இருவர் பாதம் இறைஞ்சினார்
நங்கள் புகலிப் பெருந்தகையும் அரசும் மடத்தில் நண்ணியபின் (274)

14. அப்பர் உண்ணாநோன்பு இருத்தல் (பழையாறை)

வண்ணம் கண்டு நான் உம்மை வணங்கி அன்றிப் போகேன் என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர் இருந்தார் அமுது செய்யாதே
அண்ணல் ஆரும் அதுஉணர்ந்துஅங்கு அரசுதம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக் கனவில் அருளிச் செய்கின்றார். (296)

15. திருப்பைஞ்ஞீலியில் அப்பரின் உருக்கம்

கூட வந்து மறையவனார் திருப்பைஞ் ஞீலி குறுகியிட
வேடம் அவர்முன் மறைத்தலுமே மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம்
ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணை எனப்
பாடல் புரிந்து விழுந்துஎழுந்து கண்ணீர் மாரி பயில்வித்தார். (309)

பைஞ்ஞீ லியினில் அமர்ந்தருளும் பரமர் கோயில் சென்றுஎய்தி
மைஞ்ஞீ லத்து மணிகண்டர் தம்மை வணங்கி மகிழ்சிறந்து
மெய்ஞ்ஞீர் மையினில் அன்புஉருக விரும்பும் தமிழ்மாலைகள் பாடிக்
கைஞ்ஞீ டியதம் திருத்தொண்டு செய்து காத லுடன்இருந்தார். (310)

16. காஞ்சியில் அப்பரின் உருக்கம்

வார்ந்து சொரியும் கண்அருவி மயிர்க்கால் தோறும் வரும்புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்புஅலைப்ப அன்பு கரைந்துஎன்பு உள்அலைப்பச்
சேர்ந்த நயனப் பயன்பெற்றுத் திளைப்பத் திருஏ கம்பர்தமை
நேர்ந்த மனத்தில் உறவைத்து நீடும் பதிகம் பாடுவார். (323)

17. திருவொற்றியூரில் அப்பரின் உருக்கம்

திருநாவுக் கரசரும்அத் திருவொற்றியூர் அமர்ந்த
பெருநாகத்தின் சிலையார் கோபுரத்தை இறைஞ்சிப்புக்கு
ஒருஞானத் தொண்டருடன் உருகிவலங் கொண்டு அடியார்
கருநாமம் தவிர்ப்பாரைக் கைதொழுது முன்வீழ்ந்தார். (334)

எழுதாத மறைஅளித்த எழுத்தறியும் பெருமானைத்
தொழுதுஆர்வம் உறநிலத்தில் தோய்ந்துஎழுந்தே அங்கம்எலாம்
முழுதுஆய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கால்மூழ்க
விழுதாரை கண்பொழிய விதிர்ப்புற்று விம்மினார். (335)

Koviloor Digital Library

18. திருக்காளத்தியில் உருக்கம்

மலைச்சிகரச் சிகாமணியின் மருங்குஉறமுன் னேநிற்கும்
சிலைத்தடக்கைக் கண்ணப்பர் திருப்பாதம் சேர்ந்துஇறைஞ்சி
அலைத்துவிழும் கண்அருவி ஆகத்துப் பாய்ந்து இழியத்
தலைக்குவித்த கையினராய்த் தாழ்ந்துபுறம் போந்துஅணைந்தார் (346)

19. அப்பரின் உறுதி

இங்ஙனம் இரவும் பகல்பொழுதும் அருஞ்சுரம் எய்துவார்
பங்க யம்புரை தாள்ப ரட்டுஅளவும் பசைத்தசை தேயவும்
மங்கை பங்கர்தம் வெள்ளி மால்வரை வைத்த சிந்தை மறப்பரோ
தம்க ரங்கள் இரண்டு மேகொடு தாவி ஏகுதல் மேவினார். (357)

மார்ப மும்தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முரிந்திட
நேர்வ ருங்குறி நின்ற சிந்தையின் நேசம் ஈசனை நேடும்நீடு
ஆர்வம் அங்குஉயிர் கொண்டு உகைக்கும் உடம்பு அடங்கவும் ஊன் கெடச்
சேர்வு அரும்பழு வம்புரண்டு புரண்டு சென்றனர் செம்மையோர். (359)

ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால்
மாளும் இவ்உடல் கொண்டு மீளேன் என மறுத்தார். (366)

20. திருவையாற்றில் கயிலைக் காட்சி கண்டு உருகுதல்

எம்பி ரான்தரும் கருணைகொல் இதுஎன இருகண்
பம்பு தாரைநீர் வாவியில் படிந்துஎழும் படியார். (372)

கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்து
கொண்டு கைகுவித்து எதிர்விழுந்து எழுந்துமெய் குலைய
அண்டர் முன்புநின்று ஆடினார் பாடினார் அழுதார்
தொண்ட னார்க்கு அங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்? (380)

21. திருப்பூந்துருத்தியில் அப்பரின் உருக்கம்

சேர்ந்து விருப்பொடும் புக்குத் திருநட மாளிகை முன்னர்ச்
சார்ந்து வலங்கொண்டு இறைஞ்சித் தம்பெருமான் திருமுன்பு
நேர்ந்த பரிவொடும் தாழ்ந்து நிறைந்துஒழி யாஅன்பு பொங்க
ஆர்ந்தகண் ணீர்மழை தூங்க அயர்வுஉறும் தன்மைய ரானார். (387)

22. அன்பிலே தோய்ந்த அப்பரின் அழுதகோலம்

தொழுதுபல வகையாலும் சொல்தொடைவண் தமிழ்பாடி
வழுஇல்திருப் பணிசெய்து மனம்கசிவுற்று எப்பொழுதும்
ஒழுகியகண் பொழிபுனலும் ஓவாது சிவன்தாள்கள்
தழுவியசிந் தையில்உணர்வும் தங்கியநீர் மையில் சரித்தார். (411)

Koviloor Digital Library

23. திருப்புகலூரில் அப்பரின் உருக்கமும் உறுதிப்பாடும்

பொய்கைசூழ் பூம்புகலூர்ப் புனிதர்மலர்த் தாள்வணங்கி
நையும்மனப் பரிவினொடும் நாள்தோறும் திருமுன்றில்
கைகலந்த திருத்தொண்டு செய்துபெருங் காதலுடன்
வைகும்நாள் எண்ணிறந்த வண்தமிழ்மாலைகள் மொழிவார். (413)

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடு இலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்ஒடு நுதல்மடவார் விசும்புஊடு வந்துஇழிந்தார். (418)

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருஅடிக்கீழ் நினைவுஅகலா அன்புஉருகும்
மெய்த்தன்மை உணர்வுஉடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தம்நிலை திரியாது செய்பணியின் தலைநின்றார். (422)

இம்மாயப் பவத்தொடக்குஆம் இருவினைகள் தமைநோக்கி
உம்மால்இங்கு என்னகுறை உடையேன் யான் திருஆரூர்
அம்மானுக்கு ஆள்ஆனேன் அலையேன்மின் நீர்என்று
பொய்ம்மாயப் பெருங்கடலுள் எனும் திருத்தாண் டகம்புகன்றார். (423)

மாதரவர் மருங்குஅணைய வந்துஎய்தி மதனவசக்
காதலவர் புரிந்துஒழுகும் கைதவங்கள் செய்திடவும்
பேதம்இலா ஒருணர்வின் பெரியவரைப் பெயர்விக்க
யாதும்ஒரு செயலில்லா மையில்இறைஞ்சி எதிர்அகன்றார். (424)

வானவர்கள் மலர்மாரி மண்நிறைய விண்உலகின்
மேல்நிறைந்த ஐந்துபே ரியஒலியும் விரிஞ்சன்முதல்
யோனிகள் ஆயினஎல்லாம் உள்நிறைந்த பெருமகிழ்ச்சி
தான்நிறைந்த சித்திரையில் சதயம்ஆம் திருநாளில். (428)

Koviloor Digital Library

35. திருநாவுக்கரசரின் இயக்க நெறி

அழுது தொழுத மெய்ப்பெருந்தொண்டர் அப்பர். அழுகை, தொழுகை, தொண்டு என மூன்று நிலைகளில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் அப்பர். அப்பர்பெருமான் அழுது அழுது, தொழுது தொழுது இறையருளைப் பெற்ற அற்புதத்தைக் கண்டோம். இனி அவர் ஓர் இயக்க நெறியாளராக எப்படி வாழ்ந்தார் என்பதைக் காண்போம்.

தான் முக்கியமில்லை தான் சார்ந்துள்ள இயக்கம் / அமைப்பு / நிறுவனம் முக்கியம் என வாழ்பவர்களே இயக்க நெறியாளர்கள். (Institution is more important than Individual) அப்பர் ஓர் இடத்திலேயும் தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ளாமல் தமிழையும், சைவத்தையும் முதன்மைப்படுத்தியவர். அதற்காகத் தன்னைத் தொண்டராக மாற்றிக்கொண்டு திருஞானசம்பந்தரைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டவர். இயக்கம் முக்கியம் என்று நினைப்பவர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்காக உறுதியோடு நிற்பர். மகேந்திரவர்ம பல்லவன் அழைத்தபோது,

நாம்ஆர்க்கும் குடிஅல்லோம் என்றுஎடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின் செழும்திருத்தாண் டகம்பாடி
ஆமாறு நீரழைக்கும் அடைவுஇலம் என்றுஅருள் செய்தார். (93)

என அப்பரின் உறுதிப்பாட்டைச் சேக்கிழார் எடுத்துக் காட்டுகிறார். 1. நீற்றறையில் ஏழு நாள்கள் இருந்தபோதும், 2. கொடிய வலிய நஞ்சினைப் பாற்சோற்றுடன் அளித்தபோதும், 3. சினமிக்க கொலை யானையை ஏவியபோதும், 4. கல்லுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டிக் கடலில் வீசியபோதும் மெய்ப்பெருந்தொண்டராக (128) வென்று வீறுகொண்டு திருநாவுக்கரசர் தமிழ்ப்பாமாலைகள் பாடியதைத் தெய்வச் சேக்கிழார் அருமையாகப் புலப்படுத்தியுள்ளார்.

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ? (129)

எனத் திருநாவுக்கரசரின் உறுதிப்பாட்டையும் இறைவன்பால் அவர்

Koviloor Digital Library

வைத்த நம்பிக்கையையும் தெய்வச் சேக்கிழார் அருமையாகக் காட்டியுள்ளார்.

இயக்கம் முக்கியம் என வாழ்வோர் தம் எண்ணம் நிறைவேறும் வரையில் அறநெறியில் போராடுபவராக இருக்கவேண்டும். பழையாறையில் சமணர்கள் சைவக்கோயிலை மாற்றியிருந்ததைக் கண்ட அப்பர் நான் உம் திருமேனியினைக் கண்ணால் கண்டால் அன்றி அப்பால் போக மாட்டேன் என உறுதிபட உரைத்து உண்ணா நோன்பு இருந்தார்.

வண்ணம் கண்டு நான் உம்மை வணங்கி அன்றிப் போகேன் என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர் இருந்தார் அமுதுசெய்யாதே
அண்ணல் ஆரும் அதுஉணர்ந்துஅங்கு அரசுதம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக் கனவில் அருளிச் செய்கின்றார். (296)

எனத் தம் கொள்கைக்காக உயிர்விடவும் துணிந்து அகிம்சை வழியில் சைவத்தை நிலைநிறுத்தியவர் அப்பர். **கயிலைக் காட்சியையும் தம் உறுதிப்பாட்டால் திருவையாற்றில் கண்டவர் அப்பர்.**

சைவம் தழைப்பதற்காகத் தம்மைத் தொண்டராகத் தாழ்த்திக்கொண்டு சைவமும் தமிழும் நிலைபெறுவதற்காகத் திருஞானசம்பந்தரின் தலைமையை ஏற்றுக் கொண்டவர் அப்பர். தலைவரும் தொண்டரும் சந்தித்துக் கொண்ட அற்புதக் காட்சியைத் தெய்வச் சேக்கிழார் காட்டியவண்ணம் காண்போம்.

சண்பைவரும் தமிழ்விரகர் எழுந்தருளத் தாம்கேட்டு
மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் மனம்மகிழ்ந்து
கண்பெருகும் களிகொள்ளக் கண்டுஇறைஞ்சும் காதலினால்
எண்பெருகும் விருப்புஎய்த எழுந்தருளி எதிர்சென்றார். (393)

சீகாழிப் பதியில் தோன்றிய தமிழ் வல்லுநரான ஞானசம்பந்தர் எழுந்தருளி வர, அச்செய்தியை உலகம் போற்றும் புகழையுடைய நாவுக்கரசர் தாம் கேட்டு மனம் மகிழ்ந்து நேரில் கண்டு கும்பிட வேண்டும் என்னும் ஆசையினால் உள்ளத்தில் பெருகும் விருப்பம் பொருந்த எதிரே சென்றார்.

காழியர்கோன் வரும்எல்லை கலந்துஎய்திக் காதலித்தார்
சூழும்மிடைந் திடும்நெருக்கில் காணாமே தொழுதருளி
வாழிஅவர் தமைத்தாங்கும் மணிமுத்தின் சிவிகை யினைத்
தாழும்உடல் இதுகொண்டு தாங்குவன்யான் எனத் தரித்தார். (394)

சீகாழியில் தோன்றிய தமிழ் வல்லுநரான ஞானசம்பந்தர்

Koviloor Digital Library

வருகின்ற அப்போது, திருக்கூட்டத்துடன் கூடிச் சேர்ந்து அன்பு உடையவராகிச் சூழ்ந்து நெருங்கிய கூட்டத்தின் நெருக்கத்துள் ஞானப்பிள்ளையார் தம்மைக் காணாத வண்ணம் அவரை வணங்கி வாழ்வைத் தரவந்த பிள்ளையாரைத் தாங்கும் முத்துச் சிவிகையைத் தாங்கி வருபவருடன் தாழ்ந்த இவ்வுடலைக் கொண்டு நானும் சுமப்பேன்" என்று உள்ளத்துள் நினைத்து உவகையுடன் வந்தார்.

வந்துஒருவர் அறியாமே மறைந்தவடி வொடும்புகலி
அந்தணனார் ஏறிஎழுந் தருளிவரும் மணிமுத்தின்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவா ருடன் தாங்கிச்
சிந்தைகளிப் புறவருவார் தமையாரும் தெளிந் திலரால். (395)

மற்றறொருவரும் அறிந்து கொள்ளாத வண்ணம் மறைவான வடிவத்துடனும் சீகாழி அந்தணரான ஞானசம்பந்தர் அமர்ந்து வரும் அழகான மணிச் சிவிகையைச் சுமப்பவர்களுடன் தாமும் ஒருவராய்த் தாங்கித் தம் உள்ளம் மிக மகிழ்ச்சி பொருந்த வருபவரான திருநாவுக்கரசு நாயனாரை ஒருவரும் அறிந்து கொண்டவர் இலர்.

திருஞான மாமுனிவர் அரசுஇருந்த பூந்துருத்திக்கு
அருகாக எழுந்தருளி எங்குஉற்றார் அப்பர்என
உருகாநின்று உம்அடியேன் உம்அடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்துஎய்தப் பெற்றுஇங்கு உற்றேன் என்றார். (396)

திருஞான சம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசு நாயனார் தங்கியிருந்த திருப்பூந்துருத்திக்கு அருகில் எழுந்தருளி சிவிகையில் இருந்தபடியே, அப்பர் எங்குத் தங்கியிருக்கின்றார்? என்று வினவ, உள்ளம் மிகவுருகி, **உம் அடியவன் உம் திருவடிகளைச் சுமக்கும் பெருவாழ்வு கிடைக்கப்பெற்று இங்கு இருக்கிறேன்** என்று சிவிகையைத் தாங்கி வரும் அந்நிலையில் விடை கூறினார். சைவத் தமிழ் உலகமும் அடியார் திருக்கூட்டமும் ஒருங்கே ஏற்கும் வண்ணம் திருஞான சம்பந்தரைத் தமிழ்ப்பெருந்தலைவராக உயர்த்திய தனிப்பெரும் இயக்க நெறியாளரே அப்பர்பெருமான்.

இயக்கம் முக்கியம் என நினைத்து வாழ்பவர் புலன் ஒடுக்கிய வராக வாழ்தல் இன்றியமையாதது. அப்பரின் ஆன்றவிந்த புலனடக் கத்தைத் தெய்வச் சேக்கிழார் அருமையாகப் புலப்படுத்துகிறார்.

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடு இலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்ஒடு நுதல்மடவார் விசும்புஊடு வந்துஇழிந்தார். (418)

Koviloor Digital Library

புல்லுடனும் கல்லுடனும் பொன்னுடனும் மணிகளுடனும் வேறுபாடு இல்லை என்னும் நிலையைத் துணிந்து மனம் சிறிதும் மாறுதல் இல்லாது இருந்த நல்லோரான நாயனாரின் முன்பு, திருப்புகலூர் இறைவரின் திருவருளால் வில்லைத் தோற்கடிக்கும் புருவங்கள் வளைந்து அசைவதற்கு இடமான நெற்றியையுடைய பெண்கள் வான் உலகத்தினின்றும் வான் வழியாய் வந்து இறங்கினர்.

ஆடுவார் பாடுவார் அலர்மாரி மேல்பொழிவார்
கூடுவார் போன்றுஅணைவார் குழல்அவிழ இடைநுடங்க
ஓடுவார் மாரவே ளுடன்மீள்வர் ஒளிபெருக
நீடுவார் துகில்அசைய நிற்பாரும் ஆயினார். (421)

ஆடுபவர்களும் பாடுபவர்களும் மலர்களை மழைபோல மேலே பொழிபவர்களும் தழுவுபவர்களும்போல் பக்கத்தில் வந்து சேர்பவர்களும் கூந்தல் அவிழவும் இடை துவளவும் ஓடுபவர் களும், மன்மதனுடன் மீள்பவர்களும், காம ஒளி பெருகக் காணும் படி நீண்ட உடை நழுவ நிற்பவர்களும் இவ்வாறு பல திறப்பட்ட செயல்களைச் செய்பவர்கள் ஆயினர்.

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருஅடிக்கீழ் நினைவுஅகலா அன்புஉருகும்
மெய்த்தன்மை உணர்வுஉடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார். (422)

இங்ஙனம் அரம்பையர்கள் எல்லாவிதத்திலும் காமச் செயல்களைச் செய்யவும் அத்தனின் திருவடியின் கீழ்ப்பதிய வைத்த நினைவு நீங்காத அன்பினால் உருகும் மெய்த்தன்மை உணர்ச்சி யுடைய தூய தவத்தில் நிற்கும் மேலோரான நாவுக்கரசர் தம் உள்ளத்தின் நிலைமையினின்று மாறுபடாமல் தாம் செய்து வரும் பணியில் உறைந்து நின்று உயர்ந்தார்.

மண்முதலாம் உலகுஏத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்அடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்அரிய சிவானந்த ஞானவடிவே ஆகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார். (427)

இந்த மண் உலகம் முதலான எல்லா உலகங்களும் போற்றிடும்படி நிலைபெறும் திருத்தாண்டகத்தைப் **"புண்ணியா! உன் அடிக்கே போதுகின்றேன்!"** எனப் புகன்றார். சென்று அடைதற் கரிய சிவானந்தத்துடன் இணைந்து உருகி உயிர்த்தார்.

Koviloor Digital Library

பெருமையுடைய சிவபெருமானின் சேவடிக்கீழ்த் திருநாவுக்கரசர் எழுந்தருளி மீளாது இருந்தார். உறுதியாகப் புலன் ஐந்தையும் வென்றவர் அப்பர். அவரின் இறுதிப் பதிகம் அவரின் வேண்டுதலை, விழைவை வெளிப்படுத்தி நிற்கிறது.

எண்ணுகேன் எண்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (6:99:1)

ஆழ்வார் நாயன்மார் காலத்தில் பக்தி நெறி ஓர் இயக்க நெறியாக மாறியது. திருநாவுக்கரசரின் உழவாரத் தொண்டு இன்று ஓர் இயக்கமாக மாறி எல்லாக் கோயில்களும் தூய்மை செய்யப் பெற்று வருகின்றன.

தொண்டு நெறியும் பக்தி நெறியும் இயக்க நெறிகளாக மாறி வருகின்றன.

பக்தியினையும் தொண்டினையும் கடைப்பிடிப்போர் சமுதாயத்தில் வழிகாட்டும் ஒளிவிளக்காகவும் நெறியாளர்களாகவும் விளங்க வேண்டும். கொல்லாமை என்பது தன்னைக் கொல்லாமை, பிறரைக் கொல்லாமை என இருவகைப்படும். தன்னிடமுள்ள நல்ல பண்புகளைக் கொல்லாமையும் கொல்லாமை என்ற அறத்தின்பாற்பட்டதே. சமண சமயத்தவர் நடந்து செல்லும் பாதையில் ஈ எறும்பு கூடத் துன்புறக் கூடாது என்பதற்காகக் கையில் மயில் பீலி வைத்துக் கொண்டு செல்வர். அத்தகைய கொல்லாமைக் கொள்கையுடைய சமணர்கள் அப்பரைக் கொல்வதற்கு மகேந்திர வர்ம மன்னன் வாயிலாகப் பல சூழ்ச்சிகள் செய்தனர். அப்பர் வாய்மை தவறாமல் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதியதால் பல துன்பங்களும் விலகின. எனவே மன்னனிடமும் மக்களிடமும் சமணம் செல்வாக் கிழக்கத் தொடங்கியது.

சொல் வேறு செயல் வேறு கொண்ட சமயவாதிகளால் சமயம் பல நல்ல கொள்கைகளைப் பெற்றிருப்பினும் பிறரால் பழிக்கப் பெறுகிறது. பல அரசியல் கட்சிகளும் இதே நிலையில்தான் பலராலும் பழிக்கப்பெறுகின்றன. சமயத்தையோ கட்சியையோ இயக்கமாக ஆக்க நினைப்போர் ஒழுக்கம் குன்றாமல் இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

குன்று போன்ற பெருமை கொண்டோரும் குன்றி மணி அளவு பெருமை குன்றும் சிறிய செயல் செய்தாலும் பெருமை குன்றுவர்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் (குறள்)

திருநாவுக்கரசர் சமணர் தமக்குப் பல வகையில் தீமை செய்த போதிலும் அந்தச் சமணர்க்குத் திருநாவுக்கரசர் ஒரு தீங்கும் செய்திலர். நமசிவாய என்ற மந்திரம் ஓதி உண்ணாநோன்பு மேற்கொண்டார்.

அங்ஙனமிருந்தும் பழையாறையில் கோயில் சிவலிங்கத்தை ஒளித்து வைத்தனர். சிவபெருமான் மகேந்திர வர்மன் கனவில் சமணர் செய்த நாகரிகமற்ற செயல் பற்றி விரித்துரைத்தார். மகேந்திரவர்மன் கோயிலில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசனை நடைபெற ஏற்பாடு செய்தான். சமய வெறி கொண்ட சமணர்களைத் தண்டித்தான். மக்களும் நாவுக்கரசர்க்கு ஒத்துழைப்பாக இருந்ததால் பக்தி இயக்கம் சன்மார்க்க இயக்கத்தோடு இணைந்து சென்றது. சமயச் சின்னங்களை உடலில் பூண்பதோடு அழியாத சின்னமாக சூலமும் காளையும் பொருந்திய சிவ அடையாளங்களை உடலில் பொறித்துக் கொண்டனர். இன்றும் கட்சிச் சின்னங்களைப் பச்சைக் குத்திக் கொள்ளும் கட்சித் தொண்டர்களைப் பார்க்கிறோம். கட்சி யில் ஏதேனும் பயன் கிடைக்குமா என்று எதிர்பார்ப்புடன் செய்யும் கட்சித் தொண்டனைவிட உண்மையான பக்தி கொண்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனப் பணியாற்றும் சமயத் தொண்டு பன்மடங்கு சிறந்தது. மக்கள் தொண்டு செய்யாத ஆத்திகரைவிட மக்கள் தொண்டு செய்யும் சாதாரண மனிதன் மேலானவன்.

வள்ளுவர், வள்ளலார் போன்ற ஆன்றோர்கள் பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாதபோது அறிவினால் எந்தப் பயனும் இல்லை என்றனர். அவர்கள் விலங்கே ஆவர். ஒரு பசு தன் புண்பட்ட கன்றுக்காகக் கண்ணீர் விடாது. ஆனால் ஒரு தாய் தன் குழந்தைகட்கு உணவிட்டுத் தன் வயிற்றைக் காயப்போடுதலைக் காண்கிறோம். இறைவன் அந்தத் தாயினும் மேலானவன். அடியவர் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குபவன்.

வள்ளலார்,

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணிஉள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவரவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென நான்தேர்ந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட என்சிந்தை மிக விழைந்ததாலோ

Koviloor Digital Library

என்று தன்னுயிர்போல் மன்னுயிர் பேணும் மாபெரும் பண்பிற்குத் தலைவணங்குவர்.

அடியார்க்கு அடியார்

ஞானசம்பந்தர் ஏறிவந்த பல்லக்கை அப்பர் சுமந்தார். எனவேதான் வள்ளுவர் பல்லக்கில் ஏறி இருப்பவனையும் பல்லக்கைச் சுமப்பவனையும் வைத்து இவன் அறத்தான், இவன் மறத்தான் (பாவம் செய்தவன்) என முடிவு செய்யலாகாது என்றார்.

அறத்தா றிதுவென வேண்டா; சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

தொண்டு நெறி ஓர் இயக்கமாக மாறச் சமயத் தொண்டர்கள் இயக்கவாதிகளாகவே விளங்கினர்.

குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் ஞான சம்பந்தரை மதுரைக்கு அழைத்தனர். அப்போது சமணவெறி பாண்டிய நாட்டில் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. பேரரசியாகிய மங்கையர்க் கரசியே சிவச் சின்னத்தைத் தன்மார்பகத்து மறைத்து அணிய வேண்டிய கொடுமை நிலவியது.

சமணரின் பல கொடுமைகளை அறிந்த அப்பர் சமணர் கொடுமை கூறிச் சம்பந்தரை விலக்க முயன்றார். சம்பந்தர் "சைவ நெறி பரப்புதற்கு ஆவன செய்வேனேயன்றிச் சமணரை ஒன்றும் செய்யேன்" என்று உறுதி கூறினார்.

சமயத் தலைவர்கள் வெறியர்களாக இருந்தால் நாடே கெடும். நாட்டாட்சியும் பாழாகும்.

என்று கூற எல்லைஇலா நீறு போற்றும் இருவரையும்
சென்று காணும் கருத்துஉடையேன் அங்குத் தீங்கு புரி அமணர்
நின்ற நிலைமை அழிவித்துச் சைவநெறி பாரித்தன்றி
ஒன்றும் செய்யேன் ஆணைஉமது என்றார் உடைய பிள்ளையார் (288)

மெய்ப்பொருள்

எந்த ஒரு சமயமோ கட்சியோ கொள்கை பரப்புவதாக இல்லாமல் சமுதாயத்துக்கு நல்லன செய்யும் இயக்கமாக மாறவேண்டும். ஆலி நாடராகிய திருமங்கையாழ்வார் வந்தோர்க்கெல்லாம் அன்னமிட்டார். கொள்ளையடித்து அன்னமிட்டது பொருந்துமா என்ற வினா எழும். மேகம் கடல் நீரைக் கொள்ளை கொள்ளும். அதன் உவர்ப்பை மாற்றி நன்னீராகப் பெய்யும். எனவே, பொருள் அருள் கொண்டநற் செயல்கட்குப் பயன்படவேண்டும். எறிபத்த நாயனார் அடியார்க்குத்

Koviloor Digital Library

தீங்கு செய்த பட்டத்து யானையையும் எதிர்த்து வந்த பாகரையும் அழித்தார். புகழ்ச் சோழ நாயனார் அடியார் செயல் போற்றித் தன்னுயிர் நீக்க வேண்டினான். ஒருசெயல் சூழ்நிலையைப் பொறுத்தே நல்லதா அல்லதா என முடிவு செய்யப்பெறும். போர்க்களத்தில் கொலை அறமாகும். நாட்டில் கொலை மறமாகும். போர்க்களத் திலும் புறங்காட்டுவோர்மீதும், ஆடை குலைந்தோர் மீதும், குடுமி கலைந்தோர் மீதும் படை இழந்தோர்மீதும் படை செலுத்தல் மறமாகும் (பாவமாகும்.)

கொலைகாரர் தப்பிப் பிழைத்தால் குற்றமில்லை. ஆனால் கொலை செய்யாத சான்றோர் தண்டனை பெற்றுவிடக் கூடாது. களைகள் பறிக்கப்படாமல் விடப்படலாம். ஆனால் பயன்தரும் பயிரைப் பறித்துவிடக் கூடாது. திருநாவுக்கரசர் போன்ற சான்றோர் தண்டனை பெறக் கூடாது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்

என்பார் வள்ளலார். வள்ளலார் பயிர் போன்று பயன்தரும் நல்லார் வாட்டம் பார்க்கப் பொறுக்காதவர். மண்ணுயிர்களே வாட்ட மின்றி விளங்க எண்ணிய சன்மார்க்க இயக்கம் வள்ளலாரின் உயிராகும்.

அருள்மிகு சௌந்தரநாயகி உடனாய ஆதிபுராணர்
புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்
திருப்பூந்துருத்தி (அஞ்சல்) – 613 103.
கண்டியூர் (வழி), திருவையாறு வட்டம்,
தஞ்சை மாவட்டம்.

அருள்மிகு கருந்தார்குழலி உடனாய அக்னிபுரீஸ்வரர் திருக்கோயில்
திருப்புகலூர் (அஞ்சல்) – 609 704.
திருக்கண்ணபுரம் (வழி)
நாகப்பட்டினம் வட்டம் & மாவட்டம்.

Koviloor Digital Library

36. குலச்சிறையார்

(11 பாடல்கள்)

பிறந்த ஊர் : மணமேற்குடி (அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்)

குலம் : தெரியவில்லை

குருபூசை மாதம் : ஆவணி

நட்சத்திரம் : அனுஷம்

காலம் : அப்பர், சம்பந்தர் காலத்தவர் (கி.பி. 600 – 660)

"பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்" (திரு. தொகை. 4 :2)

மணமேற்குடி வளம்

இவ்வூர் அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. நெல், கரும்பு விளையும் வயல்கள் நிறைந்தது. கமுகு (பாக்கு) செழித்து வளரும் வளமிக்கது. வள்ளன்மை மிக்க மக்கள் வாழும் ஊர்.

குலச்சிறை நாயனார் சிறப்பு

குலச்சிறை நாயனார் பெருநம்பி என நம்பியாரூரரால் போற்றப்பெற்றவர். சைவத் தொண்டில் தலைசிறந்து விளங்கினார். சிவனடியாரை இன்சொற் சொல்லி வரவேற்பார். எக்குலத்தவர் ஆயினும் சங்கரன் அடியார் எனில் அவரைப் பணியும் இயல்பினர். உலகம் ஏற்றுக்கொள்ளும் உயர்ந்தவர் ஆயினும் ஏற்றுக் கொள்ளாச் சிறு குலத்தவராயினும் சிவனடியார் எனில் அவரைப் பணியும் பண்பினர்.

அடியாரைப் பேணல்

குழுவாய்ப் பல அடியார் வரினும், தனித்து வரினும் அன்புடன் வரவேற்று அமுதூட்டுவார். நமசிவாய என்ற அஞ்செழுத்தோதும் அடியாரை வணங்கிய நாவொடு வரவேற்பர்.

இறைவனின் இன்னருளைப் பெறுதற்குச் சிவனடியார் களே காரணமாவர் எனும் துணிவால் அவ்வடியார்களிடத்து அன்புகொண்டு பெரிதும் மகிழ்ந்து அவர்களுடைய திருவடிகளில்

Koviloor Digital Library

மிகுந்த அன்பொடும் வணங்கி, கைகள் கூப்பித் தொழுது, அன்பு கலந்த இனிய நன்மொழிகளைப் பொருந்தச் சொல்லி வாழ்பவர்.

அடியவர் திருநீறு, கோவணம், உருத்திராக்கம் ஆகிய சிவவேடத் தால் பொலிவு பெற்று, யார்க்கும் மூலகாரணமாய் நிற்கும் சிவபெரு மானின் திருவைந்தெழுத்தை **நாவணங்கி** ஓதி உரைப்பவராயின், அவர் திருவடிகளை நாளும் போற்றிவரும் பண்பினை உடையவர்.

நல்லமைச்சர்

நல்லொழுக்கத்திற் சிறந்து விளங்கிய அமைச்சர்களுக் கெல்லாம் மேம்பட்டவராய் மேலான பண்போடு குலச்சிறையார் விளங்கினார். இவர் பகைவர்களை அழித்து அரசருக்கு உறுதி பயக்கும் நிலையில் பணிபுரிந்தார்.

அடியாரைப் பேணுவதில் அரசிக்குத் துணைநின்றவர்

சைவ அடியார்களைப் பேணுவதில் பேரரசி மங்கையர்க் கரசியார்க்கு உறுதுணையாய் நின்றார். சைவம் போற்றிச் சிவனடியார் பாதம் சென்னியில் ஏத்தி மகிழ்வார். அமணர் தொல்லை நீங்க அவர்கள் ஒப்புக்கொண்ட வண்ணம் அனல்வாதம் புனல் வாதம் செய்து சமண சமயத்தைப் பாண்டிய நாட்டில் போக்கிச் சைவ சமயத்தை நிலைநிறுத்தினார். மங்கையர்க்கரசியார்க்குச் சம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு வரவழைக்கும் செயலில் துணை நின்றார்.

மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் இன்றேல் பாண்டிய நாட்டில் சைவம் மீண்டும் தழைத்திருக்காது.

மெய்ப்பொருள்

குலச்சிறை நாயனார் புராணப் பாடல்கள் அனைத்தும் நாற்சீர் நாலடியால் அமைந்த கலி விருத்தங்கள் ஆகும். குலச்சிறையார் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வகைச் சமய நெறிகளும் பாண்டிய நாட்டில் தழைக்க உறுதுணையாக நின்ற தீரர் என்ற கருத்து இவ்வமைப்பால் புலனாம். பெரும்பாலும் ஈரசைச் சீர்களால் ஆகிய இயற்சீரால் ஆன விருத்த அமைப்பு காணப் பெறுகிறது. இம்மை மறுமை இரண்டற்கும் உதவும் உயர்ந்த பண்புகள் கொண்டு ஒவ்வொருவரும் நடந்தால் குலச்சிறையார் போன்று அமைச்சராகி அரனருள் பெறுவதற்குத் தகுதியுடையர் என்ற கருத்தையும் சேக்கிழார் ஈரசைச்சீர் அமைப்பின் வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

Koviloor Digital Library

குலச்சிறை நாயனார் புராணப் பாடல்கள்

மணமேற்குடியின் சிறப்பு

பன்னு தொல்புகழ்ப் பாண்டி நல்நாட்டிடைச்
செந்நெல் ஆர்வயல் தீங்கரும் பின்அயல்
துன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னும் வண்மையினார் மணமேல்குடி. (1)

குலச்சிறையார்

அப்பதிக்கு முதல்வர் வன்தொண் டர்தாம்
ஒப்பு அரும்பெரு நம்பிஎன்று ஓதிய
செப்பஅரும் சீர்க்குலச் சிறையார் திண்மை
வைப்பி னால்திருத் தொண்டில் வழாதவர். (2)

பண்பும் தொண்டும்

காரணம் கண்ணுதற்கு அன்பர் என்னவே
வாரம் ஆகி மகிழ்ந்துஅவர் தாள்மிசை
ஆரும் அன்பொடுவீழ்ந்து அஞ்சலி முகிழ்த்து
ஈர நன்மொழி எய்த இசைத்துளார். (3)

குறியில் நான்கு குலத்தினர் ஆயினும்
நெறியின் அக்குலம் நீங்கினர் ஆயினும்
அறிவுசங் கரற்கு அன்பர் எனப்பெறில்
செறிவுஉறப் பணிந்து ஏத்திய செய்கையார். (4)

உலகர் கொள்ளும் நலத்தினர் ஆயினும்
அலகுஇல் தீமையர் ஆயினும் அம்புலி
இலகு செஞ்சடை யார்க்குஅடி யார்எனில்
தலம்உறப் பணிந்து ஏத்தும் தகைமையார். (5)

பண்பு மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண்பெருக் கியஅன் பால்எதிர் கொண்டு
நண்புகூர்ந்து அமுது ஊட்டும் நலத்தினார் (6)

பூதி கோவணம் சாதனத் தால்பொலிந்து
ஆதி தேவர்தம் அஞ்செழுத் தாம்அவை
ஓத நாவணக் கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினார். (7)

Koviloor Digital Library

அமைச்சர் பணி

இன்னநல் ஒழுக்கத் தினால்ஈறு இலாத்
தென்னவன் நெடுமா றற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமேல் ஆகியார்
ஒன்னலார்ச் செற்றுஉறு திக்கண் நின்றுளார். (8)

மங்கையர்க்கரசியாரின் தொண்டராய் இருத்தல்

ஆய செய்கையர் ஆயவர் ஆறுஅணி
நாய னார்திருப் பாதம் நவின்றுளார்
பாய சீர்புனை பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்டர் ஆயினார். (9)

காழிப்பிள்ளையாருக்கு அடியராதல்

புன்நயத்து அருகந் தர்பொய் நீக்கவும்
தென்னர் நாடு திருநீறு போற்றவும்
மன்னு காழியர் வள்ளலார் பொன்அடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார். (10)

சமணர் திறம் நீக்கியமை

வாதில் தோற்ற அமணரை, வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன்? மேல்இனி ஏத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர்தாள். (11)

திருஞானசம்பந்தர் குலச்சிறையாரை போற்றியுரைத்தல்

கணங்களாய் வரினுந் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை...

– திருஞானசம்பந்தர் தேவாரம் : 3:120:4

நாவணங்கி இயல்பாம் அஞ்செழுத்து ஓதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டால்
தொழுது எழும் குலச்சிறை...

– திருஞானசம்பந்தர் தேவாரம் : 3:120:8
திரு ஆலவாய்ப் பதிகம்.

"வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன்" - திருஞானசம்பந்தர் தேவாரம் 3:120:2.

Koviloor Digital Library

37. பெருமிழலைக் குறும்பர்

(11 பாடல்கள்)

பிறந்த ஊர் : **பெருமிழலை (புதுக்கோட்டைக்கு அருகில்)**

குலம் : **குறும்பர் (குறுநில மன்னர்)**

குருபூசை மாதம் : **ஆடி**

நட்சத்திரம் : **சித்திரை**

காலம் : **சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840 – 865)**

"பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்" (திரு.தொகை. 4 :2)

பெருமிழலை வளம்

புதுக்கோட்டைக்குத் தென்மேற்கே, ஏறத்தாழ 15 கி.மீ. தொலைவில் பேரையூருக்கு அருகில் வெள்ளாற்றின் தென் கரையில் இவ்வூர் உள்ளது. தென்னை, பலா, கமுகு ஆகியவை நிறைந்த வளங்கொண்டது பெருமிழலை. வீதி எங்கும் திருநீற்றொளி பரவி இருக்கும். சைவ நெறியில் செல்லும் நல்லொழுக்கமிக்க பெருமக்கள் வாழுமிடம் பெருமிழலை ஆகும்.

பெருமிழலைக் குறும்ப நாயனார் சிறப்பு

சிவனடியார் உரையாமுன்னம் குறிப்பறிந்து பணிசெய்யும் முதிர்ந்த ஞானம் உடையவர். எண்ணற்ற தொண்டர்கட்கு அமுதூட்டி வேண்டிய செல்வங்களைக் கொடுத்தனுப்பும் பண்பினர். அடியாரை மனத்தால் வணங்கும் இயல்பினர். திருத்தொண்டு செய்த தொண்டர்களை வணங்கித் திருத்தொண்டத் தொகை பாடியவர் சுந்தரர். மெய்த்தொண்டரைப் பாடிய அடியாராகிய சுந்தரரின் திருவடிகளை நாளும் தொழும் தொண்டரடிப்பொடி இவர். சுந்தரரைக் கைகளால் தொழுது வாயார வாழ்த்தி மனத்தால் நினைக்கும் கடப்பாட்டினையே சிவபெருமானுக்குரிய தொண்டு நெறி என்று நினைப்பவர்.

அணிமா முதலிய அட்டமாசித்தி கைவரப்பெறல்

நாள்தோறும் சுந்தரர் நாமம் ஓதியதால் 1. அணிமா, 2. மகிமா, 3. லகிமா, 4. கரிமா, 5. பிராப்தி, 6. பிராகாமியம், 7. ஈசத்துவம், 8. வசித்துவம் ஆகிய எண்வகை சித்தி கைவரப்பெற்றார். பெரு

Koviloor Digital Library

மானின் நமசிவாய என்ற அஞ்செழுத்து மந்திரமும், பெரும்பொருளும், குருபிரானின் அன்புகெழுமிய உறவும் கிடைக்கப்பெற்றார்.

கொடுங்கோளூர் நிலை அறிதல்

சுந்தரர் தன்னை ஓலை காட்டி ஆட்கொண்ட சிவபெருமான் எழுந்தருளியுள்ள கொடுங்கோளூர், திருவஞ்சைக்களம் முதலிய இடங்கட்குச் சென்று பெருமானைத் தொழுதார். இறைவன் திருவடி தொழும் கருத்தை மனத்தில் கருதினார். இதனைத் தன் யோகசக்தியால் குறும்பர் அறிந்தார்.

மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களும் சிந்தையேயாகப் பிரமநாடி (சுழிமுனை நாடி) வழிக் கருத்தைச் செலுத்தினார். மறைமூலக் கபாலம் (ஆதியாகிய – வித்தில்லா வித்தாகிய – சிவமயப் பொருளாகிய – அந்த ஆதி வஸ்து இருக்கும் இடம்) திறந்தது. அவர் இறைவன் திருப்பாதம் சேர்ந்தார். யோக நெறியில் ஞானம் பெற்று இறைவன் திருவடி சேர்ந்தார். குருவருளால் இறையருளை இனிதே பெற்றார். கயிலை சென்றார். காணாதன கண்டார். நொடித்தான்மலை உத்தமனோடு ஒன்றினார்.

மெய்ப்பொருள்

1. **அணிமா** – மிகப் பெரியதாய ஒன்றை அணுவாக்குதல்.
2. **மகிமா** – மிகச் சிறியதாகிய ஒன்றை மிகப் பெரியதாக்குதல்.
3. **லகிமா** – எடுப்பதற்குக் கனமாக இருப்பதொன்றை எளிதாக்குதல் (இலகுவாக்குதல்).
4. **கரிமா** – எடுப்பதற்கு மிக எளிதாக இருப்பதொன்றை மிகப் பளுவாக்குதல்.
5. **பிராப்தி** – வேண்டுவன அடைதல்.
6. **பிராகாமியம்** – விரும்பியவாறு நுகர்தல்.
7. **ஈசத்துவம்** – யாவரையும் ஆட்சி கொள்ளுதல்.
8. **வசித்துவம்** – எவற்றையும் தன் வயமாக்குதல். சுற்றம் – உடற்சார்பு. பொருள் – உலகச் சார்பு. உணர்வு – உயிர் சார்பு. இம்மூன்று சார்புகளுக்கும் துணையாயது திருவைந்தெழுத்தே யாகும் என உணர்ந்து உருகித் தொழுதவர் பெருமிழலைக் குறும்பர்.

'நம்பியாரூரர்' என்ற திருப்பெயரில் உள்ள இரண்டு ஒற்று எழுத்துகளை நீக்கிவிட்டால் ஐந்தெழுத்து இருப்பது இறை பொருத்தமோ?

Koviloor Digital Library

பெருமிழலைக் குறும்பர் புராணம் முழுமையும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்துள்ளது. ஆறு அறிவையும் தீயவற்றிலிருந்து விலக்கி நல்லவற்றின்பால் செலுத் தினால் அட்டமாசித்தி கிட்டும் என்பது பொருள்.

பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணப் பாடல்கள்

பெருமிழலையின் வளம்

சூதம் நெருங்கு குலைத்தெங்கு பலவு பூகம் சூழ்புஉடைத்தாய்
வீதிதோறும் நீற்றின்ஒளி விரிய மேவி விளங்குபதி
நீதிவழுவா நெறியினராய் நிலவும் குடியால் நெடுநிலத்து
மீது விளங்கும் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை. (1)

பெருமிழலைக் குறும்பரின் தொண்டு

அன்ன தொன்மைத் திருப்பதிக்கண் அதிபர் மிழலைக் குறும்பனார்
சென்னி மதியம் வைத்தவர்தம் அடியார்க்குஆன செய்பணிகள்
இன்ன வண்ணம் என்றவர்தாம் உரையா முன்னம் எதிர்ஏற்று
முன்னம் உணர்ந்து* செய்வாராய் முதிரும் அறிவின் பயன்கொள்வார். (2)

தொண்டர் பலரும் வந்துஈண்டி உண்ணத் தொலையா அமுதுஊட்டிக்
கொண்டு செல்ல வருநிதியம் முகந்து கொடுத்துக் குறைந்துஅடைவார்
வண்டு மருவும் குழல்உமையாள் கேள்வன் செய்ய தாள்என்னும்
புண்ட ரீகம் அகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினார். (3)

நம்பியாருரை நாளும் வணங்கி வருதல்

இத்தன் மையராய் நிகழும்நாள் எல்லை இல்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன் மையினை உலகுஅறிய விதியால் வணங்கி மெய்அடியார்
சித்தம் நிலவும் திருத்தொண்டர் தொகை பாடியநம் பியைப்பணிந்து
நித்தன் அருள்பெற்றவர் பாதம் நினைக்கும் நியமத் தலைநின்றார். (4)

மைஆர் தடங்கண் பரவையார் மணவா ள்ன்தன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி மனத்தால் நினைக்கும் கடப்பாட்டில்
"செய்யாள் கோனும் நான்முகனும் அறியாச் செம்பொன் தாளிணைக்கீழ்
உய்வான் சேர உற்றநெறி இதுவே" என்று அன்பினில் உய்த்தார், (5)

எண்வகைச் சித்திகளை அடைதல்

நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி சித்தி ஆன அணைந்ததன்பின்
மூளும் காதல் உடன்பெருக முதல்வர் நாமத்து அஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வும்ஆம் பரிசு வாய்ப்பக் கெழுமினார் (6)

Koviloor Digital Library

இன்ன வாறே இவர்ஒழுக ஏறு கொடிமேல் உயர்த்தவர்தம்
பொன்னங் கழல்கள் மண்ணின்மேல் பொருந்த வந்து வழக்குஉரைத்து
மன்னும் ஓலை அவைமுன்பு காட்டி ஆண்ட வன்தொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி கொடுங்கோ ளூரைச் சேர்வுற்றார். (7)

ஆருரரின் பெருவாழ்வு அறிதல்

அஞ்சைக் களத்து நஞ்சுஉண்ட அமுதைப் பரவி அணைவுறுவார்
செஞ்சொல் தமிழ்மா லைகள்மொழியத் தேவர் பெருமான் அருளாலே
மஞ்சில் திகழும் வடகயிலைப் பொருப்பில் எய்த வரும்வாழ்வு
நெஞ்சில் தெளிய இங்குஉணர்ந்தார் நீடு மிழலைக் குறும்பனார். (8)

கயிலையை அடைதல்

மண்ணில் திகழும் திருநாவ லூரில் வந்த வன்தொண்டர்
நண்ணற்கு அரிய திருக்கயிலை நாளை எய்த நான்பிரிந்து
கண்ணிற்கு அரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன்என்று
எண்ணிச் சிவன்தாள் இன்றேசென்று அடைவன் யோகத் தால்என்பார்.(9)

நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏலவேமுன் பயின்றநெறி எடுத்த மறைமூ லம்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை முன்அணைந்தார் (10)

பெற்ற பேறு

பயில்ஐச் செறிந்த யோகத்தால் பரவை கேள்வன் பாதம்உறக்
கயிலைப் பொருப்பர் அடிஅடைந்த மிழலைக் குறும்பர் கழல்வணங்கி
மயிலைப் புறங்கொள் மென்சாயல் மகளிர் கிளவி யாழினொடும்
குயிலைப் பொருவும் காரைக்கால் அம்மை பெருமை கூறுவாம். (11)

சிந்தனைக்கு

1. இராமபிரானைக் கண்ணாரக் கண்டு – பழகி, தொண்டு செய்த அனுமன் – உரைத்து உய்ந்தது இராம நாமம்.

2. சமுதாயச் சூழலால் குருவைக் கண்ணால் கண்டும் ஞானம் பெற முடியாமல் உருவை வணங்கியே அனைத்துக் கலைஞானமும் பெற்றவர் ஏகலைவன்.

3. நாரத மகரிஷி ஓதிய இராமநாமம் உணர்வில் கலந்து உயிரில் ஒன்றியதால் வேடனாகிய வால்மீகி மகரிஷியானார்.

4. நாரத மகரிஷி சிறுவன் துருவனுக்கு உபதேசித்து உய்தி பெற வைத்தது, ஓம் நமோ நாராயணா என்னும் எட்டெழுத்து மந்திரம்.

Koviloor Digital Library

5. நாரத மகிரிஷி சிறுவன் **பிரகலாதனுக்கு** உரைத்து உயிரில் ஒட்ட வைத்தது, **ஓம் நமோ நாராயணா** என்ற எட்டெழுத்து மந்திரம். சிறுவர் ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் தலைவராக உயர்ந்தார்.

6. பெருமிழலைக் குறும்பர் தம் குருவாகிய சுந்தரரை வாழ் நாளில் ஒருமுறைகூடப் பார்த்ததில்லை. பிறர் யாரிடமும் உபதேசம் பெற்றதில்லை. தம் நினைவு ஒன்றிலே குருபரனைச் சிக்கெனப் பிடித்துக் கண்ணின் மணியாக, மணியின் ஒளியாகக் குருவின் திருப் பாதத்தைப் பற்றியதால் – பற்று அறுந்தது – பரலோகம் பற்றிய பரமன் அருள் கிட்டியது. திருவருள் நிறைந்தது. திருவடிப்பேறு நிலைபெற்றது.

தீவிர வைராக்கியத்தோடு, இடையறாது விடாப்பிடியாக நினைவுத் தவத்தில் மூழ்கி வாழ்பவரைக் குருவருள் சுற்றிச் சூழ்ந்து நின்று காக்கும். அந்த அன்புத் தொண்டரை இறையருள் தானே வந்து தாயைப்போல அணைத்து அன்புகாட்டி அருள்செய்யும். தெய்வம் மடியை வரிந்து கட்டிக்கொண்டு வந்து முன்நிற்கும். இது முக்காலும் உண்மை. இச்செயல் அன்றும் நடந்தது. இன்றும் நடக்கிறது. என்றும் நடைபெறக்கூடியது.

* **வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்**
  பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து

– தொல்காப்பியம், பொருளதிகாரம் : செய்யுளியல் 415

* **குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
  மடிதற்றுத் தான்முந் துறும். (குறள். 1023)

Koviloor Digital Library

38. காரைக்கால் அம்மையார்

(66 பாடல்கள்)

பிறந்த ஊர் : காரைக்கால் (புதுச்சேரி மாநிலம்) மயிலாடுதுறை – நாகப்பட்டினம் இடையில் உள்ளது.

குலம் : வணிகர்

குருபூசை மாதம் : பங்குனி

நட்சத்திரம் : சுவாதி

காலம் : அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்டவர். (கி.பி. 300 – 600)

பேயார்க்கும் அடியேன் (திரு. தொகை : 4 :2)

காரைக்கால் வளம்

அறநெறி வழியில் நின்று வாய்மை தவறாத குற்றமற்ற வணிகர் குடிமக்கள் வாழும் ஊர் காரைக்கால். சங்குவளம் நிறைந்த கழிக்கானல் நிறைந்தது.

புனிதவதியின் பிறப்பும் வளர்ப்பும்

காரைக்கால் வணிகர் தலைவன் **தனதத்தன்** தவத்தால் புனிதவதியார் தோன்றினார். நடைப்பருவத்தே மணக்காதல் ததும்ப வரும் மொழி பயின்றார். இவர் பிறந்த பின்பு செல்வம் மேலும் மேலும் வளர்ந்தது. இளமையிலேயே பெருமான் திருப்பெயரை ஓதினார். வீட்டெல்லை கடவா நிலையில் பருவமுற்றார்.

திருமணம்

நாகப்பட்டினத்துப் பெரு வணிகர் **நிதிபதி** தன் மகன் பரம தத்தனுக்குப் புனிதவதியைப் பெண் கேட்டு வந்தார். பெரியோர்கள் முறைப்படி மணம் பேசினர். முரசு முழங்கச் சுற்றம் போற்றப் பரமதத்தனுக்கும் புனிதவதிக்கும் திருமணம் நடைபெற்றது.

தன் ஒரே மகள் என்பதால் காரைக்காலிலேயே தனி வீடு அமைத்துத் தனிக்குடித்தனம் வைத்தான்.

மங்கலமாம் மணவினைகள் முடித்துஇயல்பின் வைகும்நாள்
தங்கள்குடிக்கு அரும்புதல்வி ஆதலினால் தனதத்தன்
பொங்குஒலிநீர் நாகையினில் போகாமே கணவனுடன்
அங்கண் அமர்ந்து இனிதுஇருக்க அணிமாடம் மருங்குஅமைத்தான் (12)

Koviloor Digital Library

அடியார்கட்கு உணவிட்டுப் பொன்னும் நவமணியும் மற்றும் வேண்டுவன அனைத்தும் கொடுத்துச் சிவன் திருவடிகளின் மீது அன்பு கொண்டு ஒழுகினார், புனிதவதியார்.

பரமதத்தன் தனக்குக் கிடைத்த மாங்கனிகள் இரண்டனை வீட்டுக்குக் கொடுத்தனுப்பினான். சிவனார் திருத்தொண்டர் ஒருவர் பசியோடு வந்தார். அடியாரை விருந்து பேணி இன்னடிசில் படைப்பார். கறியமுதுக்குப் பதில் அடியார் பசிதீர்க்க மாங்கனி ஒன்று அடியார்க்குப் படைத்தார். அடியார் மாங்கனியோடு அமுதுண்டு மகிழ்ந்து வாழ்த்திச் சென்றார்.

மாங்கனி அற்புதம்

கணவன் பரமதத்தன் நண்பகல் உணவுண்ண வந்தான். மாங்கனி ஒன்றை உணவுடன் படைத்தார். மாங்கனியின் சுவையில் திளைத்த பரமதத்தன் மற்றொரு மாங்கனியை இடுமாறு கேட்கப் புனிதவதி இறைவனை வேண்டி உருக ஒரு கனி கையில் வந்து சேர்ந்தது.

அம்மருங்கு நின்றுஅயர்வார் அரும்கனிக்குஅங்கு என்செய்வார்?
மெய்ம்மறந்து நினைந்து இடத்து உதவும் விடையவர்தாள்
தம்மனம்கொண்டு உணர்தலுமே அவர்அருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனிஒன்று (25)

அக்கனி உண்ட பரமதத்தன் "இது முன்னர் தந்த மாங்கனி யன்று. மூவுலகும் பெறலரிது. பெற்றது வேறெங்கு" என்று ஐயுற்று மனைவியை வினவினான். கற்புடை மனைவியாதலின் மறைக்காமல் உள்ளதைச் சொன்னார். ஈசனருள் எனக்கேட்ட பரமதத்தன் அது தெளியாமல், "இன்னும் ஓர் மாசில் மாங்கனி அவனருளால் அழைத்தளிப்பாய்" எ்னறான்.

புனிதவதியார், "பெருமானே! நீர் அளித்தருளீரேல் என்னுரை பொய்யாம்." என்று வேண்டப் பெருமான் மாங்கனி அருள அதைக் கணவன் கையில் கொடுத்தார். பரமதத்தன் கைபுக்கமாங்கனி மறைந்தது. மனைவியின் தெய்வத்தன்மை உணர்ந்த பரமதத்தன் அவளைப் பிரிந்து செல்ல எண்ணித் திரைகடல் கடந்து அயல்நாடு சென்றான்.

அயல்நாட்டில் பொருள்தேடிச் சேர்த்ததன்பின் பாண்டி நாடு அடைந்தான். அங்கு ஒரு பெண்ணை மணந்து அழகிய பெண் மகவுக்குத் தந்தையானான். அம்மகவுக்குத் தன் மூத்த

Koviloor Digital Library

மனைவியின் பெயரை (புனிதவதி) இட்டான். பரமதத்தன் பாண்டிய நாட்டில் இருப்பதை அறிந்த தனதத்தன் மகளைப் பல்லக்கில் ஏற்றிப் பாண்டிய நாட்டிலுள்ள பரமதத்தனிடம் கொண்டு போய் விட எண்ணினான்.

தன் மனைவி தன்னைப் பார்க்க வருவதை உணர்ந்த பரமதத்தன் தன் மனைவி மகள் சுற்றத்தோடு மனைவியைப் புறநகரில் காண வந்தான். மூத்த மனைவியின் திருவடிகளில் தன் இளைய மனைவி மகவோடு வீழ்ந்து வணங்கித் தன் சுற்றத்தார்க்கு மனைவியின் தெய்வத்தன்மையை விளக்கினான்.

மற்றுஅவர் தம்மை நோக்கி மானுடம் இவர்தாம் அல்லர்
நல்பெருந் தெய்வம் ஆதல் நான்அறிந்து அகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப் பேர்இட்டேன் ஆதலாலே
பொன்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின் என்றான்'' (47)

புனிதவதியார் இதனால் முதலில் துணுக்குற்று, பின் தெளிவுற்று கணவனுக்கு ஆகாத இவ்வுடம்பு பேய்வடிவு ஆதல் வேண்டும் என்று இறைவனை வேண்டிப் பேய் வடிவு பெற்றார். பேய் வடிவம் என்பது குறியீடு. ஞான வடிவு பெற்றார் என்று பொருள். 'பேய்போல் திரிந்து... உண்மை ஞானம் தெளிந்தவரே' என்ற பட்டினத்தார் பாடலின் உண்மைப் பொருளை உணர்ந்து தெளிக.

ஆனஅப் பொழுது மன்றுள் ஆடுவார் அருளினாலே
மேல்நெறி உணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊன்அடை வனப்பை எல்லாம் உதறிஎன் புடம்பே ஆக
வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவம் ஆனார் (50)

வானத்துாபி முழங்கியது. மலர்மழை பொழிந்ததெங்கும். சுற்றத்தார் அஞ்சி அகன்றனர்.

பாமாலை

ஆண்டவனுக்கு வாடும் பூமாலை சாத்துவதினும் வாடாத பாமாலை சாத்துவது மேலெனக் கருதிய காரைக்கால் அம்மையார் அற்புதத் திருஅந்தாதி, இரட்டைமணிமாலை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவற்றை அருளிச் செய்தார். கைலையில் தன் கால்படுதல் பாவமெனக் கருதிய காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து சென்றார்.

அம்மை அப்பர் திருக்காட்சி

அம்மையப்பனில்லாத அம்மையப்பன் புனிதவதியை அம்மையே என அழைத்தார். பார்வதியிடம் பேய் வடிவப் பெருமையைப் பேசினார்.

Koviloor Digital Library

வரும்இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே மற்றுஇப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள் என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி அம்மையே என்னும் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம் உய்யவே அருளிச் செய்தார். (58)

புனிதவதியார் இறைவனை அப்பா என்றழைத்துப் பொற்பாதம் பணிந்தார். 'இங்கு வேண்டுவதென்ன' என்று இறைவன் வேண்டினார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்.
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புஉண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா!நீ ஆடும்போது உன்அடியின்கீழ் இருக்க என்றார். (60)

"திரு ஆலங்காட்டில் ஆடும்போது ஆனந்தம் சேர்த்து எப்போதும் நம்மைப் பாடுக!" என்று இறைவன் அம்மையார்க்கு அருள்புரிந்தார். காரைக்கால் அம்மையார் திருஆலங்காடு அடைந்து இறைவன்மீது அற்புதத் திருஅந்தாதி மற்றும் மூத்த திருப்பதிகமும் பாடினார்.

ஆலங்காடு அதனில் அண்டம்உற நிமிர்ந்தாடு கின்ற
கோலம்காண் பொழுது கொங்கை திரங்கிஎன்று எடுத்துத் தங்கு
மூலம்காண்பு அரியார் தம்மை மூத்த நல்பதிகம் பாடி
ஞாலம்கா தலித்துப் போற்றும் நடம்போற்றி நண்ணும் நாளில் (63)

மட்டுஅவிழ் கொன்றையினார்தம் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டம்மிகு பெருங்காதல் எழுந்துஓங்க வியப்புஎய்தி
எட்டிஇலவம் ஈகை எனஎடுத்துத் திருப்பதிகம்
கொட்டமுழ வம்குழகன் ஆடும்எனப் பாடினார். (64)

எட்டி இலவம் ஈகை – அண்ட முற நிமிர்ந்தாடுகின்ற – கொட்ட முழவம் குழகன் ஆடும் எனத் திருப்பதிகங்கள் பாடினார். ஆலங் காட்டிறைவரின் ஆடும் திருவடியாடல் கண்ட காரைக்கால் அம்மையார் பேரின்பம் பெற்றார். பிறவா நெறி உற்றார்.

மெய்ப்பொருள்

இறைவன் அருளை ஐயத்தோடு அணுகிய பரமதத்தனுக் குப் புனிதவதி என்ற நல்ல மனைவியோடு வாழக் கொடுத்து வைக்கவில்லை. நம்பிக்கையோடு இறைவனை வேண்டிய புனித வதியார் இறைவனுக்கே தாயாகும் பெருமை பெற்றுக் காரைக்கால் அம்மையார் ஆனார். நம்பிக்கையுடையோருக்கு நடராசரின் – நடனமாகிய நாதாந்த தரிசனம் நாளும் கிடைக்கும்.

Koviloor Digital Library

39. காரைக்கால் அம்மையார் அருளிச் செயல்கள்

(143 பாடல்கள்)

மெய்யறிவு கைவரப் பெற்ற காரைக்கால் அம்மையார் முதன் முதலாகப் பாடியருளியது அற்புதத் திருஅந்தாதியே என்பர். அற்புதத் திருவந்தாதி புதுமையான போக்குடையது. இவ் அந்தாதியின் சிறப்பை நோக்கியே சான்றோர் இந்த அந்தாதிக்கு அற்புதத் திருவந்தாதி என்று பெயர் கொடுத்தருளினர். இவ்வந்தாதி ஓதுவதற்கு இனிமையும் எளிமையும் உடையது. அறிதற்கரிய சிவஞானத்தின் இயல்பைத் தெளிவாக விளக்குவது. மெய்யன்போடு ஓதுவோர் உள்ளத்தை இவ்வந்தாதி உருக்கும் இயல்புடையது.

அம்மையார் தாம் பெற்ற திருவருள் மெய்யறிவினைத் தன்மை நிலையில் வைத்து உலகத்தார்க்கு அறிவுறுத்தும் பாடல்களும் தம்மைப் போன்ற அடியார்களுடைய இயல்பை விரித்துரைக்கும் பாடல்களும் சிவபெருமானுடைய அருட்கோலங்களையும் திருவருள் செயல்களையும் எண்ணிச் சிவபிரானை முன்னிலைப்படுத்தி அழைத்து உரையாடி மகிழும் பாடல்களும் அனைவருக்கும் இன்பத்தை அளிப்பன.

1. நீலகண்டன்

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் – நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப(து) இடர்.

2. அன்பு அறாது

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் – சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மனார்க்(கு)
அன்பறா(து) என்நெஞ் சவர்க்கு.

3. அவருக்கே

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தன்றிப் – பவர்சடைமேற்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்(கு)
ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்.

Koviloor Digital Library

6. என் நெஞ்சத்தான்

வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க – ஞானத்தான்
முன்நஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தானென்பான் யான்.

17. காண்பவர் மூவர்

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாம் காதலால் – காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்(கு)
ஆதியாய் நின்ற அரன்.

20. எல்லாம் அவன்

அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே – அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.

24. சோதி தரிசனம்

இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமா(று)
இதுவன்றே என்றனக்கோர் சேமம் – இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
இன்னுஞ் சுழல்கின்ற(து) இங்கு.

33. கோலமும் வடிவும்

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே – மேலுவந்த(து)
எக்கோலத்(து) எவ்வுருவாய்? எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்(து) அவ்வுருவே ஆம்.

41. நீ எங்கே?

ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் – இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ? நேர்ந்து.

65. காலை முதல் இரவு வரை

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின்

Koviloor Digital Library

தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு.

70. எரியில் ஆடும் இடம்

எமக்(கு)இதுவோ பேராசை என்றும் தவிரா(து)
எமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய் – அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம்.

72. என் கருத்து

கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன் – துண்டஞ்சேர்
விண்ணாளும் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதென் கருத்து.

74. கபாலக் கலம்

ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்திட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் – பேதையர்கள்
எண்ணா(து) இடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம்.

100. இறைவன் ஊரும் ஏறு

நடக்கிற் படிநடுங்கும் நோக்கில் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும் – அடுக்கல்
பொரும்ஏறோ ஆனேறோ பொன்ஒப்பாய் நின்னே(று)
உரும்ஏறோ ஒன்றா உரை.

101. பாடலின் பயன்

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினாற் காரைக்கால் பேய்சொல் – பரவுவார்
ஆராத அன்பினோ(டு) அண்ணலைச்சென்(று) ஏத்துவார்
பேராத காதல் பிறந்து.

2. திருஇரட்டைமணிமாலை

திரு இரட்டை மணிமாலை என்பது கட்டளைக் கலித்துறை முன்னும் வெண்பாப் பின்னுமாக அந்தாதித் தொடையால் பாடப்பெறு வதாகும். இரட்டை மணிமாலை என்னும் நூலை முதன்முதலாகப் பாடியவர் காரைக்கால் அம்மையாரே என்று பலரும் எண்ணுகின்றனர். இவ் இரட்டை மணிமாலைக்கு முற்பட்டதாக வேறோர் இரட்டை மணிமாலையும் கிடைத்திலது.

Koviloor Digital Library

உலக வாழ்வில் துன்பம் உண்டாகும் பொழுதும் உள்ளம் தளராது இறைவனையே போற்றுதல் வேண்டும். இறைவன் ஆணையின்றி இவ்வுலகத்தில் எதுவும் நிகழாது என்பது உணர்ந்து மறவாது போற்றும் அடியார்களை இறைவன் மீண்டும் பிறவாது காத்தருளுகின்றான். எண்தோள் முக்கண் எம்மானாகிய இறைவ னுடைய திருவடிகளை வணங்கிப் போற்றுவோர் கடலனைய துன்பங்கள் அனைத்தையும் கடந்து ஈறில்லாத திருவடிப் பேற்றை எய்தி மகிழ்வர். மறைகட்கு எல்லாம் தலையாய திருஐந் தெழுத்தினை உருவேற்றிப் போற்றுவோர் இறைவன் கழல் அடைவர். மெய்யடியார்களைப் போற்றுவோரைக் கண்டு வினைகள் எல்லாம் நில்லாது ஒழிந்து போகின்றன. தீவினை வந்து அடையாதவாறு திருஐந்தெழுத்தை ஓதினால் உய்தி பெறலாம். இத்தகைய நுண்பொருள் எல்லாம் இம்மாலையில் காணலாம்.

1. கட்டளைக் கலித்துறை

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போ(து)அஞ்சி நெஞ்சம்என்பாய்த்
தளர்ந்திங்(கு) இருத்தல் தவிர்திகண் டாய் தளராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்(து) இடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்எருக் கும்மிருக் குஞ்சென்னி ஈசனுக்கே.

8. வெண்பா

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்(கு)
ஆதியனை ஆதிரைநன் னாளானைச் – சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மாஎன்றான் கீழ்.

20. வெண்பா

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமுன் – உத்தமனாம்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து.

3. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் – 1

காரைக்கால் அம்மையாருடைய வரலாறு பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் மாக்கதைகளில் விரிவாகக் கூறப்படுகிறது. அம்மையார் இல்லறத்தில் இருக்குங்கால் இலக்கண இலக்கியங் களைக் கற்றதாகவோ செய்யுள் பாடும் திறமடைந்து திகழ்ந்த தாகவோ கூறப்படவில்லை. அடியார்கட்கு அமுதளித்தல், வேண்டுவன நல்கல் முதலிய திருத்தொண்டுகளில் ஈடுபட்டிருந்ததாகவே

Koviloor Digital Library

கூறப்படுகிறது. தம்மைக் கணவன் துறந்து விட்டான் என்பதை உணர்ந்தவுடன் அம்மையார் சதைப் பற்றுமிக்க தம்முடைய ஊனுடம்பை ஒழித்து, எற்புடம்பை அருள வேண்டுகிறார். அம்மையார் வேண்டியபடியே எற்புடம்பு அமைவதோடு தெய்வத் தன்மையும் மிகுதியாக அமைகிறது. தலையால் நடத்தல் முதலிய புதுமைகளும் நிகழ்கின்றன. தெய்வீக முதிர்ச்சியினால் உள்ளத்திலிருந்து அருட் பாடல்களும் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றிய பாடல்கள் அற்புதத் திருவந்தாதி, மூத்த திருப்பதிகங்கள் ஆகிய நூல்கள்தாம்.

மூத்த திருப்பதிகங்கள் இரண்டினுள் சிவபெருமானுடைய தன்மைகள் முதலியன பேசப்படுகின்றன. பதிகங்களின் இறுதியில் அம்மையார் தம்மைக் காரைக்கால் பேய் என்று கூறிக்கொள்வதுடன் முதற்பதிகத்தைக் கற்று வல்லவர்கள் ஆனவர்கள் சிவகதி சேர்வர் என்றும், இரண்டாவது பதிகத்தைப் பாட பாபநாசம் ஆகும் என்றும் கூறுகிறார்.

1. திருஆலங்காடு

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி யலறி யுலறுகாட்டில் தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தன லாடும்எங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே.

11. சிவகதி சேர்வர்

ஒப்பினை இல்லவன் பேய்கள்கூடி ஒன்றினை ஒன்றடித்(து) ஒக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டை யாட பாடிருந்(து) அந்நரி யாழ்அமைப்ப
அப்பனை அணிதிரு ஆலங்காட்டுள் அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும்வல்லார் சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே.

4. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் –2

1. குழகன் ஆடல்

எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட கடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே.

11. பாவம் நாசம் ஆகும்

சூடும் மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆட பாவம் நாசமே.

Koviloor Digital Library

40. அப்பூதி அடிகள்

(45 பாடல்கள்)

பிறந்த ஊர் : திங்களூர் (திருவையாற்றிலிருந்து கும்பகோணம்செல்லும் சாலையில் சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது.)

குலம் : அந்தணர்

குருபூசை மாதம் : தை

நட்சத்திரம் : சதயம்

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்தவர். (கி.பி. 600 – 660)

'ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்' (திரு. தொகை – 4:3)

தாண்டவம் புரியும் தம்பிரான் சிவபெருமான். அப்பூதியார் சிவனார் புகழ்பரப்பும் தவத்தின் மிக்கவர். திங்களூரில் வாழ்ந்து வந்தார். கொலை, களவு, கள், காமம், பொய், பொறாமை என்ற ஆறு தீய பண்புகளும் சாவினை ஒத்த தீமை தரும். அந்த ஆறு தீய பண்பு களையும் நீக்கியவர். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பது பழமொழி.

இந்த ஆறு தீய பண்புகள் எந்த வயதில் நமக்கு வந்தாலும் இறப்பை ஒத்த துன்பம் தரும். ஆறு குற்றம் நீக்கிய உண்மையைச் சேக்கிழார் ஆறுசீர் கொண்ட ஆசிரிய விருத்தப்பாவில் உணர்த்துவார்.

களவுபொய் காமம் கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளம்மிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளஎலாம் அரசின் நாமம் சாற்றும் அவ்ஒழுக்க லாற்றார். (2)

திருநாவுக்கரசரும் அப்பூதி அடிகளும்

அப்பூதியார் திருநாவுக்கரசர் மீது அளவிலா அன்பு கொண் டவர். தன் வீட்டில் உள்ள பசு, எருமை, மடங்கள், தண்ணீர்ப் பந்தல் தன்பிள்ளைகள் முதலிய அனைவர்க்கும் திருநாவுக்கரசர் பெயர் இட்டார். திருநாவுக்கரசர் திருப்பழனச் சிவனை வழிபட்டார். பின்பு அப்பூதி அடிகள் வாழ்ந்த திங்களூர்ச் சிவனை வழிபட விரும்பினார். திருநாவுக்கரசர் எல்லா அறச்சாலைகளிலும் தம் பெயர் இருப்பதை அறிந்து வியப்புற்றார். அறச்சாலைகளை உண்டாக்கிய அப்பூதி அடிகளைத் திருநாவுக்கரசர் அவர் மனையில்

Koviloor Digital Library

சென்று கண்டார். 'தாங்கள் ஏற்படுத்திய அற நிறுவனங் களுக்குத் தங்கள் பெயரிடாமல் வேறு ஒருவர் பெயர் தந்த "காரணம் என்ன?" என்று அன்புடன் அப்பூதி அடிகளை வினவினார்.

சமணர் சூழ்ச்சிகளைச் சமயத் தொண்டால் வென்ற நாவுக்கரசர் பெயர் வேறு பெயரா? என்று மனம் நொந்து அப்பூதி அடிகள் வினவினார்.

நின்றமறை யவர்கேளா நிலைஅழிந்த சிந்தையராய்
நன்றுஅருளிச் செய்திலீர் நாண்இல் அமண் பதகருடன்
ஒன்றிய மன்னவன் சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப் பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறுஒருபேர்? எனவெகுள்வார். (13)

திருநாவுக்கரசர் சிவபெருமான் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்ட சிறியேன்நான் என்று தன்னை அப்பூதி அடிகளிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார். பொதுவாகத் தங்கள் பெருமையைச் சொல்லித் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வர். ஆனால், அப்பராகிய நாவரசர் தாம் சமண சமயம் சேர்ந்த சிறுமை கூறித் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டார். கொல்லாமை விரதம் கொண்ட சமணர் சமயத்தில் சேர்ந்ததால் சூலை நோய் வந்தது. அந்தச் சமணரால் சூலை நோயை அகற்ற முடியவில்லை. சிவபெருமான் திருநீறே அச்சூலை நோயை அகற்றியதாக உரைத்தார். அப்பரை அறிந்த அப்பூதி அடிகள் பெருமகிழ்வடைந்தார். அப்பர் அடிகளில் வீழ்ந்து வணங்கினார். சுற்றம் சூழ மனைவி மக்களுடன் அப்பூதியார் அப்பர் திருவடி பணிந்தார். அப்பர் திருவடி கழுவிய நீரைத் தம் தலையில் தெளித்துக்கொண்டு, உள்ளும் அருந்தினார்.

மனைவியா ருடன் மக்கள் மற்றும்உள்ள சுற்றத்தோர்
அனைவரையும் கொண்டுஇறைஞ்சி ஆராத காதலுடன்
முனைவரை உள் எழுந்தருளு வித்துஅவர்தாள் முன் விளக்கும்
புனைமலர்நீர் தங்கள்மேல் தெளித்துஉள்ளும் பூரித்தார். (20)

அப்பூதியாரின் பக்தி

அப்பரை அப்பூதி ஆசனத்தில் அமர்த்தினார். பூசனைகள் செய்தார். திருநீற்றுக் காப்பேந்தி அடியாரை உணவுண்ண வேண் டினார். அப்பரும் ஒப்பினார். அப்பூதி மனைவியார் உயர்ந்த வகையில் சமையல் செய்தார்.

தந்தை போன்றபிள்ளை

அப்பூதியாரின் மனைவி தன் மூத்த மைந்தனை அழைத்து வாழை இலை அரிந்து வர ஏவினார்.

Koviloor Digital Library

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
தாய் சொல் மிக்கதோர் வாசகமில்லை

என்ற ஆன்றோர் மொழிக்கேற்ப தாய் தந்தை ஏவலைத் தலைமேற் கொண்டான்.

நல்லதாய் தந்தை ஏவ நான்இது செயப்பெற் றேன்என்று
ஒல்லையில் விரைந்து* தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லல்ஆம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள்அரா ஒன்று
அல்லலுற்று அழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற்று அன்றே (24)

அடியார் விருந்துண்ண வாழைக்குருத்து அரிந்தான். பூநாகம் தீண்டியது. **ஏழாம் வேகத்தை** நஞ்சு எட்டிக் கொண்டிருந்தது. பாம்பு தீண்டியதைக் கூறாமல் தாயின் மடியில் இலையை வைத்து மயங்கி வீழ்ந்தான். பாம்பு தீண்டி ஏழாம் வேகம் தெரிவுறக் கண்ணும் பல்லும் கருகியது. நஞ்சு உடல் முழுதும் இன்னும் பரவவில்லை.

ஏழாம் வேகம் : இரத்த ஓட்டம் இருதயத்தில் தூய்மை செய்யப் பட்டு உடலில் பல உறுப்புகளிலும் சென்று பரவி மீளவும் தூய்மை பெற அங்குச் சேருதல் ஓர் ஓட்டம் ஆகும். இவ்வாறு ஓடுதலை வேகம் எனக் கூறுவர். இவ்வாறு ஓடிச்செல்லும் குருதியில் நஞ்சு பொருந்த அதனால் அது பரவப்பட்ட நிலையில் ஒரு தாது அழியும். இவ்வகையில் ஏழாம் முறை பரவும்போது ஏழு தாதுக்களும் அழிந்து உயிர் நீங்கும். ஏழு தாதுக்களாவன : 1. சாரம் (உணவுச்சத்து), 2. செந்நீர் (குருதி), 3. ஊன் (தசை), 4. கொழுப்பு, 5. எலும்பு, 6. மூளை, 7. வெண்ணீர் (விந்து).

மைந்தன் உயிர் பெற்றெழுந்தமை

அப்பூதி அடிகளார் மைந்தன் நிலை கண்டு செய்வதறியாது வருந்தினார். அடியார் அமுதுண்ணத் தடையாய் இருக்குமென்ற றிந்து பாயினில் மூடிவிட்டு முற்றத்தில் ஒரு புறத்தில் மைந்தன் உடலை மறைத்து வைத்தனர். அடியாரை அமுதுண்ண அழைத்து வந்தனர். அப்பர் கால் கழுவி ஆசனத்தில் அமர்ந்து அனைவர்க் கும் திருநீறு வழங்கினார். அப்பூதி அடிகளாரின் மூத்த மகனைப் பற்றி அப்பர் வினவினார். அப்பூதி அடிகள் 'இப்போது இங்கு அவன் உதவான்' என விடை கூறினார். உள்ளம் தடுமாறிய அப்பர் உண்மை விரித்துரைக்க வேண்டினர். அப்பூதி அடிகள் உள்ளது கூறினார். அப்பர் உள்ளம் பதைத்தார். மைந்தன் உயிர்பெற்றெழ அப்பர் **ஒன்றுகொலாம்** எனப் பதிகம் பாடி இறைவனிடம் வேண்டினார். மைந்தர்

Koviloor Digital Library

உறக்கத்தினின்று எழுந்தது போன்று உயிர்த்து எழுந்தார். அப்பூதி அடிகள் மகன் உயிர்பெற்றதற்காக மகிழவில்லை. அடிகள் அமுதுண்ணத் தாமதம் ஆயிற்று என வருந்தினார்.

பிரிவுஉறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்றஅப் பயந்தார் தாங்கள்
அறிவுஅரும் பெருமை அன்பர் அமுதுசெய் தருளுதற்குச்
சிறிதுஇடை யூறு செய்தான் இவன்என்று சிந்தை நொந்தார். (37)

கோமயம் தெளித்துத் தீபம் ஏற்றி நீண்ட வாழைக் குருத்தினை விரித்து நீர் தெளித்துச் சுத்தம் செய்து அப்பரை விருந்துண்ண அழைத்தனர். மைந்தரும் அப்பூதி அடிகளும் அப்பரோடு விருந்துண்டனர்.

மைந்தரும் மறையோர் தாமும் மருங்குஇருந்து அமுது செய்ய
சிந்தைமிக்கு இல்ல மாதர் திருஅமு எடுத்து நல்கக்
கொந்துஅவிழ் கொன்றை வேணிக் கூத்தனார் அடியாரோடும்
அந்தமிழ் ஆளியார் அங்கு அமுதுசெய் தருளி னாரே. (41)

திங்களூரில் அப்பர் பல நாள் தங்கி இருந்தார். அப்பூதி அடிகள் அப்பர் அடிகளில் காணிக்கை செலுத்தினார். அப்பருக்கு வேண்டும் பணிகள் செய்தார்.

அப்பூதி அடிகளார் தம் அடிமையைச் சிறப்பித்து ஆன்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை விரும்புசொல் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர் எல்லைஇல் அன்பால் என்றும்
செப்பூதி யம்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம். (43)

திருப்பழனப் பதிகத்தில் அப்பூதியாரைக் குறித்துப் பாடிச் சிறப்பித்தார். அடியார் தொண்டு செய்த அப்பூதி மாதொரு பாகன் திருவடி நண்ணினார்.

இவ்வகை அரசின் நாமம் ஏத்திஎப் பொருளும் நாளும்
அவ்அருந் தவர்பொன் தாளே எனஉணர்ந்து அடைவார் செல்லும்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்றுள் ஆடும்
நவ்விஅம் கண்ணாள் பங்கர் நல்கழல் நண்ணினாரே! (44)

மெய்ப்பொருள்

தர்மம் தலை காக்கும் என்ற விதிப்படி அப்பூதி அடிகளார் செய்த தானமும் தர்மமும் பாம்பு தீண்டிய மகனுக்கு உயிர் தந்தன. தனக்கு மிஞ்சியவை தானமும் தருமமும் என்பார். வேறொன்றும் ஒருவனுக்கும் மிஞ்சாது.

Koviloor Digital Library

அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே விழிஅம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மி இரு
கைத்தலைமேல் வைத்தழும் மைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவங்களே! (பட்டினத்தார்)

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். (குறள் : 33)

என்று வள்ளுவர் நல்வினைகளை இடைவிடாது மனம் மொழி மெய்களால் செய்ய வற்புறுத்துவர்.

உயர்ந்த அந்தணர் குல அப்பூதி வேளாளர் குல அப்பரைக் குருவாக ஏற்றுத் தாழ்ந்து பணிந்து வீடுபேறடைந்தார்.

கோயில்: அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயில்
திங்களூர், திருப்பழனம் (அஞ்சல்),
திருவையாறு (வழி), தஞ்சாவூர் மாவட்டம் – 613 204.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 14765

Koviloor Digital Library

41. திருநீலநக்கர்

(38 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	**திருச்சாத்த மங்கை. திருமருகலிலிருந்து நாகூர் செல்லும் சாலையில் 1 கி.மீ. சென்றால் கோயில் சீயாத்தமங்கை என்ற பெயரில் இவ்வூர் இருக்கிறது. திருப்புகலூருக்கு அண்மையில் உள்ளது.**
குலம்	:	**அந்தணர்**
குருபூசை மாதம்	:	**வைகாசி**
நட்சத்திரம்	:	**மூலம்**
காலம்	:	**அப்பர் சம்பந்தர் காலத்தவர். (கி.பி. 600 – 660)**

'ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீல நக்கற்கடியேன்' (திரு. தொகை 4:3)

சாத்தமங்கை வளம்

திருச்சாத்தமங்கை ஊரில் வயல்களில் தாமரை மலர்கள் நிறைந்துள்ளன. தாமரைப் பொகுட்டுகளில் கெண்டை மீன் துள்ளும். செந்நெல் வயல்களில் பெண்கள் பணி செய்வர். நீர்த் துறையாடும் பெண்களின் நடையை வயல் அன்னம் கற்றுக்கொள்ள வந்தது. அந்தணர் மறை ஓதக் கேட்ட நாகணவாய்ப்பறவை சாம கீதம் பாடும்.

அந்தணர் அறம் வளர்க்கும் ஆகவனீயம், தக்கினாக்கியம், காருகபத்தியம் என்னும் முத்தீ வளர்ப்பர். மங்கையர் நான்காம் தீயாகிய கற்பை வளர்ப்பர். (பாடல் : 3)

திருநீலநக்கர் பெருமை

நான்மறை ஓதும் அந்தணர் குலத்தில் சிவத்தொண்டராக திருநீலநக்கர் திகழ்ந்தார். சிவத்தொண்டும் அடியார் தொண்டும் செய்து வந்தார். சிவனையும் அடியாரையும் பணிந்தார். சிவத்தொண்டில் தலைசிறந்து விளங்கினார்.

வேத உள்ளுறை ஆவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவர்அடி யாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காத லால்அவை இரண்டுமே செய்கருத்துஉடையார். (5)

Koviloor Digital Library

வேத ஆகம வித்தகர்களைப் பூசைசெய்து வணங்குதல் அடியார்கட்கு அமுதிடல் முதலிய பணிகளும் செய்வார். அயன் வந்தித்த அயவந்தி என்ற பதியில் உள்ள சிவனை ஆதிரை நாளில் அர்ச்சனை புரிய விரும்புவார்.

பூசனைப் பொருள்கள் ஏந்தி நீலநக்கர் இல்லாளுடன் கோயில் சென்றார். மனைவி பூசனைக்கு உதவி செய்தார். நீலநக்கர் பூசை செய்து **நமசிவாய** எனும் அஞ்செழுத்தோதிப் பெருமானை வலம் வந்தார். சிவன்மீது ஒரு சிலந்திப் பூச்சி தவழ்ந்தது. நீலநக்கர் மனைவி சிலந்திப் பூச்சியை ஊதி அகற்றினார். அச்செயல் குற்றம் உடையது என அடியார் மனைவியை விட்டகன்றார். “சிலந்திப் பூச்சியை வேறு வழியில் அகற்ற முயன்றிருக்க வேண்டும். வாயின் நீர் மேற்பட ஊதினை ஆதலின் உனைத் துறந்தேன்'' என உரைத்தார்.

மின்நெடுஞ் சடை விமலர்மேல் விழுந்த நூல் சிலம்பி
தன்னை வேறுஒரு பரிசினால் தவிர்ப்பது தவிர
முன்அணைந்து வந்து ஊதி வாய் நீர்ப்பட முயன்றாய்
உன்னையான் இனித் துறந்தனன் ஈங்குஎன உரைத்தார். (15)

கதிரவன் மறைந்தான். பூசனை முடித்த தொண்டர் வீடு வந்தார். மனைவி கோயிலில் இருந்தார். அடியார் பஞ்சணைப் பள்ளி கொண்டார். பெருமான் அடியார் கனவில் தம் திருமேனி காட்டினார். நீலநக்கர் மனைவி ஊதிய இடம் தவிர மற்ற இடமெல்லாம் சிலந்தி பட்ட கொப்புளம் இருந்தது. அன்போடு வாயால் ஊதிய இடத்தில் கொப்புளம் இல்லை.

பள்ளிகொள் பொழுது அயவந்திப் பரமர்தாம் கனவில்
வெள்ளநீர்ச் சடையொடு நின்று மேனியைக் காட்டி
உள்ளம் வைத்துஎமை ஊதிமுன் துமிந்தபால் ஒழியக்
கொள்ளும் இப்புறம் சிலம்பின் கொப்புள் என்றருள. (18)

கண்ட கனவினை நனவெனக் கருதி ஆடிப்பாடித் துதித்து வணங்கினார். எல்லாம்வல்ல இறையருள் போற்றி நின்று அழுதார். அயவந்திக் கோயில் சென்று வணங்கித் தன் மனையாளை மனைக்கு அழைத்து வந்தார். முன்போலவே அடியார்க்கு வேண்டுவன செய்தார்.

சம்பந்தரை வரவேற்று விருந்து பேணல்

சம்பந்தர் பெருமை செவியுற்ற திருநீலநக்க நாயனார் அவரைக் காண விரும்பினார். சண்பை எனும் சீர்காழிச் சம்பந்தர் சாத்தமங்கைப் பெருமானை வணங்கச் சாத்தமங்கை வந்து சேர்ந்தார். சம்பந்தருடன் சகோட யாழ் மீட்டும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் வருவது கண்டு

Koviloor Digital Library

உளம் மகிழ்ந்தார். ஊரெங்கும் தோரணம் கட்டினார். காவணமிட்டு ஊரை அழகுபடுத்தினார். ஞானசம்பந்தர் வரவுணர்ந்து ஆடியும் பாடியும் தொழுதும் வந்து வரவேற்றார். அடியார் சம்பந்தர்க்கும் அடியார்க்கும் அமுதூட்டி விருந்து செய்தார். ஞானசம்பந்தர் தம்மனையில் தங்க வேண்டுவன செய்தார்.

நீலகண்ட யாழ்ப்பாணர் தங்க இடம்கொடுத்தல்

திருநீலநக்கர் ஞானசம்பந்தரின் அடி பணிந்து நின்றார். சம்பந்தப் பெருமான் திருநீல கண்ட யாழ்ப்பாணருக்கு இன்று தங்க இடம் கொடுத்தருள்க என்று வேண்டினர். நடுமனையில் யாழ்ப்பாணர் தங்க நீலநக்கர் இடம்கொடுத்தார். அந்தணர் வீட்டில் முத்தீ வளர்த்து வேள்வித்தீயினை வழிபடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. திருநீலநக்கர் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குத் தங்க நடுமனையின் வேதிகையின் பக்கத்தில் இடம் தந்தார். அப்போது அங்கு வேதி கையில் எப்போதும் நீங்காமல் வளர்க்கப்பட்டுள்ள செந்தீ வலமாகச் சுழித்து எழுந்து மேலோங்கி முன்னைவிட அதிகப் பிரகாசத்துடன் ஒளிர்ந்தது.

நின்ற அன்பரை நீலகண்டப் பெரும் பாணர்க்கு
இன்று தங்கஓர் இடங்கொடுத் தருளுவீர் என்ன
நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க்கு இடம்கொடுத் தனர்திரு மறையோர். (30)

ஆங்கு வேதியில் அறாதசெந் தீவலம் சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒருபடித்து அன்றியே ஒளிரத்
தாங்கி நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளால்பள்ளி கொண்டார். (31)

கவுணியர் குல நாயகனாகிய சம்பந்தப்பெருமான் அயவந்திப் பெருமானைப் பாடித் துதித்தார். நீலநக்கர் திருஞானசம்பந்தருடன் அடியார் பலரும் சென்று இறைவனை வணங்கினர். பின்பு சம்பந்தப் பெருமானைப் பிரிய மாட்டாத திருநீலநக்கர் திருஞானசம்பந் தருடன் பல பதிகள் சென்று வணங்கினார்.

சண்பை யாளியர்தாம் எழுந்துஅருளும் எப்பதியும்
நண்பு மேம்பட நாளிடைச் செலவிட்டு நண்ணி
வண்பெரும் புகழவருடன் பயின்று வந்துஉறைந்தார்
திண்பெருந் தொண்டர் ஆகிய திருநீலநக்கர் (36)

Koviloor Digital Library

இறைவன் திருவருளில் கலத்தல்

பேரன்போடு திருஞானசம்பந்தர் பெருமான் திருமணத்தில் திருநீலநக்கர் கலந்து கொண்டார். திருமணத்தில் கலந்து கொண்டவர் அனைவரும் சம்பந்தப் பெருமானோடு சிவபெருமான் திருஅருட் சோதியில் கலந்து பேரின்பம் அடைந்தனர்.

பெருகு காதலின் பின்நெடுநாள் முறைபிறங்க
வருபெரும் தவ மறையவர் வாழிசீர் காழி
ஒருவர்தம் திருக்கல்லியா ணத்தினில் உடனே
திருமணத்திறம் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார் (37)

திருநீலநக்கர் தாள்பணிந்து சிவன் பால் ஒருமை உணர்வு கொண்ட நமி நந்தி அடிகள் வரலாறும் அடுத்து இடம்பெறும் எனத் தெய்வச் சேக்கிழார் நிறைவு செய்கிறார்.

தருதொழில் திருமறையவர் சாத்த மங்கையினில்
வரும்முதல் பெருந்திரு நீலநக்கர் தாள்வணங்கி
இருபிறப்புஉடை அந்தணர் ஏறுஉயர்த்தவர்பால்
ஒருமை உய்த்துஉணர் நமிநந்தியார் தொழில் உரைப்பாம். (38)

மெய்ப்பொருள்

திருநீலநக்க நாயனார் மனைவி பக்திப் பெருக்கில் சிவபெருமான்மீது பட்ட சிலந்திப் பூச்சியை வாயினால் ஊதி நீக்கினார். வாயினால் ஊதும்போது வாய்நீர் பெருமான்மீது பட ஏதுவானதால் நீலநக்கர் மனைவியை ஒதுக்கி வைத்தார். நீலநக்கர் மனைவி செயலும், திருநீலநக்கர் செயலும் பக்தியின்பாற்பட்டவை. நோக்குவோர் மனப் பக்குவத்தைப் பொறுத்தே செயலின் சிறப்பு கணக்கிடப் பெறுகிறது.

அருள்மிகு அயவந்தீஸ்வரர் திருக்கோயில்,
சீயாத்தமங்கை, அஞ்சல் – 609 702,
நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

42. நமிநந்தி அடிகள்

(33 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	ஏமப்பேறூர் (திருவாரூர் – திருத்துறைப்பூண்டிச் சாலையில் 8 கி.மீ.இல் ஏமப்பேறூர் உள்ளது.)
குலம்	:	அந்தணர்
குருபூசை மாதம்	:	வைகாசி
நட்சத்திரம்	:	பூசம்
காலம்	:	அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்டவர். (கி.பி. 300 – 600)

அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை 4:4)

சோழநாட்டு வைப்புத்தலமாகிய ஏமப்பேறூர் தற்பொழுது திருநெய்ப்பேறு என வழங்கப்பெறுகிறது.

ஏமப்பேறூர் வளம்

ஏமம் என்ற சொல் பாதுகாப்பைக் குறிக்கும்.

சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே (குறு : கடவுள் வாழ்த்து)

என்ற குறுந்தொகைப் பாடலில் ஏமம் என்ற சொல் பாதுகாப்பு என்ற பொருளில் அமைந்துள்ளது. 'ஏமாப்போம் பிணியறியோம்' என்பது அப்பர் தேவாரம். பாதுகாப்பான அருட்பேறு நிறைந்த ஊர் ஏமப்பேறூர்.

தாமரை மலர்கள் நிறைந்த வயல்களும் குளங்களும் நிறைந்துள்ளன. எங்கும் வேத ஒலி முழங்கும். விழாக்கள் நிறைந் துள்ளன. எங்கும் தோரணங்கள் நிறைந்துள்ளன. ஏமப் பேறூர் மாடங்களில் மேகங்கள் தூங்கும். சோலைகளில் மரங்கள் அடர்ந்து உள்ளன. கமுகு மரங்கள் நிறைந்துள்ளன. வயல்களில் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்துள்ளன. வெண் மணலில் வேள்வித்தீ கொழுந்து விட்டு எரியும். அதுபோல வெண்ணெல் (முற்றாத இளங்கதிர்) வயலிடத்தே செந்தாமரை மலர்கள் மலர்ந்திருந்தன.

பணையில் விளைந்த வெண்நெல்லின் பரப்பின் மீது படச்செய்ய
துணர்மென் கமலம் இடைஇடையே சுடர்விட்டு எழுந்து தோன்றுவன
புணர்வெண் புரிநூலவர் வேள்விக் களத்தில் புனைந்த வேதிகைமேல்
மணல்வெண் பரப்பின் இடைஇடையே வளர்த்த செந்தீ மானுமால் (3)

Koviloor Digital Library

நமிநந்தியடிகள் பெருமை

சோழநாட்டு ஏமப் பேறூரில் அந்தணர் குலத்தில் நமிநந்தி அடிகள் தோன்றினார். அவர் சிவன் சேவடி பணியும் சிறப்புடையவர். சைவ நெறியே மெய்ப்பொருள் என்ற கொள்கை உடையவர். இரவும் பகலும் சிவத்தொண்டு செய்பவர். திரு ஆரூர் சென்று முப்புரம் எரித்த சிவனடி வணங்கினார். திருஆரூர்க் கோயிலில் புகுந்து தியாகராசப் பெருமானை வணங்கும் விருப்பொடு அங்குத் தங்கினார். இறைவனை வணங்கி எண்ணிலா விளக்கேற்ற எண்ணம் கொண்டார்.

சமணர் எண்ணெய் தர மறுத்தமை

மாலைப் பொழுதாயிற்று. விளக்கேற்ற சமணர்கள் வீட்டில் எண்ணெய் வேண்டினார். கையில் நெருப்பை வைத்திருக்கும் சிவனுக்கு விளக்கு எதற்கு, விளக்கு வேண்டுமாயின் திரு ஆரூர்ப் பூங்கமலக் குளத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு விளக்கு எரிப்பீராக என்று சமணர் இகழ்ந்து பேசினர்.

வருத்தமுற்ற அடியார் வேதனையோடு இறைவனிடம் முறையிட்டார்.

சிவனார் அருள்புரிதல்

வந்த கவலை விட்டொழிக. பூங்கமலப் பொய்கை நீர் கொண்டு விளக்கெரிப்பீராக என்று சிவனருளால் ஆகாயத்தில் வாக்கு எழுந்தது. சிந்தை மகிழ்ந்த அடிகளார் பொய்கைநீர் முகந்து விளக்கினில் நீர் வார்த்தார்.

தண்ணீரால் விளக்கெரிதல்

திரு ஆரூர்க் கோயில் முழுதும் பொய்கைத் தண்ணீர் விட்டு விளக்கெரித்தார். தண்ணீரால் விளக்கெரித்த செய்தி நாடெங்கும் பரவியது.

சோதி விளக்குஒன்று ஏற்றுதலும் சுடர்விட்டு எழுந்தது அதுநோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார் கோயில் அடைய விளக்குஏற்றி
ஏதம் நினைந்த அருகந்தர் எதிரே முதிரும் களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடுஅறிய. (14)

அடிகள் இரவு முழுதும் தண்ணீராலேயே விளக்கேற்றி எரிய வைத்தார். இரவு சென்று சிவனை என்றும் போல் அர்ச்சனை செய்து வணங்கினார். திரு ஆரூர்க் கோயில் புகுந்து விளக்கேற்றிக் கோயிலை வலம்வந்து வழிபட்டார்.

Koviloor Digital Library

நிறையும் பரிசு திருவிளக்கு விடியும் அளவும் நின்றுளியக்
குறையும் தகளி களுக்குஎல்லாம் கொள்ள வேண்டும் நீர்வார்த்து
மறையின் பொருளை அருச்சிக்கும் மனையின் நியதி வழுவாமல்
உறையும் பதியின் அவ்இரவே அணைவார் பணிவுற்று ஒருப்பட்டார் (பா. 15)

சோழன் விளக்கெரிக்க நிவந்தங்கள் கொடுத்தமை

செய்தி அறிந்த சோழமன்னன் திரு ஆரூர்க் கோயிலுக்குத் திருவிளக்கு எரிக்க நிவந்தங்கள் பல விட்டான். பங்குனி உத்திரத் திருநாளில் திருஆரூர்க்கோயில் விளக்கெரிக்க ஏற்பாடு செய்தார். இவ்வாறு அடிகள் திரு ஆரூர்ப் பெருமானுக்குத் தொண்டு செய்தார்.

திருமணலி (திருவாரூர்க்கும் ஏமப்பேறூர்க்கும் அணித்தாக உள்ள ஊர்)

நமிநந்தி அடிகள் திருமணலியில் நடந்த விழாவில் கலந்து கொண்டு பெருமானை வழிபட்டார். இறைவன் திரு ஓலக்கக் காட்சி கண்டு இன்புற்றார். விழாவைக் கண்டுவந்த அடிகளார் மீண்டும் திரு ஆரூர்க் கோயில் சென்று வழிபட எண்ணினார். மக்கள் எல்லோரும் கலந்து கொண்ட கூட்டத்தில் கலந்து வழிபட்டதால் தன்மனையில் நுழையக் கூசினார். கடன் முடித்துப் பூசை செய்து தூங்குமாறு மனைவியார் வேண்டினார்.

"மக்கள் அனைவரும் கலந்துகொண்ட விழாவில் கலந்து கொண்டதால் இழிவு (தீட்டு) தொடர்ந்தது. குளித்துவிட்டு மனைபுக வேண்டும்'' என்று மனைவியிடம் அடியார் கூறினார்.

ஆதலாலே குளித்துஅடுத்த தூய்மை செய்தே அகம் புகுந்து
வேதநாதர் பூசனையைத் தொடங்க வேண்டும் அதற்குநீ
சீதநல்நீர் முதலான கொண்டுஇங்கு அணைவாய் எனச் செப்பக்
காதல் மனையார் தாமும்அவை கொணரு மதற்குக் கடிதணைந்தார். (25)

நீராடுதற்கு மனைவியார் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். இதற்கிடையில் அடிகளார் அயர்ந்து தூங்கினார்.

திரு ஆரூர்ப்பெருமான் பூசைக்கு வருவார் போல் வேடந்தாங்கி ஆரூரில் தோன்றிய அனைத்து உயிர்க் கணங்களும் சிவகணங்கள் ஆம் என்று நமி நந்தியடிகள் கனவில் கூறினார்.

மேன்மை விளங்கும் திருவாரூர் வீதி விடங்கப் பெருமாள்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
ஞான மறையோய் ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் கணங்கள்
ஆன பரிசு காண்பாய்என்று அருளிச் செய்துஅங்கு எதிர்அகன்றார். (27)

Koviloor Digital Library

பெருமான் அருளியவாறு நமிநந்தியடிகள் கண்களுக்குத் திருவாரூரில் பிறந்த அனைத்துக் கணங்களும் சிவகணங்களாகவே தோன்றின.

உடையை மட்டும் மாற்றிக் கொண்டு நீராடாமலே திரு ஆரூர்ப்பெருமானிடம் 'அடியேன் பிழைபொறுத்தருள வேண்டும்' என்று வேண்டிப் பணிந்தார். திரு ஆரூர்க் கோயிலில் தொண்டு செய்தார்.

படிவம் மாற்றிப் பழம்படியே நிகழ்வும் கண்டு பரமர்பால்
அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று பணிந்தருளால்
குடியும் திருவாரூர் அகத்துப் புகுந்து வாழ்வார் குவலயத்து
நெடிதுபெருகும் திருத்தொண்டு நிகழச் செய்து நிலவுவார் (30)

திருநாவுக்கரசர் நமிநந்தியடிகளைச் சிவனடியார்க்கு அச்சாணி எனப் போற்றுவர். உலகம் தொழும் திருப்பணிகள் பலசெய்து திருவாரூர்த்தியாகேசர் திருவடிநிழல் சேர்ந்தார்.

மெய்ப்பொருள்

நமிநந்தியடிகளின் திண்மையான பக்தியால் தண்ணீர் எண்ணெய் போல் விளக்கெரியத் துணை நின்றது. இறைவனை வணங்குவோர் அனைவரும் இறையடியார்களே என்ற உயர்ந்த தத்துவத்தைச் சேக்கிழாார் நமி நந்தியடிகள் வரலாற்றில் பதிவு செய்வார். கருங்குழியில் அருட்பிரகாச வள்ளலாரும் தண்ணீரில் இரவு முழுவதும் விளக்கெரித்து அருட்பெருஞ்ஜோதி அகவலை 1596 அடி களில் (1872 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8ஆம் தேதி வியாழக் கிழமை) எழுதினார் என்ற செய்தியும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

அருள்மிகு வன்மீகநாதர் திருக்கோயில், திருநெய்ப்பேறு கிராமம்,
மாவூர் அஞ்சல்–610 202, திருவாரூர் மாவட்டம்.

வழிபட்ட கோயில்

அருள்மிகு வண்டார்குழலி உடனுறை அகிலேஸ்வரர்
தியாகராஜ சுவாமி திருக்கோயில் (அசலேச்சரம்)
திருவாரூர் - அ. கு. 610 001.
திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்

Koviloor Digital Library

43. திருஞானசம்பந்தர் வரலாறு - I

(1256 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	சீர்காழி, அ.கு.எண். 609 110. நாகை மாவட்டம்.
குலம்	:	அந்தணர்
குருபூசை மாதம்	:	வைகாசி
நட்சத்திரம்	:	மூலம்
காலம்	:	அப்பர் காலத்தவர். (கி.பி. 600 – 660)

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை–5:1–2)

பிள்ளை பாதி புராணம் பாதி என்பர். பெரியபுராணம் மொத்தப் பாடல்கள் 4286 அவற்றில் சம்பந்தர் புராணம் 1256 பாடல்கள்.

திருஞான சம்பந்தர் சீகாழியில் (12 பெயர்கள் உள்ளன.) கவுணியர் கோத்திரத்தில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் மகவாய்த் தோன்றினார்.

திருஞான சம்பந்தருக்கு மூன்றாம் அகவையிலேயே உமையம் மையின் ஞானப்பால் அருந்தும் பாக்கியம் கிடைத்தது. இறையருளும் உமையம்மையின் பாலும் கிடைத்த நாள் முதல் திருஞான சம்பந்தர் ஆளுடைய பிள்ளையார் ஆயினார்.

பால்வழிய இருந்த பாலறாவாயரிடம் 'யார் அளித்த பால் உண்டாய்' எனத் தந்தையார் வினவினார். சம்பந்தர் பாடிய முதற்பாடல் 'தோடுடைய செவியன்' என்பதாகும். வெண்மையான பால் உண்ட குழந்தை வெண்மையான தோட்டையும், வெண்மதியையும், வெண்மையான காளையையும், வெண்மையான நீற்றையும் பாடும். 'த' என்பது ஏழாவது மெய். எழுபிறப்பும் ஒழிக்கும் ஓங்காரத்தில் பாடல் தொடங்கும்.

தோடுடைய செவியன் விடைஏறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசிஎன் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவனன்றே. (தே. 1:1)

Koviloor Digital Library

சீகாழிக் கோயிலுள் திருஞான சம்பந்தர் இறைவனின் எதிர்நின்று, **இங்கு எனை ஆளுடையான் உமையோடு இருந்தான்** என்று தொழுது திருப்பதிகம் பாடி அக்கோயிலில் இருந்து தந்தையுடன் புறப்பட்டார்.

அடுத்து, **திருக்கோலக்கா** எனும் தலம் சென்றார். அங்கு **மடையில் வாளைபாய** எனத் தொடங்கும் பதிகம் பாடினார். அப்போது இறை அருளால் ஐந்தெழுத்து பொறிக்கப்பெற்றுச் செம்பொன்னால் செய்யப் பட்ட தாளம் திருஞானசம்பந்தரின் திருக்கரங்களில் வந்தடைந்தது.

அடுத்து, **திருநனிபள்ளி** எனும் தலத்திற்கும் சென்று காரைகள் கூகை முல்லை எனத் தொடங்கும் பதிகம் பாடினார். அதன் திருக்கடைக்காப்பில் **எந்தை மேவும் திருநனி பள்ளியை நினைப்பவர் தம் வினைகள் கெடுவதற்கு ஆணை நமதே** என்று சிறப்பித்தருளினார். அடுத்து, **திருத் தலைச்சங்காடு** எனும் தலம் சென்று இறைவனைத் துதித்தார். அங்கிருந்து புறப்பட்டுத் **திருவலம்புரம், திருப்பல்லவனீச்சரம் திருச்சாய்க்காடு திருவெண்காடு தென்திருமுல்லைவாயில்** ஆகிய தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கினார்.

திருஞானசம்பந்தர் சீகாழியில் தங்கியிருக்கும்போது திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்க சூளாமணியும் திருஞான சம்பந்தரைப் பார்க்க யாழேந்திவந்தனர். அவர்களை வரவேற்று மகிழ்ந்த திருஞானசம்பந்தர் அவர்களை அழைத்துக் கொண்டு தோணியப்பரின் கோயிலுக்குச் சென்றார். அவர்கள் அந்நாளைய நிலை கருதி கோயிலுள் நுழையாமல் வெளியில் இருந்தே வணங்கினர். பிறகு திருஞானசம்பந்தரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ் மீட்டிப் பாடினார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தரைப் பார்த்து, அடிகளே நான் எப்போதும் தங்களைப் பிரியாமல் தாங்கள் அருளும் பதிகங்களின் இசையை யாழில் வாசித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இந்தப் பெரிய வாழ்வை அடியேனுக்கு அளித்து அருள வேண்டும் என் வேண்டினார். திருஞான சம்பந்தர் இசைந்தார்.

அடுத்து, திருஞான சம்பந்தர் **திருத்தில்லை** சென்று **கற்றாங் கெரியோம்பி** எனத் தொடங்கும் பதிகம் பாடினார். அடுத்து, **"திருவேட்களம் திருக்கழிப்பாலை** ஆகிய தலங்கள் சென்று இறைவனைத் துதித்தார். பின்னர், திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர் பிறந்த ஊரான **திருவெருக்கத்தம்புலியூர்ச்** சென்று இறைவனைத் தொழுதார். அடுத்து, **திருமுதுகுன்றம், திருப்பெண்ணாகடம்** சென்று இறைவனைத் தொழுதார். பிறகு, **திருவரத்துறைக்குப்** (திருநெல்வாயில்

Koviloor Digital Library

அரத்துறை) புறப்பட்டுச் சென்று அங்குள்ள ஆனந்த நாயகி உடனுறை ஆனந்தீஸ்வரரைத் தொழுதார்.

அவ்வூரில் இறைவனின் திருவருளால் திருஞானசம் பந்தருக்கு **முத்துச் சிவிகையும் முத்துச் சின்னமும் முத்துமணிக் குடையும்** கிடைத்தன. மறையை ஓதாமலே உணர்ந்த உத்தமர் வந்தார், உலகம் உய்யத் தோன்றிய ஒருவர் வந்தார், பரசமயக் கோளரி வந்தார், பாலறாவாயர் வந்தார், முத்தமிழ் விரகர் வந்தார் என்றெல்லாம் கூறித் தொண்டர்கள் வாழ்த்தினர். பிறகு திருஞானசம்பந்தர் **திருநெல் வெண்ணெய்** சென்று இறைவனை வணங்கினார். பிறகு, **திருப்பழுவூர், திருவிசய மங்கை, திருவைகா, திருப்புறம்பயம், திருச்சேய்ஞலூர்** ஆகிய தலங்களுக்குச் சென்று இறைவனைத் துதித்தார். பின்பு **திருப் பனந்தாள், திருப்பந்தணை நல்லூர், திருவோமாம்புலியூர், திருவாழ் கொளிப்புத்தூர், திருக்கடம்பை, திருநாரையூர், திருக்கருப்பறியலூர்** ஆகிய தலங்களுக்கும் சென்று இறைவனை வணங்கிப் பாடினார்.

திருஞான சம்பந்தருக்கு உபநயனப் பருவம் எய்தியது. உரியவர்களால் அப்பருவத்துக்கு உரிய சடங்குகள் செய்யப்பட்டன. மறையவர்கள் அவரிடம் தமது ஐயங்களுக்கான விளக்கங்கள் பெற்றனர். எல்லா மந்திரங்களும் தோன்றக் காரணம் சிவபெருமானது திருவைந்தெழுத்தே என்று கூறி, **துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்** எனும் பஞ்சாட்சரத் திருப்பதிகம் பாடினார். திருஞானசம்பந்தரைக் காண அப்பர் வந்தார். அப்பரைத் திருஞானசம்பந்தர் வரவேற்று உபசரித்தார். பிறகு அப்பர் விடைபெற்றார்.

அடுத்து, **திருக்கண்ணார் கோயில், திருப்புள்ளிருக்கு வேளூர், திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருப்பழமண்ணிப் படிக்கரை, திருக்குறுக்கைப்பதி, திருஅன்னியூர், திருப்பந்தணை நல்லூர், திருமணஞ்சேரி, திருவெதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்துதேவன்குடி, திருஇன்னம்பர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த்தானம், திருமழபாடி, திருக்கானூர், திருஅன்பிலாலந்துறை, வடகரைமாந்துறை** ஆகிய தலங்கள் சென்று ஆண்டவனை வணங்கிப் பதிகங்கள் பாடினார்.

அடுத்து, **திருப்பாச்சிலாச்சிராமம்** எனும் தலத்துக்குச் சென்றார். அந்நகரில் வாழ்ந்த கொல்லிமழவன் என்ற சிற்றரசனின் மகளுக்கு இருந்த **முயலகன்** எனும் முடக்குநோயைத் **துணிவளர் திங்கள்** எனத் தொடங்கும் பதிகம் பாடிப் போக்கினார். பிறகு, **திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய்மலை** ஆகிய தலங்கள் சென்று இறைவனை வணங்கிப்

Koviloor Digital Library

பாடினார். பிறகு **திருக்கொடிமாடச் செங்குன்றூர், திருநணா** என்ற **பவானித் திருப்பதி** ஆகிய தலங்களுக்குச் சென்று இறைவனைத் துதித்துப் பாடினார்.

அடுத்து, **திருப்பாண்டிக்கொடுமுடி, திருவெஞ்சமாக்கூடல் திருக்கருவூர்** ஆகிய தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கினார்.

அடுத்து, சோழ நாட்டுக் காவிரித் தென்கரையிலுள்ள **மாணிக்க மலை** எனும் **திருவாட்போக்கி, திருப்பராய்த்துறை, திருவாலந்துறை, திருச்செந்துறை, திருக்கற்குடிமாமலை, திருமூக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருத்தவத்துறை, திருப்பாற்றுறை, திருவெறும்பியூர், திருநெடுங்களம், திருக்காட்டுப்பள்ளி, திருவாலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருவெண்ணி, திருச்சக்கரப்பள்ளி, திருப்புள்ளமங்கை, திருச்சேலூர், திருப்பாலைத்துறை, திருநல்லூர், திருக்கருகாவூர், திருவளிவணல்லூர், திருப்பரிதி, நன்னியமம், திருப்பூவனூர், திருவலஞ்சுழி** ஆகிய தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடினார். மீண்டும் திருநல்லூர் வந்தார். பிறகு, **திருப்பழையாறை, திருச்சத்திமுற்றம், திருப்பட்டீச்சுரம், திருவாறை வடதளி, திருவிரும்பூளை, திருவரதைப் பெரும்பாழி திருச்சேறை திருநாலூர் மயானம் திருக்குடவாயில், திருநறையூர், தென்திருப்பத்தூர், திருச்சிவபுரம், திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந்தைக் காரோணம், திருநாகேச்சரம், திருவிடை மருதூர், திருக்குரங்காடுதுறை, திருவாவடுதுறை** ஆகிய தலங்கள் சென்று இறைவனை வணங்கிப் பதிகங்கள் பாடினார்.

அருள்மிகு பிரமபுரீஸ்வரர் திருக்கோயில்
(சட்டைநாதர் - தோணிபுரத்தீசர்)
சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்
சீர்காழி அஞ்சல் – 609 110.
நாகை மாவட்டம்

Koviloor Digital Library

44. திருஞானசம்பந்தர் வரலாறு - II

திருவாவடுதுறையில் இறைவன் பொற்கிழி அருளியமை

திருஞானசம்பந்தர் தம் தந்தை செய்யும் வேள்வியின் பொருட்டுப் பொருள் வேண்டி ஒப்பிலா முலையம்மை உடனுறை மாசிலாமணீஸ்வரரை வேண்டினார். உடனே இறைவன் பொற்கிழி அருளினார். அதைத் திருஞான சம்பந்தர் தம் தந்தையிடம் கொடுத்தார்.

அடுத்து, **திருக்கோழம்பம், திருவைகல் மாடக்கோயில், திருநல்லம், திருவழுந்தூர், திருத்துருத்தி, மூவலூர், திருமயிலாடுதுறை, திருச்செம் பொன்பள்ளி, திருவிளநகர், திருப்பறியலூர், திருவேட்டக்குடி** ஆகிய தலங்களுக்குச் சென்று துதித்தார். பிறகு, **தருமபுரம்** சென்றார்.

தருமபுரத்தில் **மாதர் மடப்பிடி** எனும் பதிகம் பாடினார். அதை யாழ்ப்பாணர் தம் யாழிலே அமைத்து வாசிக்க முயன்றார். முடிய வில்லை. உடனே யாழை உடைக்க முனைந்தார். திருஞான சம்பந்தர் தடுத்தாட் கொண்டார். பிறகு, **திருநள்ளாறு** சென்றார். பிறகு **திருச்சாத்தமங்கை** சென்றார். அங்குத் திருநீலநக்கரின் வீட்டில் யாழ்ப்பாணருடன் தங்கினார். பிறகு **திருநாகைக் காரோணம்** சென்றார். பிறகு **திருக்கீழ் வேளூர்** சென்றார். பிறகு அங்கிருந்து சிறுத்தொண்ட ரோடு **திருச்செங்காட்டான்குடிக்குச்** சென்றார். பின்னர்த் **திருமருகல்** சென்றார்.

திருமருகல் (ஒருவகை வாழை மரம்) அற்புதம்

வைப்பூர் என்னும் ஊருக்குத் தலைவனான தாமன் ஏழு புதல்வியர்க்குத் தந்தை. அவன் தன் தங்கை மகனுக்குப் பெண் கொடுப்பதாகக் கூறினான். ஆறு புதல்வியர்க்கு வெவ்வேறிடங்களில் மணம் முடித்தான். ஏழாவது பெண் தந்தை உறுதிமொழி காக்க அத்தை மகனுடன் சென்றாள். திருமருகலில் பாம்பு தீண்டி மணமகன் இறந்தான். மணமகள் வருந்தி அங்கு வந்த சம்பந்தரிடம் முறை யிட்டாள். சம்பந்தர் **சடையாய் எனுமால்** எனும் பதிகம் பாடி அவனை உயிர்த்தெழச் செய்தார். திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண் டரைக் கண்டு வந்தார். திருப்புகலூரில் முருகனார் மடத்தில் தங்கினார். பிறகு **திருவிற்குடிக்குச்** சென்றார்.

அடுத்து, **திருவாரூர்** சென்றார். பிறகு, **திருவலிவலம், திருக்கோளிலி, திருவம்பர் மாகாளம், திருக்கடவூர்,** ஆகிய தலங்களுக்குச் சென்று

Koviloor Digital Library

வணங்கினார். திருக்கடவூர் குங்குலியக் கலய நாயனார் திருமனையில் திருஞானசம்பந்தரும் அப்பரும் தங்கியிருந்தனர். பின்னர் திருக்கடவூர் மயானத்தை வணங்கி **திருஆக்கூர், திருமீயச்சூர், திருப்பாம்புரம், திருவீழிமிழலை** அடைந்தார்.

திருவீழிமிழலைத் திருத்தொண்டு

அப்பரும் சம்பந்தரும் திருவீழிமிழலை இறைவனை வழிபட்டனர். அங்குப் பஞ்சத்தால் மக்கள் வாடினர். அப்பரும் சம்பந்தரும் திருவீழிமிழலை இறைவனை வணங்கித் துயின்றனர். அவர்கள் கனவில் பெருமான் கிழக்கு – மேற்கு வாயிற்படியில் பொற்காசு வைப்பதாகத் திருவாய் மலர்ந்தருளினார். அருளாளர்கள் இருவரும் இறைவனிடம் பொற்காசு பெற்று இன்னார் இனியர் என நோக்காது நேரே வந்தவர் யாவராயினும் அனைவருக்கும் பெருஞ்சோறு வழங்கினர்.

திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, திருப்பேருவேளூர், திருச்சாத்தான்குடி, திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சின்னம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருமலிவெண்டுறை, திருத்தண்டலை நீணெறி, திருக்களர் ஆகிய தலங்களுக்கும் சென்று பாடிப் பரவினார்.

திருமறைக்காடு

திருமறைக்காட்டில் திருக்கதவம் திறக்கவும் அடைக்கவும் இருவரும் பாடி மக்கள் இறையருளைப் பெற வழிவகுத்தனர்.

அடுத்து, **திருவாய்மூர், திருவகத்தியான்பள்ளி, திருக்கோடிக்குழகர் கோயில், திருக்கடிக்குளம், திருஇடும்பாவனம், திரு உசாத்தானம் திருக்கொடுங்குன்றம்** ஆகிய தலங்கள் சென்று இறைவனைத் துதித்துப் பின்பு மதுரை சென்றார்.

மதுரை

மதுரையில் மங்கையர்க்கரசியார் வேண்டுகோளின்படி ஒரு மடத்தில் தங்கினார். சமணர்கள் சம்பந்தர் மடத்திற்குத் தீ வைத்தனர். சம்பந்தர்,

பையவே சென்று பாண்டியற்காகவே

எனத் தீயைப் பணித்தார். பாண்டியனை வெப்பு நோய் தாக்கியது.

சமணர் பாண்டியன் வெப்பு நோய் போக்க முயன்று தோற்றனர். சம்பந்தர் **மந்திரம் ஆவது நீறு** என்ற தேவாரம் பாடிப் பாண்டியன்

Koviloor Digital Library

மேனியில் நீறு பூசினார். பாண்டியன் வெப்பு நோய் நீங்கியது.

திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கும் ஆற்றால் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்ததுவெப்பு அகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான் (770)

அனல்வாதம் புனல் வாதம்

சமணர் சம்பந்தரை வாதுக்கு அழைத்தனர். சமண சமய ஏடும் சைவ சமய ஏடும் தீயிலிடப்பட்டன. பெருமான் பெயர் இருத்தலின் சைவ சமய ஏடு பசுமையாய் இருந்தது. சமண சமய ஏடு சாம்பலாயிற்று.

இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப்பதிகம்
மட்டுஉலாம் குழல் வனமுலை மலைமகள் பாகத்து
அட்டமூர்த்தியைப் பொருள்என உடைமையால் அமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கியது அன்றே. (786)

சமண சமய ஏடும், சைவ சமய ஏடும் வையையில் இட்ட போது சமண சமய ஏடு ஆற்றின் போக்கிலே சென்றது. சைவ சமய ஏடு வையை ஆற்றினை எதிர்த்துச் சென்றது. குலச்சிறையார் விரைந்து சென்ற ஏட்டினை எடுத்து வந்தார்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர்தீர்கவே" (தேவாரம் : 3:54:1)

என்ற தேவாரப் பாடல் எழுதிய ஏடே எதிர்த்து வந்தது. இப்பதிகத்திற்குத் தெய்வச் சேக்கிழார் 24 பாடல்களில் (தி.பு. 822–844) உரை கூறுகிறார்.

அடுத்து, **திருப்பரங்குன்றம், திருவாப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், திருக்கானப் பேரூர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி, இராமேஸ்வரம்** ஆகிய இடங்களுக்குச் சென்று வழிபட்டார். இராமேஸ்வரத்திலிருந்தவாறே திருஞானசம்பந்தர் ஈழத்திலுள்ள **திருகோணமலை மாதோட்டத் திருக்கேதீஸ்வரம்** எனும் தலங்களை நினைத்துப் பணிந்து பதிகம் பாடினார்.

அடுத்து, **திருவாடானை, திருப்புனவாயில், மணமேற்குடி, திருக்களர் திருப்பாதாளீஸ்வரம், முள்ளிவாய்க்கரை, திருக்கொள்ளம்பூதூர், திருநள்ளாறு, திருதெளிச்சேரி, போதிமங்கை, திருக்கடவூர், திருப்பூந் துருத்தி, திருத்தினை நகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப்புலியூர், திருவடுகூர் திருக்கரை, திருவிரும்பை மாகாளம், திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருவறையணி நல்லூர்,**

Koviloor Digital Library

திருவண்ணாமலை ஆகிய தலங்கள் சென்று பதிகம் பாடினார். அடுத்து, **திருவோத்தூர்** (திருவத்திபுரம் – செய்யாறு) சென்றார். அங்கு ஆண்பனையைப் பெண்பனையாக்கினார்.

அடுத்து, **திருக்குரங்கணின் முட்டம், திருமாகறல் காஞ்சி, திருவேகம்பம், காமகோட்டம், திருக்கச்சி நெறிக்காரைக்காடு, திருக்கச்சியனேக தங்காவதம், திருக்கச்சி மேற்றளி, திருமாற்பேறு, திருவல்லம், திருவிலம்பயம் கோட்டூர், திருவிற்கோலம், திருஊறல், திருஆலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிக்கரை** ஆகிய தலங்கள் சென்று பதிகம் பாடினார். அடுத்து, **திருக்காளத்தி** சென்றார். அங்கிருந்தபடியே **திருக்கயிலாயம், திருக்கேதாரம், திருக்கோகரணம், திருப்பருப்பதம்** (ஸ்ரீசைலம்) **இந்திரநீலபருப்பதம்** ஆகிய தலங்கள் இருந்த திக்குகளை நோக்கித் திருப்பதிகம் பாடினார்.

அடுத்து, **திருவேற்காடு, திருவலிதாயம், திருவொற்றியூர்,** ஆகிய தலங்கள் சென்று இறைவனை வழிபட்டார்.

அடுத்து, **மயிலாப்பூர்** சென்றார். பாம்பால் இறந்த பூம்பாவையின் எலும்புகள் உள்ள மண்குடத்தைப் பார்த்து **மட்டிட்ட புன்னை** எனத் தொடங்கும் பதிகம் பாடிப் பூம்பாவையை உயிர்ப்பித்தார்.

அடுத்து, **திருவான்மியூர், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருவரசிலி, திருப்புறவார், பனங்காட்டூர்** ஆகிய தலங்களைப் பாடிப் போற்றிப் பரவிக்கொண்டே தில்லை என்னும் சிதம்பரத்தை அடைந்தார். தந்தையார் விருப்பப்படி திருமணம் செய்துகொள்ள **திருநல்லூர்** சென்றார். பெருமணம் என்னும் திருக்கோயிலுள் புகுந்தார். அங்கு நம்பாண்டார் நம்பி பெற்ற தவப்புதல்வியை மணந்தார்.

ஆதிபூமி என்னும் மணவறையில் அமர்ந்து **அருநிதிப்பாவை** என்னும் நங்கையைக் கைப்பிடித்து மணக்கோலத்தோடு காட்சி தந்தார். **காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி** என்ற நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளினார். கருவறையில் சிவசோதி – அரும்பெரும் சோதியாகச் சுடர்விட்டு எழுந்தது.

திருஞானசம்பந்தர் திருமணத்திற்கு வந்தவர்களை நோக்கி, ‘இத்திருமணத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் பிறவி நோய் தீர இப்பெரும் சோதியினுள் புகுவீராக’ என அருட்பெருஞ் சோதியைக் காட்டினார். அச்சோதியில் புகுந்த அனைவரும் முக்தி பெற்றனர்.

திருஞானசம்பந்தர் மொத்தம் 224 தலங்களைப் போற்றிப் பதிகங்கள் பாடியுள்ளார். ஒரு கோயிலை மட்டுமே வழிபட்டு, வாழ்வை நிறைவு செய்த அடியவர்களுக்கு மத்தியில் இருநூற்று இருபதிற்கும் மேற்பட்ட கோயில்களுக்குச் சென்று இறைவனைத் தொழுத திருஞான சம்பந்தர் அடியவர்களுக்கு எல்லாம் தலைவர் என்று சொல்லத் தகுதியுடையவர்.

Koviloor Digital Library

45. திருஞானசம்பந்தரின் ஆளுமைத் திறமும் தலைமைத்துவமும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தைத் தமிழ்ப் பக்தி இயக்கத்தின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். இக்கால கட்டத்தில்தான் பக்தி இயக்கம் தமிழகத்தில் தோன்றி மெல்ல மெல்ல வடபுலம் நோக்கிப் பெயர்ந்து உலகளாவிய இயக்கமாகப் பரவியது. பக்தி இயக்கத்திற்கு வித்திட்ட பெருமை தமிழகத்திற்கு உரியது. அதற்கு உயிருட்டியோர் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆவர். நாயன்மார்களில் முன்னின்றவர் இருவர். ஒருவர் திருநாவுக்கரசு; மற்றவர் திருஞானசம்பந்தர். இவ்விருவரின் அடியொட்டி ஏனைய நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்திற்கு உரமூட்டினர்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய தெய்வச் சேக்கிழார் பக்தி இயக்கத்தின் விழுதுகளாக விளங்கிய திருத்தொண்டர்களின் வாழ்க்கையைக் காப்பியமாகப் புனைந்து வரலாற்றில் நிலைக்கச் செய்துவிட்டார்.

ஆளுமைப் பெருவாழ்வு

பக்தி இயக்கத்தை முன்னின்று நடத்திய இருவரில் ஒருவராகிய திருஞானசம்பந்தர் தலைமைத்துவ நெறியில் தம் ஆளுமையைப் புலப்படுத்தியவர். தலைவராகத் திருவவதாரம் செய்த திருஞானசம்பந்தரின் பெருவாழ்வு இறைவனது உள்ளக் குறிப்பின் வழி அமைந்தது என்பதை,

அவம்பெருக்கும் புல்அறிவின் அமண்முதல்ஆம் பரசமயப்
பவம் பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல்ஊழிதொறும்
தவம் பெருக்கும் சண்பையிலே தாஇல் சராசரங்கள் எலாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவ தாரம்செய்தார். (26)

எனத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

தாம் பாடிய திருப்பாடல்களும் தம்முடைய செயல்களும் இறைவனின் விருப்பத்திற்கேற்பவே செய்யப் பெற்றதாகத் (**எனது உரை தனது உரையாக** 1:76–5) திருஞானசம்பந்தரே கூறுவது உணர்ந்து அறியத் தக்கது. **என்னைத் தன்னாக்கி, என்னால் தன்னை**

Koviloor Digital Library

இன்தமிழ் பாடிய ஈசனை, ஆதியாய் நின்ற என் சோதியை என நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (7:9:1) அருளியிருப்பதை ஒப்புநோக்கி உணர்க.

அன்புச் சைவ நெறி ஆளுமை

காபாலிகம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், பைரவம் ஆகிய நிலைகளில் முரட்டுச் சைவமாகவும், சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடும் சுத்த சைவம் என்ற நிலைகளில் சிக்குண்டு சடங்குச் சைவமாகவும், பிற்காலத்தில் வீர சைவம், காஷ்மீர சைவம் எனப் பல நிலைகளில் சைவ சமயம் பிளவுபட்டுப் பிரிந்து கிடந்தது. மது, ஊன், கள் அருந்துதல், புலித்தோல் அணிதல், மண்டை ஓடு அணிதல் ஆகிய செயல்கள் செய்யும் வன்னெறிச் சைவத்தை நன்னெறிச் சைவமாக மாற்றிய பெருமை ஆளுடையார் ஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையாகிய ஞானசம்பந்தர்க்கு உரியது.

சைவ இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிய பெருமை சம்பந்தர்க்குரியது.

திருக்கோயில்களைச் சமுதாயக் கூடங்களாக உருவாக்கல்

சம்பந்தர் தம் ஆளுமைத் திறத்தால் திருக்கோயில்களை மக்களுக்கு உதவும் சமுதாய அறக்கூடங்களாக மாற்றினார். திருக்கோயில்கள் மக்கள் நலம் பேணும் அறச்சாலைகளாக மாற்றம் பெற்றன. அரசன் முதல் ஆண்டி வரை அனைவரும் சமம் என்ற சமுதாயப் புரட்சி உண்டானது.

அடியார் போற்றும் ஆளுமைத் திறம்

சம்பந்தர்க்குப் பின்வந்த சுந்தரர் சம்பந்தரை,

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் (தி.தொ.கை. 5:1–2)

எனப் போற்றுகிறார். சுந்தரர்க்குப் பின்வந்த நம்பியாண்டார் நம்பி சம்பந்தர் மீது ஆறு நூல்கள் பாடினார். அவருக்குப் பின் வந்த சேக்கிழார் 1256 பாடல்களில் சம்பந்தர்க்குக் காப்பியம் படைத்தார்.

அயற்சமயம் போற்றும் ஆளுமைத் திறம்

போதி மங்கை என்ற சிற்றூரில் **சாரிபுத்தன்** என்ற பௌத்த அடியாரைச் சம்பந்தரின் சீடர் வென்றார். சம்பந்தரின் அடியார்களே சம்பந்தரின் ஆளுமைத் திறம் புலப்படுத்தும் சான்றோராக விளங்கினர்.

Koviloor Digital Library

அடியார்களைச் சிவமாக்கிய ஆளுமை

தம் திருமணத்திற்கு வந்த அனைவருடனும் சம்பந்தர் சிவச்சுடரில் கலந்து ஒன்றினார். தம்மை நம்பிய அடியார் அனைவரையும் சிவமாக்கிய சம்பந்தரின் ஆளுமைத் தன்மை போற்றற்குரியது.

திருஞானசம்பந்தரின் தலைமைத்துவம்

திருஞான சம்பந்தர்க்கு மக்கள் கூட்டத்தைக் கவர்ந்திழுக்கும் அழகும் ஆற்றலும் தலைமைத்துவமும் இருந்தன. **காழியர்கோன், கவுணி ஞானத்துயர் சம்பந்தன், தமிழ் விரகன், செழுமறைகள் பழகு நாவான், சந்தமெலாம் அடிசாத்த வல்ல மறைஞான சம்பந்தன், ஞானசம்பந்தனுரை செய் சங்கமலி செந்தமிழ்** எனப் பல பதிகங்களில் தமது ஊர்ப் பெருமை, குடிப்பெருமை, தம்முடைய மொழிப்புலமை, இசைப்புலமை, மரபு சார்ந்த புலமை, முதலான சிறப்புக்களை எடுத்துரைக்கும் தலைமைத்துவம் அவரிடம் இருந்தது.

தம்முடைய திருக்கடைக்காப்புப் பாடல்களில் ஆணையிட்டு உறுதி கூறி, தம் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வினைகெடுதல் ஆணை நமதே (2:84:11)

அரசாள்வர் ஆணை நமதே (2:85:11)

அந்த உலகம் எய்தி அரசாளும்
அதுவே சரதம் ஆணை நமதே (3:78:11)

மண்மிசைப் பிறவார் மற்றிதற்கு ஆணை நமதே (3:118:11)

இவ்வாறு ஆணையிட்டு உறுதிகூறி, தம் தொண்டர்களை நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் வழிநடத்திச் செல்வது ஒரு தலைவருக்குரிய பண்பாகும்.

தலைவருக்குரிய அடிப்படையான இயல்புகளுள் ஒன்று எப்போதும் தொண்டர்கள் புடைசூழ இருப்பது. திருஞானசம்பந்தர் எத்தலம் சென்றாலும் தொண்டர் குழாத்தோடு சென்றார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் ஆயிரக்கணக்கானோர் அவரை வரவேற்றனர். **பரசமயக் கோளரி** வந்தார் **பாலறாவாயர்** வந்தார், **முத்தமிழ் விரகர்** வந்தார். என்றெல்லாம் பல விருதுகளைக் கொடுத்து அவரை அடியார்கள் வரவேற்றனர்.

சமத்துவத் தலைவர்

அந்தணராகிய திருநீலநக்க நாயனாரின் இல்லத்தில் பெரும் பாணரையும் அவருடைய துணைவியாரையும் தங்க வைத்தது, திருஞானசம்பந்தரின் தலைமைத்துவ பண்பிற்கும் அவரது

Koviloor Digital Library

ஆளுமைக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அந்தணராகிய திருநீலநக்கர் இல்லத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடைய துணைவியார் மதங்க சூளாமணியாரும் நடுக்கூடத்தில் வேள்வித் தீயின் அருகில் படுத்ததும் வேள்வித்தீ முன்பைவிடப் பன்மடங்கு வலம் சுழித்து எழுந்தது எனத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். தலைவராகிய திருஞானசம்பந்தருக்குத் தொண்டராகிய தெய்வச் சேக்கிழார் செலுத்தும் வணக்கமாகிய அங்கீகாரம் இது.

சம்பந்தரின் தலைமையை ஏற்ற சைவ உலகம்

திருஞானசம்பந்தர் என்ற தலைவர் கிடைத்தவுடன் சைவ பக்தி உலகம் அவரைத் தலைமேல் வைத்துக் கொண்டாடியது. அவரது தலைமையை அன்றைய சைவ பக்தி உலகம் உரியவாறு உணர்ந்து மதித்துப் போற்றியது.

திருநாவுக்கரசர், குங்குலியக்கலய நாயனார், திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சிறுத்தொண்டர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், நின்றசீர் நெடுமாறன், முருக நாயனார் ஆகிய நாயன்மார் பலரும் திருஞானசம்பந்தரோடு இணைந்து செயல்பட்டமையே அவரது தலைமைத்துவத்துக்குச் சான்று.

மூன்று வயது இளம் பிராயத்திலேயே அனைத்து ஞானங் களையும் உணர்ந்து தலைமைப் பண்போடு தவ முதல்வராக அவதாரம் செய்தவர் ஞானசம்பந்தர் என்பதைத் தெய்வச் சேக்கிழார் மிக நுட்பமாகவே பதிவு செய்துள்ளார்.

சிவன்அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவம்அதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமைஇலாக் கலைஞானம் உணர்வுஅரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில். (70)

சைவ பக்தி இயக்கம் என்ற பெயரில் மாபெரும் தமிழ் இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திய திருஞானசம்பந்தர் ஒரு தனிப்பெருந் தலைவர்.

மொழி சார்ந்த புலமைத்துவமும், சமூகம் சார்ந்த தலைமைத் துவமும் இவை அனைத்தும் சார்ந்த இறைமைத்துவமும் ஆகிய இம்மூன்று ஒப்பரிய ஆளுமைகளைக் கொண்டவர் திருஞானசம்பந்தர்.

Koviloor Digital Library

46. திருஞானசம்பந்தரின் புலமைத்துவமும் இறைமைத்துவமும்

திருஞானசம்பந்தர் முத்தமிழ் விரகர். அருந்தமிழ்க் கடல். அவர் பாடிய பதிகங்கள் 385. மொத்தப் பாடல்கள் 4169. பாடிய தலங்கள் 224. இறைவனின் திருவருளைப் பெற்று மூன்று வயதிலேயே பாடத் தொடங்கிய இவர், தமிழிசை, தமிழ் அகத்திணை மரபு, தமிழ் யாப்பு ஆகியவற்றில் புதுமை படைத்துப் புதுநெறி காட்டிய முத்தமிழாகரர்.

முத்தமிழ்ப் புலமை

385 பதிகங்களும் இயற்றமிழ் இறைவனாகிய பதியைப் பற்றிப் பாடுவதால் இத்தெய்வப் பாடல்கள் பதிகங்கள் எனப்பட்டன. பதி, பசு, பாசம் என்பன பாடுபொருள்களாக அமைந்துள்ளன. ஆங்காங்கே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் குறித்து விரிவாகப் பாடுவர். சம்பந்தர் பாடிய தேவாரப் பாடல்களில் உள்ள பண்கள் அவரது இசைப்புலமையைக் காட்டும். நாயக நாயகி பாவத்தில் அமைந்த சம்பந்தர் பாடல்கள் உரையாடல் வடிவில் அமைந்து அவரது நாடகப் புலமையைப் புலப்படுத்தும்.

யாப்பில் புதுமை

தமிழில் புதுப்புது யாப்பு வகைகளை உருவாக்கித் தம்மைத் தமிழ்வல்ல ஞான சம்பந்தராகப் புலப்படுத்திக் கொண்டவர் திருஞான சம்பந்தர். பத்திற்கும் மேற்பட்ட யாப்பு வகைகளையும் மற்றும் 'பா' அமைப்பு முறைகளையும் கையாண்டு சம்பந்தர் பதிகம் பாடியுள்ளார்.

1. திருமொழிமாற்று, 2. திருமாலைமாற்று, 3. வழிமொழித் திருஇயமகம், 4. திருஏகபாதம், 5. திருவிருக்குக் குறள், 6. திருவெழு கூற்றிருக்கை, 7. திருஈரடி, 8. திருஈரடி மேல்வைப்பு, 9. நாலடிமேல் வைப்பு, 10. திருவிராகம், 11. திருச்சக்கரமாற்று, 12. வினாவுரை ஆகிய புதிய யாப்பு மற்றும் அமைப்பு முறைகளைப் பதிகங்களில் பயன்படுத்திப் புலமைத்துவத்தை நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தர்.

இசைப்புலமை

திருஞானசம்பந்தர் இசையிலும் தம் புலமையை உறுதி செய்துள்ளார். புதுப்புதுப் பண்களில் பாடல்கள் பாடித் தமிழிசைக்குப்

Koviloor Digital Library

புத்துயிர் அளித்தார். ஒரு கட்டத்தில் பெரும்பாணராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணரே இசையமைக்க முடியாமல் திணறிய யாழ்முரிப் பண்ணைப் பாடி இசையிலும் தம் புலமையை உறுதி செய்தார். இதனால்தான் இவரை **வண்டமிழ் நாயகர், முத்தமிழாகரர், முத்தமிழ் விரகர்,** எனத் தெய்வச் சேக்கிழார் சிறப்பித்தார்.

பதிக அமைப்பும் சிறப்பும்

திருஞானசம்பந்தர் தாம் பாடிய ஒவ்வொரு பதிகத்திலும் முதல் ஏழு பாடல்களில் தலத்தின் இயற்கை எழிலும் இறைஞானமும் பேசுவார். எட்டாவது பாடலில் இராவணனைப் பற்றிப் பேசுவார். ஒன்பதாவது பாடலில் அயன்மால் குறித்துப் பேசுவார், பத்தாவது பாடலில் மாயை வயப்பட்ட புத்த சமண சமயத்தவரைப் பற்றிப் பேசுவார். பதினோராம் பாடலில் பதிகப்பயன் கூறுவார். இறுதிப் பாடலுக்குத் **திருக்கடைக்காப்பு** என்று பெயர். இதனைத் தமிழில் **முத்திரைக்கவி** எனவும் வடமொழியில் **பலசுருதி** எனவும் வழங்குவர்.

இறைமைத்துவம்

பிறப்பு இறப்பு எனும் அறச் சக்கரத்தை ஓடாமல் நிறுத்தும் ஞானமும் மரணமிலாப் பெருவாழ்வு தரும் இறைமைத்துவமும் திருஞான சம்பந்தர்க்கு இளமையிலேயே வாய்த்தன. 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தால் வரும் யோகப் பயிற்சித் தத்துவத்தைத் "தோடுடை செவியன்" எனும் முதல் பதிகப் பாடலால் உணர்த்துவார்.

திருமறைக்காட்டு அற்புதம்

திருமறைக்காட்டுக் கோயில் கதவு மக்கள் வழிபாடு செய்ய இயலாமல் பூட்டப்பெற்று இருந்தது. இக்கோயில் கதவு திறக்க அப்பர் **பண்ணினேர் மொழியாள்** எனத் தொடங்கும் பதிகம் பாடினார். திருஞான சம்பந்தர் **சதுரம் மறைதான்** என்ற பதிகம் பாடி, திருக்கதவுகளை மூடினார். அன்றிலிருந்து பொதுமக்கள் திருக்கோயிலுக்கு நேராகச் சென்று வழிபாடு செய்யலாயினர்.

அத்திரு வாயில் தன்னில் அற்றைநாள் தொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல மேதினி புக்குப் போற்ற
வைத்துஎதிர் வழக்கம் செய்த வரம்புஇலாப் பெருமை யோரைக்
கைத்தலம் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது கடல்சூழ் வையம். (589)

எனத் தெய்வச் சேக்கிழார் போற்றிப் பரவுகிறார்.

Koviloor Digital Library

பொற்றாளம் பெறல்

திருஞானசம்பந்தர் கைத்தாமரை நோகத் திருக்கோலக்கா இறைவனைத் தாளமிட்டுப் பாடினார். உடனே இறைவன் அவருக்கு 'நமசிவாய' என்ற அஞ்செழுத்துப் பொறித்த பொற்றாளம் அருளினார்.

கொல்லி மழவன் மகளைக் குணப்படுத்தல்

திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லி மழவன் என்ற சிற்றரசன் இருந்தான். அவன் மகளை முயலகன் எனும் நோய் பிடித்தது. அந்நோயை **துணிவளர் திங்கள்** எனத் தொடங்கும் பதிகம் பாடி, திருஞான சம்பந்தர் தமக்கிருந்த இறை ஆற்றலால் நீக்கினார்.

திருமருகலில் நிகழ்த்திய அற்புதம்

வைப்பூர் என்னும் ஊருக்குத் தலைவனாகிய தாமன் என்பானின் ஏழாம் மகள் தன் அத்தை மகனை மணமுடிக்க வேண்டி அயலூர் சென்றாள். வழியில் அத்தை மகனைப் பாம்பு தீண்டியது. வைப்பூர்க்கோன் மகள் அழுது புலம்பினாள். அங்கு வந்திருந்த ஞானசம்பந்தரிடம் முறையிட்டாள். திருஞானசம்பந்தர் **சடையாய் எனுமால்** எனும் பதிகம் பாடி விடம் நீக்கி உயிர்பெறச் செய்தார்.

திருவிழிமிழலையில் பஞ்சம் தீர்த்தல்

அப்பரும் திருஞானசம்பந்தரும் திருவீழிமிழலை ஈசனை வழிபடச் சென்றனர். அங்கு மக்கள் பஞ்சத்தால் வாடினர். இறையருளால் இருவரும் பொற்காசு பெற்றுப் பொதுமக்களின் பசிப்பிணியைப் போக்கினர். திருக்கோயில்களை மக்களுக்குப் பயன்படும் சமுதாயக் கூடங்களாக மாற்றிய பெருமை இவ்விரண்டு அருளாளர்களையே சாரும்.

மதுரையில் நிகழ்த்திய அற்புதங்கள்

பாண்டிய நாட்டுப் பேரரசி மங்கையர்க்கரசியின் அழைப்பினையேற்று மதுரை சென்று அங்கு மடத்தில் சம்பந்தர் தங்கியிருந்தார். சமணர் சம்பந்தர் இருந்த மடத்திற்குத் தீயிட்டனர். சம்பந்தர் ஆலவாய்ப் பெருமானை வணங்கி **பையவே சென்று பாண்டியற்காகவே** என்று பாடினார். உடனே பாண்டியனை வெப்பு நோய் பற்றியது. அதைத் தீர்க்கச் சமணர் முயன்று தோற்றனர். வெப்பு நோய் மிகுந்தது. திருஞானசம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடி, பாண்டியனின் வெப்பு நோய் போக்கி அவனைச் சைவனாக்கினார். தென்பாண்டி மண்டலம் முழுமையும் சைவமாகியது. இப்பெருஞ்செயலை,

Koviloor Digital Library

சென்றகா லத்தின் பழுதுஇலாத் திறமும் இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றுஎழுந்தருளப் பெற்றபேறு இதனால் எற்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றிஇல் நெறியில் அழுந்திய நாடும் நல்தமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்
என்பார். (659)

எனத் தெய்வச் சேக்கிழார் உருகி உரைக்கிறார்.

திருவோத்தூரில் ஆண்பனை மரங்களைப் பெண்பனை மரங்களாக மாற்றியும், மயிலாப்பூரில் பூம்பாவையை உயிர்ப்பித்தும் தம் இறைமைத்துவத்தை நிலைநாட்டியவர் ஞானசம்பந்தர்.

சோதியில் சோதியாதல்

திருநல்லூரில் நம்பாண்டார் நம்பியின் மகள் அருநிதிப் பாவையை மணந்தார் சம்பந்தர். நல்லூர்த் திருக்கோயிலை அடைந்தார். அங்குச் சோதி தோன்றியது. சம்பந்தரோடு அனைவரும் சிவமாயினர். மற்ற அடியார் தாம் மட்டும் சிவமாயினர். சம்பந்தர் மட்டுமே தம் திருமணத்துக்கு வந்தோர் அனைவரையும் சிவமாக்கிய இறைமைத்துவம் மிக்கவராக விளங்கினார்.

வடமொழி, பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகள் செல்வாக்குப் பெற்றிருந்த காலகட்டத்தில் தம்மைத் தமிழ்ப் பற்றாளராகவும், தமிழ்க்காவலராகவும் முதன்மைப்படுத்திக் கொண்டு தமிழைத் தமிழர்களிடமிருந்தே மீட்டெடுத்த சிறப்பும் பெருமையும் தமிழ்த் தலைவர் சம்பந்தர் ஒருவருக்கே உரியது. 1400 ஆண்டுகளுக்கு முன்னால் வேற்றுச் சமயத்தைத் தழுவி வேற்று மொழிகளைப் போற்றிக் கொண்டிருந்த தமிழக ஆட்சித் தலைவர்கள் முன்னால் தம்மைத் தமிழோடு இணைத்துப்பேசி அஞ்சாது மொழிப்போரை முன்னின்று நடத்தியவர். திருஞானசம்பந்தர் இறைமைத்துவத்தோடு கூடிய புலமைத்துவம் மிக்க தமிழாளியார் எனில் மிகையாகாது.

Koviloor Digital Library

47. திருஞானசம்பந்தரின் தல யாத்திரை

திருஞானசம்பந்தர் பாடிய்ருளிய திருப்பாடல்களில் இன்று நமக்குக் கிடைப்பவை 385 பதிகங்கள் – 4169 திருப்பாடல்கள். இவர் சென்று வழிபாடியற்றிப் பாடிய திருத்தலங்கள் 220. பொதுவாகப் பாடியருளிய திருப்பதிகங்கள் (7) ஈழ நாட்டிலுள்ள திரிகோணமலை, திருக்கேத்தீசுவரம் (2), துளு நாட்டிலுள்ள திருக்கோகர்ணம் (1), வடநாட்டிலுள்ள திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), இந்திர நீலப் பருப்பதம், அநேகதங்காவதம், திருக்கேதாரம், நொடித்தான்மலை (கைலாயம்) (5), இந்தப் பதினைந்து தலங்களும் திருஞான சம்பந்தர் நினைத்துப் பாடியவை. இப்பதினைந்து தவிர ஏனைய 220 தலங்களுக்கும் திருஞான சம்பந்தர் நேரிடையாகச் சென்று திருப்பாடல்கள் அருளியவர்.

✯ திருஞானசம்பந்தர் ஆறுமுறை தல யாத்திரை மேற்கொண்டார்

★ **முதல் தல யாத்திரை :–** மூன்று வயதில் தொடக்கம் – சீர்காழி– – திருக்கோலக்கா – திருநனிபள்ளி – சீர்காழி.

★ **இரண்டாவது தல யாத்திரை :–** சீர்காழி – திருநனிபள்ளி – திருவெண்காடு – சில தலங்கள் – சீர்காழி.

★ **மூன்றாவது தல யாத்திரை :–** சீர்காழி – திருமகேந்திரப் பள்ளி – திருக்கருகாவூர் – திருமுல்லைவாயில் – சில தலங்கள் – சீர்காழி.

★ **நான்காவது தல யாத்திரை :–** சீர்காழி – தில்லை (சிதம்பரம்) – திருவேட்களம் – திருவெருக்கத்தம்புலியூர் – திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) – திருப்பெண்ணாகடம் – திருவரத்துறை – பல தலங்கள் – சீர்காழி.

திருநாவுக்கரசர் (68 வயது) சீர்காழி வந்து திருஞானசம்பந்தரை (4 வயது) முதன்முறையாகத் தரிசித்துச் செல்லல்

✯ **ஐந்தாவது தல யாத்திரை :–** சீர்காழி – திருக்கண்ணார் கோயில் – பல தலங்கள் – திருவையாறு – திருப்பாச்சிலாச்சிராமம் – கொங்கு நாடு – திருக்கொடி மாடச்செந்தூர் – சோழ நாட்டுத் தலங்கள் பல – திருநல்லூர் – திருவலஞ்சுழி – திருப்பட்டீச்சுரம் – திருவாவடுதுறை – தருமபுரம் (யாழ்மூரிப் பண் பாடுதல்) – திருநள்ளாறு – திருநீலநக்கர் நட்பு – திருச்செங்காட்டங்குடி – திருமருகல் –

Kovilpor Digital Library

திருப்புகலூர் – **(திருநாவுக்கரசரை இரண்டாவது முறையாகச் சந்தித்தல்)** – திருவாரூர் – மீண்டும் திருப்புகலூர் – திருவம்பர்மாகாளம் – திருக்கடவூர் (குங்குலியக் கலய நாயனார்) – திருவீழிமிழலை (தோணியப்பர் திருக்கோலத்தினைக் காணுதல்) – பஞ்சம் போக்குதல் – திருமறைக்காடு திருக்கதவம் திறத்தல் – திருவாய்மூர் – திருஆலவாய் (மதுரை) – அனல் வாதம் புனல் வாதம் – பாண்டிய நாட்டுப் பதிகள் பல – சோழ நாட்டுப் பதிகள் பல – திருநள்ளாறு – போதிமங்கை – திருக்கடவூர் (இரண்டாம் முறை) – திருப்பூந்துருத்தி – **(திருநாவுக்கரசரை மூன்றாவது முறையாகச் சந்தித்தல்)** – அப்பர் சம்பந்தரின் சிவிகையைத் தாங்குதல் – சம்பந்தர் சீர்காழி அடைதல்.

✵ **ஆறாவது தல யாத்திரை :-** சீர்காழி – திருத்தில்லை – திருமாணிக்குழி – திருப்பாதிரிப்புலியூர் – திருவதிகை வீரட்டானம் – திருவண்ணாமலை – திருவோத்தூர் – காஞ்சிபுரம் – ஏகாம்பரநாதர் வழிபாடு – திருவாலங்காடு – காளத்தி மலை – அங்கிருந்தபடியே வடநாட்டுத் திருத்தலங்கள் ஐந்தனையும் போற்றிப் பதிகம் பாடி அருளுதல் – திருவொற்றியூர் – மயிலாப்பூர் – பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு தில்லை அடைதல் – பின் சீர்காழி அடைதல்.

சீர்காழியில் திருஞானசம்பந்தரின் பதினாறாவது வயதில் திருமண ஏற்பாடுகளைப் பெற்றோர் மேற்கொள்ளல். திருப்பெருமணநல்லூர் நம்பாண்டார் நம்பியின் திருமகளான **அருநிதிப் பாவையாரை** (1235) (சொக்கியார்) **ஆதிபூமி** (1230) என்னும் கருவறையில் கைப்பிடித்து அனைவருடன் சோதியில் கலந்தார் – கனிந்தார் – கரைந்தார்.

385 பதிகங்கள் பாடியருளிய திருஞானசம்பந்தர் சில தலங்களுக்கு மட்டும் மிகுதியான பதிகங்கள் பாடியுள்ளார்.

1. **சீர்காழி** 69 பதிகம். (பன்னிரண்டு பெயர்களில்)

(1) திருப்பிரமபுரம் – 17, (2) திருவேணுபுரம் – 3, (3) திருப்புகலி – 8, (4) திருவெங்குரு – 2; (5) திருத்தோணிபுரம் – 3, (6) திருப்பூந்தராய் – 4, (7) திருச்சிரபுரம் – 3, (8) திருப்புறவம் – 3, (9) திருச்சண்பை நகர் – 2, (10) சீர்காழி – 15, (11) திருக்கொச்சைவயம் – 3, (12) திருக்கழுமலம் – 6.

2. **திருவீழிமிழலை** 14 பதிகம்.
3. **திருஆலவாய் (மதுரை & திருஏடகம்)** 11 பதிகம்.
4. **திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)** 7 பதிகம்.
5. **திருவிடைமருதூர்** – 6 பதிகம்.

6. திருவாரூர் – 5 பதிகம்.
7. திருவையாறு – 5 பதிகம்.
8. திருமறைக்காடு (வேதாரண்யம்) 5 பதிகம்.
9. தில்லை (சிதம்பரம்) 2 பதிகம்.

திருஞானசம்பந்தர் புராணத்தில் உள்ள சில பாடல்கள்

முதல் திருப்பாட்டு

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயல்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (1)

சீர்காழியின் 12 பெயர்கள்

பிரமபுரம் வேணுபுரம் புகலி, பெரு வெங்குரு நீர்ப்
பொருஇல்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்முன்
வருபுறவம் சண்பைநகர் வளர்காழி கொச்சை வயம்
பரவுதிருக் கழுமலம்ஆம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால். (14)

சிவஞான அமுது உண்ணல்

எண்அரிய சிவஞானத்து இன்அமுதம் குழைத்தருளி
உண்அடிசில் எனஊட்ட உமைஅம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையில்பொன் கிண்ணம்அளித்து
அண்ணலைஅங்கு அழுகைதீர்த்து அங்கணனார் அருள்புரிந்தார். (68)

மெய்ஞானம் உணர்தல்

சிவன்அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவம்அதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமைஇலாக் கலைஞானம் உணர்வுஅரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில். (70)

முத்துச்சிவிகையை வணங்கி ஏறுதல்

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றுஒளி போற்றிநின்று
ஆதி யார்அருள் ஆதலில் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகுஎலாம். (216)

Koviloor Digital Library

அப்பர் சம்பந்தரைக் காண வருதல்

சிந்தைஇடை யறாஅன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தைமிகை ஆம்கருத்தும் கைஉழவா ரப்படையும்
வந்துஇழிகண் ணீர்மழையும் வடிவில்பொலி திருநீறும்
அந்தம்இலாத் திருவேடத்து அரசும்எதிர் வந்துஅணைய. (270)

வெப்புநோய் சம்பந்தர் அருளால் தீரும் என அரசியும் அமைச்சரும் உரைத்தல்

இருதிறத் தவரும் மன்னன் எதிர்பணிந்து இந்த வெப்பு
வருதிறம் புகலி வந்த வள்ளலார் மதுரை நண்ண
அருகர்கள் செய்த தீய அனுசிதம் அதனால் வந்து
பெருகியது; இதற்குத் தீர்வு பிள்ளையார் அருளே என்று. (719)

காயமும் மனமும் மாசு கழுவுதல் செய்யார் செய்யும்
மாயமும் இந்த நோயை வளர்ப்பதே! வளர்வெண் திங்கள்
மேயவே ணியர்பால் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கில்
தீயஇப் பிணியே அன்றிப் பிறவியும் தீரும் என்றார். (720)

ஞானப் பிள்ளையாரை அரசியும் அமைச்சரும் காணுதல்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசைஅன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள். (728)

ஆலவாய் அண்ணலைச் சம்பந்தர் வணங்குதல்

ஆலமே அமுதம் ஆக உண்டுவா னவர்க்கு அளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்தனை; அடியேற்கு இன்று
ஞாலம்நின் புகழே ஆக வேண்டும்;நான் மறைகள் ஏத்தும்
சீலமே! ஆல வாயில் சிவபெருமானே! என்றார். (740)

திருநீற்றால் பாண்டியன் நோய் போக்கல்

திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கும் ஆற்றால் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்ததுவெப்பு அகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான். (770)

Koviloor Digital Library

சமணர் சூளுரை

அங்குஅது கேட்டு நின்ற அமணரும் அவர்மேல் சென்று
பொங்கிய வெகுளி கூரப் பொறாமைகாரணமே ஆகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதில் அழிந்தோம் ஆகில்
வெம்கழு ஏற்று வான்இவ் வேந்தனே என்று சொன்னார். (798)

பாண்டியன் மெய்யுணர்வு பெறல்

தென்னவன் மாறன் தானும் சிரபுரத் தலைவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றை யார்தம் திருநீறு பூசப் பெற்று
முன்னைவல் வினையும் நீங்கி முதல்வனை அறியும் தன்மை
துன்னினான் வினைகள் ஒத்துத் துலைஎன நிற்ற லாலே. (819)

பாண்டியன் திருநீறு அணிதல்

தென்னவன் தனக்கு நீறு சிரபுரச் செல்வர் ஈந்தார்;
முன்அவன் பணிந்து கொண்டு முழுவதும் அணிந்து நின்றான்;
மன்னன் நீறுஅணிந்தான் என்று மற்றுஅவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்கள் எல்லாம் தூயநீறு அணிந்து கொண்டார். (857)

சோதிலிங்கம்

தேவர்கள் தேவர் தாமும் திருவருள் புரிந்து நீயும்
பூவைஅன் னாளும் இங்குஉன் புண்ணிய மணத்தின் வந்தார்
யாவரும் எம்பால் சோதி இதன்உள் வந்து எய்தும் என்று
மூவுலகு ஒளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு ஆகி (1246)

அருள்மிகு வெண்ணீற்று உமைநங்கை உடனாய
சிவலோகத் தியாகேசர் பெருமணமுடைய மகாதேவர்
சிவலோகத் தியாகர் திருக்கோயில் (நல்லூர்ப் பெருமணம்)
ஆச்சாள்புரம் (அஞ்சல்) – 609 101.
சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்

Koviloor Digital Library

48. திருஞானசம்பந்தர் - அருந்தமிழாகரர்

திருவருளால் திருவவதாரம் செய்தருளிய திருஞானசம்பந்தர் பதினாறாயிரம் (16,000) பதிகங்கள் பாடியருளியதாகத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. ஆனால், இன்று நமக்குக் கிடைத் திருப்பவை 385 பதிகங்கள் 4,169 திருப்பாடல்கள் மட்டுமே. தெய்வநலம் சிறந்த இத் திருப்பாடல்கள் மானிடர் வாழ்க்கையின் இடர் களைபவை.

1. திருப்பிரமபுரம் (முதல் திருப்பதிகம்)

தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே! (1)

2. திருநள்ளாறும் – திருஆலவாயும்

பாடக மெல்அடிப் பாவையோடும் படு பிணக்காடு இடம் பற்றி நின்று
நாடகம்ஆடம் நள்ளாறு உடைய நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
சூடகம் முன்கை மடந்தைமார்கள் துணைவரொடும் தொழுது ஏத்தி வாழ்த்த
ஆடகமாடம் நெருங்கு கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. (1)

3. திருப்பாச்சிலாச்சிராமம்
(கொல்லிமழவன் மகள் நோய் நீங்கப் பாடிய பதிகம்)

துணி வளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணி வளர் கொள்கையர் பாரிடம் சூழ ஆர் இடமும் பலி தேர்வர்
அணி வளர் கோலம்எலாம் செய்து பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
மணி வளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே.
(1)

4. திருநள்ளாறு
(அனல்வாதம் - கயிறு சார்த்திப் பார்த்து எடுத்த பதிகம்)

போகம்ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்அகலம்
பாகம்ஆர்த்த பைங்கண்வெள்ஏற்று அண்ணல் பரமேட்டி
ஆகம் ஆர்த்த தோல்உடையன் கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. (1)

Koviloor Digital Library

*திருநள்ளாறு

தளிர் இள வளர் ஒளி தனது எழில் தரு திகழ் மலைமகள்
குளிர் இள வளர் ஒளி வனமுலைஇணை அவை குலவலின்
நளிர் இள வளர் ஒளி மருவும் நள்ளாறர்தம் நாமமே
மிளிர் இள வளர்ளி இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. (1)

5. திருநெடுங்களம் (இடர்களையும் பதிகம்)

மறைஉடையாய் தோல்உடையாய் வார்சடைமேல் வளரும்
பிறைஉடையாய் பிஞ்ஞகனே என்று உனைப் பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. (1)

6. திருநீலகண்டம் (சுரநோய் நீக்கப் பாடியது)

அவ் வினைக்கு இவ் வினை ஆம்என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம்அன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். (1)

7. திருமருகல் (விடம் தீர்த்த பதிகம்)

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே. (1)

8. திருமறைக்காடு (திருக்கதவு அடைக்கப் பாடியது)

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ்மறைக்காட்டு உறை மைந்தா
இது நன்கு இறை வைத்து அருள்செய்க எனக்குஉன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே. (1)

9. மயிலாப்பூர் (பூம்பாவையை எழுப்பிய பதிகம்)

மட்டிட்ட புன்னை அம்கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். (1)

Koviloor Digital Library

10. திருவெண்காடு

(மெய்கண்டார் பிறப்பதற்குக் காரணமான பதிகம்)

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே. (1)

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே. (2)

11. சீர்காழி (ஐந்தெழுத்துப் பதிகம்)

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சுஅகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே. (1)

12. திருக்கழுமலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவுஇலைக்
கண்ணின் நல்லஃது உறும் கழுமல வள நகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. (1)

13. திருஆலவாய் (திருப்பாசுரம்)

(இப்பதிகத்திற்குத் தெய்வச்சேக்கிழார் 24 பாடல்களில் உரை செய்துள்ளார். **(822 - 845)**

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. (1)

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டு உளன் எங்கள் சோதி
மா துக்கம் நீங்கல்உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள்மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. (5)

Koviloor Digital Library

14. திரு ஒற்றியூர்

விடையவன் விண்ணும்மண்ணும் தொழ நின்றவன் வெண்மழுவான்
படையவன் பாய் புலித்தோல் உடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசி தங்கிய சங்கவெண்தோடு
உடையவன் ஊனம்இல்லி உறையும் இடம் ஒற்றியூரே. (1)

15. திருவான்மியூர்

விரை ஆர் கொன்றையினாய் விடம் உண்ட மிடற்றினனே
உரை ஆர் பல்புகழாய் உமைநங்கை ஓர்பங்கு உடையாய்
திரை ஆர் தெண்கடல் சூழ் திரு வான்மியூர் உறையும்
அரையா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. (1)

16. திருஆலவாய்

மங்கையார்க்கு அரசி வளவர்கோன் பாவை வரி வளைக் கைம் மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமா தேவி பணி செய்து நாள்தொறும் பரவப்
பொங்கு அழல்உருவன் பூதநாயகன் நால் வேதமும் பொருள்களும் அருளி
அம் கயல்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் ஆவதும் இதுவே. (1)

17. திருக்குருகாவூர் வெள்ளடை

சுண்ணவெண் நீறுஅணி மார்பில் தோல்புனைந்து
எண்ணரும் பல்கணம் ஏத்த நின்று ஆடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனிஎம் பிஞ்ஞகனாரே. (1)

18. திருவண்ணாமலை

உண்ணாமுலை உமையாளொடும் உடன்ஆகிய ஒருவன்
பெண்ஆகிய பெருமான் மலை திரு மா மணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலை முழவுஅதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே. (1)

19. திருஆலவாய் (திருநீற்றுப் பதிகம்)

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே. (1)

Koviloor Digital Library

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே. (3)

கல் ஊர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்ஊர்ப் பெருமணம் பாட்டு மெய் ஆய்த்தில
சொல் ஊர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே. (2)

நறும்பொழில் காழியுள் ஞானசம்பந்தன்
பெறும் பத நல்லூர்ப் பெருமணத்தானை
உறும் பொருளால் சொன்ன ஒண்தமிழ் வல்லார்க்கு
அறும் பழி பாவம் அவலம் இலரே. (4,169ஆவது பாடல்) (11)

20. திருநல்லூர்ப் பெருமணம்

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன்சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே (11)

21. திருநல்லூர்ப் பெருமணம் (நமச் சிவாய திருப்பதிகம்)

காதல் ஆகிக் கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே (1)

அருள்மிகு வெண்ணீற்று மங்கை உடனாய சிவலோகத் தியாகேசர் -
பெருமணமுடைய மகாதேவர் சிவலோகத் தியாகர் திருக்கோயில்
(நல்லூர்ப் பெருமணம்)
ஆச்சாள்புரம் (அஞ்சல்) - 609 101.
சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

49. ஏயர்கோன் கலிக்காமர்

(350+59=409) பாடல்கள்)

பிறந்த ஊர் : திருப்பெருமங்கலம் (திருப்புன்கூருக்கு வடக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது.) அக்காலத்தில் சோழ நாடு.

குலம் : வேளாளர்

குருபூசை மாதம் : ஆனி

நட்சத்திரம் : ரேவதி

காலம் : சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840 – 865)

ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை – 5:2)

சோழ நாட்டில் திருப்பெருமங்கலம் எனும் நகர் மிகுந்த எழிலுடையது. இது பொன்கொழிக்கும் காவிரியின் வடகரையில் கிழக்குத் திசையிலே அமைந்துள்ளது. அந்நகர் இயற்கை எழிலும் ஏற்றமும் வளமும் கொண்டது.

திருப்பெருமங்கலத்தின் மாளிகைகளில் மேகங்களும் வீதிகளில் திருவிழாக்களும் அந்நகர்ப் பெண்களின் கண்களில் காதல் மயக்க நஞ்சும் நிறைந்திருக்கும். மாளிகை முற்றங்களில் குழந்தைகள் விளையாடுவர். ஊர் மக்கள் உழவுத் தொழில் மூலமாகப் பெருவளம் பெற்றுள்ளனர்.

நெற்றியில் திருநீறு அணிந்த சிவனடியார்களாலும் அவர்கள் செய்யும் வழிபாடுகளாலும் அந்த நகரம் சிவபுரிபோல் காட்சி அளிக்கும்.

கலிக்காமரின் பக்தி

இவ்வளவு சீரும் சிறப்பும் மிக்க திருப்பெருமங்கலத்தில் ஏயர்கோக்குடியில் கலிக்காமர் என்றொருவர் வாழ்ந்து வந்தார். எல்லாம்வல்ல சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருப்புன்கூர் எனும் தலத்தில் இவர் திருப்பணிகளைச் செய்து வந்தார்.

"திருநீறு விரும்பும் சிவபெருமானின் திருவடிதான் மெய்யான செல்வம்" என்ற கருத்துடைய ஏயர்கோன் கலிக்காமர், இறைவனையே எண்ணி இன்புற்று வாழ்ந்தார்.

அங்கண் மிக்கஅக் குடியினில் அவதரித்துள்ளார்
கங்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காமர் என்பார்
தங்கள் நாயகர் அடிபணி வார்அடிச் சார்ந்து
பொங்கு காதலின் அவர்பணி போற்றுதல் புரிந்தார். (6)

Koviloor Digital Library

புதிய நாள்மதிச் சடைமுடி யார்திருப் புன்கூர்க்கு
அதிகம் ஆயின திருப்பணி அனேகமும் செய்து
நிதியம் ஆவன நீறுஉகந் தார்கழல் என்று
துதியி னால்பர வித்தொழுது இன்புறு கின்றார் (7)

எனத் தெய்வச் சேக்கிழார் கலிக்காமர் பெருமை கூறுவார்.

ஏயர்கோன் கலிக்காமர் சீற்றம் கொள்ளல்

நம்பியாரூரர் சிறிதும் மன நடுங்காமல் அச்சமின்றித் தமது பெருமானாரை ஒரு பெண்ணிடத்துத் தூதுவிட்டார் என்கின்ற செய்தியைத் திருப்பெருமங்கலத்திலிருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் கேட்டு மனம் புழுங்கினார்; அதிசயங்கொண்டார். அச்சங்கொண்டார்; மிக வருந்தினார்; "நாயகனை அடியவன் ஏவுதல் செய்யும் தொழில் மிக நன்று! இதனைத் துணிந்து செய்பவனும் ஒரு தொண்டனாம்! இஃது என்ன பாவம்? பொறுக்க வொண்ணாத இப்பெரும்பிழையினைக் காதினால் கேட்ட பின்னும் என்னுயிர் நீங்காதிருந்தது! ஒரு பெண்ணிடத்துக் கொண்ட காதல் காரணமாக ஒருவன் ஏவினால் அதற்குடன்பட்டு ஓர் இரவு முழுமையும் தம் திருவடித் தாமரைகள் நோகும்படி தேரோடும் வீதிவழியே இறைவர் தூதாக உழல்வாராம்! இந்திரனும், திருமாலும் நான்முகனும் காணவொண்ணாத சிவபெருமான் தூது செல்ல இசைந் தாலும் அங்ஙனம் ஏவுதல் செய்யலாமோ? இப்பாவச் செயலுக்கு மனம் நடுங்காதவனை நான் காணும் நாள் எந்நாளோ? பெண்ணின் பொருட்டு இறைவனை இரவிலே தூது செல்லும்படி ஏவி அங்கே இருந்தவனை என் எதிர்வரக் காண்பேனாகில் யாது நிகழ்ந்திடுமோ?" என்று மூண்ட கோபத்துடன் மனம் வருந்தினார்.

அரிவை காரணத்தி னாலே ஆளுடைப் பரமர் தம்மை
இரவினில் தூது போக ஏவிஅங்கு இருந்தான் தன்னை
வரஎதிர் காண்பேன் ஆகில் வருவதுஎன் னாம்கொல்? என்று
விரவிய செற்றம் பற்றி விள்ளும்உள் ளத்தராகி (387)

ஏயர்கோன் கலிக்காமர் இருந்தார்.

திருவிளையாடல்

சுந்தரமூர்த்தி நாயனாரைத் தவறாகப் புரிந்து கொண்ட கலிக்காமரின் கருத்தை மாற்றும் பொருட்டு, தில்லைநாயகன் செய்த திருவிளையாடலை விளக்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

நாவ லூர்மன்னர் நாதனைத் தூதுவிட்டு அதனுக்கு
யாவர் இச்செயல் புரிந்தனர் என்றுஅவர் இழிப்பத்
தேவர் தம்பிரான் அவர்திறம் திருத்திய அதற்கு
மேவ வந்தஅச் செயலினை விளம்புவான் உற்றேன். (8)

Koviloor Digital Library

இச்செய்தியைச் சுந்தரர் கேள்வியுற்றார். தாம் செய்தது தவறு எனச் சுந்தரர் எண்ணினார். நாள்தோறும் சிவபெருமானிடம் சென்று கலிக்காமரின் சினத்தைத் தணிக்க முறையிட்டு வந்தார். சிவபெருமான் ஏயர்கோன் கலிக்காம நாயனாரையும் சுந்தரரையும் ஒன்றுபடுத்த எண்ணினார்.

கலிக்காமரைச் சூலை தாக்கல்

சிவபெருமான் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குச் சூலை நோய் உண்டாகும்படிச் செய்துவிட்டார். சூலை நோயின் வேதனையில் வாடிய ஏயர்கோன் கலிக்காம நாயனார் மனத்தாலும் வாக்காலும் இறையைத் துதித்தார்.

சிவபெருமான் ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் கனவில் தோன்றி இச்சூலை நோய் வன்தொண்டராம் சுந்தரமூர்த்தியால் தீர்தலன்றி வேறு யாராலும் வேறு எதனாலும் தீராது என்று கூறினார். உடனே ஏயர்கோன் கலிக்காம நாயனார், இறைவா நீர்வம்பென ஆண்டுகொண்ட ஓர் அடியானா என் நோய் தீர்க்கும் திறத்தான்? அவனால் தீர்வதைக் காட்டிலும் இந்நோய் தீராமல் இருப்பதே நன்று." என்றார். உடனே சிவபெருமான் மறைந்துவிட்டார்.

அதன்பின் சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரின் முன் சென்று "எம்மால் ஏயர்கோன் கலிக்காமன் சூலை நோயால் வாடுகிறான். நீ சென்று அவன் நோய் தீர்க்க" என்று கூறி மறைந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரிலிருந்து புறப்பட்டு ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் ஊர் சேர்ந்தார்.

முத்துன்பம்

இந்நிலையில் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு மூன்று துன்பங்கள் இருந்தன. அவை :

1. சூலை நோயால் வந்த **உடல் துன்பம்.**
2. சுந்தரமூர்த்தி நாயனாரால்தான் நோய் தீரும் என்று இறைவன் கூறியதால் வந்த **உள்ளத் துன்பம்.**
3. நோய் தீர்க்கச் சுந்தரமூர்த்தி நாயனார் வந்ததால் ஏற்பட்ட **தன்மானத் துன்பம்.**

இம்மூன்று துன்பங்களாலும் மனமுடைந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரால் தம் சூலை நோய் நீங்குவதை

Koviloor Digital Library

விரும்பாமல் தம் உடைவாள் எடுத்தார். வயிற்றைக் கிழித்துக் கொண்டார். உடனே உயிரும் போனது, நோயும் போனது. அதைக் கண்ட அவர் துணைவியார் தாம் உயிர்விட ஆயத்தமானார். அப்போது சுந்தரமூர்த்தி நாயனார் வருகிறார் என்ற செய்தி கேட்ட துணைவியார் தம் கணவரின் தற்கொலையை மறைக்க எண்ணினார். உடனே அவர் சுந்தரமூர்த்தி நாயனாரை உற்சாகத்தோடு வரவேற்க ஆவன செய்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் துன்பம் போக்க விழைந்தார். காவலர் இங்கே கெடுதி இல்லை, ஏயர்கோன் கலிக்காம நாயனார் பள்ளி கொள்கிறார் என்றனர். ஆனால் தொடர்ந்து முயன்று உண்மை அறிந்த சுந்தரமூர்த்தி நாயனார் தாமும் உயிர் துறக்க முனைந்தார். அப்போது இறைவன் அருளால் ஏயர்கோன் கலிக்காம நாயனார் உயிர்பெற்று எழுந்தார். உடனே வன்தொண்டரிட மிருந்த வாளைப் பிடித்தார். உடனே இருவரும் அவரவர் கழல் பணிந் தனர். இருவரும் அருகில் உள்ள **திருப்புன்கூர்** சென்று சொக்கநாயகி உடனுறை சிவலோகநாதரை வணங்கிப் போற்றினர். சுந்தரர் இத்திருத்தலப் பதிகத்தில் கலிக்காமரைப் போற்றியுரைக்கிறார்.

மற்றுஅவர் வணங்கிவீழ வாளினை மாற்றிஏயர்
கொற்றவனாரும் நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தார்
அற்றைநாள் நிகழ்ந்த இந்த அதிசயம் கண்டு வானோர்
பொன்தட மலரின்மாரி பொழிந்தனர் புவனம் போற்ற (405)

இருவரும் எழுந்துபுல்லி இடைவிடா நண்பினாலே
பொருஅரும் மகிழ்ச்சி பொங்கத் திருப்புன்கூர்ப் புனிதர்பாதம்
மருவினர் போற்றிநின்று வன்தொண்டர் தம்பிரானார்
அருளினை நினைந்தே அந்தணாளன் என்று எடுத்துப்பாடி (406)

நள்இருள் நாயனாரைத் தூதுவிட்டவர்க்கே நண்புஆம்
வள்ளலார் ஏயர்கோனார் மலர்அடி வணங்கிப் புக்கேன்
உள்உணர்வு ஆன ஞானம் முதலிய ஒருநான்கு உண்மை
தெள்ளுதீம் தமிழால் கூறும் திருமூலர் பெருமை செப்ப. (409)

Koviloor Digital Library

50. ஏயர்கோன் கலிக்காமர் வரலாற்றில் சுந்தரர் வரலாறு

(350+59=409) பாடல்கள்)

தெய்வச் சேக்கிழார் திருவாய் மலர்ந்து அருளிய பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தருக்கு அடுத்த நிலையில் மிகுதியான பாடல்களால் வரலாறு கூறப்பெற்றவர் சுந்தரர் ஆவார். திருஞான சம்பந்தர் வரலாறு 1256 பாடல்களில் பேசப்பெறும். சுந்தரர் வரலாறு சற்றேறக்குறைய 760 பாடல்களில் பேசப்பெறும். தடுத்தாட் கொண்ட புராணம் + ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் + சேரமான் பெருமாள் (கழறிற்றறிவார்) நாயனார்புராணம் + வெள்ளானைச் சருக்கம்.) மூன்றாவது நிலையில் திருநாவுக்கரசர் வரலாறு 429 பாடல்களில் உரைக்கப் பெற்றுள்ளது.

நெல் பெறல்

சுந்தரர் பரவையாரோடு கூடி இல்லறம் நடத்திய காலத்தில் திருவாரூருக்கு அருகில் குண்டையூர் எனும் ஊரில் வாழ்ந்தவர் குண்டையூர்க் கிழார். சுந்தரர்பால் கொண்ட அன்பின் காரணமாய் ஆண்டுதோறும் நெல் அளித்து வந்தார். பஞ்சம் காரணமாக அவருக்கே நெல் இல்லாத சூழல் உருவானது. அப்போது இறைவன் குண்டையூர்க் கிழார் கனவில் தோன்றி நெல் அருளினோம் என்று கூறி மறைந்தார். காலையில் கிழார் நிலத்தில் நெல் மலையே இருந்தது. கிழார் நடந்ததைச் சுந்தரரிடம் கூறினார். நெல் மலையைப் பார்த்து மலைத்த சுந்தரர்,

நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவையட்டித் தரப்பணியே (7:20:1)

என இறைவனிடம் நெல்லைத் திருவாரூர் கொண்டு செல்ல ஆள் வேண்டினார். இறைவன் அருளினார்.

காலையில் கதவைத் திறந்த பரவையார் வீதி முழுக்க நெல் இருக்கக் கண்டு அதிசயித்தார். அவரவர் மனைக்குட்பட்ட நெல்லை அவரவரே பயன்படுத்தலாம் என்று அறிவித்தார்.

பாசமிகு பிள்ளைகள்

சுந்தரர் திருநாட்டியத்தான்குடி என்ற ஊர் சென்றார். அங்கே கோட்புலியார் எனும் சிவனடியார் சுந்தரரை வரவேற்றார். அவர்

KoviloorDigital Library

தம்முடைய **சிங்கடி, வனப்பகை** எனும் மகள்களை மணம் புரிய வேண்டினார். சுந்தரரோ மகள்களாய் ஏற்றுக்கொண்டார்.

பாட மறந்தனையோ

கோட்புலி நாயனாரோடு சுந்தரர் பல்வேறு தலங்கள் சென்றார். **திருவையாறு, திரு ஆலம்பொழில்** ஆகிய தலங்கள் சென்றார். இவ்விரண்டுக்கும் இடையில் **திருமழபாடி** எனும் தலம் உள்ளது. திருமழபாடி இறைவன் சுந்தரர் கனவில் தோன்றி தமது இளமை யாகிய திருக்கோலத்தைக் காட்டி **என்னைப் பாட மறந்தனையோ** எனக்கேட்டு மறைந்தார். அப்போது சுந்தரர் உருகிப் பாடிய பாடல் பின்வருமாறு:

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. (7:24:1)

திருப்பாச்சிலாச்சிராமத்தில் பொற்குவை பெற்றார். திருப் பாண்டிக் கொடுமுடியில் பிறவாத தன்மை வேண்டினார்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனைநான் மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. (7:48:1)

தில்லை **(சிதம்பரம்)** சென்று வணங்கிப் பரவசத்தில் ஆழ்ந்தார். **திருவாரூரிலே** நிகழும் உத்திரப் பெருவிழாவிற்குப் பெரும் செலவாகும். அதற்காகத் திருப்புகலூர் சென்று பெருமானிடம் பொன் வேண்டினார். அங்கு ஏற்பட்ட களைப்பில் கோயில் திருப்பணிக்காக இருந்த செங்கல்லை எடுத்து அதன்மேல் தன் துண்டைப் போட்டுப் படுத்துத் தூங்கினார். காலையில் கண்விழித்தார். செங்கல் தங்கக் கட்டியாய் இருந்தது. அடுத்து, திருச்சி சென்றார். அடுத்து, கடலூர் மாவட்டத்திலுள்ள **விருத்தாசலம் (திருமுதுகுன்றம்)** சென்று இறைவனை வழிபட்டார்.

பொன்னை ஆற்றிலே போட்டு குளத்திலே எடுத்தல்

விருத்தாசலத்தில் **(திருமுதுகுன்றம்)** உள்ள இறைவனைப் பார்த்து, "பெருமானே! ஆரூரில் நடக்கும் உத்திரப் பெருவிழாவிற்குப் பொருள் தேவை" என வேண்டினார். பெருமான் 16,000 பவுன் கொண்ட ஒரு மூட்டை கொடுத்தார். சுந்தரர் இதை என்னால் எடுத்துச் செல்ல இயலாது என்றார். பெருமான் இப்பொன்னினைத் திருமுத்தா நதியிலே (River) போட்டு, திருவாரூர் (கமலாலயம்) குளத்தில் எடுத்துக் கொள் என்றார். தில்லையையும் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு

Koviloor Digital Library

சுந்தரர் திருவாரூர் வந்தார். சுந்தரர் வேண்டிய பொழுது பொன் வரவில்லை. மீண்டும் பெருமானைச் சுந்தரர் வேண்டினார். பெருமான் அருளினார். பரவையாரோடு அப்பொன்னைச் சோதித்துப் பார்த்து, சுந்தரர் எடுத்துக் கொண்டார். அடுத்துச் சுந்தரர் திருக்கடவூர், திருக்கடவூர் மயானம், திருநின்றியூர், திருக்கோலக்கா, சீர்காழி ஆகிய பல தலங்கள் சென்றார். அடுத்துத் **திருக்குருகாவூர்** சென்றார்.

ஆண்டவனே அருளமுது அளித்தல்

திருக்குருகாவூரில் இறைவன் ஒரு பெரியவர் வடிவில் வந்து சுந்தரருக்குப் பொதிசோறும் சுனைநீரும் நல்கினர். உணவையும் நீரையும் உண்ட சுந்தரர் சுவைகண்டு திகைத்தார். இறுதியில் பொதி சோறும் சுனைநீரும் தந்தவர் பெருமானே என்பது சுந்தரருக்குத் தெரிந்தது.

அடுத்துத் **திருக்கழுக்குன்றம்** மற்றும் பல தலங்களைத் தரிசித்தார் சுந்தரர். அடுத்து, **திருக்கச்சூர்** சென்றார். திருக்கச்சூர் இறைவன் நண்பகலில் முதியவர் வடிவில் வந்து திருக்கச்சூர் வீதிகளில் நடந்து பிச்சையேற்றுச் சுந்தரருக்கு உணவு அளித்தார். அடுத்து, **காஞ்சி** சென்றார். அடுத்து, **திருவொற்றியூர்** சென்றார்.

சங்கிலியாரை மணத்தல்

திருவொற்றியூரில் ஞாயிறு எனும் இடத்தில் திருஞாயிறு கிழார் எனும் வேளாண்குலப் பெரியவருக்குப் பிறந்தவரே சங்கிலியார். அவர் கயிலை மலையிலே இருந்த உமையம்மையின் சேடியர்களில் ஒருவர். அவரைத் திருவொற்றியூர்த் திருக்கோயிலுக்கருகே கண்ட சுந்தரர் அவரை மணக்க எண்ணினார். உடனே இறைவனிடம் தமக்கும் சங்கிலியாருக்கும் மணம் செய்துவைக்கக் கோரினார். இதை,

மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்துஅருளும் காதல் உடையீர் அடியே னுக்கு
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்துஎன் உள்ளத் தொடை அவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்துஎன் வருத்தம் தீரும்என (232)

எனும் பாடலில் கூறுகிறார் சேக்கிழார்.

சங்கிலியாரின் வேண்டுகோளின்படி இறைவன், சுந்தரரிடம் சங்கிலியாரைப் பிரியமாட்டேன் எனச் சத்தியம் செய்யவேண்டும் என்றார். இறைவன் ஏற்கெனவே சங்கிலியாரிடம் சுந்தரன் உன்னை விட்டுப் பிரியாமல் இருக்க சபதம் செய்வான் எனக் கூறியிருந்தார். சுந்தரர் இறைவனிடம் பெருமானே நான் சத்தியம் செய்யும்போது நீ மகிழ மரத்தின் அடியில் இரு என்றார். பெருமான் உடன்பட்டார்.

Koviloor Digital Library

பெருமான் சங்கிலியார் கனவில் தோன்றி, "சங்கிலியே நீ ஆரூரனது சத்தியத்தை மகிழ மரத்தடியில் பெற்றுக்கொள்" என்றார். மறுநாள் மகிழ மரத்தடியில்தான் சத்தியம் செய்யவேண்டும் என்று சுந்தரரிடம் சங்கிலியின் தோழியர் கூறினர். அப்போதுதான் சுந்தரருக்குப் பெருமானின் திருவிளையாடல் தெரிந்தது. வேறு வழியின்றிச் சத்தியம் செய்தார். பிறகு இருவருக்கும் திருமணம் நடந்தது. சிலநாளில் சுந்தரருக்குச் சங்கிலியாரிடம் இருந்த அன்பைவிடத் திருவாரூர் இறைவன்பால் அன்பு பெருகியது.

பார்வை இழப்பு

திருவாரூர் இறைவன் மீதான அன்பு மேலிட, சுந்தரர் ஆரூர் புறப்பட்டார். திருவொற்றியூர் எல்லை கடந்ததும் **பிரியலம் என்ற சொல்** (சத்தியம்) பொய்த்ததால் பார்வை இழந்தார். இருப்பினும் அடுத்தவர் துணையுடன் பயணப்பட்டார். **திருமுல்லைவாயில்** சென்றார். ஊன் உருகச் சுந்தரர் பாட, திருவெண்பாக்கத்தில் அவருக்குக் கைத்தடி (ஊன்றுகோல்) கிடைத்தது. அதன் உதவி கொண்டு **திரு ஆலங்காடு, திருஊறல்** ஆகிய தலங்கள் சென்றார்.

அடுத்து, **காஞ்சி** சென்றார். அங்கு இறையருளால் இடக்கண் பெற்றார். பிறகு திருவாரூர் சென்றார். செல்லும் வழியில் **திருஆமாத்தூர்** சென்று வழிபட்டார். திருஆமாத்தூரிலிருந்து புறப்பட்டு திருஅரத்துறை சென்றார். அடுத்து, திருத்துருத்தி சென்றார். அடுத்துத் **திருவாரூர் பரவையுண் மண்டளிக் கோயில்** சென்றார். அங்கிருந்து திருவாரூர் பெருமானிடம் நாரைகளைத் தூதுவிடும் நாயகி பாவத்தில் பாடினார். அடுத்து, தேவாசிரிய மண்டபம் அடைந்தார். அங்கு இறைவனை வேண்டினார். மூன்று கண்களையுடைய பெருமானே திருவாரூரில் **வாழ்ந்து போதீரே** எனப் பாடினார். இரு கண்களிலும் ஒளிபெற்றார்.

சங்கிலியாரைச் சுந்தரர் திருவொற்றியூரில் திருமணம் செய்து கொண்டதை அறிந்த பரவையார் சுந்தரர்மீது வெறுப்புக் கொண்டார். அதைத் தீர்க்கப் பெருமானைத் தூது அனுப்பினார் சுந்தரர். தம் திருப்பாதம் திருவாரூர்த் திருவீதிகளில் தோய இருமுறை நடந்து இருவரையும் இணைத்து வைத்தார் இறைவர்.

சுந்தரர் பரவையாரோடு இணைந்து மகிழ்ச்சியோடு இல்லறம் நடத்தினார். இந்த இல்லறக்காட்சியோடு ஏயர்கோன் கலிக்காமர் வரலாற்றில் இடம் பெற்றுள்ள சுந்தரர் வரலாறு நிறைவு பெறுகிறது.

அருள்மிகு சொக்கநாயகி உடனுறை சிவலோகநாதர்
சிவலோகநாதர் திருக்கோயில்
திருப்புன்கூர் (அ.கு.) 609 112
சீர்காழி வட்டம், நாகை மாவட்டம்

Koviloor Digital Library

51. திருமூலர்

(28 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	சிவயோகி - கயிலையில் இருந்து வந்தவர் மூலன் - சாத்தனூர் (திருவாவடுதுறைக்கு அருகில்)
குலம்	:	சிவயோகியாருக்குக் குலம் இல்லை. மூலன் - இடையர்
குருபூசை மாதம்	:	ஐப்பசி
மூலன் நட்சத்திரம்	:	அசுவினி
காலம்	:	அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்டவர். கி.பி. 300-600.

'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' (திரு.தொகை-5:3)

வரலாறு

சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையின் காவலராக விளங்கும் நந்தியம்பெருமானின் திருவருள் உபதேசத்தைப் பெற்ற சிவயோகி ஒருவர் இருந்தார். இவர் அணிமா முதலான எட்டுவகை சித்திகளும் கைவரப் பெற்றவர். தமிழ்வல்ல அகத்திய முனிவரிடம் நட்புமிக உடையவராயிருந்ததனால் சிலநாள் தங்கி இருப்பதற்காகப் பொதிகைமலை சேர்தற்பொருட்டுத் தமிழ்நாட்டிற்கு வருகிறார். கயிலை மலையில் இருந்து புறப்பட்ட இவர் 1. கேதாரம், 2. பசுபதி நேபாளம், 3. காசி (வாரணாசி), 4. திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), 5. திருக்காளத்தி, 6. திருவாலங்காடு, 7. காஞ்சிபுரம், 8. திருவதிகை வீரட்டானம் (கடலூர் மாவட்டம் பண்ருட்டிக்கருகில் உள்ளது.), 9. பெரும்பற்றப் புலியூர் என்றும் தில்லை என்றும் வழங்கப்படும் சிதம்பரம், 10. திருவாவடுதுறை ஆகிய தலங்களில் தங்கி வழிபாடு செய்தார்.

திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள அந்தணர்கள் மிகுதியாக உள்ள சாத்தனூரில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த மூலன் எனும் இடையன் வினைப்பயனால் இறந்துபட அவனுடலைச் சுற்றிப் பசுக்கள் கதறிக் கொண்டு நிற்கின்றன. இதனைக் கண்டு இரக்கப்பட்ட சிவயோகி மூலன் உடம்பில் தம் உயிர்ப்பைப் பாய்ச்சினார். உயிர்த்தெழுந்த மூலன் திருமூலராக நிலைபெறுகிறார்.

Koviloor Digital Library

சிவயோகியார் தாம் வந்த பணிக்குச் சென்றிட ஞான முற்றுணர்வு எய்திடப் பெற்ற மூலன் திருமூலராகிறார். திருமூலர் மூலனின் மனைவிக்கும் சுற்றத்தாருக்கும் உண்மையை உணர்த்திவிட்டுத் திருவாவடுதுறை செல்கிறார்.

முற்றுணர்வு கூடிய இந்த மெய்ஞ்ஞானம் தமக்குக் கிடைத்ததை ஆராய்ந்தார். சிவபிரானின் அருளாலே தோன்றிய சிவாகமங்களின் பொருளை மண் உலகில் தம் திருவாக்கினால் தமிழில் எழுதுவதற் காகத் திருவருளே இச்செயலைச் செய்தது என உணர்கிறார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

எனத் திருமூலரே கூறியிருக்கிறார்.

திருவாவடுதுறை கோயிலின் மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்த உயர்ந்த அரசமரத்தின் கீழ் சிவராச யோகத்தில் அமர்ந்து தம்முடைய உள்ளக் கமலத்தில் உறைந்தொளிரும் பொருளோடு உணர்ந்து ஒன்றினார். தாமரைப் பூவைப் போல மலர்ந்து அறிவு மணம் வீசும் இதய கமலத்தில் உறைந்திருக்கும் மெய்ப்பொருளோடு இணைந்து உலகம் உய்வதற்காகச் **சரியை - கிரியை - யோகம் - ஞானம்** ஆகிய நான்கு நெறிகளையும் விரித்து ஆண்டுக்கு ஒன்றாய்ப் பாடி முடித்தார். **'ஒன்று அவன் தானே'** என முதல் பாட்டை எடுத்துப் பாடினார். இந்த வகையில் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்து மூவாயிரம் பாடல்களை மண்மீது பாடி அருளினார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளையும் விரிவாகப் பேசிய திருமூல நாயனாரின் திருவடிகளை வணங்கி, திருமூல நாயனார் புராணத்தை நிறைவு செய்கிறார் சேக்கிழார்.

தில்லை (சிதம்பரம்)

தில்லை, சிற்றம்பலம், பொன்னம்பலம் எனப்படும் சிதம்பரத்தில் மட்டும் சிவயோகியார் உருகி, உருகி நிற்கிறார். பேரின்பப் பெரும்பொருள் அந்த இடத்தில்தான் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறது. உலகமும் உலக உயிர்களும் உய்யும்படியாகத் தன்னுடைய ஞானமாகிய தூக்கிய திருவடியை உடைய சிவபெருமான் முன், சிவயோகியார் மிக்க அன்போடும் மிக்கெழும் மகிழ்ச்சியோடும் நின்று உருகி வழிபட்டார். மெய்யுணர்வு மிக்கு, சிவபோக நிலையில் திளைத்து, சிவானந்த அருட்கூத்தை முழுதும் கண்டு பதி ஞானத்தில் ஒன்றினார். உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து ஆராக் காதலுடன் தில்லையில் வழிபட்டார். இதனை,

Koviloor Digital Library

எவ் உலகும் உய்ய எடுத்து அருளிய சேவடியாரைச்
செவ்வியஅன்பு உறவணங்கிச் சிந்தை களிவரத் திளைத்து
வவ்விய மெய் உணர்வின்கண் வரும் ஆனந்தக் கூத்தை
அவ் இயல்பில் கும்பிட்டு அங்கு ஆராமை அமர்ந்திருந்தார். (7)

எனத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவதிலிருந்து மேற்சுட்டிய உண்மையை உணரலாம். நந்தியம்பெருமானுக்கு உபதேசம் செய்தருளிய பெரிய மெய்ஞ்ஞானக் கூத்தர் திருச்சிற்றம்பலத்தில் ஞானக்கூத்து ஆடிக்கொண்டே இருப்பதால், சிவயோகியார் தன்னை மறந்து தன் நாமம் கெட்டு நின்றார் என்பதே உண்மை.

பிறவித் தொடர்பை நச்சுத் தொடர்பு (விஷத் தொடர்பு) எனக் கூறுகிறார் தெய்வச் சேக்கிழார். திருமூலர் இந்தப் பிறவி வேரை அறுப்பதற்காகச் **சரியை, கிரியை, யோகம், ஞானம்** ஆகிய நான்கையும் ஆண்டுக்கு ஒன்றாக இறையருளால் வழங்கினார். இதனை,

ஊன் உடம்பில் பிறவிவிடம் தீர்ந்து உலகத்தோர் உய்ய
ஞானம் முதல் நான்கும் அலர் நல் திரு மந்திர மாலை
பான்மை முறை ஓராண்டுக்கு ஒன்று ஆகப் பரம்பொருள் ஆம்
ஏன எயிறு அணிந்தாரை 'ஒன்று அவன்தான்' என எடுத்து (26)

என்னும் பாடல் வழி அறியலாம். இப்பாடலில் நான்கு உண்மைகள் பொதிந்துள்ளன.

அ. பிறவிப் பிணியாகிய பிறவித் தொடரை நச்சுத் தொடர்,விஷத் தொடர் எனக் குறிப்பிடுகிறார். இதனால்தான் இந்த விஷத் தொடர்புள்ள மூலனை அந்த விஷத் தொடர்பை அறுத்துப் பிறவா யாக்கைப் பெரியோனாக, கயிலையில் இருந்து வந்த சிவயோகி மாற்றினார். சித்திகளுள் ஒன்றான கூடுவிட்டுக் கூடு பாய்தல் நிகழ்ந்த பின்னர் மூலன் திருமூலர் ஆகிறார்.

ஆ. உலகில் தோன்றிய எல்லாச் சமயங்களும் தம்முடைய ஞானம் முழுமையையும் **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்ற நான்கு பிரிவுகளுக்குள் அடக்கிவிடும். இஸ்லாம் இதனை **ஷரீகத், தரீக்கத், ஹரீக்கத் மஃறீபத்** எனக் கூறும். திருமூலர்பிரான் அருளிய திருமந்திர மாலையில் உள்ள மூவாயிரம் பாடல்களும் **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்ற நான்கு நெறிகளுக்குள் அடங்கிவிடும்.

இ. **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்ற இந்த நான்கையும் ஆண்டுக்கு ஒன்றாகப் பாடினார் என்று தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவதால், நான்காண்டுகளில் திருமந்திர மாலை

Koviloor Digital Library

முழுமையும் பாடி முடித்து விட்டார் எனலாம். எனவே, முதலாமாண்டு சரியை, இரண்டாமாண்டு கிரியை, மூன்றாமாண்டு யோகம், நான்காமாண்டு ஞானம் என்று **நான்கு ஆண்டுகளில் திருமந்திர மாலை என்ற நூலின் மூவாயிரம் பாடல்களையும் திருமூலர் பாடி முடித்து விட்டார்** என்றே தெய்வச் சேக்கிழாரின் திருப்பாடல் உணர்த்துகிறது. ஓராண்டிற்கு ஒரு பாடல் என மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்களைப் பாடினார் எனக் கூறுதல் பொருந்தாமை என்பதை அறிவுடையோர் அறிவர்.

ஈ. **'ஒன்று அவன் தானே'** என்ற பாடல் திருமந்திரத்தின் முதல் பாடல் என்றும் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

"நலம்சிறந்த ஞானயோகக் கிரியை சரியைஎலாம்
மலர்ந்தமொழித் திருமூல தேவர்மலர்க் கழல்வணங்கி" (28)

உயிர்களுக்கு நன்மையளிக்கக் கூடிய **ஞானம், யோகம், கிரியை, சரியை** என்ற நான்கையும் திருமூலர்பிரான் வழங்கினார் என மீண்டும் ஒருமுறை நிறைவாகத் தெய்வச் சேக்கிழார் சொல்லுகிறார்.

மூவாயிரம் ஆண்டுகள் திருமூலர்பிரான் இம்மண்மேல் வாழ்ந் திருந்தார் என்கிறார் தெய்வச் சேக்கிழார். இதன் பொருள் திருமூலரின் பாடல்களில் உணர்த்தப்பெற்றுள்ள திருமந்திரப்பொருள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலும் இம்மண்ணுலகில் நிலைத்து வாழும் என்பதே. இப்படிப் பொருள் கொள்வதே அறிவுடைமை. பொருள் உணர்ந்தவர்களுக்குப் பொருளின் பொருள் தெரியும்.

இறுதியாக ஒரு சொல்

கயிலையிலிருந்து வந்த சிவயோகியாரின் பெயரை ஓரிடத்தி லேனும் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடவில்லை. பசுக்களை மேய்த்த மூலனின் உடம்பில் சிவ யோகியார் தம் உயிராற்றலைச் செலுத்திய பிறகு மூலனே திருமூலராக மாறுகிறார். மூலனாக இருந்து திருமூலராக ஆனவர்தான் திருமந்திர மாலையை அருளியவர். கயிலையில் இருந்து வந்த சிவயோகி அல்லர். திருமந்திரத்தை அருளியவர் திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள சாத்தனூரில் பிறந்தவர். சிவயோகியார் அருளால் ஞானம் பெற்றவர்.

1. தெய்வச் சேக்கிழார் சொல்லாத ஒரு செய்தி திருமூலர் பிரான் எங்கே அடக்கமாகி (ஜீவ சமாதி) இருக்கிறார் என்பது. சைவ மரபில் வரும் சான்றோர்கள் திருமூலர் திருவாவடுதுறை கோயிலுக்குள்ளே அடக்கமாகி இருக்கிறார் எனக் கருதி

Koviloor Digital Library

அங்குள்ள அவரது திருக்கோயிலில் வழிபாடு செய்து வருகின்றனர்.

2. சித்தர் மரபில் வருகிறவர்களும் மெய்ப் பொருளைக் காண்பதற்கு முயல்பவர்களும் திருமூலர் பிரான் தில்லை என்று வழங்குகிற சிதம்பரத்தில் அடக்கமாகி இருக்கிறார் என உணர்ந்துரைக்கிறார்கள். இன்றும் நிறைமதி நாளில் (பௌர்ணமி) சித்தர் நெறியில் வாழ்கின்றவர்களும் மெய்ஞ்ஞானத் தேட்டம் உள்ளவர்களும் சிதம்பரத்தில் உள்ள **ஆதி மூல நாதர்** சந்நிதியில் தியானம் செய்வதைக் காணலாம்.

அவரவர் விதிவழி அடைய நின்றனரே என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கேற்ப அவரவர்க்குரிய இடத்திற்குச் சென்று திருமூல நாயனாரின் திருவருளைப் பெற்று உய்தி பெறுக! உணர்வு பெறுக!! உயிர்ப்பு எய்துக!!!

அருள்மிகு மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்
திருவாவடுதுறை (அஞ்சல்) – 609 803, நரசிங்கன்கோட்டை (வழி),
மயிலாடுதுறை RMS, நாகப்பட்டினம் மாவட்டம்.

அருள்மிகு நடராசப்பெருமான் (சபாநாயகர்) திருக்கோயில்
சிதம்பரம் (அஞ்சல்) – 608 001, சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்.

Koviloor Digital Library

52. திருமந்திரம்

(3047+61=3108 பாடல்கள்)

திருமூலர்பிரான் அருளிச்செய்தவை மூவாயிரம் பாடல்கள் என்ற வழக்கு தற்பொழுது வழக்கில் உள்ளது. ஆனால் அச்சிட்டு வெளிவந்துள்ள நூல்களில் 3047 பாடல்கள் உள்ளன. சில பாடல்கள் இரண்டுமுறை வருவதால் பதிப்பிற்குப் பதிப்பு பாடல்களின் எண்ணிக்கை வேறுபடுகின்றது. திரு மந்திரம் 1000 என்ற நூலும் வைத்தியம் தொடர்பாக வெளி வந்துள்ளது. திருமூலர் 300 மந்திரப் பாடல்களை அருளியதாகக் குறிப்புக் காணப்படுகிறது. அவை எவை என அறியமுடியவில்லை. ஆனால் அனைத்தும் ஒரே பொருளைக் குறிப்பன என்பது திண்ணம்.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும்ஒன் றாமே ***(திரும. 3046)***

என்னும் திருமந்திரப்பாடல் திருமூலர்பிரான் அருளியதா அல்லது வேறொருவர் அருளியதா என்பதை அறிய முடியவில்லை. இறுதியாகத் திருமூலர் தம்குருபிரானுக்கு வணக்கம் கூறி வாழ்த்துரைக்கின்றார்.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. ***(திரும. 3047)***

எனத் தம்முடைய குருவின் திருவடி, பதம், தாள், பாதம் ஆகிய வற்றைக் குறிப்பிட்டு வாழ்த்தி, வணங்குகின்றார். திருவடி,தாள், பாதம், நற்றாள், மலரடி, அடி எனக்குறிக்கப் பெறுபவை அனைத்தும் அறிவுவடிவாக விளங்கும் குருபரனைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்ற சொற்கள். ஒரு பொருளைக் குறிக்க வந்த பல சொற்கள். சிவமே குருவடிவாக வந்து ஞானத்தை அருளுவதால் இவ்வாழ்த்து சிவத்திற்கும் கூறப்பட்டதாகக் கொள்ளுதல் பொருந்தும். ஒன்பது தந்திரங்களில், இருநூற்று முப்பத்திரண்டு அதிகாரங்களில் 3047 பாடல்களைக் கொண்டு இந்நூல் திகழ்கிறது. சைவத் திருமுறையில் பத்தாம் திருமுறையாக இந்நூல் சேர்க்கப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

திருமந்திரம் ஓர் அனுபவ நூல். முயற்சியோடு கூடிய பயிற்சியால் பெறும் அனுபவ அறிவால் உணரக்கூடிய நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரத்தில் உள்ள மூவாயிரத்து நாற்பத்தேழு பாடல்களும் திருமூலரின் அனுபவ வெளிப்பாடாகும். இந்நூலை ஒவ்வொருவரும் அவரவர் அனுபவத்திற்கேற்ப அறிந்து கொண்டு வருகின்றனர். இந்நூலைப் பக்திநூல் என்றும், சாத்திரநூல் என்றும், வேதாந்தநூல் என்றும், தாந்திரிகநூல் என்றும், ஞானநூல் என்றும் அவரவர் உணர்திறனுக்கேற்ப உரைத்து வருகின்றனர். இதனைத் தனித்தமிழ் ஆகமம் என்றும் கூறுவர். அறிஞர்கள் பலர் திருமந்திரத்தை வாழ்க்கைக்கு வழி காட்டும் நூலாக உணர்ந்து உரைத்து இருக்கின்றார்கள். ஞான நூலாகவும் சித்தாந்த நூலாகவும் போற்றப்பெறும் திருமந்திரத்தினை வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாக உணர்ந்து போற்றினால் பயன் பெறலாம்.

மந்திரம் என்பதற்கு நினைப்பவரைக் காப்பது என்பது பொருள். திருமந்திரப் பொருளை ஒருவர் நினைவில் ஒட்ட வைத்துக் கொண்டால் அவரை வாழ்நாள் முழுமையும் காக்க வல்லது திருமந்திரம். திருமந் திரத்தில் உபதேசம் எனும் தலைப்பில் தரப்பெற்றுள்ள முப்பது பாடல்களின் விளக்கமாகவே ஏனைய மூவாயிரம் பாடல்களும் அமைந்துள்ளன. உபதேசப் பகுதியிலுள்ள பாடல்களை ஒருவர் ஊன்றிப் படித்து உணர்ந்து தெளிந்தால் அவரே மந்திரமாகி விடுவார்.

இதனை,

யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே (திரும. 85)

என உரைத்திருப்பது உணரத்தக்கது. உடலுக்குள் உணர்வாக உள்ள இம்மந்திரத்தை ஒருவர் இடையறாது பற்றிக் கொண்டால் வான்பற்றி நின்ற மறைப் பொருளான சிவம் வந்து அவரிடம் பொருந்திவிடும் என்பது கருத்து,

நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே(திரும. 2770)

புருவ மத்தியில் காணப்படும் இடைவெளிதான் தில்லைத் திருச்சிற்றம்பலமாகும். அங்குதான் பரம் பொருளாகிய சிவம் சோதி வடிவாக ஒளிர்கின்றது.

Koviloor Digital Library

இப்படி ஒளிவிடுகிற மந்திரம் ஓங்காரத்திற்குள்ளே ஒடுங்கியுள்ளது. அந்த ஓங்காரத்திலிருந்துதான் அண்டம் பிண்டம் ஆகிய அனைத்தும் கருவாகி, உருவாகி, பயிராகி, வளர்ந்து, வாழ்ந்து மறைகின்றன.

இதனை,

ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே *(திரும.2676)*

ஓங்காரத் துள்ளே யுதித்தஐம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே *(திரும.2677)*

எனத் திருமூலர் நுட்பமாக உணர்த்துவது உணரத்தக்கது. இந்த ஓங்காரப் பொருளை உணர்ந்து உயிரின் ஆற்றலைத் தெளிந்து முத்திபெறுவது எவ்வாறு? அஞ்ஞானம் எனும் திமிரத்தால் நம்முடைய கண்கள் குருடாய் இருக்கின்றன. அகக் கண்களை மறைத்திருக்கும் அஞ்ஞானமென்னும் அறியாமைத் திரைகளை மெய்ஞ்ஞானக் குருபரனின் அருளினால்தான் அகற்ற முடியும்: அகற்றி, உன் அறிவாகிய உயிரைப் பார் எனக் காட்ட முடியும். குருபிரான் தயவின்றி அகங்காரம் அடங்காதே!

அடங்காத என்னை அடக்கி அடிவைத்து
இடங்காண் பரானந்தத் தேயென்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான் செய்துள்ளூட் படிந்திருந் தானே *(திரும.2741)*

எனத் தம் அனுபவத்தினை உரைத்து அருளியிருக்கிறார். ஐம்பொறிகள் வழியாக அடங்காமல் ஆடிக்கொண்டிருந்த மனத்தை அடக்கி, அறிவாகிய திருவடி என்னுள் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுத்து (இடம் காண்), அதனால் பரானந்தமாகிய பேரின்பத்தில் என்னைத் திளைக்கச் செய்து, ஞான நடனத்தைப் புரியும் கூத்தனாகிய என் குருபிரான் அசைவற்ற நிலையில் இருக்கும் (குண்டலி அதனில் கூடிய அசபை–ஔவையார் அருளிய விநாயகர் அகவல்:41–ஔவையார் தாம் அருளிய ஞானக் குறளிலும் அஜபா நலமெல்லாம் அருளி எனக் கூறியிருப்பதை ஊன்றி உணர்க) சித்திரம் போல் என்னை நிட்டையில் இருக்கச் செய்தான் என்னும் செய்தியை இப்பாடலில் திருமூலர்பிரான் கூறியருளியிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

குருவருளால் தன்னையறிந்த சீவன் தானே அதுவாக இருப்பதை உள்ளத்தால் உணர்கிறது. உணர்வுடையார் உணர்ந்து உணர்ந்து உய்திபெறுக.

நமசிவாய	–	தூலம்
சிவாயநம	–	சூக்குமம்
சிவாய	–	அதி சூக்குமம்
சிவசிவ	–	காரணம்
சி	–	மகா காரணம் (நாயோட்டு

மந்திரம்) **சி** கரத்தில் ஏற்றி என்னைச் சிவமாக்கிக் கொண்டது பாரீர் (வடலூர் வள்ளற்பிரான்)

யோகச் சக்கரங்கள் குறித்தும் எண்வகை யோகங்கள் குறித்தும் முதன்முதலில் கூறியவர் திருமூலரே. சூன்ய சம்பாஷணை எனும் தலைப்பில் இவர் கூறியுள்ள செய்திகள் இவருக்கு முன்னும் பின்னும் எவரும் சொல்லாதவை.

கலிவிருத்தம் : தமிழ் இலக்கியத்தில் முதன்முதலில் கலிவிருத்த யாப்பினைப் பயன்படுத்தியவர் இவரே.

வாழ்வியல் செய்திகள்: பொய்யாமை, பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை அன்புடைமை என 25 அதிகாரங்களில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் போன்று வாழ்வியல் அறங்களைக் கூறுகின்றார்.

அன்பே சிவம் : உயிராகவும், ஒளியாகவும் அறிவாகவும் ஊனுடம்பிற்குள்ளே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது சிவம். அந்தச் சிவபரம்பொருளை அன்பினால் மட்டுமே உணரமுடியும்.

தன்னை அறிதல் : தன்னை அறியும் அறிவு இருந்தால் மனிதனுக்குக் பிறவித் துன்பம் இல்லை என்கிறார். தன்னை அறிதலே ஞானம்.

உடல் போற்றல் : சித்தர்கள் உடலைப் பழிக்கின்றனர். ஆனால் திருமூலர் போற்றுகிறார். உடல்வழியாகத்தான் உயிரை அறிந்து, உயிராக நம்முள் ஒளிரும் இறைவனைக் காணமுடியும் என்கிறார்.

குரு நெறி : குருவே சிவமாகும் என்று கூறுகிறார். குருவின்றி இறையருளைப் பெற இயலாது என்பது சித்தர் நெறி. தொட்டுக்காட்டிக் கனலை எழுப்பி, முச்சுடரை அறிந்து அதனுடன் ஒன்றுவதே சித்தர் இறைநெறி.

Koviloor Digital Library

சக்கரம் : நான்காம் தந்திரத்தில் திருமூலர் கூறியுள்ள சக்கரங்கள் பற்றிய விரிவான செய்திகள் இவருக்கு முன்னும் தமிழிலக்கியத்தில் யாரும் கூறவில்லை. பின்னும் கூறவில்லை.

திருமூலரின் முடிந்த முடிபு.....

அன்பு, சிவம் என்பவை இரண்டு பொருள் அல்ல. அன்பு தான் சிவம். சிவம்தான் அன்பு. இந்தப் பேருண்மையை உணர்ந்தவரே ஞானியர். அவர்களே கடவுள் நிலைபெற்றவர்கள்.

அன்பும் சிவமும் இரண்டுஎன்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே ***(திரும. 270)***

என்கிறார் திருமூலர்பிரான். அறிவுதான் கடவுள். சுத்த அறிவே சிவம் எனப் பல இடங்களில் விளக்கம் அளித்துவிட்டு இறுதியில் அன்பே சிவம் எனக் கூறுவது முரண்போலத் தோன்றலாம். இரண்டும் ஒன்றே. நாணயத்தின் இருபக்கம் போல அறிவும் அன்பும் ஒன்றுக் கொன்று சார்புள்ளவை. அன்பு என்பது பேரறிவின் வெளிப்பாடு; பயன்.

“ஞானம் ஈசன் பால் அன்பே’ என்பது சேக்கிழார் வாக்கு. செயலற்ற நிலையில் பெருவெளியாய் இருக்கும் சிவத்தின் இருப்பு நிலைக்கு அறிவு என்று பெயர். சிவம் செயல் நிலைக்கு வரும்போது சக்தி எனும் பெயர் பெறுகிறது. இயக்கமாக மாறும் சக்தியின் இயல்பு அன்பு. அம்மா அன்பின் வடிவம். அப்பா அறிவின் வடிவம். இருவரும் ஒருவரே. சிவசக்தி—அம்மையப்பர்—உமையொருபாகர் அனைவரும் ஒருவரே. இன்னும் சற்றுத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் உலகிற்கு இரு கண்களாய் இருப்பது சிவசக்தி (இடப் பக்கமாக இருப்பது அறிவாகிய சிவம். வலப்பக்கம் இருப்பது அன்பாகிய சக்தி.) இருவரையும் இணைத்துப் பார்ப்பது சித்தர் நெறி. இணையாமல் இருப்பது மானுட நெறி. உணர்வுடையார் உணர்க. உணர்ந்து உய்திபெறுவதே திருமூலர் நெறி.

Koviloor Digital Library

53. தண்டியடிகள்

(26 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	**திரு ஆரூர்**
குலம்	:	**தெளிவில்லை**
குருபூசை மாதம்	:	**பங்குனி**
நட்சத்திரம்	:	**சதயம்**
காலம்	:	**அப்பர், சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 – 600)**

நாட்ட மிகு தண்டிக்கும் (மூர்க்கற்கும்) அடியேன். (திரு.தொகை. 5:3)

தண்டியடிகள் திருஆரூரில் பிறந்த தவமுடையவர். அகக் கண்ணால் இறைஞானம் நோக்கும் பேறு பெற்றவர். புறக்கண் காண முடியாத மெய்த்தொண்டர். திரு ஆரூர்த் தியாகராசப் பெருமான் திருஅடிக்கே அன்பு பூண்டவர். நாள்தோறும் அடியார்கள் நிறைந்த திரு ஆரூர்த் தேவாசிரிய மண்டபத்தை வலம் வருவார். அடியார் களைத் தேவாசிரியனாகிய வியாழபகவானாகத் தண்டியடிகள் மதித்துப் போற்றினார். நமசிவாய என்ற ஐந்தெழுத்தோதி நாளும் சிவனடி சிந்திப்பர். நமசிவாய என்ற மந்திரத்திலும் சிவாய நம என்ற மந்திரத்திலும் யகரமாகிய ஆன்மா 'சிவ' என்ற திருப்பெயரோடு ஒட்டி இருத்தல் காண்க. யகரம் முப்பெரும் கோடுகள் கொண்ட எழுத்து. ஆணவம் கன்மம் மாயை என்ற முப்பெரும் மலங்கள் ஒட்டியது ஆன்மா.' அம்மலங்கள் இறைஞானத்தால்தான் ஆன்மாவை விட்டு விலகும்' என்பதன் பொருள் ஐந்தெழுத்து மந்திரத்தில் தெளிவாகும். ஐந்தெழுத்து மந்திரம் உடலையும் உள்ளத்தையும் புனிதப்படுத்தும்.

எல்லாம் வல்ல இறைவனது மெய்த்தொண்டு ஒன்றினையே காண்பதற்குரிய கண்ணால் காணவேண்டும் என்ற கருத்து கொண்டவர் தண்டியடிகள். பேணுவதற்குரிய திருவாரூரில் கோயில் கொண்ட சிவபெருமானின் திருவடிகளையே விரும்பிய அன்பினால் வழிபடுபவர். அந்நிலையை விரும்பித் தேவர்கள் அறிவதற்கு அரிய திருத்தொண்டில் சிறந்து விளங்கினார். இக்கருத்தைச் சேக்கிழார் பெருமான்,

Koviloor Digital Library

காணும் கண்ணால் காண்பதுமெய்த் தொண்டேஆன கருத்து உடையார்
பேணும் செல்வத் திருஆரூர்ப் பெருமான்அடிகள் திருவடிக்கே
பூணும் அன்பி னால்பரவிப் போற்றும் நிலைமை புரிந்துஅமரர்
சேணும் அறிய அரியதிருத் தொண்டின் செறியச் செறிந்துஉள்ளார் (2)

எனும் பாடலில் கூறியுள்ளார்.

திரு ஆரூர்க்குளத்தில் திருத்தொண்டு

இறைவனது திருமுழுக்கிற்குரிய புனிதநீர்தங்கும் திருஆரூர்க் குளம், குளக்கரையில் அமைந்த சமணப் பாழிகளால் பொலிவிழந்து இருந்தது. எனவே திரு ஆரூர்க் குளத்தைத் தூர்வாரித் தொண்டாற்ற எண்ணினார். குளத்தின் நடுவிலும் குளக்கரையிலும் கோல்களை நட்டு ஒரு கயிற்றால் அவற்றை இணைத்தார். தூர்வாரிய மண்ணைக் கரையில் கொண்டு வந்து கொட்டினார். ஐம்பொறிகளில் ஒன்றிழப் பினும் பழியாகாது. அறிவன அறிந்து கடமை செய்யாமையே பழி என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மைபழி (குறள் : 618)

உடல் ஊனத்தை உலகம் பெரிதாகக் கருதாது. உள்ளத்தின் ஊனமே உலகால் பழிக்கப் பெறும். தண்டியடிகள் புறக்கண் இல்லா விடினும் தொண்டில் குறையாத தன்மைபெற்று விளங்கினார். திருத்தொண்டினைப்பழித்த சமணர்களிடம் உலகநலத் தொண்டு ஒன்றே அறமும் கடமையுமாகும் என்றுரைத்தார்.

மாசுசேர்ந்த முடைஉடலார் மாற்றம் கேட்டு மறுமாற்றம்
தேசு பெருகும் திருத்தொண்டர் செப்பு கின்றார் திருஇலிகாள்
பூசுநீறு சாந்தம்எனப் புனைந்த பிரானுக்கு ஆனபணி
ஆசுஇலா நல் அறம்ஆவது அறிய வருமோ? உமக்குஎன்றார். (7)

சமணர் உடலும் உள்ளமும் மாசு சேர்ந்தவை என்கிறார் நாயனார். மாசில்லாத நிலை அறம் என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் கோட்பாடு.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (குறள் 34)

சமணர் அடிகளை இகழ்தல்

'நல்லறம் கேளா அறிவிலி! செவியும் இழந்தாயோ, காணாக் கண் கொண்ட நீ என் செய இயலும்' எனச் சமணர் அடிகளை இகழ்ந்தனர். "நும்கண்குருடாக எம் கண் உலகெல்லாம் காண

Koviloor Digital Library

இறைவன் செய்தால் என் செய்வீர்"; என அடிகள் சமணரை வினவினார். "நீர் கண்பெறின் நாங்கள் இங்கிருந்து அகல்வோம்" என்று சமணர் கூறிக் கயிற்றை அகற்றிக் கோல்களையும், மண் வெட்டியையும் பறித்தனர்.

தண்டியடிகள் இறைவனிடம் முறையிட்டு அழுதார். சிவனார் தண்டியடிகள் கனவில் தோன்றி, 'கவலை ஒழிக'. சமணர் கண்மறையும்" என்றுரைத்தனர்.

இறைவன் மன்னன் கனவிலும் தோன்றி நிகழ்ந்ததை உரைத்தல்

நெஞ்சில் மருவும் கவலையினை ஒழிநீ நின்கண் விழித்துஅந்த
வஞ்ச அமணர் தம்கண்கள் மறையு மாறு காண்கின்றாய்
அஞ்சவேண்டா என்றருளி அவர்பால் நீங்கி அவ்இரவே
துஞ்சும் இரவில் அரசன்பால் தோன்றிக் கனவில் அருள்புரிவார். (13)

தண்டி நமக்குக் குளம்கல்லக் கண்ட அமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க வெகுண்டான் அவன்பால் நீமேவிக்
கொண்ட குறிப்பால் அவன் கருத்தை முடிப்பாய் என்று கொள அருளித்
தொண்டர் இடுக்கண் நீங்க எழுந்தருளி னார்அத் தொழில்உவப்பார் (14)

மன்னனும் தண்டியடிகளும்

மன்னன் தண்டியடிகளிடம் நிகழ்ந்தது வினவினான். "திருக்குளத் திருத்தொண்டுக்கு உதவும் மண் வெட்டியைப் பறித்துக் கொண்டு கயிறறுத்துக் கோல்களையும் பறித்தனர். சிவனருளால் கண் பெற்றால் சமணர்களாகிய யாம் இவ்வூரில் இருக்க மாட்டோம்" என்றும் உரைத்தனர்" என்று அடியார் மன்னனிடம் கூறினார். மன்னன் சமணரை அழைத்துக் கேட்க அவரும் உண்மையை ஒப்புக் கொண்டனர்.

தண்டியடிகள் கண் பெறல்

கண்பெற இறைவனை வேண்டுக என்ற மன்னனின் வேண்டு கோளுக்கிணங்க அடிகள் இறைவனிடம் வேண்டினார். திருக்குளம் மூழ்கி நீராடித் தண்டியடிகள் கண் பெற்றார். சமணர்கள் கண் இழந்தனர். பீலி, கோல் காணாது குழியில் கை கால்கள் முறிய வீழ்ந்தனர்.

பீலி தடவிக் காணாது பெயர்வார் நின்று பேதுறுவார்.
காலி னோடு கை முறியக் கல்மேல் இடறி வீழ்வார்கள்
சால நெருங்கி எதிர்எதிரே தம்மில் தாமே முட்டிடுவார்.
மாலும் மனமும் அழிந்துஓடி வழிகள் அறியார் மயங்குவார். (23)

Koviloor Digital Library

'மயங்குவார்' என்ற இறுதி ஈரசைச்சீர் இம்மை மறுமை இன்ப உணர்வின்றி வருந்தும் சமணரின் அறியாமை மயக்கத்தை உணர்த்துகின்றது.

திருவாரூரில் இருக்கின்ற சமணர்களின் கலக்கத்தைக் கண்ட மன்னன் சமணர்களே சபதம் செய்து சம்மதித்தவாறு சமணர்களை ஊரில் இல்லாதவாறு ஓடத் தொடர்ந்து துரத்தினான். பின் சமணப் பாழிகளையும் சமணப் பள்ளிகளையும் இடித்துக் குளத்தைச் சூழ்ந்திருக்கும் கரையை அகலப்படுத்தினான். பின்னர் மன்னன் அகம் மகிழ்ந்து வந்து தண்டியடிகளை வணங்கினான்: இதை;

அன்ன வண்ணம் ஆரூரில் அமணர் கலக்கம் கண்டவர் தாம்
சொன்ன வண்ண மேஅவரை ஓடத்தொடர்ந்து துரந்ததன்பின்
பன்னும் பாழிப் பள்ளிகளும் பறித்துக் குளம்சூழ் கரைபடுத்து
மன்னன் அவனும் மனமகிழ்ந்து வந்து தொண்டர் அடிபணிந்தான். (24)

எனும் பாடலில் தெய்வச் சேக்கிழார் கூறுகிறார்.

மன்னன் திருக்குளத்தில் திருத்தொண்டு செய்தான். பெருமான் திருமுழுக்காட்டுக்குரிய குளம் தூய நீருடன் பொலிந்தது. சுற்றுப் புறச் சூழல் மக்களைப் பாதிக்கக் கூடாது என்பது தண்டியடிகள் புராண உள்ளுறையாகும். திருக்குளத் திருத்தொண்டு செய்த தண்டியடிகள் இறைவன் திருவடிப் பேறுபெற்றார்.

மன்னன் வணங்கிப் போயினபின் மாலும் அயனும் அறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைத்துப் புரிந்த பணியும் குறைமுடித்தே
உன்னும் மனத்தால் அஞ்சுஎழுத்தும் ஓதி வழுவாது ஒழுகியே
மின்னும் சடையார் அடிநீழல் மிக்க சிறப்பின் மேவினார். (25)

கண்ணின் மணிகள் அவைஇன்றிக் கயிறு தடவிக்குளம் தொட்ட
எண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாதம் இறைஞ்சி இடர்நீங்கி
விண்ணில் வாழ்வார் தாம்வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேற்காட்டூர்
உள்நிலாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர் செய்கை உரைக்கின்றாம். (26)

அருள்மிகு கமலாம்பிகை உடனுறை வன்மீகநாதர்
தியாகராஜசுவாமி திருக்கோயில்
திருவாரூர் (அஞ்சல்) - மாவட்டம்
அ.கு.எண். 610 001.

Koviloor Digital Library

54. மூர்க்கர்

(12 பாடல்கள்)

பிறந்த ஊர் : திருவேற்காடு (சென்னைக்கு மிக அருகில் 15 கி.மீ. தொலைவில் உள்ள ஊர். புகழ்மிக்க கருமாரி அம்மன் ஆலயமும் அமைந்துள்ள ஊர்.)

குலம் : வேளாளர்

குருபூசை மாதம் : கார்த்திகை

நட்சத்திரம் : மூலம்

காலம் : அப்பர், சம்பந்தர்க்கு காலத்திற்கும் சுந்தரர் காலத் திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 – 840)

நாட்டமிகு (தண்டிக்கும்) மூர்க்கற்கும் அடியேன். (திரு. தொகை-5:3)

திருவேற்காட்டு வளம்

தொண்டை வள நாட்டில் வயல்களில் பரப்புகின்ற நன்முத்து வீசுகின்ற அலைகள் கொண்ட பாலி என்னும் ஆற்றின் வடக்குக் கரையில் நலம் பல கொண்ட நகராய் இருப்பது திருவேற்காடு. பெண் அன்னம் நீர் குடையும் நீர்நிலையில் உள்ள தாமரை முதலான பூக்களில் புகுந்தாட ஆடல் அரங்குகளில் மின்னல் கொடியிடைப் பெண்களும் துகிற் கொடிகளும் விழாக்களின்போது ஆடுவதற்குரிய நகராய் இருப்பது திருவேற்காடு.

திருவேற்காட்டில் எழுந்தருளி இருக்கின்ற சிவந்த சடையைத் தன்னகத்தே கொண்ட இறைவனும் தேவர்களுக்கு அமுதம் அளித்து, தாம் விஷத்தை உண்டவருமான சிவனுக்கு இந்தப் பூவுலகில் இம்மையில் வழிவழியாக வருகின்ற அடிமைத் திறத்தில் என்றென்றும் தவறாமல் உள்ள குலம் வேளாளர் குலமாகும். இறைவன் மீது பற்றுடைய அந்த வேளாளர் குலத்தில் தலைமை சார்ந்தவராக மூர்க்க நாயனார் விளங்கினார்.

அடியார் தொண்டு

குற்றம் அற்ற மரபில் பிறந்து வளர்ந்து அறிவு பெற்ற நாள் முதல் ஆதி முதல்வரான சிவபெருமானின் திருநீற்றின் சார்பே உண்மைப் பொருள் என்று உணர்ந்தவராக விளங்கியவர் மூர்க்க

Koviloor Digital Library

நாயனார். இவர் சிவன் அடியார்க்கு உணவு படைப்பார். அவர்கள் உண்ணக் கண்டு களிப்பார். அதன்பின்னரே தாம் உண்பார். இம்முறை தவறாமல் மூர்க்க நாயனார் வாழ்ந்து வந்தார்.

மூர்க்க நாயனார் தூய்மை மிகுந்த சோறு, நெய், வெல்லச்சுவை உடைய இனிமை மிகுந்த கறிகள் போன்றவற்றை நன்கு சமைப்பார். அவற்றை அடியார்களுக்கு உபசரித்து மகிழ்வார். உணவு அல்லாத பிற பொருள்களைக்கூட அடியவர்கள் வேண்டியவாறே கொடுத்து உதவி புரிந்தார். இத்தகைய தொண்டை நாள்தோறும் செய்து பேருவகையும் பெருமகிழ்வும் கொண்டார்.

உடைமைகளை விற்றல்

இத்தகு தொண்டுகளைச் செய்துவரும் நாளில் மிகப்பெரும் எண்ணிக்கையில் அடியார்கள் எழுந்தருளினர். அவர்களுக்கு உபசரித்ததால் மூர்க்க நாயனாரிடம் இருந்த பொருள்கள் யாவும் தீர்ந்து போயின. தம்மிடம் உள்ள அடிமைகள், நிலங்கள் மற்றும் பொருள்கள் அனைத்தையும் விற்று அடியார் தொண்டைத் தொடர்ந்து செய்தார்.

சூதாடல்

திருவேற்காட்டில் தம்மிடம் உள்ள அனைத்தையும் விற்று விட்டதால் அவருக்கு வறுமை ஏற்பட்டது. இதனால் தாம் முன்பு கற்றுக் கொண்ட சூதாட்டத்தால் பொருள் சேர்க்க எண்ணினார். ஆனால் திருவேற்காட்டில் சூதாட்டம் ஆடுவோர் இல்லாத காரணத்தால் அவரால் பொருள் சேர்க்க இயலவில்லை.

திருக்குடந்தை செல்லல்

சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் பல தலங்களுக்குச் சென்றார் மூர்க்க நாயனார். அங்கெல்லாம் உருகிய உள்ளத்தோடு வணங்கி, தாம் கற்ற சூதால் வரும் பொருள் கொண்டு வழக்கமாய்த் தாம் செய்யும் அடியார் தொண்டைச் செய்து வந்தார். சில நாள்கள் கழித்து அவர் திருக்குடந்தைக்குச் சென்றார்.

புகழ்மிகுந்த இந்தத் திருக்குடந்தையிலும் சிவன் அடியார் களுக்கு இனிய அமுதை அளிக்க வேண்டியும் அதற்காகப் பொருள் ஈட்ட வேண்டியும் சூதாடினார். சூதால் வந்த பொருளை இறைவனின் திருவருளாகக் கருதி, அது கொண்டு அடியவர்க்குத் தொண்டு செய்து மகிழ்ச்சி அடைந்தார்.

Koviloor Digital Library

சூதில் சூது

சூது ஆடும்போது ஒரு சூழ்ச்சியைச் செய்தார் மூர்க்க நாயனார். முதல் ஆட்டத்தில் தோல்வி அடைந்து பொருள் இழப்பார். இதனால் எதிராளி மகிழ்வார். ஆனால் பிறகு நடைபெறும் எல்லா ஆட்டங் களிலும் தாமே வென்று எதிராளியின் பொருள் அனைத்தும் பறிப்பார். தோற்றுப் பொருள் கொடுக்க மறுத்தாரை வாள் கொண்டு வீழ்த்துவார். இத்தகு செயல்களாலேயே இவருக்கு மூர்க்கர் என்ற பெயர் வந்தது.

இங்ஙனம் சூதில் பொருள் ஈட்டித் தொண்டு செய்த காரணத் தால் எல்லாம் வல்ல சிவபெருமானின் அருளைப் பெற்றார். இவ்வுலக வாழ்வை விட்டபின்பு பூதகணங்கள் இசையோடு பாட நடனம் ஆடும் சிவபெருமானின் உலகமான சிவபுரத்துக்குச் சென்றார்.

சூதாட்டத்தில் வெற்றி கண்டு அதனால் வந்த பொருளை அடியவர் தொண்டுக்காகச் செலவிட்டதால், இவருக்கு நற்சூதர் என்ற பெயர் கிட்டியது.

மன்னிப் பெருகும் பெருந்தொண்டை வளநாடு அதனில் வயல்பரப்பும்
நல்நித் தில்வெண்திரைப்பாலி நதியின் வடபால் நலம்கொள்பதி
அன்னப் பெடைகள் குடைவாவி அலர்புக்கு ஆட அரங்கின்இடை
மின்னுக் கொடிகள் துகில்கொடிகள் விழவின் காடு வேற்காடு (1)

செம்பொன் புரிசைத் திருவேற்காடு அமர்ந்த செய்ய சடைக் கற்றை
நம்பர்க்கு உம்பர்க்கு அமுதளித்து நஞ்சை அமுது செய்தவருக்கு
இம்பர்த் தலத்தில் வழிஅடிமை என்றும் குன்றா இயல்பில்வரும்
தம்பற்றுடைய நிலைவேளாண் குலத்தின் தலைமை சார்ந்துள்ளார். (2)

கோதுஇல் மரபில் பிறந்து வளர்ந்து அறிவு கொண்ட நாள்தொடங்கி
ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள்என்று அறிந்துஅரனார்
காதல் அடியார்க்கு அமுதுஆக்கி அமுது செய்யக் கண்டுஉண்ணும்
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார். (3)

தூய அடிசில் நெய்கன்னல் சுவைஇன் கறிகள் அவை அமைத்து
மேய அடியார் தமைப்போற்றி விருப்பால் அமுது செய்வித்தே
ஆய பொருளும் அவர்வேண்டும் படியால் உதவி அன்புமிக
ஏயு மாறு நாள்தோறும் இனைய பணிசெய்து இன்புற்றார். (4)

இன்ன செயலின் ஒழுகும்நாள் அடியார் மிகவும் எழுந்தருள
முன்னம் உடைமை யானபொருள் முழுதும் மாள அடிமையுடன்
மன்னும் காணி யானநிலம் மற்றும் உள்ள திறம்விற்றே
அன்னம் அளித்தே மேல்மேலும் ஆராமனத்தர் ஆயினார். (5)

Koviloor Digital Library

அங்கண் அவ்வூர் தமக்குஒருபற்று அடியார் தங்கட்கு அமுதுஆக்க
எங்கும் காணா வகைதோன்ற இலம்பாடு எய்தி இருந்துஅயர்வார்
தங்கும் வகையால் தான்முன்பு கற்றதன்மை நல்சூதால்
பொங்கும் பொருள்ஆக்கவும் அங்குப் பொருவார் இன்மையினில் போவார் (6)

பெற்றம் ஏறிப் பலிக்குவரும் பெருமான் அமரும் தானங்கள்
உற்ற அன்பால் சென்றுஎய்தி உருகும் உள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதால் நியதியாம் கருமம் முடித்தே கருதார்ஊர்
செற்ற சிலையார் திருக்குடந்தை அடைந்தார் வந்து சிலநாளில். (7)

இருள்ஆரும் மணிகண்டர் அடியார்க்குஇன் அமுதுஅளிக்கப்
பொருள்ஆயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருள்ஆயச் சூதுஆடி உறும்பொருள்வென் றனநம்பர்
அருள்ஆகவே கொண்டுஅங்கு அமுதுசெய்வித்து இன்புறுவார். (8)

முன்சூது தாம்தோற்று முதல்பணயம் அவர்கொள்ளப்
பின்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருள்ஆக்கிச்
சொல்சூதால் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்தி
நல்சூதர் மூர்க்கர்எனும் பெயர்பெற்றார் நானிலத்தில். (9)

சூதினில் வென்று எய்துபொருள் துரிசுஅற்ற நல்உணர்வில்
தீதுஅகல அமுதுஆக்கு வார்கொள்ளத் தாம்தீண்டார்
காதலுடன் அடியார்கள் அமுதுசெயக் கடைப்பந்தி
ஏதம்இலா வகைதாமும் அமுதுசெய்து அங்கு இருக்கும்நாள். (10)

நாதன்தன் அடியார்க்கு நல்அடிசில் நாள்தோறும்
ஆதரவி னால்அமுது செய்வித்துஅங்கு அருளாலே
ஏதங்கள் போய்அகல இவ்உலகை விட்டதன்பின்
பூதங்கள் இசைபாட ஆடுவார் புரம்புக்கார். (11)

வல்லார்கள் தமைவென்று சூதினால் வந்தபொருள்
அல்ஆரும் கறைக்கண்டர் அடியவர்கள் தமக்குஆக்கும்
நல்லார்நல் சூதர்ஆம் மூர்க்கர்கழல் நாம்வணங்கிச்
சொல்ஆர்சீர்ச் சோமாசி மாறர்திறம் சொல்லுவாம். (12)

அருள்மிகு பாலாம்பிகை உடனுறை வேதபுரீஸ்வரர்
வேதபுரீஸ்வரர் திருக்கோயில்
திருவேற்காடு அஞ்சல் – 600 077.
திருவள்ளூர் மாவட்டம்.

Koviloor Digital Library

55. சோமாசி மாறர்

(6 பாடல்கள்)

பிறந்த ஊர் : திருவம்பர் (மயிலாடுதுறை – திருவாரூர்ச் சாலையில் பேரளம் தாண்டிப் பூந்தோட்டம் என்ற ஊரிலிருந்து தென்கிழக்கில் 2 கி.மீ. தொலைவில் உள்ள ஊர்.)

குலம் : அந்தணர்

குருபூசை மாதம்: வைகாசி

நட்சத்திரம் : ஆயில்யம்

காலம் : சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840 – 865)

'அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்' (திரு. தொகை-5:4)

திருவம்பர் தற்பொழுது **அம்பர், அம்பல்,** என வழங்கப்பெற்று வருகிறது. சோழ நாட்டுத் தென்கரைத் தலம். **அம்பர் பெருந்திருக் கோயில்** எனவும் இத்தலம் அழைக்கப்பெறுகிறது. கோச்செங்கட் சோழனின் கடைசித் திருப்பணியாகச் சொல்லப்படும் இக்கோயில் மாடக்கோயில் ஆகும். பிரமன் வழிபட்ட தலம். சோமாசி மாற நாயனார் பிறந்து வாழ்ந்த இடம். அந்தணர் மரபில் பிறந்த இவர், சுந்தரமூர்த்தி நாயனாரைக் குருவாகக் கொண்டு அவரது திருவடித் தாமரைகளைப் பற்றிக்கொண்டு இறையருள் பெற்றவர். உணவிடும் மாபெரும் அறத்தையும் ஐந்தெழுத்தை ஓதும் தவத்தையும் இடைவிடாது செய்து இறையருள் பெற்றவர்.

சூதம்பயி லும்பொழில் அம்பரில் தூய வாய்மை
வேதம்பயி லும்மறை யாளர் குலத்தின் மேலோர்
ஏதம்புரி யும்எயில் செற்றவர்க்கு அன்பர் வந்தால்
பாதம்பணிந்து ஆர்அமுது ஊட்டுநல் பண்பின் மிக்கார். (பா. 1)

மிக்க மாமரங்கள் விளங்கும் சோலைகள் சூழ்ந்த **திருவம்பர்** நகரத்தில் தூய்மை செய்கின்ற வாய்மை யுடைய வேதங்களைப் பயிலும் மறையவர்களின் குலத்தில் மிகவும் மேம்பட்டு விளங்குபவர், உலகத்துக்குத் துன்பத்தைச் செய்த மூன்று மதில்களையும் எரித்த

Koviloor Digital Library

இறைவருக்குரிய அடியார்கள் வந்தால் அவர்களின் திருவடிகளில் வணங்கி அமுது ஊட்டுகின்ற நற்பண்பில் மிக்கவர் சோமாசி மாற நாயனார் (சூதம்–மாமரம்)

யாழின்மொழி யாள்தனிப் பாகரைப் போற்றும் யாகம்
ஊழின்முறை மைவழு வாது உலகங்கள் ஆன
ஏழும்உவப் பப்புரிந்து இன்புறச் செய்த பேற்றால்
வாழும்திறம் ஈசர் மலர்க்கழல் வாழ்த்தல் என்பார். (பா. 2)

யாழ் போன்ற இனிய சொல்லையுடைய உமையம்மை யாரின் ஒரு பாகரான இறைவரைப் போற்றுகின்ற சிவ யாகத்தைச் செய்து வழிபடுகின்ற விதிமுறை தவறாது வாழ்ந்தார். ஏழ் உலகங் களும் மகிழ்ந்து இன்பம் அடையும்படிச் செய்த பேறு பெற்றார். உயிர்கள் நல்வாழ்வு அடையும் வழியாவது சிவபெருமானின் திருவடிமலர்களை வாழ்த்துவதே ஆகும் என்ற கருத்துடையவர்.

எத்தன்மையர் ஆயினும் ஈசனுக்கு அன்பர்என்றால்
அத்தன்மையர் தாம்நமை ஆள்பவர் என்று கொள்வார்
சித்தம்தெளி யச்சிவன் அஞ்சு எழுத்து ஓதும் வாய்மை
நித்தம் நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றார். (பா. 3)

எத்தகைய தன்மையுடையரானாலும் சிவபெருமானுக்கு அன்பர் என்றால், அவரே நம்மை ஆளாகவுடையவர் என்ற துணிபு கொண்டவர். சித்தம் தெளிவு பெறும் பொருட்டுச் சிவனது திருவைந்தெழுத்தையும் விதிப்படி ஓதும் வாய்மையையே நாள்தோறும் நியமம் எனக் கொண்டு போற்றும் ஒழுக்கத்தில் நின்று வாழ்பவர்.

சீரும்திரு வும்பொழி யும்திரு ஆரூர் எய்தி
ஆரம்திகழ் மார்பின் அணுக்கவன் தொண்டர்க்கு அன்பால்
சாரும்பெரு நண்பு சிறப்பு அடைந்து தங்கிப்
பாரும்விசும் பும்பணி யும்பதம் பற்றி உள்ளார். (பா. 4)

சிறப்பும் சைவ மெய்த்திருவும் மிகவும் நல்கும் திருவாரூரை அடைந்தார். மாலைகள் விளங்கும் மார்பையுடைய இறைவருக்கு அணுக்கத் தொண்டரான, வன்தொண்டரான சுந்தரர்க்கு அன்பால் சார்கின்ற பெருநட்பைச் சிறப்பாகப் பெற்றார். திருவாரூரில் தங்கி மண்ணுலகும் விண்ணுலகும் பணிகின்ற சுந்தரரது திருவடிகளைப் பற்றாக நாயனார் பற்றிக்கொண்டார்.

Koviloor Digital Library

துன்றும்புலன் ஐந்துஉடன் ஆறு தொகுத்த குற்றம்
வென்று இங்குஇது நல்நெறி சேரும் விளக்கம்என்றே
வன்தொண்டர் பாதம்தொழுது ஆனசிறப்பு வாய்ப்ப
என்றும்நில வும்சிவ லோகத்தில் இன்பம் உற்றார். (பா. 5)

பொருந்திய ஐம்புலக் குறும்புகளுடன் ஆறு குற்றங் களையும், வெற்றி கொண்டார். இம்மையில் சைவ நெறியில் சேர்ந்து உய்யும் விளக்கம் இதுவே என்று துணிந்து சுந்தரரின் திருவடிகளை வணங்கி, அத்திருப்பாதங்களையே பற்றுக்கோடாகச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். அதனால் பெற்ற சிறப்பு வாய்க்கப் பெற்றமையால் என்றும் அழியாத நித்தியமான சிவலோகத்தில் வாழும் இன்பத்தைப் பெற்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் துதி

பணையும் தடமும் புடைசூழும் ஒற்றிஊரில் பாகத்தோர்
துணையும் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ரானாரை
இணையும் கொங்கைச் சங்கிலியார் எழில்மென் பணைத்தோள் எய்துவிக்க
அணையும் ஒருவர் சரணமே அரணம்ஆக அடைந்தோமே. (பா. 6)

வயல்களும் நீர்நிலைகளும் எங்கும் சூழ்ந்திருப்பது திருவொற்றியூர். ஒரு பாகத்தில் உமையம்மையாரும் தாமும் பிரியாது உள்ளவரான இறைவர், தம்பிரான் தோழரை இணையான கொங்கைகளையுடைய சங்கிலியாரின் அழகிய மென்மையான தோள்களை அடையும்படிச் செய்தார். அதனால் இறையருளை அடைவதற்கு அரணாகச் சுந்தரரின் திருவடிகளைப் பற்றிக் கொண்டோம். சுந்தரரின் திருவடிகளையே சரணமாகவும் நமக்குக் காப்பாகவும் அடைந்தோம்.

தெய்வச் சேக்கிழார் குறிப்பிடாத வரலாறு

சோமாசிமாற நாயனார், நாள்தோறும் சுந்தரருக்கு அவர் திருவாரூரில் இருந்தபோது உணவுக்குத் தூதுவளை கீரை கொண்டு தரும் தொண்டைச் செய்துவந்தார். பரவையாரும் அதைச் சமைத்துத் தரச் சுந்தரர் விரும்பிச் சாப்பிட்டு வந்தார். ஒருநாள் சுந்தரர் அக்கீரை கொண்டு வந்து நாள்தோறும் தருபவர் யார் என்று கேட்டு சோமாசி மாறரைப் பற்றியறிந்து நேரில் கண்டு, அவர் விருப்பம் யாதென வினவினார். அதற்கு அவர், தான் செய்ய விருக்கும் சோம யாகத்திற்குத் திருவாரூர் தியாகேசப் பெருமான் எழுந்தருளி

Noolaham Digital Library

அவிர்பாகம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அதற்குச் சுந்தரர் உதவவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மறுக்கமுடியாத சுந்தரர், சோமாசிமாறரை அழைத்துக் கொண்டு திருவாரூர்ப் பெருமானிடம் வந்து வேண்டுகோளைத் தெரிவித்தார். செவிமடுத்த இறைவன் இசைந்து, தான்வரும் வேடம் தெரிந்து நாயனார் அவிர்ப்பாகம் தரவேண்டும் என்று பணித்தார். சோமாசி மாற நாயனாரும் அதற்கிசைந்தார்.

நாயனார் யாக குண்டம் அமைத்து யாகத்தைத் தொடங்கினார். அவ்விடம் **அம்பர் மாகாளத்திற்கும் அம்பர் பெருந்திருக்கோயிலுக்கும்** இடையில் சாலையோரத்தில் உள்ளது. அவ்விடத்தில் ஒரு மண்டபம் இருக்கிறது. அவ்விடத்தை இன்று **பண்டார வாடை திருமாளம்** என்று சொல்கின்றனர். இன்றும் சோமயாக உற்சவம் இவ்விடத்தில்தான் நடைபெறுகின்றது.

யாகம் நடைபெறும் இடத்திற்கு, தியாகராசப் பெருமான் வெட்டியான் வேடத்தில் (நீசவடிவினராய்) வருகை தந்தார். (நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கி உடன் பிடித்துக்கொண்டு; தோளில் இறந்து போன கன்றினைப் போட்டுக் கொண்டு, தடித்த பூணூல் அணிந்து, தலையில் முண்டாசு (தலைப்பாகை) கட்டி, கணபதியையும், முருகரையும் சிறுவர்களாக்கி, உமாதேவியை வெட்டிச்சி வேடத்தில் தலையில் கள்குடம் ஏந்தியவாறு அழைத்துக்கொண்டு) இக்கோலத்தில் இறைவர் வந்தார். இறைவனைப் பார்த்து, எல்லோரும் அபசாரம் நேர்ந்து விட்டதென்று எண்ணியும், இக்கோலத்தைக் கண்டு பயந்தும் ஓடினர். ஆனால் சோமாசி மாறரும் அவர் மனைவியாரும் அவ்விடத்திலேயே அஞ்சி நிற்க; தந்தை வருவதை நாயனாருக்கு கண்ணான கணபதியும் சைகை மொழியால் குறிப்பாக உணர்த்தி, அச்சத்தைப் போக்கினார். நாயனாரும் அவர் மனைவியும் இறைவனை அந்நீச வடிவில் நின்று வீழ்ந்து வரவேற்று வணங்கினர்; இறைவன் மகிழ்ந்து நாயனாருக்குக் காட்சி தந்து அருள்புரிந்தார் என்பது வரலாறு.

- சிவ யாகங்களைச் செய்பவர் சோமாசி என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பெறுவர். மாறர் இயற்பெயர்.
- ஒருவர் அளிக்கும் உணவை அருந்தினால் அவருக்கு நாம் கடன்பட்டு விடுகிறோம் என்னும் பேருண்மையை இந்நாயனார் வரலாறு உணர்த்துகிறது. பிறவியை அறுக்க நினைப்போர்

Koviloor Digital Library

இப்பேருண்மைகளைக் கருத்தில் கொள்க. பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், கும்பகர்ணன் வரலாறுகளை உணர்ந்து தெளிக.

* பெருமிழலைக் குறும்ப நாயனார் போல, சோமாசி மாற நாயனாரும் சுந்தரரைக் குருவாகக் கொண்டு இறையருளைப் பெற்றார்.
* திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரையும் நாயன்மார் பலர் குருவாகக் கொண்டு இறையருள் பெற்றதை உணர்ந்து தெளிக. குருவின்றி இறையருளைப் பெறவே முடியாது.

சோமாசி மாற நாயனார் வாழ்ந்த ஊர்

அருள்மிகு பிரமபுரீஸ்வரர் திருக்கோயில்,
அம்பல் - அஞ்சல் – 609 503,
பூந்தோட்டம் வழி, நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

சோமாசி மாற நாயனார் சோமயாகம் செய்த ஊர்

அருள்மிகு மாகாளேஸ்வரர் திருக்கோயில், கோயில் திருமாளம்,
பூந்தோட்டம் அஞ்சல் – 609 503
நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்

Koviloor Digital Library

56. சாக்கியர்

(18 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	திருச்சங்கமங்கை (தொண்டை நாடு) காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள ஊர்.
குலம்	:	வேளாளர்
குருபூசை மாதம்	:	மார்கழி
நட்சத்திரம்	:	பூராடம்
காலம்	:	அப்பர், சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 – 600)

"வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்" (திரு. தொகை-6:1)

திருச்சங்கமங்கை என்னும் திருத்தலத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தவர் சாக்கிய நாயனார். காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ளது இவ்வூர். இவர், பேரறிவுப் பெரும்பொருளாம் செம்பொருளைத் தெரிந்து உணர்ந்தார். எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டார். பிறத்தல் இறத்தல் என்னும் செயல்களை ஒழிக்கத் தலைப்பட்டார்.

பௌத்தம் சேர்தல்

சாக்கிய நாயனார் காஞ்சிபுரம் சென்றார். அங்கு மெய்ஞ் ஞானம் பெற வேண்டிப் பல வழிகளை நாடினார். முதன்முதலில் பௌத்த சமயத்தில் சேர்ந்து பிறப்பு நீக்கும் தத்துவ வழியை அறியத் தொடங்கினார். இதனைச் சேக்கிழார்,

அந்நாளில் எயில்காஞ்சி அணிநகரம் சென்றுஅடைந்து
நல்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடுவார்
முன்னாகச் சாக்கியர்தம் மொழிஅறத்தின் வழிச்சார்ந்து
மன்னாத பிறப்புஅறுக்கும் தத்துவத்தின் வழிஉணர்வார். (சா.நா.பு – 3)

என்ற பாடலில் கூறுகிறார்.

சிவமே பொருள் எனத் தெளிதல்

சாக்கிய நாயனார் பௌத்த சமயத்தைச் சார்ந்த அரிய தரும நூல்களைப் படித்து, பௌத்த சமயத்தின் கருத்துக்களும் மற்ற புறச்சமயக் கருத்துக்களும் மெய்ப்பொருளைச் சொல்லுவன அல்ல

Koviloor Digital Library

என அறிந்தார். சிவபெருமானைச் சார்ந்து மேவும் நன்னெறியே பொருள் என உணர்ந்தார். இச்செய்திகளைப் பின்வரும் பாடலில் சேக்கிழார் செப்புவார்.

அந்நிலைமைச் சாக்கியர்தம் அருங்கலைநூல் ஓதிஅது
தன்நிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருள்அல்ல
என்னும்அது தெளிந்துஈசர் அருள்கூட ஈறுஇல்சிவ
நல்நெறியே பொருள்ஆவது எனஉணர்வு நாட்டுவார். (சா.நா.பு – 4)

மெய்வகையால் விதித்த பொருள் நான்கு

செய்யும் வினை, அவ்வினையைச் செய்தவன் அவ்வினையால் உருவாகும் பயன், அப்பயனைக் கொடுப்பவன் என்று உண்மை காணும் வகையினால் பொருள்கள் நான்காகும் என்று சாக்கிய நாயனார் தெளிந்தார். இத்தெளிவு தரும் சிறப்பு இயல்பு சைவ நெறி அல்லாமல் வேறு நெறியில் இல்லையெனத் தெளிந்தார். உய்யும் வகையால் செம்பொருளாய் இருப்பவர் சிவனே என்று சிவபெருமானது அருளாலேயே உணர்ந்தார் இதனைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்குஆகும் விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்இயல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லைஎன
உய்வகையால் பொருள்சிவன்என்று அருளாலே உணர்ந்துஅறிந்தார் (சா.நா.பு – 5)

சங்கரன் தாள் மறவாமை பொருள்

எந்த நிலையில் நின்றாலும் எந்தக் கோலத்தைக் கொண்டாலும் நிலைபெற்ற சிறப்புக் கொண்ட சிவபெருமானின் திருவடிகளை மறவாமல் இருப்பதே உண்மையான உறுதிப்பொருள் ஆகும் என்று துணிந்தார் சாக்கிய நாயனார். இதனால் தாம் பூண்ட பௌத்தத் துறவுக் கோலத்தை நீக்காமலேயே தூய சிவத்தை மிகுந்த அன்பு கொண்டு மறக்காமல் இருந்தார்.

எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்என்றே
துன்னியவேடம் தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார். (சா.நா.பு. – 6)

Koviloor Digital Library

எல்லாம் உடைய இறைவனே ஈசன்

எல்லாவற்றையும் தமது உருவமாய்க் கொண்டுள்ள சிவபெருமான் ஒருவரே இறைவர் என்று அறியாதவர்கள் பௌத்தர்கள் ஆவர். அவர்கள் பொல்லா வேடச் சாக்கியர்கள். புல்லர்கள். கரிய நஞ்சைக் கழுத்தில் கொண்டுள்ள சிவபெருமானுக்கு இவ்வுலகம் முழுவதும் ஆளாவதே அன்றி வேறில்லை என்று தெளிந்து சாக்கிய நாயனார் பௌத்தத் துறவுக் கோலத்தை மாற்றாமல் சிவன்பால் கொண்ட அன்பின்வழி நின்றார். இதை,

எல்லாம் உடைய ஈசனே இறைவன் என்ன அறியாதார்
பொல்லா வேடச் சாக்கியரே ஆகிப் புல்லர் ஆகுவார்
அல்ஆர் கண்டர் தமக்குஇந்த அகிலம் எல்லாம் ஆள்என்ன
வல்லார் இவர்அவ் வேடத்தை மாற்றாது அன்பின் வழிநிற்பார். (சா.நா.பு – 7)

என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

பாம்பை அணிகலனாக அணியும் சிவனை வழிபடுவதற் குரிய சிவலிங்கத் திருமேனியானது, திருமால், பிரமன் ஆகியோர் காணுமாறு அவர்களின் நடுவே விண்ணுலகை அளாவும் நெருப்புப் பிழம்பாய்த் தோன்றிய வடிவமே என்று சாக்கிய நாயனார் தெளிந்தார்.

நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்டு துதித்த பின்பு உணவு கொள்ள வேண்டும் என்னும் நியமத்தை மேற்கொள்ள விரும்பினார் சாக்கிய நாயனார். தம் பக்கத்தில் இருந்த சிவலிங்கத்தைக் கண்டார். உடனே மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். செய்வது இன்னது என்று அறியாதவராய்த் தம் பக்கத்தில் இருந்த ஒரு கல்லை எடுத்து அதனையே மலராகக் கருதி அன்போடு சிவலிங்கத்தின்மீது எறிந்தார்.

மனம் நிறைந்த பேருவகையில் பெருகி எழுகின்ற விருப்பத்தால் தம் குழந்தையை எண்ணி மகிழுவோர் அக்குழந்தையானது வன்மை கொண்ட செயல்கள் மூலம் இகழுவன செய்தாலும் மகிழ்ச்சி அடைவர். அதைப்போலச் சாக்கிய நாயனாரின் செயல் அன்பால் செய்யப்பட்டதால் அதைச் சிவபெருமான் மகிழ்வோடு ஏற்றார்.

அன்று சென்று அதன்பின் வரும் நாள்களில் தமது நியமப்படி செய்ய முற்பட்டபோது தாம் முன்னை நாளில் சிவலிங்கத்தின் மீது கல் எறிந்ததை நினைவு கூர்ந்தார். அப்போது தமக்குக் கல் எறியும் எண்ணம் உண்டானது சிவனின் அருளால் ஆகும் என்று தெளிந்தார். பிறகு நாள்தோறும் தம் நியமப்படி செயல்பட்டார். தமது நியமத்தைக் கடைப்பிடிக்கும் அதே வேளையில் பௌத்தத் துறவுக் கோலத்தையும்

Koviloor Digital Library

அவர் விடவில்லை. தமது நியமத்தை அன்புடன் தொடர்ந்து செய்து வந்தார். சாக்கிய நாயனாரின் மெய்யன்பு பெருகச் செய்யப்படும் அச்செயலானது தூயவராம் சிவபெருமானுக்கு அன்பால் செய்யப்படும் பூசையாக ஆயிற்று. கல்லால் எறிந்தது அன்பால் விளைந்தது என அறியவேண்டும். சாக்கிய நாயனாரின் இச்செயல் கண்ணப்ப நாயனர் தம் செருப்பணிந்த காலை இறைவனின் தலைமீது வைத்த செயலை ஒக்கும். சாக்கிய நாயனார் அன்பு கொண்டு கல்லெறிந்தார். ஏனையோர் அதைக் கல் என்று கருதுவர். ஆனால் சிவபெருமானுக்கு அது மலர் ஆகும். இதைத் தெய்வச் சேக்கிழார்,

கல்லாலே எறிந்தஅதுவும் அன்புஆன படிகாணில்
வில்வேடர் செருப்புஅடியும் திருமுடியின் மேவிற்றால்
நல்லார்மற்று அவர்செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்என்பார் அரனார்க்குஅஃது அலர்ஆமால் (சா.நா.பு – 14)

என்கிறார். ஒருநாள் இறைவர் திருவருளால் சாக்கிய நாயனார் தம் வழக்கத்தை மறந்து உண்ணத் தொடங்கினார். பிறகு தாம் மறந்ததை உணர்ந்து உண்ணாமல் பெருவிருப்போடு விரைந்து புறப்பட்டு இறைவர் முன் சென்றார்.

இறைவர் காட்சி தருதல்

அங்குக் கிடைத்த ஒரு கல்லை எடுத்து எறிந்தார். அவரது பேரன்பினை உணர்ந்த நெற்றிக்கண்ணரான இறைவர் உமையம்மை யுடன் காட்சி தந்தார். அத்திருக்காட்சியைக் கண்ட சாக்கிய நாயனார் கைகள் கூப்பிப் பணிந்தார். உடனே சிவபெருமான் அவருக்குச் சிவலோகப்பேறு அளித்தார். இதனை,

கொண்டதுஒரு கல்எடுத்துக் குறிகூடும் வகை எறிய
உண்டிவினை ஒழித்துஅஞ்சி ஓடிவரும் வேட்கையொடும்
கண்டுஅருளும் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்கால்
தொண்டர்எதிர் நெடுவிசும்பில் துணைவியொடும் தோன்றினார். (சா.நா.பு – 16)

மழவிடைமேல் எழுந்தருளி வந்ததுஒரு செயலாலே
கழல்அடைந்த திருத்தொண்டர் கண்டுகரம் குவித்துஇறைஞ்சி
விழ அருள்நோக்கு அளித்தருளி மிக்கசிவ லோகத்தில்
பழ அடிமைப் பாங்குஅருளிப் பரமர்எழுந் தருளினார். (சா.நா.பு – 17)

எனும் இரண்டு பாடல்களில் கூறுகிறார் சேக்கிழார்.

ஒரு செயல் எந்த நோக்கத்தோடு செய்யப்பட்டது என்பதை வைத்துத்தான் அச்செயல் மதிப்பிடப்படுகிறது. சாக்கிய நாயனார் கல்

Koviloor Digital Library

எறிந்தது வன்மையான செயல் போலத் தோன்றுகிறது. ஆனால் அது இறைவன் மீது கொண்ட எல்லையற்ற அன்பின் காரணமாய் நிகழ்ந்தது. எனவே சாக்கிய நாயனார் செய்த செயல் தவறன்று. மன்மதன் இறைவன் மீது மலர்க்கணைகள் வீசினான். வீசப்பட்ட மலர்க்கணைகள் மென்மையானவை எனினும் வீசியவனின் மனநிலை வன்மையானது எனவே மன்மதன் செய்த செயல் தவறானது ஆகும்.

சாக்கிய நாயனார் இறைவன் மீது கல்லெறிந்தார். சுந்தரர் **பித்தா** என்றே இறைவனைப் பாடினார் கண்ணப்பர், இறைவன் மீது செருப்புக் காலை வைத்தார். இவர்களின் செயல்கள் வன்மை யானவைபோல் தெரியும். ஆனால் செய்யப்பட்ட மனநிலையை ஆராய்ந்தால் இச்செயல்கள் அன்பால், பக்தியால் விளைந்தவை என்பது விளங்கும்.

சாக்கிய நாயனார் வாழ்ந்த ஊர் — காஞ்சிபுரம் **அருள்மிகு ஏலவார்குழலி உடனுறை ஏகாம்பரநாதர் திருக்கோயில், (திருக்கச்சி ஏகம்பம்), காஞ்சிபுரம் – 631 502.**
திருமேற்றளி நாயகி உடனுறை திருமேற்றளிநாதர் திருமேற்றளீசுவரர், திருக்கோயில், (திருக்கச்சி மேற்றளி), பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம் – 631 501.
அருள்மிகு ஓணேஸ்வரர் மற்றும் காந்தேஸ்வரர், ஓணகாந்தன் திருக்கோயில், (ஓணகாந்தன் தளி), பெரிய காஞ்சிபுரம் – 631 502.
அருள்மிகு அனேகதங்காவதேஸ்வரர், அனேகதங்காவதீஸ்வரர் திருக்கோயில், பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் – 631 501.
பிரமராம்பிகை உடனுறை சத்திய நாதேஸ்வரர், கச்சி நெறிக்காரைக்காடு, கச்சி நெறிக்காரைக் காட்டீஸ்வரர், திருக்காலீஸ்வரர் திருக்கோயில், திருக்காலிமேடு, காஞ்சிபுரம்-631 501.

Koviloor Digital Library

57. சிறப்புலியார்

(6 பாடல்கள்)

பிறந்த ஊர் : திரு ஆக்கூர் (சோழ நாடு) சீர்காழிக்கு அருகில் 6 கி.மீ. தொலைவில் உள்ள ஊர்.

குலம் : அந்தணர்

குருபூசை மாதம் : கார்த்திகை

நட்சத்திரம் : பூராடம்

காலம் : அப்பர், சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 – 840)

சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன் (திரு. தொகை-6:2)

சோழ நாட்டில் திருஆக்கூர் எனும் ஊரில் வேதியர் குலத்தில் பிறந்து சிவனடி சேர்ந்த சிறப்புலி நாயனார் பின்வரும் தொண்டுகள் செய்தார். அவை :

1. சிவபெருமானின் அடியவர்களுக்கு அமுது செய்வித்தல்.
2. பொருள் உதவி புரிதல்.
3. திருவைந்தெழுத்து ஓதுதல்.
4. வேள்விகள் செய்தல்.

திருஆக்கூர் வளம்

வான் பொய்த்தாலும் தான் பொய்யாக் காவிரி என்று புகழப்படும் சிறப்பும் வளமும் கொண்டது காவிரி ஆறு. அந்த ஆறு பாயும் சோழ நாட்டில் மிகுந்த அழகு பொருந்திய நகராகவும் இருப்பது திருஆக்கூர் என்னும் நகராகும்.

உலகத்து மக்கள் வறுமை காரணமாக யாசித்துச் சென்றால் இல்லை என்று கூறாமல் வேண்டிய பொருள்களை வேண்டியவாறே வரையாமல் கொடுக்கும் குணம் உடையவர்கள் திருஆக்கூர் மக்கள். சீகாழித் தலைவரான திருஞானசம்பந்தர் நன்மை கொண்ட வேதியர்களைப் பற்றி அருளிச் செய்த வேத வாக்கினைப் பெறும் ஊர் திருஆக்கூர் ஆகும். இதைத் தெய்வச் சேக்கிழார்,

Koviloor Digital Library

பொன்னிநீர் நாட்டின் நீடும் பொன்பதி புவனத்து உள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க்கு இல்லைஎன்னாதே ஈயும்
தன்மையார் என்று நன்மை சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனார் அருளிச் செய்த மறைத்திரு வாக்கூர் அவ்வூர். (சி.நா.பு.-1)

எனும் பாடலில் கூறியுள்ளார்.

திருவாக்கூர் நகர மாந்தர்களின் கொடைச் சிறப்பைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் இரண்டாம் திருமுறையில் திருஆக்கூர்த் திருப்பதிகத்தில் கூறியுள்ளார்.

நன்மையராம் நாரணனும் நான்முகனும் காண்பரிய
தொன்மையான் தோற்றம் கேடு இல்லாதான் தொல்கோயில்
இன்மையால் சென்று இரந்தார்க்கு இல்லைஎன்னாது ஈந்துஉவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. (2.42.9 & 1925)

திருவாக்கூரில் இருக்கின்ற தூய்மை மிகுந்த மலர்ச் சோலைகளிலும் ஒளிதிகழுகின்ற மாட மாளிகைகளிலும் மழை முழக்கம் (மேக முழக்கம்) தாழுமாறு வேத ஒலியின் முழக்கம் ஓங்கியிருக்கும். பூ மலிந்த தெருவில் இட்ட அகிற்புகையானது தாழுமாறு அந்தணர்கள் ஓமங்கள் செய்யும் வேள்விச் சாலைகளில் ஆகுதி செய்வதால் உண்டாகும் ஓமப்புகை மேலோங்கும்.

தூமலர்ச் சோலை தோறும் சுடர்தொடு மாடம் தோறும்
மாமழை முழக்கம் தாழ மறைஒலி முழக்கம் ஓங்கும்
பூமலி மறுகில் இட்ட புகைஅகில் தூபம் தாழ
ஓமநல் வேள்விச் சாலை ஆகுதித் தூபம் ஓங்கும் (சி.நா.பு.-2)

சிறப்புலி நாயனாரின் திருத்தொண்டு

கரும்பாலைகளைச் சுற்றிப் பாக்கு மரங்கள் வேலி போல் அமைந்துள்ள அளவிற்கு வளம் மிக்கது திருஆக்கூர். இவ்வூரில் உலகில் நிறைந்த புகழ் பெற்றவராகவும் நான்கு வேதங்களையும் ஓதுகின்ற அந்தணர் குலத்தில் தோன்றியவராகவும் நீலமார்ந்த கழுத்தினையும் எட்டுத் தோள்களையும் கொண்ட நடராசப் பெருமானுக்குத் திருத்தொண்டு புரிபவராகவும் சீலராகவும் ஈகைத் திறத்தில் சிறந்தவராகவும் சிறப்புலி நாயனார் விளங்கியதை,

ஆலைசூழ் பூகவேலி அத்திரு வாக்கூர் தன்னில்
ஞாலம்ஆர் புகழின் மிக்கார் நான்மறைக் குலத்தின் உள்ளார்

Koviloor Digital Library

நீலம்ஆர் கண்டத்து எண்தோள் நிருத்தர்தம் திருத்தொண்டு ஏற்ற
சீலம்ஆய்ச் சாலும் ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார். (சி.நா.பு.–3)

எனத் தெய்வச்சேக்கிழார் செப்புவார்.

எல்லாவற்றையும் ஆட்சி செய்யும் திறம் கொண்டவர் சிவபெருமான். அப்பெருமானின் அன்பர் வந்தால் அவர்தம் பாதங்களை வணங்கி மகிழ்வார் சிறப்புலி நாயனார். பேரன்புடனும் பெருமதிப்புடனும் இனியன கூறுவார். நாள்தோறும் அவர்களுக்கு நல்லமுதை ஊட்டுவார். அதுமட்டு மல்லாமல் அடியார்கள் விரும்பியவை அனைத்தையும் தருவார். அடியாருக்குச் சேவை செய்வதால் வரும் இன்பத்தால் திளைப்பார். நிதியை மழையாகப் பொழியும் மேகம் போலச் சிறப்புலி நாயனார் விளங்கினார். இதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

ஆளும்அம் கணருக்கு அன்பர் அணைந்தபோது அடியில் தாழ்ந்து
மூளும் ஆதரவு பொங்க முன்பு நின்று இனிய கூறி
நாளும் நல்அமுதம் ஊட்டி நயந்தன எல்லாம் நல்கி
நீளும் இன்பத்துள் தங்கி நிதிமழை மாரி போன்றார் (சி.நா.பு.–4)

சிறப்புலி நாயனாரின் ஈத்துவக்கும் பண்பினை,

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் (திருக்குறள் – 228)

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் குறளோடு ஒப்புநோக்கி மகிழலாம்.

திருவைந்தெழுத்து ஓதல்

சிறப்புலி நாயனார் நாள்தோறும் திருவைந்தெழுத்தை ஓதினார். தீயை வளர்த்து நல்ல வேள்விகள் பலவற்றைச் செய்தார். தம் கழுத்தில் நஞ்சைக் கொண்டுள்ள சிவபெருமானின் திருவடிகளைச் சென்று சேரும்படியான செயல்களைச் செய்தார்.

அஞ்சுஎழுத்து ஓதி அங்கி வேட்டுநல் வேள்வி எல்லாம்
நஞ்சுஅணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்து
எஞ்சல்இல் அடியார்க்கு என்றும் இடையறா அன்பால் வள்ளல்
தம்செயல் வாய்ப்ப ஈசர்தாள்நிழல் தங்கி னாரே (சி.நா.பு.–5)

உலகில் குறைகள் ஏதும் இன்றி அடியவர்க்கு எக்காலத் திலும் அன்பு விளங்குமாறு வள்ளல் சிறப்புலி நாயனார் வாழ்ந்தார்.

Koviloor Digital Library

தமது கடமைகளில் நிறைவு கொண்டார். இறுதியில் எல்லாம்வல்ல சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார்.

அறத்தினில் சிறந்து விளங்கும் மேன்மையையுடைய அந்தணர்கள் இருக்கும் திருஆக்கூரில் உள்ள சிறப்புலி நாயனாரின் தாள் துதித்து திருச்செங்காட்டங் குடியில் பிறந்த சிறுத்தொண்டர் வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

அறத்தினில் மிக்க மேன்மை அந்தணர் ஆக்கூர் தன்னில்
மறைபெரு வள்ளலார் வண் சிறப்புலியார்தாள் வாழ்த்திச்
சிறப்புஉடைத் திருச்செங்காட்டங் குடியினில் செம்மை வாய்த்த
விறல்சிறுத் தொண்டர் செய்த திருத்தொழில் விளம்பல் உற்றேன் (சி.நா.பு.–6)

திருஆக்கூர் கோயில் கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில் ஆகும். தான்தோன்றி மாடம் என்றும் இதற்கு இன்னொரு பெயர் உண்டு. கபிலதேவ நயானார் 11ஆம் திருமுறையில் பாடிய தலம். அகத்தியருக்குத் திருமணக்காட்சி காட்டியருளிய இடம். சம்பந்தர், அப்பர் பாடல்பெற்ற தலம்.

ஓர் அரசன் இறைவர் கட்டளையிட்டபடி ஆயிரம் அடியார்க்கு அன்னமிட்டதாகவும் அவர்களில் ஒருவராய் இறைவரும் வந்து உண்டதாகவும் அதைப்பின்னர் அறிந்த மன்னன் பேருவகை அடைந்ததாகவும் ஒரு வரலாறு வழங்கப்படுகிறது.

சிறப்புலி நாயனார் வாரி வாரி வழங்கிய வள்ளல் ஆவார். தன்னிடம் வந்து இரப்பவர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்து உதவுபவரே சிறந்த அடியவர் ஆவார்.

உலகத்து மக்களுக்குப் பயன்படும் வகையில் தாம் ஈட்டிய செல்வத்தை அவர்களுக்கு வழங்கல். அங்ஙனம் வழங்குவதால் வரும் புகழோடு வாழ்தல். இவையன்றி உயிருக்கு வேறு ஊதியம் இல்லை என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். இப்பேருண்மை யினை அறிவுடையோர் அறிக!

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'' (குறள் : 231)

வேள்வி

வேள்வி இருவகைப்படும். புறவேள்வி அனைவரும் அறிந்ததே. அகவேள்வி பின்வருமாறு ஞானியர் செய்வர்.

Koviloor Digital Library

1. உடல் - யாகசாலை
2. இருதயகமலம் (உச்சந்தலைக்கும் கழுத்திற்கும் இடையில் உள்ள இடம்)- யாக குண்டம்
3. வேள்விப்பொருள்(சமிதை) – ஓம விறகு. அவை : 1. அத்தி, 2. அரசு, 3. ஆல், 4. இத்தி, 5. கருங்காலி, 6. நாயுருவி, 7. பலா, 8. மா, 9. வன்னி என ஒன்பது. உடம்பினுள் இருக்கும் ஒன்பது வாசலினை அடைக்க இந்த ஞானவேள்வியினைச் செய்யவேண்டும். தீய பண்புகளைச் சமிதையாக இடவேண்டும்.
4. நெய் - உணர்வு (எண்ணம்)
5. தீ - குருபிரான் வழங்கிய உபதேசத் தீ.

கடகநேத்ரி உடனுறை தான்தோன்றீஸ்வரர்
தான்தோன்றிமாடம் – தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில்
ஆக்கூர் அஞ்சல் – அ.கு. 609 301
மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம்

Koviloor Digital Library

58. சிறுத்தொண்டர்

(88 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	திருச்செங்காட்டங்குடி (சோழ நாடு) திருவாரூர் – திருமருகல் சாலையில் திருமருகல் கால்நடை மருந்தகத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.
குலம்	:	மாமாத்திரர்
குருபூசை மாதம்	:	சித்திரை
நட்சத்திரம்	:	பரணி
காலம்	:	அப்பர், சம்பந்தர் காலத்து நாயன்மார் (கி.பி. 600 – 660)

செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற்கு அடியேன் (திரு. தொகை-6:2)

திருச்செங்காட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் தோன்றியவர் சிறுத்தொண்ட நாயனார். பரஞ்சோதியார் என்பது இவரது இயற் பெயர். இவர் வெண்காட்டு நங்கையை மணந்தார். முன்னைத் தவத்தால் சீராளனை மகனாகப் பெற்றார். இவர் திருஞான சம்பந்தரால் புகழ்ந்து பாராட்டப் பெற்ற சிறப்பு பெற்றவர். வயிரவ வடிவம் பூண்ட, சிவபெருமானுக்காகத் தம் ஒரே மகனைத் திருவமுது செய்தவர்.

கலைகள் கற்றல்

பரஞ்சோதியார் ஆயுர்வேதம் எனப்படும் மருத்துவக்கலை யையும் எல்லையில்லாத வடநூல்கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். படைக்கலத் தொழிலில் துறைபோகியவராக இருந்தார். மேலும் யானையேற்றம் குதிரையேற்றம் போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றார்.

சேனாதிபதியாகப் பணியாற்றல்

பரஞ்சோதியார் பல்லவ அரசனிடம் தளபதியாக இருந்தார். இவர் மற்ற நாடுகளை வெல்லல், அவற்றைக் கைப்பற்றல் போன்றவற்றில் மிகுந்த திறன் பெற்றிருந்தார். வடபுலத்தில் உள்ள வாதாபி எனும் நகரில் நடந்த போரில் இவர் பெற்ற வெற்றி கண்ட பல்லவ மன்னன் (மகேந்திரவர்ம பல்லவன்) இவரை வியந்தான். அப்போது மற்ற அமைச்சர்கள், பரஞ்சோதியார் சிவனடியார் இவரை எதிர்க்கும் திறன் பெற்றார் இலர் என்றனர். உடனே மன்னன் பரஞ்

Koviloor Digital Library

சோதியார் பெருமை உணர்ந்து அவர் காலில் விழுந்து, "அடியாரே எம் பிழை பொறுக்க! இனி நீர் தளபதி பணி ஆற்ற வேண்டாம். திருத்தொண்டு செய்க" என வேண்டினான். பரஞ்சோதியாரும் விடைபெற்றார்.

சிறுத்தொண்டராதல்

பரஞ்சோதியார் அடியார்க்கு அமுதூட்டிய பின்னரே தாம் உண்பார். அவர் அடியாரிடம் மிகப் பணிவாக 'மிகச்சிறியராய்' நடத்தலால் அவருக்குச் சிறுத்தொண்டர் எனும் திருநாமம் வழங்கலாயிற்று.

சீராளன் பிறத்தல்

சிறுத்தொண்டருக்கும் திருவெண்காட்டு நங்கைக்கும் ஒரு குழவி பிறந்தது. அதற்குச் சீராளதேவர் எனும் பெயர் சூட்டப்பட்டது.

திருஞானசம்பந்தரின் பாராட்டு

திருச்செங்காட்டங்குடிக்கு ஒருமுறை திருஞானசம்பந்தர் வந்தார். அப்போது சிறுத்தொண்டர் திருஞானசம்பந்தரை வரவேற்று உபசரித்தார்.

திருஞானசம்பந்தர் தமது திருப்பதிகப் பாடலில் சிறுத்தொண்டரைப் பாராட்டிய செய்தி பின்வரும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சண்பையர்தம் பெருமானும் தாங்குஅரிய பெருங்காதல்
பண்புஉடைய சிறுத்தொண்டருடன் பயின்று மற்றுஅவரை
மண்பரவும் திருப்பதிகத்தினில் வைத்துச் சிறப்பித்து
நண்புஅருளி எழுந்தருளத் தாம் இனிது நயப்புற்றார் (சி.பு.–24)

சிறுத்தொண்டரைப் போற்றிய சம்பந்தர் தேவாரம்

திருஞானசம்பந்தர் தாம் பாடியருளிய மூன்றாம் திருமுறையில் 63ஆம் பதிகமான திருச்செங்காட்டங்குடி பதிகத்தில் இடம்பெற்றுள்ள பத்துப் பாடல்களிலும் சிறுத்தொண்டரைப் போற்றுகிறார்.

கூரார லிரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்தன் அருளொருநாட் பெறலாமே (சம்பந்தர் தேவாரம், 3:63:8)

சிவபெருமான் வயிரவர் வேடத்தில் வருதல்

சிறுத்தொண்டரின் அன்பை நுகரவே சிவபெருமான் வயிரவ வடிவம் கொண்டு திருமலையினின்று நீங்கிப் பூலோகம் வந்தார். இச்செய்தியைத் தெய்வச் சேக்கிழார்,

Koviloor Digital Library

இத்தன்மை நிகழும்நாள் இவர்திருத்தொண்டு இருங்கயிலை
அத்தர்திருஅடி யிணைக்கீழ்ச் சென்றுஅணைய அவருடைய
மெய்த்தன்மை அன்புநுகர்ந் தருளுதற்கு விடையவர்தாம்
சித்தம்மகிழ் வயிரவராய்த் திருமலைநின்று அணைகின்றார். (சி.பு.–25)

எனும் பாடலில் குறிப்பிடுவர்.

பூலோகம் வந்த சிவபெருமான் சிறுத்தொண்டர் வீடு எங்கே என விசாரித்தார். அவர் வீட்டை அணுகி, சிறுத்தொண்டர் உள்ளாரா என வினவினார். தாதியாராகிய சந்தன நங்கையார், அவரை வணங்கினார். சிறுத்தொண்டர் அடியவரைத் தேடிச் சென்றுள்ளார்; அடிகள் உள்ளே எழுந்தருள்க என வேண்டினார். உடனே வயிரவர் யாம் பெண்கள் இருக்கும் இடத்தில் தனித்துப் புகுவதில்லை என்றார். உடனே அப்போது அங்கு வந்த திருவெண்காட்டு நங்கையார் மீண்டும் ஒருமுறை உள்ளே எழுந்தருள வேண்டினார்.

உடனே வயிரவர், சிறுத்தொண்டர் இல்லாதபோது யாம் தங்க மாட்டோம். இவ்வூரில் உள்ள கணபதீச்சரக் கோயிலில் உள்ள ஆத்திமரத்தின் கீழ் இருப்போம். சிறுத்தொண்டர் வந்ததும் கூறுக. என்று கூறி விடைபெற்றார்.

சிறுத்தொண்டர் மகிழ்தல்

சிறுத்தொண்டர் அடியாரைத் தேடி அலைந்தார். ஒருவரையுங் காணாமல் தம் வீடு வந்தார். அவர் வந்ததும் திருவெண்காட்டு நங்கையார் நடந்த நிகழ்வுகளைக் கூறினார். உடனே சிறுத்தொண்டர் மனோவேகத்தில் விரைந்தார். வயிரவரைக் கண்டு பணிந்து நின்றார். பிறகு எம் வீடு வந்து அமுது செய்ய வேண்டும் என வேண்டினார். உடனே வயிரவர் யாம் வடபுலத்தோம். எமக்கு உணவளிக்க உம்மால் இயலாது என்றார். உடனே சிறுத்தொண்டர் அடிகளே உங்கள் உணவுமுறையைக் கூறும் என்றார். உடனே வயிரவர் யாம் ஆறு மாதத்திற்கு ஒருமுறை உணவு உண்போம். அந்நாள் இந்நாளே. இன்று பசுக்கறி உண்பது எம் வழக்கம் என்றார். உடனே சிறுத்தொண்டர் எம்மிடம் **ஆடு, எருமை, பசு ஆகிய முப்பசு** உண்டு. அடிகளுக்கு உரியதைக் கூறினால் யான் அமுதாக்கி விரைவில் வருவேன் என்றார்.

வயிரவர் பசுவின் இயல்பு கூறல்

தொண்டரே நாம் உண்ணும் பசு மனிதப் பசு. அது ஐந்து வயது உடையதாயும் உறுப்புக் குறை இல்லாமலும் இருக்க வேண்டும். ஒரு

Koviloor Digital Library

குடும்பத்துக்கு ஒரே மகனாய் உள்ளவனை அவனது தந்தை உவந்து அரியவும் தாய் உவந்து பிடிக்கவும் இவ்வாறு அரிந்து அமுது செய்தால் யாம் உண்போம் என்றார். இதைக் கேட்ட சிறுத்தொண்டர், இது எனக்கு அரியதன்று. அடிகள் அமுது செய்ய இசைந்தால் போதும் என்று கூறி வீடு சேர்ந்தார். இதை,

அதுவும் முனைவர் மொழிந்தருளக் கேட்ட தொண்டர் அடியேனுக்கு
இதுவும் அரிதன்று எம்பெருமான் அமுது செய்யப் பெறில் என்று
கதும்என் விரைவில் அவர்இசையப் பெற்றுக் களிப்பால் காதலொடு
மதுமென் கமல மலர்ப்பாதம் பணிந்து மனையில் வந்தணைந்தார்.

எனும் பாடலில் தெய்வச் சேக்கிழார் கூறுவார். (சி.பு.–52)

சிறுத்தொண்டர் வீடு வந்தார். தம் மனைவியுடன் கலந்து ஆலோசித்தார். தம் பிள்ளையை அரிந்து அமுது செய்ய முடிவெடுத்தார். உடனே பள்ளிக்குச்சென்று சீராளரை அழைத்து வந்தார். குழந்தை சீராளரைக் குளிப்பாட்டி, தூய்மை செய்தனர். பெருகிவரும் பேரன் பினால் முத்தமிட தாய் நினைத்தபோது அடியார் உண்ணும் உணவு எச்சில்படுமே என எண்ணி அன்பிற்கு அணை போட்டு அருளரசியானார். சிறுத்தொண்டர் பிள்ளையின் தலைபிடித்தார். அன்னையார் காலை மடியிலே இடுக்கினார். இரு கைகளையும் தமது இரு கைகளால் பற்றினார். 'பெற்றோர் மகிழ்கிறார்' எனக் கருதிச் சீராளதேவர் சிரித்தார். உடனே பெற்றோர் எண்ணியதை முடித்தனர். தலைக்கறி அமுதுக்கு உதவாது என்று அது விலக்கப்பட்டது மற்றவை சமைக்கப்பட்டன.

வயிரவரை அழைத்தல்

சிறுத்தொண்டர் கணபதீச்சரக் கோயில் சென்று ஆத்தி மரத்தடியில் வீற்றிருந்த வயிரவரை அழைத்து வந்தார். வயிரவர் எல்லா உறுப்புகளையும் சமைத்தீரா என வினவினார். திருவெண்காட்டு நங்கையார் தலைக்கறியை விலக்கினோம் என்றார். வயிரவர் அது வேண்டுமென்றார். சந்தனத்தாதியார் எச்சரிக்கையுடன் அதனையும் சமைத்திருந்ததால் அதுவும் கொண்டுவரப்பட்டது. பிறகு வயிரவர், 'யாம் தனியே உண்பதில்லை சிவனடியாருடன் உண்டே வழக்கம்' என்றார். சிறுத்தொண்டர் சிவனடியாரைத் தேடினார். கிடைக்க வில்லை. நிலையை வயிரவர்க்கு விளக்கினார். வயிரவர் நாயனாரை நோக்கி நீரே எம்மோடு அமுது உண்க என்றார். அடியார் உணவுண்ண காலந்தாழ்ந்ததே என்ற கவலையில் சிறுத்தொண்டரும் உண்ண முனைந்தார். வயிரவர் நாயனாரைத் தடுத்தார். 'அமுதுண்ண உம்

Koviloor Digital Library

புதல்வனையும் அழை' என்றார். 'புதல்வன் இப்போது இங்கு உதவான்' என்றார். உடனே வயிரவர், 'புதல்வன் வந்தால் அன்றி யாம் உண்ணோம்' எனவே, தேடி அழைத்து வாரும்' என்றார்'

பெற்றோர் திருவருளை எண்ணி வெளியே வந்து மைந்தா! சீராளா! வாராய்! என அழைத்தனர். இறையருளால் சீராளர் பள்ளியினின்று ஓடிவருபவர்போல் வந்தார். பெற்றோர் மகிழ்ந்தனர். வீட்டிற்குள் சென்றனர். உள்ளே வயிரவர் இல்லை. சிறுத்தொண்டர் திகைத்தார். வெளியே வந்தார்.

அப்போது சிவபெருமான் உமாதேவி, முருகன் ஆகியோருடன் மழ விடைமேல் காட்சியளித்தார். அறுபத்து மூவருள் இவருக்கு மட்டுமே, இறைவன் சோமாஸ்கந்தராகக் காட்சி தந்தார். சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கையார், சீராளர், சந்தனத்தாதியார் ஆகியோர் முக்தி பெற்றனர்.

அருள்மிகு சூளிகாம்பாள் உடனுறை உத்தராபதீஸ்வரர்
உத்தராபதீஸ்வரர் திருக்கோயில் திருச்செங்காட்டங்குடி
திருக்கண்ணபுரம் (அஞ்சல்) அ.கு. 609704
நாகை வட்டம்மற்றும் மாவட்டம்

Koviloor Digital Library

59. சிறுத்தொண்டர் சில சிந்தனைகள்

சிவனடியார்களுக்குப் பெருந்தொண்டு செய்த பெருமகனார் சிறுத்தொண்டர் ஆவார். இவர் பிறந்த ஊரான திருச்செங்காட்டங் குடியில் இவர் இருந்த வீடு இப்போது திருக்கோயிலாக உள்ளது.

இவரது பெயர்தான் சிறுத்தொண்டர். ஆனால் இவர் செய்த தொண்டுகள் அளவிட முடியாதவை. சிறுத்தொண்டருக்கு அப்பெயர் ஏன் வந்தது என்பதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவர்.

சீதமதி அரவினுடன் செஞ்சடைமேல் செறிவித்த
நாதன்அடியார் தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையார் அவர்முன்பு மிகச்சிறியராய் அடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல் (சி.பு.–15)

மிகப்பெரிய வீரர். போர்க்களங்களில் வெல்லும் தீரர். இருந்தும் சிவன் அடியார் முன்பு அடங்கி ஒடுங்கிய நிலையினராய் இருப்ப தால் இவர் சிறுத்தொண்டர் எனப் பெயர் பெற்றார்.

மிகப்பெரிய தொண்டுகளையும் சேவைகளையும் சிவன் அடியார்களுக்குச் செய்தவரே சிறுத்தொண்டர் எனும் பேர்கொண்டார் என்றால் ஒரு தொண்டைக்கூட செய்யாமல் தொண்டர்போல் நடிக்கும் நாயைவிடக் கடைப்பட்டவர்களாய் இருக்கும் நாங்கள் எல்லாம் என்ன பேர் கொள்வது? என இறைவனைப் பார்த்துக் கேட்கிறார், அருட்பிரகாச வள்ளலார்.

ஆர்கொண்டார் சேய்க்கறியிட்டாரே சிறுத்தொண்டப்
பேர்கொண்டார் ஆயிடில் எம்பெம்மானே – ஓர்தொண்டே
நாய்க்கும் கடைப்பட்ட நாங்களென்பேம் எங்கள்முடை
வாய்க்கும் இங்கிஃதோர் வழக்கு. (3.4 சிவநேச வெண்பா. 47)

கல்விச் சிறப்பு

கல்வியானது தனக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகவும் தான் பிறருக்குப் பயன்படவேண்டும் என்பதற்காகவும் கற்கப்படுவது ஆகும். சிறுத்தொண்டர் பின்வரும் மூன்றுவகைக் கலைகளைக் கற்றார்.

1. ஆயுர்வேதக் கலைகள்.
2. வடநூற் கலைகள்
3. படைக்கலக் கலைகள்

Koviloor Digital Library

முதல்வகைக்கலை, தான் பிறருக்குப் பயன்படவேண்டும் என்பதற்காகக் கற்கப்பட்டது. இரண்டாம் வகைக் கலை பல்துறை அறிவு பெறுவதற்காகக் கற்கப்பட்டது. மூன்றாவது வகைக் கலை தேச மக்களின் பாதுகாப்பு நலன் வேண்டியும் தன் வீரம் விளங்க வேண்டியும் கற்கப்பட்டது.

கலைகளைக் கற்கும் கல்வியின் பயன் என்னவென்றால் எல்லாம்வல்ல பரம்பொருளிடம் சென்று சேர்வதே என்பதை நன்கறிந்தவர் சிறுத்தொண்டர் ஆவார். இதனைப் பின்வரும் பாடலில் தெய்வச் சேக்கிழார் செப்புவர்.

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவுஇன்றிப் பயின்றுஅவற்றால்
தெள்ளிவடித்து அறிந்த பொருள் சிவன்கழலில் செறிவுஎன்றே
கொள்ளும் உணர்வினில் முன்னே கூற்றுஉதைத்த கழற்குஅன்பு
பள்ளமடையாய் என்றும் பயின்றுவரும் பண்புஉடையார் (சி.பு.–4)

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" (திருக்குறள் – 2)

எனும் தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருவாக்கை அறிவுடையோர் அறிக.

அன்னதானத்தின் அருஞ்சிறப்பு

தானங்கள் அனைத்திலும் மிகச்சிறந்தது அன்னதானம் ஆகும். இதனால்தான், **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே** (புறம். 18:19 & மணி.25:228–231) என இலக்கியங்கள் கூறுகின்றன.

கிருத யுகத்தில் உயிர் எலும்பைப் பற்றி நின்றது. திரேதா யுகத்திலே உயிர் நரம்பைப் பற்றி நின்றது. துவாபர யுகத்திலே உயிர் உதிரத்தைப்பற்றி நின்றது. கலியுகத்திலே உயிர் அன்னத்தைப் பற்றி நின்றது என்னும் திருமுருக கிருபானந்த வாரியாரின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

பசி என்று வந்த சிவனடியார்க்குப் 'புசி' என்று உணவு படைத்த சிறுத்தொண்டர் போற்றுதலுக்குரியவர்.

ஆயிரம் அந்தணர் வாழ்விடங்களை (அக்ரகாரங்களை – பார்ப்பனச்சேரி) அந்தணர்க்குக் கொடுத்தால் ஒரு புண்ணியம். ஆயிரம் திருக்கோயில்கள் கட்டினால் ஒரு புண்ணியம். ஆனால் இவை இரண்டும் ஒரு சிவஞானம் பெற்ற சிவஞானிக்கு உணவு படைத்த புண்ணியத்திற்கு ஒருபோதும் நிகராகா என்பார் திருமூலர்.

அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்

Koviloor Digital Library

பகரு ஞானி பகலுண் பலத்திற்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே. (திருமந்திரம் – 1860)

மேலும் திருமூலர் இறைவனைப் படமாடும் கோயில் என்றும் இறைவனது அடியாரை நடமாடும் கோயில் என்றும் கூறுகிறார். படமாடும் கோயிலாகிய இறைவனுக்கு இலட்ச ரூபாய் செலவு செய்தாலும் அது நடமாடும் கோயிலாகிய சிவன் அடியாருக்குச் சென்று சேராது. ஆனால் நடமாடும் கோயிலாகிய சிவன் அடியார்க்கு ஒரு ரூபாய் கொடுத்தால்கூட அது படமாடும் கோயிலாகிய இறைவனைச் சென்று சேரும் என்கிறார்.

படமாடும் கோயில் பகவற்கொன்று ஈயில்
நடமாடும் கோயில் நம்பற்கு அங்குஆகா
நடமாடும் கோயில் நம்பற்கு ஒன்றுஈயில்
படமாடும்கோயில் பகவற்கு அஃதுஆமே. (திருமந்திரம் – 1857)

சிறுத்தொண்டரின் பக்தியைச் சோதிக்க இறைவன் பிள்ளைக்கறி கேட்க வேண்டுமா? வேறு வகையில் சோதிக்கக் கூடாதா? எனச் சிலர் கேள்வி எழுப்புவர்.

இளங்கலைப் பட்டப்படிப்பு (பி.ஏ.) படிக்கும் மாணவர்கள் பல பிரிவுகளை எடுத்துப் படிக்கின்றனர். பி.ஏ. தமிழ், பொருளாதாரம் எனப் பல பிரிவுகள். அறிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தன்னை நாடிவந்த மாணவனுக்கு ஆசிரியர் அந்தந்த மாணவன் படித்த பாடத்தில் தேர்வு வைக்கிறார். பி.ஏ. – தமிழ் இலக்கியம் படித்த மாணவனுக்கு இலக்கியத்தில் தேர்வு. வரலாறு படித்த மாணவனுக்கு வரலாற்றில் தேர்வு. இப்படியே ஒவ்வொருவருக்கும். நாங்கள் அனைவரும் பெறப்போவது பி.ஏ., என்ற பட்டம்தானே, எனவே எல்லோருக்கும் ஒரே மாதிரி வினாத்தாள் கொடுத்து, தேர்வு வையுங்கள் என ஒரு மாணவன் கேட்டால் அவனுக்கு என்ன பதில் சொல்வது? பெறப் போகும் பட்டம் ஒன்றாக இருந்தாலும் படித்த பாடத்தில்தானே தேர்வு வைத்துத் தகுதியை உறுதி செய்ய முடியும். அதுபோல, பக்தி எனும் கல்லூரியில் முத்தி எனும் பட்டத்தைப் பெற, தாங்களே விரும்பி ஏற்றுக்கொண்ட வாழ்க்கை நெறி என்னும் பாடத்தில் தேர்வு எனும் சோதனையை நடத்த சிவபரம் பொருளே குருவாக (ஆசிரியராக) வருகின்றார். என் செய்வது! நாமே விரும்பி ஏற்றுக்கொண்டு, படித்த விருப்பப் பாடமாயிற்றே நம் வாழ்க்கை.

திருஞானசம்பந்தர் மூன்று வயதில் சிவகுருவின் திருவடி பிடித்துப் பக்தி எனும் கல்லூரியில் சேர்ந்தார். இக்கல்லூரியில் சேருவதற்குத்தான் வயது வரம்பு இல்லையே! தொலைதூரக் கல்வி

Koviloor Digital Library

நிறுவனம்போல. அதனால் எவ்விதத் துன்பமும் இல்லாமல் பதினாறு வயதில் முக்தி பெற்றார். திருநாவுக்கரசரோ புறச்சமயம் சென்று இறுதியில் உண்மை உணர்ந்து மெய்க்குருபிரானை அடைந்து திருவடி பிடித்துப் பக்தி எனும் கல்லூரியில் சேர்ந்தார். வாலிபப் பருவம் கடந்து சேர்ந்ததால் எண்பது வயதிற்குப் பிறகு முக்தி எனும் பட்டம் கிடைக்கிறது. கடந்தகால வாழ்க்கை நெறிக்கேற்ப தேர்வு எனும் சோதனை நாவுக்கரசருக்கு நிகழ்கிறது. திருஞானசம்பந்தருக்கு மூன்று வயதில் திருவடியினைப் பெறும் பேறும் திருநாவுக்கரசருக்கு வாலிபப் பருவம் கடந்து பெறும் பேறும் ஏன் ஏற்படவேண்டும்? இருவருக்கும் ஒரே மாதிரி நிகழக்கூடாதா? என வினவலாம். என் செய்வது! விட்டகுறை தொட்டகுறை. முன்னவர் கொடுத்து வைத்தவர் இப்பொழுது வட்டியும் முதலுமாக வாங்கிக் கொண்டு போகிறார் அவ்வளவே!

பல்லவப் பேரரசுக்காக வாதாபிப் போரில் ஆயிரக்கணக்கில் வீரர்களை வெட்டி வீழ்த்தியவர் பரஞ்சோதி என்கிற சிறுத் தொண்டர். பின்னாளில் பக்தி எனும் கல்லூரியில் பயின்று முக்தி எனும் பட்டத்தைப் பெற முயலும்போது அவருக்குத் தேர்வு வைக்கப் பெறுகிறது. சிறுத்தொண்டர் வாலிபப் பருவத்தில் விரும்பி ஏற்றுக் கொண்ட வாழ்க்கை நெறியை (படைத் தலைமை ஏற்று ஆயிரக் கணக்கான உயிர்களைக் கொன்றமை) அடியொற்றித் தேர்வு (சோதனை) நிகழ்கிறது. அன்று ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொன்றாயே (விருப்பு வெறுப்பு இன்றி) இன்று உன் ஒரே மகனைக் (அதே மனநிலையில்) கொலை செய்பார்க்கலாம் எனத் தேர்வு நடக்கிறது.

நாம் விரும்பிப் படித்த விருப்பப் பாடத்தில்தான் தேர்வு நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாமல் தேர்வாளரிடம் குற்றம் காணலாமா? இப்படிக் கடுமையான சோதனை நடத்தக்கூடிய விருப்பப் பாடத்தை (வாழ்க்கை நெறியை) விரும்பிப் படித்த நாம்தானே குற்றவாளிகள்!

சிந்தனைக்கு...

பசுக்கறி உண்பது எம் வழக்கம் என்று வயிரவர் கூறியவுடனே சிறுத்தொண்டர் எம்மிடம் முந்நிரையும் உள்ளன என்றார். **முந்நிரை** (சி.தொ.பு. 49) என்ற சொல்லாட்சி இருபொருளைக் கொண்டது. முந்நிரை என்பது ஆடு, எருமை, பசு எனும் மூன்று நிரைகளைக் குறிக்கிறது. முந்நிரை என்பது சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் எனும் மூவகை ஆன்மாக்களைக் குறிப்பதாகப் பொருள் கூறுவார் வாரியார் சுவாமிகள்.

Koviloor Digital Library

முந்நிரை என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்தைக் குறிப்பதாகவும் கருத இடமிருக்கிறது. சிறுத்தொண்டர் முந்நிரையுள் எதை வேண்டுமானாலும் தருகிறேன் என்கிறார். அதாவது சிறுத்தொண்டர் எனும் உயிரிடம் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றும் உள்ளன. இம்மூன்றில் எதை வேண்டுமானாலும் தரச் சிறுத்தொண்டர் எனும் உயிர் தயாராய் உள்ளது. ஆனால் இறைவனோ சிறுத்தொண்டரிடம் உள்ள மும்மலத்தையும் அழித்து, பசுவாகிய உயிரைத் தன்னோடு சேர்க்கவே வயிரவர் வடிவத்தில் வந்தார் எனப் பொருள் கொள்ளவும் இடமுள்ளது. மும்மலத்தால் மூடப்பட்டிருக்கும் பசுவாகிய தம் உயிரினையே இறைவனிடம் சமைத்து விட்டால் (பக்குவப்படுத்தி விட்டால்) இறையருள் இடையறாது இறங்கி இன்பமருளும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை. ஓம் நமசிவாய... ஓம்.

இன்றும் இக்கோயிலில் பிள்ளைக்கறி* அமுது படையல் நிகழ்ச்சி சித்திரை பரணி நாளில் நடைபெறுகிறது.

அருள்மிகு சூளிகாம்பாள் உடனுறை உத்தராபதீஸ்வரர்
உத்தராபதீஸ்வரர் திருக்கோயில் திருச்செங்காட்டங்குடி
திருக்கண்ணபுரம் (அஞ்சல்) அ.கு. 609 704
நாகை வட்டம் & மாவட்டம்

* பிள்ளைக்கறி என்பது, தற்காலத்தே பாசிப்பருப்பும், மாவும் கலந்து செய்யப்படும் பொருள்.

Koviloor Digital Library

60. கழறிற்றறிவார் (சேரமான் பெருமாள்)

(175 பாடல்கள்)

பிறந்த ஊர் : கொடுங்கோளூர் (சேர நாடு - இன்றைய கேரள மாநிலம்) சென்னை - கொச்சி இருப்புப் பாதையில் இருஞாலக்குடாவிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சூரிலிருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது.

குலம் : அரசர்

குருபூசை மாதம் : ஆடி

நட்சத்திரம் : சுவாதி

காலம் : சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840 - 865)

கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவாற்கும் அடியேன் (திரு. தொகை-6:3)

மலைநாட்டில் கொடுங்கோளூரில் சேரர் மரபில் பெருமாக் கோதையார் **(சேரமான் பெருமாள் நாயனார்)** பிறந்தார். உலக வாழ்வும் அரச வாழ்வும் உறுதியானவை அல்ல எனும் தெளிவு இவருக்கு ஏற்பட்டது. ஆதலால் அவர் நாள்தோறும் திருவஞ்சைக் களத்தப்பனை வழிபட்டு வந்தார். அப்போது சேர நாட்டை ஆண்டு வந்த செங்கோற் பொறையன் எனும் அரசன் அரச வாழ்வு துறந்து துறவு மேற்கொண்டான். அவனுக்குப்பின் யார் அரசாள்வது என அமைச்சர்கள் ஆராய்ந்தனர்.. பெருமாக் கோதையார் சேரர்குல முதல்வர் என்பதாலும் அரசிற்கு உரியவர் என்பதாலும் அவரை அரசராக்க அமைச்சர்கள் எண்ணினர். அவர்கள் பெருமாக்கோதை யாரிடம் சென்று அரசுப் பொறுப்பை ஏற்கவேண்டும் என வேண்டினர். இதைத் தெய்வச் சேக்கிழார்,

எய்தி அவர்தம் எதிர்இறைஞ்சி இருந்தண் சாரல் மலைநாட்டுச்
செய்திமுறைமை யால்உரிமைச் செங்கோல் அரசுபுரிவதற்கு
மைதீர் நெறியின் முடிசூடி அருளும் மரபால் வந்ததுஎனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற பொழுதின்கண் (க.பு. 12)

எனும் பாடலில் செப்புவார்.

அமைச்சர்களின் விருப்பத்திற்கு ஏற்பச் செயல்பட்டால் தாம் செய்யும் திருத்தொண்டுக்குப் பழுது வந்து விடுமோ என்று

Koviloor Digital Library

அஞ்சினார். திருத்தொண்டுக்குப் பழுது நேராதவாறு அரசு ஆளல் இயலுமோ என எண்ணினார். இதற்குத் திருவருளின் துணை தேவை எனக் கருதினார். திருவருளின் திருவுளத்தை அறிய எண்ணிய பெருமாக்கோதையார் இறைவரிடம் வேண்டுதல் செய்தார்.

பெருமாக்கோதையார் பெற்றவை

இறைவனது திருவருளால் பெருமாக்கோதையாருக்குப் பின்வருவன கிடைத்தன. 1. சிவபெருமானின் வழிபாடு. 2. உயர்திணை உயிர்களும் அஃறிணை உயிர்களும் கூறுவனவற்றை அறியும் திறன் 3. ஒப்பில்லா வெற்றி 4. தடையில்லாத ஈகை 5. படை வாகனம் முதலியவை. இதனைத் தெய்வச் சேக்கிழார்,

மேவும் உரிமை அரசுஅளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறுஇல்லாத்
தாஇல் விறலும் தண்டாத கொடையும் படைவாகனம் முதலாம்
காவல் மன்னர்க்கு உரியனவும் எல்லாம் கைவந்துஉறப் பெற்றார் (க.பு. – 14)

எனும் பாடலில் குறிப்பிடுவார். யாரும் யாவையும் கூறுவதை உணரும் ஆற்றல் பெற்றமையால் இவருக்குக் 'கழறிற்றறிவார்' எனும் பெயர் வழங்கப்படலாயிற்று.

அரசாள உடன்படல்

கழறிற்றறிவார் தாம் அரசாள உடன்படுவதாக அமைச்சருக்குக் கூறினார். பிறகு ஒரு நல்ல நாளில் பதவி ஏற்றார். பின்னர்த் திருக்கோயில் சென்று இறைவனைத் தொழுதார். பின்னர் யானைமீது அமர்ந்து ஊர்வலம் வந்தார். அப்போது வண்ணான் ஒருவன் எதிரிலே வந்தான். அவனுடைய தோளில் உவர்மண்மூட்டை (பொதி) இருந்தது. உவர்மண் வழிந்து உடல்முழுமையும் வெண்மை இருந்தது. அவனைச் சிவனடியாராகக் கண்ட கழறிற்றறிவார் யானையை விட்டு இறங்கி, அவனை வணங்கினார். வண்ணான் மனம் கலங்கி, நான் அடி வண்ணான் என்று கூறினான். உடனே கழறிற்றறிவார் அடியேன் அடிச்சேரன் என்றார். நீர் சிவனடியார் அல்லர் எனினும் சிவனடியாரை நினைவுபடுத்தினீர் என்றார். இச்செய்தியைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவர்.

சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை கலங்கி முன்வணங்க
யார்என்று அடியேனைக் கொண்டது அடியேன் அடிவண்ணான் என்னச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று திருநீற்றின்
வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும்என மொழிந்தார் (க.பு.– 19)

Koviloor Digital Library

இறைவன் திருவருளால் சிலம்பொலி கேட்டல்

கழறிற்றறிவார், தேடுகின்ற பொருள், செல்வம் மற்றவை எல்லாம் தில்லைக் கூத்தனாம் சிவபெருமானின் திருவடிகளே என்று வாழ்ந்து நாள்தோறும் இறைபூசை செய்து வந்தார். ஒவ்வொரு நாளும் பூசையின் இறுதியில் சிவபெருமான் தனது சிலம்பொலி கழறிற்றறி வாருக்குக் கேட்குமாறு செய்தார்.

பாணபத்திரர்

மதுரையில் பாணபத்திரர் எனும் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவருக்கு மதுரைச் சொக்கநாதப் பெருமான் பொருள் வழங்க எண்ணினார். உடனே பாணபத்திரரின் கனவில் தோன்றிச் சேரன் நம்மீது பேரன்பு கொண்டவன். உனக்கு ஒரு திருமுகம் தருகிறோம் அதைக்கொண்டு சென்று அவனிடம் கொடுத்துப் பொருள் பெறுக" என்று திருவாய் மலர்ந்து அருளினார். "மதிமலி புரிசை" என்னும் திருப்பாசுரத்தையும் கொடுத்தார்.

பாணபத்திரர், ஆண்டவனின் கட்டளையை ஏற்று மலைநாடு சென்றார். கொடுங்கோளூரில் உள்ள அரண்மனைக்குச் சென்றார். தமது வருகையைக் கழறிற்றறிவாருக்குத் தெரிவித்தார். அவர் ஓடிவந்து தொழுதார். இவர் அவரைத் தொழுது திருமுகம் கொடுத்தார். கழறிற் றறிவார் அதை வாங்கிப் பார்த்துத் தம் தலைமீது வைத்துக்கொண்டு தம்மையே மறந்து ஆனந்த தாண்டவம் ஆடினார். பின்னர் பாண பத்திரரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அமைச்சர்களை அழைத்தார். நம்மிடம் உள்ள பலவகைப்பட்ட பொருட்களையும் பொதி செய்து, அவற்றை ஆட்கள் மூலம் கொண்டு வருக என்று உத்தரவு இட்டார். அவர்கள் அரசன் உத்தரவை ஏற்றுச் செயல்பட்டனர்.

பாணபத்திரர் பொருள் மட்டும் பெற்றுக்கொள்ளல்

கழறிற்றறிவார் பாணபத்திரருக்குப் பொதிகளைக் காட்டி எல்லா வற்றையும் கொள்க என வேண்டினார். உடனே பாணபத்திரர் தான் விரும்புவதை மட்டுமே பெற வேண்டும். இதுவே சிவபெருமான் ஆணை. எனவே அரசு முதலியவற்றை அடிகளே கொள்க என்று கூறினார். கழறிற்றறிவார் இறைவனது ஆணையை மறுக்க அஞ்சினார். பாணபத்திரர் கூற்றுப்படி நடந்தார். பாணபத்திரர் பொருள், யானை ஆகியவை பெற்றார். பின்னர் யானை மீதேறிப் புறப்பட்டார்.

Koviloor Digital Library

கழறிற்றறிவார் அவரைத் தொடர்ந்தார். நகர்ப்புறத்துக்குச் சென்றதும் கழறிற்றறிவாரிடம் பாணபத்திரர் விடைபெற்றார். பிறகு மதுரை சென்றார்.

சிலம்பொலி கேட்கவில்லை

ஒருநாள் வழக்கமாகப் பூசையின் முடிவில் அவருக்குக் கேட்கும் சிலம்பொலி அன்றைக்குக் கேட்கவில்லை. வருத்தமடைந்தார். உடனே நான் ஏதோ தவறு செய்து விட்டேன். இவ்வுடல் எதற்கு? என்று உடைவாளை உருவி மார்பில் பாய்ச்சினார். உடனே சிலம்பொலி கேட்டது. உடனே வாளை நீக்கினார். இறைவனை வணங்கினார். பெருமானே இத்திருவருளை முன்னம் செய்யாதது ஏன் என்றார்? சேரனே இன்று சுந்தரன் எம்மைச் சிற்றம்பலத்தில் கண்டு, வழிபட்டுத் தமிழால் எம்மைப் பாடினான். அத்தெய்வத்தமிழ் எம்மைத் தன்வயம் செய்தது. ஆதலால் சிலம்பொலி கேட்பிக்கக் காலம் தாழ்த்தினேன் என்றார். உடனே கழறிற்றறிவார் சிற்றம்பலத்தையும் சுந்தரரையும் காண வேண்டும் எனும் உறுதியோடு தில்லை சென்றார். அங்கு இறைவனைக் கண்டார். பொன்வண்ணத்தந்தாதி பாடினார். கூத்தனின் தில்லைப் பேரம்பலமாகிய சிற்றம்பலத்தில் பேரொளியையும் சிலம்பின் பேரொலியையும் கண்டு, கேட்டு, உணர்வில் உயர்ந்தார்.

சுந்தரரைக் காணல்

கழறிற்றறிவார் சுந்தரரைக் காண விரும்பி, திருவாரூர் சென்றார். சுந்தரர் இவரை வரவேற்றார். இருவரும் அன்பின் மிகுதியால் ஒருவரை ஒருவர் வணங்கினர். இதனால் சுந்தரருக்குச் சேரமான் தோழர் எனும் திருநாமம் வழங்கலானது. இருவரும் கோயில் சென்று வணங்கினர். கழறிற்றறிவார், மும்மணிக்கோவை பாடினார்.

முப்பெரு வேந்தர்களைச் சந்தித்தல்

மதுரை முதலான ஊர்களுக்குச் செல்ல விரும்பி, சுந்தரரும் கழறிற்றறிவாரும் புறப்பட்டனர். திருநாகைக்காரோணம் சென்றனர். பிறகு திருமறைக்காடு சென்றனர். அங்கே கழறிற்றறிவார் முன்பு தில்லையில் பாடிய திருவந்தாதிப் பாடல்களினாலேயே பாடிப் பணிந்தார். இருவரும் அங்கிருந்து மதுரை சென்றனர். அங்கே ஏற்கெனவே சோழ மன்னனும் சென்றிருந்தான். சேரர், சோழர், பாண்டியர் என மூவரும் நம்பியாரூரரும் அளவளாவினர்.

Koviloor Digital Library

சிலநாள் கழித்து கழறிற்றறிவாரும் சுந்தரரும் திருவாரூர் சென்றனர். கழறிற்றறிவார் தம் ஊருக்கு வருமாறு சுந்தரரைப் பலமுறை அழைத்தார். சுந்தரர் சேரமானின் அழைப்பை ஏற்றார். இருவரும் கொடுங்கோளூர் சேர்ந்து இறைவனை வணங்கி வந்தனர்.

சுந்தரருக்குத் திருவாரூர்ப் பெருமான் நினைவு தோன்ற அவர் திருவாரூர் சென்றார். சிலநாள் கழித்து, சுந்தரர் மீண்டும் கொடுங் கோளூருக்கு வந்தார். இறையருளால் ஒரு வெள்ளானை வந்தது. அவர் அதிலேறி, கயிலை சென்றார். உடனே கழறிற்றறிவாரும் குதிரை மீதேறிப் பயணமானார். இதன் தொடர்ச்சியை வெள்ளானைச் சருக்கத்தில் காண்க.

அருள்மிகு மகாதேவ சுவாமி கோயில்
ஸ்ரீவாஞ்சிகுளம் (அஞ்சல்)
கொடுங்காலூர் (வழி), திருச்சூர் மாவட்டம்,
கேரள மாநிலம், அஞ்சல் - 680 664.

SRI MAHADEVA SWAMY TEMPLE
Sri Vanchi Kulam & Post (Via)
Kodungalloor Pin - 680 664.
Trichur (Dt), KERALA

Koviloor Digital Library

61. கழறிற்றறிவார் சுந்தரர் தொடர்பு

(175 பாடல்கள்)

சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரரைக் காண விரும்பி, திருவாரூர் நோக்கிப் பயணமானார். இடையில் தில்லையம்பலத் தானை வணங்கிச் செல்லுகிறார். போகிற வழியில் சீகாழி சென்று தோணியப்பரைத் தொழுதார். இடையில் இருந்த அனைத்துத் திருத் தலங்களையும் வணங்கினார். காவிரி நதி கடந்து திருவாரூர் சென்றார்.

அப்பொழுது சுந்தரர் நாகைக் காரோணம் (நாகப்பட்டினம்) சென்று இறைவனைத் தொழுது, பொன், மணி, ஆடை, கஸ்தூரி, குதிரை போன்றவை பெற்றுத் திருவாரூர்க்கு வந்திருந்தார். சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாரை வரவேற்றார்.

இருவரும் ஒருவரை ஒருவர் பேரன்பின் காரணமாகவும் பெருமதிப்பின் காரணமாகவும் தழுவிக் கொண்டனர். இருவரும் எலும்பும் உருகுமாறு உயிரும் உடலும் ஒன்றாக ஆன நிலை அடைந் தனர். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவார்.

முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து முகந்துஎடுத்தே
அன்பு பெருகத் தழுவ விரைந்து அவரும் ஆர்வத்தொடு தழுவ
இன்ப வெள்ளத்திடைநீந்தி ஏறமாட்டாது அலைவார்போல்
என்பும் உருக உயிர்ஒன்றி உடம்பும் ஒன்றுஆம் என இசைந்தார் (க.பு.–65)

சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனார் ஆகிய இருவரின் நட்பைக் கண்ட திருத்தொண்டர்கள் மகிழ்ந்தனர். அன்று முதல் சுந்தரருக் குச் சேரமான் தோழர் எனும் திருப்பெயர் வழங்கலாயிற்று. இதை,

ஆன நிலைமை கண்ட திருத்தொண்டர் அளவுஇல் மகிழ்வுஎய்த
மானச் சேரர் பெருமானார் தாமும் வன்தொண்டரும் கலந்த
பான்மை நண்பால் சேரமான் தோழர் என்று பார்பரவும்
மேன்மை நாமம் முனைப்பாடி வேந்தர்க்கு ஆகி விளங்கியதால் (க.பு.–66)

எனும் பாடலில் தெய்வச் சேக்கிழார் செப்புவார்.

சேரமான் பெருமாள் நாயனாரை அழைத்துக் கொண்டு சுந்தரர் தியாகேசரின் திருக்கோயில் சென்றார். அங்குச் சேரமான் பெருமாள் நாயானார் திருவாரூர் மும்மணிக் கோவை பாடினார். தோழருடன் சுந்தரர் பரவையாருடைய திருமடம் சென்றார். இருவருக்கும் பரவையார்

Koviloor Digital Library

விருந்து கொடுத்தார். ஒன்றாக அமர்ந்துண்ண சேரமான் அஞ்ச, சுந்தரர் அவர் கரம்பற்றி அழைத்து, தம் அருகில் இருத்தினார். இருவரும் அமுதுண்டனர்.

மூவேந்தரும் சந்தித்தல்

மதுரை முதலிய தலங்களுக்குச் செல்ல விரும்பிய சுந்தரரோடு சேரமான் பெருமாள் நாயனாரும், சேர்ந்து புறப்பட்டார். திருநாகைக் காரோணம் சென்று, பிறகு திருமறைக்காடு சென்றனர். இருவரும் அங்கிருந்து மதுரை சென்றனர். அங்கு ஏற்கெனவே சோழ மன்னனும் சென்றிருந்தான். சேரர், சோழர், பாண்டியர், சுந்தரர் ஆகியோர் அளவளாவி மகிழ்ந்தனர்.

இருவரும் சேரநாடு செல்லல்

சுந்தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் மதுரையிலிருந்து புறப்பட்டுத் திருவாரூர் சென்றனர். சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரரைத் தம் நாட்டிற்கு வரவேண்டினார். சுந்தரர் உடன்பட்டார். காவிரியாறு வழிவிட திருவையாற்று இறைவனை வணங்கி - பிற தலங்களையும் வணங்கிக் கொண்டே இருவரும் சேரநாடு சென்று கொடுங்கோளூர் அடைந்தனர். அஞ்சக்களத்தப்பனை வணங்கி, மகிழ்ந்திருந்தனர்.

சுந்தரர் திருவாரூர் செல்லல்

சுந்தரருக்குத் திருவாரூர் தியாகேசப் பெருமான் நினைவில் நிறைந்தார். சுந்தரர் திருவாரூர் செல்ல முனைந்தார். சேரமான் அளித்த பெரும் பொருளோடு சுந்தரர் திருவாரூர் சென்றார். திருவாரூர் வரும் வழியில் திருமுருகன் பூண்டியில் இறைவனால் பொருள் கவரப்பெற்று மீண்டும் பெற்றார்.

சிலகாலம் சென்றபின் சுந்தரர் மீண்டும் சேரநாடு சென்று கொடுங்கோளூரை அடைந்தார். அவர் அஞ்சக்களத்தப்பனை வழிபட்டுக் கொண்டிருந்தபோது இறையருளால் ஒரு வெள்ளை யானை (ஐராவதம்) வந்தது. அவர் அதில் ஏறித் திருக்கயிலை சென்றார்.

அப்போது அவர் தம் தோழரை நினைத்தார். அதை அறிந்த சேரமான் பெருமாள் நாயனார் ஒரு குதிரை மீதேறி திருவஞ்சைக் களம் வந்தார். யானை மீது சுந்தரர் செல்வதைக் கண்டார். தாம் வந்த குதிரையின் செவியில் ஐந்தெழுத்தை ஓதினார். அது ஆகாய வழி

Koviloor Digital Library

சென்று கயிலை அடைந்தது. சிவபெருமான் சேரமான் பெருமாள் நாயனாரை நோக்கி 'யாம் அழையாமல் வந்தனையே?' என வினவினார். உடனே சேரமான் பெருமாள் நாயனார், 'நான் உம்மீது உலா பாடியுள்ளேன் கேட்டருள்க' என்றார்.

இறைவர் இசைந்தார். **திருக்கயிலாய ஞான உலாவைச்** சேரமான் பெருமாள் நாயனார் பாடினார். சிவன் கேட்டு மகிழ்ந்து சுந்தரனும் நீயும் சிவகணத் தலைவர்களாய் இருங்கள் என வாழ்த்தினர்.

சேரமான் பெருமாள் நாயனார் அருளிச்செயல்கள்

சேரமான் பெருமாள் நாயனார் சேர நாட்டுப் பேரரசராக விளங்கியதோடு மட்டுமல்லாமல், ஒரு சிறந்த புலவராகவும் விளங்கினார். இவர் திருவாய் மலர்ந்தருளிய நூல்கள் மூன்று.

1. பொன்வண்ணத்தந்தாதி (100 பாடல்கள்)
2. திருவாரூர் மும்மணிக்கோவை (30 பாடல்கள்)
3. திருக்கயிலாய ஞான உலா (197 கண்ணிகள்)

இவற்றுள் பொன்வண்ணத்தந்தாதி தில்லையில் பாடப் பட்டது. திருவாரூர் மும்மணிக்கோவை திருவாரூரிலிருக்கும் சிவபெரு மானைச் சுந்தரரோடு சென்று வணங்கியபோது பாடப்பட்டது. திருக்கயிலாய ஞான உலா திருக்கயிலையில் இயற்றப்பட்டது.

பொன்வண்ணத்தந்தாதி

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய முதல் நூல் இதுவாகும். பொன்வண்ணத்தந்தாதி என்பது இந்நூலுக்கு அமைந்த பெயர். இது ஒரு காரணப்பெயர். இந்நூல் இப்பெயர் பெறக் காரணங்கள் இரண்டு. ஒன்று; பொன்வண்ணம் எனத் தொடங்கப்பெற்று, பொன் வண்ணமே என முடிந்தமை, இரண்டு; அந்தாதித் தொடையாக அமைந்துள்ளமை. இந்நூலின் மொத்தப் பாடல்கள் நூறு.

இலக்கியச் சிறப்பு

இந்நூலில் உள்ள பாடல்கள் இலக்கியச் சிறப்பு கொண்டவை. மோனை, எதுகை முதலிய தொடைகள் சிறப்பாக அமைந் துள்ளன. உவமை முதலான பொருளணிகள் பொலிவுபெற்றுள்ளன. யமகம், திரிபு முதலிய சொல்லணிகளும் கையாளப்பட்டுள்ளன. இறைவன் மீது பெருங்காதல் கொண்ட ஒரு பெண் பாடியதைப்

Koviloor Digital Library

போல் உள்ளது இந்நூலின் முதல்பாடல்.

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை தன்னைக் கண்ட
என்வண்ணம்எவ்வண்ணம் அவ்வண்ணம் ஆகிய ஈசனுக்கே. (பொ.வ.அ. – 1)

திருவாரூர் மும்மணிக்கோவை

இந்நூல் அகவற்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் மூன்று வகைப் பாக்களால் 30 பாடல்களைக் கொண்டது. வகைக்குப் பத்துப் பாடல்களைக் கொண்டு பாடப்பெற்றுள்ளது.

இது திருவாரூர் பெருமான் மீது பாடப்பட்டுள்ளதால் திருவாரூர் மும்மணிக்கோவை எனப் பெயர் பெற்றது. சுந்தரர் தலைமையில் இந்நூல் திருவாரூர்ப் பூங்கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இந்நூலில் உள்ள குறிப்பிடத்தக்க வரலாற்றுக் குறிப்புகள் : 1.இறைவன் விண்ணகக் கங்கைப் பெருவெள்ளத்தை அடக்கியமை. 2. அதனைச் சடையில் சேர்த்து, திங்களைக் காத்தமை. 3. நஞ்சுண்டு தேவர்களைக் காத்தமை, 4. மேருவை வில்லாக வளைத்தமை, 5. முப்புரமெரித்தமை, 6. தக்கன் வேள்வியை அழித்தமை, 7. காமனை எரித்தமை, 8. ஆனையை உரித்துப் போர்த்தமை, 9. அர்ச்சுனனுக்கு அருள்புரிந்தமை. சங்கரனின் தாள் பணியாதோர் நிலையைப் பின்வரும் இறுதிப் பாடல் கூறுகிறது.

தாழ்ந்து கிடந்த சடைமுடிச் சங்கரன் தாள்பணியாது
ஆழ்ந்து கிடந்து நைவார் கிளைபோல் அயர் வேற்கிரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல் திரைஎன்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்து அலரித் துயிலாது இவ்விரிகடலே (தி.மு.கோ.–30)

திருக்கயிலாய ஞான உலா

சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலையில் பாடிய இந்நூல் தமிழில் தோன்றிய முதல் உலா நூல் ஆகும். எனவே இதற்கு ஆதியுலா என்ற பெயர் வழங்கலாயிற்று. 197 கண்ணிகளால் 394 அடிகளை உடையது இந்நூல். **ஆதியந்தயுலா ஆசு பாடிய சேரர்** என்று ஆசுகவியாகவே சேர மன்னரைப் போற்றுகிறார் அருணகிரிநாதர்.

எல்லாம்வல்ல சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு அவனது அருளை விரும்பும் உலகத்து உயிர்களை அவன்பால் காதல்கொண்டு மயங்கிய பெண்களாக உருவகம் செய்து பாடப்

Koviloor Digital Library

பெற்றது இத்திருக்கயிலாய ஞான உலா ஆகும். கயிலையில் அரங் கேற்றப்பட்ட இத்திருவுலா, அங்கு இருந்த புலவர் மாசாத்தனார் மூலமாகத் திருப்பிடவூர்க்கு வந்து, தமிழ்நாட்டில் சிறப்பைப் பெற்றது.

திருக்கயிலாய ஞான உலாவில் சேரமான் பெருமாள் நாயனார் முதல் ஐந்து கண்ணிகளில் சிவபெருமானின் பண்புகளையும் சிறப்புகளையும் அருமை பெருமைகளையும் தொகுத்துரைத் துள்ளார்.

1.திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராது அன்றங்கு
அருமால் உறஅழலாய் நின்ற – பெருமான்

2.பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான் – முறைமையால்

3. ஆழாதே ஆழ்ந்தான் அகலா(து) அகவியான்
ஊழால் உயராதே ஓங்கினான் – சூழொளிநூல்

4. ஓதா(து) உணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகா(து) அணுகியான் – ஆதி

5. அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனும் தானே

Koviloor Digital Library

62. கணநாதர்

(7 பாடல்கள்)

பிறந்த ஊர் : சீர்காழி அ.கு.எண். 609 110

குலம் : அந்தணர்

குருபூசை மாதம் : பங்குனி

நட்சத்திரம் : திருவாதிரை

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட அடியார் (கி.பி. 660 – 840)

கடல்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை. 6:3)

கடல் சூழ்ந்து இருக்கக்கூடிய இந்தப் பெரிய உலகத்தில் அனைத்து உயிர்களையும் ஈன்றவரும் காப்பவருமாகிய உமையம்மையின் பால் பருகிய பெருமைக்குரியவரான திருஞானசம்பந்தர் தோற்றம் பெற்ற ஊர் சீர்காழி ஆகும். இது அழகிய ஊராகும்.

ஊழிக்காலத்தில் அழியாது இருக்கும் சிறப்பு இந்நகருக்கு உண்டு. இத்தகு சிறப்புகளைப் பெற்ற சீர்காழியில் மறையவர் குலத்தலைவராய்க் கணநாதர் விளங்கினார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் குறிப்பர்.

ஆழி மாநிலத்து அகிலம் ஈன்று அளித்தவள் திருமுலை அமுதுஉண்ட
வாழி ஞானசம்பந்தர் வந்தருளிய வனப்பினது அளப்புஇல்லா
ஊழி மாகடல் வெள்ளத்து மிதந்து உலகினுக்குஒரு முதல்ஆய
காழி மாநகர்த் திருமறையவர் குலக்காவலர் கணநாதர். (க.பு. 1)

அழகிய மதிலால் சூழப்பட்ட சீர்காழிப் பதியில் விரும்பி எழுந்தருளியவர் திருத்தோணியப்பர். அவரது திருப்பணிக்கு உதவியாக வந்து சேரும் தொண்டர்களுக்குத் திருத்தொண்டுகளைப் பயிற்றி வைப்பார். 1. திருநந்தவனம் அமைத்தல், 2. பூக்களை முறையோடு எடுத்தல் 3. எடுத்தவற்றை மாலையாகத் தொடுத்தல், 4. திருமஞ்சனம் செய்வதற்கு உரிய சாதனங்கள் அமைத்தல் 5. திருக்கோயிலில் அலகிடுதல், 6. மெழுகுதல், 7. திருவிளக்கு ஏற்றி வைத்தல், 8. திருமுறைகளை எழுதுதல், 9. படித்தல் 10. அடியாரைப் பேணுதல் போன்ற திருத்தொண்டுகளில் யார் யாருக்கு எதில் எதில் விருப்பமோ அந்தந்தப் பணிகளில் ஈடுபடுத்துவார் கணநாதர். இதைத் தெய்வச் சேக்கிழார்,

ஆய அன்பர்தாம் அணிமதில்
சண்பையில் அமர்பெருந் திருத்தோணி
நாயனார்க்கு நல்திருப்பணி ஆயின
நாளும் அன்பொடு செய்து
மேய அத்திருத்தொண்டினில் விளங்குவார்
விரும்பி வந்து அணைவார்க்குத்
தூய கைத்திருத் தொண்டினில்
அவர்தமைத் துறைதொறும் பயில்விப்பார். (க.பு. 2)

எனும் பாடலில் கூறுகிறார்.

நல்ல நந்தவனங்களில் பணி செய்பவர், நல்ல மலர் களைக் கொய்பவர், பல்வகை மலர்களை மாலையாகத் தொடுப்பவர், திருமஞ்சனநீரைக் கொண்டு வருபவர், இரவும் பகலும் திருஅலகிடு பவர், திருமெழுக்கு அமைப்பவர், விளக்கெரிப்பவர், திருமுறை எழுதுபவர், அவற்றை வாசிப்பவர் இத்தகைய பற்பல பணிகளில் விரும்பி வந்து சேர்ந்த அன்பர்களுக்கு அவரவர்களுக்கு ஏற்ற திருத்தொண்டுகளில் சிறந்து விளங்குமாறு செய்தார் கணநாதர். தொண்டுகளில் ஏதேனும் குறை இருப்பின் அதை நீக்கினார். இவ்வகையில் அன்பையும், வாய்மையையும் கொண்டு, இல்லறம் நடத்தி வந்த கணநாதர் சிவனடியார்க்கு இன்பம் தரும் வகையில் இறைவனை வழிபடும் தொழிலில் உயர்வு பெற்றவராக வாழ்ந்து வந்தார். இதைத்தெய்வச் சேக்கிழார் பின்வரும் இரண்டு பாடல் களில் கூறுவார்.

நல்ல நந்தன வனப்பணி செய்பவர்,
நறுந்துணர் மலர்கொய் வோர்
பல்பணித் தொடைபுனைபவர்
கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லும் நண்பகலும்
திருஅலகுஇட்டுத் திருமெழுக்கு அமைப்போர்கள்
எல்லைஇல் விளக்கு எரிப்பவர்
திருமுறை எழுதுவோர் வாசிப்போர் (க.பு. 3)

இனையபல் திருப்பணி களில்
அணைந்தவர்க்கு ஏற்ற அத்திருத் தொண்டின்
வினை விளங்கிட வேண்டிய
குறைஎலாம் முடித்து மேவிடச் செய்தே

Koviloor Digital Library

அனையஅத் திறம்புரிதலின்
தொண்டரை ஆக்கி அன்புஉறு வாய்மை
மனைஅறம் புரிந்து அடியவர்க்கு இன்புஉற
வழிபடும் தொழில் மிக்கார். (க.பு. 4)

இந்தப் பெருஞ்சிறப்பை அடைந்த கணநாதர், வளர் புகழ் கொண்ட திருஞானசம்பந்தரின் திருவடி மீது வைத்த பெருவிருப்பால் ஒவ்வொரு நாளும் மூன்று பொழுதும் பூசைகளைச் செய்து தமது ஒப்பற்ற பக்தி உள்ளத்தால் சிறந்து வாழ்ந்தார். இதைத் தெய்வச் சேக்கிழார்,

இப்பெருஞ் சிறப்புஎய்திய தொண்டர்தாம் ஏறுசீர் வளர்காழி
மெய்ப்பெருந் திருஞான போனகர் கழல் மேவிய விருப்பாலே
முப்பெரும் பொழுது அருச்சனை வழிபாடு மூளும் அன்பொடு நாளும்
ஒப்புஇல் காதல்கூர் உளம்களி சிறந்திட ஒழுகினார் வழுவாமல். (க.பு. 5)

எனும் பாடலில் கூறுகிறார்.

இவ்வாறான திருத்தொண்டில் ஈடுபட்டு வாழ்ந்து வந்த கணநாதர், ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தரின் தாமரைத் திருவடிகளை வணங்கி வாழ்ந்து வந்தார். இதனைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

ஆன தொண்டினில் அமர்ந்த பேர்அன்பரும்
அகல்இடத்தினில் என்றும்
ஞானம்உண்டவர் புண்டரீகக் கழல்
அருச்சனை நலம்பெற்றுத்
தூநறுங் கொன்றை முடியவர்
சுடர்நெடும் கயிலைமால் வரைஎய்தி
மானநல் பெருங்கணங்கட்கு நாதர்ஆம்
வழித்தொண்டின் நிலைபெற்றார். (க.பு. 5)

உலகத்தில் வாழுகின்ற அனைத்து உயிர்களும் உய்யும் பொருட்டு அவர்களுக்கு அருள் புரிபவர் எல்லாம் வல்ல சிவபெருமான். அச்சிவபெருமானுக்கு உண்மைத் தொண்டு புரியும் தூயவர்களாய் இருப்பவர்கள் சிவனடியார்கள். அச்சிவனடியார் களுக்கு அவரவர்களுக்குரிய தொண்டுகளில் அறிவை அளித்து அவரவரது திறமைகளை எல்லாம் உலகிலே நிறுத்தும் பெரும்புகழ் உடையது சீர்காழி ஆகும். இவ்வளவு சிறப்புகள் பெற்ற சீர்காழியில் தோன்றிய கணநாதரின் திருவடிகளைத் துதித்த சேக்கிழார் அடுத்து கூற்றுவ நாயனாரின் வரலாற்றைக் கூறுகிறார்.

Koviloor Digital Library

உலகம் உய்ய நஞ்சுஉண்டவர்
தொண்டினில் உறுதி மெய்யுணர்வுஎய்தி
அலகுஇல் தொண்டருக்கு அறிவு
அளித்து அவர்திறம் அவனியின் மிசையாக்கும்
மலர்பெரும் புகழ்ப் புகலியில் வரும்
கணநாதர் கழல் வாழ்த்திக்
குலவு நீற்றுவண் கூற்றுவனார் திறம்
கொள்கையின் மொழிகின்றாம். (க.பு. 7)

சீகாழியைப் பிரமதேவர் துதித்தார். எனவே பிரமாபுரம் எனும் பெயர் இதற்கு வழங்கலாயிற்று. தேவர்களின் தலைவன் தேவேந்திரன் இங்கு மூங்கில் வடிவாக நின்று தவம் செய்தான். எனவே இது வேணுவனம் எனப் பெயர் பெற்றது.

திருத்தொண்டு செய்கின்ற அன்பர்கள் திருத்தொண்டர் எனப்படுவர். சிவப்பரம்பொருளோடு ஒன்றித்து நின்ற மிகப் பெரிய ஞானிகள் கூட, தொண்டினையே தொழுகையாகக் கொண்டு ஒழுகியவர்கள். சிவபெருமான்கூட, சுந்தரரை நோக்கி **'வித்தகம் பேச வேண்டா பணிசெய வேண்டும்'** என்று கூறியது இங்குக் குறிப்பிடத் தக்கது. என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நாவுக்கரசரின் வாக்கின்படி வாழ்ந்தவர் கணநாதர்.

அருள்மிகு பெரியநாயகி திருநிலை நாயகி உடனுறை பிரமபுரீஸ்வரர்
அருள்மிகு சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்,
சீர்காழி அஞ்சல் – 609 110. சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

Koviloor Digital Library

63. கூற்றுவர்

(9 பாடல்கள்)

பிறந்த ஊர் : களந்தை (திருத்துறைப்பூண்டி - மன்னார்குடிச் சாலையில் மூன்று கி.மீ. சென்று மடப்புரம் தாண்டினால் இடப்பால் களப்பால் என்ற கைகாட்டி உள்ளது. அச்சாலையில் சென்று ஊரை அடையலாம்.)

குலம் : அரசர்

குருபூசை மாதம் : ஆடி

நட்சத்திரம் : திருவாதிரை

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் முற்பட்டவர் (கி.பி. 300 – 600)

ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோன் அடியேன் (திரு. தொகை. 6:4)

களப்பாளர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்த ஊராதலின் களப்பால் என்று பெயர் பெற்றது. இது மருவி களந்தை என்றாயிற்று. விஜயாலய சோழனின் மகன் ஆதித்த சோழனால் (கி.பி. 850 – 890) இவ் ஊர்க் கோயில் கட்டப்பட்டதால் இக்கோயில் ஆதிச்சேச்சரம் என வழங்கப்படுகின்றது. சுவாமியும் ஆதித்தேச்சுரர் என அழைக்கப் பெறுகிறார்.

துன்னார் முனைகள் தோள்வலியால் வென்று சூலப்படையார்தம்
நல் நாமம் தம் திருநாவில் நாளும் நவிலும் நலம்மிக்கார்
பல்நாள் ஈசர் அடியார்தம் பாதம் பரவிப் பணிந்துஏத்தி
முன்ஆகியநல் திருத்தொண்டின் முயன்றார் களந்தை முதல்வனார். (1)

களந்தைத் தலைவரான கூற்றுவனார் பகைவர் எதிர்த்து நின்ற போரில் தம் தோளின் வன்மையால் வெற்றி பெற்றுச் சூலப்படையை ஏந்திய சிவபெருமானின் நல்ல திருநாமத்தைத் தம் நாவால் நாள்தோறும் சொல்லும் நன்மையில் மிக்கவர், பல நாட்கள் இறைவர் அடியாரின் அடிகளைப் பணிந்து துதித்து முதன்மையான தொண்டில் முயன்றனர்.

(களந்தை – சோழ நாட்டில் திருத்துறைப்பூண்டி அருகில் முள்ளியாற்றின் கரையில் உள்ளது.)

Koviloor Digital Library

அருளின் வலியால் அரசுஒதுங்க அவனி எல்லாம் அடிப்படுப்பார்
பொருளின் முடிவும் காண்புஅரிய வகையால் பொலிவித்து இகல்சிறக்க
மருளும் களிறு பாய்புரவி மணித்தேர் படைஞர் முதல்மாற்றார்
வெருளும் கருவி நான்கு நிறை வீரச் செருக்கின் மேலானார். (கூ.பு. 2)

சிவபெருமானின் திருவருள் துணையால் மன்னர்களும் அஞ்சி ஒதுங்கிக் கீழ்ப்படும்படி நிலம் முழுதும் தம் ஆட்சியின் கீழ் வரும்படிச் செய்து பொருள்களின் எல்லையும் காண இயலாதபடி சேர்த்துப் போரில் வெற்றி பெறும் படியாக மருட்சி செய்யும் யானைகள், பாய்ந்து செல்லும் குதிரைகள், அழகிய தேர்கள், படைவீரர் என்னும் இவை பகைவர் அஞ்சி ஒதுங்கத்தக்க நால்வகைப் படைக் கருவிகளும் நிறைந்த வீரம் கொண்ட செருக்கால் மேம்பட்டார்.

வென்றி மனைமின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் துறைமுடித்தும் செருவில் வாகைத் திறம்கெழுமி
மன்றல்மாலை மிலைந்துஅவர்தம் வளநாடு எல்லாம் கவர்ந்துமுடி
ஒன்றும் ஒழிய அரசர்திரு எல்லாம் உடையர் ஆயினார். (கூ.பு. 3)

வெற்றி பெறும் செயலில் மேன்மேலும் பெருக மன்னருடன் போரிடுகின்ற போர்கள் பலவற்றிலும் வெற்றி பெற்றுச் சென்று தும்பைப் பூவைச் சூடும் துறையின் போர்த்தொழிலை முடித்தும், அப்போர்களில் வெற்றி அடைந்தபின் வாகை மாலையின் வகையில் எழும் மணமுடைய மாலை சூடியும், அவ்வேந்தர்களின் வளநாடு களை எல்லாம் கையகப்படுத்தியும், மன்னர்க்குரிய முடி ஒன்று தவிர அரசர்க்குரிய மற்ற செல்வங்கள் எல்லாவற்றையும் அவர் உடையவர் ஆனார்.

மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்குத்
தில்லை வாழ் அந்தணர்தம்மை வேண்ட அவரும் செம்பியர்தம்
தொல்லை நீடும் குலமுதலோர்க்கு அன்றிச் சூட்டோம் முடி என்று
நல்கார் ஆகிச் சேரலன்தன் மலைநாடுஅணைய நண்ணுவார். (4)

செழுமையான இவ்வுலகத்தைக் காக்கின்றவராய் நவமணி களையுடைய பெரிய முடியைச் சூட்டுவதற்காகத் தில்லைவாழ் அந்தணர்களை வேண்டினார். அவர்கள் 'சோழர்களின் தொன்று தொட்டு வரும் குல முதல்வர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு முடிசூட்ட மாட்டோம் என்று முடி சூட்டாராகிச் சேர மன்னரின் மலைநாட்டை அடைவாராயினர்.

ஒருமை உரிமைத் தில்லைவாழ் அந்தணர்கள் தம்மில் ஒருகுடியைப்
பெருமை முடியை அருமைபுரி காவல் பேணும் படிஇருத்தி

Koviloor Digital Library

இருமை மரபும் தூயவர்தாம் சேரர் நாட்டில் எய்தியபின்
வரும்ஐ யுறவால் மனம்தளர்ந்து மன்றுள் ஆடும் கழல் பணிவார். (5)

ஒருமையுடைய தில்லை வாழ் அந்தணர்கள் தங்களுக்குள் ஒரு குடியின் பெருமை கொண்ட அந்த மணிமுடியை அருமையாய்க் காவல் செய்யும்படி வைத்து, இரு மரபும் தூயவரான அவர்கள், சேர நாட்டை அடைந்த பின்பு, கூற்றுவனார் செயல்பாட்டினால் உள்ளம் தளர்ந்து தில்லையம்பலத்தில் ஆடும் இறைவரின் திருவடியைப் பணிவாராய் உள்ளனர்.

அற்றை நாளில் இரவின்கண் அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும் எனப்பரவும்
பற்று விடாது துயில்வோர்க்குக் கனவில் பாத மலர்அளிக்க
உற்ற அருளால் அவைதாங்கி உலகம் எல்லாம் தனிப்புரந்தார். (6)

அடியேனுக்குத் தங்கள் மலர்போன்ற அடிகளை மணிமுடி யாய்ப் பெற்ற பேறு அடியேன் பெற வேண்டும்'' எனத் துதிக்கும் பற்றை விடாது துயில்கின்ற அவர்க்கு, அன்றைய இரவில், கனவில், இறைவர் தம் அடிகளை முடியாய்ச் சூட்டியருளப் பொருந்திய திருவருளால் அவ்வடிகளையே மணி முடியாய்த் தாங்கிக் கொண்டு உலகம் எல்லாவற்றையும் தனியாட்சி செய்தார்.

அம்பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திருநடம்செய்
தம்பி ரானார் புவியில்மகிழ் கோவில் எல்லாம் தனித்தனியே
இம்பர் ஞாலம் களிகூர எய்தும் பெரும்பூசனை இயற்றி
உம்பர் மகிழ அரசுஅளித்தே உமையாள் கணவன் அடிசேர்ந்தார் (7)

அழகிய பொன்னால் ஆன அம்பலத்தில் ஆராஅமுதமான திருக்கூற்றைச் செய்யும் இறைவர், இந்த உலகத்தில் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற கோயில்களில் எல்லாம் தனித்தனியாய் இந்த உலகத்து உயிர்கள் இன்பம் அடையுமாறு பொருந்தும் பெரிய பூசைகளைச் செய்வித்துத் தேவர் மகிழும்படி ஆட்சி செய்து உமை பாகரான சிவபெருமானின் திருவடியை அடைந்தார்.

காதல் பெருமைத் தொண்டின் நிலைக் கடல்சூழ் வையம் காத்துஅளித்துக்
கோதுஅங்கு அகல முயல்களந்தைக் கூற்ற னார்தம் கழல் வணங்கி
நாத மறைதந்து அளித்தாரை நடைநூல் பாவில் நவின்றுஏத்தும்
போதம் மருவிப் பொய்அடிமை இல்லாப் புலவர் செயல்புகல்வாம். (8)

மிக்க விருப்பமுடைய பெருமையையுடைய தொண்டின் நிலைத்த கடல் சூழ்ந்த உலகத்தைக் காத்து ஆட்சி செய்து குற்றம் நீக்குமாறு முயன்ற களந்தைக் கூற்றுவ நாயனாரின் திருவடியை

Koviloor Digital Library

வணங்கி, அத்துணையால் நாத வடிவான மறைகளைத் தந்து உலகைக் காக்கும் இறைவரை நடை நூலின் பாக்களால் கூறித் துதிக்கும் சிவபாதம் பொருந்திய ‘பொய்யடிமை இல்லாத புலவர்’ என்ற திருக்கூட்டத்திற் சேர்ந்த அடியார்களின் செயலைச் சொல்லப் புகுகின்றோம்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் துதி

தேனும் குழலும் பிழைத்ததிரு மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்கும் சடையார் தூது தரும்திரு நாள்
கூனும் குருடும் தீர்த்துஏவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்குகூன். (9)

தேனும் புல்லாங்குழலும் என்ற இவற்றை வென்ற இனிமை கொண்ட மொழியையுடைய பரவையாரின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு மதியும் பாம்பும் பகை தீர்க்க வைப்பதற்கு இடமான உமையையுடைய பெருமான் தூது சென்ற நாளில், கூனனது கூனையும் குருடனின் குருட்டுத் தன்மையையும் தீர்த்துப் பணிகொள்பவரான நம்பி ஆரூரரின் விளக்கம் மிக்க பாதங்களை, யானும் துதித்து ஏழு வகைப்பட்ட பிறவிகளிலும் உட்பட்டு முடங்கிக் கிடக்கும் தன்மையான கூன் தன்மையையும் அவற்றுள் செலுத்தும் அறியாமையான குருட்டுத் தன்மையையும் போக்கிக் கொள்கின்றேன்.

கூற்றுவநாயனார் புராணத்தில் இடம்பெறும் சுந்தரமூர்த்தி நாயனார் துதியில், கூனனது கூனையும் குருடனது குருட்டையும் நீக்கியதாகக் கூறப்படுகின்ற செய்திகள் பெரியபுராணத்தில் வேறு எங்கும் சுட்டப்படவில்லை.

அருள்மிகு பிரபாநாயகி உடனுறை அழகிய நாதசுவாமி கோயில்
களப்பால் (ஆதித்தேச்சரம்) நடுவக்களப்பால்
(வழி) திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி வட்டம்,
திருவாரூர் மாவட்டம். அஞ்சல் – 614 710

Koviloor Digital Library

64. பொய்யடிமை இல்லாத புலவர்

(3 பாடல்கள்)

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன் (திரு. தொகை. 7:1)

பொய்யடிமை இல்லாத புலவர்கள் பொய்யாமை அறத்தினைப் போற்றிய சான்றோர்கள் தம் உள்ளம் அறிந்த செய்திகளைப் பிறர் அறியார் என்று கருதிப் பொய்சொல்லும் இழிகுணம் இல்லாதவர்கள். பொய்யடிமை இல்லாத புலவர்கள்,

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (திரு. 294)

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாய்மொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்ந்தவர்கள்

செய்யுளில் உள்ள சொற்களின் தெளிவையும் செம்மையைத் தரக்கூடிய மிகுந்த பயன் உடைய நூல்கள் பலவற்றையும் நோக்குபவர்கள். 'மெய்' உணர்வின் பயன் என்பது இதுவே எனத் துணிந்து, சிவபெருமானின் பூப்போன்ற திருவடிக்கு ஆளானவர்களே பொய்யடிமை இல்லாத புலவர்கள் எனும் புகழ் மிக்கவர்கள் ஆவர்.

இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவர்.

செய்யுள் நிகழ் சொல்தெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்உணர்வின் பயன் இதுவே எனத்துணிந்து விளங்கிஒளிர்
மைஅணியும் கண்டத்தார் மலர்அடிக்கே ஆள்ஆனார்
பொய்யடிமை இல்லாத புலவர் எனப் புகழ் மிக்கார். (1)

இவர்கள் அழகிய பாம்புகளை அணிந்த புரிசடை பெற்ற சிவபெருமானை அல்லாது மற்றோர் குறித்துச் சொற்பதங்களைக் கூடச் சொல்லாமல் இருக்கும் தொண்டு நெறியில் தலைநின்றவர்கள். இதனால் இவர்கள் மெய்யடிமை உடையவராகும் பெரும் புலவர்கள் ஆவர். இவர்களின் பெருமையைத் தெரிந்து உரைக்க வல்லார் யார்? எனக் கேள்வி எழுப்புகிறார் தெய்வச் சேக்கிழார்.

பொற்புஅமைந்த அரவுஆரும் புரிசடையார் தமைஅல்லால்
சொல்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற

Koviloor Digital Library

பெற்றியினில் மெய்அடிமை உடையார்ஆம் பெரும்புலவர்
மற்றுஅவர்தம் பெருமையார் அறிந்துஉரைக்க வல்லார்கள்? (2)

பொய்யடிமை இல்லாத புலவர்களின் திருவடிகளை வணங்கி இப்பூவுலகம் முழுமையும் ஆண்ட வெண்கொற்றக் குடையைக் கொண்ட சோழர் குலமரபு செய்த தவப்பயனைப் போன்றவரும் ஓங்கி வளரும் திருத்தொண்டின் உண்மையை உணர்ந்து செயல் புரிந்தவரும் பூங்கழல் கொண்டவருமாகிய புகழ்ச்சோழரின் வரலாற்றைச் சொல்லப் புகுகின்றார். தெய்வச் சேக்கிழார்,

ஆங்குஅவர்தம் அடிஇணைகள் தலைமேல் கொண்டுஅவனிஎலாம்
தாங்கியவெண் குடைவளவர் குலம்செய்த தவம்அனையார்
ஓங்கிவளர் திருத்தொண்டின் உண்மைஉணர் செயல்புரிந்த
பூங்கழலார் புகழ்ச்சோழர் திருத்தொண்டு புகல்கின்றாம். (3)

புலம்

புலம் என்றால் அறிவு என்று பொருள். அறிவு உடையோர் புலவர்கள் ஆவர். புலவர்கள் பெற்ற கல்வி அறிவின் பயன் பேரறிவுப் பெரும் பொருளின் நற்றாள் வணங்குவதே ஆகும்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (திரு. 2)

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறளை அறிவுடையோர் அறிக! உணர்வுடையோர் உணர்க! உணர்ந்து தெளிக! தெளிந்து உய்தி பெறுக!

நுட்பம்

பொய்யாமை என்பது தமிழ் நீதி இலக்கியங்கள் போற்றும் அறங்களுள் ஒன்று. வாய்மை, பொய்யாமை என்னும் இருசொற்களும் ஒரே பொருளைத் தருகின்றன.

பொய்யாமை

வாய்மை எனும் அதிகாரத்தில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாய்மையின் சிறப்புகளைக் கூறி உள்ளார்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் பல்வேறு வகையான அறக் கருத்துகளையும் ஒழுக்க நெறி மெய்ம்மைகளையும் நன்றாக அறிந்தவர். தாம் அறிந்த அறக்கருத்துகளில் சிறந்தனவற்றையும் வாழ்க்கைக்கு மிக

Koviloor Digital Library

மிகத் தேவையானவற்றையும் வகுத்தும் தொகுத்தும் திருக்குறளில் அளித்துள்ளார்.

அறம் சார்ந்த கருத்துகளைக் கூறுவதில் திருவள்ளுவர் பிற்கால நீதிநூலாருக்கு ஒரு நல்ல வழிகாட்டி ஆவார். அத்தகு சிறப்பு வாய்ந்த அவர் பல்வேறு அறங்கள் கண்டவர். அவற்றுள் எல்லாம் மிகச் சிறந்தாக மிக நல்லதாக இருப்பது வாய்மையே என்கிறார்.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (திரு.300)

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அற உலகில் செய்த புரட்சி

எது மெய்? எது பொய்? என்று நாம் உலகியலாக அறிவியல் நெறியில் ஆராய்ந்து ஒரு செய்தியை உள்ளவாறு கூறுவது மெய் என்றும் ஒரு செய்தியைத் திரித்துச் சொல்வது அல்லது மாற்றிச் சொல்வது பொய் என்றும் பொருள் கொள்கிறோம். இதுதான் மெய் என்பதற்கும் பொய் என்பதற்குமான உலகியல் அறிவியல் சார்ந்த வரையறை.

எது மெய்?

மெய்ம்மைக்கு என்று ஒரு மிகச் சிறந்த வரையறையைத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தருகிறார்.

வாய்மை அல்லது மெய் என்று சொல்லப்படுவது எது என்றால் அது பிறிதோர் உயிருக்கு ஒரு சிறிய அளவில்கூட, தீமை தராத சொற்களைக் கூறுதல் ஆகும்.

வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொலல். (திரு. 291)

பொய்யும் மெய்யே

ஒரு சிறிதும் குற்றம் இல்லாத நன்மையைத் தரும் என்று சொன்னால் ஒரு பொய்கூட உண்மை பெறும் இடத்தையும் மதிப்பையும் பெறும் என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். (திரு. 292)

கதிரவனின் ஒளி, நிலவின் ஒளி, தீயின் ஒளி இவையெல்லாம் புற இருளைப் போக்குவன. பொய்யாமை எனும் விளக்கு அகத்தில்

Koviloor Digital Library

உள்ள இருளைப் போக்குவது. புற விளக்குகள் எல்லாம் விளக்குகள் ஆகா. சான்றாண்மை மிக்க சான்றோர்க்குப் பொய்யாமை எனும் அக விளக்கே விளக்காகும்.

எல்லா விளக்கும் விளக்கு அல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (திரு. 299)

இல்லக விளக்கது இருள்கெடுப்பது
பல்லக விளக்கது பலரும் காண்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. (திருநாவுக்கரசர்)

கைவிளக்கின் பின்னே போய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்பது எந்நாளோ? (1)

எனும் திருவள்ளுவர், திருநாவுக்கரசர், தாயுமானவர் ஆகியோரின் பாடல்கள் குறிப்பிடத்தக்கன. **பொய்வளரும் நெஞ்சினர் காணாத காட்சியே** என்பதற்கிணங்க, பொய்வளரும் நெஞ்சினர்கள் இறை காட்சியைக் காண முடியாது என்று தாயுமானவர் கூறியுள்ளார்.

பொய்ம்மையாகிய இருளிலிருந்து விலகுவோம். வாய்மை யாகிய ஒளியை இருதய கமலத்தில் சேர்ப்போம்; பெருக்குவோம்.

பேராசிரியர் அமரர் அ.ச.ஞா. அவர்கள் பொய்யடிமை இல்லாத புலவர் மாணிக்கவாசகர் என்று கருதுகிறார். டாக்டர் சிவப்பிரியா அவர்கள் இதே கருத்தில் நூறு பக்கங்களுக்கும் மேலாக நூல் எழுதியுள்ளார்கள். அறிவுடையோர் ஆய்ந்து உண்மை காண்க.

Koviloor Digital Library

65. புகழ்ச்சோழர்

(41 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	உறையூர்; சோதியில் கலந்த ஊர் : கரூர்.
குலம்	:	சோழ அரச குலம்
குருபூசை மாதம்	:	ஆடி
நட்சத்திரம்	:	கார்த்திகை
காலம்	:	அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 – 600)

பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன் (திரு. தொகை. 7:1)

இமயத்தில் தம் புலிக்கொடி பொறித்துப் புகழ் பெற்றிருக்கும் சோழர் குல மன்னர்களின் தலைநகர் உறையூர் ஆகும். எல்லா வளங்களையும் கொண்ட அவ்வூரில் எப்பொழுதும் மணிவிளக்குகள் பல எரிகின்றன. இதனால் இரவு அவ்வூரில் இல்லை.

அழகு மிகுந்த பல ஆவண வீதிகள், யானைகள் பலவுடைய சாலைகள், கடல் போன்ற குதிரைக் கூடங்கள், ஆழ்ந்த அகழிகள் ஆகியவை இந்நகரில் உள்ளன.

மேகங்களைப் பொருந்துகின்ற கோபுரங்களும் சூரியக் கதிர்களும் சந்திரக் கதிர்களும் ஏறும் பூஞ்சோலைகளையும் தேர் உலவும் அழகுமிகு வீதிகளையும் எல்லாத் திசைகளிலும் செல்லும் வசையில்லாத அழகையும் உடைய உறையூர் நகரத்தின் வளமையைக் கூறுவது அரியது என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

கார்ஏறும் கோபுரங்கள் கதிர்ஏறும் மலர்ச்சோலை
தேர்ஏறும் அணிவீதி திசைஏறும் வசையில்அணி
வார்ஏறும் முலைமடவார் மருங்குஏறும் மலர்க்கணையொண்
பார்ஏறும் புகழ்உறந்தைப் பதியின்வளம் பகர்வுஅரிதால் (7)

சோழர்குல அரசர்

அநபாயச் சோழனின் மூதாதையராக இருந்தவர் புகழ்ச்சோழ நாயனார் ஆவார். இவர் உறையூரில் அரியணை ஏற்றார். அறநெறி

Koviloor Digital Library

வழுவாது ஆட்சி நடத்தினார். இறைவனுடைய திருக்கோயில்கள் அனைத்திலும் பூசனைகளைத் தவறாமல் நடத்துவிப்பார். திருத் தொண்டர்களின் குறிப்பை அறிந்து அவரவர் வேண்டுவதை அளித்தார். இதன் காரணமாகத் திருநீற்றுநெறி அவரால் பாதுகாக்கப் பட்டு வந்தது.

கருவூர் செல்லல்

கொங்கு நாட்டரசர், குடக நாட்டரசர் ஆகியோரிடமிருந்து திரைப்பொருள்களை வாங்க வேண்டிப் புகழ்ச்சோழ நாயனார் கருவூருக்குச் சென்றார். அங்கு எழுந்தருளி இருக்கின்ற ஆனிலைப் பெருமானை வணங்கினார். பின்பு கருவூரில் உள்ள தமது அரண்மனையை அடைந்தார். அங்கு அத்தாணி மண்டபத்துள் இருக்கின்ற அரியணை மீது வீற்றிருந்தார்.

நம்முடைய ஆட்சிக்கு அடங்காத அரசர்கள் இருப்பார்கள் எனில் அவர்களை யார் என்று அறிந்து கூறுக என்று அமைச்சர்களுக்குக் கட்டளையிட்டார்.

எறிபத்தரின் அன்பை அறிதல்

கருவூரில் வாழும் சிவனடியார் சிவகாமியாண்டார். இவர் ஆனிலைப் பெருமானுக்கு வழக்கம்போலப் பூக்கூடையில் மலர் கொண்டு போனார். அப்போது அரசருடைய பட்டத்து யானை அக்கூடையைப் பறித்தது. மலர்கள் சிந்தின. அதுகண்ட சிவகாமி யாண்டார் கலங்கினார். அப்போது அங்கு வந்த எறிபத்த நாயனார் யானையையும் பாகரையும் கொன்றார். உடனே புகழ்ச்சோழர் யானை செய்த குற்றம் அடியேனையும் சாரும் என்னையும் கொல்க என்று உறைவாளை அவரிடம் கொடுத்துப் பணிவோடு நின்றார். இதனால் திருத்தொண்டின் திறத்திலே மிகச் சிறந்து விளங்கியவரானார்.

அதிகன்

அமைச்சர்கள் புகழ்ச்சோழ நாயனாரை வணங்கி அரசே முறையாய்க் கப்பம் கட்டாத அரசன் ஒருவன் உள்ளான் என்றனர். உடனே அவர் அவன் யார் என வினவினார். அரசே அவன் பெயர் அதிகன். அவன் மலையை அரணாய்ப் பெற்று மதிலால் சூழப்பட்ட காவல்மிக்க நகரில் உள்ளான் என்றனர்.

Koviloor Digital Library

உடனே மன்னர் இங்கு உங்களுக்கு எதிராக நிலைத்து நிற்கும் அரண் இல்லை. எனவே, உடனே சென்று அவன் நாட்டுக் காவலை அழிப்பீர் என்று உத்தரவிட்டார்.

அமைச்சர்கள் சேனாதிபதிகளுடனும் நால்வகைச் சேனைகளுடனும் அதிகன் நகர் சென்று கடும்போர் புரிந்தனர். புகழ்ச்சோழ நாயனாரின் படைகளும் அதிகனின் படைகளும் போரில் ஈடுபட்டன.

யானைகளுடன் யானைகளும் குதிரைகளுடன் குதிரைகளும் எதிர்த்து முட்டியமை வீரரும் வீரரும் எதிர்த்தமை. இதனால் போர் மிக்கமை ஆகிய செய்திகளைத் தெய்வச் சேக்கிழார்,

கயமொடு கயம்எதிர் குத்தின
அயமுடன் அயம்முனை முட்டின
வயவரும் வயவரும் உற்றனர்
வியன்அமர் வியல் இடம் மிக்கதே. (20)

எனும் பாடலில் கூறுவர்.

சூறாவளிக் காற்றைப் போன்ற வேகமுடைய குதிரை வீரர்கள் மாறி மாறி ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்தி உயிர்விட்டனர். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் செப்புவார்.

சூறை மாருதம் ஒத்துஎதிர்
ஏறுபாய்பரி வித்தகர்
வேறு வேறு தலைப்பெய்து
சீறி ஆவி செகுத்தனர். (22)

இறுதியில் அதிகனுடைய சேனைகள் மாண்டன. அவனது மலையரண் அழிந்தது. அதிகன் காட்டில் ஓடி ஒளிந்து கொண்டான். புகழ்ச்சோழ நாயனாரின் சேனை வீரர்கள் அதிகனுடைய நவநிதிகளையும் இறந்த வீரர்களின் தலைகளையும் எடுத்துக் கொண்டு கருவூர் சென்றனர். அரசன் முன் அவற்றைக் குவித்தனர். அரசர் அவற்றைக் கண்டு தன் போர் வீரர்களின் திறத்தை வியந்து போற்றினார். அவற்றில் ஒரு தலையில் சடை முடி இருப்பதைப் பார்த்தார்.

பார்த்தவுடன் அவரது உடல் கலங்கியது; உள்ளம் கலங்கியது. கைகூப்பித் தொழுதார். கண்ணீர் விட்டார். இதைத் தெய்வச்

Koviloor Digital Library

சேக்கிழார் பெருமான் பின்வரும் பாடல்களில் குறிப்பார்.

கண்டபொழுதே நடுங்கி மனம்கலங்கிக் கைதொழுது
கொண்டபெரும் பயத்தினுடன் குறித்துஎதிர் சென்று அது கொணர்ந்த
திண்திறலோன் கைத்தலையில் சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்துஇழியப் புரவலனார், (34)

முரசுஉடைத்திண் படைகொடுபோய் முதல்அமைச்சர் முனைமுருக்கி
உரைசிறக்கும் புகழ்வென்றி ஒன்றுஒழிய ஒன்றாமல்
திரைசரித்த கடல்உலகில் திருநீற்றின் நெறி புரந்துயான்
அரசுஅளித்த படிசால அழகிதுஎன அழிந்து அயர்வார் (35)

தார்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்கும் திருமுடியார்
நீர்தாங்கும் சடைப்பெருமான் நெறிதாம்கண்ட வர்ஆனார்
சீர்தாங்கும் இவர்வேணிச் சிரம்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க இருந்தேனோ பழிதாங்குவேன் என்றார். (பு. நா. – 36)

பின்பு முன் சொன்னபடி தம் அமைச்சர்களுக்கு எம் மகனுக்கு முடி சூட்டுங்கள் என ஆணையிட்டார். அதைக்கேட்டு அமைச்சர்கள் மனம் கலங்கினர். அவர்களிடம் தக்கவற்றைக் கூறி அவர்களைத் தேற்றினார். அரசர் பிறகு விறகுகள் கொண்டு பெருந்தீ வளர்ப்பித்தார். உடல் முழுதும் திருநீறு பூசிக்கொண்டார். சடையுடைய தலையை ஒரு பொன் தட்டில் வைத்துத் தம் முடிமிசை ஏந்தினார். எல்லாம்வல்ல சிவபெருமானின் ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டு அழற்குண்டத்தை வலம் வந்தார். தாமரைப் பொய்கையில் குளிப்பவர் போல் மிகுந்த மகிழ்ச்சியோடு நெருப்பிடைப் புகுந்தார்.

இதனைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவர்.

கண்டசடைச் சிரத்தினைஓர் கனகமணிக் கலத்துஏந்திக்
கொண்டு திருமுடிதாங்கிக் குலவும்எரி வலம்கொள்வார்
அண்டர் பிரான் திருநாமத்து அஞ்செழுத்தும் எடுத்துஓதி
மண்டுதழல் பிழம்பின்இடை மகிழ்ந்தருளி உள்புக்கார். (பு. நா. 39)

மலர்மாரி பொழிந்தது. விண்ணில் தேவதுந்துபி முழங்கியது.

புகழ்ச்சோழ நாயனார் இறைவனின் திருவடி சேர்ந்து பேரின்பம் பெற்றார்.

திருச்சி என்றழைக்கப்படும் திருச்சிராப்பள்ளிக்கு அருகே

Koviloor Digital Library

இருக்கும் நகரம் உறந்தை. இதற்குக் 'கோழியூர்' முதலிய பல பெயர்கள் உள்ளன. சோழர்கள் தமக்கு உறைவிடமாகக் கொண்ட காரணத்தினால் உறையூர் எனும் பெயர் பெற்றது. அங்கு ஒரு சமயம் கோழி யானையைத் துரத்தி வென்றதனாலும் கோழியூர் எனப்படும் என்று கூறுகிறார், திருமுருகக் கிருபானந்த வாரியார்.

புகழ்ச்சோழர் தலைசிறந்த அடியார் பக்தி கொண்டவர். சிவபெருமானின் ஆலயங்களைப் புதுப்பித்தல் அடியார்களைக் கொண்டு திருத்தொண்டுகள் செய்தல் போன்ற பணிகளை அவர் செவ்வனே செய்தார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவார்.

பிறைவளரும் செஞ்சடையார் பேணுசிவா லயம்எல்லாம்
நிறைபெரும்பூ சனைவிளங்க நீடுதிருத்தொண்டர் தமைக்
குறைஇரந்து வேண்டுவன குறிப்பின்வழி கொடுத்தருளி
முறைபுரிந்து திருநீற்று முதல் நெறியே பாலிப்பார்

வீர நெஞ்சமும் ஈர நெஞ்சமும்

திறை கொடாத அரசனை வென்று வாருங்கள் என்று தம் வீரர்களுக்குக் கட்டளையிட்டபோது புகழ்ச்சோழ நாயனாரின் வீர நெஞ்சம் வெளிப்பட்டது. தமது சேனை வீரர்கள் கொண்டுவந்த தலைகளுள் ஒன்றில் சடை இருக்கக் கண்டு வருந்தி வேதனைப் பட்டதில் அவரது ஈர நெஞ்சம் வெளிப்பட்டது.

அருள்மிகு காந்திமதி உடனுறை பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில்
உறையூர் & அஞ்சல் - 620 003.
திருச்சி மாவட்டம்

அருள்மிகு கிருபாநாயகி உடனுறை பசுபதீஸ்வரர் திருக்கோயில்
கரூர் (அஞ்சல்) – 639 001.
கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.

Koviloor Digital Library

66. நரசிங்க முனையரையர்

(9 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	திருநாவலூர், உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.
குலம்	:	சிற்றரசர்
குருபூசை மாதம்	:	புரட்டாசி
நட்சத்திரம்	:	சதயம்
காலம்	:	சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840-865)

மெய்யடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன் (திரு. தொகை-7:2)

செங்கோல் ஆட்சி செலுத்தும் நீதியிலிருந்து சிறிதும் தவறாத நெறியில் வாழும் குறுநில மன்னர் மரபில் தோன்றியவர். திருநீல கண்டரின் திருநீறு ஒன்றே பெரும்செல்வம் என எண்ணுபவர். இன்னோர் இடத்தில் தேடிப்பெற வேண்டிய அவசியம் இல்லாது எல்லா வளங்களும் பெற்ற திருமுனைப்பாடி நாட்டை ஆளும் அரசர் நரசிங்க முனையரையர் என்பதைத் தெய்வச் சேக்கிழார் முதல் பாடலில் கூறுவர்.

கோடாத நெறிவிளக்கும் குலமரபில் அரசுஅளித்து
மாடுஆக மணிகண்டர் திருநீறே மனம்கொள்வார்
தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி
நாடுஆளும் காவலனார் நரசிங்க முனையரையர் (1)

முனையர் மரபிலே வந்த பெருந்தகைமை கொண்ட மன்னர், தம் நகரத்தில் சிறப்பான முறையில் ஆட்சி புரிந்து வந்தார். பல போர்களில் பல பகைவர்களை வென்றார். தீமையான நெறிகள், செயல்கள் எல்லாம் நீங்க மூன்று தலைகளை உடையதும் நீண்டதும் இலை வடிவம் கொண்டதுமான சூலத்தை முதன்மை பெற்ற படையாக உடையவர் இறைவர், அவர்மீது பெரும் பக்தி கொண்டு விளங்கும் அடியவர்களின் திருவடிகளை அடைவதே அரும்பெரும் பேறு எனக் கருதினார்.

இம்முனையர் பெருந்தகையார் இருந்துஅரசு புரிந்துபோய்த்
தெம்முனைகள் பலகடந்து தீங்குநெறிப் பாங்குஅகல
மும்முனைநீள் இலைச்சூல முதல்படையார் தொண்டுபுரி
அம்முனைவர் அடிஅடைவே அரும்பெரும் பேறுஎன அடைவார். (2)

Koviloor Digital Library

சினம் கொண்ட காளையினை வாகனமாக உடையவர் எல்லாம் வல்ல சிவபெருமான். அவரது கோயில்கள்தோறும் திருச்செல்வங் களைப் பெருகச் செய்கின்ற பணியில் இருந்தார். அப்பணி செய்தால் உயிரைத் துறக்க வேண்டி வரும் என்ற நிலை வந்தாலும் அப்பணி மேற்கொள்வார்.

பாசிமணி வடங்களின் இடையில் ஆமை ஓட்டை அணிந்த மார்பை உடைய இறைவரின் வழித்தொண்டைக் கனவிலும் தவறாது செய்பவராய் விளங்கினார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் செப்புவார்.

சினவிடையார் கோயில்தொறும் திருச்செல்வம் பெருக்குநெறி
யனஇடைஆர் உயிர்துறக்க வரும்எனினும் அவைகாத்து
மனவுஇடை ஆமைத்தொடையல் அணிமார்பர் வழித்தொண்டு
கனவிடை ஆகிலும் வழுவாக் கடன்ஆற்றிச் செல்கின்றார். (3)

கங்கை ஆற்றினைத் தலையில் சூடிய முடியினராய் உள்ள சிவபெருமானுக்குத் திருவாதிரை தினந்தோறும் வேறுபட்ட நிறைந்த வழிபாடுகளையும் பூசனைகளையும் செய்து வந்தார். திருநீறு அணிந்த தொண்டர்களாய் திருவாதிரை நாளில் வருபவர்களுக்குக் குறையாது ஒரு நூறு பசும்பொன் தருவார். அதுமட்டும் அல்லாமல் இனிய திரு அமுதத்தையும் அவர்களுக்குக் கொடுத்து அருளுவார்.

ஆறுஅணிந்த சடைமுடியார்க்கு ஆதிரை நாள்தொறும் என்றும்
வேறு நிறை வழிபாடு விளங்கிய பூசனைமேவி
நீறுஅணியும் தொண்டர் அணைந்தார்க்கு எல்லாம் நிகழ் பசும்பொன்
நூறுகுறையாமல் அளித்து இன்அமுது நுகர்விப்பார் (4)

இத்தகு திருப்பணிகளில் ஈடுபட்டு வந்த நரசிங்க முனை யரையர் ஓர் **ஆதிரைத் திருநாளில்** மேன்மை சான்ற சைவ நெறியில் வாழும் அடியார்களுக்குப் பொன் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது ஓர் அடியார் தம் உடலிலே தம் தன்மானம் இகழப்படுமாறு காமம் மிகுதியால் தாம் பெற்ற குறிகளோடு வந்தார். இதைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

ஆனசெயல் முறைபுரிவார் ஒரு திருஆதிரை நாளில்
மேன்மை நெறித் தொண்டர்க்கு விளங்கிய பொன்னிடும் பொழுதில்
மானநிலை அழிதன்மை வருங்காமக் குறிமலர்ந்த
ஊனநிகழ் மேனியராய் ஒருவர் நீறுஅணிந்துஅணைந்தார். (5)

அவ்வாறு அங்கு வந்து சேர்ந்த அடியவரின் நிலை கண்டு, அவருக்குப் பக்கத்தில் இருந்த மனிதர்கள் அவரை அருவருப்போடு பார்த்தனர். அவரிடம் இருந்து ஒதுங்கி நின்றனர். அதை அரசர்

Koviloor Digital Library

கண்டார். அவர் எதிரே சென்று கைகுவித்து வணங்கி அவரை அழைத்துக் கொண்டு வந்து அவரைப் பாராட்டினார். அவரை மிகுந்த அன்போடு உபசரித்தார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவர்.

மற்றவர்தம் வடிவிருந்த படிகண்டு மருங்குஉள்ளார்
உற்ற இகழ்ச்சியர் ஆகி ஒதுங்குவார் தமைக்கண்டு
கொற்றவனார் எதிர்சென்று கைகுவித்துக் கொடுபோந்தப்
பெற்றியினார் தமைமிகவும் கொண்டாடிப் பேணுவார். (ந.மு.–6)

ஒழுக்க சீலர்களாக இல்லாதோரை உலக மக்கள் மதிக்க மாட்டார்கள்; அவர்களை இகழவும் செய்வர். ஒருவர் ஒழுக்கசீலராக இல்லாமல் இருந்தாலும் சிவனடியார் என்றாலோ திருநீறு பூசியவர் என்றாலோ அவரை மதிக்க வேண்டும் எனும் கருத்துடையவர் நரசிங்க முனையரையர். அதனால்தான் ஒழுக்கம் இல்லாதவர்களாயினும் திருநீறு அணிந்தவர்களை உலகத்து மக்கள் இகழ்ந்து அதனால் கொடிய நரகத்தை அடையாமல் உய்ய வேண்டும் என எண்ணுபவராய் இருந்தார். மற்ற அடியவர்களுக்கு நூறு பொன் கொடுத்தார். ஆனால் ஒழுக்கமற்ற அடியவருக்கோ இருநூறு பொன் கொடுத்தார். அவரிடம் இன்சொற்கள் கொண்டு உரையாடினார். அவரை நன்கு உபசரித்து விடை தந்து அனுப்பினார். இதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

சீலம் இலரே எனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம் இகழ்ந்துஅரு நரகம் நண்ணாமல் எண்ணுவார்
பால்அணைந்தார் தமக்குஅளித்த படி இரட்டி பொன்கொடுத்து
மேல்அவரைத் தொழுதுஇனிய மொழிவிளம்பி விடைகொடுத்தார். (7)

முக்தி அடைதல்

இங்ஙனம் தாம் மேற்கொண்ட திருத்தொர்ண்டாகிய அரிய நெறியை எந்நாளும் செம்மையான அன்பால் செயல்படுத்தி வந்தார். திருத்தமான சிந்தையராய் இருந்து வாழ்ந்து வந்தார். இங்ஙனம் வாழ்ந்து வந்த நரசிங்க முனையரையர் படமெடுக்கும் கொடிய பாம்பை அணிந்த இறைவரின் திருவடி நிழலை அடைந்து மெய்யான வழியினில் வரும் அன்பினால் முக்தி பெற்றார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் செய்யுளில் செப்புவார்.

இவ்வகையே திருத்தொண்டின் அருமைநெறி எந்நாளும்
செவ்விய அன்பினில் ஆற்றித் திருந்திய சிந்தையர்ஆகிப்
பைவளர்வாள் அரவுஅணிந்தார் பாதமலர் நிழல் சேர்ந்து
மெய்வகைய வழிஅன்பின் மீளாத நிலைபெற்றார். (8)

Koviloor Digital Library

நஞ்சுடைய பாம்பு அணிந்தவர் சிவபெருமான். அவரது உண்மைத் தன்மை உடைய தொண்டைச் சீராகச் செய்த நரசிங்க முனையரை யரின் கழல்களை வணங்கி அடுத்து, கடல் துறைமுகப்பட்டினமான நாகை நகர் வாழ் அதிபத்த நாயனாரின் வரலாற்றைக் கூறத் தொடங்கு கிறார், தெய்வச் சேக்கிழார்.

விடநாகம் அணிந்தபிரான் மெய்த்தொண்டு விளைந்தநிலை
உடன்ஆகும் நரசிங்க முனையர்பிரான் கழல்ஏத்தித்
தடநாகம் மதம் சொரியத் தனம் சொரியும் கலம் சேரும்
கடல் நாகை அதிபத்தர் கடனாகைக் கவினுரைப்பாம். (ந.மு.–9)

நுட்பம்

சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையில் உள்ள நாடு நடு நாடு ஆகும். அந்நாட்டில் உள்ள ஒரு பகுதிதான் திருமுனைப் பாடி நாடு. அரசர்கள் போர் புரிய பாடி வீடு பல அமைத்ததால் இதற்கு இப்பெயர் வந்தது. தேவார மூவரில் திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவதரித்த பெருமை இதற்குண்டு.

ஒருவர் ஒழுக்கமற்றவர் என்றாலும் அவர் திருநீறு பூசிவிட்டால் நாம் அவரை வணங்க வேண்டுமா எனும் கேள்வி நம்முள் எழுகிறது. வணங்க வேண்டும் என்பதுதான் அதற்குரிய பதிலாகும். ஏனெனில் அரசாங்க உடை உடுத்தி வருகின்ற காவல்காரர்களையும் இராணு வத்தினரையும் அவர்கள் ஒழுக்கமில்லாதவர்களாக இருந்தாலும் நாம் மதிக்கிறோம். அதுபோல் திருநீறு அணிந்தவர் ஒழுக்கமில்லாதவர் என்றாலும் அவரை நாம் மதிக்க வேண்டும்.

எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங்கு உவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டாது ஒழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே. (அப்பர் தேவாரம் – 6856)

எனும் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவாக்கினை உணர்வுடை யோர் உணர்க; அறிவுடையோர் அறிக; அறிந்து உய்தி பெறுக.

அருள்மிகு சுந்தராம்பிகை உடனுறை பக்த ஜனேசுவரர் திருக்கோயில்
திருநாவலூர் அஞ்சல் – 607 204.
உளுந்தூர்ப்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

Koviloor Digital Library

67. அதிபத்தர்

(20 பாடல்கள்)

பிறந்த ஊர் : **நாகப்பட்டினம்**

குலம் : **நுளையர் குலம் (பரதவர்)**

குருபூசை மாதம் : **ஆவணி**

நட்சத்திரம் : **ஆயில்யம்**

காலம் : **அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 – 840)**

விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தற்கு அடியேன் (திரு. தொகை-7:2)

நாகப்பட்டின வளம்

சூரிய குலத்தில் தோன்றிய சோழ மன்னர்களுக்கு உரிய சோழ நாட்டில் கற்பக மலர்போல் அழகு பெற்றிருப்பது நாகப்பட்டினம். தொன்மை நன்மை ஆகிய இரண்டையும் கொண்ட அந்நகர் கடற்கரையில் அமைந்துள்ளது. நல்ல வளம் கொண்டது.

மன்னி நீடிய செங்கதிரோன் வழி மரபின்
தொன்மைஆம் முதல் சோழர்தம் திருக்குலத்துஉரிமைப்
பொன்னி நாடுஎனும் கற்பகப் பூங்கொடி மலர்போல்
நன்மை சான்றது நாகப்பட்டினத் திருநகரம் (அ.நா.–1)

இத்தகு வளம்கொண்ட நாகப்பட்டினத்தின் பக்கத்தில் கடல் விளிம்பில் பரதவர் சேரி அமைந்துள்ளது. இதனை நுளைப்பாடி என்பார் தெய்வச் சேக்கிழார்.

அந்நெடுந் திருநகர் மருங்கு அலைகடல் விளிம்பில்
பல்நெடுந்திரை நுரைதவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னு தொன்மையின் விலைவளத்து உணவினில் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது தடநுளைப்பாடி (அ.நா. – 5)

நாகப்பட்டினத்தில் உள்ள பரதவர்கள் கடலில் சென்று வலை வீசுவர். கிடைக்கும் மீன்களை விற்று, தம் வாழ்க்கையை நடத்துவர்.

பெரிய வலைகளை இழுப்பதனால் வரும் ஒலி; கிடைத்த மீன் குவியல்களை விற்பதனால் வரும் ஒலி; வெண்சங்கங்களைக் குவிக்கின்ற ஒலி; இவையெல்லாம் அலைகடலின் ஒலிக்கு எதிர் ஒலி போன்று இருந்தன. இதனைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் குறிப்பிடுவார்.

Koviloor Digital Library

வலைநெடும்தொடர் வடம்புடை வலிப்பவர் ஒலியும்
விலைபகர்ந்து மீன்குவை கொடுப்பவர் விளிஒலியும்
தலைசிறந்த வெள்வளை சொரிபவர் தழங்குஒலியும்
அலைநெடுங்கடல் அதிர்ஒலிக்கு எதிர்ஒலி அனைய (8)

இத்தகு இயல்புகளைப் பெற்ற நுளைப்பாடியில் நுளையர் குலத்தில் அதிபத்தர் தோன்றினார். இதனைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

அனையது ஆகிய அந்நுளைப் பாடியில் அமர்ந்து
மனைவளம் பொலி நுளையர்தம் குலத்தினில் வந்தார்
புனை இளம்பிறை முடியவர் அடித்தொண்டு புரியும்
வினைவிளங்கிய அதிபத்தர் எனநிகழ் மேலோர் (அ.நா. – 9)

அதிபத்தர் நுளையர் தலைவர் ஆனார். அவர் கடலுக்குச் சென்று வலைவீசி மீன்பிடிப்பார். பலவகை மீன் குவைகள் கொண்டவராய் அவர் இருந்ததை,

ஆங்கு அவ்அன்பர்தாம் நுளையர்தம் தலைவராய் அவர்கள்
ஏங்கு தெண்திரைக் கடல்இடைப் பலபட இயக்கிப்
பாங்கு சூழ்வலை வளைத்துமீன் படுத்துமு குவிக்கும்
ஓங்கு பல்குவை உலப்பில உடையராய் உயர்வார் (அ.நா. – 10)

எனும் பாடலில் தெய்வச் சேக்கிழார் குறிப்பார்.

அதிபத்த நாயனாருக்குக் கிடைக்கும் மீன்களில் தலைசிறந்த ஒரு மீனை இது திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் ஆடும் சிவபெருமானுக்கு என்று அளவற்ற அன்புடன் கடலிலே விட்டுவிடுவார்.

ஒருநாளில் ஒரு மீன் மட்டுமே கிடைத்தால்கூட அதனையும் சிவபெருமானுக்காகக் கடலில் விட்டுவிடுவார். பல நாள்கள் அவருக்கு ஒரே ஒரு மீன் மட்டுமே கிடைத்தது. அவ்வாறு அரிதாகக் கிடைக்கும் ஒரே மீனையும் கடலிலே சிவபெருமானுக்காக விட்டு விடுவார். இதனால் அதிபத்தர் வறுமை அடைந்தார். அவரும் அவரது உறவினர்களும் உணவின்றி வாடினார்கள். அந்த நிலையில்கூட அவர் தமக்குக் கிடைக்கும் ஒரே மீனையும் இறைவருக்காகக் கடலில் விட்டார். இச்செய்திகளைப் பின்வரும் மூன்று பாடல்களில் தெய்வச் சேக்கிழார் கூறுவார்.

முட்டுஇல் மீன்கொலைத் தொழில் வளத்தவர் வலைமுகந்து
பட்ட மீன்களில் ஒருதலை மீன்படு தோறும்
நட்டம் ஆடிய நம்பருக்குஎன நளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாத அன்புடன் என்றும் விருப்பால் (11)

Koviloor Digital Library

வாருசேர் வலை நாள்ஒன்றில் மீன்ஒன்று வரினும்
ஏக நாயகர்தம் கழற்கு எனவிடும் இயல்பால்
ஆகு நாள்களில் அநேகநாள் அடுத்துஒரு மீனே
மேக நீர்படி வேலையின் படவிட்டு வந்தார். (12)

மீன் விலைப்பெருகு உணவினில் மிகுபெருஞ் செல்வம்
தான் மறுத்தலின் உணவுஇன்றி அருங்கிளை சாம்பும்
பான்மை பற்றியும் வருந்திலர் பட்டமீன் ஒன்று
மான்மறிக்கரத் தவர் கழற்கு எனவிட்டு மகிழ்ந்தார் (13)

பல நாட்கள் இங்ஙனம் நிகழ்ந்தது. இதனால் அதிபத்தருக்கு உணவு கிடைக்காமல் போனது. இருந்தாலும் அவரது பக்தி குறையவில்லை. ஆலகால விஷத்தை உண்ட சிவபெருமான் அதிபத்தரின் அன்பு அமுதத்தை உண்டார். இதனைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

சால நாள்கள் இப்படிவரத் தாம் உணவுஅயர்த்துக்
கோல மேனியும் தளரவும் தம்தொழில் குறையாச்
சீலமே தலைநின்றவர் தம்திறம் தெரிந்தே
ஆலம் உண்டவர் தொண்டர் அன்புஎனும் அமுதுஉண்பார். (14)

இறைவர் ஒருநாள், ஒரு மீன்கூட அதிபத்தருக்குக் கிடைக்காத படி செய்தார். மேலும் பசும்பொன்னாலும் ஒளிகொண்ட மணி களாலும் ஆன உறுப்புகள் கொண்ட உலகங்களுக்கு எல்லாம் விலை மதிக்கப்படும் அற்புதம் கொண்ட ஒரு மீனை வலையில் கிடைக்குமாறு செய்தார். இதைப்பின்வரும் பாடலில் குறிப்பிடுவார் தெய்வச் சேக்கிழார்.

ஆன நாள்ஒன்றில் அவ்ஒரு மீனும் அங்குஒழித்துத்
தூநிறப் பசுங் கனகநல் சுடர்நவ மணியால்
மீன்உறுப்புஉற அமைத்துஉலகு அடங்கலும் விலைஆம்
பான்மை அற்புதப் படியதுஒன்று இடுவலைப்படுத்தார். (15)

ஒருநாள் பரதவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். அப்போது நவரத்தின மயமான மிகு மதிப்புடைய ஒரு மீன் அகப்பட்டது. அது ஓர் இளஞ்சூரியன் உதித்தது போல் உலகமே அதிசயிக்கும்படி இருந்தது. அதைத் தம் தலைவராகிய அதிபத்தரிடம் பரதவர்கள் கொடுத்தனர்.

வாங்கு நீள்வலை அலைகடல் கரையில் வந்து ஏற
ஓங்கு செஞ்சுடர், உதித்தென உலகுஎலாம் வியப்பத்
தாங்கு பேர்ஒளி தழைத்திடக் காண்டலும் எடுத்துப்
பாங்கு நின்றவர் மீன்ஒன்று படுத்தனம் என்றார் (16)

Koviloor Digital Library

அப்பொன்மீனைக் கண்ட அதிபத்தர் பொன்னையும் நவமணி களையும் கொண்ட இது என்னை ஆளுகின்ற இறைவருக்கே ஆகும். அவரது திருவடியை இது சேர்வதாகுக என்று கூறிக் கடலில் விட்டார்.

என்று மற்றுஉளோர் இயம்பவும் ஏறுசீர்த்தொண்டர்
பொன்திரள்சுடர் நவமணி பொலிந்தமீன் உறுப்பால்
ஒன்றும் மற்றுஇது என்னை ஆள்உடையவர்க்குஆகும்
சென்று பொன்கழல்சேர்கஎனத் திரையொடும் திரித்தார். (17)

எல்லா உலகங்களும் பொருள் ஒன்றினையே முதலாக உடையன என்று சொல்லும் வலிமை மிகுந்த பொன்னாசையைக் குற்றம் இல்லாது நீங்கியவர் அதிபத்தர். இவர் ஒப்பற்றவர். இத்தகைய மெய்த்தொண்டரின் முன்னே இறைவர் காளையாகிய தன் ஊர்தியின் மீது எழுந்தருளினார். அப்போது தேவர்கள் பூமழை பொழிந்தனர்.

அகில லோகமும் பொருள் முதற்றுஆம்எனும் அளவில்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரைஅற எறிந்த
இகல்இல் மெய்த்திருத் தொண்டர்முன் இறைவர்தாம் விடைமேல்
முகில்விசும் பிடை அணைந்தனர் பொழிந்தனர் முகைப்பூ (18)

அப்போது ஐவகைப்பட்ட தேவ வாத்தியங்கள் ஒலித்தன. அதிபத்தரை இறைவர் சிவலோகத்தில் சேர்த்தார்.

பஞ்ச நாதமும் எழுந்தன அதிபத்தர் பணிந்தே
அஞ்சலிக்கரம் சிரம்மிசை அணைத்து நின்றவரை
நஞ்சுவாள்மணி மிடற்றவர் சிவலோகம் நண்ணி
அம்சிறப்புடை அடியார்பாங்கு உறத்தலை அளித்தார் (19)

தம் மரபுக்கு ஏற்றபடி நின்ற அதிபத்தரின் திருவடியை வணங்கிக் கலிக்கம்ப நாயனாரின் வரலாற்றை அடுத்துக் கூறுகிறார் தெய்வச் சேக்கிழார்.

தம்அறம் புரி மரபினில் தகும் பெரும்தொண்டு
மெய்ம்மையே புரி அதிபத்தர் விளங்குதாள் வணங்கி
மும்மைஆகிய புவனங்கள் முறைமையில் போற்றும்
செம்மை நீதியார் கலிக்கம்பர் திருத்தொண்டு பகர்வாம் (20)

Koviloor Digital Library

68. கலிக்கம்பர்

(10 பாடல்கள்)

பிறந்த ஊர்	**:**	**திருப்பெண்ணாகடம் – 606 105 விருத்தாச்சலத்தி லிருந்து திட்டக்குடி செல்லும் சாலையில் 17 கி.மீ. தொலைவில் உள்ளது.**
குலம்	**:**	**வணிகர்**
குருபூசை மாதம்	**:**	**தை**
நட்சத்திரம்	**:**	**ரேவதி**
காலம்	**:**	**அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 – 840)**

கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்... அடியேன் (திரு. தொகை-7:3)

பெண்ணாடத்தின் வளம்

தமக்கு உரிமையுடைய நல்ல ஒழுக்கத்தில் சிறப்புப் பெற்ற - உயர்வு பெற்ற - பழமையான மரபிலே நிலைபெற்ற இல்லற நெறியில் வாழ்கின்ற குடிகள் கொண்டது பெண்ணாகடம் எனும் ஊர். விண்ணில் உள்ள மேகங்கள் எல்லாம் தங்குவதற்கு இடமான பூஞ்சோலைகள் கொண்டது இவ்வூர். மேற்குத் திசையில் உள்ள இவ்வூர் உலகம் பெருமை பொருந்த விளங்குவது. இதனைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் குறிப்பிடுவார்.

உரிமை ஒழுக்கம் தலைநின்ற உயர்தொல் மரபில் நீடுமனைத்
தரும நெறியால் வாழ்குடிகள் தழைத்து வளரும் தன்மையதாய்
வருமஞ்சு உறையும் மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த வளம்புறவில்
பெருமை உலகு பெறவிளங்கும் மேல்பால் பெண்ணா கடமூதூர். (1)

சிவன் மீது பெரும்பக்தி கொண்ட கலிக்கம்பர் வணிகர் குலத்தில் தோன்றினார். அவர் எல்லாம் வல்ல சிவபெருமானின் கழலின்மீது கொண்ட பெருங்காதலை நாளுக்கு நாள் வளர்க்கும் கருத்துடையவர். அவர் பெண்ணாகடத்தில் உள்ள திருத்தூங்கானை எனும் மாடத்தில் எழுந்தருளி உள்ள சிவபெருமானின் திருவடிக்குத் தொண்டு செய்பவர். அவர் சிவன்மீது கொண்ட பற்று அல்லாது வேறொரு பற்றும் இல்லாதவர். இதனை,

Koviloor Digital Library

மற்றுஅப் பதியின் இடைவாழும் வணிகர் குலத்து வந்துஉதித்தார்
கற்றைச் சடையார் கழல்காத லுடனே வளர்ந்த கருத்துஉடையார்
அற்றைக் கன்று தூங்கானை மாடத்துஅமர்ந்தார் அடித்தொண்டு
பற்றிப் பணிசெய் கலிக்கம்பர் என்பார் மற்றுஓர் பற்றுஇல்லார். (2)

எனும் பாடலில் தெய்வச் சேக்கிழார் கூறுகிறார்.

கலிக்கம்ப நாயனார் சிவன் அடியாருக்கு அமுது செய்விப்பார். மேன்மை விளங்கும் திருவமுது, கறி வகைகள், நெய், தயிர், தீம்பால், தேனினும் இனிய கனி, கரும்புக்கட்டி ஆகியவற்றை அடியவர்களுக்குப் படைப்பார். மேலும் அடியவர்களுக்கு வேண்டிய ஏனைய நிதியங்களையும் இன்பமுற அளிப்பார். இதனைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

ஆன அன்பர் தாம்என்றும் அரனார் அன்பர்க்கு அமுதுசெய
மேன்மை விளங்கும் போனகமும் விரும்பு கறிநெய் தயிர்தீம்பால்
தேனின்இனிய கனிகட்டி திருந்த அமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்பம்உற அளிப்பார் (3)

இங்ஙனம் தமது தொண்டைச் சீராகச் செய்து வரும்போது ஒருநாள் தம் வீட்டில் அமுது உண்ண வந்த அடியவர்களுக்குப் பழைய முறையில் அமுது செய்விக்க, அவர்களைத் தம் முன்னர் அழைத்து அவர்களின் திருவடியைக் கழுவ முயல்கிறார். இதனை,

அன்ன வகையால் திருத்தொண்டு புரியும்நாளில் அங்குஒருநாள்
மன்னு மனையில் அமுதுசெய வந்த தொண்டர்தமை எல்லாம்
தொன்மை முறையே அமுதுசெயத் தொடங்குவிப்பார் அவர் தம்மை
முன்னர் அழைத்துத் திருவடிகள் எல்லாம் விளக்க முயல்கின்றார். (க.க.நா. – 4)

எனும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

கலிக்கம்ப நாயனாரின் மனைவியார் தமது வீடு முழுதும் தூய்மை பெற நன்கு விளக்கினார். திருவமுது, கறியமுது, தூய்மை யான நீர் ஆகியவற்றையும் பிற உண்ணும் பொருள்களையும் செம்மையாக அமைத்தார். அவர் தமது கரத்தில் நீரை வார்க்க கலிக்கம்ப நாயனார் அடியவர்களின் திருவடிகளை விளக்கி வந்தார்.

அப்போது முன் காலத்தில் தமக்குத் தொண்டு செய்து பிறகு ஏவல் பணியை வெறுத்துச் சென்று எலும்பையும் பாம்பையும் அணிந்துள்ள எல்லாம்வல்ல சிவபெருமானின் அடியவராகி அங்கு வந்த அடியார்களுடன் இணைந்து வந்த ஒருவரின் திருவடிகளை கலிக்கம்ப நாயனார் தம் கைகளால் பிடித்தார்.

Koviloor Digital Library

அப்போது அவருடைய இல்லத்தரசியார் முன்பு ஒரு காலத்தில் நமது ஏவலைச் செய்யாமல் விட்டுச் சென்றவர் இவர் போலும் என்று நினைத்தார். அங்ஙனம் நினைக்கும்போது தம் கையில் உள்ள கரக நீரை வார்ப்பதற்குக் காலம் தாழ்த்திவிட்டார். அப்போது முதன்மை பெற்ற தொண்டராகிய கலிக்கம்ப நாயனார் கரிய கூந்தலை உடைய தம் மனைவியைப் பார்த்துத் தம் மனத்தில் எண்ணினார்.

இச்செய்திகளைப் பின்வரும் மூன்று பாடல்கள் விளக்குகின்றன.

திருந்து மனையார் மனையெல்லாம் திகழ விளக்கிப் போனகமும்
பொருந்து சுவையின் கறிஅமுதும் புனிதத் தண்ணீ ருடன் மற்றும்
அருந்தும் இயல்பில் உள்ளனவும் அமைத்துக் கரக நீர்அளிக்க
விரும்பு கணவர் பெருந்தவர்தாள் எல்லாம் விளக்கும் பொழுதின்கண். (5)

முன்புதமக்குப்பணி செய்யும் தமராய் ஏவல் முனிந்துபோய்
என்பும் அரவும் அணிந்தபிரான் அடியார்ஆகி அங்குஎய்தும்
அன்ப ருடனே திருவேடம் தாங்கி அணைந்தார் ஒருவர்தாம்
பின்பு வந்து தோன்றஅவர் பாதம்விளக்கும் பெருந்தகையார் (க.க.நா. – 6)

கையால் அவர்தம் அடிபிடிக்கக் காதல் மனையார் முன்புஏவல்
செய்யாது அகன்ற தமர்போலும் என்று தேரும் பொழுதுமலர்
மொய்ஆர் வாசக் கரகநீர் வார்க்க முட்ட முதல்தொண்டர்
மைஆர் கூந்தல் மனையாரைப் பார்த்து மனத்துள் கருதுவார். (7)

நறுமணம் வீசுகின்ற கொன்றை மலரை அணிந்த முடியைக் கொண்ட சிவபெருமானின் அடியவரை அவர் முன்பு இருந்த நிலை கருதி, திருவடியை விளக்க நீரை வார்க்காமல் விட்டார் என்று மனத்தால் எண்ணிய கலிக்கம்ப நாயனார் தமது கூர்மைமிகு வாளை உருவினார். தம் மனைவியார் கையில் இருந்த கரகத்தை வாங்கிக் கொண்டார். அவரது கையை வெட்டினார். கரகத்தை எடுத்து நீரை வார்த்தார். அடியவரின் திருவடியை விளக்கினார். இதைப் பின்வரும் பாடலில் தெய்வச் சேக்கிழார் கூறுகிறார்.

வெறித்த கொன்றை முடியார்தம் அடியார் இவர்முன் மேவும்நிலை
குறித்து வெள்கி நீர்வாராது ஒழிந்தாள் என்று மனம்கொண்டு
மறித்து நோக்கார் வடி வாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீர்எடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார். (க.க.நா. – 8)

அங்ஙனம் திருவடிகளை விளக்கியபின் அடியவர் அமுது உண்பதற்கு வேண்டிய பிற செயல்களைத் தாமே செய்தார். இங்ஙனம் திருத்தொண்டு செய்த கலிக்கம்ப நாயனார் தம் கழுத்தில்

Koviloor Digital Library

நஞ்சைப்பெற்ற எல்லாம்வல்ல சிவபெருமானின் திருவடி நிழலின் கீழ் உள்ள முத்தி பெற்ற அடியார் கூட்டத்தில் கலந்தார். இதை,

விளக்கி அமுது செய்வதற்கு வேண்டுவன தாமேசெய்து
துளக்குஇல் சிந்தை யுடன்தொண்டர் தம்மை அமுது செய்வித்தார்
அளப்புஇல் பெருமை யவர்பின்னும் அடுத்த தொண்டின் வழிநின்று
களத்தில் நஞ்சம் அணிந்தவர்தாள் நிழல்கீழ் அடியாருடன் கலந்தார் (9)

எனும் பாடல் மூலம் உணரலாம்.

குளிர்ச்சியும் நிறைவும் பெற்ற நீர் உள்ள கடலில் எழுந்த நஞ்சையுண்ட இறைவரின் அடியாரது வேடம் இது என்று உணராத மனைவியின் கையை வெட்டிய கலிக்கம்ப நாயனாரின் திருவடி தொழுது, கலிய நாயனாரின் பெருமையைச் சொல்லத் தொடங்கு கிறார் தெய்வச் சேக்கிழார்.

ஓதம் மலிநீர் விடம்உண்டார் அடியார் வேடம் என்றுஉணரா
மாத ரார்கை தடிந்தகலிக் கம்பர் மலர்ச்சே வடிவணங்கிப்
பூத நாதர் திருத்தொண்டு புரிந்து புவனங் களில்பொலிந்த
காதல் அன்பர் கலிநீதி யார்தம் பெருமை காட்டுவாம். (10)

அருள்மிகு ஆமோதனம்மாள், (கடந்தை நாயகி, அழகிய காதலி)
உடனுறை பிரளய காலேஸ்வரர், சுடர்க்கொழுந்தீசர் திருக்கோயில்,
பெண்ணாகடம் (அஞ்சல்) – 606 105.
திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்

Koviloor Digital Library

69. கலியர்

(17 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	திருவொற்றியூர் . (தொண்டைநாடு)
குலம்	:	வாணியர்
குருபூசை மாதம்	:	ஆடி
நட்சத்திரம்	:	கேட்டை
காலம்	:	அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 – 840)

கலியன்..... அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை. 7:3)

இவ்வுலகில் ஓங்கிய புகழ் கொண்ட நாடு தொண்டை நாடு. இங்கு சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவொற்றியூர் என்னும் ஊர் அமைந்துள்ளது.

பேர்உகில் ஓங்குபுகழ்ப் பெருந்தொண்டை நல்நாட்டு
நீர்உலவும் சடைக்கற்றை நிருத்தர்திருப் பதியாகும்
கார்உலவு மலர்ச்சோலைக் கன்னிமதில் புடைசூழ்ந்து
தேர்உலவு நெடுவீதி சிறந்ததிரு ஒற்றியூர். (1)

இவ்வூர் பெரிய வீதிகள் கொண்டது. பௌத்தர்களும் சமணர்களும் கூறுவதுபோல் விண்வெளியை இல்லை என்று கூறுமாறு மறைக்கும் பெரிய மாளிகைகள் கொண்டது. நகரத்தை அடுத்துள்ள கடலானது பயிர்கொண்ட தோட்டம் போல் உள்ளது.

பீடுகெழும் பெரும்தெருவும் புத்தருடன் பீலிஅமண்
வேடம்உடை யவர்பொருள்போல் ஆகாச வெளிமறைக்கும்
ஆடுகொடி மணிநெடுமா ளிகைநிரைகள் அலைகமுகின்
காடுஅனைய கடல்படப்பை எனவிளங்கும் கவின்காட்டும் (2)

பலரால் பலமுறை ஓதப்படும் பதிகங்களின் இசைப்பாடல்களை மண்டபங்கள் பெற்றிருந்தன. பல வீதிகளில் விழாக்கள் கொண்டாடப் பட்டன. திருமடங்கள் எல்லாம் செந்நெல் அரிசியாலான உணவுப் பெருக்கத்தைக் கொண்டிருந்தன.

பன்னுதிருப் பதிகஇசைப் பாட்டுஒவா மண்டபங்கள்
அன்னநடை மடவார்கள் ஆட்டுஒவா அணிஅரங்கு
பல்முறைதூ ரியம்முழங்கு விழவுஒவா பயில்வீதி
செந்நெல்அடி சில்பிறங்கல் உணவுஒவா திருமடங்கள். (3)

மாதவி, புன்னை, குங்கும மரம், சண்பக மரம், செருந்தி, தாழை ஆகிய மரங்கள் எல்லாம் கடல் நீர்கூட மணக்கும் வண்ணம் தமது

Koviloor Digital Library

மலர்களின் மணத்தைத் தருவன ஆகும். நிலவின் துகளைப்போல் மணற்பரப்பின் பரந்தபரப்பு இருக்கும்.

கெழுமலர்மா தவிபுன்னை கிளைஞாழல் தளைஅவிழும்
கொழுமுகைய சண்பகங்கள் குளிர்செருந்தி வளர்கைதை
முழுமணமே முந்நீரும் கமழமலர் முருகுஉயிர்க்கும்
செழுநிலவின் துகள்அனைய மணல்பரப்பும் திருப்பரப்பு. (4)

மேக ஒலி, கடல் ஒலி, வாத்திய ஒலி இவையெல்லாம் கூடியுள்ளன. இவை பிரித்து அறிய இயலாதவாறு இருக்கும். சிறப்புப் பெற்ற திருவொற்றியூரில் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழில் புரிவோர் வாழும் சக்கரபாடித் தெரு உள்ளது.

எயில்அணையும் முகில்முழக்கும் எறிதிரைவே லையின் முழக்கும்
பயில்தருபல் இயமுழக்கும் முறைதெரியாப் பதிஅதனுள்
வெயில்அணிபல் மணிமுதலாம் விழுப்பொருள் ஆவனவிளக்கும்
தயிலவினைத் தொழில்மரபில் சக்கரப்பா டித்தெருவு. (5)

அக்குலத்தோர் செய்த தவத்தால் தோன்றியவர் கலிய நாயனார். மிகப்பெரும் செல்வம் பெற்றிருந்தார். சிவபெருமானுக்கு உரிமையான தொண்டு புரிந்து வந்தார்.

அக்குலத்தின் செய்தவத்தால் அவனிமிசை அவதரித்தார்
மிக்கபெருஞ் செல்வத்து மீக்கூர விளங்கினார்
தக்கபுகழ்க் கலியனார் எனும்நாமம் தலைநின்றார்
முக்கண்இறை வர்க்குஉரிமைத் திருத்தொண்டின் நெறி முயல்வார் (க.நா.பு. – 6)

அவர் பல கோடிகளுக்கு அதிபதி. செல்வம் வரும் நெறியின் பயனை அறிந்தார். திருவொற்றியூரில் உள்ள இறைவரின் கோயிலுக்கு உள்ளேயும் வெளியேயும் இரவிலும், பகலிலும் கோயிலுக்குத் திருவிளக்கேற்றும் பணியினை மேற்கொண்டார்.

எல்லைஇல்பல் கோடிதனத்து இறைவராய் இப்படித்தாம்
செல்வநெறிப் பயன்அறிந்து திருஒற்றி யூர்அமர்ந்த
கொல்லை மழ விடையார்தம் கோயிலின்உள் ளும்புறம்பும்
அல்லும் நெடும் பகலும்இடும் திருவிளக்கின் அணிவிளைத்தார். (க.நா.பு. – 7)

எண்ணற்ற விளக்குகள் எரிந்தன. அவரது செயலை உலகறியச் செய்ய இறைவர் விழைந்தார். அவரது இருவினைகளும் தீர்ந்ததுபோல் அவரது செல்வமும் தீர்ந்தது.

எண்இல்திரு விளக்குநெடு நாள்எல்லாம் எரித்துவரப்
புண்ணியமெய்த் தொண்டர்செயல் புலப்படுவார் அருளாலே
உள்நிறையும் பெருஞ்செல்வம் உயர்த்தும் வினைச்செயல்ஒவி
மண்ணில் அவர் இருவினைபோல் மாண்டதுமாட் சிமைத்தாக. (க.நா.பு. – 8)

Koviloor Digital Library

அவரது செல்வம் தீர்ந்தாலும் அவரது தொண்டு தொடர்ந்தது. தமது மரபில் உள்ள செல்வந்தர்களிடம் எண்ணெய் பெற்று அதை விற்றுத் தந்து அதனால் கிடைக்கும் கூலி கொண்டு தம் தொண்டைச் செய்து வந்தார்.

திருமலிசெல் வத்துழனி தேய்ந்துஅழிந்த பின்னையும்தம்
பெருமைநிலைத் திருப்பணியில் பேராத பேராளர்
வருமரபில் உள்ளோர்பால் எண்ணெய்மா றிக்கொணர்ந்து
தரும்இயல்பில் கூலியினால் தமதுதிருப் பணிசெய் வார். (கு.நா.பு. – 9)

ஒரு கட்டத்தில் செல்வ வளம் உடையவர்களும் எண்ணெய் கொடுக்காததால் அவரது தொண்டுக்குத் தடை வந்தது. உடனே கலிய நாயனார் செக்காடும் இடத்தில் பணி செய்து கூலி பெற்றுத் தொண்டு செய்ய விரும்பினார்.

வளமுடையார் பால்எண்ணெய் கொடுபோய்மா றிக்கூலி
கொளமுயலும் செய்கையும்மற் றவர்கொடா மையின்மாறத்
தளரும்மனம் உடையவர் தாஞ்சக்கரஎந் திரம்புரியும்
களனில்வரும் பணிசெய்து பெறும்கூலி காதலித் தார். (கு.நா.பு. – 10)

செக்கில் எள்ளிட்டு ஆட்டிப் பதம் தெரிந்து எள்ளில் இருந்து எண்ணெய் எடுப்பார். செக்கை வட்டமாகச் சுற்றும் எருதுகளைச் செலுத்தும் பணி செய்வார். இதனால் வரும் வருவாய் கொண்டு தவறாமல் விளக்கு இட்டார். இதன்மூலம் திருத்தொண்டின் திறத்தை விளக்கி விட்டார்.

செக்குநிறை எள்ஆட்டிப் பதம்அறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில்வரும் எரு துய்த்தும்
தக்கதொழில் பெறும்கூலி தாம்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார். (11)

அத்தொழிலால் கிடைக்கும் கூலி கூட அத்தொழில் செய்வோர் பலராக இருப்பதால் கிடைக்காமல் போய்விட்டது. இதனால் அவர் இடர்ப் பட்டார். ஒப்பற்ற பெருமை கொண்ட தன் இல்லத்தை விற்றுப் பொருள் பெற்றுத் தொண்டு செய்தார் அப்பொருளும் தீர்ந்தது. பின்பு தன் மனைவியையே விற்க முடிவெடுத்தார்.

அப்பணியால் வரும்பேறும் அவ்வினைஞர் பலருளராய்
எப்பரிசும் கிடையாத வகைமுட்ட இடர்உழந்தே
ஒப்புஇல்மனை விற்றுளிக்கும் உறுபொருளும் மாண்டதன்பின்
செப்பஅரும்சீர் மனையாரை விற்பதற்குத் தேடுவார். (12)

அவரது மனைவியைக் கொண்டு வளம் பல மிகுந்த அந்நகரில் பொருள் கொடுப்பவர் யாரும் கிடைக்கவில்லை. இதனால் அவர் தளர்ச்சி அடைந்தார். இதனால் திருவிளக்கு ஏற்றும் பணி தடைப்பட்டது. இதைக் கனவில்கூட அறியாத நாயனார் கையறுநிலை எய்தினார்.

Koviloor Digital Library

மனம்மகிழ்ந்து மனைவியார் தமைக்கொண்டு வளநகரில்
தனம்அளிப்பார் தமைஎங்கும் கிடையாமல் தளர்வுஎய்திச்
சினவிடையார் திருக்கோயில் திருவிளக்குப் பணிமுட்டக்
கனவினும்முன்பு அறியாதார் கையறவால் எய்தினார். (13)

படம் பக்க நாதரின் ஆலயத்துள் விளக்கேற்ற முடியாமல் போய்விட்டதால் இறந்து விடத் துணிந்தார்.

பணிகொள்ளும் படம்பக்க நாயகர்தம் கோயிலினுள்
அணிகொள்ளும் திருவிளக்குப் பணிமாறும் அமயத்தில்
மணிவண்ணச் சுடர்விளக்கு மாளில்யான் மாள்வன்எனத்
துணிவுஉள்ளம் கொளநினைந்துஅவ் வினைமுடிக்கத் தொடங்குவார். (14)

விளக்குகளுக்குத் திரி இட்டார். அகல்களை முறையாகப் பரப்பினார். எண்ணெய்க்குப் பதில் தம் உடல் இரத்தத்தைப் பயன்படுத்த விரும்பி கருவி கொண்டு தம் கழுத்தை அறுக்க முற்பட்டார். இறைவர் கருணையோடு அச்செயலைத் தடுத்தார்.

திருவிளக்குத் திரிஇட்டு அங்கு அகல்பரப்பிச் செயல்நிரம்ப
ஒருவியஎண் ணெய்க்குஈடா உடல்உதிரம் கொடு நிறைக்கக்
கருவியினால் மிடறுஅரிய அக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுடன் நேர்வந்து பிடித்தருளி (15)

தமது உச்சியின்மேல் கைகள் குவித்து வணங்கிய கலிய நாயனாருக்குச் சிவபெருமான் சிவபுரியில் இடம்தந்தார்.

மற்றுஅவர்தம் முன்னாக மழவிடைமேல் எழுந்தருள
உற்றஊ றுஅதுநீங்கி ஒளிவிளங்க உச்சியின்மேல்
பற்றியஅஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புஉடைய சிவபுரியில் பொலிந்துஇருக்க அருள் புரிந்தார். (16)

அடுத்து, சத்தி நாயனாரின் வரலாறு கூறுகிறார் தெய்வச் சேக்கிழார்.

தேவர்பிரான் திருவிளக்குச் செயல்முட்ட மிடறுஅரிந்து
மேவுஅரிய வினைமுடித்தார் கழல்வணங்கி வியன்உலகில்
யாவர் எனாது அரன் அடியார் தமைஇகழ்ந்து பேசினரை
நாஅரியும் சத்தியார் திருத்தொண்டின் நலம்உரைப் பாம் (17)

அருள்மிகு திரிபுரசுந்தரி, வடிவுடையம்மன், வடிவுடை மாணிக்கம்
உடனுறை ஆதிபுரீஸ்வரர், புற்றிடம் கொண்டார், படம்பக்கநாதர்,
எழுத்தறியும் பெருமாள், தியாகேசர், ஆனந்தத் தியாகர் திருக்கோயில்
அருள்மிகு தியாராஜ சுவாமி திருக்கோயில்,
திருவொற்றியூர், சென்னை – 600 019.

Koviloor Digital Library

70. சத்தியார்

(7 பாடல்கள்)

பிறந்த ஊர் : வரிஞ்சியூர்

குலம் : வேளாளர்

குருபூசை மாதம் : ஐப்பசி

நட்சத்திரம் : பூசம்

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 – 840)

கழல்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை-7:3)

வரிஞ்சையூரில் வாய்மைமிக்கவராய் விளங்கியவர் ஒரு தொண்டர். வேளாளர் குலம் சிறப்பு எய்த வந்து தோன்றியவர் அவர். நான்முகனே வணங்கும் சிவனைத் தன் தலைவனாக ஏற்று திருத் தொண்டு செய்தவர் என்று அவரைப் பற்றி இப்பாடல் கூறுகிறது.

வரிஞ்சை ஊரினில் வாய்மைவே ளாண்குலம்
பெருஞ்சிறப்புப் பெறப்பிறப்பு எய்தினார்
விரிஞ்சன் மால்முதல் விண்ணவர் எண்ணவும்
அரும்சி லம்புஅணி சேவடிக்கு ஆட்செய்வார். (ச.நா.பு. – 2)

சிவபெருமானின் அடியவரை யார் இகழ்ந்து பேசினாலும், அவர்களுடைய நாக்கை அரிந்து விடும் சக்தி கொண்டவர். அந்தச் சக்தியே அவருக்குச் சத்தியார் என்ற பெயரைத் தந்ததாக இப்பாடல் கூறுகிறது.

அத்தர்ஆகிய அங்கணர் அன்பரை
இத்த லத்தில் இகழ்ந்து இயம் பும்உரை
வைத்த நாவை வலித்து அரி சத்தியால்
சத்தியார் எனும் நாமமும் தாங்கினார். (3)

சிவனடியாரை யாரேனும் தீங்கு சொல்லி இகழ்ந்தால் அந்தத் திரு இல்லாத மனிதரிடம் செல்வார். தன் கையில் உள்ள தண்டாயம் என்ற கருவியால் அவர் நாக்கைப் பற்றி இழுப்பார். உடனே தன் கூரிய கத்தியால் நாக்கைத் துண்டிப்பார். இதனையே தன் சிவத்தொண்டு என எண்ணி வாழ்ந்ததாக இப்பாடல் கூறுகிறது.

தண்டாயம்-பற்றி இழுக்கக்கூடிய குறடு போன்ற ஓர் ஆயுதம்.

தீங்கு சொற்ற திருஇலர் நாவினை
வாங்க வாங்குதன் டாயத்தி னால் வலித்து
ஆங்கு அயில்கத்தி யால்அரிந்து அன்புடன்

Koviloor Digital Library

ஓங்கு சீர்த்திருத் தொண்டின் உயர்ந்தனர். (ச.நா.பு. – 4)

இப்படியாகப் பன்னெடுங்காலம் சிவனடியார் நலன் பற்றி மட்டுமே சிந்தனை செய்து வாழ்ந்து வந்தார். கங்கைசூடிய இறைவனுக்குச் செய்யும் தொண்டு இதுவே என வாழ்ந்தார் என்று இப்பாடல் கூறுகிறது.

அன்னது ஆகிய ஆண்மைத் திருப்பணி
மன்னு பேர்உல கத்தில் வலியுடன்
பல்நெடும் பெருநாள் பரிவால் செய்து
சென்னி ஆற்றினர் செந்நெறி ஆற்றினர் (5)

ஐயம் இல்லாத அரிய தொண்டு உடையவர். மெய்யான வீரம் உடையவர். சிவனையும், சிவனடியார்களையும் ஏசுபவர்களின் நாக்கை அரியும் தொழிலைச் செய்து வந்தவர் சத்தியார். அவர் அம்பலவாணரின் அழகிய திருவடி நிழலை அடைந்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

ஐயம் இன்றி அரிய திருப்பணி
மெய்யி னால்செய்த வீரத் திருத்தொண்டர்
வையம் உய்ய மணிமன்றுள் ஆடுவார்
செய்ய பாதத் திருநிழல் சேர்ந்தனர் (6)

சிவபெருமானின் அடியவர்களை ஏசும் புல்லர்களின் நாவை அரியும் பணியே தன் பணி என்று இருந்த சத்தியாரின் திருவடிகளை வணங்கி, தம் சிவத்தொண்டைச் செம்மையாகச் செய்த ஐயடிகள் காடவர்கோன் வரலாற்றைக் கூறத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

நாய னார்தொண் டரைநலம் கூறலார்
சாய நாஅரி சத்தியார் தாள்பணிந்து
ஆய மாதவத்து ஐயடி கள்எனும்
தூய காடவர் தம்திறம் சொல்லுவாம். (7)

சத்தி நாயனார் சிவனடியார்களை இகழ்ந்தவரின் நாவை அரிந்தது சரியா என்னும் கேள்வி நம்முள் எழுகிறது. ஒருவகையில் சரி என்பதுதான் இதற்குரிய பதிலாகும். வைணவ சமயத்தின்மீது வெறுப்பு கொண்டு சமணர்களும் சாக்கியர்களும் பொறுப்பற்ற வார்த்தைகளைப் பேசுகின்றனர். அங்ஙனம் பேசும் சமணர்களின் சாக்கியர்களின் தலையை அறுப்பதே தனது கடமை என்று தொண்டரடிப்பொடியாழ்வார் கூறுவதை இங்கு ஒப்புநோக்கி உணரவேண்டும்.

வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்கி யர்கள்நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில், போவதே நோய தாகி

Koviloor Digital Library

குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய், அரங்கமா நகருளானே. (திருமாலை – 8)

குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லைக்
குறும்பி யளவாய்க் காதைக் குடைந்து தோண்டி
எட்டின மட்டு அறுப்பதற்கோ வில்லி இல்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவிஒட்டக் கூத்தன் இல்லை
விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
தெருட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே.
(தத்துவப்பிரகாசர் தனிப்பாடல்)

எனும் தத்துவப் பிரகாசர் இயற்றிய தனிப்பாடலை இங்கே ஒப்பு நோக்கி அறிக.

மேலும், அருட்பிரகாச வள்ளலார் தாம் இயற்றிய மனுமுறை கண்ட வாசகத்தில் **நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ** (1) முதலாகத் **தெய்வம் இகழ்ந்து செருக்கடைந்தேனோ!** (43) ஈறாக 43 பாவங்களைச் சுட்டியுள்ளார். **பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ** (28) என்று எழுதியிருக்கிறார். இதன்மூலம் பெரியோர் பாட்டில் பிழை சொல்லுதலும் பாவம் என்பதை அறிகிறோம். இதை உணர்வுடையோர் உணர்வர்; அறிவுடையோர் அறிவர்; தெளிவுடையோர் தெளிவர்; தெளிந்தோர் உய்தி பெறுவர்.

விரிஞ்சையூருக்கு அருகில் உள்ள சிவன் கோயில்.
அருள்மிகு சுந்தர குஜாம்பாள்
உடனுறை கேடிலியப்பர் திருக்கோயில்
கீவளூர் (கீழ்வேளூர்)
கீவளூர் (அஞ்சல்) – 611 104.
நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்

✱ தெய்வச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ள வரிஞ்சையூர் தற்பொழுது விரிஞ்சியூர் என மாறிவிட்டது.

Koviloor Digital Library

71. ஐயடிகள் காடவர்கோன்

(9 பாடல்கள்)

பிறந்த ஊர் : காஞ்சிபுரம் (தொண்டை நாடு) – 631 502.

குலம் : அரசர்

குருபூசை மாதம் : ஐப்பசி

நட்சத்திரம் : மூலம்

காலம் : அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 – 600)

ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை. 7:4)

பல்லவர் மரபிலே தோன்றியவர். வறுமையும், பகையும், துன்பமும் நீங்கும்படி ஆட்சி செய்தவர். சிவனின் சைவநெறியைக் கடைப்பிடித்தவர். செங்கோல் ஆட்சி செய்த செம்மல் என்று பாராட்டப்பட்டவர். அத்தகையாளரின் நாமம் "ஐயடிகள் காடவர் கோன்" என்பதனை இப்பாடல் உணர்த்துகிறது.

வையம்நிகழ் பல்லவர்தம் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையும் மிகைஒழியும் வகைஅடக்கிச்
செய்யசடை யவர்சைவத் திருநெறியால் அரசுஅளிப்பார்
ஐயடிகள் நீதியால் அடிப்படுத்தும் செங்கோலார். (1)

அவர் செல்வம் மிக்கவர். புகழ் மிகுந்தவர். நீதிமுறை தவறாத ஆட்சியாளர். சைவநெறி, வேதநெறி தழைத்தோங்கச் செய்தவர். பகைவரை வென்ற பராக்கிரமசாலி என்று அவர் புகழை இப்பாடல் விளக்குகிறது.

திருமலியும் புகழ்விளங்கச் சேண்நிலத்தில் எவ்உயிரும்
பெருமையுடன் இனிதுஅமரப் பிறபுலங்கள் அடிப்படுத்துத்
தருமநெறி தழைத்துஓங்கத் தாரணிமேல் சைவமுடன்
அருமறையின் துறைவிளங்க அரசுஅளிக்கும் அந்நாளில். (2)

குறுநில மன்னர்கள் ஏவல் செய்து ஒழுகும் வண்ணம் வீரம் தீரம் மிக்கவராக விளங்கினார். வடமொழி தென்மொழி இரண்டிலும் சிறந்த புலமை மிக்கவராக விளங்கினார். "உலகம் காக்கும் அரசாட்சி துன்பம் செய்வதாகும்" என்று எண்ணினார். தன் மகனுக்கு முடிசூட்டு

Koviloor Digital Library

விழா நடத்தினார். தான் மட்டும் சிவநெறியிலே நின்று திருத்தொண்டில் ஈடுபட்டார் என்று இப்பாடல் கூறுகிறது.

மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் தமிழ்முதலாம்
பன்னுகலைப் பணிசெய்யப் பார்அளிப்பார் அரசாட்சி
இன்னல் என இகழ்ந்துஅதனை எழில்குமரன் மேல்இழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு நயந்துஅளிப்பார் ஆயினார். (3)

திருத்தொண்டில் ஈடுபட்ட நாயனார், இறைவன் எழுந்தருளி யுள்ள திருத்தலங்களுக்கெல்லாம் சென்றார். ஒவ்வோர் ஊரிலும் உள்ள இறைவனைப் பக்திநெறி வழுவாமல் தரிசித்தார். ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள ஆண்டவனைப் புகழ்ந்து ஒவ்வொரு வெண்பாவைத் தாமே இயற்றிப் பாடி, பரவசப்பட்டார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

தொண்டுஉரிமை புரக்கின்றார் சூழ்வேலை உலகின்கண்
அண்டர்பிரான் அமர்ந்தருளும் ஆலயங்க ள்ஆனஎலாம்
கண்டுஇறைஞ்சித் திருத்தொண்டின் கடன்ஏற்ற பணிசெய்தே
வண்தமிழின் மொழிவெண்பா ஓர்ஒன்றா வழுத்துவார். (4)

பக்திப் பெருக்கால் ஆண்டவனை வணங்கி மனம் குளிர்வார். பெரும்பற்றப் புலியூரில் சிற்றம்பலத்தில் ஆடல்புரியும் சிவனை வணங்கினார். அழகிய வெண்பா ஒன்றை அக்கடவுளின் மீது விருப்பத்தோடு பாடினார் என்று கூறுகிறது இப்பாடல்.

பெருத்துஎழுகா தலில்வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்துஆடல் புரிந்தருளும் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து நேர்ந்துஇறைஞ்சி நெடும் தகையார்
விருப்பினுடன் செந்தமிழின் வெண்பாமென் மலர்புனைந்தார் (5)

பெரும்பற்றப் புலியூரில் சில நாட்கள் தங்கி அப்பெருமானுக் குச் சில சேவைகளைச் செய்தார். மீண்டும் பெருமான் வீற்றிருக் கும் கோயில்களுக்கெல்லாம் ஊர்தோறும் சென்று வணங்கினார். ஒவ்வொரு பதியிலும் ஒவ்வொரு வெண்பாவைப் பாடித் துதித்த படியே பல இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

அவ்வகையால் அருள்பெற்றுஅங்கு அமர்ந்துசில நாள் வைகி
இவ்உலகில் தம்பெருமான் கோயில்கள்எல் லாம்எய்திச்
செவ்வியஅன் பொடுபணிந்து திருப்பணிஏற் றனசெய்தே
எவ்உலகும் புகழ்ந்துஏத்தும் இன்தமிழ்வெண் பாமொழிந்தார். (6)

Koviloor Digital Library

காஞ்சி நகரில் அரசாட்சி புரிந்த ஐயடிகள் காடவர்கோன் சிவனடியார்கட்குத் தொண்டு செய்வதையே தம் கடமையாக எண்ணிச் செயல்பட்டார். சிவத்தொண்டு புரிந்ததனால் சிவனடி யார்களின் நல்வாழ்த்துகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றார். பல தொண்டு புரிந்த பின்னால் சிவனடியார் உறைகின்ற திருநாடு அலங்கரித்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

இந்நெறியால் அரன்அடியார் இன்பம்உற இசைந்தபணி
பல்நெடுநாள் ஆற்றியபின் பரமர்திரு வடிநிழல்கீழ்
மன்னுசிவ லோகத்து வழிஅன்பர் மருங்குஅணைந்தார்
கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவரை யடிகளார். (ஐ.நா.பு. – 7)

பாம்பு ஆபரணம் அணிந்த சிவனைப் பல பாக்களால் பாடிய ஐயடிகள் காடவர்கோன் நாயனாரின் அடி போற்றி, அடுத்ததாக, தம் கையில் மழுவை அணிந்த எல்லாம்வல்ல சிவபெருமானின் கழல்களைப் பணியும் சித்தம் கொண்ட செய்தவத்தால் சிறந்து விளங்கும் கணம்புல்ல நாயனாரின் வரலாற்றைக் கூறத் தொடங்கு கிறார் தெய்வச் சேக்கிழார்,

பைஅரவம் அணிஆரம் அணிந்தார்க்குப் பாஅணிந்த
ஐயடிகள் காடவனார் அடியிணைத்தா மரைவணங்கிக்
கைஅணிமான் மழுஉடையார் கழல்பணிசிந் தனைஉடைய
செய்தவத்துக் கணம் புல்லர் திருத்தொண்டு விரித்துஉரைப்பாம் (8)

சுந்தரமூர்த்தி நாயனார் துதி

உளத்தில்ஒரு துளக்கம்இலோம் உலகுஉய்ய இருண்ட திருக்
களத்துமுது குன்றர்தரு கனகம்ஆற் றினில்இட்டு
வளத்தின்மலிந்து ஏழ் உலகும் வணங்குபெருந் திருஆரூர்க்
குளத்தில்எடுத் தார்வினையின் குழிவாய்நின்று எனைஎடுத்தார்.

விளக்கம் : நம்பியாண்டார் நம்பிகள் பக்திக்கடல் ஐயடிகள் என்று ஐயடிகள் காடவர்கோன் நாயனாரைப் போற்றுவார். ஐ என்றால் தெய்வம் என்று பொருள். காடவர்கோன் என்பது மரபுப் பெயர் ஆகும். காடவர் என்றால் பல்லவர் என்பது பொருள் ஆகும். இவரை மூன்றாம் சிம்மவர்மன் என்று சிலர் கருதுவர்.

இலக்கியம் : இவர் எழுதிய வெண்பாக்கள் பல. அவற்றுள் இன்று கிடைத்திருப்பவை 24. இவற்றின் தொகுப்பே சே(ஷே)த்திரத் திருவெண்பா என்பதாகும். இது 11ஆம் திருமுறையில் உள்ளது. இவர் இயற்றியுள்ள பாடல்கள் எல்லாம் உடல் நிலையாமையைக்

Koviloor Digital Library

கூறுவன. எடுத்த தேகம் வலிமையாக இருக்கும்போதே இறைவனை அடைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று - நாடுகின்ற
நல்ல சிற்றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச் சிற்றம்பலமே சேர். (சே.தி. – 1)

குந்தி நடந்து குனிந்தொருகை கோல்ஊன்றி
நொந்துஇருமி ஏங்கி நுரைந்தேறி - வந்துஉந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. (சே.தி. – 3)

காலைக் கலையிழையால் கட்டித்தாங் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மைஎழுதி - மேலோர்
பருக்கோடி மூடிப்பலர் அழாமுன்னம்
திருக்கோடி காவுடைநீ சென்று. (சே.தி. – 6)

அருள்மிகு ஏலவார் குழலி உடனுறை
ஏகாம்பரநாதர் திருக்கோயில்
காஞ்சிபுரம் – 631 502
காஞ்சிபுரம் மாவட்டம்.

Koviloor Digital Library

72. கணம்புல்லர்

(9 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	**இருக்குவேளூர் (சோழநாடு)**
குலம்	:	**தெரியவில்லை**
குருபூசை மாதம்	:	**கார்த்திகை**
நட்சத்திரம்	:	**கிருத்திகை**
காலம்	:	**அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 – 600)**

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த கணம்புல்ல நம்பிக்கும்...
அடியேன் (திரு. தொகை. 8:1)

செல்வச் செழிப்பு மிக்க ஊர். மாடமாளிகைகள் நிறைந்த ஊர். சோலைகள் மிகுந்த ஊர். பலாக்கனிகளுக்குப் பெயர்போன ஊர். வடவெள்ளாற்றின் தெற்குக் கரையிலே அமைந்த ஊர். அந்த ஊர்தான் இருக்கு வேளூர். இக்காலத்தில் இது பேலூர் என்று வழங்குகின்றது இதைப் பற்றிக் கூறும் பாடல் இது

திருக்கிளர்ச்சீர் மாடங்கள் திருந்துபெருங் குடிநெருங்கிப்
பெருக்குவட வெள்ளாற்றுத் தென்கரைப்பால் பிறங்குபொழில்
வருக்கைநெடுஞ் சுனைபொழிதேன் மடுநிறைத்து வயல்விளைக்கும்
இருக்குவேளூர் என்பது இவ்உலகில் விளங்குபதி (1)

அளவில்லாத பெருஞ்செல்வம் மிக்கவர். உயர் பண்புகள் நிறைந்தவர். குணக்குன்றாய்த் திகழ்ந்தவர். இவ்வுலகில் உண்மைப் பொருள் இறைவனின் திருவடிகளேயாகும் என உணர்ந்தவர். பேரன்பு மிக்கவர். அவர் பெயர் கணம்புல்ல நாயனார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

அப்பதியில் குடிமுதல்வர்க்கு அதிபராய் அளவுஇறந்த
எப்பொருளும் முடிவுஅறியா எய்துபெரும் செல்வத்தார்
ஒப்புஇல் பெரும் குணத்தினால் உலகின்மேம்பட நிகழ்ந்தார்
மெய்ப் பொருள்ஆவன ஈசர்கழல் என்னும் விருப்புஉடையார் (2)

செல்வம் பெற்றதன் பயன் தெய்வத் தொண்டே என எண்ணினார். சிவன் கோயில் சென்று தினந்தோறும் விளக்கு ஏற்றி வழிபடுவதையே தன் தொழிலாகக் கொண்டார். வறுமை வந்தடைந்ததால் இங்கு (இருக்குவேளூர்) இருத்தல் தகாது என்று எண்ணினார். தில்லையம்பதி சென்று அடைந்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

Koviloor Digital Library

தாவாத பெருஞ்செல்வம் தலைநின்ற பயன்இது என்று
ஓவாத ஒளிவிளக்குச் சிவன்கோயில் உள்ளிித்து
நாஆரப் பரவுவார் நல்குரவு வந்துஎய்தத்
தேவாதி தேவர்பிரான் திருத்தில்லை சென்றுஅடைந்தார். (3)

தில்லையம்பதியில் குடியமர்ந்த நாயனார் சிவனின் மீது அளவற்ற அன்புடையவராய்த் திகழ்ந்தார். 'திருப்புலீச்சரம்' என்னும் கோயிலில் விளக்கு எரிக்கும் பணி செய்தார். தம் வீட்டில் உள்ள பொருட்களை விற்று நெய்வாங்கி விளக்கெரித்து வந்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

தில்லைநகர் மணிமன்றில் ஆடுகின்ற சேவடிகள்
அல்கியஅன் புடன்இறைஞ்சி அமர்கின்றார் புரம்எரித்த
வில்லியார் திருப்புலீச் சரத்தின்கண் விளக்குஎரிக்க
இல்லிடைஉள் ளனமாறி எரித்துவரும் அந்நாளில் (4)

சிவபெருமானின் கோயிலிலே விளக்கெரிக்கும் பணிக்கு நெய் தேவை. நெய்வாங்க, தன்னிடம் பொருள் இல்லை. மற்ற வரிடம் யாசித்துக் கேட்கவும் மனம் இடம் தரவில்லை. ஆதலால் தன் உடலின் முயற்சியால் கணம்புல்லை அரிந்து கட்டுகட்டி புல்கட்டு, புல்கட்டு எனத் தெருதோறும் கூவி விற்று அதில் வரும் பணத்தால் நெய்வாங்கி விளக்கெரித்தார் என இப்பாடல் கூறுகிறது.

ஆயசெயல் மாண்டதன்பின் அயலவர்பால் இரப்புஅஞ்சிக்
காய முயற்சியில் அரிந்த கணம்புல்லுக் கொடுவந்து
மேயவிலைக்குக் கொடுத்து விலைப்பொருளால் நெய்மாறித்
தூயதிரு விளக்குஎரித்தார் துளக்குஅறுமெய்த் தொண்டனார். (5)

இவ்வாறு கணப்புல் அரிந்து அதைவிற்றுப் பணமாக்கி, பின்னர் நெய்வாங்கி, விளக்கெரித்து வந்தார். ஒருநாள் கணப்புல் எங்கும் விலையாகாமல் போனதனால், அரிந்த அந்தப் புல்லையே தீக்கொளுத்தி விளக்கு எரிப்பவர் ஆனார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

இவ்வகையால் திருந்துவிளக்கு எரித்துவர அங்குஒருநாள்
மெய்வருந்தி அரிந்துஎடுத்துக் கொடுவந்து விற்கும்புல்
எவ்இடத்தும் விலைபோகாது ஒழியவும்இப் பணிஒழியார்
அவ்அரிபுல் லினைமாட்டி அணிவிளக்காய்இட எரிப்பார். (க.பு.நா – 1)

இறைவனின் முன்பு திருவிளக்கு எரிக்கும் முறைப்படி உள்ள கால அளவுக்குள் அந்தப் புல் எரிந்து தீர்ந்துவிட்டது. எனவே இன்னும் சில நிமிடங்கள் எரிய, புல் இல்லையே என எண்ணிய நாயனார் தன் தலையிலேயே தீயைமூட்டி அதனையே விளக்காக எரித்தார். அதன் மூலம் தன் இருவினைப்பயனை எரித்தார் என இப்பாடல் கூறுகிறது.

Koviloor Digital Library

முன்புதிரு விளக்குளிக்கும் முறையாமம் குறையாமல்
மென்புல்லும் விளக்குளிக்கப் போதாமை மெய்யான
அன்புபுரி வார்அடுத்த விளக்குத்தம் திருமுடியை
என்புஉருக மடுத்துளித்தார் இருவினையின் தொடக்கு எரித்தார். (7)

தன் தலையையே திருவிளக்காய் எரித்த ஒப்பற்ற தொண்டர். இந்தத் தொண்டரான கணம் புல்ல நாயனாரின் தொண்டையும், அன்பையும் எண்ணிய இறைவன் அந்த நாயனார் மீது கருணை வைத்தார். சிவலோகத்தில் இடம் அளித்தார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

தங்கள் பிரான் திருஉள்ளம் செய்துதலைத் திருவிளக்குப்
பொங்கியஅன் புடன்எரித்த பொருஇல்திருத் தொண்டருக்கு
மங்கலம்ஆம் பெருங்கருணை வைத்துஅருளச் சிவலோகத்து
எங்கள்பிரான் கணம்புல்லர் இனிதுஇறைஞ்சி அமர்ந்துஇருந்தார். (8)

விளக்கு ஏற்றுதல் என்பது இருவகைப்படும். ஒன்று புறவிளக்கு ஏற்றுதல். மற்றொன்று அக விளக்கு ஏற்றுதல். கணம்புல்ல நாயனாரின் வரலாற்றின் மூலம் புற விளக்கு ஏற்றுதலின் முக்கியத்து வத்தை அறிந்து கொண்டோம்.

அகவிளக்கு ஏற்றுதலின் முக்கியத்துவத்தைப் பின்வரும் பாடல்கள் மூலம் அறியலாம்.

இல்லக விளக்கது இருள்கெடுப்பது
பல்லக விளக்கது பலரும் காண்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. (அப்பர் தேவாரம்)

விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" (அப்பர்)

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக்கு உள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடையான் கழல் மேவலு மாமே. (திரு. 2816)

திருப்புலீச்சுரம், சிதம்பரம் பெரியகடை
வீதியின் மேல்பால் உள்ள சிவாலயம்
சிதம்பரம் அஞ்சல் – 608 001,
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

Koviloor Digital Library

73. காரியார்

(5 பாடல்கள்)

பிறந்த ஊர் : திருக்கடவூர் (சோழ நாடு)

குலம் : தெரியவில்லை

குருபூசை மாதம் : மாசி

நட்சத்திரம் : பூராடம்

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயனார் (கி.பி. 660 – 840)

காரிக்கும் அடியேன் (திரு. தொகை. 8:1)

வேதியர்கள் மிகுந்த திருக்கடவூரில் (திருக்கடையூர்) வந்து தோன்றியவர். வளமை மிக்க தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை மிக்கவர். **தமிழ்க்கோவை** என்னும் நூலை இயற்றியவர். சேர, சோழ, பாண்டியராம் மூவரிடத்தும் நண்பராகி, தமிழ்த்தொண்டில் ஈடுபட்டிருந்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

மறையாளர் திருக்கடவூர் வந்துஉதித்து வண்தமிழின்
துறையான பயன்தெரிந்து சொல்விளங்கிப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை தம்பெயரால் குலவும்வகை
முறையாலே தொகுத்துஅமைத்து மூவேந்தர் பால்பயில்வார். (1)

மூவேந்தர்களிடத்தும் சென்று அவர்கள் மனம் மகிழப் பேசுவார். சொல்நயமும், பொருள்நயமும் இருக்கும்படி பேசுவார்.

புலமைத் திறத்தால் மூவேந்தர்களிடம் பணக்குவியல் பெறுவார். பெற்ற செல்வத்தைக் கொண்டு சிவபெருமானுக்குக் கோயில்கள் அமைத்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (குறள் – 647)

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (குறள் – 648)

எனும் குறட்பாக்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன.

Koviloor Digital Library

அங்குஅவர்தாம் மகிழும்வகை அடுத்தஉரை நயம்ஆக்கிக்
கொங்குஅலர்தார் மன்னவர்பால் பெற்றநிதிக் குவைகொண்டு
வெங்கண் அராவொடு கிடந்து விளங்கும் இளம்பிறைச் சென்னிச்
சங்கரனார் இனிது அமரும் தானங்கள் பலசமைத்தார். (கா. நா. – 2)

எல்லோருடைய மனமும் மகிழும்படி பேசுவார். தேவர்க்கு எல்லாம் தேவனாக விளங்கக் கூடிய சிவ பெருமானையே எப்போதும் எண்ணுவார். சிவன் அடியார்க்கு எல்லாம் பொருள் உதவி செய்வார். காளை வாகனத்தை உடைய சிவனையும், அந்தச் சிவன் வீற்றிருக்கும் கைலையையும் எப்போதும் மறக்க மாட்டார் என இப்பாடல் கூறுகிறது.

யாவர்க்கும் மனம் உவக்கும் இன்பமொழிப் பயன் இயம்பித் தேவர்க்கு
முதல்தேவர் சீர்அடியார் எல்லார்க்கும்
மேவுஉற்ற இருநிதியம் மிகஅளித்து விடையவர்தம்
காஉற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய் (கா. நா. – 3)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (குறள் – 100)

எனும் திருக்குறளை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடல் சூழ்ந்த உலகில் எங்கும் தம் புகழை நிலைநிறுத்தினார். ஆராய்ந்த கல்வியால் தெளிந்த மனம் மிக்கவராய் விளங்கினார். உலக உயிர்களிடம் அன்பு மிக்கவராய் விளங்கினார். மனத்தினால் எப்போதும் சிவனை வழிபட்டார். சிவபதம் அடைந்தார். சிவனருள் பெற்றார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

ஏய்ந்தகடல் சூழ்உலகில் எங்கும்தம் இசை நிறுத்தி
ஆய்ந்த உணர்வு இடையறா அன்பினராய் அணிகங்கை
தோய்ந்தநெடுஞ் சடையார்தம் அருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்தமனம் போல்உடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார். (கா. நா. – 4)

காரி நாயனாரின் கழல் வணங்கி அடுத்து நின்றசீர் நெடுமாற நாயனாரின் வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

வேரிஆர் மலர்க்கொன்றை வேணியார் அடிபேணும்
காரியார் கழல்வணங்கி அவர்அளித்த கருணையினால்
வாரிஆர் மதயானை வழுதியர்தம் மதிமரபில்
சீரியார் நெடுமாறர் திருத்தொண்டு செப்புவாம். (கா. நா. – 5)

தீதின்றி வந்த பொருள் சிவாலயத்திற்கும் சிவனடியார்க்குமே வழங்குவது பதி புண்ணியம். ஆலயம் அமைத்தல் நிலையான பணியாகும். இவர் தாம் கற்ற தமிழறிவால்

Koviloor Digital Library

கோவை பாடி அதனால் வரும் பெரும்பொருள் அத்தனையும் கோயிற்பணிக்கும் அடியார்க்குமே ஆகுமாறு அறம்புரிந்தார்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (குறள் : 666)

என்றபடி இடையறாத கயிலைத் தியானத்தால் இவர் உடம் புடன் கயிலை யடைந்தார். "வாய்ந்தமனம் போலுடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார்" என வருவதனால் அறிக.

இவ்வுடம்பு ஐம்பூதங்களின் பரிணாமம். பிராகிருத உடம்பு. திருக்கயிலை அப்பிராகிருதம். ஐம்பூதச் சேர்க்கையினால் ஆகாதது. அப்பிராகிருத கயிலையும் பிராகிருத உடம்புடன் சேரமுடியாது. ஆனால், இவர் உடம்புடன் சென்றார் என வருகின்றது. அதன் கருத்து, இவ்வுடம்பொடு சென்றவுடன் இவ்வுடம்பு கற்பூரம் கனலில் மறைவதுபோல் அங்கு மறைந்து விடும் என உணர்க.

இவ்வாறு, சுவர்க்கத்திற்கு உடம்புடன் தருமர் சென்றார் என்றும் சென்றபின் உடம்பு மறைந்து ஒளியுடம்பு பெற்றார் என்றும் மகாபாரதங் கூறுகின்றது என்கிறார் வாரியார் சுவாமிகள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமாள் நாயனாரும் அவ்வையாரும் உடம்புடன் திருக்கயிலை சென்றனர். அப்பர் சென்று திரும்பியவர்.

தன்னுடைய உள்ளத்தில் எப்போதும் இறை சிந்தனை யோடு திகழ்ந்த மாண்பாளர். தமிழ் ஆய்ந்த தகைமையர். கவிபாடும் திறம் கைவரப் பெற்றவர். கோயில்கள் கட்டியவர். எல்லா மக்களிடமும் இன்சொற்கள் பேசுபவர். சிவனடியார்களுக்கு இருவகை நிதிகளையும் வழங்கும் வள்ளண்மை வாய்க்கப்பெற்றவர். சிறந்த பக்தராகவும் சிறந்த தொண்டராகவும் சிறந்த அறிஞராகவும் சிறந்த கவிஞராகவும் விளங்கியவர் காரி நாயனார். பெரிய புராணத்தில் இடம்பெறும் 63 நாயன்மார்களில் சிலர் சிவனடியார்களுக்கு மட்டுமே தொண்டு செய்து முக்தி அடைந்தனர். சிலர் எல்லாம்வல்ல சிவபெருமானுக்கு மட்டுமே சேவை செய்து முக்தி பெற்றனர். சிலர்தாம் சிவனடியார் களுக்கும், சிவபெருமானுக்கும் ஒருங்கே தொண்டு செய்து முக்தி பெற்றனர். அவர்களுள் காரி நாயனாரும் ஒருவர். அவர் சுந்தரரைப் போன்று உடலோடு கைலாயம் அடைந்து முக்தியடைந்தார்.

அருள்மிகு அபிராமி உடனுறை அமிர்த கடேசுவரர் திருக்கோயில்,
திருக்கடவூர் அஞ்சல் 609311 மயிலாடுதுறை வட்டம்,
நாகை மாவட்டம்

Koviloor Digital Library

74. நின்றசீர் நெடுமாறர்

(10 பாடல்கள்)

பிறந்த ஊர் : மதுரை (பாண்டிய நாடு)

குலம் : அரசர்

குருபூசை மாதம் : ஐப்பசி

நட்சத்திரம் : பரணி

காலம் : அப்பர், சம்பந்தர் காலத்து நாயன்மார் (கி.பி. 600 – 660)

நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை-8:2)

தடுமாற்றத்தை உண்டாக்குகின்ற குற்றம் பெற்ற நெறியையே தவம் என்று எண்ணித் தமது தேகத்தை வருத்தும் செயல்கள் செய்து தீநெறியில் இருக்கின்ற சமணர்களின் சதியில் அகப்பட்டு திருஞான சம்பந்தரால் தீவினை நீக்கிக் காப்பாற்றப்பட்ட நின்றசீர் நெடுமாற நாயனார் பெருமை ஏழுலகும் அறிந்ததாகும் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

தடுமாறும் நெறிஅதனைத் தவம்என்று தம்உடலை
அடுமாறு செய்துஒழுகும் அமண்வலையில் அகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர் வினைமாறும் கழல்அடைந்த
நெடுமாற னார்பெருமை உலகுஏழும் நிகழ்ந்ததால் (நி.நெ.நா. – 1)

அக்காலத்தில் ஆளுடைய பிள்ளையாரின் திருவருளால் பாண்டியர் நாட்டில் சைவத்திறம் பெருகியது. செங்கோல் ஆட்சி பெருகியது. அறநெறி தழைத்தது. சிவபெருமானின் ஐந்தெழுத்து மந்திரம் எங்கும் ஓதப்பட்டது. சைவநெறிக் காவலராய்ப் பாண்டியர் விளங்கினர் என இப்பாடல் கூறுகிறது.

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே!
தென்னாடு சிவம்பெருகச் செங்கோல்உய்த்து அறம்அளித்துச்
சொல்நாம நெறிபோற்றிச் சுரர்நகர்க்கோன் தனைக்கொண்ட
பொன்ஆரம் அணிமார்பின் புரவலனார் பொலிகின்றார். (நி.நெ.நா. – 2)

பாண்டிய மன்னன் அரசுநெறி பிறழாது ஆட்சி செய்தபோது வடபுலத்துப் பகை மன்னன் வலிய போரிடவந்தான். திருநெல்வேலி எனும் இடத்தில் போர்நடந்தது. யானை, குதிரை, போன்ற படைகள் கொண்டு வடபுலத்து மன்னனை வென்ற பாண்டியனின் வீரதீரச் சிறப்புப் பற்றி இப்பாடல் கூறுகிறது.

ஆயஅரசு அளிப்பார்பால் அமர்வேண்டி வந்துஏற்ற
சேயபுலத் தெவ்வர்எதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடல்முடுகும் பரிமாவின் பெருவெள்ளம்
காயும்மதக் களிற்றின்நிரை பரப்பிஅமர் கடக்கின்றார். (3)

Koviloor Digital Library

பாண்டியன் போரிட்ட போர்க்களத்தில் இரு பக்கத்திலும் படைவீரர்கள் வீழ்ந்தனர். இருமருங்கிலும் யானைப்படை வீழ்ந்தது. இருதரப்பிலும் குதிரைப்படைகள் மாய்ந்தன. இரண்டு பக்கங் களிலும் வீழ்ந்த படை வீரர்களின் உடலிலிருந்து வெளி வரும் குருதி கடல் போலானது. இக்காட்சி முன்பொரு காலத்தில் கடல் வற்றிப் போகுமாறு வேல் எறிந்த பாண்டியர் திரும்பவும் வேல் எறிந்து போரிடத் தூண்டுவதற்காகப் பெருகியது போல் இருந்தது என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

எடுத்து உடன்ற முனைஞாட்பின் இருபடையில் பொருபடைஞர்
படுத்தநெடுங் கரித்துணியும் பாய்மாவின் அறுகுறையும்
அடுத்துஅமர்செய் வயவர்கருந் தலைமலையும் அலைசெந்நீர்
மடுத்தகடல் மீளவும்தாம் வடிவேல்வாங் கிடப் பெருக. (நி.நெ.நா.–4)

குதிரைகளின் கனைக்கும் ஒலி எங்கும் கேட்டது. வீரர்கள் வில்லேந்திப் போரிடுவதால் ஏற்படும் ஆயுத ஒலி எங்கும் பரவியது. மலைபோல் தோற்றம் கொண்ட யானைகளின் பிளிறல் சத்தம் எங்கும் கேட்டது. இவ்வொலிகள் எல்லாம் கலந்து ஊழிக்காலத்தில் மேகம் எழுப்பும் ஒலி போன்றிருந்தது என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

வயப்பரியின் களிப்புஒலியும் மறவர்படைக் கலஒலியும்
கயப்பொருப்பின் முழக்குஒலியும் கலந்துஎழு பல்இய ஒலியும்
வியக்கும்உகக் கடைநாளில் மேகமுழக்கு எனமீளச்
சயத்தொடர் வல்லியம்இன்று தாம்விடுக்கும் படிதயங்க. (நி.நெ.நா.–5)

பாண்டியன் நிகழ்த்திய போரில் வெட்டுண்ட உடல்கள் சிதறிக் கிடந்தன. குருதிக் குளத்தில் குளித்து நிணங்களை உண்ட பூதங்களுக்கு மட்டுமல்லாமல் பேய்க்கும் சேர்த்துப் படைத்தது போல் அவையும் உண்டனஎன்பதனை இப்பாடல் விளக்குகிறது.

தீஉமிழும் படைவழங்கும் செருக்களத்தும் உருக்கும்உடல்
தோயும்நெடும் குருதிமடுக் குளித்துநிணம் துய்த்துஆடிப்
போயபரு வம்பணிகொள் பூதங்க ளேஅன்றிப்
பேயும்அரும் பணிசெய்ய உணவுஅளித்தது எனப்பிறங்க. (6)

பாண்டியன் மிகச் சிறப்பாகப் போரிட்டான். எதிரிப் படைகள் கலங்கின. வடநாட்டுப் பகைஅரசன், தன் படைகளுடன் சிதைந்து அழிந்து புறமுதுகு இட்டு ஓடினான். வெற்றிபெற்ற பாண்டியன் வாகை மாலையை அணிந்தான். வேம்பு மாலையும் அணிந்து முழுவீரம் மிக்கவனாய் விளங்கினான் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

இனையகெடுஞ் சமர்விளைய இகல்உழந்த பறந்தலையில்
பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக்குஉடைந்து

Koviloor Digital Library

முனைஅழிந்த வடபுலத்து முதல்மன்னர் படைசரியப்
புனையும்நறுந் தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து (7)

சோழ மன்னரின் மகளான மங்கையர்க்கரசி எனும் பெயர் கொண்ட மங்கையை மணந்தவரும் மங்கையர்க்கரசியோடு இல்லற வாழ்வை இனிதே நடத்தியவருமான நின்றசீர் நெடுமாறனார் பாம்பையும், பிறையையும் சூடிய பெருமானுக்குத் தொண்டு செய்தார். சிவனருள் பெருகுமாறு ஆட்சி செய்தார் என இப்பாடல் கூறுகிறது.

வளவர்பிரான் திருமகளார் மங்கையருக்கரசியார்
களபம்அணி முலைதிளைக்கும் தடமார்பின் கவுரியனார்
இளவள வெண்பிறை அணிந்தார்க்கு ஏற்ற திருத்தொண்டுஎல்லாம்
அளவுஇல்புகழ் பெறவிளக்கி அருள்பெருக அரசுஅளித்தார். (8)

இவர் அலைகளை உடைய கடல் சூழ்ந்த உலகை ஆண்டு வந்தார். திருநீற்று நெறியான சிவநெறி தழைக்க ஆண்டு வந்தார். புகழ்விளங்க ஆட்சிசெய்தார் நீண்ட நெடுங்காலம் ஆட்சி செய்த பின்னால் சிவபெருமான் திருவருளால் சிவலோகம் சென்று இனிது இருந்தார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

திரைசெய்கடல் உலகின்கண் திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய் பெரும் புகழ்விளக்கி ஓங்குநெடு மாறனார்
அரசுஉரிமை நெடுங்காலம் அளித்துஇறைவர் அருளாலே
பரசுபெருஞ் சிவலோகத்து இன்புற்றுப் பணிந்திருந்தார். (9)

பொன்மதில் சூழ்ந்த சீகாழித் தலைவரான திருஞான சம்பந்தரின் திருவருள் பெற்றவர். இறைபக்தியால் தூயவர் ஆனவர். தென் மதுரையை ஆண்டவர். வாழ்வாங்கு வாழ்ந்து சிவலோகம் சேர்ந்து சிவபதம் அடைந்தவர் நின்றசீர் நெடுமாறனார். அவரது திருவடிகளை வணங்கி வாயிலார் நாயனாரின் திருத்தொண்டினைப் பற்றி விளக்குகிறேன் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

பொன்மதில்சூழ் புகலிகாவலர் அடிக்கீழ்ப் புனிதர்ஆம்
தென்மதுரை மாறனார் செங்கமலக் கழல்வணங்கிப்
பன்மணிகள் திரைஓதம் பரப்புநெடுங் கடல்படப்பைத்
தொல்மயிலை வாயிலார் திருத்தொண்டின் நிலைதொழுவாம். (10)

அருள்மிகு மீனாட்சி உடனுறை சொக்கலிங்கநாதர்
திரு ஆலவாய் எனும் மதுரை.
(சொக்கநாதர் - சோமசுந்தரப்பெருமான் திருக்கோயில்)
திருஆலவாய், மதுரை – அ.கு. 625 007.
(மதுரை வட்டம் & மாவட்டம்)

Koviloor Digital Library

75. வாயிலார்

(10 பாடல்கள்)

பிறந்த ஊர் : திருமயிலாப்பூர் (தொண்டை நாடு)

குலம் : வேளாளர்

குருபூசை மாதம் : மார்கழி

நட்சத்திரம் : ரேவதி

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட அடியார்கள் (கி.பி. 660 – 840)

துறை கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதி
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை. 8-3)

தொண்டைநாடு வளமிக்க நாடு, புகழ் மிகுந்த நாடு, பல நூல்களால் போற்றிப் பாராட்டப் பட்ட நாடு, அப்படிப்பட்ட பெருமை மிக்க தொண்டை நாட்டிலே உள்ள ஒரு சிறந்த ஊர் மயிலாப்பூர். வளமுடைய அந்த ஊரில் வாய்மைமிக்க மனிதர்கள் பலர் வாழ்ந்து சிறந்தனர். அந்த மயிலாப்பூர் புகழ் மங்காதபுரி என்று இப்பாடல் கூறுகிறது.

சொல்வி ளங்குசீர்த் தொண்டைநல் நாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி நீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயி லாபுரி (1)

கடல் தன்னிடம் உள்ள முத்து, மணி போன்ற நிதிகளைக் குவித்துவைக்கும் ஊர் இதுவாகும் என்று சொல்லக் கூடிய அளவிற்கு மக்கள் கடல் ஆபரணங்களை அணிந்தவர்களாக விளங்கினார்கள். ஆடும் கொடிகள் நிறைந்த ஊர் மயிலாப்பூர் என்று இப்பாடல் கூறுகிறது.

நீடு வேலைதன் பால்நிதி வைத்திடத்
தேடும் அப்பெரும் சேமவைப்பு ஆம்என
ஆடு பூங்கொடி மாளிகை அப்பதி
மாடு தள்ளும் மரக்கலச் செப்பினால் (2)

Koviloor Digital Library

மயிலாப்பூர் கடற்கரையில் அடிக்கடி வேற்று நாட்டு மரக்கலங்களும் வந்து போகும். மரக்கலங்களிலிருந்து யானைக் கன்றுகள் இறக்குமதியாகும். அந்த யானைக் கன்றுகளும் எருமைக் கன்றுகளும் உலவும் மேகக் கூட்டங்களும் நிற ஒப்புமையினால் எருமைக்கன்று எது, மேகம் எது, யானைக் கன்று எது என்று பிரித்து அறிய முடியாதவாறு காணப்படுகின்றன.

கலம்சொரிந்த கரிக்கருங் கன்றுமுத்து
அலம்பு முந்நீர் படிந்துஅணை மேகமும்
நலம்கொள் மேதிநல் நாகும் தெரிக்கஒணா
சிலம்பு தெண்திரைக் கானலின் சேண்எலாம். (3)

ஒளிமிக்க மாளிகைகள் நிறைந்த சாலையின் இரு மருங்கிலும் ஆடும் கொடிகளின் இடையில் நுழைந்து போகும் தூய நிலவின் செயல், திருமயிலாப்பூரில் உள்ள மங்கையரின் பவளச்செவ்வாய் கொண்ட முகத்தைக் கண்டு அஞ்சியதால், மறைவிடமான கொடிகள் பெருகியுள்ள இடத்தை நிலவு நாடியதோ என எண்ணத் தூண்டுகிறது என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

தவள மாளிகைச் சாலை மருங்கு இறைத்
துவள்ப தாகை நுழைந்தனை தூமதி
பவள வாய்மட வார்முகம் பார்த்துஅஞ்சி
உவளகம் சேர்ந்து ஒதுங்குவது ஒக்குமால். (4)

தெருக்கள் முழுதும் திருவிழாக் கோலமாய்க் காட்சியளிக் கும். காளையர்களின் தூதுவர்கள் போல் உள்ள வண்டுகள் பெண்களின் கூந்தலில் உள்ள மலர்களை மொய்க்கும் என இப்பாடல் கூறுகிறது. தெருவின் இருமருங்கிலும் இருந்த பொலிவூட்டப்பட்ட மாளிகைகளில் எப்போதும் அழியாத அளவிற்கு அணிநிதிகள் இருந்தன.

வீதி எங்கும் விழாஅணிக் காளையர்
தூதுஇ யங்கும் சுரும்புஅணி தோகையர்
ஓதி எங்கும் ஒழியா அணிநிதி
பூதி எங்கும் புனைமணி மாடங்கள். (5)

நிலைபெற்ற சிறப்பை உடைய மயிலாப்பூரில் பழைமையான குலம் வேளாளர் குலமாகும். அந்த வேளாளர் குலத்தில் பலர் தோன்றி மறைந்தனர். அந்த வேளாளர் குலத்திற்குச் சிறப்பு செய்யும் வண்ணமாக வாயிலார் என்னும் வாய்மையாளர் வந்து தோன்றினார். வாயிலார் வந்து தோன்ற புண்ணியம் செய்த ஊர் திருமயிலை என்று இப்பாடல் விளக்குகிறது.

Koviloor Digital Library

மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல
நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்
தன்மை வாயிலார் என்னும் தபோதனர். (6)

வாயிலார் எனும் இந்த நாயனார் பழைமையான தூய்மையான பெருங்குடியில் தோன்றியவர்களில் முதன்முதலில் சிவபெருமானின் திருத்தொண்டில் நேயமுடன் ஈடுபட்டு வாழ்ந்து வந்தார் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

வாயிலார் என நீடிய மாக்குடித்
தூய மாமரபின் முதல் தோன்றியே
நாயனார் திருத்தொண்டின் நயப்புஉறு
மேய காதல் விருப்பின் விளங்குவார். (7)

மனமெனும் கோயிலுக்குள் மகேசனை அமர்த்தியவர். எப்போதும் இறைவனை மறவாமல் நினைத்தவர். எப்போதும் ஞானம் எனும் ஒளி விளக்கை ஏற்றி வைத்தவர். உள்ளக் கோயிலில் உள்ள இறைவனை ஆனந்தம் எனும் நீரினால் திருமஞ்சனம் ஆட்டியவர். அறவாணர்கட்கு அன்பு எனும் அமுதை அமைத்து அர்ச்சனை செய்வார் என்று இப்பாடல் கூறுகிறது.

மறவாமை யால்அமைத்த மனக்கோயில்உள் இருத்தி
உறஆதி தனைஉணரும் ஒளிவிளக்குச் சுடர்ஏற்றி
இறவாத ஆனந்தம் எனும்திரு மஞ்சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்புஎன்னும் அமுதுஅமைத்து அர்ச்சனை செய்வார். (8)

உள்ளத்திலே பூசை செய்தவர். சிவபெருமானை நாள்தோறும் வழிபடுபவர். சிவனடியார்களிடம் அன்பு காட்டுபவர். சிவனையே எண்ணி வழிபட்டு மெய்த்தொண்டர் ஆனவர். சிவபெருமான் வீற்றிருக்கும் சிவலோகம் சென்று சிவனிடம் எப்போதும் நீங்காது அமர்ந்திருந்தவர் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

அகம்மலர்ந்த அர்ச்சனையில் அண்ணலார் தமைநாளும்
நிகழவரும் அன்பினால் நிறைவழிபாடு ஒழியாமே
திகழநெடு நாள்செய்து சிவபெருமான் அடிநிழல்கீழ்ப்
புகல்அமைத்துத் தொழுதுஇருந்தார் புண்ணியமெய்த் தொண்டனார். (9)

கங்கையைத் தன் தலையில் தாங்கிய சிவனை வழிபட்டவர். நீண்ட சடைமுடியுடைய சிவன்மீது நீங்காத பற்று உடையவர். தன் மனமாகிய கோயிலில் சிவனைத் தினமும் பூசித்தவர். அடியார் களுடன் நீங்காத அன்பு பூண்டவர். அத்தகைய சிவத்தொண்டராம்

Koviloor Digital Library

வாயிலாரின் திருவடிகளைத் தொழுது அந்த வாயிலாரின் துணையோடு முனையடுவார் நாயனாரின் வரலாற்றைக் கூறத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

நீர்ஆரும் சடையாரை நீடுஎன ஆலயத்துள்
ஆராத அன்பினால் அர்ச்சனை செய்து அடியவர்பால்
பேராத நெறிபெற்ற பெருந்தகையார் தமைப்போற்றிச்
சீர்ஆரும் திருநீடூர் முனைஅடுவார் திறம்உரைப்பாம். (10)

விளக்கம் : திருமயிலாப்பூரிலே கபாலீச்சுரனார் திருக்கோயிலில் இவருக்கு ஒரு தனிக்கோயில் உண்டு.

வழிபாடு இருவகை. புறவழிபாடு, அகவழிபாடு எனப்படும். அகவழிபாடில்லாத புறவழிபாடு பயனில்லாதது. சிவபூஜையில் அந்தர் யாகம் எனப்படும் அந்தர் யாகமின்றிச் செய்யும் சிவபூசை சிறப்புறாது. இவர், அகவழிபாட்டிலேயே மிகவும் அழுந்தி நின்றவர். இதனால் இவரைத் தபோதனர் என்கின்றார் சேக்கிழார் சுவாமிகள் என்னும் வாரியார் கருத்து இங்குக் குறிக்கத்தக்கது.

அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை
கபாலீஸ்வரர் திருக்கோயில் மயிலாப்பூர், சென்னை–4.

Koviloor Digital Library

76. முனையடுவார்

(7 பாடல்கள்)

பிறந்த ஊர் : திருநீடூர் (சோழ நாடு)

குலம் : வேளாளர்

குருபூசை மாதம் : பங்குனி

நட்சத்திரம் : பூசம்

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட அடியார்கள் (கி.பி. 660 – 840)

அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க்கு அடியேன் (திரு. தொகை 8-4)

பகைவரைத் தன் கீழ்ப்படுத்தி உலகை ஆண்ட பெருமையுடைய வளவரின் பொன்னித் திருநாட்டில் நறுமணம் மிகுந்த மலர்ச் சோலைகளில் பூத்த பூக்களிடமிருந்து வடிந்த தேன் ஆற்றினில் கலந்து ஓடியது. ஆற்றுநீர் கொண்டு உழவர் வயலை உழுதனர். இதனால் வயலில் சேறும் தேனும் கலந்த மணம் எங்கும் பரவியது.

இத்தகு வளம் கொண்டது திருநீடூர் ஆகும் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

மாறு கடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திருநாட்டு
நாறு விரைப்பூஞ் சோலைகளின் நனைவாய் திறந்து பொழிசெழுந்தேன்
ஆறு பெருகி வெள்ளம்இடும் அள்ளல் வயலின் மள்ளர் உழும்
சேறுநறுவா சம்கமழும் செல்வ நீடூர் திருநீடூர். (மு.நா. – 1)

முனையடுவார் வண்மை கொண்ட வேளாளர் மரபில் வந்தவர். நஞ்சுண்ட கண்டராம் சிவனின் திருவடி மீது பக்தி கொண்டவர். நட்பு நீங்கி, பகைமை கொண்ட எதிரிகளைப் போரில் வென்று வாகை சூடியவர். போரிட்டு வென்றதால் வரும் வருவாயைக் கொண்டு சிவனடியார்க்கு உதவிகள் செய்பவர் என்பதனை இப்பாடல் உணர்த்துகிறது.

விளங்கும் வண்மை மிக்குஉள்ள வேளாண் தலைமைக் குடிமுதல்வர்
களங்கொள் மிடற்றுக் கண்ணுதலார் கழலின் செறிந்த காதல்மிகும்
உளம்கொள் திருத்தொண்டு உரிமையினில் உள்ளார் நள்ளார் முனைஎறிந்த
வளம்கொடு இறைவர் அடியார்க்கு மாறாது அளிக்கும் வாய்மையார். (2)

போரில் தோற்ற மன்னர் தன் துணையை நாடும் போது அவர்களுக்கு நடுவுநிலைமையுடன் உதவி செய்வார். தோற்ற

Koviloor Digital Library

மன்னர்கட்குத் துணையாக அவர்களுடைய எதிரிகளை வீழ்த்துவார். அதற்காக, ஊதியத்தையும் பெற்றுக் கொள்வார். இயமனும் அஞ்சி ஒதுங்குமாறு போர் செய்வார். பெற்ற வருவாயைக் கொண்டு தமது தொண்டினைச் செய்தார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

மாற்றார்க்கு அமரில் அழிந்துள்ளோர் வந்து தம்பால் மாநிதியம்
ஆற்றும் பரிசு பேசினால் அதனை நடுவுநிலை வைத்துக்
கூற்றும் ஒதுங்கும் ஆள்வினையால் கூலி ஏற்றுச் சென்றுஎறிந்து
போற்றும் வென்றி கொண்டுஇசைந்த பொன்னும் கொண்டு மன்னுவார். (3)

இப்படியாகப் பெற்ற செல்வம் எல்லாவற்றையும் சிவனடியார் கேட்ட அளவில் அளித்து மகிழ்ந்தார். சர்க்கரை, நெய், கறி, பால், தயிர், கனி ஆகிய இவை எல்லாவற்றையும் கலந்து திருவமுது செய்து அதை அடியார்க்கு வழங்குவார். தம்முடைய நிலைபெற்ற அன்பில் நெறி பிறழாமல் தொண்டாற்றி வந்தார்.

இன்ன வகையால் பெற்றநிதி எல்லாம் ஈசன் அடியார்கள்
சொன்ன சொன்னபடி நிரம்பக் கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனிஉள்ளுறுத்த கலந்துஅளித்து
மன்னும் அன்பின் நெறிபிறழா வழித்தொண்டு ஆற்றி வைகினார். (4)

சிவனடியார்க்குரிய திருத்தொண்டைப் பலகாலம் செய்து வந்தார். அதனால் சிவனின் பேரருளுக்குப் பாத்திரமானார். உமையம்மையின் கணவரான சிவனின் அருளால் சிவலோக பதவி பெற்றார். இறைவனோடு வாசம் செய்யும் இனியபேறு பெற்றார். வெற்றி தரும் போரினை நிகழ்த்தியதால் "முனையடுவார்" எனும் திருப்பெயரையும் பெற்றதாக இப்பாடல் கூறுகிறது.

மற்றுஇந் நிலைமை பல்நெடுநாள் வையம் நிகழச் செய்துவழி
உற்ற அன்பின் செந்நெறியால் உமையாள் கணவன் திருவருளால்
பெற்ற சிவலோ கத்துஅமர்ந்து பிரியா உரிமை மருவினார்
முற்ற உழந்த முனையடுவார் என்னும் நாமம் முன்உடையார். (மு.நா. - 5)

முனையடுவார் தம்மை எதிர்ப்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை வெற்றி கொள்ளும் ஆற்றல் படைத்தவர். வெற்றி பெற்றதால் வந்த பெருஞ்செல்வத்தை அறவழியிலே செலவு செய்தவர். சிவனடியார்க்கே தொண்டு செய்து சிவலோகம் சென்றவர். அப்படிப்பட்ட முனையடுவார் நாயனாரின் திருவடிகளைத் தொழுது வணங்கிக் கழற்சிங்க நாயனாரின் வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

Koviloor Digital Library

யாவர் எனினும் இகல்எறிந்தே ஈசன் அடியார் தமக்கு இன்பம்
மேவ அளிக்கும் முனையடுவார் விரைப்பூங்க மலக் கழல் வணங்கித்
தேவர் பெருமான் சைவநெறி விளங்கச் செங்கோல் முறைபுரியும்
காவல் பூண்ட கழற்சிங்கர் தொண்டின் நிலைமை கட்டுரைப்பாம். (6)

உலகில் யாருடைய துணையும் இல்லாமல் தானே செய்யும் திருத்தொண்டுக்கு ஒரு பயன் உள்ளது. தான் கொண்டுள்ள குறிக்கோளில் ஒரு குறை இருப்பினும் அது சிவன் அருளால் நிறைவு பெற்றுவிடும். அந்த வகையில் திருமுருகன்பூண்டியில் வேடர் வேடம் தாங்கி வழிப்பறி செய்து, சுந்தரருக்கு அருள் புரிந்த சிவபெருமான் என் பழவினைவேர் பறித்து அடியார் தொண்டில் ஈடுபடுத்துவார் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

சுந்தரமூர்த்தி நாயனார் துதி

செறிவுஉண்டு என்று திருத்தொண்டில் சிந்தை செல்லும் பயனுக்கும்
குறிஉண்டு ஒன்று ஆகிலும் குறை ஒன்று இல்லோம் நிறையும்
கருணையினால்
வெறிஉண் சோலைத் திருமுருகன் பூண்டி வேடர் வழிபறிக்கப்
பறிஉண் டவர் எம் பழவினைவேர் பறிப்பார் என்னும் பற்றாலே. (7)

வாரியார் விளக்கம் :

முனை – போர். பல முனைகளுக்குச் சென்று பகைவரை வென்றதனால் இவர் முனையடுவார் எனப் பேர் பெற்றார்.

முனைமுகத்து நினைத்தற்கரிய வீரமுடன் மாற்றலரை எதிர்த்துக் கடும்போர் புரியும் வீரராகிய இவர், அதனால் வரும் பெரும்பொருள் அத்தனையும் அடியவர் பணியில் செலவிட்டு மகிழ்வார். மிக்க வலிமையாளரையும் எதிர்ப்பார் என்பதனைக் கூற்று மொதுங்கும் ஆள்வினையால் என்று வருவதால் அறிக.

முனை என்பது போர் என்ற பொருளில் முனைமுகத்து நில்லேல் என்றும் முனையழிந்தது மேட்டி குலைந்தது என்றும், வருகின்ற இடங்களால் அறிக.

உயிரைத் துரும்பாக எண்ணிப் போர்புரிந்து அதனால் வரும் நிதியை அள்ளி வழங்கும் வள்ளன்மை மிகவும் போற்றுதற்குரியது என்னும் திருமுருக கிருபானந்த வாரியார் கருத்தினை உணர்வுடையார் உணர்க.

அருள்மிகு ஆதித்ய அபயப்பிரதாம்பிகை உடனுறை
அருட்சோம நாதேஸ்வரர் திருக்கோயில்
நீடூர் அஞ்சல் – 609 203, மயிலாடுதுறை வட்டம்,
(மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது)
நாகை மாவட்டம்

Koviloor Digital Library

77. கழற்சிங்கர்

(13 பாடல்கள்)

பிறந்த ஊர் : காஞ்சிபுரம் (தொண்டை நாடு)

குலம் : அரசர்

குருபூசை மாதம் : வைகாசி

நட்சத்திரம் : பரணி

காலம் : சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840-865)

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை-9-1)

உலகத்தில் விளங்கிய பல்லவர் குலத்தினில் உதித்தவர். காவல் பொருந்திய மதில்களை உடைய நகரங்கள் மூன்றாகும். அவற்றை முப்புரம் என்று அழைப்பார்கள். அந்த முப்புரத்தை எரித்தவரான சிவனின் திருவடிகளைத் துணையாகப் பற்றியவர். கங்கை பொருந்திய நீண்ட சடைமுடியுடைய சிவனுக்கு வழிபாடு செய்தவர். சிவனடியார்க்குத் தொண்டு செய்வதே கடன் என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர். அவரே கோக்கழல் சிங்கநாயனார் என்று இப்பாடல் கூறுகிறது.

படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றும் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறுஒன்று அறிவினில் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார். (1)

காடவர் குலத்துத் தோன்றலான கழற்சிங்கர் போரில் வல்லவர் மேருமலையை வில்லாக வளைத்த சிவனின் அருள் பெற்றவர் சிவனருளாலே பல வடபுலத்து மன்னர்களை வென்றவர். நாட்டிலே நீதியை நிலைபெறச் செய்தவர். ஆட்சிக் கலையில் வல்லவர் அறநெறி பிறழாது ஆட்சி நடத்தினார் என்று இப்பாடல் கூறுகிறது.

காடவர் குரிசி லார்ஆம் கழற்பெருஞ் சிங்க னார்தாம்
ஆடக மேரு வில்லார் அருளினால் அமரின் சென்று
கூடலர் முனைகள் சாய வடபுலம் கவர்ந்து கொண்டு
நாடுஅற நெறியில் வைக நல்நெறி வளர்க்கும் நாளில் (2)

Koviloor Digital Library

சிவபெருமான் வீற்றிருக்கும் திருத்தலங்கட்கு எல்லாம் சென்றவர். சிவனுக்கும், சிவனடியார்க்கும் தொண்டு செய்வதையே பெரும் பாக்கியமாகக் கருதியவர். ஒவ்வொரு சிவன் கோயிலுக்கும் சென்று வழிபட்டு இறுதியில் சிவநகர் என்று அழைக்கப்படும் திருவாரூர் வந்தடைந்தார் என்று இப்பாடல் கூறுகிறது.

குவலயத்து அரனார்மேவும் கோயில்கள் பலவும்சென்று
தவலரும் அன்பில்தாழ்ந்து தக்கமெய்த் தொண்டு செய்வார்
சிவபுரி என்ன மன்னும் தென்திரு ஆரூர் எய்திப்
பவம்அறுத்து ஆட்கொள் வார்தம் கோயிலுள் பணியப் புக்கார். (3)

திருவாரூர் கோயிலுக்குள் கழற்சிங்க நாயனார் போகும் போது பட்டத்து அரசியான தன் மனைவியையும் அழைத்துச் சென்றார். உள்ளே சென்று சிவனை வழிபட்டபோது பட்டத்து மனைவி கோயிலை வலம் வந்து வணங்க எண்ணினாள். கோயிலின் உட்புற வெளிப்புறங்களைப் பார்த்து மகிழ்ந்தாள். அவள் மலர்களின் மீது மிகுந்த பற்று உடையவள் என்று இப்பாடல் கூறுகிறது.

அரசியல் ஆயத்தோடும் அம்கணர் கோயில் உள்ளால்
முரசுஉடைத் தானை மன்னர் முதல்வரை வணங்கும் போதில்
விரைசெறி மலர்மென் கூந்தல் உரிமைமெல் லியலார் தம்முள்
உரைசிறந்து உயர்ந்த பட்டத்து ஒருதனித் தேவி மேவி. (4)

மயில் போன்ற சாயலைக் கொண்ட கழற்சிங்க மன்னனுடைய தேவி அந்தக் கோயிலின் பெருமைகளை எல்லாம் கண்டு வியந்தாள். மலர்மாலைகள் தொடுக்கும் மண்டபத்தின் அருகே வந்தபோது அங்கு விருப்பம் உண்டாக்கும் புதுப்பூ ஒன்று விழுந்திருந்தது அதை எடுத்து முகர்ந்தாள் என்று இப்பாடல் கூறுகிறது.

கோயிலை வலங்கொண்டு அங்கண் குலவிய பெருமை எல்லாம்
சாயல்மா மயிலே போல்வாள் தனித்தனி கண்டு உவந்து
தூயமென் பள்ளித் தாமம் தொடுக்கும்மண்டபத்தின் பாங்கர்
மேயதுஓர் புதுப்பூ அங்கு விழுந்ததுஒன்று எடுத்து மோந்தாள். (5)

மலரினைத் தேவியார் முகர்ந்து பார்த்த போது அவ்விடத்தில் செருத்துணையார் எனும் தூய தொண்டர் வந்தார். அரசி இந்த மலரைப் பூ மண்டபத்திலிருந்து எடுத்து வந்து முகர்ந்து பார்த்தாள். என்று எண்ணிய செருத்துணையார் உடனே அந்த மகாராணியின் மூக்கைப் பிடித்து அரிந்துவிட்டார் என்று இப்பாடல் கூறுகிறது.

Koviloor Digital Library

புதுமலர் மோந்த போதில் செருத்துணைப் புனிதத் தொண்டர்
இதுமலர் திருமுற் றத்துள் எடுத்துமோந் தனள்ஆம் என்று
கதும்என ஓடிச் சென்று கருவிகைக் கொண்டு பற்றி
மதுமலர்த் திருஒப் பாள்தன் மூக்கினைப் பிடித்து வார்ந்தார். (6)

மூக்கினை அரிந்ததால் வலி பொறுக்கமாட்டாமல் மகாராணி அலறி அழுதாள். குருதி வழிந்தது. கூந்தல் அவிழ்ந்து கலைந்தது. மயில் போன்ற சாயல் உடைய அந்த ராணி மண்ணில் விழுந்து புரண்டாள். புற்றிடமாக உள்ள இடத்தில் பேரொளியாக விளங்கும் பெருமானைத் தொழுதுவிட்டு வெளியே வந்த கழற்சிங்கர் தன் பட்டத்து ராணி மூக்கரியப்பட்டுக் கிடந்ததைப் பார்த்தார் என இப்பாடல் கூறுகிறது.

வார்ந்துஇழி குருதி சோர மலர்க்கருங் குழலும் சோரச்
சோர்ந்துவீழ்ந்து அரற்றும் தோகை மயில்எனத் துளங்கி மண்ணில்
சேர்ந்துஅயர்ந்து உரிமைத் தேவி புலம்பிடச் செம் பொன்புற்றுள்
ஆர்ந்தபேர் ஒளியைக் கும்பிட்டு அரசரும் அணைய வந்தார். (7)

மன்னர் கழற்சிங்கர் மனைவியைப் பார்த்தார். பூங்கொம்பு ஒன்று நிலத்தில் வீழ்ந்து கிடப்பது போல் காட்சியளித்த தன் பட்டத்து மகாராணியைப் பார்த்தார். அழுது அலறும் மனைவியைப் பார்த்து உனக்கு இப்படிப்பட்ட குற்றத்தை இழைத்தவர் யார்? உடனே சொல் என வினவினார் என்று இப்பாடல் கூறுகிறது.

வந்துஅணைவுற்ற மன்னர் மலர்ந்தகற் பகத்தின் வாசப்
பைந்தளிர்ப் பூங்கொம்பு ஒன்று பார்மிசை வீழ்ந்ததுஎன்ன
நொந்துஅழிந்து அரற்று வாளை நோக்கி இவ்அண் டத்து உள்ளோர்
இந்தவெவ் வினை அஞ் சாதே யார்செய்தார் என்னும் எல்லை. (8)

மனைவிக்குக் கொடுமை செய்தவர் யார் என்று சுற்று முற்றும் பார்த்த போது அங்கே செருத்துணையார் என்னும் ஒரு தொண்டர் வந்தார். பூ மண்டபத்திலிருந்து விழுந்த பூவை எடுத்து முகர்ந்ததால் மூக்கை அரிந்தேன் என்றார். உடனே மன்னர் நிரல் நிறைப்படி அல்லவா தண்டனை வழங்க வேண்டும் என்று கூறியதாக இப்பாடல் அமைகிறது.

அந்நிலை அணைய வந்து செருத்துணையார்ஆம் அன்பர்
முன்னுறு நிலைமை அங்குப் புகுந்தது மொழிந்த போது
மன்னரும் அவரை நோக்கி மற்றுஇதற்கு உற்ற தண்டம்
தன்னை அவ்அடைவே யன்றோ தடிந்திடத் தகுவதுஎன்று (9)

Koviloor Digital Library

கழற்சிங்கர் செருத்துணையாரைப் பார்த்து முதலில் அந்தப் பூவை எடுத்த கை முதல் குற்றவாளி. முகர்ந்த மூக்கு இரண்டாவது குற்றவாளி. முதல் குற்றவாளியைத் தண்டிக்காமல் விட்டு விட்டீரே என்று கூறினார். தன் உடைவாளை எடுத்தார். தன் பட்டத்து ராணியின் வலது கையை உடனே துண்டித்தார் என்று இப்பாடல் கூறுகிறது.

கட்டியஉடைவாள் தன்னை உருவி அக்கமழ் வாசப்பூத்
தொட்டுமுன் எடுத்த கையாம் முற்படத் துணிப்பதுஎன்று
பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும் துணித்தார்அன்றே. (10)

தன்னுடைய தேவியின் வலது கரத்தைக் கழற்சிங்கர் வெட்டினார். உடைவாளால் வெட்டியதைப் பார்த்த மக்கள் 'அர' (ஹர, ஹர) என்ற ஒலியை எழுப்பினார்கள். அந்த ஒலி விண்ணுலகம் சென்றது. வானத்தில் உள்ள தேவர்களும் முழக்கம் செய்தனர். கற்பகமரம் பூமழை பொழிந்தது என இப்பாடல் கூறுகிறது.

ஒருதனித் தேவி செங்கை உடைவாளால் துணித்தபோது
பெருகிய தொண்டர் ஆர்ப்பின் பிறங்குஒலி புவி மேல்பொங்க
இருவிசும்பு அடைய ஓங்கும் இமையவர் ஆர்ப்பும் விம்மி
மருவிய தெய்வவாச மலர்மழை பொழிந்தது அன்றே. (11)

அரியஅத் திருத்தொண்டு ஆற்றும் அரசனார் அளவுஇல்காலம்
மருவிய உரிமை தாங்கி மால்அயற்கு அரியார் மன்னும்
திருவருள் சிறப்பினாலே செய்யசேவடியின் நீழல்
பெருகிய உரிமை ஆகும் பேர்அருள் எய்தினாரே. (க.நா.-12)

அருள்மிகு வண்டார்குழலி உடனுறை அகிலேஸ்வரர்
தியாகராஜ சுவாமி திருக்கோயில் (அசலேச்சரம்)
திருவாரூர் - அ. கு. 610 001.
திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்

Koviloor Digital Library

78. இடங்கழியார்

(11 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	**கொடும்பாளூர் (கோனாடு) திருச்சியிலிருந்து மணப்பாறை – மணப்பாறையிலிருந்து புதுக் கோட்டை செல்லும் வழியில் உள்ளது.**
குலம்	:	**சிற்றரசர்**
குருபூசை மாதம்	:	**ஐப்பசி**
நட்சத்திரம்	:	**கார்த்திகை**
காலம்	:	**அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத் திற்கும் இடைப்பட்ட அடியார் (கி.பி. 660 – 840)**

மடல் சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும்... அடியேன் (திரு. தொகை-9:2)

கோனாடு இயற்கை வளமிக்க நாடு. இதன்கண் உள்ள வளம் மிகுந்த ஊர் கொடும்பாளூர் ஆகும். அதுவே கோனாட்டின் தலைநகராக விளங்கியது.

அந்தக் கொடும்பாளூர் நகரத்தில் வேளிர் குலத்திலே தோன்றி ஆட்சியில் அமர்ந்தவர். கொங்கு நாட்டின் புகழை நாடெங்கும் பரவச் செய்தவர். எப்போதும் ஒளி உமிழும் பொன் ஆபரணங் களை அணிந்தவர். ஆதித்த சோழனின் புகழ் தங்கிய மரபில் வந்தவர். அவரே இடங்கழியார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

அந்நகரத் தினில்இருக்கும் வேளிர் குலத்து அரசுஅளித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டில் பாக் கொங்கின்
பன்னுதுலைப் பசும்பொன்னால் பயில்பிழம்பாம் இசைஅணிந்த
பொன்நெடுந்தோள் ஆதித்தன் புகழ்மரபின் குடிமுதலோர். (3)

இடங்கழியார் உலகம் போற்றும் உத்தமராக வாழ்ந்தவர். மூன்று புரங்களையும் எரித்த சிவனின் பக்தர். சிவனடியார்கட்குத் தொண்டு செய்வதே தன் பிறவிப்பணி என்று இருப்பவர். சிவத்தொண் டினையன்றி வேறு தொண்டினை அறியாதவர். தொண்டர்பணி செய்வதையே தன் தலையான கடமையாகக் கொண்டவர் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

Koviloor Digital Library

இடங்கழியார் எனஉலகில் ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்முப் புரம்எரித்தார் அடித்தொண்டின் நெறிஅன்றி
முடங்குநெறி கனவினிலும் முன்னாதார் எந்நாளும்
தொடர்ந்தபெருங் காதலினால் தொண்டர்வேண் டியசெய்வார். (4)

சைவநெறி தழைக்கப்பாடுபட்டவர். வைதீக முறையில் பிறழாதவர். நஞ்சுண்ட நாதனாம் சிவன் வீற்றிருக்கும் கோயில்களில் வழிபாடுகள் சிறப்புற நடக்க உதவிகரமாய் இருப்பவர். அர்ச்சனை, அபிஷேக ஆராதனைகள் சிவாகம விதிப்படி நடக்க ஆணைகள் பிறப்பித்தவர். புகழ்பெருக அரசாட்சி செய்தார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

சைவநெறி வைதிகத்தின் தருமநெறி யொடும் தழைப்ப
மைவளரும் திருமிடற்றார் மன்னியகோ யில்கள்எங்கும்
மெய்வழிபாட்டு அர்ச்சனைகள் விதிவழிமேல் மேல் விளங்க
மெய்வளர்வண் புகழ்பெருக முறைபுரியும் அந்நாளில். (5)

இடங்கழி நாயனார் ஆட்சி செய்த நாளில் சிவனடியார் ஒருவர் இருந்தார். சிவனடியார்கட்கு உணவு அளிப்பதையே தன் உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். தினமும் ஒருவருக்காவது உணவு அளிப்பார். ஒருநாள் தன் தொழில் மூலம் வருவாய் இல்லாததால் இன்றைய தினம் அடியவருக்கு அமுது அளிக்கும் செயல் பாதித்துவிட்டதே என எண்ணினார். என்ன செய்வது அவர் என்று குழப்பத்தில் ஆழ்ந்திருந்ததாக இப்பாடல் கூறுகிறது.

சங்கரன்தன் அடியாருக்கு அமுதுஅளிக்கும் தவமுடையார்
அங்குஒருவர் அடியவருக்கு அமுதுஒருநாள் ஆக்க உடன்
எங்கும் ஒரு செயல்காணாது எய்திய செய்தொழில் முட்டப்
பொங்கிஎழும் பெருவிருப்பால் புரியும்வினை தெரியாது. (6)

அடியவர்க்கு அமுது அளிக்கும் செயல் பாதித்ததால் அடுத்தநாள் எப்படி அடியவருக்கு விருந்தோம்பல் செய்வது என எண்ணினார். இறுதியில் திருடியாவது அடியாருக்கு உணவு அளிக்க வேண்டும் என எண்ணினார். இருள் சூழ்ந்த நள்ளிரவில் இடங்கழியாரின் நெற்களஞ்சியக் கொட்டகைக்குச் சென்றார். நெல்லைத் திருடும்போது காவலர்களால் கைது செய்யப்பட்டு அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார் என்கிறது இப்பாடல்.

Koviloor Digital Library

அரசர்அவர் பண்டாரத்து அந்நாட்டின் நெல்கூட்டின்
நிரைசொரிந்த புரிபலவாம் நிலைக்கொட்ட காரத்தில்
புரைசெறிநள் ளிருளின்கண் புக்குமுகந்து எடுப்பவரை
முரசுஎறிகா வலர்கண்டு பிடித்துஅரசன் முன்கொணர்ந்தார். (7)

இடங்கழியார் முன் நிறுத்தப்பட்ட அடியார் பற்றியும், அவர் திருடிய செயல் பற்றியும் காவலர்கள் எடுத்து உரைத்தனர். ஏன் திருடினாய் என இடங்கழியார் வினவினார். அடியார்க்கு அமுது செய்விக்கும் பணிக்குத் தடை ஏற்பட்டதால் திருடினேன் என்றார் அடியவர். உடனே அவரைக் காவலிலிருந்து விடுவித்து இவர் அல்லவா எனக்குக் களஞ்சியம் போன்றவர் என்று கூறி அந்த அடியவரைப் பாராட்டினார் என்கிறது இப்பாடல்.

மெய்த்தவரைக் கண்டிருக்கும் வேல்மன்னர் வினவுதலும்
அத்தன்அடி யாரையான் அமுதுசெய்விப் பதுமுட்ட
இத்தகைமை செய்தேன் என்று இயம்புதலும் மிக இரங்கிப்
பத்தரைவிட்டு இவர்அன்றோ பண்டாரம் எனக்கு என்பார். (8)

இறைவனுடைய அடியார்க்கு அமுது படைக்க அல்லவா இவர் திருடினார். இனிமேல் இவர் திருட வேண்டாம். இந்த நெற் களஞ்சியம் முழுவதுமே இந்த அடியவர்க்குச் சொந்தம் ஆக்கு கிறேன் என்று கூறினார் இடங்கழியார். இறைவனுடைய அடியார்கள் எப்போது வேண்டுமானாலும் உரிமையுடன் அரசாங்கத்திலுள்ள எந்தப் பொருளையும் அனுமதியின்றி எடுத்துக் கொள்ளலாம் என்று பறையறையச் சொன்னதாக இப்பாடல் கூறுகிறது.

நிறைஅழிந்த உள்ளத்தால் நெல்பண்டா ரமும் அன்றிக்
குறைவுஇல்நிதிப் பண்டாரம் ஆனஎலாம் கொள்ளை முகந்து
இறைவன்அடி யார்கவர்ந்து கொள்க என எம் மருங்கும்
பறைஅறையப் பண்ணுவித்தார்
படைத்தநிதிப்பயன்கொள்வார். (9)

அளவில்லாத பெரும் செல்வத்தை அடியார்கட்கு வழங்கியவர். சிவனடியார்கள் மீது உண்மையான பற்றும் பாசமும் வைத்தவர். அடியார்கள் எப்போது வேண்டுமானாலும் அரசாங்கத்தின் கஜானா வைக் கொள்ளையடிக்கலாம் என்று ஆணை இட்டவர். திருநீற்றின் நெறிப்படி வாழ்ந்து சிவபதம் அடைந்தார் என இப்பாடல் கூறுகிறது.

எண்இல்பெரும் பண்டாரம் ஈசன்அடி யார்கொள்ள
உள்நிறைந்த அன்பினால் உறு கொள்ளை மிகஊட்டித்
தண்அளியால் நெடுங்காலம் திருநீற்றின் நெறிதழைப்ப
மண்ணில்அருள் புரிந்துஇறைவர் மலர்அடியின் நிழல் சேர்ந்தார். (10)

Koviloor Digital Library

இடங்கழி நாயனாரின் கழல் வணங்கி அடுத்துச் செருத் துணையார் வரலாற்றைக் கூறத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

மைதழையும் மணிமிடற்றார் வழித்தொண்டின் வழிபாட்டில்
எய்துபெரும் சிறப்புஉடைய இடங்கழியார் கழல்வணங்கி
மெய்தருவார் நெறிஅன்றி வேறுஒன்றும் மேல்அறியாச்
செய்தவராம் செருத்துணையார் திருத்தொண்டின்
செயல்மொழிவாம். (11)

விளக்கம் : ஒரு செயல் குற்றமென்பதும் குணமென் பதும் அது செய்தார் மனநிலையைப் பொறுத்துளது. பொய்யும் களவும்கூடச் சிலசமயத்தில் புண்ணியத்தைத் தருகின்றன. அடியார், அடியவர் பசி தீர்த்து உபகரிக்கும் நியதியையுடை யவர். தாம் புரியும் அரிய பணிக்கு இடர்வந்தபோது அடியவர் பசி தீர்க்கும் கருணை உள்ளத்துடன் மன்னவனார் கருவூலம் வந்து களவு செய்தார். அதனை அறிந்த இடங்கழி நாயனார் அவரைக் களவு செய்தார் எனக் கருதித் தண்டியாது அடிபணிந்து வேண்டுமளவுங் கொண்டு போகுமாறு பணித்தார் எனும் வாரியார் கருத்தை அறிக.

Koviloor Digital Library

79. செருத்துணையார்

(7 பாடல்கள்)

பிறந்த ஊர் : தஞ்சாவூர், சோழ நாடு

குலம் : வேளாளர்

குருபூசை மாதம் : ஆவணி

நட்சத்திரம் : பூசம்

காலம் : சுந்தரர் காலத்து நாயனார் (கி.பி. 840 – 865)

தஞ்சை மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
(திரு.தொகை-9:2)

தெளிவான அலைகளையுடைய காவிரி பாயும் நீர்நாடு. அதுவே சோழநாடு. அந்தச் சோழநாட்டில் மருகல் என்று ஒரு நாடு உள்ளது. அந்தச் சிறு நாட்டில் அமைந்தது தஞ்சாவூர். அந்த ஊர் நீர்வளம், நிலவளம், நிறைந்த ஊர். செல்வர்கள் நிறைந்த ஊர். சான்றோர்களும், தவநெறிச் சீலர்களும் நிறைந்த ஊர். பெருமைகள் பல படைத்த ஊர் என்று தஞ்சாவூரைப் பற்றி இப்பாடல் கூறுகிறது.

உள்ளும் புறம்பும் குலமரபின் ஒழுக்கம் வழுவா ஒருமைநெறி
கொள்ளும் இயல்பின் குடிமுதலோர் மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளும் திரைகள் மதகுதொறும் சேலும் கயலும் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர் நாட்டு மருகல்நாட்டுத் தஞ்சாவூர். (செ.நா. 1)

தஞ்சாவூரிலே வேளாளர் குடியில் வாழ்ந்தவர். கங்கா தேவியை, சடைமுடியை, திருநீற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள இறைவனை எப்போதும் நினைப்பவர். உண்மையான சிவபக்தர். நெறிமுறை தவறாத ஒழுக்க சீலர் எனப் பெயர் படைத்தவர் செருத்துணை நாயனார் என்று இப்பாடல் கூறுகிறது.

சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண்குடி முதல்வர்
நீரின் மலிந்த செய்யசடை நீற்றர் கூற்றின் நெஞ்சுஇடித்த
வேரி மலர்ந்தபூங் கழல்சூழ் மெய்யன்புஉடைய சைவர்எனப்
பாரில் நிகழ்ந்த செருத்துணையார் பரவும் தொண்டின் நெறி நின்றார். (2)

Koviloor Digital Library

இந்தச் செருத்துணையார் சிவத்தொண்டு செய்து வந்தார். திருவாரூரில் வீற்றிருக்கும் இறைவனின் பக்தர். திருவாரூர் கோயிலிலே நெறிமுறை தவறாத சிவாகம முறைப்படி சிவகாரியங் களைச் செய்து வந்தார். பல்வேறு காலங்களில் நடக்கக்கூடிய பூஜை முறைகளை மரபு வழுவாமல் செய்து இறைத் தொண்டிலே ஈடுபட்டிருந்தார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

ஆன அன்பர் திருஆரூர் ஆழித் தேர்வித் தகர் கோயில்
ஞான முனிவர் இமையவர்கள் நெருங்கு நலம்சேர் முன்றிலினுள்
மான நிலவு திருப்பணிகள் செய்து காலங்களின் வணங்கிக்
கூனல் இளவெண் பிறைமுடியார் தொண்டு பொலியக் குலவும்நாள். (3)

பல்லவ மன்னரும், அவரின் பட்டத்து அரசியும் ஒருமுறை திருவாரூர் வந்தனர். கோயிலை வலம் வந்தனர். பல்லவர் கோச்சிங்கர் சிவதரிசனத்தில் ஈடுபட்டார். அவரின் பட்டத்து அரசி பூமண்டபப் பகுதிக்கு வந்தார். விலகி இருந்த ஒரு பூவை எடுத்து முகர்ந்தார். இதைக் கண்ட செருத்துணையார் இறைவனுக்குப் படைக்க இருந்த பூவை முகர்ந்து விட்டாளே எனக் கோபம் கொண்டு வாளுடன் வேகமாக அரசியார் இருக்கும் இடம் விரைந்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

உலகு நிகழ்ந்த பல்லவர்கோச் சிங்கர் உரிமைப் பெருந்தேவி
நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்ததுஒரு
மலரை எடுத்து மோந்ததற்கு வந்து பொறாமை வழித்தொண்டர்
இலகு சுடர்வாய்க் கருவி எடுத்து எழுந்த வேகத்தால்எய்தி (4)

விரைந்து ஓடிவந்த செருத்துணையார் பல்லவ மன்னனின் தேவியின் கூந்தல் பற்றி இழுத்தார். நிலத்தில் வீழ்த்தினார். இறைவனின் சடைமுடிமேல் வைக்க வேண்டிய பூவை முகர்ந்தது குற்றம். எனவே முகர்ந்த மூக்கை அரிகிறேன் என்று அந்தப் பட்டத்தரசியின் மூக்கினை அரிந்தார் என இப்பாடல் கூறுகிறது.

கடிது முற்றி மற்றுஅவள்தன் கருமென் கூந்தல் பிடித்துஈர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் பரமர் செய்யசடை
முடியில் ஏறும் திருப்பூமண் டபத்து மலர்மோந் திடும்மூக்கைத்
தடிவன் என்று கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித்
தொண்டர். (5)

Koviloor Digital Library

சிவபெருமானுக்கு அணிய வேண்டிய பூவை எடுத்து முகர்ந்த குற்றத்திற்காக, பல்லவன் தேவியை மானபங்கப்படுத்தி அவளது மூக்கை அரிந்த செயல் இறைவனின் திருத்தொண்டுச் செயல் என்று பெருமிதப்பட்டார் செருத்துணையார். மரபுநெறி முறைகளை யார் மீறினாலும் அவர்களைத் தண்டிப்பதே சிவத்தொண்டு என்று உறுதி பூண்டிருந்த செருத்துணையார் சிலகாலம் கழிந்தபின் இறைவனின் திருவடி நிழலை அடைந்தார் என்று இப்பாடல் கூறுகிறது.

அடுத்த திருத்தொண்டு உலகறியச் செய்த அடல் ஏறுஅனையவர்தாம்
தொடுத்த தாம மலர்இதழி முடியார் அடிமைத் தொண்டுகடல்
உடுத்த உலகில் நிகழச்செய்துஉய்யச் செய்ய பொன்மன்றுள்
எடுத்த பாத நிழல்அடைந்தே இறவா இன்பம் எய்தினார். (6)

சிவந்த கண்களையுடையவர். காளை ஊர்தி உடையவர். அந்தச் சிவனின் திருமுற்றத்தில் விழுந்த பள்ளித் தாமத்துக்கு உரிய மலரை முகர்ந்த குற்றத்திற்காக மன்னரின் தேவியின் மூக்கை அரிந்த மாபெரும் துணிச்சல்காரரான செருத்துணையாரின் தூய அடிகளை வணங்கி, புகழ்த்துணை நாயனாரின் புகழைப் பாடப் போகிறேன் என்று சேக்கிழார் செப்புகிறார்.

செங்கண் விடையார் திருமுன்றில் விழுந்த திருப்பள்ளித்தாமம்
அங்கண் எடுத்து மோந்தஅதற்கு அரசன் உரிமைப் பெருந்தேவி
துங்க மணிமூக்கு அரிந்தசெருத் துணையார் தூய கழல்இறைஞ்சி
எங்கும் நிகழ்ந்த புகழ்த்துணையார் உரிமை அடிமை
எடுத்துஉரைப்பாம். (செ.நா. 7)

செருத்துணை விளக்கம்

செரு என்றால் போர்க்களம். பல போர்க்களங்களில் வெற்றி கண்ட தீரர் - வீரர் என்பதால் இவரைச் செருத்துணை நாயனார் என்றனர். பல்லவர் படைத்தளபதி பரஞ்சோதி பின்னர் சிறுத் தொண்டராக உருமாறியது போன்று இவரும் அடியாரானார் எனக் கொள்ளுதல் பொருந்தும். நாயன்மார் ஒவ்வொருவரும் ஒரு நெறியில் உறுதியாக நின்று இறையருள் பெற்றனர். அவர்கள் ஏற்றுக்கொண்டு வாழ்ந்த நெறி சரியா - தவறா என்பது நம்முடைய ஆய்விற்கு உட்பட்டதன்று. ஏற்றுக்கொண்ட நெறியில் கடைசிவரை உறுதியாக இருந்தனர். தங்கள் உயிரை விட்டாலும் விடுவார்களே தவிர தாங்கள் ஏற்றுக்கொண்ட நெறியை - கொள்கையை விடமாட்டார்கள். இப்படி உறுதிபூண்டு ஒரு நெறியில் நின்று வாழ்ந்து வென்றவர்களே நாயன்மார்.

Koviloor Digital Library

செருத்துணை நாயனார் இறைவனுக்கு நாள்தோறும் திருத்தாமம் (மலர்களை மாலையாகத் தொடுத்துக் கொடுத்தல்) படைக்கும் பணியைச் செய்யும் நெறியில் நின்றார். மலரின் தூய்மை கெடாதிருக்க அடியவர் வாயினைத் துணியால் கட்டிக் கொண்டு அதிகாலையிலே மலர் பறிப்பர்; வண்டுகள் மொய்த்து தூய்மை கெடுவதற்கு முன்னர், அப்படித் தூய்மையான மலர்த் தொண்டினைச் செய்து வரும் நாயனாரின் தொண்டிற்கு இடையூறு வரும்போது நாயனார் சினங்கொண்டார். செருக்களம் பல கண்ட செருத் துணை நாயனார் சினங்கொண்டது சீர்மையேயன்றி தவறில்லை.

அருள்மிகு வண்டார்குழலி உடனுறை அகிலேஸ்வரர்
தியாகராஜ சுவாமி திருக்கோயில்
திருவாரூர் - அ. கு. 610 001.
திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்

Koviloor Digital Library

80. புகழ்த்துணையார்

(7 பாடல்கள்)

பிறந்த ஊர் : செருவிலிபுத்தூர், (சோழ நாடு)

குலம் : ஆதி சைவர்

குருபூசை மாதம் : ஆவணி

நட்சத்திரம் : ஆயில்யம்

காலம் : அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார் (கி.பி. 300 - 600)

புடைசூழ்ந்த புலியதன்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
(திரு. தொகை – 9:3)

செருவிலி புத்தூர் என்ற ஊரில் பிறந்தவர். சிவ வேதியர் குலத்திலே பிறந்தவர். சிவனுக்குத் தொண்டு செய்தவர். சிவனடியார்கட்கு ஏவல் பணி செய்தவர். சிவப்பரம்பொருளுக்குத் தொண்டு செய்வதே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர். பலபேருடைய பாராட்டுகளால் புகழ்பெற்றார். அதனால் புகழ்த் துணையார் என்னும் பெயர் பெற்றார் என்று இப்பாடல் கூறுகிறது.

செருவிலிபுத் தூர்மன்னும் சிவமறையோர் திருக்குலத்தார்
அருவரைவில் லாளி தனக்கு அகத்துஅடிமை யாம்அதனுக்கு
ஒருவர்தமை நிகர்இல்லார் உலகத்துப் பரந்துஓங்கிப்
பொருஅரிய புகழ்நீடு புகழ்த்துணையார் எனும் பெயரார். (1)

இறைவனைத் தவத்தால் வணங்கினார். தத்துவ நெறியினால் வணங்கினார். தன்னுடைய பொன்னையும், பொருளையும் சிவனடியார்க்கே வாரி வழங்கினார். நாட்டில் பஞ்சம் வந்தது. பசியினால் வாடினார்கள். இரவு பகல் பாராமல் சிவத்தொண்டில் ஈடுபட்டார். குளிர்நீரால் அபிஷேகம் செய்து மலர்களால் அர்ச்சனை செய்து வந்தார் என்று இப்பாடல் கூறுகிறது.

தங்கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடும் நாள்
பொங்குஓத ஞாலத்து வறக்கடமாய்ப் பசிபுரிந்தும்
எம்கோமான் தனைவிடுவேன் அல்லேன் என்று இராப்பகலும்
கொங்குஆர்பல் மலர்கொண்டு குளிர்புனல் கொண்டுஅருச்சிப்பார். (2)

Koviloor Digital Library

திருமால் அடியைத் தேடினார். பிரம்மா முடியைத் தேடினார். சிவன் அப்படியும் கிடைத்தார் இல்லை. அடிமுடி தேடி அலுத்துப் போயினர். அப்படிப்பட்ட தேடுதற்கரிய பெருமானைத் தினமும் நீராட்டி வரும் போது தளர்வுற்றார். நீர்க் குடத்தைத் தாங்கமுடியாமல் சிவனின் முடிமீதே கிடத்திவிட்டு, பசிமயக்கத்தால் கீழே சாய்ந்தார் என்பதனை இப்பாடல் விளக்குகிறது.

மால்அயனுக்கு அரியானை மஞ்சனம் ஆட்டும்பொழுது
சாலஉறு பசிப்பிணியால் வருந்திநிலை தளர்வு எய்திக்
கோலநிறை புனல்தாங்கு குடம்தாங்க மாட்டாமை
ஆலம்அணி கண்டத்தார் முடிமீது வீழ்த்துஅயர்வார். (3)

பசி மயக்கத்தில் கீழே சாய்ந்த புகழ்த்துணையார் திடீர் என்று அப்படியே உறங்கிவிட்டார். அந்த உறக்கத்திலேயே ஒரு கனவு வந்தது. அந்தக் கனவிலே சிவன் தோன்றினார். பஞ்சம் தீரும் வரை தினம் ஒரு தங்கக் காசை உன்முன் வைப்பேன் என்று கூறினார். நாயனார் துன்பம் நீங்கினார். துயில் நீங்கி எழுந்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

சங்கரன்தன் அருளால்ஓர் துயில்வந்து தமைஅடைய
அம்கணனும் கனவின் கண் அருள்புரிவான் அருந்துஉணவு
மங்கியநாள் கழிஅளவும் வைப்பதுநித்தமும்ஒரு காசு
இங்குஉனக்கு நாம் என்ன இடர்நீங்கி எழுந்திருந்தார். (4)

காளை ஊர்தியில் எழுந்தருளும் சிவபெருமான் தினமும் ஒரு பொற்காசைப் பீடத்தின் மீது கிடத்தினார். புகழ்த் துணை யாரும் அதனை மகிழ்வோடு ஏற்றார். அந்தப் பொற்காசினை விற்று வந்த பணத்தினால் தன் குடும்பத்தை வறுமை இல்லாமல் நடத்தினார். அன்றாடம் சிவப்பணிகளை மிகவும் மகிழ்ச்சியோடு செய்து வந்தார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

பெற்றம்உகந்து ஏறுவார் பீடத்தின் கீழ்ஒருகாசு
அற்றம் அட்ங் கிடஅளிப்ப அன்பரும்மற்று அதுகைக் கொண்டு
உற்றபெரும் பசிஅதனால் உணங்கும் உடம்புடன் உவந்து
முற்றுணர்வு தலைநிரம்ப முகம்மலர்ந்து களி கூர்ந்தார். (5)

தினந்தோறும் இறைவன் தந்த பொற்காசினைக் கொண்டு தன் குடும்பப் பசியைப் போக்கினார். சிவனிடமும் பற்று வைத்தார். சிவனடியார்களிடமும் பற்று வைத்தார். சிவத்தொண்டிற்கே தன்னை அர்ப்பணித்தார். வான் உலகோர் மெச்சும்படியும், தொழும் படியும்

Koviloor Digital Library

வாழ்ந்த புகழ்த்துணையார் இறுதிக்காலம் வந்த போது இறைவனடி சேர்ந்தார் என்பதனை இப்பாடல் உணர்த்துகிறது.

அந்நாள் போல் எந்நாளும் அளித்தகாசு அது கொண்டே
இன்னாத பசிப்பிணிவந்து இறுத்தநாள் நீங்கியபின்
மின்ஆர் செஞ் சடையார்க்கு மெய்யடிமைத் தொழில் செய்து
பொன்நாட்டின் அமரர் தொழப் புனிதர்அடி நிழல் சேர்ந்தார். (6)

உமையம்மையரைத் தன் இடப்பாகம் கொண்ட சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்த புகழ்த் துணையாரின் திருவடிகளைத் தொழுது அழகிய தோள்களை உடையவரான கோட்புலி நாயனாரின் வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

பந்துஅணையும் மெல்விரலாள் பாகத்தார் திருப்பாதம்
வந்துஅணையும் மனத்துணையார் புகழ்த்துணையார் கழல்வாழ்த்திச்
சந்துஅணியும் மணிப்புயத்துத் தனிவீரர் ஆம்தலைவர்
கொந்துஅணையும் மலர்அலங்கல் கோட்புலியார் செயல்உரைப்பாம். (7)

செருவிலிபுத்தூரைக் கிருபானந்த வாரியார் அரிசில் கரைப்புத்தூர் என்று கருதுகிறார்.

அரிசில் கரைப்புத்தூர் குடந்தையிலிருந்து தென்கிழக்குத் திசையில் நாச்சியார் கோயில் செல்லும் வழியில் திருநாரையூர் எனும் தலத்துக்கும் சிவபுரம் எனும் தலத்துக்கும் இடையில் அமைந்து இருக்கின்ற ஊராகும். இவ்வூர் குடந்தையிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ளது.

வாரியார் கருத்து

"அடியார் பசி தீர்ப்பது அங்கணர் அருள் திறமாதலின் பொன்னம்பலவாணர் இவருக்குப் பொற்காசு நாள்தோறும் வழங்கினார்.

இங்ஙனமே இறைவர் வாகீசருக்கும் பாலறாவாயருக்கும் படிக்காசு தந்தனர். வைத்தீச்சுரன் கோயிலில் இருந்த ஓர் அடிகளாருக்கும் தந்தனர். அதனால், அவர் படிக்காசுத் தம்பிரான் என்று பெயர் பெற்றனர்.

இதுபோல் அருணகிரிநாதருக்கும் சென்னிமலையில் முருகன் படிக்காசு வழங்கியதாகச் சென்னிமலைக் காதல் என்ற நூல் புகல்கின்றது.

இதனால் இறைவனை இடையறா அன்புடன் இறைஞ்சுவார் நோயடையார்; பசியுறார் பேயடையார் மற்றும் பல

Koviloor Digital Library

துன்புறார் என்பது ஒருதலை. ஆதலால் அருந்துணையாய் அடியவர்தம் அல்லல் தீர்க்கும் ஈசனை நேசமுடன் பூசனை புரிந்து பாசபந்தங் களைந்து அன்பர்கள் உய்வு பெறுக என்னும் திருமுருக கிருபானந்த வாரியார் கருத்து அறியத்தக்கது.

அகத்தடிமை செய்யும் அந்தணன்றான்
அரிசில் புனல் கொண்டுவந்தாட்டு கின்றான்
மிகத்தளர்வு எய்திக் குடத்தையும் நும்
முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற்படியும்
வருமென்றொரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்து கந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே

(சுந்தரர் தேவாரம் 7:9:6)

என்று சுந்தரரும் புகழ்த்துணை நாயனாரைத் தமது தேவாரத்தில் போற்றியுள்ளார்.

அரிசிற்கரைப்புத்தூர் அழகாபுத்தூர் அளகாபுத்தூர்
சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில் அழகார்புத்தூர்
கிருஷ்ணாபுரம் சாக்கோட்டை எஸ்.ஓ.
வழி கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்-612 401.

Koviloor Digital Library

81. கோட்புலியார்

(13 பாடல்கள்)

பிறந்த ஊர் : திருநாட்டியத்தான்குடி (சோழ நாடு)

குலம் : வேளாளர்

குருபூசை மாதம் : ஆடி

நட்சத்திரம் : கேட்டை

காலம் : சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840-865)

அடல் சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன் (திரு. தொகை – 9:4)

சோழநாட்டில் திருநாட்டியத்தான் குடியில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். சோழ மன்னனின் போர்ப்படைத் தளபதியாய் விளங்கியவர். பகைமன்னர்கள் ஓடி ஒளியும்படி வீரதீரமாகப் போர் புரிபவர். அவரே கோட்புலி நாயனார் என்று இப்பாடல் கூறுகிறது.

நலம் பெருகும் சோணாட்டு நாட்டியத்தான் குடி வேளாண்
குலம்பெருக வந்துதித்தார் கோட்புலியார் எனும் பெயரார்
தலம்பெருகும் புகழ்வளவர் தந்திரியாராய் வேற்றுப்
புலம்பெருகத் துயர்விளைப்பப் போர்விளைத்துப் புகழ்விளைப்பார் (1)

மன்னன் மூலம் கிடைக்கும் பொருள் கொண்டு இறைவன் திருக்கோயில்களில் திருவமுது செய்ய உதவும் நெல்லை மலைபோன்று குவித்து வந்தார். இந்தத் திருப்பணியை நெடுங்காலம் செய்து வந்தார் எனச் செப்புகிறார் சேக்கிழார்.

மன்னவன்பால் பெறும்சிறப்பின் வளம்எல்லாம் மதிஅணியும்
பிஞ்ஞகர்தம் கோயில்தொறும் திருஅமுதின் படி பெருகச்
செந்நெல்மலைக் குவடுஆகச் செய்துவரும் திருப்பணியே
பல்நெடுநாள் செய்துஒழுகும் பாங்குபுரிந்து ஓங்கும்நாள். (2)

ஒருநாள் அரசனின் கட்டளைக்கேற்ப வேற்று நாட்டின்மீது போர் செய்யப் புறப்பட்டார். இறைவனின் திருவமுதுக்காகத் தான் திரும்பி வரும் வரையில் போதுமான அளவிற்கு நெல்லை வைத்துவிட்டு மீதியை மூட்டை செய்தார். தமது சுற்றத்தினரைப் பார்த்து இதிலிருந்து நெல் எடுக்கக் கூடாது; எடுத்தால் அது சிவத்துரோகம் என்று கூறிப்

Koviloor Digital Library

போருக்குப் புறப்பட்டார். இச்செய்திகளைப் பின்வரும் இரண்டு பாடல்கள் மூலம் அறியலாம்.

வேந்தன் ஏவலின் பகைஞர் வெம்முனைமேல் செல்கின்றார்
பாந்தள்பூண்என அணிந்தார் தமக்குஅமுது படியாக
ஏந்தலார் தாம்எய்தும் அளவும்வேண் டும்செந்நெல்
வாய்ந்தகூடு அவைகட்டி வழிக்கொள்வார் மொழிகின்றார். (3)

தம்தமர்கள் ஆயினார் தமக்குஎல்லாம் தனித்தனியே
எந்தையார்க்கு அமுதுபடிக்கு ஏற்றியநெல் இவை அழிக்கச்
சிந்தைஆற் றாநினைவார் திருவிரையாக் கலி என்று
வந்தனையால் உரைத்துஅகன்றார் மன்னவன்மாற் றார்முனைமேல். (4)

(விரையாக்கலி - சிவபெருமானது ஆணை)

அவர் சென்ற சில நாட்களுக்குப் பின் பஞ்சம் வந்தது. உறவினர்கள் இறைவனுடைய திருவமுதுக்கான நெல்லை எடுப்போம். பிறகு நற்காலம் வந்தவுடன் கொடுப்போம் என்று நெல் எடுத்து உண்டனர்.

கோட்புலி நாயனார் வெற்றியுடன் மன்னன் தந்த பொற் குவியலோடு ஊர் வந்தார். தமது சுற்றத்தாரின் செயல்கண்டு சினமடைந்தார்.

தம் தந்தையார், தாயார், உடன்பிறந்தார், மனைவி, சுற்றத்தார், பணியாள் அனைவரையும் வாளால் துணித்தார். அங்கே பிழைத்து இருக்கக்கூடிய ஓர் ஆண்மகவைக் கண்ட காவலன், அய்யனே இக்குழந்தை நெல் உண்ணவில்லை, இதனைக் கொல்லாதீர் என்றான். உடனே கோட்புலி நாயனார் இக்குழந்தை நெல் உண்டவளின் பால் உண்டது என்று அக்குழந்தையையும் வாளால் துணித்தார். அப்போது சிவபெருமான் கோட்புலி நாயனார் முன்தோன்றி அனைவருக்கும் அருள் புரிந்தார்.

சிவத்துரோகம்

பாவங்களில் மிகக் கொடிய பாவம் சிவத்துரோகமாகும். ஈசனுடைய பொருளைக் கவர்ந்துண்பார் கொடிய நரகெய்திப் பன்னெடுங்காலம் பரிதவிப்பார்.

அதனால், கோட்புலி நாயனார், தாய் தந்தையரையும், மனைவி, மைந்தன், சுற்றம் முதலியோரையும் கொன்றார். அது கருணையின்றிச் செய்த செயலன்று. அவர்கள் நரகிடை

Koviloor Digital Library

வீழ்ந்து நலியாவண்ணம் தண்டித்தார். பட்டினி கிடந்து மாள நேரிட்டாலும் சிவனுடைய பொருளைக் கவரக்கூடாது. அவர் புரிந்த கொலை கொலையன்று. உதிரக் கட்டி வந்தவனை மருத்துவன் அறுத்துச் சுடுவான். அது பார்வைக்குக் கொடுந்தொழில்போல் இருப்பினும் நோயாளி மீதுள்ள கருணையால் செய்கின்றான். அறுக்கின்றபோது, நோயாளிக்கு வேதனை விளைந்தாலும், பின்னே பலகாலும் துய்க்கும் பெருவேதனையின்றி நலமுறும். அதுபோல், சிவத்துரோகத்தால் பலகாலம் நரகிடை கிடந்து துன்புறாவண்ணம் அவர்களைத் தண்டித்தார். அதன்படியே அவர்களும் பாவத்தினின்றும் நீங்கிப் பொன்னுலகெய்தினார்கள்.

''குழந்தையைக் கொல்வானேன்? அது அறியாமல் செய்ததுதானே? அதற்கு இது சிவத்துரோகமென்று தெரியாதே?'' என்று ஐயங்கள் நிகழும்.

சிவத்துரோகம் அறிந்து புரியினும், அறியாது புரியினும் தீமை பயக்கும். நெருப்பை யறிந்து மிதித்தாலும் சுடும்; அறியாமல் மிதித்தாலும் சுடும். வயிரத்தை அறிந்துண்டாலும் கொல்லும்; அறியாது உண்டாலும் கொல்லும். ஆதலால், குழந்தை யறியாது உண்டாலும் அதற்குப் பிறவித் துயரைத் தந்து அவ்வினை தீமையைத் தரும். அதனாலன்றோ கருணை மிகுந்த கோட்புலியார் அக் குழவியையுங் கொன்றார் என உணர்க.

கொலையென்பது எல்லாங் கொலையன்று. கொலை புரிந்தான் ஒருவனுக்கு நீதிபதி கொலைத் தண்டனை வழங்குகிறார். நீதிபதிக்குப் பாவம் வருவதில்லை. இந்த நீதிபதி பலபேரைக் கொன்ற பாவி என்று பழியடைவதில்லை. அவர் என்ன கருத்துடன் செய்தார் என்பதை அறிதல் வேண்டும்.

வழியில் வரும் ஒருவனை ஒருவன் வழிமறித்துக் கொன்று அவன்பாலுள்ள பொன்னைக் கவர்ந்து கொண்டான். உலகம் அவனைக் கொலைஞன் என்று பழிக்கின்றது. அரசாங்கத் தாரும் அவனைத் தண்டிக்கின்றனர்.

வழியில் வரும் ஒரு வழிப்போக்கனை இடைமறித்து ஏழு கள்வர்கள் கொல்ல முயன்றார்கள். அவ்வேளை தற்செயலாக அங்கு வந்த ஒருவன், வீரவுணர்ச்சியுடன், கறங்குபோல் சுழன்று, அவ்வெழுவரையுங் கொன்று குவித்து, அவ்

Koviloor Digital Library

வழிப்போக்கனைக் காப்பாற்றினான். இப்போது இவனை உபகாரி என்று புகழ்கின்றது. ஒரு கொலை புரிந்தானைக் கொலைஞன் என்று இகழ்ந்து, ஏழு கொலைபுரிந்தானை உபகாரி என்று புகழ்கின்றது. காரணம் யாது? அக் கொலைகள் செய்தவர்கள் உள்ளக் கருத்தையொட்டி நன்மையும் தீமையும் ஆகின்றன. அதுபோல், கோட்புலி நாயனார் தாய், தந்தை யரையும் மற்ற சுற்றத்தாரையும், சிவத்துரோகத்தினின்று உய்வுபெற்று அவர்கள் நரகுறாது நலமுறக்கடவர் என்ற நல்ல நினைவுடன் புரிந்ததனால் இது கொலையாகாது என உணர்க.

இவ்வரலாற்றைப் படித்து இற்றை ஞான்று கோயிலைப் பாதுகாக்கும் தலைவர்களும், கோயிலில் பணிபுரியும் பரிசனங் களும் நன்கு உணர்ந்து சிறிது கூடக் கோயில் உடைமைகளை உட்கொள்ளாது, நன்னெறி நின்று நலமுறக் கடவர்.

மந்த மதியினர் இவ்வரலாற்றின் உண்மைக் கருத்தை அறியார். கூர்த்த மதியால் நுனித்துணர்வாரே அறிந்து தெளிவு பெறுவர் எனும் வாரியார் கருத்தை அறிக.

அருள்மிகு மங்களாம்பிகை உடனுறை மாணிக்கவண்ணர்
திருக்கோயில் திருநாட்டியத்தான்குடி அஞ்சல் - 610 202
மாவூர் வழி, திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம்

Koviloor Digital Library

82. பத்தராய்ப் பணிவார்

(8 பாடல்கள்)

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன் (திரு. தொகை-10:1)

பத்தராய்ப் பணிவார்கள் இறைபக்தி மிக்கவர்கள். இறைபக்தி உடைய தொண்டர்களை மதிப்பர். அவர்களுக்கு மரியாதை செய்வர். அவர்களைக் கண்டால் வணங்குவர். இனிய சொற்களை இறைபக்தர் களிடம் பேசுவர். அடியார்களைக் கண்டால் தாய்ப்பசுவின் பின் போகும் கன்றுபோல் பின்தொடர்ந்து சென்று இனியவற்றைப் பேசுவார் என்று இப்பாடல் கூறுகிறது.

ஈசனுக்கே அன்பானார் யாவரையும் தாம்கண்டால்
கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனம்மகிழ்வுற்று
ஆசையினால் ஆவின்பின் கன்றுஅணைந்தால் போல்அணைந்து
பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார். (1)

கேடில்லாத அன்பினால் சிவனை வணங்கும் பக்தர்களைக் கண்டால் மகிழ்வர். சிவ வழிபாட்டில் ஈடுபடும் பக்தர்களைக் கண்டால் ஆனந்தப்படுவர். அந்தச் சிவனடியார்களை வணங்குவர். அவர்களின் அருட்பார்வை தன்மீது படும்படி அவர்களுக்குச் சேவைகள் செய்வர். அன்பின் திறத்தால் மேம்பாடு உடையார்க்கு எல்லாம் மேம்பாடு உடையவராக விளங்கினர் என்று இப்பாடல் கூறுகிறது.

தாஅரிய அன்பினால் சம்புவினை எவ்இடத்தும்
யாவர்களும் அர்ச்சிக்கும் படிகண்டால் இனிதுஉவந்து
பாவனையால் நோக்கினால் பலர்காணப் பயன்பெறுவார்
மேவுஅரிய அன்பினால் மேலவர்க்கும் மேல்ஆனார். (2)

இறைவனை வழிபடுவர். இறைவனை வணங்கும் அடியார் களை வழிபடுவர். பொங்கிவரும் அன்போடும் விருப்பத்தோடும் அவர் களைப் பூசிப்பர். பிரமனும், திருமாலும் தேடியும் காணாத சிவனின் திருவடிகளைச் சார்ந்த தவத்தை உடையவர் என்று இந்தப் பாடல் கூறுகிறது.

அம்கணனை அடியாரை ஆராத காதலினால்
பொங்கிவரும் உவகையுடன் தாம்விரும்பிப் பூசிப்பார்
பங்கயமா மலர்மேலோன் பாம்புஅணையான் என்றுஇவர்கள்
தங்களுக்கும் சார்வுஅரிய சரண்சாரும் தவம்உடையார். (3)

இந்த உடலில் செய்யும் செயல்கள் எல்லாம் சிவனையே சாரும் என்று இருந்தவர், காளைக் கொடியுடைய சிவனையே எப்போதும் நினைத்தவர். வெண்குழை அணிந்த சிவனுக்குத் தொண்டு செய்பவர்

Koviloor Digital Library

மீண்டும் பிறவித் துன்பம் அடைய மாட்டார்கள். சிவத் தொண்டர்களின் புகழுக்கு இவ்வுலகமே நிகராகாது என்று சேக்கிழார் செப்புகிறார்.

யாதானும் இவ்உடம்பால் செய்வினைகள் ஏறுஉயர்த்தார்
பாதார விந்தத்தின் பால்ஆக எனும்பரிவால்
காதுஆர்வெண் குழையவர்க்குஆம் பணிசெய்வார் கருக்குழியில்
போதார்கள் அவர்புகழ்க்குப் புவனம்எலாம் போதாவால். (4)

சிவபெருமானின் புகழ்பாடும் கதைகளையே கேட்பவர், இறைவனையே எப்போதும் விரும்புபவர். கங்கையை, பிறைச்சந்திரனை, கொன்றை மலரை விரும்பி அணியும் சிவனின் திருவடிகளைத் தொழுபவர் சிவபதம் அடைவதற்குத் தகுதியுடையவர் என்று இப்பாடல் கூறுகிறது.

சங்கரனைச் சார்ந்தகதை தான்கேட்கும் தன்மையராய்
அம்கணனை மிகவிரும்பி அயல்அறியா அன்பினால்
கங்கைநதி மதிஇதழி காதலிக்கும் திருமுடியார்
செங்கமல மலர்ப்பாதம் சேர்வதனுக்கு உரியார்கள். (5)

பத்தராய்ப் பணிவார்கள் சிவனை வணங்கி உள்ளம் உருகுபவர். இன்பப் பெருக்கால் மகிழ்ச்சி அடைந்து சொல் குழறுபவர். இறைவனை நினைந்து உருகுவதால் பெருகும் கண்ணீரை உடையவர். அந்தக் கண்ணீரால் மார்பில் பூசிய திருநீறும் அழியப்பெற்றவர். மயிர் சிலிர்க்கவும் உடம்பு நடுங்கவும் அன்பு செலுத்துபவர்கள் மெய்க்குணம் உடையவராய் விளங்கியவர் என்று சேக்கிழார் சுவாமிகள் செப்புகிறார்.

ஈசனையே பணிந்துஉருகி இன்பம் மிகக் களிப்பு எய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசுஇலா நீறுஅழித்துஅங்கு அருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம்பித் திடுவார் மெய்க்குணம்மிக்கார் (6)

பத்தராய்ப் பணிவார்கள் எந்த நிலையில் தாம் இருந்தாலும் மன்றினில் ஆடுகின்ற மலர்ப்பாதத்தை ஒருபொழுதும் மறவாதவர்கள் என்றும் இறைவன் மீதான பக்தி உணர்வு குன்றாதவர்கள் என்றும் இப்பாடல் கூறுகிறது.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றுஆடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டர்ஆம் குணம்மிக்கார். (7)

இறைவனுக்கு அடிமைத் தொழில் செய்பவர். தவ வாழ்க்கை வாழ்பவர். குற்றம் நீங்கப் பெற்றவர். பெருமை மிக்கவர். திருவாரூர் வாழும் இறைவனைத் தினமும் தொழுபவர். மேலும் மேலும் எழும் அன்புப் பெருக்கால் சிவனை எண்ணி எண்ணி உருகுபவர் இந்தப் பத்தராய்ப் பணிவார் நாயகர் என்று சேக்கிழார் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

சங்கரனுக்கு ஆளான தவம்காட்டித் தாம்அதனால்
பங்கம்அறப் பயன் துய்ப்பார் படிவிளக்கும் பெருமையினார்
அம்கணனைத் திருஆரூர் ஆள்வானை அடிவணங்கிப்
பொங்கிஎழும் சித்தமுடன் பத்தராய்ப் போற்றுவார். (8)

இறைவனுடைய மணம்மிகு திருவடிகளை அடைய விரும்பி தன் உள்ளம் சிலிர்க்கிறது என்றும் கண்ணீர் பெருகுகிறது என்றும் உள்ளமானது பொய்மையை விலக்குகிறது என்றும் மாணிக்கவாசகர் கூறுவதை இங்கு எண்ணவேண்டும்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துதன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் என்றே
துன்னிய வேடம் தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார். (சா.நா. – ?!)

எந்த நிலையில் இருந்தாலும் எந்தக் கோலம் புனைந்து இருந்தாலும் எல்லாம்வல்ல சங்கரனின் திருவடிகளை மறவாமல் இருப்பதே பொருள் என்ற தெளிவு சாக்கிய நாயனாருக்கு இருந்தது. இதனால்தான் தனது சாக்கியத் துறவுக் கோலத்தை நீக்காமல் அவர் தூய சிவத்தின் மீது தனக்கு இருக்கும் அன்பின் காரணமாக அதனை மறவாமல் இருந்தார். இந்த வரலாற்றை இங்கு ஒப்புநோக்கி அறிக.

பக்தி நெறி இறைவனை அடைவதற்குரிய மிக எளிமையான நெறி ஆகும். பக்தியாகிய அன்பின் பிடிக்குள் இறைவன் அகப்படுகிறான்.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே கடலே
அன்பெனும் குடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளி அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பர சிவமே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

Koviloor Digital Library

83. பரமனையே பாடுவார்

(2 பாடல்கள்)

பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன் (திரு. தொகை-10:1)

அசுரர்களின் முப்புரங்களை எரித்தவர். அணியாகப் பாம்புகளை அணிந்தவர். ஞானம் முதிர்ந்த இடத்து வெளிப்படும் ஒப்பற்ற பொருளாக விளங்குபவர். அனைத்து உலகத்தையும் தன் மாயையால் உருவாக்கியவர். கருவி காரணங்களால் காணப்படாதவர். அப்படிப் பட்ட பரம்பொருளை – பரமனை – பாடுபவர்களின் பெருமைகளை நான் பாடுகிறேன் என்று தெய்வச் சேக்கிழார் கூறுகிறார்.

புரம்மூன்றும் செற்றானைப் பூண்நாகம் அணிந்தானை
உரனில்வரும் ஒருபொருளை உலகுஅனைத்தும் ஆனானைக்
கரணங்கள் காணாமல் கண்ஆர்ந்து நிறைந்தானைப்
பரமனையே பாடுவார் தம்பெருமை பாடுவாம். (1)

வடமொழி, தென் மொழி, மற்றுள்ள மொழிகளிலும் வல்ல வர்கள் உள்ளனர். அவர்கள் உயர்ந்த பாடல்களை இயற்றக் கூடிய வர்கள். எந்தப் பாடல் எழுதினாலும் அம்பலத்தில் கூத்தாடும் இறை வனையே உயர்ந்தவராகப் பாடுவார்கள். உள்ளம் உருகிப்பாடுவார்கள். பன்றியான திருமாலும், அன்னப்பறவையான பிரமாவும் அடிமுடி காணமுடியாது தவித்தனர். ஆகவே சிவனே உயர்ந்தவர் என்று கூறி சிவப்பரம்பொருளைப் பாடுபவர்களே பரமனைப்பாடுவார் என்று அழைக்கப்படுவார்கள் என்று தெய்வச் சேக்கிழார் கூறுகிறார்.

தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருள்ஆக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்உருகிப் பாடுவார்
பன்றியுடன் புள்காணாப் பரமனையே பாடுவார் (ப.பா.பு.–2)

பக்தி நெறியில் இருக்கின்ற அன்பர்களுக்கு எல்லாம்வல்ல இறைவனே முக்கியம் ஆவான். பக்தர்களாகவும் பாடல்கள் புனையும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்ட நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனை மட்டும் போற்றுவர். புகழ்மாலையை இறைவனுக்குச் சாற்றுவர்.

தம் வயிற்றுப் பிழைப்பிற்காக வேண்டி அரசர்களையோ அந்தணர்களையோ நிலப் பிரபுக்களையோ நிலக்கிழார்களையோ

Koviloor Digital Library

பெரும் செல்வர்களையோ போற்றிப்பாட வேண்டிய அவசியம் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் சித்தர்களுக்கும் ஞானிகளுக்கும் கிடையா. எனவேதான் மேற்குறிப்பிட்ட சான்றோர்கள் எல்லாம் பரமனை மட்டுமே பாடுபவர்களாகவும் பரம்பொருளை மட்டுமே சிந்திப்பவர்களாகவும் இருந்தனர்.

ஆனால் உலகியல் புலவர்களோ கவிஞர்களோ பரமனை மட்டுமே பாடுவது கிடையாது. வயிற்றுப் பிழைப்புக்காக அவர்கள் எல்லோரையும் பாடுவர். பரமனையும் பாடுவர் மாமனிதர்களையும் பாடுவர்.

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான்
கற்பித் தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தான்
இரட்சித் தானா?
அல்லைத்தான் ஆரைத்தான் நோவத்தான் (ஒருசொல் இல்லை)
ஐயோ எங்கும்
பல்லைத்தான் காட்டத்தான் பதுமத்தான் புவியில்தான்
பண்ணி னானே

எனும் தனிப்பாடல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

நம்மாழ்வார் மானுடம் பாடாமை

பன்னிரு ஆழ்வார்களுள் மிகுந்த சிறப்பு பெற்றவர் நம்மாழ்வார். அவர் பரமனை மட்டுமே பாடும் மனத்தினர். அவர் நான் பரம்பொருளைத் தவிர வேறு எவரையும் பாட மாட்டேன் என்கிறார். என் நாவால் ஓர் இனிய கவிதையை யான் மனிதர்கள் யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்கிறார். இதைச் சொன்னால் விரோதம் வரும் ஆனாலும் நான் சொல்கிறேன் என்கிறார்.

சொன்னால் விரோதம்இது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
என் நாவில் இன்கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தெனா என்று வண்டு முரல் திருவேங்கடத்து
என்ஆணை என் அப்பன் எம்பெருமான் உளனாகவே (நா.தி.பி.–3209)

தம் வாய் கொண்டு மானுடர் எவரையும் பாடாத மாண்பு அவருக்கு இருந்தது. அதனால்தான் அவர் பின்வருமாறு பாடினார்.

வாய்கொண்டு மானுடம் பாடவந்த கவியேன் அல்லேன்
ஆய் கொண்ட சீர்வள்ளல் ஆழிப்பிரான் எனக்கே உள
சாய் கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டை
நீ கண்டுகொள் என்று வீடும் தரும் நின்று நின்றே (நா.தி.பி.–3217)

எந்த ஊரில் எங்குப் பிறந்து வாழ்ந்தாலும் பொருட்

Koviloor Digital Library

செல்வம் படைத்த பொய்யர்களையும் பொய்ப் பொருளையும் பாடாமல் பரம்பொருளைப் பாடும் பக்தி உள்ளம் கொண்டு மெய்ப்பொருளை மெய்யாகப்பாடும் அருட்புலவர்கள் எல்லோரும் பரமனையே பாடும் அடியார் ஆவர். ஓங்காரேசுவரனைச் சொல் லாலும் இசைக் கருவிகளாலும் பாடும் பாடகர்கள், இன்னிசை வாத்தியக் கலைஞர்கள் ஆகிய சிவபக்தர்கள் எல்லோரும் பரமனையே பாடுவார் ஆவார் எனும் டாக்டர் சிவப்பிரியா 'சுந்தரர் போற்றும் அறுபத்து மூவர்' எனும் நூலில் கூறியுள்ள கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பரமனையே பாடுவார் ஒருவர் மீது ஒருவர்க்கு அன்பு ஏற்பட்டு அது அதிகரிக்குமாயின் அன்புடையாரைப் புகழ்ந்துரைக் காமல் இருக்க முடியாது. சூடு அதிகமானால் பால் பொங்கி வழிகின்றதுபோல் என அறிக. புகழ்ந்துரை பாடலாகின்றது. ஆகவே இறைவனிடம் அளவற்ற அன்பு மேலிடுகின்றபொழுது இறைவனை அகங்குழைந்து பாடுகின்றார்கள். பாடும் பணியே பணியா அருள்வாய் என்கின்றார்கள். பாடுகின்ற பனுவ லோர்கள் தேடுகின்ற செல்வமே என்கின்றார் தாயுமானவர். பாடுகின்றபோது கருவி கரணங்கள் ஒடுங்குகின்றன. பக்தி யுடன் பரமனைப் பாடினால் பவப்பிணி ஓடும்; பரகதி கூடும்.

பரமனையே பாடுவார் என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலை. சிலர் மனிதரையும் பொருள் வேண்டிப் பாடுகின்றனர். சிலர் காமவெறி கொண்டு மகளிரையும் புகழ்ந்து பாடுகின்றனர். அவ்வாறு அழிந்துபடுகின்ற மனிதர்களைப் பாடாமல் அழிவற்ற ஆண்டவனையே பாட வேண்டும் என்ற கிருபானந்த வாரியாரின் விளக்கம் இங்குக் குறிப்பிட்டத்தக்கது.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே (7:34:1)

எனும் சுந்தரர் பாடலை உணர்க.

Koviloor Digital Library

84. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

(1 பாடல்)

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
(திரு. தொகை-10:2)

நான்முகன் முதலான காரணக் கடவுளர் ஐவர்க்கும் தலையானவர். ஐந்து தாமரையின் மீது அமரும் ஐவரையும் கடந்து மேல் சென்றவர். நிறைவுப் பொருளாய் விளங்குபவர். உட்பொருளாய், சுயப் பேர் ஒளியாய் விளங்குபவர். சிவஞான ஒளி வீசி விளங்கும் நாதாந்தமாய் விளங்குபவர். அப்படிப்பட்ட சிவனை யார் வணங்குகிறார்களோ, அவர்களே, சிறந்த சிவபக்தர்கள். அந்தச் சிவன்மீது மனத்தைச் செலுத்திய அன்பர்களைச் "சித்தத்தைச் சிவன் பாலே வைத்தவர்கள்" என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

காரணபங் கயம்ஐந்தின் கடவுளர்தம் பதம்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்துஇலங்கு நாதாந்தத்
தாரணையால் சிவத்துஅடைந்த சித்தத்தார் தனிமன்றுள்
ஆரணகா ரணக்கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தார். (1)

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

உடலானது மொத்தம் 96 தத்துவங்களால் ஆனது. அவற்றுள் ஒன்று சித்தம் ஆகும். இது நான்கு அந்தக் கரணங்களுள் ஒன்றாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன அந்தக் கரணங்கள் 'ஆகும்.' சித்தத்தைப் பொது நிலையில் நாம் மனம் என்றும் புத்தி என்றும் உள்ளம் என்றும் நெஞ்சம் என்றும் கொள்ளலாம்.

புத்தி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. (திருமந்திரம் விநாயகர் காப்பு)

ஐந்து கரங்கள், ஆனை முகம், நிலவின் பிறையைப் போன்ற பற்கள் ஆகிவற்றைப் பெற்றவரும் சிவபெருமானின் மகனாரும் ஞானக் கொழுந்தாய்த் திகழுபவருமாகிய பரம்பொருளைத் தன்னுடைய

Koviloor Digital Library

புத்தியில் (புந்தியில்) வைத்துப் போற்றுவதாகத் திருமூலர் இப்பாடலில் குறிப்பிடுகிறார்.

உள்ளம்

இறைவன் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் குடி கொண்டுள்ளான். ஆகவே உள்ளமே மிகப்பெரும் கோயிலாகத் திகழுகிறது. ஊன் உடம்பே அரிய பெரிய ஆலயமாக அமைந்துள்ளது. வள்ளல்பிரான் ஆகிய இறைவனுக்கு மனிதனின் வாயே கோபுர வாசலாய் இருக்கின்றது. தெள்ளத் தெளிந்த ஞானிகளுக்கு இந்தச் சீவனே சிவலிங்கமாய் உள்ளது. கள்ளப் புலன்களாம் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் மணி விளக்குகளாக ஒளிவீசிக் கொண்டுள்ளன எனத் திருமூலர் பின்வரும் பாடலில் கூறுவார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே (திரு. 1823)

தாயுமானவப் பெருமான் நெஞ்சகமே கோயில் என்றும் நினைவே சுகந்தம் அன்பே பூசனை நீர் என்றும் இப்பூசையை ஏற்க வர வேண்டும் என்றும் இறைவனிடம் வேண்டுகிறார்.

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே (பராபரக் கண்ணி–151)

சித்தம் போக்கு சிவம் போக்கு எனும் பழமொழியின் உட்பொருளை உணர்வுடையார் உணர்க.

உள்ளத்தின் உள்ளே நின்று தனது சித்தம் எல்லாம் வல்ல சிவ பெருமானோடு ஆடுவதைப் பின்வருமாறு மாணிக்கவாசகர் கூறுவார்.

உள்ளத்தான் நின்று உச்சியளவும் நெஞ்சாய்

சித்தம் சிவனொடும் ஆட ஆட (திருவாசகம்–திருப்பொற்சுண்ணம்)

பொது நீக்கித் தனை நினைய வல்லார்க்கு என்றும் தனித் துணை எல்லாம் வல்ல சிவபெருமான் என்பதைத் திருநாவுக்கரசு சுவாமிகளும் கூறியுள்ளார்.

இறைவன் சித்தத்துள் இருப்பதால்தான் திருவள்ளுவர் மனத்தின் தூய்மையைப் பல இடங்களில் போற்றுவார்.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத் தறன்
ஆகுல நீர பிற (குறள் : 34)

Koviloor Digital Library

மனமானது செம்மைப்பட்டுவிட்டால் அங்கு இறைவன் வந்து குடியேறுவான். எனவே அவனை அருச்சிப்பதற்கான மந்திரங்களோ தேவையில்லாமல் போய்விடுகின்றன.

மனமானது செம்மை அடைந்துவிட்டால் வாயுவை மனிதன் உயர்த்த வேண்டிய அவசியம் கிடையாது. மேலும் வாசியை நிறுத்த வேண்டிய தேவையும் கிடையாது என்று கூறுகிறார் அகத்தியர்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மை யாமே.

(அகத்தியர் ஞானம் : 1)

விளக்கம்

கருவி கரணங்கட்குக் காரணமான ஐந்து பத்ம பீடத்தில் விளங்கும் பிரமா, திருமால், உருத்திரர், மகேசுரர் சதாசிவர் என்ற ஐவர்களுடைய பதங்களையும் கடந்த 'நிலையில் ஒளிர்வது சிவசோதி. அச்சோதி நிலையையுந் தாரணையால் கடந்து சிவத்தின்பால் திருவுள்ளம் வைத்தவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவராவர்.

இடை பிங்கலை வழியே உஸ்வாச நிஸ்வாசமாகச் சென்று மீளும் பிராண வாயுவையடக்கி, முதுகுத்தண்டின் இடையே ஓடும் வெண்மை நிறமாகிய 'தாமரை நூல் போன்று நுண்ணி தான சுழுமுனை நாடி வழியே பிராண வாயுவைச் செலுத்தி, அதனை நிறுத்தி, அதனால் நெடுங்காலமாகக் கறங்குபோல் ஓடியலைகின்ற மனதை எதையும் நினைக்க ஒட்டாது அடக்கி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறாதாரங்களையும் அகக்கண்ணால் கண்டு, அவைகளில் வீற்றிருக்கின்ற அதிதேவதைகளாகிய 'விநாயகர், பிரமா, திருமால், உருத்திரர், மகேசுவரர், சதாசிவம் என்ற மூர்த்திகளைத் தியானித்து அவர்களை நேர்முகஞ் செய்து, அவை கடந்து, பிரமரந்திரம் சென்று, அஜபாநலமுற்று, அப்பிரமந்திரமும் கடந்து, அதற்கு மேல் கீழ் நோக்கியுள்ள ஆயிரம் இதழ்த் தாமரை முகையை (சகஸ்ராரம்) சோதிபத உச்சரிப்பால் உதிக்கும் சிவ சூரியனால் மலரச் செய்து, அத்தாமரைப் பூவின் நுனியில் உள்ள சந்திர மண்டலத்தைச் சுருக்குதலினால் மூலாக்கினியை, அக்கினி பீஜ மந்திரத்தால்

Koviloor Digital Library

எழுப்பி, நாடி சக்கரத்தைப் பிளந்து கொண்டு அவ்வக்கினி யாலே சந்திர மண்டலத்தை இளகச் செய்து, அங்குப் பொங்கி வரும் அமிர்தத்தை எல்லா நாடிகளிலும் நிரப்பி, அங்கு உண்டாகிய சுகோதயத்தில் ஞானாமிர்தமுண்டு, சூரியனொளியில் நட்சத்திரங்கள் அடங்குமாறுபோல், தன்னிடமுண்டாகிய சிவஞான வொளியில் சூரிய சந்திர ஒளி அடங்க அருட்பெருங் கடலாடி அச்சிவவொளியில் அசைவற நிற்பவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர் என உணர்க'' என்னும் கிருபானந்த வாரியாரின் விளக்கம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

சித்தம் சிவத்துடன் ஒன்றிவிட்டால் சிவ அனுபவம் வாய்க்கும்.

முத்தி என்பது முன்னுறு சாதனம்

சித்தி என்பது சேர்ந்த நிலை அனுபவம்

என்ற அருட்பிரகாச வள்ளலாரின் அருள்வாக்கை உணர் வுடையார் உணர்வர். சித்தம் சிவத்துடன் ஒன்றுவதே சித்தி.

Koviloor Digital Library

85. திருவாரூர்ப் பிறந்தார்

(2 பாடல்கள்)

திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் (திரு. தொகை-10-2)

அருவமானவர், உருவமானவர். எல்லாப் பொருளுமாய் விளங்குபவர். மணம் நிறைந்த கூந்தலை உடைய உமையம்மையின் கணவர். அத்தகைய சிவன் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருவாரூரில் பிறந்தவர்கள் பாக்கியசாலிகள். அவ்வூரில் பிறந்த தொண்டர்களின் பெருமையை என்னாலே உரைப்பது என்பது இயலாத காரியம். பெருமைமிக்க தொண்டர்கள் உறையும் ஊர் திருவாரூர் என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

அருஆகி உருஆகி அனைத்தும்ஆய் நின்றபிரான்
மருஆரும் குழல்உமையாள் மணவாளன் மகிழ்ந்தருளும்
திருஆரூர்ப் பிறந்தார்கள் திருத்தொண்டு தெரிந்துஉணர
ஒருவாயால் சிறியேனால் உரைக்கல்ஆம் தகைமையதோ. (1)

திருவாரூரில் பிறந்தவர்கள் சிறப்புடையவர்கள். திருக்கயிலையில் வீற்று இருக்கும் சிவகணங்களே திருவாரூரில் தொண்டர்களாய்ப் பிறந்துள்ளனர். ஆகவே செருக்கை அடக்கி, ஐம்பொறிகளை அடக்கி திருவாரூர்ச் சிவனடியார்களை வணங்க வேண்டும். அப்படி வணங்கு பவர்களே உயர்நிலையை அடைவர் என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலிலே கூறுகின்றார்.

திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கியசீர்த் திருஆரூர்ப் பிறந்தார்கள் ஆதலினால்
தருக்கியஐம் பொறிஅடக்கி மற்றுஅவர்தம் தாள்வணங்கி
ஒருக்கியநெஞ்சு உடையவர்க்கே அணித்துஆகும் உயர்நெறியே (2)

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மணியாய் மலராய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

எனும் அருணகிரிநாதர் பாடலையும்,

உளன் எனில் உளன் அவன் உருவம் இவ்வுருவுகள்
உளன் அலன் எனில் அவன் அருவம் இவ்வுருவுகள்
உளன் என அலன் என இவை குணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே

எனும் நம்மாழ்வார் பாடலையும் உணர்வுடையார் உணர்வார்.

Koviloor Digital Library

திருவாரூர்ச் சிறப்பு

திருவாரூரில் பிறந்த அனைவரும் சிவகணங்கள் ஆவர். திருவாரூரில் பிறந்தாலே முத்தி என்று கூறுவர்.

திருவாரூரில் இருந்து ஒருமுறை அதன் அருகில் உள்ள மணலி என்னும் ஊருக்குச் சிவபெருமான் எழுந்தருளினார். எல்லாக் குலத் தினரும் அவரை வணங்கினர். அவர்களோடு, நமிநந்தி அடிகளும் வணங்கினார். பிறகு நமிநந்தி அடிகள் ஏமப்பேறூர் வந்தார். அந்த இரவுப்பொழுதில் அவர் தமது வீட்டின் வாயிலில் அயர்ந்து உறங்கினார். ஏன் வெளியே படுத்துள்ளீர் உள்ளே வந்து வழக்கமாகச் செய்யும் சிவ பூசையைச் செய்துவிட்டு பிறகு உணவு உண்டு உறங்குக என அவர் மனைவி கூறினார். உடனே நமிநந்தியடிகள் மணலியில் எல்லோருடன் நான் இறைவனை வணங்கினேன். எனவே என் தூய்மை குன்றியது; குளித்த பிறகே பூசை செய்யவேண்டும்; குளிர் நீர் கொண்டுவா என்றார். அவரது மனைவி நீர் கொண்டு வருவதற்குள் அயர்ச்சி மேலிட உறங்கிவிட்டார். அப்போது அவர் கனவில் தோன்றிய இறைவன் திருவாரூரில் தோன்றியோர் ஞான மறையோராய் இருக்கும் நமது கணங்களே என்று அருளினார். இதைத் தெய்வச் சேக்கிழார் ஒரு பாடலில் கூறுவார்.

திருவாரூரில் தோற்றம் பெற்ற அடியார்கள் எல்லாம் சிவ கணங்கள் ஆவர் என்னும் செய்தியை எல்லாம் வல்ல சிவபெருமான் நமிநந்தியடிகளுக்கு உணர்த்தி அருளினார். இதனை நமிநந்தியடிகள் வரலாற்றில் கண்டோம்.

தெய்வப் பெருமாள் திருஆரூர்ப் பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத்து அனைய மணிகண்டர் வடிவே ஆகிப் பெருகுஒளியால்
மொய்வைத்து அமர்ந்த மேனியர்ஆம் பரிசு கண்டு முடிகுவித்த
கைவைத்து அஞ்சி அவனிமிசை விழுந்து பணிந்து களிசிறந்தார். (ந-அ.பு. 29)

தமிழ் விரகராம் திருஞான சம்பந்தர் திருவாரூரின் பெருமை யினை நன்கு அறிந்தவர் அதனால்தான் திருவாரூரின் எல்லையை அடைந்தவுடன் மலர்கள் தூவி வழிபட்டார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவார்.

பொங்கி சிந்தை விருப்பின் வெள்ளம்
பொழிந்து புவிமேல் பொலிவ தென்ன
எங்கும் குளிரொளி வீசு முத்தின்
இலங்கு சிவிகை இழிந்தருளிச்
செங்கைநிறை மலர் கொண்டு தூவித்
திருவிருக்குக் குறள் பாடி ஏத்தித்
தங்கள் பிரான் அரசாளும் ஆரூர்
தனைப்பணி உற்றார் தமிழ் விரகர் (தி.ச.பு. 500)

Koviloor Digital Library

திருவாரூர் : அரு ஊர் ஆரூர் என வந்தது. இத்தலம் சிவலோகம் எனப்பொலிவது. திருத்தொண்டத் தொகை விளைந்த ஞான வயல் என்கிறார் திருமுருக கிருபானந்த வாரியார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தில்லையில் அடைந்து எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்க முற்பட்டார். அப்போது சிவபெருமான் அசரீரியாக, 'பொன்னி மடுத்த நீள் வண்ணப் பண்ணை ஆரூரில் வருக நம்பால்' என அருளிச் செய்தார். இதன் மூலம் திருவாரூரின் பெருமையை உணரலாம்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் 11 பாடல்களிலும் இறுதியில் திரு வாரூரின் சிறப்பைச் சொல்லுவார். திருவாரூர் மனுநீதிச் சோழன் ஆண்ட தலம். சோழர்களின் தலைநகரங்களில் ஒன்று. திருவாரூர் தேர் அழகு.

''அடியார்களை வணங்காமல் சென்ற சுந்தரரும் அவனை வலிய வந்து ஆட்கொண்ட சிவபெருமானும் அடியார் கூட்டத் துக்குப் புறம்பு'' என்று விறன்மிண்டர் சொன்னபிறகு நம்பியாரூரருக் குத் திருவாரூர் தியாகேசப் பெருமான் தம் திருக்கோயிலில் இரண் டாவது ஆவரணத்தின் மதிற்சுவரையொட்டிய வடக்கு வாயிலில் காட்சியளித்தார். அதனையறிந்த விறன்மிண்டர் சினங்கொண்டார். ''இனி திருவாரூரில் அடியெடுத்து வைப்பதில்லை!'' என்று சூளுரைத் தார். தம் மனைவியை அழைத்துக்கொண்டு திருவாரூரின் வடக்கே இருக்கின்ற புத்தாற்றங்கரையில் குடிபுகுந்தார். அங்கு ஒரு பந்தல் அமைத்துச் சிவனடியார்களை உபசரித்தார். அங்கு வரும் அடியார் யாராவது திருவாரூர் மண்ணை மிதித்ததாகச் சொன்னால் அவ்வடி யாரின் காலைத் தமது மழுவால் வெட்டுவதாகவும் சூளுரைத்தார்.

ஒருநாள் திருவாரூர் தியாகேசப் பெருமானே, சிவனடி யாராய் மாறி, அவரிடம் வந்து, ''யாம் இருப்பது திருவாரூர்'' எனக் கூறினார். உடனே விறன்மிண்டர் தமது சூளுரைக்கேற்ப அச்சிவ னடியாரின் கால்களை வெட்ட மழுவேந்தித் துரத்த, தியாகேசர் முன்னே ஓட, நாயனார் அவரைப் பின்தொடர்ந்து ஓடினார். இருவரும் திருவாரூர் எல்லையை அடைந்தனர். அப்போது சிவனடியார் வேடத்தில் இருந்த சிவபெருமான் 'வந்தோம் இப்பால்' என்றார். தமது சூளுரை தோல்வி பெற்றதை அறிந்த விறன்மிண்டர் தமது கால்களையே வெட்டிக்கொண்டார். உடனே சிவபெருமான் காட்சி யளித்தார். இது திருவாரூர் தல வரலாறு ஆகும்.

திருவாரூர் கோயில் மதிற்சுவரை ஒட்டிச் சுந்தரருக்குத் தியாகேசப் பெருமான் காட்சியளித்த இடம். ஒட்டுத் தியாகேசர் கோயில் என்றும், விறன்மிண்டர் பந்தல் அமைத்திருந்த இடம் ஆண்டிப் பந்தல் என்றும், இறைவன் 'வந்தோம் இப்பால்' என்று விறன்மிண்டரிடம் குறிப்பிட்ட இடம் 'வெண்டாம்பாலை' என்றும் இக்காலத்தில் வழங்கப்படுகின்றன.

இவ்வரலாறு சேக்கிழார் கூறாத வரலாறாகும்.

Koviloor Digital Library

86. முப்போதும் திருமேனி தீண்டுவார்

(3 பாடல்கள்)

முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன் (திரு. தொகை-10–3)

எப்போதும் உயிர்களுக்கு இனியவராய் விளங்குபவர் சிவபெருமான். அந்தச் சிவபெருமானுக்குச் சிவாகம ஞான நெறிப்படி தொண்டு செய்யும் தொண்டர்கள் சிறந்தவர்கள் ஆவார்கள். சிவபெருமானின் மீது வைத்த முழுமையான பற்றினால் மூன்று காலத்திலும் அர்ச்சனை, ஆராதனை செய்பவர்கள் ஆதிசைவரான முனிவர்கள் என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

எப்போதும் இனியபிரான் இன்அருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக்கு அப்போதும் ஆர்வம்மிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதல்சைவர் ஆம்முனிவர். (1)

ஆராய்ந்து பார்த்தால் சிவ அர்ச்சனை, ஆராதனையில் ஈடுபடும் மறையோர்கள் உயர்ந்தவர்கள் ஆவார்கள். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களிலும் வழிவழியாகச் சிவத் தொண்டினைச் செய்து வருபவர்கள் அந்தச் சிவமறையோர் குலத்தினர் ஆவர். சிவனது திருமேனி தீண்டி வழிபட்டு அர்ச்சனை ஆராதனைகள் செய்யும் மறையோர்களின் புகழினை என்னால் எடுத்துச் சொல்வது எளிதன்று என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலில் கூறுகின்றார்.

தெரிந்துஉணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வருங்காலம் ஆனவற்றின் வழிவழியே திருத் தொண்டின்
விரும்பியஅர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே உரியன அப்
பெருந்தகையார் குலப்பெருமை யாம்புகழும் பெற்றியதோ?
(2)

திருமாலுக்கும், நான்முகனுக்கும் அகப்படாத இறைவன் ஞான மானவன். வேதங்களின் சுருக்கமானவன். பெருமையுடைய எம்பெருமான் சிவன். அந்தச் சிவனை மூன்று காலங்களிலும் வழிபடுகின்ற மறையோரின் தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தொழுகின்றேன். அத்தகையோரின் திருவடிகளை வணங்கி முழுநீறு பூசிய முனிவரின் புராணத்தைக் கூறப்போகின்றேன் என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

Koviloor Digital Library

நாரணற்கும் நான்முகற்கும் அரிய ஒண்ணா
நாதனை எம்பெருமானை ஞானம் ஆன
ஆரணத்தின் உட்பொருள்கள் அனைத்தும் ஆகும்
அண்ணலைஎண் ணியகாலம் மூன்றும் அன்பின்
காரணத்தால் அர்ச்சிக்கும் மறையோர் தங்கள்
கமலமலர்க் கழல்வணங்கிக் கசிந்து சிந்தைப்
பூரணத்தால் முழுநீறு பூசி வாழும்
புனிதர்செயல் அறிந்தவா புகலல் உற்றேன். (3)

சிருட்டி காலத்திலே அநாதி சைவராகிய சதாசிவ மூர்த்தியின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற ஐந்து திருமுகங்களினின்றும் கௌசிகர், காசிபர், பரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்ற ஐந்து முனிவர்கள் அவதரித்தார்கள். அவர்களுடைய மரபினர் சிவவேதியர் என்றும் ஆதி சைவர் என்றும் சொல்லப் பெறுவர்.

இவர்களுள்ளே சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசார்ய அபிஷேகங்களைப் பெற்றவர்களே சிறந்தவர்கள். பூசை முதலிய செய்யப்பெரிதும் உரியவர்கள். பரார்த்தப் பிரதிட்டை, பரார்த்த பூசை செய்வதற்கு அவர்களே உரியவர்கள். மற்றவர்கள் உரியவர்கள் அல்லர். ஆதலின் அவர்களே வேதாகமங்களை ஓதி ஆலயங்களில் சிவலிங்கப் பெருமானை முப்போதும் தீண்டிப் பூசிக்க எப்போதும் உரியவர்கள் என உணர்க என்ற திருமுருக கிருபானந்த வாரியாரின் விளக்கத்தை அறிக.

மெய்ப்போத நெறி

கைவிளக்கின் பின்னே போய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னே போய் மெய்காண்பது எந்நாளோ? (45:9:1)
பொய்கண்டார் காணாப் புனிதம் எனும் அத்வைத
மெய்கண்ட நாதன் அருள் மேவுநாள் எந்நாளோ? (45:2:4)

என்கிறார் தாயுமானவர்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையு மன்றே (4:76:2)

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணியி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே! (4:76:4)

விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே (5:90:10)

என்ற அப்பர் பாடல்களின் கருத்தை உணர்வுடையார் உணர்க.

ஆர்வம் உடையவர் காண்பர் அரன் தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணை அடி
பாரம் உடையவர் காண்பார் பவம் தன்னை
கோர நெறி கொடு கொங்கு புக்காரே (273)

உயிர்க்கு உயிராய் நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கு ஒளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறும் ஆவாகனம் புறப்பூசை
செயிற்கடை நேசம் சிவபூசை ஆமே (1444)

கிரியையே யோகங்கள் கிளர் ஞான பூசை
அரிய சிவன் உருஅமரும் அரூபம்
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத்து உயர் பூசையாமே (1448)

உற்று நின்றாரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றும் தெரிந்து அறிவாரில்லை
பத்திமையாலே பணிந்து அடியார் தொழ
முத்திகொடுத்து அவர் முன்பு நின்றானே (284)

கண்டேன் கமழ்தரு கொன்றையினான்அடி
கண்டேன் கரி உரியான்தன் கழல்இணை
கண்டேன் கமலமலர் உறைவான் அடி
கண்டேன் கழல் அது என் அன்பினுள் யானே (285)

எனும் திருமூலர் பாடல்களை அறிவுடையார் அறிக.

சித்தம் தெளிவீர்காள் அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ முத்தி ஆகுமே
பிறவி அறுப்பீர்காள் அறவன் ஆரூரை
மறவாது ஏத்துமின் துறவி ஆகுமே. (1.91-,2)

எனும் திருஞானசம்பந்தரின் திருவாக்குகளை உணர்வுடையோர் உணர்க.

Koviloor Digital Library

87. முழுநீறு பூசிய முனிவர்

(6 பாடல்கள்)

முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன் (திரு. தொகை-10-3)

எல்லாவற்றுக்கும் ஆதாரமானவர். எல்லாப் பொருள்களும் ஆகி நின்றவர். கங்கையை அணிந்த சடையை உடையவர். காதில் பொருந்திய குழையை உடையவர். அந்தச் சிவன் உரைத்த உரையினுள் கைக் கொள்ளத் தகாதது என இருப்பது அகற்பம். இதை நீக்கி, கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்பனவற்றையே கைக்கொள்வர் சிவனடியார். மூன்று வகைப்பட்ட காமம் முதலிய குற்றங்களை நீக்கும் திறம் உடையது திருநீறு. அந்தத் திருநீறு நம் இருவினைகளை அழிக்கும் சக்தி கொண்டது என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

ஆதார மாய்அனைத்தும் ஆகிநின்ற
அம்கணன் எம்பெருமான் நீர் அணிந்த வேணிக்
காதுஆர்வெண் திருக்குழையான் அருளிச் செய்த
கற்பம்அநு கற்பம்உப கற்பம்தான்ஆம்
ஆகாதுஎன்று அங்குஉரைத்த அகற்பம் நீக்கி
ஆம்என்று முன்மொழிந்த மூன்று பேத
மோகாதி குற்றங்கள் அறுக்கும் நீற்றை
மொழிவதுநம் இருவினைகள் கழிவதுஆக. (1)

உலகம் உய்ய திருவம்பலத்தில் கூத்தாடுபவர் சிவபெருமான். அந்தச் சிவனின் திருவுள்ளம் மகிழ நாம் பால் முதலியவற்றால் திரு மஞ்சனம் ஆட்டுகிறோம். நோய் இல்லாத பசுவாக இருந்து கன்றை ஈனும் பசு பெருமைக்குரியது. அந்தப் பசு இடும் சாணத்தைச் சத்தியோசாதம் எனும் மந்திரம் சொல்லி எடுக்க வேண்டும். அந்தச் சாணத்தைச் சிவஅக்னி எனப்படும் யாகசாலைத் தீயில் பக்குவமாக இட்டு எரித்துத் தூய நீறாக்கிய (சாம்பலாக்கி) அந்தத் திருநீற்றிற்குப் பெயர் கற்பம். அத்தூய நீறினைச் சிவநாமம் சொல்லி உடலில் பூசிக் கொள்ளவேண்டும். திரு நீற்றின் மறுபெயர் கற்பம் என்று சேக்கிழார் கூறுகிறார்.

Koviloor Digital Library

அம்பலத்தே உலகுஉய்ய ஆடும் அண்ணல்
உவந்துஆடும் அஞ்சினையும் அளித்த ஆக்கள்
இம்பர்மிசை அநாமயமாய் இருந்த போதில்
ஈன்றுஅணிய கோமயம்மந் திரத்தினால் ஏற்று
உம்பர் தொழ எழும்சிவமந்திரஓ மத்தால்
உற்பவித்த சிவாங்கிதனில் உணர்வுக்குஎட்டா
எம்பெருமான் கழல்நினைந்துஅங்கு இட்ட தூநீறு
இது கற்பம்என்றுஎடுத்துஇங்கு ஏத்தல் ஆகும். (2)

(ஆமயம்-நோய். அநாமயம் – நோயின்மை என்பது பொருள்.)

தில்லை அம்பலத்தில் உமாதேவியார் காணும்படி கூத்தாடுபவர் சிவன். சிவஆகம விதிப்படி காட்டிலே செல்ல வேண்டும். அங்கு உலர்ந்த பசுஞ்சாணத்தைக் கொணர வேண்டும். அந்த உலர்ந்த பசுஞ்சாணத்தை நுண்மையான பொடியாக ஆக்க வேண்டும். பிறகு பசுமாட்டின் கோமியம் எனப்படும் கோசலத்தை விட்டுப் பிசைந்து மந்திரம் சொல்லி உருண்டை பிடிக்க வேண்டும். பிறகு அதனை ஓமத்தீயில் இட்டு வெந்தபின் எடுத்துத் தூள் ஆக்கி கைக்கொள்ளும் அந்தச் சாம்பல் திருநீறு ஆகும். இந்தத்திருநீறே 'அநுகற்பம்' என்று சேக்கிழார் இப்பாடலில் கூறுகின்றார்.

ஆரணியத்து உலர்ந்தகோ மயத்தைக் கைக்கொண்டு
அழகுற நுண்பொடிஆக்கி ஆவின் சுத்த
நீர்அணிவித்து அத்திரமந் திரத்தினாலே
நிசயமும்உறப் பிடித்துஓம் நெருப்பில் இட்டுச்
சீர்அணியும் படிவெந்து கொண்ட செல்வத்
திருநீறாம் அநுகற்பம் தில்லை மன்றுள்
வார்அணியும் முலைஉமையாள் காண ஆடும்
மாணிக்கக் கூத்தர் மொழி வாய்மை யாலே. (3)

பசுக்கள் மேயும் காடுகளில் மரங்கள் உராய்வதால் உண்டான தீயால் ஏற்படும் சாம்பல் ஒருவகையாகும். பசுக்கள் தங்கும் கொட்டகைகள் தீப்பற்றும் போது ஏற்படும் சாம்பல் ஒருவகையாகும். செங்கற்களைச் சுடுவதால் ஏற்படும் சாம்பல் ஒருவகையாகும். இந்தச் சாம்பல்களை ஒன்று சேர்க்காமல் தனித்தனியாக வைத்துப் பசுவின் கோமியத்தால் பிசைந்து ஓமத்தீயில் இட்டுச் சிவமந்திரம் சொல்லி வெந்தபின் எடுக்க வேண்டும். இத்தகைய திருநீறு உபகற்பம் என்று சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

Koviloor Digital Library

அடவிபடும் அங்கியினால் வெந்த நீறும்
ஆனிநிலைகள் அனல் தொடக்க வெந்த நீறும்
இடவகைகள் எரிகொளுவ வெந்த நீறும்
இட்டிகைகள் சுட்டஎரி பட்ட நீறும்
உடன்அன்றி வெவ்வேறே ஆவின் நீரால்
உரைதிகழும் மந்திரம் கொண்டு உண்டைஆக்கி
மடம்அதனில் பொலிந்திருந்த சிவாங்கி தன்னால்
வெந்ததுமற்று உபகற்பம் மரபின் ஆகும். (4)

இங்ஙனமாகக் கற்பம், அநுகற்பம், உபகற்பம் எனும் முறையில் சிவனடியார் திருநீற்றை உருவாக்குவார்கள். அகம், புறம் இரண்டும் சுத்தம் அடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து அவ்விபூதியை எடுப்பார்கள். தென்மேற்கு திசையில் அவ்விபூதியைத் தூவுவார்கள். பின்னர் அந்த விபூதியைச் சிவமந்திரம் சொல்லி உடல் முழுவதும் பூசுவார்கள். திரிபுண்டரம், பிறைவடிவம், விளக்குச் சுடர்என முக்கோணம், விளங்கும் வட்ட வடிவம் இந்த வடிவங்களில் சிவமந்திரம் சொல்லித் திருநீறு அணிவார்கள் என்று சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

இந்த வகையால் அமைந்த நீறுகொண்டே
இருதிறமும் சுத்திவரத் தெறித்த பின்னர்
அந்தம்இலா அரன் அங்கி ஆறுமெய்ம்மை
அறிவித்த குருநன்மை அல்லாப் பூமி
முந்த எதிர்அணியாதே அணியும் போது
முழுவதும் மெய்ப்புண்டரம் சந்திரனில்பாதி
நந்திஎரி தீபம்நிகழ் வட்டம்ஆக
நாதர்அடியார் அணிவர் நன்மையாலே. (5)

சாதியின் ஒழுக்கத்தில் தலைமையான அறவொழுக்கம் உடையவர்கள் முனிவர்கள். தத்துவ நெறியில் சிறந்தவர்கள் முனிவர்கள். தம் கொள்கை நீதியின் நெறிமுறையில் பிறழாத வர்கள் முனிவர்கள். மும்மலங்களை அறுத்தவர்கள் முனிவர்கள். நியமம் தவறாமல் செய்யும் நித்திய அக்கினியில் விளைந்து எடுத்த திருநீற்றைப் புதிய பாத்திரத்தில் வைப்பவர்கள் முனிவர்கள். புலித்தோல் அணிந்த இறைவரான சிவனை வணங்கி அத்திரு நீற்றை மேனி முழுவதும் பூசுவர். இவர்களே முழுநீறு பூசிய முனிவர் எனப்படுவர் என்று சேக்கிழார் இப்பாடலில் கூறுகிறார்.

Koviloor Digital Library

சாதியினில் தலையான தரும சீலர்
தத்துவத்தின் நெறிஉணர்ந்தோர் தங்கள் கொள்கை
நீதியினில் பிழையாது நெறியில் நிற்போர்
நித்தம்நிய மத்துநிகழ் அங்கி தன்னில்
பூதியினைப் புதியபா சனத்துக் கொண்டு
புலிஅதனின் உடையானைப் போற்றி நீற்றை
ஆதிவரு மும்மலமும் அறுத்த வாய்மை
அருமுனிவர் முழுவதும்மெய் அணிவர்அன்றே. (6)

விளக்கம்

திருநீறு வினைகளை நீறாக்குவது. உடல் நோய்களையும் உயிர் நோயாகிய பிறவியையும் போக்கவல்லது. அருநோய்கள் கெட, வெண்ணீறு அணியாராகில் என்று அப்பரும், திருவெண்ணீறிடா மூடர் என்று அருணகிரிநாதரும் கூறுகின்றனர்.

பசுவின் சாணம் நச்சுக் கிருமிகளைக் கொல்லும் ஆற்றலுடையது. நாற்றத்தை மாற்றவல்லது. ஈயம் பூசிய பாத்திரத்தைப் பசுவின் சாணத்தால் சுத்தி செய்வதும் நேர் வாளத்தையும் பசுவின் சாணத்தால் சுத்தி செய்வதும் கண்கூடு. தாம்பரத்திலும் தாம்பர பஸ்பம் அதிக ஆற்றல் பெறுவதுபோல் பசுவின் சாணத்திலும் அதனால் ஆகிய நீறு அதிக ஆற்றல் படைத்தது என்னும் வாரியார் கருத்தை அறிக.

இப்புராணப் பாடல்களை மிகைப்பாட்டு (வெள்ளிப் பாடல்கள்) என்பர் அமரர் அ.ச.ஞா., சாதிப் பற்று சிறிதும் இல்லாத தெய்வச் சேக்கிழார் சாதியினில் தலையான தருமசீலர் (6) எனப் பாடியிருக்க மாட்டார் என்கிறார்.

Koviloor Digital Library

88. அப்பாலும் அடிசார்ந்தார்

(2 பாடல்கள்)

அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன் (திரு.தொகை-10.4)

மூவேந்தர்களின் ஆட்சி எல்லைக்கு அப்பால் சிவனடியார் உள்ளனர். நம்பியாரூரரின் திருத் தொண்டத் தொகையில் கூறப்பட்டுள்ள அடியார்களைத் தவிர வேறுசில சிவனடியார்களும் அவர்காலத்திற்கு முன்னும், பின்னும் இருந்திருக்கின்றனர். தும்பை மலரைச் சூடிய பிரான். கொன்றைமாலை அணிந்தபிரான். காளைக்கொடியை உடைய பிரானாக விளங்கக் கூடிய சிவபெருமானின் அடியார்கள் பலர் இருந்திருக்கின்றனர். காலத்தாலும், இடத்தாலும், மொழியாலும், பண்பாட்டாலும் வேறுபட்டு உள்ள அத்தனை அடியார்களும் சிவன் அடியார்களே. அந்த அடியார்களை அப்பாலும் அடி சார்ந்தார் என்கிற பெயரிலே சேக்கிழார் அழைக்கிறார் என்பதனை இப்பாடல் கூறுகிறது.

மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்
நல்தொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை
புதியமதி நதிஇதழி பொருந்த வைத்த
சேஏந்து வெல்கொடியான் அடிச்சார்ந்தாரும்
செப்பிய அப்பாலும் அடிசார்ந்தார் தாமே. (1)

சுந்தர மூர்த்தி நாயனார் துதி

பகைவரின் மூன்று புரங்களை எரித்தவர் சிவன். மலைவில்லை ஏந்தியவர் சிவன். அந்தச் சிவன் வீற்றிருக்கும் திருமுருகன் பூண்டி எனும் ஊர்வழியாகச் செல்லும் போது வில்வேடர்கள் பொருட் செல்வத்தைப் பறித்துக் கொண்டனர். பறிகொடுத்த நம்பியாரூரர் மனம் மகிழும் வண்ணம் சிவபெருமானின் பூத கணங்கள் அவற்றை வேடர்களிடமிருந்து மீட்டுத் தாமே அவற்றைச் சுமந்து சென்றன. நம்பியாரூரர் தம் இருப்பிடம் சேரும்வரை சுமந்து வந்து சேர்ந்தன.

Koviloor Digital Library

சிவனின் பூத கணங்களே வந்து உதவி செய்யும் பேறு பெற்றவர் நம்பியாரூரர் எனப்படும் சுந்தர மூர்த்தி சுவாமிகள். இவரை நான் துதிக்க முன்னைப் பிறவிகளிலே செய்த தவம் பெரியதாகும் என்று தெய்வச் சேக்கிழார் இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

செற்றார்தம் புரம்எரித்த சிலையார் செல்வத்
    திருமுருகன் பூண்டியினில் செல்லும் போதில்
கற்றுஆரும் சிலைவேடர் கவர்ந்து கொண்ட
    தொகுநிதியின் பரப்புஎல்லாம் சுமந்து கொண்டு
முற்றாத முலைஉமையாள் பாகன்பூத
    முதல்கணமே உடன்செல்ல முடியாப் பேறு
பெற்றார்தம் கழல் பரவ அடியேன் முன்னைப்
    பிறவியினில் செய்த தவம் பெரியஆமே. (2)

தமிழ்நாட்டிற்கு அப்பாற்பட்ட அடியார்கள், திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்ட அடியார்களுக்கு அப்பாற்பட்டவர்கள், திருத்தொண்டத் தொகை அடியார்களின் காலத்திற்கு முற்பட்ட காலத்துச் சிவனடியார்கள், வருங் காலத்தில் தோன்றி வரும் பிற்காலத்திய அன்பர்கள் எல்லாம் அப்பாலும் அடிசார்ந்த அடியார்களாவர். மனிதப் பிறவிக்கு அப்பாற்பட்ட அடியார்களும் அப்பாலும் அடிசார்ந்த அடியார் ஆவார்.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்
மனம் நின்பால் தாழ்த்துவதும் தாம் உயர்ந்த
தமை எல்லாம் தொழ வேண்டி

எனப் பரமசிவத்தைப் போற்றிப் பூஜையும் தவமும் புரிந்து தம்முடைய வாழ்வை உயர்த்திக் கொள்ளும் பிரமன் விஷ்ணு, ருத்திரர், பராசக்தி, லஷ்மி, சரஸ்வதி, துர்க்கை, பிள்ளையார், முருகன், வீரபத்திரர், பைரவர், காளி, ஐயப்பன், மாரியம்மன், வாயு, வருணன், யமன், அக்கினி உள்ளிட்ட இந்திராதி கின்னரர், விச்சாதரர் போன்ற வானவர்கள் ஆகிய எல்லோரும் அப்பாலும் அடிசார்ந்த அடியார் ஆவார். அசுரர், பூதம், பேய், தெய்வங்கள் மலைகள், வானலோகப் பிறவிகள் மட்டுமின்றி பிரம லோகம் வைகுண்டம் என எல்லா உலகங்களுக்கும் அப்பாற் பட்ட சிவலோகத்துச் சிவ கணங்கள், முக்தி பெற்ற

Koviloor Digital Library

ஆத்மாக்களாகிய சிவகணங்களுக்கு எல்லாம் தலைவரான நந்திதேவர் ஆகிய அனைவரும் அடிசார்ந்த அடியார் ஆவர்.

மனிதப் பிறவிக்கு அப்பாற்பட்ட தாழ்ந்த பிறவிகளான மிருகம், பறவை, பூச்சி, பாம்பு எனப் பரமேஸ்வரனை வழிபட்டு வாழ்வு பெற்ற எண்ணற்ற உயிரினங்களும் அப்பாலும் அடிசார்ந்த அடியார் ஆவார் எனும் டாக்டர் சிவப்பிரியாவின் விளக்கம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

விளக்கம்

சைவ சமயம் மிகவும் பரந்தது. நிற்பதுவும் சரிப்பதுவும் சைவமேயாம் என்கின்றார் திருஞானசம்பந்தர். சைவ சமயம் தேசத்தாலும் காலத்தாலும் கட்டுப்படாதது. அத்துணைப் பரந்த சமயம். இன்னும் பதினாயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் சிவநெறி நின்று முக்தி பெற்றார்களாயினும் அவர்களுக்கும் அடியேன் என்று கூறுகின்றார்.

எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கங்களாகக் கொண்டு சமயங் கடந்த சாந்த பீடத்தில் அமர்ந்து ஞானச் செங்கோல் தாங்கி அன்பு மயமாய் அருள்ஒளி வீசி அரசு புரிவது சைவ சமயம். அதில் சாரும் ஊழ் பெறல் அரிது என்கிறார் வாரியார்.

சைவ சமய மேசமயம் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மற்றுள்வெளி காட்டும் இந்தக் கருத்தைவிட்டு
பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாரும் ஜகத்தீரே.

என்கிறார் தாயுமானவர்.

நுட்பம்

திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே (திருமந்திரம் 1598)

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதி அது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே (திருமந்திரம் 138)

Koviloor Digital Library

திருவடியினை இப்பிறப்பில் யார் யார் சரண்புகுந்தார்களோ அவர்களுக்கெல்லாம் அடியேன் என்கிறார் சுந்தரர். முக்காலத் திற்கும் இஃது பொருந்தும். சென்ற காலம் நிகழ்காலம், வருங் காலம் என்ற மூன்று காலங்களிலும் திருவடியைச் சரணடைந்த வர்கள் அடைய முயற்சி செய்பவர்கள் அனைவருக்கும் அடியேன் எனப் பொருள் கொண்டால் உண்மை தெரியும்.

திரு ஆகிய மெய்ப்பொருளின் வடிவங்கண்டு சேர்தலே திருவடி சேர்தல். திரு - ஜோதி. ஜோதியின் வடிவைக் கண்டு ஜோதி யோடு ஒன்றுபவர் திருவடியின் பிரகாசத்தைக் காண்பர். திருவாகிய ஜோதியின் வடிவே திருவடி. தூல உடலின் கால்கள் அல்ல.

Koviloor Digital Library

89. பூசலார்

(18 பாடல்கள்)

பிறந்த ஊர் : தொண்டை நாடு, திருநின்றவூர்–602 024.

குலம் : அந்தணர்

குருபூசை மாதம் : ஐப்பசி

நட்சத்திரம் : அனுஷம்

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 – 840)

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்... அடியேன் (திரு.தொகை-11:1)

தமிழ்நாட்டின் தலைநகராகிய சென்னைக்கு மிக அருகில் 30 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் திருநின்றவூர். இவ்வூரில் பிறந்தவர் பூசலார் நாயனார். பூசல் என்றால் அன்பு என்று பொருள். பூசலார் என்றால் அன்புடையவர் என்று பொருள்.

திரிபுரங்களை எரித்த சிவபெருமானுக்கு ஓர் ஆலயம் அமைக்க எண்ணினார் பூசலார். அவருக்கு வேண்டிய நிதி கிடைக்கவில்லை. எனவே, நினைவால் இறைவருக்கு ஆலயம் கட்டினார். திருநின்றவூரில் தோன்றிய இவரது வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

அன்றினார் புரம்எரித்தார்க்கு ஆலயம் எடுக்க எண்ணி
ஒன்றும் அங்குஉதவாதாக உணர்வினால் எடுக்கும் தன்மை
நன்றுஎன மனத்தினாலே நல்ல ஆலயம்தான் செய்த
நின்றஊர்ப் பூசலார்தம் நினைவினை உரைக்கல் உற்றாம் (பூ.ந. – 1)

இவ்வுலகில் உயர் ஒழுக்கம் எப்போதும் விளங்கும் பெருமை யுடையது தொண்டை நாட்டில் உள்ள திருநின்றவூராகும்.

அரிய வேத மரபு வாழ வேண்டித் தோன்றியவர். வேத நீதிக் கலைகளை உணரும் திறன் மிக்கவர். சிவபெருமானுக்கும் அவரது அன்பர்க்கும் வேண்டிய பணிகளைச் செய்தலே தக்கது, என்று துணிந்தவர். எந்த வகையிலேனும் பொருள் தேடி அடியாருக்குத் தருவார். இறைவனுக்குக் கோவில் கட்ட எண்ணினார். தம்மிடம் நிதியில்லாமையை அவர் எண்ணவில்லை. இச்செய்திகளைப் பின்வரும் மூன்று பாடல்களில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார்.

Koviloor Digital Library

உலகினில் ஒழுக்கம் என்றும் உயர்பெருந் தொண்டைநாட்டு
நலம்மிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கும் மூதூர்
குலமுதல் சீலம் என்றும் குறைவுஇலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி நிகழ்திரு நின்ற ஊர்ஆம். (பூந. – 2)

அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை
தரும்உணர்வுஆன எல்லாம் தம்பிரான் கழல்மேல் சார
வருநெறி மாறா அன்பு வளர்ந்துஎழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக் கலைஉணர் பொலிவின் மிக்கார் (பூந – 3)

அடுப்பது சிவன்பால் அன்பர்க்குஆம்பணி செய்தல் என்றே
கொடுப்பதுஎவ் வகையும் தேடி அவர்கொளக் கொடுத்தும் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்து உறைவதற்கு ஓர்கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார் இருநிதி இன்மை எண்ணார். (பூந – 4)

செல்வத்தைத் தேடிப்பெறும் இடங்களை மனத்தால் கருதினார். பெரிய நிதியை வருந்தித் தேடினார். எவ்வகையிலும் அவருக்குச் செல்வம் கிடைக்கவில்லை. கோவில் எடுக்க வேண்டிச் சிந்தையால் செல்வத்தைத் திரட்டிக் கொண்டார். கோயிலுக்கான சாதனங்களை, தச்சர்களை மனத்தால் தேடினார். நல்ல நாள் குறித்தார். ஆகம விதிப்படி அத்திவாரம் எடுத்தார். இங்ஙனம் அல்லும் பகலும் உறங்காது கோயில் எடுத்தார். அத்திவார வரி, உபான வரி, கோபுரத்தின் அடியில் அமையும் முதல் சித்திரவரி, ஆகியவற்றை ஓவிய வேலைப்பாடுகளோடு உள்ளத்தில் நினைவால் அமைத்தார். விமானத்தின் இறுதியில் அமையும் சிகரத்தையும் அதற்குரிய அளவோடு அமைத்தார். இச்செய்திகளைப் பின்வரும் மூன்று பாடல்கள் மூலம் அறியலாம்.

மனத்தினால் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
எனைத்தும் ஓர் பொருள் பேறுஇன்மை என்செய்கேன் என்றுநைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ்வுஉறு நிதியம்எல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார் (பூந – 5)

சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம்செய் நலம்பெறு நல்நாள் கொண்டே
ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை பாரித்துஅன்பால்
காதலின் கங்குல் போதும் கண்படாது எடுக்கல்உற்றார் (பூந. – 6)

அடிமுதல் உபானம் ஆதி ஆகிய படைகள் எல்லாம்
வடிவுறும் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான
முடிவுஉறு சிகரம் தானும் முன்னிய முழத்தில் கொண்டு
நெடிதுநாள் கூடக்கோயில் நிரம்பிட நினைவால் செய்தார். (பூந. – 1)

Koviloor Digital Library

அடுத்துத் தூபி பொருத்தினார், சுண்ணச் சாந்து பூசினார். சிற்ப அலங்காரங்கள் செய்தார். தீர்த்தக் கிணறு அமைத்தார். கோயிலைச் சுற்றிலும் மதில்கள் அமைத்தார். குளம் தோண்டினார். வேண்டுவனவற்றையெல்லாம் வகையாகச் செய்தார். சிவபெருமானை எழுந்தருளச் செய்வதற்கான நாளும் நெருங்கியது. காஞ்சிபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த காடவர்கோன் அதே காலகட்டத்தில் காஞ்சிபுரத்தில் சிவபெருமானுக்காகக் கற்கோயில் ஒன்றினைக் கட்டி முடித்திருந்தான். அவன் இறைவரை எழுந்தருளச் செய்ய நாளும் குறித்திருந்தான். அவன் நினைத்த நாளுக்கு முன்னை நாள் இறைவர் அவனது கனவில் தோன்றினார்.

திருநின்றவூரிலுள்ள பூசல் என்ற அன்பன் நெடுநாள்களாக நினைவால் செய்த கோயிலில் யாம் புகுவோம். ஆகவே எழுந்தருளச் (பிரதிட்டை) செய்யும் நாளை மாற்றுக என்றார். உடனே பூசலாரின் கோயிலைக் காண மன்னன் விரைந்தான். இதைப் பின்வரும் மூன்று பாடல்களில் தெய்வச் சேக்கிழார் கூறுவார்.

தூபியும் நட்டு மிக்க சுதையும்நல் வினையும் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியும் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்த மன்னும்
தாபரம் சிவனுக்கு ஏற்க விதித்தநாள் சாரும் நாளில் (பூந. – 8)

காடவர் கோமான் கச்சிக் கல்தளி எடுத்து முற்ற
மாடுஎலாம் சிவனுக்குஆகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியாதாரைத் தாபிக்கும் அந்நாள் முன்நாள்
ஏடுஅலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவில்எய்தி (பூந. – 9)

நின்ற ஊர்ப்பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்று நீடுஆலயத்துள் நாளைநாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்டருளப் போந்தார்
(பூந. – 10)

பூசலார் தொண்டை இந்த உலகம் அறிய வேண்டும் என்பதால் சிவபெருமான் இங்ஙனம் கூறினார். தூக்கம் நீங்கி எழுந்த மன்னன் பூசலாரைக் கண்டு வணங்க விரும்பித் திருநின்றவூர் சென்றான். பூசலார் கட்டிய கோயில் எங்கு இருக்கிறது என்று அங்கிருந்தவர்களைப் பார்த்துக் கேட்டான். அவர்கள் பூசலார் கோயில் எதையும் கட்டவில்லை என்றனர். அதைக் கேட்ட மன்னன் உண்மை நெறியில் நிற்கும் மறையோர் எல்லோரும் வருக எனக்

Koviloor Digital Library

கூறினான். இதைப் பின்வரும், இரண்டு பாடல்களில் தெய்வச் சேக்கிழார் கூறுகிறார்.

தொண்டரை விளக்கத் தூயோன் அருள்செயத் துயிலை நீங்கித்
திண்திறல் மன்னன் அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுநான் வணங்க வேண்டும் என்றுஎழும் காதலோடும்
தண்தலைச் சூழல் சூழ்ந்த நின்றஊர் வந்து சார்ந்தான். (11)

அப்பதி அணைந்து பூசல் அன்பர் இங்குஅமைத்த கோயில்
எப்புடையது என்றுஅங்கண் எய்தினார் தம்மைக் கேட்கச்
செப்பிய பூசல் கோயில் செய்ததுஒன்றில்லை என்றார்
மெய்ப்பெரு மறையோர் எல்லாம் வருக என்று உரைத்தான் வேந்தன் (12)

மறையோர் மன்னனைக் காண வந்தனர். மாசிலாப் பூசலார் யார்? என மன்னன் வினவினான். உடனே அவர்கள் அவர் குற்றமிலா அந்தணர் இவ்வூரினர் என்றனர். உடனே அரசன் பூசலார் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அவரை வணங்கினான். தாங்கள் கட்டிய கோயில் எது? சிவபெருமானை எழுந்தருளச் செய்யும் நாள் இன்று என்று திருவருளால் அறிந்ததால் உங்களைக் கண்டு வணங்க வந்தேன் என்று கூறினான். உடனே பூசலார் மருட்சி அடைந்தார் தாம் மனத்தால் முயன்று கட்டிய கோயில் இதுவாகும் என்று தாம் கட்டிய மனக்கோயிலைப் பற்றி விளக்கினார்.

மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டுநோக்கி
என்னைஓர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தாரேல்
முன்வரு நிதிஇலாமை மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதுஆம் என்று சிந்தித்து எடுத்தவாறு எடுத்துச் சொன்னார். (8)

அரசன் பூசலார் கூறியதைக் கேட்டு வியந்தான். பூசலாரைப் போற்றி வணங்கி மணமாலை கீழே படியுமாறு நிலத்தில் விழுந்து தொழுதான். பின் தன் ஊரான காஞ்சிபுரத்திற்குச் சென்றான். பூசலார் தம் மனத்தில் அமைந்த கோயிலில் சிவபெருமானுக்குப் பூசை செய்தார். இறைவனின் பொன்னடி சேர்ந்தார்.

அருள்மிகு மரகதாம்பிகை உடனுறை இருதய ஆலீஸ்வரர்
திருநின்றவூர், திருவள்ளூர் மாவட்டம்
அ.கு.எண். 602 024

Koviloor Digital Library

90. மங்கையர்க்கரசியார்

(3 பாடல்கள்)

பிறந்த ஊர் : மதுரை (பாண்டிய நாடு)

குலம் : அரசியார்.

குருபூசை மாதம் : சித்திரை

நட்சத்திரம் : ரோகிணி

காலம் : அப்பர் சம்பந்தர் காலத்து நாயன்மார் (கி.பி.600.660)

வரிவளையாள் மானிக்கும்... அடியேன் (திரு. தெகை -11–1)

மங்கையர்க்கு எல்லாம் தனி அரசியாகத் திகழுபவராகிய மங்கையர்க்கு அரசியார் எங்கள் தெய்வம் ஆவார். சோழ மரபினரின் குலக்கொழுந்து போன்றவர். வளையல் அணிந்த பெருமை உடையவர். செம்மை மிகுந்த தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியைப் போன்றவர். தென்னர் குலமான பாண்டியர் குலத்துக்கு ஏற்பட்ட பழியைப் போக்கிய தெய்வத் தன்மை பொருந்திய பாவை ஆவார். எங்கள் பிரான் என்றும் சண்பையர்கோன் என்றும் போற்றப்படுபவர் திருஞான சம்பந்தர். அவரின் அருளினாலே தமிழ் நாட்டிற்கு ஏற்பட்ட இடரை நீக்கிப் பொங்குகின்ற ஒளியைத் தருகின்ற திருநீற்றைப் பரவச் செய்தவர். அவரைப் போற்றுவார் எல்லாம் எம்மால் போற்றப் பெறுபவராவர். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் செப்புவார்.

மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடுஉற்ற இடர்நீக்கித் தங்கள்
பொங்குஒளிவெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்ற லாமே (1)

வேதியர் தலைவரான திருஞானசம்பந்தரின் சிவஞானத் தைப் பொழிந்த புனித வாக்கினால் ஞான ஒளி உடைய பாடலால்

Koviloor Digital Library

பாராட்டப்படுவதற்குறிய தவத்தினராகிய மங்கையர்க்கரசியாரின் பெருமையை யாம் என்னவென்று தெரிந்து பாராட்ட வல்லோம்? தென்னர் கோமானாகிய மாசற்ற புகழைக் கொண்ட நின்றசீர் நெடுமாறனாருக்குச் சைவ சமயத்தின் பின்னர், குற்றமில்லாத சிவநெறியில் அவரோடும் கூட ஈசரது திருவடி நிழலின்கீழ் அமர்ந்திருக்கும் அருளையும் பெற்றார்.

இதனைப் பின்வரும் பாடலில் தெய்வச் சேக்கிழார் செப்புவார்.

பூசுரர் சூளாமணியாம் புகலி வேந்தர்
போனகஞானம் பொழிந்த புனித வாக்கால்
தேசுஉடைய பாடல் பெறும் தவத்தினாரைச்
செப்புவதுயாம் என்அறிந்து தென்னர் கோமான்
மாசுஇல்புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசுஇல் நெறி அவரோடும் கூட ஈசர்
அடிநிழல்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார். (2)

நீரின் பெருக்கமானது வருகின்ற நாள் ஒரு காலத்திலும் பொய்க்காமல் வருகின்ற இறைத் தன்மையைத் தன்னகத்தே கொண்டது காவிரி ஆறு. அதனால் வளம் பெறுவது,சோழ நாடு ஆகும். தங்களது சோழ நாட்டைப் போலவே, பாண்டியரின் நாட்டையும் சீர் விளங்கச் செய்தவர் மங்கையர்க்கரசி ஆவார். அவரது செம்மையான சீரடிகளைப் போற்றி , ஒருநாள் கூட தம்முடைய செயலில் வழுவாமல் எல்லாம் வல்ல சிவபெருமானுடைய அடியவர்களுக்கு உடை, கீள், கோவணம் போன்றவற்றை நெய்து கொடுக்கின்ற பெரும்புகழினைக் கொண்ட சாலியர் குலத்தில் தோன்றிய பெருந்தகையாளராய் இருக்கின்ற நேச நாயனாரின் வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார். இப்பாடலில் பூசுரர் சூளாமணி என்பது திருஞானசம்பந்தரைக் குறிக்கும்.

வருநாள்என்றும் பிழையாத் தெய்வப் பொன்னி
வளம்பெருக்க வளவர்குலம் பெருக்கும் தங்கள்
திருநாடு போல் செழியர் தென்னர் நாடு
சீர்விளக்கும் செய்ய சீறடிகள் போற்றி
ஒருநாளும் தன்செயலில் வழுவாது அன்பர்க்கு
உடைகீளும் கோவணமும் நெய்து நல்கும்
பெருநாமச் சாலியர்தம் குலத்தில் வந்த
பெருந்தகையார் நேசர்திறம் பேசல்உற்றாம். (3)

Koviloor Digital Library

இந்தப் பூவுலகில் தோன்றிய மங்கையர்களுக்கு எல்லாம் தலைவி என்னும் பொருளில் இவர் மங்கையர்க்கரசி எனும் திருப்பெயர் பெற்றவரானார். இவருக்கு முன்பு தோன்றிய எந்தப் பெண்ணும் அரசியாகும் தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது ஆகும்.

'மானி' என்னும் பெயரானது மங்கையர்க்கரசியாரின் இயற்பெயர் ஆகும்

திருஞான சம்பந்தர் பெருமான் மங்கையர்க்கு அரசி என்று இந்த அம்மையாரைச் சிறப்பித்துப் போற்றினார். தொண்டர்சீர் பரவுகின்ற சேக்கிழார், திருஞானசம்பந்தர்பதிகத் தொட்டருக்கு 'மங்கையர்க்குத் தனியரசி' என்பதே பொருள் என்ற குறிப்பில் 'தனியரசி' எனப்பாடினார்.

சோழர்குல மன்னனின் புதல்வியாய் அவதரித்தவர் மங்கையர்க்கரசி ஆவார். இவர் பாண்டியர் குல மன்னரான நின்றசீர் நெடுமாற நாயனாரின் வாழ்க்கைத் துணையாகும் வாய்ப்பினைப் பெற்றார். பாண்டிய நாட்டில் சமணர்களால் ஏற்பட்ட துன்பங் களையும் துயரங்களையும் போக்க அரும்பாடு பட்டார். சமணர் களால் ஏற்பட்ட துன்பங்களைப் புலமைத்துவம் தலைமைத்துவம், இறைமைத்துவம் ஆகிய அனைத்தும் கொண்ட திருஞானசம்பந்தர் மூலம் நீக்கினார். இவரது வரலாறு திருஞான சம்பந்தர் வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது ஆகும். தான் தோன்றிய சோழர் குலம் தான் திருமணம் செய்து வாழ்ந்த பாண்டியர் குலம் ஆகிய அனைத்தும் சிறக்க அரும்பாடு பட்டவர் மங்கையர்க் கரசியார். இதனால் தான் தெய்வச் சேக்கிழார் மங்கையர்க்குத் தனியரசி என்று கூறியதோடு மட்டுமல்லாமல் எங்கள் தெய்வம் என்றும் உறுதிபடக்கூறுகிறார்.

திருஞானசம்பந்தரே பாடிய சிறப்பு

திருஞானசம்பந்தரே மங்கையர்க்கரசியாரைத் தாம் திருவாய் மலர்ந்து அருளிய தேவாரத்தில் குறிப்பிட்டுச் சிறப்பு செய்துள்ளார்.

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்

Koviloor Digital Library

பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே (சம்பந்தர் தேவாரம்:3:378:1)

திரு ஆலவாய்ப்பதிகத்தின் முதல் பாடலிலேயே மங்கையர்க்கரசியைத் திருஞான சம்பந்தர் போற்றுகிறார்.

சமணர்களால் தீங்கு வருமோ என அச்சம் கொண்டார் மங்கையர்க்கரசியார். அவரை நோக்கிப் பின்வருமாறு பாடினார் திருஞான சம்பந்தர்.

மானினேர் விழி மாதராய் வழு
திக்கு மாபெரும் தேவிகேள்
பானல் வாய் ஒரு பால்ன் ஈங்கு இவன்
என்று நீ பரிவு எய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய
இடங்களில் பல அல்லல்சேர்
ஈனர்கட்கு எளியேன் அலன் திரு
ஆலவாய் அரன் நிற்கவே (சம்பந்தர் தேவாரம் 3:297:1)

அருள்மிகு மீனாட்சியம்மை உடனுறை
சோமசுந்தரப் பெருமான் திருக்கோயில்
மதுரை–625 001

Koviloor Digital Library

91. நேசர்

(5 பாடல்கள்)

பிறந்த ஊர் : காம்பீலி (குடகு நாடு - கர்நாடக மாநிலம்)

குலம் : சாலியர்

குருபூசை மாதம் : பங்குனி

நட்சத்திரம் : ரோகிணி

காலம் : அப்பர் சம்பந்தர்காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட நாயன்மார் (கி.பி. 660 –840)

நேசனுக்கும் அடியேன் (திரு. தொகை. 11:1)

சீரை வளர்க்கும் தன்மையில் சிறப்பு மிக்கதாய் இருப்பது காம்பீலி என்னும் ஊராகும். இது கர்நாடக நாட்டில், பல்லாரி மாவட்டத்தில் உள்ள ஊராகும். தமது செயல்முறைகளால் ஒழுக்க நெறியில் குறையாத தன்மையர்கள், அன்புமிக்க சிந்தை கொண்டவர்கள் வாய்மை மிக்கவர்கள், நன்மை மிக்கவர்கள் ஆகியோர் எல்லாம் நிலைத்து வாழ்வதற்கு இடமான இவ்வுலகத்தில் மிக உயரிய புகழினால் மிகுந்த பழைய பதியாகத் திகழுவது இவ்வூர். இதில் உள்ள மாடங்கள் சந்திரனையும், மேகங்களையும் தொடும் அளவிற்குப் பெரியவை ஆகும். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவார்.

சீர்வளர் சிறப்பின் மிக்க செயல்முறை ஒழுக்கம் குன்றா
நார்வளர் சிந்தை வாய்மை நன்மையார் மன்னி வாழும்
பார்வளர் புகழின் மிக்க பழம்பதி; மதிதோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக் காம்பீலி என்ப தாகும் (நே. நா. – 1)

நேச நாயனார் காம்பீலி நகரத்தில் வாழ்பவர் ஆவார். அறுவையர் என்றழைக்கப்படும் சாலியர் குலத்தில் தோன்றினார். நிலைபெற்ற தமது தொழிலில் தங்கள் மரபில் மேம்பாடு பெற்றார். பாம்பை அணியாய் அணிந்த எல்லாம் வல்ல சிவபெருமானுக்கு அடியவர்களாக இருப்போர் செய்யும் பணியைத் தலையான பணியாக மேற்கொண்டார். அடியவர்களின் திருவடிகளைத் தலையில் சூட்டிப் பணிவோடு வணங்கும் இயல்பு உடையவராய் இருந்தார். இவர் நேசர் என்று அழைக்கப்பட்டார். இதனைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

அந்நகர் அதனில் வாழ்வார்; அறுவையார் குலத்து வந்தார்;
மன்னிய தொழிலில் தங்கள் மரபில் மேம்பாடு பெற்றார்;
பன்னகஆ பரணற்கு அன்பர் பணி தலைக் கொண்டு பாதம்
சென்னியால் கொண்டு போற்றும் தேசினார்; நேசர் என்பார். (2)

Koviloor Digital Library

அத்தகு நிலையில் நேசனார் தமது நெஞ்சத்தின் செயலை எல்லாம் வல்ல சிவபெருமானின் ஓங்கிய வாக்கின் செயலை உணர்வு பெற்ற நமசிவாய எனும் ஐந்தெழுத்துக்கு ஆக்கினார். தம்முடைய கைத்தொழிலின் செயலைச் சிவபெருமானின் அடியவர்களுக்காக ஆக்கினார். பாங்குடைய உடையும் கீளும் பழுது அற்ற கோவணமும் நெய்தார். இவரது இத்தகு செயல்களைப் பின்வரும் பாடல் கூறும்.

ஆங்குஅவர் மனத்தின் செய்கை அரன்அடிப் போதுக்குஆக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செழுத்துக்கு ஆக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்குஆகப்
பாங்குஉடை உடையும் கீளும் பழுதுஇல் கோவணமும் நெய்வார். (3)

தெய்வச் சேக்கிழாரைப்போல மாணிக்கவாசகரும் பின்வரு மாறு அருளியுள்ளதை உணர்ந்து உய்தி பெறலாம்.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன்தன்
கண் இணைநின் திருப்பாதம் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்து விச்சை
மால்அமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே இரண்டும் இல் இத்தனிய னேற்கே

(திருவாசகம் – சுட்டறுத்தல் – 6)

உடையோடு நல்ல கீளையும் ஒப்பற்ற கோவணத்தையும் நெய்தார். காளை வாகனம் கொண்ட சிவனடியார்கள் வேண்டி யதை வேண்டியவாறே கொடுத்தார். ஒவ்வொரு நாளும் அடியார் களின் திருவடி போற்றினார்; அதனால் நலம் பெற்றார். இறுதி யில் சிவபெருமானின் அடிநிழல் சேர்ந்தார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவார்.

உடையொடு நல்ல கீளும் ஒப்பில் கோவணமும் நெய்து
விடையவர் அடியார் வந்து வேண்டுமாறு ஈயும் ஆற்றால்
இடையறாது அளித்து, நாளும் மலர்க்கழல் இறைஞ்சி ஏத்தி
அடைவுஉறு நலத்தர்ஆகி அரன்அடி நீழல் சேர்ந்தார். (4)

கற்றைச் சடைமுடியை உடைய சிவபெருமானின் கழல் சேர்வதற்காக முன்பு தம்மைச் சார்ந்து இருந்த வினைகளை விலக்கிய நேச நாயனாரின் திருவடிகளைத் துதித்து, கோச்செங்கண் சோழரின் வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் தெய்வச் சேக்கிழார்.

Koviloor Digital Library

கற்றைவேணி முடியார்தம் கழல் சேர்வதற்குக் கலந்த வினை
செற்ற நேசர் கழல்வணங்கிச் சிறப்பால் முன்னைப் பிறப்புஉணர்ந்து
பெற்றம் உயர்த்தார்க்கு ஆலயங்கள் பெருக அமைத்து மண்ஆண்ட
கொற்ற வேந்தர் கோச்செங்கண்சோழர் பெருமை கூறுவாம். (5)

உணவு கொடுத்து உயர்வு பெற்ற அடியார் சில பேர். உறைவிடம் கொடுத்து உயர்வு பெற்ற அடியார் சிலபேர். நேச நாயனார் ஆடை நெய்து அவற்றை அடியவர்க்கு அளித்த அருமை மிக்கவர். ஆடைகளை அடியார்களுக்கு அன்பளிப்பாய் வழங்கிப் புகழ்பெற்றவர் அமர்நீதி நாயனார். நேச நாயனாரும் அவரைப் போன்றவரே. தோகை விரித்து ஆடிய மயிலைப் பார்த்து, குளிர் காரணமாய்த் துன்புறுகிறதோ என எண்ணிய பேகனின் வரலாற்றை அறிவுடையார் அறிவர். ஆடையில்லாதவன் அரை மனிதன் என்னும் பழமொழியையும் ஆள்பாதி ஆடைபாதி எனும் பழமொழியையும் உணர்வுடையார் உணர்ந்து தெளிக .

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள்:788)

எனும் தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கருத்தை இங்கு எண்ணுதல் நலமாகும். உணவு தானத்தைப்போல் உடைதானமும் புண்ணியம் தருவதாகும்.

காம்பீலி

கர்நாடக மாநிலத்தில் பல்லாரி மாவட்டத்தில் காம்பீலி தாலுகாவில் காம்பீலி என்று ஒரு நகரம் உண்டு. அத்தலத்தில் அவர் அவதரித்தவர்.

அவர் மாயவரத்தைச் சார்ந்த கூரை நாட்டில் வாழ்ந்தார் என்றும் அங்கே சிவாலயத்துள் காம்பீலியிலிருந்து கொணர்ந்த விநாயகர், தண்டபாணி என்ற மூர்த்திகளைத் தாபித்தார் என்றும் ஆன்றோர் கூறுவர் எனும் வாரியார் கருத்தை அறிக. காம்பீலி–இது விஜய நகரத்திற்கு வடக்கில் துங்கபத்திரை நதிக்கரையில் சுமார் இருபத்தைந்து மைலில் உள்ளது.

மனிதர்களின் கட்டாயத் தேவைகள் மூன்று. உணவு, உடை, உறைவிடம் என்ற அந்த மூன்றிலும் உணவில்லாமலும் இருப்பிடமில்லாமலும் சிலநாள் கழிக்கலாம் – ஆனால் உடையில்லாமல் ஒருபோதும் மனிதர்களால் வாழ முடியாது எனும் சிவப்பிரியா அவர்களின் கருத்தை அறிக. ஞானதானம், சொர்ணதானம், அன்னதானம் போல ஆடைதானமும் தானங்களில் சிறந்ததாகும்.

Koviloor Digital Library

92. கோச்செங்கட் சோழர்

(18 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	சிதம்பரம் – அ.கு.எண். 608 001.
குலம்	:	அரசர்
குருபூசை மாதம்	:	மாசி
நட்சத்திரம்	:	சதயம்
காலம்	:	அப்பர் சம்பந்தர்க்கு முற்பட்ட நாயன்மார். (கி.பி. 300–600)

தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன் (திரு. தொகை-11.2)

ஒரு புறாவுக்காகத் துலாக்கோலில் தன் தொடைச் சதையை அரிந்து வைத்து, தியாகம் செய்த சோழர்களுக்கு உரிமையுடையது சோழ வளநாடு. அந்நாட்டில் இருக்கின்ற காவிரி ஆற்றின் கரையில் சந்திர தீர்த்தத்தின் அருகில் ஒரு காடு இருக்கிறது. அக்காட்டில் ஒரு வெண்ணாவல் மரம் இருந்தது. அதன் அடியில் சிவலிங்கம் ஒன்று வெளிப்பட்டு இருந்தது. அச்சிவலிங்கத்தை வெள்ளானை ஒன்று வழிபட்டது. அதனால் அத்தலத்திற்குத் திருவானைக்கா (திருச்சி அருகில்) எனும் திருப்பெயர் வழங்கலாயிற்று ஞானம் பெற்ற சிலந்தி ஒன்று திருமுடியின் மீது பூஞ்சோலையிலுள்ள மரங்களின் சருகுகள் உதிராதவாறு வாய்நூலில் வலை அமைத்துத் தொண்டு செய்து வந்தது.

சிலந்தியானது நல்ல முறையில் தன்னுடைய இழை யினால் அமைத்த வலைப்பரப்பை அங்குச் சிவபெருமானை வழிபடச் சென்ற யானை ஒன்று அநுசிதம் (அநுசிதம் என்றால் அபசாரம் என்று பொருள்) என்று கருதிச் சிதைத்துவிட்டது. சிலந்தி மீண்டும் ஒரு வலை அமைத்தது . யானை அதனையும் அழித்துவிட்டது.

சிவபெருமானுடைய திருமேனிமீது ஒரு சருகு கூட விழாதவாறு தான் வருந்தி இழைத்த நூல் வலையத்தை அழித்த யானை மீது சிலந்தி சினம் கொண்டது. அது யானையின் துதிக்கையின் உள்ளே புகுந்து கடித்தது. அதன் விஷத்தாலும் கடித்ததால் யானைக்கு ஏற்பட்ட துன்பத்தாலும் யானையானது நிலத்தில் வீழ்ந்து புரண்டது. தனது தும்பிக்கையைப் பலமுறை பூமியில் மோதியது. அதனால் சிலந்தி இறந்துவிட்டது. சிலந்தியின் விஷத்தால் யானையும் இறந்துவிட்டது. யானை சிவபதம் சேர்ந்தது. இறைவனுக்கு வலை அமைக்கும் பணியில் பெருவிருப்பம் உடைய

Koviloor Digital Library

சிலந்தி சோழர் குலத்திலே அரசனாகப் பிறந்து கோயில் சேவை செய்ய இறைவன் அருள் பாலித்தார்.

சுபதேவன் என்ற சோழ அரசன் கமலவதி தேவியோடு சோழ நாட்டை நன்முறையில் ஆட்சி செய்து வந்தான். தனக்கு ஒரு குழந்தை இல்லையே என்று அவன் மனைவி வருந்தினாள். அவள் எல்லாம் வல்ல சிவபெருமானை வேண்டினாள். இறைவன் அருள் புரிந்தார். சிலந்தியே கமலவதியின் வயிற்றில் மகனாய்த் தோன்றுமாறு அருள் புரிந்தார். இதைப் பின்வரும் இரண்டு பாடல்களில் தெய்வச்சேக்கிழார் செப்புவார்.

தொன்மைதரு சோழர்குலத்து அரசன்ஆம் சுபதேவன்
தன்உடைய பெருந்தேவி கமலவதியுடன் சார்ந்து,
மன்னு புகழ்த் திருத்தில்லை மன்றுஆடும் மலர்ப்பாதம்
சென்னிஉறப் பணிந்துஏத்தித் திருப்படிக்கீழ் வழிபடு நாள் (7)

மக்கட் பேறுஇன்மையினால் மாதேவி வரம் வேண்டச்
செக்கர் நெடுஞ் சடைக்கூத்தர் திருவுள்ளம் செய்தலினால்
மிக்கதிருப்பணிசெய்த சிலம்பிகுல வேந்து மகிழ்
அக்கமல வதி வயிற்றில் அணிமகவாய் வந்துஅடைய (8)

கமலதேவி நிறைமாதக் கர்ப்பிணி ஆனாள். குழந்தை பிறக்க வேண்டிய நேரம் நெருங்கியது அப்போது அங்கு வந்து சோதிடர்கள் , ஒரு நாழிகை கழித்துக் குழந்தை பிறந்தால் அக்குழந்தை மூவுலகையும் ஆளும் என்றனர். உடனே கமலதேவி ஒரு நாழிகை கழித்துப் பிள்ளை பிறக்கும் வண்ணம் என் கால்களைப் பொருந்தக்கட்டி உயரத் தூக்குக என்றாள். அச்செய்கை நிறைவுற்றது. சோதிடர் சொல்லிய நேரம் வந்தது. கட்டு அவிழ்க்கப்பட, குழவி பிறந்தது; கண் சிவந்து இருந்தது எனவே, கமலதேவி அக்குழந்தையை இவன் என் செல்லமான கோச் செங்கண்ணனோ என்று பாராட்டினாள்

குழந்தை பிறந்த சிறிது நேரத்திலேயே தாய் இறந்து விட்டாள். சுபதேவன் தன் மகனை நன்கு வளர்த்தான். தன் மகன் உரிய பருவம் அடைந்ததும் அரசப்பட்டம் தந்து சிவலோகம் சேர்ந்தான் .

கோச் செங்கட் சோழர் திரு அருளால் முற்பிறப்பு உணர்வு எய்தினார். எல்லாம் வல்ல சிவபெருமானுக்கு அன்போடு பல ஆலயங்களைப் புதுப்பிக்க எண்ணம் கொண்டார். திருவானைக் காவில் தான் முதலில் அருள் பெற்றதால் அங்கே வெண்ணாவல் மரத்தின் அடியில் வாழும் சிவமூர்த்திக்கு ஆலயம் அமைத்தார்.

Koviloor Digital Library

அமைச்சர்களை ஏவி, சோழ நாட்டில் பல இடங்களில் சிவாலயங்கள் அமைத்தார். இதைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்

மந்திரிகள் தமைஏவி வள்ளல் கொடை அநபாயன்
முந்தைவரும் குல முதலோர் ஆயமுதல் செங்கணார்
அந்தம் இல்சீர்ச் சோணாட்டில் அகல் நாடு தொறும் அணியார்
சந்திரசேகரன் அமரும் தானங்கள் பல சமைத்தார் (14)

கோயில் தொறும் அமுது படைக்கின்ற திருவிழாக்களுக்கும் நிபந்தங்களை அமைத்தார். இறுதியில் தில்லை சென்றார். அம்பலத்தாடும் இறைவனை ஆறு காலங்களிலும் வழிபட்டார். அங்கு இருக்கும் இறையை வணங்கும் அந்தணர்களுக்கு மாளிகைகள் அமைத்தார். இவ்வாறு பல திருப்பணிகள் செய்து சிவபதம் சேர்ந்தார்.

வாரியார் கருத்து

சிவபெருமானிடம் அளவற்ற அன்பு கொண்ட இச்சிலந்தி, சிவலிங்கத்தின் மீது சருகுகளும் இலைகளும் உதிர்வதற்கு வருந்தி விசித்திரமாக வாய் நூலால் பந்தரிட்டு வழிபட்டது. அதன் அன்பு எத்துணை விழுமியது! ஆராவன்புடன் அங்ஙனம் புரிந்து மகிழ்ந்தது. அதை அநுசிதம் என்று கருதிய யானை பலகாலும் அழிப்பது கண்டு வருந்தியும் சினந்தும், யானையின் தும்பிக்கைக்குள் நுழைந்து கடித்துக் கொன்று தானும் இறந்தது. அச்சிலந்தி சோழமன்னனாகப் பிறக்கும் பெரும்பேறு பெற்றது.

திருக்கயிலையில் சிவகணத்தவருள் மாலியவான் புட்பதந்தன் என்ற இருவர், தமக்குள் சிவத்தொண்டில் தாம் தாமே சிறந்தவர் என்று கருதி மாறுபட்டனர். ஒருவரை ஒருவர் அது காரணமாகச் சினந்து, மாலியவான் புட்பதந்தனை யானையாகுமாறு சபித்தனன்; புட்பதந்தன் மாலிய வானைச் சிலந்தியாகுமாறு சபித்தனன். இருவரும் இறைவர் ஆணையின்படி இத்திருத்தலத்திலே யானையும் சிலந்தியுமாகப் பிறந்து, சிவபிரானுடைய திருத் தொண்டிலேயே ஈடுபட்டு,பழம் பிறப்பின் பகைகாரணமாக இப்பிறப்பிலும் மாறுபட்டுப் பகைத்து மாண்டு வீடுபேறு பெற்றனர். சிலந்தியே முதலில் யானையைக் கொல்ல முயன்றதனால் அதற்கு மீட்டும் ஒரு பிறப்பு வந்தது என்க. அப்பிறப்பும் மேலானதாக எய்தியது.

மறுபிறப்பில்லை என்று மயங்குவாரும் உண்டு, இவ் வரலாற்றினால் மறுபிறப்பு உண்டு என்பதையும், முன்செய்த வினைக்கேற்ற பயன் எய்தும் என்பதையும் அறிக எனும் திருமுருக கிருபானந்த வாரியார் கருத்தை அறிவுடையார் அறிக.

அருள்மிகு சிவகாமி உடனுறை நடராசப் பெருமான் திருக்கோயில்
சிதம்பரம் அஞ்சல் - 608 001.
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

Koviloor Digital Library

93. திருநீலகண்ட யாழ்ப்பாணர்

(12 பாடல்கள்)

பிறந்த ஊர்	:	**எருக்கத்தம்புலியூர் (விருத்தாசலத்திற்கு அருகில் உள்ள ஊர்)**
குலம்	:	**பாணர்**
குருபூசை மாதம்	:	**வைகாசி**
நட்சத்திரம்	:	**மூலம்**
காலம்	:	**அப்பர் சம்பந்தர் காலத்து நாயன்மார் (கி.பி. 600 – 660)**

திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன் (திரு. தொகை-11.2)

நடுநாட்டில் உள்ள தலங்களுள் ஒன்று எருக்கத்தம் புலியூர் ஆகும். அவ்வூரில் பாணர் குலத்தில் பிறந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவருடைய மனைவியார் மதங்கசூளாமணி. இந்த இருவரும் எல்லாம் வல்ல சிவபெருமானின் புகழை யாழிசையோடு நெஞ்சம் நெக்குருகிப் பாடுவர். ஒருநாள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மதுரைக்குச் சென்று சோமசுந்தரப் பெருமானைத் துதிக்க வேண்டும் என்னும் பெருவிருப்பம் கொண்டார். தமது மனைவி மதங்க சூளாமணியோடு புறப்பட்டார். இடையில் இருக்கின்ற சிவாலயங்கள் அனைத்தையும் வழிபட்டார். மதுரைக்குச் சென்றடைந்தார். அங்கு இறைவரின் திருக்கோயில் முன் சென்று இறைவனின் புகழை யாழ் கொண்டு வாசித்தார். இச்செய்திகளைப் பின்வரும் இரண்டு பாடல்களில் தெய்வச் சேக்கிழார் செப்பியுள்ளார்.

எருக்கத்தம் புலியூர் மன்னி வாழ்பவர் இறைவன் தன்சீர்
திருத்தகும் யாழில் இட்டுப் பரவுவார் செழும் சோணாட்டில்
விருப்புறு தானம் எல்லாம் பணிந்துபோய், விளங்கு கூடல்
பருப்பதச் சிலையார் மன்னும் ஆலவாய் பணியச் சென்றார். (1)

ஆலவாய் அமர்ந்தார் கோயில் வாயிலை அடைந்து நின்று
பாலை ஈரேறு கோத்த பண்ணினில் கருவி வீக்கிக்
காலம் ஆதரித்த பண்ணின் கைபல முறையும் ஆராய்ந்து
ஏலவார் குழலாள் பாகர் பாணிகள் யாழில் இட்டார். (2)

பாணரின் இசையில் மகிழ்ந்தார் இறைவன். அன்று இரவு தம் திருத் தொண்டர்கள் கனவில் தோன்றிப் பாணரைத் தம் முன்

தி-26

Koviloor Digital Library

அழைத்து வருமாறு உத்தரவு இட்டார். அவ்வாறே பாணனாருக்கும் உணர்த்தி அருளினார். அடுத்த நாள் காலை சிவனடியார்கள் பாணர்முன் வந்து வணங்கினர். பிறகு கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். பாணனார் யாழ் இசைத்துப் பாடினார். இதனைப் பின்வரும் இரண்டு பாடல்கள் மூலம் அறியலாம்.

மற்றவர் கருவிப் பாடல் மதுரை நீடுஆல வாயில்
கொற்றவன் திருவுள்ளத்துக் கொண்டுதன் தொண்டர்க்கு எல்லாம்
அற்றைநாள் கனவில் ஏவ அருட்பெரும் பாணனாரைத்
தெற்றினார் புரங்கள் செற்றார் திருமுன்பு கொண்டு புக்கார். (3)

அன்பர்கள் கொண்டு புக்க பொழுதினில் அரிவை பாகன்
தன் பெரும் பணியாம் என்று தமக்கு மெய்யுணர்தலாலே
மன்பெரும் பாண னாரும் மாமறை பாடவல்லார்
முன்புஇருந்து யாழில் கூடல் முதல் வரைப் பாடுகின்றார். (4)

முப்புரம் எரித்தமை , அதற்காகத் தேரில் நின்றமை, யானையை உரித்தமை , காமனைக் காய்ந்தமை, அரிக்கும் அயனுக்கும் அரியர் ஆனமை, அடியார்க்கு எளியர் ஆனமை ஆகியவற்றையெல்லாம் பாணர் அன்போடு பாடினார். அப்போது இறைவனின் திருவருளினால் பாணனாருக்குச் சுந்தரப் பலகை இடுக என அசரீரி ஒலித்தது. இதைப் பின்வரும் இரண்டு பாடல்கள் மூலம் அறியலாம்.

திரிபுரம் எரித்த வாறும் தேர்மிசை நின்ற வாறும்
கரியினை உரித்த வாறும் காமனைக் காய்ந்த வாறும்
அரி அயற்கு அரிய வாறும் அடியவர்க்கு எளிய வாறும்
பரிவினால் பாடக் கேட்டுப் பரமனார் அருளினாலே (5)

அந்தரத்து எழுந்த ஓசை அன்பினில் பாணர் பாடும்
சந்தயாழ் தரையில் சீதம் தாக்கில் வீக்குஅழியும் என்று
சுந்தரப் பலகை முன்நீர் இடும்எனத் தொண்டர் இட்டார்
செந்தமிழ்ப் பாணனாரும் திருவருள் பெற்றுச் சேர்ந்தார். (6)

பாணர் திருவாரூர் அடைந்து அங்குள்ள தியாகேசரைத் துதிக்க விருப்பம் கொண்டார். திருவாரூர் சென்றார். திருக்கோயில் முன் நின்றார். இறைவனுடைய அருள் உள்ளத்தையும் பெரும் கருணையையும் போற்றிப் பாடினார். பிறகு இறைவனது எண்ணப்படி வடக்கு திசையிலுள்ள மற்றொரு வழியாகக் கோயிலுக்குச் சென்று தியாகேசப் பெருமானைத் துதித்தார். இதனைப் பின்வருமாறு சேக்கிழார் பெருமான் பாடினார்.

Koviloor Digital Library

தமனியப் பலகை ஏறித் தந்திரிக் கருவி வாசித்து
உமைஒரு பாகர் வண்மை உலகுஎலாம் அறிய ஏத்தி
இமையவர் போற்ற ஏகி எண்ணில் தானங்கள் கும்பிட்டு
அமரர் நாடு ஆளாது ஆரூர் ஆண்டவர் ஆரூர் சேர்ந்தார். (7)

கோயில் வாயில் முன் அடைந்து கூற்றம் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க்கு அளிக்கும் தண்ணளியும்
ஏயும் கருவியின் தொடுத்துஅங்கு இட்டுப் பாடக் கேட்டு அங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார் (8)

பல நாட்கள் அங்குத் தங்கி இருந்தார். திருஞான சம்பந்தரைத் தரிசிக்கப் பெரிதும் விரும்பினார். சீர்காழி அடைந்தார். திருஞான சம்பந்தரைக் கண்டு துதித்தார். அவர் பதிகம் பாடும்போது அதை யாழில் வாசிக்கும் திருப்பணி செய்தார். திருநல்லூர்ப் பெருமணத்தில் சோதியில் கலந்தார்.

எருக்கத்தம்புலியூர்

திருமுதுகுன்றத்துக்குத் தெற்கே ஏழு மைலில் உள்ள மிக உயர்ந்த சிவத்தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. இத் தலத்திற்கு ராஜேந்திர பட்டினம் என்னும் திருப்பெயருமுண்டு. நடுநாட்டிலுள்ள க்ஷேத்திரம். அம்மை பெயர் நீலமலர்க் கண்ணம்மை; இறைவர் பெயர் நீலகண்டேசுரர். தலவிருட்சம் வெள்ளெருக்கு.

கோயிலுக்குள் வெள்ளெருக்கஞ்செடியுளது. ஸ்ரீமுஷ்ணம் (பூவராக சுவாமி எழுந்தருளியுள்ள திருமுட்டம்) **எனும், விஷ்ணு க்ஷேத்திரத்திற்கு நான்கு மைலில் உள்ள திவ்ய தலம், தொழுவார் பிறவிப்பிணி யறுப்பது** எனும் வாரியார் கருத்தை அறிக.

வாரியார் கருத்து

சுந்தர மூர்த்தி நாயனாருடைய அவதாரம் திருத்தொண்டத் தொகைபாடுதற் பொருட்டே என்க. எனவே, திருவாரூரிலே இறைவனே அடியெடுத்துக் கொடுக்கப் பாடினார். தொகை யடியார் ஒன்பதின்மர். தனியடியார் அறுபது. ஆக அறுபத் தொன்பது. பின்னே நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரர், அவரை ஈன்ற சடையனார், இசைஞானியார் ஆக மூவரையும் சேர்த்து நாயன்மார் எழுபத்திரண்டு என்று அமைத்தனர். எனவே, சுந்தரர் பாடியருளியது அறுபது நாயன்மார்களைப் பற்றியே யென்க. அறுபதுதான் நல்ல எண். அந்த அறுபதுநாயன்மார்களில் முதலில் நின்றவர் திருநீலகண்டநாயனார். இறுதியில் நிற்பவர் திருநீலகண்ட யாழ்ப்பாணராகும். தில்லைவாழ் அந்தணர் என்பது

Koviloor Digital Library

இறைவன் அடியெடுத்துக் கொடுத்த தொகையடியாராகும். தனியடி யாரன்று. தனியடியார் அறுபதில் முதலிலும் முடிவிலும் இருந்து அணிசெய்பவர்கள் திருநீலகண்டர் என்ற பேருடையவர்களே. முதலிலே நின்ற, மாது சொன்ன சூளால் துறந்த திருநீல கண்டரினும் இவரைப் பிரித்து அறியும் பொருட்டே இவருடை ய பேருடன் யாழ்ப்பாணர் என்ற அடைகொடுத்துச் சேக்கிழாரடிகள் கூறி யருளினார். எனவே, சுந்தரர் கூறிய அறுபது நாயன்மார்களில் முடிமணியாக நின்று அலங்கரிப்பவர் இந்நாயனார் எனின் இவர் பெருமை அளவிடற் கரியதன்றோ?

இவர் யாழில் இசையுடன் இறைவனுடைய அருட்புகழை எடுத்து அன்புடன் வழிபட்டு முத்தி பெற்றனர். ஆகவே இறைவனை இசையுடன் அன்போடு பாடுவது எளியவழி. ''இறைவன் தன்சீர் திருத்தகும் யாழிலிட்டுப் பரவுவார்'' என்று சேக்கிழார் கூறுகின்றார். இவ்வாறு, இவர் பாடும்போது இறைவனுடைய மறக்கருணை அறக் கருணை என்ற கோபப் பிரசாதம் பற்றிக் கூறித் துதிக்கின்றார் இவர்.

மறக்கருணை அடியாரல்லாதாரைத் தண்டித்துத் திருத்துங் கருணை, அறக்கருணை-அடியார்க்குப் புரியுங் கருணை.

அருள்மிகு நீலமலர்க்கண்ணம்மை உடனுறை திருநீலகண்டேஸ்வரர்
திருக்கோயில், திருஎருக்கத்தம்புலியூர் என்னும்
இராஜேந்திரப்பட்டணம் அஞ்சல்,
விருத்தாச்சலம் வட்டம், கடலூர் மாவட்டம்–608 703.

Koviloor Digital Library

94 சடையனார் – இசைஞானியார்

(ஒவ்வொருவருக்கும் ஒரு பாடல்)

பிறந்த ஊர்	:	**திருநாவலூர்**	**ஊர்**	:	**திருநாவலூர்**
குலம்	:	**ஆதி சைவர்**	**குலம்**	:	**ஆதி சைவர்**
குருபூசை மாதம்	:	**மார்கழி**	**குருபூசை மாதம்**	:	**சித்திரை**
நட்சத்திரம்	:	**திருவாதிரை**	**நட்சத்திரம்**	:	**சித்திரை**

சுந்தரர் காலத்து நாயன்மார் (கி.பி. 840 - 865)

என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பராவாரே (தி.தொ. 11 : 3 & 4)

தம் தலைவராகிய சிவபெருமானையே தோழராய்க் கொண்ட பேறு பெற்றவர். சிவபெருமானையே பரவையாரிடம் தூது அனுப்பியவர். சேரமான் பெருமாள் நாயனாரின் ஒப்பற்ற நண்பர். இவ்வளவு சிறப்புகள் கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளை உலக உயிர்கள் எல்லாம் உய்வடையும் பொருட்டுப் பெற்றவர் சடைய நாயனார் ஆவார் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

தம்பி ரானைத் தோழமைகொண்டருளித் தமது தடம் புயம்சேர்
கொம்பனார் பால் ஒரு தூது செல்ல ஏவிக் கொண்டருளும்
எம்பிரானைச் சேரமான் பெருமாள் இணைஇல் துணைவர்ஆம்
நம்பிஆரூரரைப் பயந்தார் ஞாலம்எல்லாம் குடிவாழ. (1)

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். (குறள் – 67)

தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது. (குறள் – 68)

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும்சொல். (குறள் – 70)

ஆகிய குறட்பாக்களை இங்கு எண்ண வேண்டும்.

Koviloor Digital Library

சடைய நாயனார்

சமயக்குரவர் நால்வரில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை மைந்தராகப் பெற்றவர் இவர்.

திருஞான சம்பந்தரைப் பெற்ற சிவபாத இருதயரும், திருநாவுக்கரசரைப் பெற்ற புகழனாரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் வைத்து எண்ணப்படவில்லை. என்ன காரணம்? சம்பந்தரும் அப்பரும் சிவபெருமானைப் பாடியவர்கள். சுந்தரர் அடியார்களைப் பாடியவர். அரன் வழிபாட்டினும் அடியார் வழிபாடு சிறந்தது.

இறைவரோ தொண்டருள் ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே. (ஔவையார்)

என்றபடி திருத்தொண்டரை வழிபட்டு, திருத்தொண்டத் தொகை சொல்லி, உலகை உய்வித்த திருமகனாரைப் பெற்றதனால் இவர் நாயன்மாருள் ஒருவராம் பேறு பெற்றனர் என்க. ''ஒழியாப் பெருமைச் சடையனார்'' என்று இவரைச் சேக்கிழாரடிகள் புகழ்கின்றார்.

இனி, இவர் பெரிய தியாக புருஷராகவும் திகழ்ந்தார். இவர் தவஞ்செய்து அரிதிற் பெற்ற ஒரு மகனை, நரசிங்க முனையர் கேட்டவுடனே அவருக்குத் தந்துவிட்டார். இதனால்! இவருடைய தியாகம் வெளிப்படுகின்றது. இத்தகைய பல சிறப்புகள் இவர்பால் இருந்தபடியால் ''மேம்படு சடையனார்'' என்று ஆசிரியர் அருளிச் செய்தனர் எனும் வாரியார் கருத்தை அறிவுடையார் அறிக.

இசைஞானியார்

நீங்காப் பெருமையைத் தன்னகத்தே கொண்டவரான சடையனாரின் மனைவி இசைஞானியார். எவ்வகையிலும் அழிக்க இயலாத மூன்று கோட்டைகளை அழித்தவர் சிவபெருமான். அவரால் ஆட்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பெற்றெடுத்த பெருமை கொண்டவர் இசைஞானியார். சிறப்பு மிகுந்த சிவவேதியர் குலத்தில் தோன்றிய இசைஞானி பெருமையை என் சிற்றறிவால் செப்ப இயலாது. என்னால் மட்டுமல்ல யாராலும் முடியாது என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

ஒழியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்துஅழித்தார்
ஆண்ட நம்பி தனைப்பயந்தார்

Koviloor Digital Library

இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டியாரை என்சிறுபுன்
மொழியால் புகழ முடியுமோ?
முடியாது; எவர்க்கும் முடியாதால் (இசை. ஞா. 1)

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள் – 69)

எனும் தெய்வப் புலவரின் திருவாய்மொழியை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

வாரியார் கருத்து

குற்றமில்லாத கற்புடைய இவருடைய புண்ணியத்தின் திரட்சியே ஓர் உருவாகத் திரண்டு வந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார் என்க.

உலகிற்குப் புரிகின்ற கேடுகளுள் முதன்மையானது தீய மைந்தனைப் பெறுதல். நன்மைகளுள் முதன்மையானது தூய மைந்தனைப் பெறுதல். ஆகவே, திருத்தொண்டத் தொகை பாடி உலகங்களையெல்லாம் உய்வித்த உத்தமப் புதல்வரை யீன்ற இந்த உத்தமியார் பெருமை உரைக்கும் தரமன்று. எண்ணுக்கும் எழுத்துக்கும் அடங்காதது. ஆதலினாலன்றோ, சேக்கிழாரடிகள் அடியில் வருமாறு கூறுகின்றார்.

இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என்சிறுபுன்
மொழியால் புகழ முடியுமோ? முடியா தெவர்க்கும் முடியாததால்

குளிர்ந்த இயல்பு கொண்ட மேகம் பெய்யாது விட்டாலும் தன்னைச் சார்ந்தோரின் வயிறு பசிக்கும்படிக் கொடுக்காமல் இருக்க மாட்டான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். அவனைப் பெற்ற தாயின் வயிறு குறையின்றி விளங்குவதாக என்று வாழத்துகின்றார் குமட்டூர் கண்ணனார்...

வயிறு பசி கூர ஈயலன்
வயிறு மாசு இலீயர் அவன் ஈன்ற தாயே (பதிற்றுப்பத்து 2:10:26–27)

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். (வெ.ச. 53)

அருள்மிகு சுந்தராம்பிகை உடனுறை பக்த ஜனேஸ்வரர் திருக்கோயில்
திருநாவலூர் அஞ்சல் – 607 204,
உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்

Koviloor Digital Library

95. வெள்ளானைச் சருக்கம்

(53 பாடல்கள்)

திருத்தொண்டத் தொகையைப் பின்பற்றிச் சருக்கங்களின் பெயர் வைத்த முறைபோல, இச் சருக்கத்திற்குச் சுந்தரமூர்த்திகளின் நிறைவுப் பதிகத்தில் வரும் 'வெள்ளை யானை' என்ற தொடரால் பெயரிட்டார்.

திருத்தொண்டத் தொகையில் கூறப்பட்ட அடியவர்களின் வரலாற்றைக் கூறிய தெய்வச் சேக்கிழார் அடுத்ததாக, சுந்தரமூர்த்தி சுவாமிகள் கயிலைக்குச் சென்ற வரலாற்றை வெள்ளானைச் சருக்கத்தில் கூறுகிறார். வெள்ளானைச் சருக்கத்தில் சுந்தரர் வரலாறும் கழறிற்றறிவார் வரலாறும் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. சேரமான் பெருமாள் நாயனார் எனும் திருப்பெயர் கொண்டவர் கழறிற்றறிவார். இவர் எல்லாம் வல்ல சிவபெருமானின் துணை கொண்டு செங்கோலாட்சி செய்து வந்தார்.

சுந்தரர் திருவாரூரில் உமையொரு பாகனாம் சிவ பெருமானைத் தரிசித்து வந்தார். அப்போது சுந்தரருக்குச் சேரமான் பெருமாள் நாயனாரின் நினைவு தோன்றிற்று. எனவே அவர் ஆரூரரின் அன்பும் திருவருளும் பெற்றுப் பல தலங்களுக்கும் சென்று இறுதியில் கொங்கு நாடு சென்றார். அங்குள்ள திருப்புக்கொளியூருக்குச் சென்றார்.

இதனைப் பின்வரும் இரண்டு பாடல்களில் தெய்வச் சேக்கிழார் செப்புவார்.

ஆரம் உரகம் அணிந்தபிரான்
அன்பர்; அணுக்க வன் தொண்டர்
ஈர மதுவார் மலர்ச்சோலை
எழில் ஆரூரில் இருக்கும் நாள்
சேரர் பெருமாள் தனை நினைந்து
தெய்வப் பெருமான் கழல் வணங்கிச்
சாரல் மலை நாடு அணைவதற்குத்
தவிரா விருப்பினுடன் போந்தார். (3)

நல்நீர்ப் பொன்னித் திருநாட்டு
நாதர் மகிழும் திருப்பதிகள்
முன்னி இறைஞ்சி, அகன்று போய்,
முல்லைப் படப்பைக் கொல்லைமான்
துன்னி உகைக்கும் குடக் கொங்கில்
அணைந்து தூய மதிவான் நீர்
சென்னி மிசை வைத்தவர் செல்வத்
திருப்புக் கொளியூர் சென்றுஅடைந்தார்.(4)

Koviloor Digital Library

அவ்வூரில் சுந்தரர் மாடவீதியில் சென்று கொண்டிருந்தார். ஒரு வீட்டில் மங்கல ஒலி எழுந்தது. மற்றொரு வீட்டில் அழுகை ஒலி கேட்டது. இது குறித்துச் சுந்தரர் அருகில் இருந்தவர்களிடம் வினவினார். அப்போது அவர்கள் ''இரண்டு சிறுவர்கள் மடுவுக்குக் குளிக்கச் சென்றனர். ஒரு சிறுவனை முதலை விழுங்கிற்று. ஒருவன் பிழைத்து விட்டான். பிழைத்த சிறுவனது வீட்டில் உபநயனம் நடைபெறுகிறது என்று கூறினர்.

தம் இல்லத்துக்கு அருகே வருபவர் சுந்தரர் என மகனை இழந்த பெற்றோர்கள் அறிந்தனர். உடனே தம் துன்பம் மறந்தனர். சுந்தரரைத் தொழுதனர். சுந்தரர் அவர்களைப் பார்த்து மகனை இழந்தவர்கள் நீங்களா என வினவினார். அவர்களோ அது முன்பு நிகழ்ந்தது. வெகு நாட்களாகத் தங்களைக் காண வேண்டும் எனும் வேட்கை எங்களுக்கு இருந்தது. இன்று அது இறைவன் திருவருளால் கூடிற்று என்று கூறினர்.

தங்களுடைய துன்பத்தையும் மறந்து தம்மைக் காண வந்த அவர்களின் மீது சுந்தருக்கு இரக்கம் உண்டானது. அவர்களின் மகனை முதலையிடமிருந்து மீட்ட பின்னரே அவிநாசி இறைவரைத் தரிசிப்பேன் என்று சுந்தரர் உரைத்தார். உடனே மடுவு இருக்கும் இடம் சென்றார். அங்கு ஒரு திருப்பதிகத்தைப் பாடினார். உடனே அம்முதலை இரண்டு ஆண்டுகள் கூடுதலாக வளர்ச்சி பெற்ற பிள்ளையைக் கரைக்குக் கொண்டு வந்தது.

இதனைப் பின்வரும் மூன்று பாடல்களால் அறியலாம்.

மைந்தன் தன்னை இழந்த துயர் மறந்து, நான் வந்து அணைந்ததற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும் மனைவி தானும்; சிறுவனையான்
அந்த முதலை வாய் நின்றும் அழைத்துக் கொடுத்தே அவிநாசி
எந்தை பெருமான் கழல் பணிவேன் என்றார்; சென்றார் இடர்களைவார். (9)

இவ்வாறு அருளிச் செய்தருளி இவர்கள் புதல்வன் தனைக் கொடிய
வெவ்வாய் முதலை விழுங்கும் மடு எங்கே? என்று வினவிக் கேட்டு
அவ் ஆழ் பொய்கைக் கரையில் எழுந்தருளி அவனை அகன்றுகவர்
வெவ்வாள் எயிற்று முதலை கொடு வருதற்கு, எடுத்தார் திருப்பதிகம். (10)

'உரைப்பார் உரை' என்று எடுத்த திருப் பாட்டு முடியாமுன், உயர்ந்த
வரைப்பான் மையின் நீள் தடம் புயத்து மறலி, மைந்தன் உயிர் கொணர்ந்து,
திரைப்பாய புனலின் முதலை வயிற்று உடலின் சென்ற ஆண்டுகளும்
'தரைப்பால் வளர்ந்தது' என நிரம்ப, முதலை வாயில் தருவித்தான் (11)

பிறகு சுந்தரர் அவிநாசி இறைவரை வணங்கினார். அடுத்து மலைநாடு நோக்கிப் புறப்பட்டார். சேரமான் பெருமாள் நாயனார் இவரை அன்போடு அகம் மகிழ்ந்து வரவேற்றார். யானையின் மீது அமர வைத்தார். அரியாசனத்தில் அமர வைத்துத் துதித்தார். ஒருநாள் சேரமான் பெருமாள் நாயனார் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது

Koviloor Digital Library

சுந்தரர் திருவஞ்சைக்களக் கோயிலுக்குச் சென்றார். சுந்தரர் இறைவரிடம் தம்மைப் பிறவிக் கடலில் இருந்து கரை ஏற்ற வேண்டும் என்று வேண்டினார். இறைவன் ஆணைப்படி சுந்தரரைத் திருக்கயிலாயம் அழைத்துச் செல்ல திருமால், பிரமன் ஆகிய தேவர்கள் எல்லாம் வெள்ளை யானையைக் கொண்டுவந்தனர்.

சுந்தரரிடம் தேவர்கள் இறைவரின் திருவுள்ளக் குறிப்பைக் கூறினர். சுந்தரரும் இறைவரை நினைந்தார். தம்மை மறந்தார்.

தேவர்கள் சுந்தரரை வெள்ளை யானையில் ஏற்றி திருக்கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றனர் . அந்நேரத்தில் சுந்தரருக்குச் சேரமான் பெருமாள் நாயனாரின் நினைவு தோன்றியது.

சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரர் நிலை உணர்ந்தார். ஒரு குதிரை மீதேறித் திருவஞ்சைக்களம் சென்றார். சுந்தரர் வானத்தின் வழியாக வெள்ளை யானையின் மீதேறிக் கயிலாயம் செல்வதைக் கண்டார். உடனே தன் குதிரையின் காதில் திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதினார். அது வெள்ளை யானையை நெருங்கியது. வலம் செய்தது. அடுத்து முன்னே சென்றது.

சேரமான் பெருமாள் நாயனாரைத் தொடர்ந்து வந்தோர் எல்லாம் தங்களை வாளால் சிதைத்தனர். நுண் உடல் பெற்றனர். சேரமான் பெருமாள் நாயனாருக்கும் முன்னே தொழுது சென்றனர்.

சுந்தரர் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டே திருக் கயிலையை அடைந்தனர். சேரமான் பெருமாள் நாயனார் வெளியே நின்று கொண்டிருந்தார். சிவபெருமானைத் சுந்தரர் துதித்தார். சிவன் "ஆரூரனே வந்துவிட்டாயா " என்றார். அடுத்ததாகச் சேரமான் நாயனார் வெளியில் நின்று கொண்டிருப்பதைச் சுந்தரர் கூறினார். சிவன் அவரை அழைத்து வருமாறு உத்தரவிட்டார். சேரமான் பெருமாள் நாயனார் இறைவனைப் பணிந்து நின்றார்."யாம் அழைப்பு விடுக்காமல் வந்தது ஏன்? என்று வினவினார். உடனே அவர் "சுந்தர மூர்த்தி சுவாமிகளின் திருவடி தொழுது கயிலை அடைந்தேன், இறைவரின் பெருங்கருணை அடியேனைத் திருமுன்பு கொண்டு வந்து சேர்த்தது என்று கூறினார். பின்பு அடியேன் இறைவர் மீது திருக்கயிலாய ஞான உலா பாடியுள்ளேன் கேட்டருள்க"என்றார். இறைவர் இசைந்து கேட்டார். பின்னர் சிவபெருமான் சுந்தரரை ஆலால சுந்தரனாகவும் சேரமான் பெருமாள் நாயனாரைச் சிவகணத் தலை வராகவும் இருக்குமாறு உத்தரவிட்டடார். உமையின் திருவருளால் பரவையார் கமலினி ஆனார். சங்கிலியார் அநிந்திதை ஆனார்

சுந்தரர் பாடிய திருப்பதிகத்தை வருண தேவன் கொண்டு வந்து திருவஞ்சைக்களத்தில் சேர்த்தார். சேரமான் பெருமாள் நாயனார் பாடிய திருக்கயிலாய ஞான உலாவை மாசாத்தனார் திருப்பிடவூரில் வேதியர்க்கு அருளினார்.

Koviloor Digital Library

96. கயிலை யாத்திரை

(53 பாடல்கள்)

பெரிய புராணத்தில் வெள்ளானைச் சருக்கம் 53 பாடல்கள் கொண்டது. இதில் சுந்தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் மேற் கொண்ட கயிலாய யாத்திரை குறித்து இங்கு விரிவாகக் காணலாம்.

கயிலை மலையில் உமையம்மையோடு வெள்ளை இடபத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் "நம்பால் ஒன்றுபட்ட சித்தம் கொண்ட சுந்தரனை வெள்ளை யானை மூலம் அழைத்து வருக" என தேவர்களுக்குக் கட்டளை இட்டார்.

விண்ணாட்டவர்களான தேவர்களும் திருமால், பிரமன் முதலியோரும் திருவஞ்சைக்களம் சென்று தம் கால்கள் நிலத்தில் பதிய கோயிலின் வாயிலுக்கு வந்தனர். இதனைப் பின்வரும் இரண்டு பாடல்களில் கூறுகிறார். சேக்கிழார் பெருமான்,

மன்றல்அம்தரு மிடைந்த பூங் கயிலையில் மலை வல்லியுடன் கூட
வென்றி வெள்விடைப் பாகர்தாம் வீற்றிருந்து அருளிய பொழுதின்கண்
ஒன்று சிந்தை நம் ஊரனை உம்பர் வெள்ளானையின் உடன் ஏற்றிச்
சென்று கொண்டுஇங்கு வாரும் என்று அயன் முதல் தேவர்கட்கு அருள் செய்தார்.
(31)

வான நாடர்கள் அரி அயன் முதலினோர் வணங்கி முன் விடை கொண்டு
தூ நலம் திகழ் சோதி வெள்ளானையும் கொண்டு வன் தொண்டர்க்குத்
தேன்அலம்பு தண் சோலை சூழ்ம கோதையில் திருஅஞ்சைக்களம் சேரக்
கானிலம்கொள வலம் கொண்டு மேவினார் கடிமதில் திருவாயில். (32)

சுந்தரர் கோயிலிருந்து வெளியே வந்தார். அவரைத் தேவர் குழுவினர் எதிர்கொண்டு "இது இறைவரின் அருளிப்பாடு" என்று கூறிச் சுந்தரரை வணங்கினர்.

சுந்தரரைத் தேவர்கள் வெள்ளை யானையின் மீது அமர்த்தி கயிலைக்குக் கொண்டு செல்லும் போது சுந்தரருக்குக் கழறிற் றறிவாரின் நினைவு தோன்றியது. இதைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவார்.

Koviloor Digital Library

ஏற்ற தொண்டரை அண்டர் வெள்ளானையின் எதிர்வலம் கொண்டு ஏற்ற
நால்தடங்கடல் முழக்குஎன ஐவகை நாதம் மீது எழுந்து ஆர்ப்ப
போற்றி வானவர் பூமழை பொழிந்திடப் போதுவார் உயிர் எல்லாம்
சாற்றும் மாற்றங்கள் உணர்பெருந் துணைவரை மனந்தனில் கொடுசார்ந்தார்.(34)

கழறிற்றறிவார் சுந்தரரின் நினைவையும் அவரது செயலையும் அறிந்தார். உடனே பக்கத்தில் நின்றிருந்த குதிரை மீதேறி திருவஞ்சைக்களம் அடைந்தார். வான்வழி செல்லும் சுந்தரரைக் கண்டார். உடனே நிலத்தில் நின்றிலராய் தம் மனத்தோடு குதிரை யையும் முன் செல்ல விட்டார். இதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

சேரர் தம்பிரான் தம்பிரான் தோழர்தம்
செயல்அறிந்து அப்போதே
சார நின்றதோர் பரியினை மிசைக் கொண்டு
திருஅஞ்சைக் களம் சார்வார்,
வீர வெண்களிறு உகைத்து விண் மேல்செலும்
மெய்த் தொண்டர் தமைக் கண்டார்;
பாரில் நின்றிலர்; சென்ற தம் மனத்தொடு
பரியும் முன் செலவிட்டார். (35)

கழறிற்றறிவார் தம் குதிரையின் செவியில் திருவைந்தெழுத் தாகிய சிவ மந்திரத்தை ஓதினார். அக்குதிரை சுந்தரர் பயணிக்கும் யானையை நெருங்கியது. பிறகு வலங்கொண்டு அதன் முன்னே சென்றது.

கழறிற்றறிவாருடன் சென்ற படைவீரர்கள் தங்களை வாளால் சிதைத்துக் கொண்டனர். நுண் உடல் கொண்டனர். தம் மன்னவர்க்கும் முன்னே தொழுது சென்றனர்.

சுந்தரர், "தான் எனை முன் படைத்தான்" எனும் திருப்பதிகம் பாடி திருக்கயிலை சென்றடைந்தார். அடுத்துக் கழறிற்றறிவாரும் சென்றார். கழறிற்றறிவார் திருவாயிலிலேயே நின்றார். சுந்தரர் உள்ளே சென்றார்.

சுந்தரர் தாய்ப்பசுவைக் கண்ட கன்று போல மகிழ்ந்தார். சிவபிரான் சுந்தரரைப் பார்த்து "சுந்தரனே வந்தனையோ" என்றார்! சுந்தரர் சிவபெருமானின் கருணைத் திறத்தைப் போற்றினார். கழறிற்றறிவார் வெளியே நிற்பதைச் சுந்தரர் சொல்ல உடனே அவரை அழைத்து வருக என இறைவர் ஆணையிட்டார்.

Koviloor Digital Library

இதைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

நின்ற வன் தொண்டர் 'நீர் அணி வேணிய!
நின் மலர்க் கழல் சாரச்
சென்று சேரலன் திருமணி வாயிலின்
புறத்தினன்' எனச் செப்பக்
குன்ற வில்லியார் பெரிய தேவரைச் சென்று
கொணர்க என, அவர் எய்தி
வென்றி வானவர்க்கு 'அருளிப்பாடு' என,
அவர்கழல் தொழ விரைந்துஎய்தி (44)

கழறிற்றறிவாரைப் பார்த்துச் சிவபிரான் இங்கு நாம் அழைக்காமல் வந்தது ஏன்? என வினவினார். கழறிற்றறிவார். சுந்தரரின் திருவடி தொழுது கயிலை அடைந்தேன். தங்களது பெரும் கருணை என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தது என்று கூறினார். மேலும் இனிய விண்ணப்பம் ஒன்று உளது என்றார். இதைப் பின்வரும் பாடல் கூறும்.

அரசர் அஞ்சலி கூப்பி நின்று அடியனேன்
ஆரூரர் கழல் போற்றிப்
புரசை யானைமுன் சேவித்து வந்தனன்
பொழியும் நின் கருணைத் தெண்
திரைசெய் வெள்ளம் முன் கொடுவந்து புகுதலின்
திருமுன்பு வரப் பெற்றேன்
விரைசெய் கொன்றை சேர் வேணியாய், இனி ஒரு
விண்ணப்பம் உளது என்று. (46)

மெய்ம்மையான வேதங்களும் முனிவர்களும் துதிப்பதற்கு அரிய பெருமை கொண்ட இறைவரே உம்மீது யாம் கொண்ட அன்பால் யாம் உலா பாடியுள்ளோம். அதை அருள் கூர்ந்து கேட்க வேண்டும் என்றார். சிவபிரானும் கூறுமாறு பணித்தார். கழறிற்றறிவார் உலா பாடினார். இதைத் தெய்வச் சேக்கிழார் பின் வருமாறு கூறுவார்.

பெருகு வேதமும் முனிவரும்
துதிப்பரும் பெருமையாய்! உனை அன்பால்
திருஉலாப்புறம் பாடினேன்; திருச்செவி
சாத்திடப்பெற வேண்டும்;
மருவு பாசத்தை அகன்றிட வன் தொண்டர்

Koviloor Digital Library

கூட்டம் வைத்தாய் என்ன
அருளும் ஈசரும் 'சொல்லுக'
என்றனர்; அன்பரும் கேட்பித்தார். (47)

கழறிற்றறிவாரின் திருக்கயிலாய ஞான உலாவைச் சிவபிரான் கேட்டு மகிழ்ந்தார். பிறகு சுந்தரரை ஆலால சுந்தரனாக இருக்கப் பணித்தார். கழறிற்றறிவாரைச் சிவ கணங்களுக்குத் தலைவராய் இருக்கப் பணித்தார்.

பார்வதியின் அருளாலே பரவையார் கமலினியானார். சங்கிலியார் அனிந்திதை ஆனார்.

சுந்தரர் பாடிய திருப்பதிகத்தை வருணன் திருவஞ்சைக் களத்தில் சேர்த்தான். கழறிற்றறிவார் பாடிய திருக்கயிலாய ஞான உலாவை மாசாத்தனார் திருப்பிடவூரில் வேதியர்க்கு அருளினார்.

வாழி மாதவர் ஆலால சுந்தரர் வழியிடை அருள் செய்த
ஏழ்இசைத் திருப்பதிகம் இவ்உலகினில் ஏற்றிட எறி முந்நீர்
ஆழி வேந்தனாம் வருணனுக்கு அளித்திட அவனும் அவ்அருள் சூடி
ஊழியின் தனி ஒருவர் தம் திரு அஞ்சைக்களத்தில் உய்த்து உணர்வித்தான் (51)

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்,
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுஉளார் அடியார் அவர் வான் புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம். (53)

Koviloor Digital Library

97. பெரியபுராணம் ஒரு காப்பியம்

பொருள் தொடர் நிலைச் செய்யுள் இரண்டு வகைப்படும். அவை :

1. பெருங்காப்பியம்
2. காப்பியம்.

பெருங்காப்பியமே காப்பியம் என்று ஆங்கு
இரண்டாய் இயலும் பொருள்தொடர் நிலையே

(தண்டியலங்காரம் - 7)

அவற்றுள்,

பெருங்காப்பிய நிலை பேசுங்காலை
வாழ்த்து, வணக்கம், வருபொருள் இவற்றிலொன்று
ஏற்புடைத் தாகி முன்வரவு இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம் இரு சுடர்த்
தோற்றம் என்று இனையன புனைந்து
நன்மணம் புணர்த்தல், பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல், புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல், கலவியில் களித்தல் என்று

இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவு இகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப

(தண்டியலங்காரம்-8)

தெய்வச் சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளிய பெரிய புராணம் ஒரு மிகச் சிறந்த காப்பியம் ஆகும். இது, இதற்கு முன்னம் தோற்றம் பெற்ற எந்த ஒரு காப்பியத்தின் சாயலும் பெறாமல் தனக்கென ஓர் தனித்துவம் கொண்டுள்ளது. ஆனாலும் பெரிய புராணத்தின் புற அமைப்பனது, அது தோற்றம் பெற்ற காலத்தில் இருந்த காப்பியங் களை ஓரளவு தழுவியே அமைந்துள்ளமையை ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர்.

Koviloor Digital Library

அ.ச.ஞா . கருத்து

சேக்கிழாரைப் பொறுத்தவரை அவர் எடுத்துக் கொண்ட காப்பியப்பொருள் ஒரு பெருங்காப்பியம் அமைப்பதற்கு இடந்தருவது அன்று. அவருடைய காலத்தில் சிந்தாமணியும் கம்பனும் மக்கள் மத்தியில் நன்கு பயிலப்பட்டிருந்தனவாகலின் அவற்றின் அமைப்பு முறையை முற்றிலுமாக மாற்றுதல் அவருக்கும் முடியாத ஒன்றாகிவிட்டது. எனவே, திருத்தொண்டர் புராணத்தின் புற அமைப்பு – வழக்கிலிருந்த காப்பியங்களின் அடிப்படையில் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்ற உறுப்புகளுடன் அமைக்கின்றார். அவர் முன்னோடியாகக் கொண்ட சிலம்பு, மேகலை என்ற இரண்டு காப்பியங்களின் புறக் கட்டமைப்பைச் சேக்கிழார் மேற்கொள்ள முடியாதபடி காப்பியங்களின் வடிவம் பத்து நூற்றாண்டுகளில் மாறி விட்டது. எனவே அவர் தற்காலத்தில் பெருவழக்கினதாக இருந்த காப்பியப் புறக்கட்டமைப்பை மட்டும் எடுத்துக் கொண்டார். அதிலும் அவருக்குத் தொல்லைகள் ஏற்பட்டன. அறுபதுக்கும் மேற்பட்டவர்களின் வரலாற்றைப் பாட வேண்டிய நிலையில் இருந்தார். இவர்கள் அனைவரும் ஒரே ஊரில் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர். எனவே அவர் காப்பிய அமைப்பில் நாடு நகரப் படலங்கள் பாடவேண்டுமெனில் எந்த நாட்டைப்பாடுவது? எந்த நகரத்தைப் பாடுவது என்ற வினா தோன்றலாயிற்று.

எனும் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களின் கருத்தை இங்கு எண்ணிப்பார்க்க வேண்டும். இவ்வளவு சிக்கல்களுக்கும் இடையே சோழ நாட்டை, நாட்டுப்படலத்தில் பாடினார்.

பெரிய புராணத்தின் மையக்கருத்து

பெரிய புராணத்தைப் பன்னிரு திமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறை என்று மட்டுமே சிலர் எண்ணிப் பார்க்கிறார்கள். அது தவறாகும். தொண்டு நெறியின் சிறப்பை விளக்க வந்ததே பெரிய புராணம் என்பதை அறிவுடையார் அறிக. உணர்வுடையார் உணர்க. தெளிவுடையார் தெளிக. தெளிந்து உய்தி பெறுக.

காப்பியப் பாவிகம் தொண்டு

தொண்டு எனும் பண்பைக் காப்பியத் தலைமை இடத்தைப் பெறுமாறு செய்து விட்டமையின் உதிரி வரலாறுகள் என்று குற்றம்சாட்ட யாரும் முன்வரார். உதிரி வரலாறுகள்

Koviloor Digital Library

தொண்டின் பல்வேறு வகைப்பட்ட வெளிப்பாடுகளாகவும் செயல்களாகவும் இயங்குமாறு காப்பியத்தின் முழுத்தன்மைக்கு ஊறு நேராமல் பார்த்துக்கொண்ட பெருமை காப்பியப் புலவருடையது. தொண்டர்களின் வாழ்க்கை முறை பல்சுவையைத் தந்தன என்பது உண்மை. ஆனால் உறுப்புகள் பல்சுவை (VARIETY) ஊட்ட உதவின. காப்பியத்தின் பாவிகமாக அமைந்தது தொண்டின் சிறப்பேயாம். மரபு பற்றி எழுந்த பழைய காப்பியங்கள் தம் உறுப்புகள்மூலம் பல்சுவையைத் தந்தன என்பது உண்மை. ஆனால், அதே உறுப்புகள் சேக்கிழாரின் கையில் பட்டு அவருடைய முடிவான குறிக்கோளுக்கு உதவின. கதிரவன் உதயம், நிலவின் வெளிப்பாடு, தென்றல், ஆற்றின் ஓட்டம் என்பவை பெரியபுராணத்தில் இடம் பெற்றவுடன், இன்பம் தரும் நிகழ்ச்சிகளாக மட்டும் அமையாமல் புதிய சிறப்பைப் பெற்று அவருடைய குறிக்கோளுக்கு உதவும் இயல்பைப் பெற்றுவிட்டன என்கிறார் அ.ச.ஞானசம்பந்தன்.

தெய்வச் சேக்கிழார்பிரான் தம் முன்னோடிகளையும் தமக்கு முன்பு வாழ்ந்த அருளாளர்களையும் அடியொற்றித் தாமும் தமது சைவத் தொண்டை ஆற்ற முறையான வழிதேடி, காப்பியம் படைப்பதில் ஆர்வம் காட்டினார்.

பக்தி நெறியையும் தொண்டுநெறியையும் அடியார்களின் பெருமையையும் பேசுகின்ற ஒரு காப்பியம் படைக்க வேண்டும் . அக்காப்பியத்தைப் படிப்பவர்கள் சாதிபேதம் எதுவும் இல்லாமல் வாழவேண்டும் எனும் இரண்டு சிறந்த குறிக்கோள்கள் அவரிடம் இருந்தமையை அவர் இயற்றிய காப்பியம் மூலம் அறிய முடிகிறது.

சேக்கிழார் ஒன்று முதல் பதினொரு திருமுறைகளையும் ஆழ்ந்து கற்றவர். அதில் தோய்ந்தவர். தம் நூலில் பல இடங்களில் அப்பதிகங்களை எடுத்தாண்டு போற்றியவர்.

சான்றுகள்

தோடுடைய செவியன் எனும் மெய்ம்மை மொழித் திருப்பதிகம் (திருஞான ச.76.)

கூற்றாயினவாறு விலக்ககிலீர் என நீடிய கோதில் திருப்பதிகம் (திருநாவுக்கரசர் பு.-70.)

பித்தா பிறை சூடி எனப் பெரிதுஆம் திருப்பதிகம். (த.கொ.பு.74.)

ஏன எயிறணிந்தாரை ஒன்றவன்தான் என எடுத்து (தி.நா.பு. – 26)

கோலம்காண் பொழுது கொங்கை திரங்கி என்றுஎடுத்து (கா.அபு – 63)

எட்டி இலவம் ஈகை என எடுத்துத் திருப்பதிகம் (சா.அ.ப.–64)

தி-27

Koviloor Digital Library

98. பெரியபுராணம் ஒரு வரலாற்றுக் காப்பியம்

பெரியபுராணம் ஒரு வரலாற்றுக் காப்பியம். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சேக்கிழார் அநபாயன் எனப்படும் இரண்டாம் குலோத்துங்கச் சோழனுக்குத் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர். தொண்டை மண்டலத்துக் குன்றத்தூரில் பிறந்து, சோழ நாட்டின் அமைச்சராக விளங்கிய காரணத்தால் தம் காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளை நேரில் கண்டவர்; உடன் காலத்தவரால் சொல்லக் கேட்டவர்; வரலாற்றறிவு நிரம்பப் பெற்றவர். அமைச்சர் என்னும் முறையில் தமிழ்நாட்டுப் பகுதிகள் பலவற்றிற்கும் நேரில் செல்லும் வாய்ப்பினையும் தமக்கு முற்பட்ட காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் வாய்ப் பினையும் பெற்றிருந்தவர். அக்காலத்தே வரலாற்று மூலங்கள் என்று கருதப்பட்ட ஆவணங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஆணை ஓலைகள் ஆகியன அனைத்தும் அமைச்சருடைய பார்வைக்கு உரியன. பேரரசின் தலைமை அமைச்சர் என்ற நிலையில் இந்த மூலங்கள் எல்லாம் சேக்கிழாருக்கு எளிதில் கிடைத்தன.

திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களில் பெரும்பாலோர் பக்தி இயக்கக் காலத்தவர்கள். அவர்களுடைய இயக்கமும் தொண்டும் சமயம் சார்ந்தன. எனவே கோயில்களைச் சுற்றியே அவர்களது தொண்டு வாழ்க்கை அமைந்தது. திருக்கோயில்கள் எல்லாம் வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெற்றன.

திருக்கோயில்கள் எல்லாம் அரசின் மேற்பார்வையில் இருந்தன. அடியார்களது வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள விரும்பிய சேக்கிழார்க்குத் திருக்கோயில்கள் உதவின. திருத்தொண்டர்களைப் பற்றிய முன்னைய வரலாற்று மூலங்களாகிய திருமுறைகள் திருக்கோயில்களில் பாதுகாத்து, வைக்கப்பட்டிருந்தன. அவையும் சேக்கிழார்க்கு உதவின. மேலும் நாயன்மார்களில் பலர் வரலாற்றுச் சிறப்புடைய அரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் அமைச்சர் களாகவும் படைத்தலைவர்களாகவும் விளங்கியுள்ளனர். அவர்களைப் பற்றிய வரலாற்று மூலங்களும் திருக்கோயில்கள் வழி சேக்கிழாரின் வரலாற்றுப் பார்வைக்கு உதவின.

Koviloor Digital Library

சேக்கிழார் 12ஆம் நூற்றாண்டினர். அவர் பாடப்புகுந்த நாயன்மார்களின் வாழ்க்கை கி.பி.3ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்கு உரியது. அதாவது தமக்குச் சுமார் நானூறு ஆண்டுகட்கும் மிக முற்பட்ட தமிழக வரலாற்றுக் கூறுகளைப் பாட எடுத்துக்கொண்ட தெய்வச்சேக்கிழார் தம் காலத்தை மறந்து அடியார்கள் காலத்திலேயே மானசீகமாக வாழ்ந்து அவர்களுடைய வரலாறுகளைக் குறிப்பிட்டுள்ளார். சான்றாக, சேக்கிழார் தம் புராணத்துள் சோழநாட்டை வருணிக்கும் வாய்ப்பு பலமுறை ஏற்பட்டிருந்தாலும் தம் காலத்துச் சோழப் பேரரசின் தலைநகரமாகிய கங்கைகொண்ட சோழபுரம் பற்றிக் குறிப்பிடவேயில்லை. சோழ மன்னர்களிலேயே பேரரசனாகவும், பெரும்புகழுக்கு உரியவனாகவும் திகழ்பவன் முதலாம் இராசராச சோழன் ஆவான். கங்கை கொண்டு, கடாரம் கொண்டு, தமிழகம் முழுமையும் ஒரு குடைக்கீழ் மும்முடிச்சோழ மண்டலமாக ஆட்சி செய்தவன். தஞ்சையில் அவன் கட்டிய பெருவுடையார் கோயில் பற்றியோ, அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் கட்டிய கங்கைகொண்ட சோழபுரம் கோயில் பற்றியோ குறிப்பிடவில்லை. பேரரசன் இராசராசனும், அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழனும் பெற்ற வெற்றி பற்றியும் அவர்கள் இருந்த அரண்மனை, அவர்கள் கட்டிய திருக்கோயில்கள், அவர்கள் உருவாக்கிய தலை நகரங்கள் பற்றியும் குறிப்பிடவேயில்லை. சோழப் பெருநகரமாக நாயன்மார் காலத்திலிருந்த திருவாரூரை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். சிதம்பரம், சீர்காழி, திருவையாறு, திருமறைக்காடு போன்றவை வழிபடுதலங்க்ளாய்ப் போற்றப்பெற்றன. அங்ஙனமே, தேவார ஆசிரியர்களும், நாயன்மார்களும், பிறரும் சென்று வணங்கிய தலங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, அவை நாயன்மார்கள் காலத்தில் எவ்வாறு இருந்தனவோ அவ்வாறு மட்டுமே குறிப்பிடு கின்றார். அத்தலங்கள் சேக்கிழார் காலத்தில் விளங்கிய முறையில் பாடப்பெற வில்லை. நாயன்மார் காலத்திற்குப் பிறகு அவ்வத் தலங்கட்கு ஏற்பட்டிருந்த முன்னேற்றங்களையும், விரிவாக்கங் களையும், புதியதாகத் தோற்றம் பெற்ற அம்மன் சந்நிதிகளையோ, பிற சந்நிதிகளையோ சேக்கிழார் குறிப்பிடவே இல்லை. இதனால் காலவழு (அணச்ஞிடணூணிணடிண்ட்) என்னும் வரலாற்றுக் குற்றமில்லாத காப்பியமாகப் பெரியபுராணம் திகழ்கிறது.

வரலாற்று ஆவணம்

வரலாற்றுணர்வுடன் தம் காப்பியத்தைத் தெய்வச் சேக்கிழார் இயற்றும்போது திருமுறைகளையும் துணையாகக் கொண்டார்.

Koviloor Digital Library

அவற்றைத் துணையாகக் கொண்டதோடன்றி அவற்றை விளங்கிக் கொள்ளவும் துணையாகுமாறு தம் புராணத்தைப் படைத்துள்ளார். பெரியபுராணம் மட்டும் நமக்குக் கிடைத்திராவிடில், பல திருமுறை களுக்கு உற்ற பொருளும் பயனும் அறியமுடியாமற் போயிருக்கும். நாயன்மார்கள் பதிகம் பாடும் நிகழ்ச்சியை விவரிக்கும் போது அதற்கு முன்னரும் பின்னரும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பெரிய புராணம் கோவையாகக் கூறுகிறது. இப்பகுதிகள் இல்லையேல் பல திருமுறைப் பதிகங்களுக்குரிய காரண காரியங்களை நம்மால் உணர்ந்து கொள்ளவே இயலாமற் போயிருக்கும். எந்த ஊரில் என்ன காரணத்திற்காக எந்தப் பதிகம் பாடப்பெற்றது போன்ற வரலாற்றுக் குறிப்புகளைத் தெய்வச் சேக்கிழார் கூறுகிறார். இந்த வரலாற்றுச் சான்றாவணக் குறிப்புகளைத் தெய்வச் சேக்கிழார் பல பதிகங் களுக்குக் குறித்திருப்பதால்தான் பல பதிகங்களின் முறை வைப்பை நம்மால் உணரமுடிகிறது. எந்தெந்த நாயன்மாரைப் பாடுகிறாரோ, அந்தந்த நாயன்மார்களின் பதிக முதற்குறிப்பு களையே தம் பாடலுள் சேர்த்துப் பாடுவது சேக்கிழாரின் மரபு. சான்றாக, காரைக்கால் அம்மையார் பேய் வடிவம் பெற்றதும் மகிழ்ந்து பாடியதாக அற்புதத் திருவந்தாதியைக் குறிக்கிறார். இந்தக் குறிப்பின்றேல் இது பாடப்பட்ட சூழலை நாம் அறிய முடியாமற்போயிருக்கும். அவ்வாறே இறைவனது திருநடனத்தைத் திருவாலங்காட்டில் கண்டு மகிழ்ந்ததும் மூத்த திருப்பதிகம் பாடினார் எனக் கூறுகிறார். அது கொங்கை திரங்கி என்று தொடங்கு வதையும் குறிப்பிடுகிறார். திருவாலங்காட்டுத் திருப்பதிகம் எட்டி, இலவம், ஈகை என்று தொடங்குவதையும் மறக்காமல் குறிப் பிடுகிறார். சில இடங்களில் நாயன்மார்கள் எந்தெந்தப் பண்களால் தம்தம் திருப்பதிகங்களைப் பாடியுள்ளார்களோ, அந்தந்தப் பண்களா லேயே அந்தந்த நாயன்மார்கள் வரலாற்றைப் பாடியுள்ளார். இவை யெல்லாம் தெய்வச் சேக்கிழார் வரலாற்று மூலங்களின் அடிப் படையில் தம் நூலை யாத்துள்ளார் என்பதை விளக்கும் அகச் சான்றுகளாக மிளிர்கின்றன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்ற பெருமக்களுடைய வாழ்க்கைக் குறிப்புகள் மிகச்சிலவே தேவாரத்துள் அகச்சான்றாகக் கிடைக்கின்றன. ஆனால் தெய்வச் சேக்கிழார் அரிதின் முயன்று அவர்தம் தாய் தந்தையார் பெயர், உடன்பிறந்தார் பெயர், அவர் தம் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள், அப்பொழுது பாடப்பெற்ற பதிகங்களின் முதற் குறிப்புகள் ஆகியவற்றை விரிவாக எடுத்தியம்பியுள்ளார். நாயன்மா

Koviloor Digital Library

களின் வரலாற்றினை அறிந்து கொள்ளப் பெரியபுராணம் ஒரு வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. திருநாவுக்கரசர் தேவாரத்தைக் கொண்டு அவருடைய பெயரையோ, அவரின் தாய் தந்தை பெயரையோ, தமக்கையார் பெயரையோ அறிந்துகொள்ள முடியாது. தெய்வச் சேக்கிழார் அவரது வரலாற்றையும் கூறி, வரலாற்றுத் தொடர்புடையவர்களையும் கூறி, வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளையும் கூறி, அந்நிகழ்வுகளுக்குப் பின்னணியாகப் பாடப் பெற்ற பதிகங்களையும் கூறி, பதிகங்களின் தொடக்கத்தையும் கூறும் சேக்கிழாரின் திறம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது. திருவீழிமிழலையிலிருந்து மதுரை செல்லும் திருஞானசம்பந்தர் எந்தெந்தத் தலங்களைத் தரிசித்தார், எங்கெங்குத் தங்கினார், எந்தெந்தத் தலத்தில் என்னென்ன பதிகம் பாடினார் எனச் சேக்கிழார் பெருமான் தரும் குறிப்புகளை வைத்துக் கொண்டு இன்றும் நாம் அவர் காட்டியுள்ள வழியே மதுரை செல்லலாம், அனைத்துத் தலங்களையும் வழிபடலாம். இவ்வாறு ஒரு வரலாற்று உணர்வோடும், சரியான தகவல்களைத் தெளிவாகத் தரவேண்டும் என்ற ஆர்ய்ச்சி வேட்கையோடும் தெய்வச்சேக்கிழார் தம் காப்பியத்தை எழுதியுள்ளார். எனவே தமிழர்கள் பெரியபுராணத்தைச் சமயக் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்காமல் – படிக்காமல் இக்காப்பியம் பழந்தமிழர்களின் வரலாற்றைக் கூறும் ஆவணம் (Document) என்ற நிலையிலும் கண்டு உண்மையினை உணர்தல் நலம்.

Koviloor Digital Library

99. பெரியபுராணத்தில் இயற்கை

பெரிய புராணம் அடியார்களின் சிறப்பையும் பேரறிவுப் பெரும் பொருளாகிய சிவத்தின் சிறப்பையும் கூறுகிறது.

இறைவனின் எல்லையற்ற ஆற்றலையும் அளப்பரும் அருள் மாட்சியையும் அன்பர்க்கு எளிவரும் இரக்கத்தையும் பல்வகை மறக் கருணைத் திறத்தையும் பாங்குடன் பாடியவர்கள் திருமுறை ஆசிரியர்கள். பரந்து விரிந்து விளங்கும் இயற்கைப் படைப்பினைப் பார்க்கும் பொழுதெல்லாம் வரம்பற்ற முழு முதலின் காட்சியையும் கைபுனைந்தியற்றாக் கவின் பெரு வனப்பினையும் கண்டு உளங்குளிர்ந்து உருகிப் பாடியவர்கள். இயற்கையுடன் இதயம் கனிந்து உறவாடியவர்கள். சங்கப் புலவர்கள் காதலைக் கவிதையாகப் பாடுதற்கு இயற்கைப் பின்னணி எங்ஙனம் வாய்ப்பாக அமைந்ததோ, அங்ஙனமே திருமுறைக் கவிஞர்கள் கடவுளைக் கசிந்துருகிப் பாடுவதற்குப் பல்வகை இயற்கைக் காட்சிகளும் பின்புலமாக அமைந்துள்ளன. என்கிறார் சோ. ந. கந்தசாமி.

தெய்வச் சேக்கிழார் திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு ஆகிய பகுதிகளில் இயற்கைக் காட்சிகள் பலவற்றைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அது மட்டுமல்லாமல் பல்வேறு நாயன்மார்கள் தோற்றம் பெற்ற இடங்கள் குறித்துப் பாடும் இடங்களில் கூட இயற்கையையும் அதன் எழிலையும் மிக இனிமையாகவும் எளிமையாகவும் புலப்படுத்தியுள்ளமை போற்றுதலுக்கு உரியது ஆகும்.

நாகப்பட்டின வளம்

முத்து மாலைகளின் கோவை சரிய தேன்கொண்ட பூக்களைச் சூடிய சரிந்த கூந்தலினைப் பெற்ற மங்கையர் விளையாடுகின்றனர். அவர்கள் பந்து விளையாடுகின்ற மேடைகளைச் சூழ்ந்த பொன் மாளிகையின் மீது கடலில் உள்ள நீரினை முகந்த கரிய மேகங்கள் இவை மலை என்று கருதித் தவழுகின்றன. இவ்வாறு நாகப்பட்டினத்தின் இயற்கை எழிலை விளக்குகிறது பின்வரும் பாடல்.

தாம நித்திலக் கோவைகள் சரிந்திடச் சரிந்த
தேமலர்க் குழல் மாதர் பந்து ஆடுதெற்றிகள் சூழ்
காமர் பொன்சுடர் மாளிகைக் கருங்கடல் முகந்த
மாமுகில் குலம் மலைஎன ஏறுவ மருங்கு. (2)

Koviloor Digital Library

திருவொற்றியூர் வளம்

மேகம் தவழுகின்ற நீண்ட மலர்ச் சோலைகள் உடையது, அழியாத மதிலும் சூழ இருப்பது, சிறப்புற்று விளங்கும் தேர் உலாவுகின்ற நீண்ட தெருக்களை உடையது திருவொற்றியூர். அதன் பெருமையைப் பின்வரும் பாடல் கூறும்.

பேர்உலகில் ஓங்கு புகழ்ப் பெருந்தொண்டை நல்நாட்டு
நீர்உலவும் சடைக்கற்றை நிருத்தர் திருப்பதியாகும்
கார்உலவும் மலர்ச்சோலைக் கன்னி மதில் புடைசூழ்ந்து
தேர்உலவு நெடுவீதி சிறந்த திருஒற்றியூர். (கலிய நா.பு. 1)

மயிலாப்பூர் வளம்

மயிலாப்பூரில் தெருக்கள் தோறும் திருவிழாக்களின் அலங்காரம் விளங்குகின்ற தன்மையைப் பின்வரும் பாடலில் தெய்வச் சேக்கிழார் செப்புவார்.

வீதி எங்கும் விழா அணிக் காளையர்
தூது இயங்கும் சுரும்பு அணி தோகையர்
ஓதி எங்கும் ஒழியா அணிநிதி
பூதி எங்கும் புனைமணி மாடங்கள் (வா.நா. பு. – 5)

சீர்காழிவளம்

சீர்காழிப் பதியின் சிறப்பினையும் பொலிவினையும் சீரினையும் பின்வருமாறு தெய்வச் சேக்கிழார் விளக்கியுள்ளார்.

சீர்காழித் தலத்தின் நீர் மடைகளில் சங்கு மணிகளின் குவியல் உள்ளது. வயல்களில் கயல் மீன் கூட்டம் உள்ளது. வயலின் பக்கத்தில் பூக்களின் குவியல் இருக்கிறது. அவற்றின் புறத்தில் வேள்வியின் பொலிவு உள்ளது. வேதம் கற்கும் இடங்களில் கலைச்சூழல் நிலவுகிறது. சோலைகளில் வண்டுகளின் ஓசை உள்ளது. இடையில் முனிவர்களின் கூட்டம் உள்ளது. புற மதில்களில் எல்லாம் மேகமானது படர்ந்து இருக்கின்றது.

மடைஎங்கும் மணிக்குப்பை வயல்எங்கும் கயல்வெள்ளம்
புடைஎங்கும் மலர்ப்பிறங்கல் புறம்எங்கும் மகப்பொலிவு
கிடைஎங்கும் கலைச்சூழல் கிளர்வுஎங்கும் முரல் அளிகள்
இடைஎங்கும் முனிவர்குழாம் எயில்எங்கும் பயில்எழிலி.
(திருஞான ச.பு. 13)

இமயமலையின் உச்சியில் புலிக்கொடி நாட்டிப் புகழ்பெற்றது காவிரி நாடு. அந்நாட்டில் கரும்புகள் எல்லாம் காடுகள்போல்

Koviloor Digital Library

இருக்கின்றன. சோலைகளின் மலர்க்கிளைகளில் உள்ள தளிர்களில் மலர் அரும்புகள் இருக்கின்றன. அதன் பக்கங்களில் கரிய நிறம் கொண்ட குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. வயலில் எங்குப் பார்த்தாலும் வளையல்கள் கொண்ட பெண்கள் இருப்பர். நீர்நிலைகளின் கரைகளில் அன்னங்கள் இருக்கும். எல்லாக் குளங்களும் கடல்போல் பரப்பளவைக் கொண்டவை ஆகும். அதன் காரணமாக நாடு முழுவதும் நீர்நாடு என்று சொல்லத் தகுந்தவாறு இருக்கின்றது. இத்தகைய மிகுந்த சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட சோழ நாட்டுக்குப் பிற நாடுகள் ஈடாகா. இதனைப் பின்வரும் பாடல் கூறும்.

காடுஎல்லாம் கழைக் கரும்பு காஎல்லாம் இழைக்கு அரும்பு
மாடுஎல்லாம் கருங்குவளை வயல்எல்லாம் நெருங்குவளை
கோடுஎல்லாம் மடஅன்னம், குளம்எல்லாம் கடல் அன்ன
நாடுஎல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலம்எல்லாம் (தி.நா.சி. - 17)

பெண்ணையாற்றின் வளம்

பெண்ணை ஆற்றின் பெருமையைத் தெய்வச் சேக்கிழார் கூறுவதைக் காணலாம். மலையிலிருந்து வரும் வழியில் மணிக்குவியல்களையும் முல்லைப் புறவின் நறுமலர்களையும் திரைகளினால் தாங்கி வந்து இரு மருங்கிலும் சார்ந்துள்ள பண்ணை வயல்களில் வீசி எறிந்து விரைந்து செல்லும் பெண்ணையாறு நடு நாட்டின் வளம் பெருக்கும் ஆறாக உள்ளது. இதைப் பின்வருமாறு சேக்கிழார்பிரான் சித்திரிக்கிறார்.

புனப்பண்ணை மணியினொடும் புறவின்நறும் புதுமலரின்
கனப்பு எண்ணில் திரைசுமந்து கரைமருங்கு பெரும்பகட்டுஏர்
இனப்பண்ணை உழும் பண்ணை எறிந்துஉலவி எவ்உலகும்
வனப்புஎண்ண வரும் பெண்ணை மாநதிபாய் வளம் பெருகும் (திரு.நாவு.பு. 3)

பகடு என்பது காளை. பெருங்காளைகளை ஏரிற் பூட்டி வயல்களில் உழும் காட்சியையும் இப்பாடலில் காண்கிறோம். வேளாண் சமுதாயத்தின் வளத்தினை அக்குடியில் தோன்றிய சேக்கிழார் அறிந்து அழகுறப் பாடியுள்ளார். பிற்காலத்தெழுந்த காப்பியங்கள், தல புராணங்கள் முதலிய இலக்கியங்களில் ஆற்றுப் படலம் பாட முற்பட்ட பாவலர்க்கு, சேக்கிழாரின் சொல்லோவியங்கள் முன் மாதிரிகளாக மிளிர்ந்துள்ளன. எனும் சோ. ந. கந்தசாமி கருத்தை இங்கு நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

Koviloor Digital Library

100. பெரிய புராணத்தில் இறைமை

தெய்வச் சேக்கிழார் திருவாய் மலர்ந்து அருளிய பெரிய புராணம் திருத் தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் பெருங் காப்பியம் ஆகும். 4286 பாடல்களில் அடியார் பெருமைகளைத் திறம்பட எடுத்துக்கூறிய பெருமை தெய்வச் சேக்கிழாருக்கு உண்டு. தொண்டர்களின் பெருமை பேசிய அவர் எல்லாம் வல்ல இறைவனின் பெருமைகளை எடுத்துக் கூறினார்.

உலகுஎலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்;
நிலவுஉலாவிய நீர்மலி வேணியன்;
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்;
மலர்சிலம்புஅடி வாழ்த்தி வணங்குவாம். (பெ.பு. க.வா.)

எனும் முதல் பாடலிலேயே சிவபெருமானின் பெருமைகளைக் கூறியுள்ளார்.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே (க.ரா.க.வா.)

எனும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் பாடலும்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள் : 1)

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் முதல் குறளும்

உயர்வற உயர் நலம் உடையவன் எவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன்அவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே (திருவாய்மொழி : 1)

எனும் நம்மாழ்வார் பாடலும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

இறைவன் வானமாகவும் நிலமாகவும் நெருப்பாகவும் காற்றாகவும் சூரியனாகவும் நிலவாகவும் ஊனாகவும்உயிராகவும் உணர்வாகவும் அனைத்து உலகமாகவும் உலகுக்கு அப்பால் ஆனாத வடிவாகவும் இருக்கின்ற தன்மையைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவார்.

Koviloor Digital Library

வான்ஆகி நிலன்ஆகி அனலும் ஆகி
மாருதம்ஆய் இருசுடர்ஆய் நீரும்ஆகி
ஊன்ஆகி உயிர்ஆகி உணர்வும்ஆகி
உலகங்கள் அனைத்தும்ஆய் உலகுக்குஅப்பால்
ஆனாத வடிவுஆகி நின்றார். (தி.ச.பு.563)

ஆதியாய், நடுவாய், அந்தமாய், அளவிலா அளவு சோதியாய், உணர்வாய் பொருளாய், ஏகமாய் பெண்ணாய், ஆணாய், என எல்லாமாய் இறைவன் இருக்கின்றமையைப் பின்வரும் பாடல் கூறும்.

ஆதிஆய் நடுவும்ஆகி அளவுஇலா அளவும்ஆகிச்
சோதிஆய் உணர்வும்ஆகித் தோன்றிய பொருளும்ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணும்ஆய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. (தி.அ.1)

கற்பனை கடந்தவனாகவும் கருணையே வடிவமான வனாகவும் அற்புதக் கோலத்தைத் தன்னகத்தே கொண்டு மறைகளின் தலையாய் இருப்பவன் இறைவன். திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புற நடனம் புரியும் இறைவனின் பூங்கழலைப் பின்வருமாறு தெய்வச் சேக்கிழார் போற்றுவார்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம்ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேல்ஆம்
சிற்பர வியோமம்ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று,
பொற்புஉற நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி! (தி.அ. 2)

ஆரணங்களை இந்த உலகிற்குக் கொடுத்தவன் ஏழு உலகங்களையும் படைத்தவன் அருள் உள்ளம் கொண்டவன் அனைத்தினுக்கும் காரணனாய் இருப்பவன் வளத்தைப் பெருக்கக் கூடிய கருணைத் திரு வடிவானவன் என்பதை,

ஆரணமும் உலகுஏழும் ஈன்றருளி அனைத்தினுக்கும்
காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவுஆன
சீர்அணங்கு சிவபெருமான் (தி.ச.பு.67)

எனும் அடிகள் விளக்கும். கருணை, அருள், அன்பு, உயிர், ஒளி, அறிவு, ஆகிய சொற்கள் அனைத்தும் சிவத்தைக் குறிப்பன என்பதை அறிய வேண்டும்.

எப்பொருளையும் ஈசனே உருவாக்குகிறான் என்பதை,

"எப்பொருளும் ஆக்குவான் ஈசனே " (தி.ச.பு.71)

Kovileor Digital Library

எனும் அடியில் தெய்வச் சேக்கிழார் கூறுவார். மிகப்பெரிய அரிய தவங்கள் செய்த முனிவர்களாலும் தேவர்களாலும் காணுதற்கு அரியர் என்று இறைவனைப் பின்வருமாறு சேக்கிழார் பெருமான் கூறுவார்.

சார்வரும் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும் காணுதற்கு அரியார். (க.ந.128)

இறைவனை அறிவாலும் ஆராய்ச்சியாலும் காண முற்பட்ட சித்தர்கள் என்றும் அவரை அறிந்தது இல்லை. பக்தர்கள் மிகுந்த பக்தியோடு இறைவனை வணங்கும்போது இறைவன் அந்தப் பக்தர்களின் முன்பு சென்று அவர்களுக்கு முக்தி கொடுக்கிறான் என்கிறார் திருமூலர். (திருமந்திரம் : 284)

கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளை கொடுத்துப் பரம்பொருளைப் பார்த்ததாகத் தாயுமானவரும் கூறுகிறார்.

கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளைகொடுத்து உன்னருளைப்
பார்த்தவன்நான் என்னைமுகம் பாராய் பராபரமே (தா.பா.தி.666)

கூர்த்த அறிவினைக் கொண்டு இறைவனை அறியக்கூடாது என்று குருபிரான் அறிவுறுத்தியபடி அருளால் கண்டு தெளிந்தேன் என்கிறார் தாயுமானவர்.

கூர்த்த அறிவால் அறியக் கூடாதெனக் குரவன்
தேர்ந்தபடி தானே தெளிந்தேன் பராபரமே (தா.பா.தி.904)

தெய்வச் சேக்கிழார் இறைவனைக் குறித்துப் பாடிய பின்வரும் அடிகள் குறிப்பிடத்தக்கவை;

1. மூவாத முதல்ஆகி நடுஆகி முடியாத
   சேஆரும் கொடியார்(ஏ.க.125)
2. உம்பர் உய்ய உலகுஉய்ய ஓல வேலை விடம்உண்ட தம்பிரானார் (ஏ.க.35)
3. அத்தனாய் அன்னையாய் ஆர்உயிராய் அமிர்துஆகி
   முத்தனாம் முதல்வன் (கோ.நா.12)
4. எல்லாம் உடைய ஈசனே இறைவன் (சா.நா.7)
5. பிறங்கு சோதி விரியாநின்று எவ்வுலகும் விளங்கிய பொன்னம் பலத்து மேவி ஆடல் புரிய நின்றவர். (தி.பு.175)
6. மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள் தோறும் சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர். (தி.நீ.342)

Koviloor Digital Library

7. தாண்டவம் புரிய வல்ல தம்பிரானார் (அப்பூதி.அ.பு.1)
8. வேதங்கள் மொழிந்த பிரான் (கா. அ. பு. 18)
9. ஆதியோடு அந்தம் இல்லான் (கா. அ. பு. 66)

அங்கு இருக்கிறது இங்கு இருக்கிறது என்று சொல்லாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்திருப்பது சிவம். அது மனம் வாக்கிற்கு எட்டாதது .அதைப் பற்றி விரிவாக நம்மால் விளங்கிக் கொள்ள இயலாது, ஏனெனில் அது உரையும் மனமும் கடந்த பெருவெளியில் அரசு செய்து வருகிறது. இதைத்தான் சமயகோடிகள் எல்லாம் தம் தெய்வம் என்றும் எம் தெய்வம் என்றும் கூறி வருகின்றனர்.ஆனால் பொருள் ஒன்றுதான் என்பதை நாம் அறிய வேண்டும். அந்த ஒன்றான பரம்பொருளையே தெய்வச் சேக்கிழார் உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன், என்றும் கற்பனைக் கடந்த ஜோதி என்றும் போற்றிப் பரவுகிறார்.

Koviloor Digital Library

101. பெரியபுராணத்தில் தொண்டு நெறி

தொண்டு என்பது பொதுவான தொண்டைக் குறிப்பது. திருத்தொண்டு என்பது இறைவனுக்குச் செய்யப்படும் தொண் டினைக் குறிக்கிறது. சாதாரண தொண்டாக இருந்தாலும் சரி அல்லது திருத்தொண்டாக இருந்தாலும் சரி அது கைம்மாறு கருதாதது என்பதை நாம் அறிய வேண்டும்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றும் கொல்லோ உலகு (குறள் : 211)

எனும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் கருத்தை நாம் எல்லோரும் அறிய வேண்டும்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் (தி.கூ.சி. - 8)

இப்பாடலின் **வீடும் வேண்டா விறலின் விளங்கினார்** எனும் நான்காம் அடியை உணர்வுடையார் உணர்க.

உலக மக்களுக்குச் செய்யும் தொண்டே பேரறிவுப் பெரும்பொருளாகிய இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும்.

1. **மக்கள் தொண்டே மகேசன் தொண்டு**
2. **ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்**

என வரும் பொன்மொழிகளை எண்ணிப் பார்த்தல் நலம் பயக்கும். அடியார்க்கு உணவு அளித்துச் செய்யும் தூய தொண்டினை "மகேசுவர பூசை" என்றே சைவநெறி போற்றுகிறது.

படமாடும் கோயில் பகவர்க் கொன்றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பகவர்க்கு அஃதாமே. (திரு. 1857)

எனவரும் திருமந்திரப்பாடல் இங்குக் குறிப்பிடத்தக்கது. அடியார்கள் எவராக இருப்பினும் அவர்களுக்குப் பல நிலைகளில் பல்வேறு உதவிகள் தொண்டுகள் செய்த திருத்தொண்டர்களின் பெருமை பெரிய புராணத்தில் விளக்கப்பட்டு உள்ளது.

Koviloor Digital Library

தொண்டின் சிறப்பு

திருவீழிமிழலைக்குத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் சென்றிருந்தனர். அப்போது மக்கள் பஞ்சத்தால் வாடினர். இதனால்இருவரும் மனம் வருந்தினர். அன்று இரவு அவர்கள் கனவில் இறைவன் பின்வருமாறு கூறினார்.

உலகுஇயல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய
உறுபசி நோய் உமைஅடையாது எனினும் உம்பால்
நிலவு சிவநெறி சார்ந்தோர் தம்மை வாட்டம்
நீக்குதற்கு நித்தம் ஓர்ஓர் காசு நீடும்
இலகு மணிப் பீடத்துக் குணக்கும் மேற்கும்
யாம்அளித்தோம் உமக்கு இந்தக் காலம் தீர்ந்தால்
அலகுஇல் புகழீர்! தவிர்வதாகும் என்றே
அருள் புரிந்தார் திருவீழிமிழலை ஐயர் (திருஞானசம்பந்தர் புரணம் 564)

மேலும் காசும் தந்தார். இருவரும் தனியாக மடம் அமைத்தனர் . இறைவன் கொடுத்த பொற்காசு கொண்டு உணவிட்டனர். அப்பர் அளித்த காசிற்கு உடனே பொருள்கள் கிடைத்தன. இவர் ஏற்படுத்திய மடத்தில் உணவு உரிய நேரத்தில் படைக்கப்பட்டது. ஆனால் திருஞான சம்பந்தர் மடத்தில் காலதாமதம் ஆனது. இதனால் திருஞானசம்பந்தர் மனம் வருந்தினார். இதனைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலில் கூறுவர்.

திருஞான சம்பந்தர் அதனைக் கேட்டுச்
சிந்திப்பார் சிவபெருமான் நமக்குத் தந்த
ஒரு காசு வாசிபட மற்றுஅக்காசு
நன்றுஆகி வாசிபடாது ஒழிவான் அந்தப்
பெருவாய்மைத் திருநாவுக்கரசர் தொண்டால்
பெறும்காசாம் ஆதலினால் பெரியோன் தன்னை
வருநாள்கள் தரும்காசு வாசிதீரப்
பாடுவேன் என்று எண்ணிஅது மனத்துள் கொண்டார். (தி.ச.பு. 569)

அடுத்த நாள் வாசிதீரக் காசு நல்கும்படிக் கேட்டுப் பெறுகிறார் திருஞானசம்பந்தர்.

தொண்டினை மூன்றின் மூலமாகச் செய்தல் கூடும் . ஒன்று மனத்தின் மூலமாகச் செய்தல். இரண்டு வாக்கின் மூலமாகச் செய்தல். மூன்று மெய் மூலமாகச் செய்தல். இம்மூன்றாலும் செய்யும் தொண்டே மிகுந்த சிறப்புக் கொண்டது ஆகும். திருஞானசம்பந்தர் மனத் தொண்டும் வாக்குத் தொண்டும் செய்தவர். ஆனால் மெய்த்

Koviloor Digital Library

(உடம்பு) தொண்டு செய்யாதவர். அப்பர் பெருமானோ அனைத்துத் தொண்டுகளும் செய்தவர். அதனால்தான் திருஞான சம்பந்தருக்கு வாசியுடன் காசு தரப்பட்டது. அப்பருக்கு வாசியில்லாக் காசு தரப்பட்டது.

தொண்டு செய்தல் என்பது மிகச் சிறந்த பண்பாடு ஆகும். தொண்டுக்கு அடிப்படையாக அமைவது இறையுணர்வே என்பதனைத் தெய்வச் சேக்கிழார் கூறியுள்ளார். தொண்டர்கள் தம்முடைய வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சமாகக் கருதுவது தொண்டினையே. இதனால் தான் தெய்வச் சேக்கிழார் பலவாறு தொண்டர்களைப் பாராட்டுவார்.

சான்றுகள்

மெய்த் தழைந்து விதிர்ப்புஉறு சிந்தையார்
கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினார்(திருக்கூட்டம்-5)

மாசுஇலாத மணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறு போல்உள்ளும் புனிதர்கள் (திருக்கூட்டம் -6)

வேண்டுமாறு விருப்புஉறும் வேடத்தர்
தாண்டவப் பெருமான் தனித் தொண்டர்கள்(திருக்கூட்டம்-10)

பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல் நீக்கும் திருத் தொண்டர் புராணம் என்பாம்.

(பாயிரம் பா-10)

அளவுஇலாத பெருமையர் ஆகிய
அளவுஇலா அடியார் புகழ் கூறுகேன் (பாயிரம்-5)

தெரிவுஅரும் பெருமைத்திருத் தொண்டர் தம்
பொருஅரும் சீர் புகலல்உற்றேன் (பாயிரம்-6)

திருத்தொண்டர்கள் சுயநலம் நீங்கியவர்கள். பொதுநலம் போற்றியவர்கள். தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெற்றியாளர்கள்.

திருத்தொண்டர் புராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூவரும் தொகையடியார்கள் ஒன்பதின்மரும் உண்மையில் சமயத் தொண்டர்களாக மட்டுமின்றிச் சமுதாயத் தொண்டர்களாகவும் திகழ்ந்துள்ளனர். தன்னலமற்ற தியாகச் செம்மல்களாகத் திகழும் இவர்களை அருள் மறவர்கள் என்று அழைத்தல் தகும். என்ற சோ. ந. கந்தசாமி அவர்கள் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

இராமகிருஷ்ணர் கருத்து

சாதாரண மனிதர்கள் இரயில் பெட்டி போன்றோர் அப்பெட்டிகள் பொலிவோடும் பளபளப்போடும் இருந்தாலும் தாமாக எங்கும் செல்ல அவற்றால் முடியாது. கருமை நிறமும் பொலிவற்ற வடிவமும் உடைய இயந்திரங்களே பெட்டிகளை இழுத்துச் செல்லும் வல்லமை உடையவை. அடியார்கள் இந்த இயந்திரங்கள் போன்றவர்கள் எனும் இராமகிருஷ்ண பரம ஹம்சரின் கருத்தை அறிக .

டாக்டர் மு.வ.

திருநாவுக்கரசர் எண்பத்து ஒன்று வயது மூப்பிலும் உழவாரப்படை கொண்டு தொண்டு செய்ததும் மகாத்மா காந்தியடிகள் இறுதிநாள் வரை ராட்டினம் கொண்டு நூல் நூற்று தொண்டு செய்ததும் தங்கள் மனத்தைப் பக்குவப் படுத்த அவர்கள் மேற்கொண்ட வழியாகும். தொண்டு செய்யாத வாழ்க்கை குறையுடைய வாழ்க்கையாக அமையும். எனும் மு.வ. அவர்களின் கருத்தை இங்கு நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். தொண்டு செய்வோம். தொண்டின் வழி மனம் செம்மையுறும். செம்மையுற்ற மனத்தாமரையில் இறைவன் எழுந்தருளுவான். **தொண்டே தொழுகை.**

Koviloor Digital Library

102. பெரியபுராணத்தில் பக்தி நெறி

பெரிய புராணம் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட பெருங்காப்பியம் ஆகும். அறுபத்து மூன்று நாயன் மார்களும் ஒன்பது தொகை அடியார்களும் இறைவன் மீது கொண்ட பக்தியை விளக்குகிறது இந்நூல்.

எவராலும் காண்பதற்கரியனாய் நிற்கும் இறைவன், தன்னிடம் அன்பு செய்வார்க்கு எளிதில் வசப்படுகிறான். தவத்தில் ஒழுகி உருகுவார் உள்ளத்தினுள் அவ்வுருவாய் நிலைபெற்று அருள்கின்றான். இறைவனால் விரும்பி ஆட் கொள்ளப் பட்டவர்கள் அவனது அடியார்கள். இறைவன் மீது கொண்டுள்ள பேரன்பினால், தம் மேனியில் மயிர்ப்புளகமும் உடல் நடுக்கமும் மன நெகிழ்வும் உடைய அவர்கள் இறைத் தொண்டையே தம் கடமையாய் ஏற்று வாழ்பவர்களாவர். என்று முனைவர் (திருமதி) எம்.தேவகி அவர்கள் தமது ஐந்தெழுத்து அருள்நிலை எனும் நூலில் கூறியுள்ள கருத்துரைகள் கருதத்தக்கன.

இறைவனது பெருமையையும் இயல்பையும் அறிந்த பின் எழும் பெருங்காதலே பக்தியாகும். உலகின் நிலை யாமையை உணர்ந்து துறவு நெறியில் நின்று இறைவனிடம் அன்பு பூண்டு மனங் கசிந்துருகி அவனுடைய திருவடியை அடைய வேண்டும் என்னும் விருப்புணர்வினைப் பக்தி எனலாம். நதிகள் எல்லாம் கடலை நோக்கி விரைவது போல மனிதன் இறைவனை அடைய விழைவதே பக்தி.

பேரின்பக் காதலில் உள்ளம் நெகிழ்ந்து தன் அகமன அனுபவத்தைப் பிறர்க்கு எடுத்தோதும் ஆவலில் முகிழ்ப்பவை பக்தி இலக்கியங்கள். பக்தி இலக்கியங்களில் உள்ளத்தை உருக்கும் அன்பு நிலையும் பக்தியின் எல்லையுமே தலையாய கொள்கையாகத் தோன்றுகிறது என்று சிவ மங்கையர்க்கரசி அவர்கள் 'பக்தி இலக்கியக் கொள்கை'' என்னும் நூலில் கூறியுள்ளமை உணரத்தக்கது.

சுந்தரர் திருவாரூரில் இருக்கும் காலத்தில் அவருடைய உள்ளத்தில் தோன்றிய பக்தி உணர்வைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

Koviloor Digital Library

படியில் நீடும் பத்திமுதல் அன்பு நீரில் பணைத்துஓங்கி
வடிவு நம்பி ஆரூரர் செம்பொன் மேனி வனப்புஆகக்
கடிய வெய்ய இருவினையின் களைகட்டுஎழுந்து கதிர் பரப்பி
முடிவுஇலாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்ததால் (வெ.ச. – 2)

அப்பரின் பக்திக் கோலத்தைப் பின்வரும் இரண்டு பாடல்களில் அறியலாம்

தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துஉருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே (திருநாவு.பு – 140)

சிந்தைஇடை அறா அன்பும் திருமேனி தன்னில்அசைவும்
கந்தம் மிகையாம் கருத்தும் கைஉழ வாரப்படையும்
வந்துஇழி கண்ணீர் மழையும் வடிவில் பொலி திருநீறும்
அந்தம்இலாத் திருவேடத்து அரசும் எதிர் வந்துஅணைய (தி.ச.பு.–270)

பத்தராய்ப் பணிவார்களின் இயல்பு

பக்தர்களின் தன்மையைப் பின்வருமாறு கூறுவார் தெய்வச் சேக்கிழார்.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றுஆடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுஉடையார் தொண்டர்ஆம் குணம்மிக்கார் (ப.ப.பு.–7)

இங்ஙனம் பக்தி செய்து வாழும் பக்தர்களின் பெருமையைக் கூறுவது அரியது ஆகும்.

பக்தியின் சிறப்பைக் கூறவந்த மாணிக்கவாசகப் பெருமான் தாம் இயற்றிய திருவாசகத்தில் பின்வருமாறு திருவாய் மலர்ந்து அருளி இருக்கின்றார்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.

(திருவாசகம் அச்சோப்பதிகம் – 1)

முத்திக்கு உழன்று முனிவர் குழாம் நனிவாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி
தித்திக்குமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ?

(திருவாசகம் – திருத்தெள்ளேணம் – 12)

Koviloor Digital Library

திருக்கூட்டத்தார் முற்காலத்தில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர்கள். இறைவன்மீது இவர்கள் கொண்ட பக்தி உடல் முழுதும் உள்ளதால் மயிர்க்கால்கள்தொறும் புளகாங்கிதம் அடைந்து விதிர்ப்பு அடைவர். இவர்கள் இறைவனுக்குத் தொண்டு செய்வதையே தமக்குரிய கடமை என்று இருப்பார்கள். இவர்கள் தொண்டர்களை அன்றி வேறு தரத்தினரைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்தழைந்து விதிர்ப்புஉறு சிந்தையார்
கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினார்
இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார் (தி.கூ.சி. – 5)

ஐந்து பூதங்களும் தம் நிலையில் கலங்கினாலும் உமையொரு பாகனாம் சிவனின் திருவடிகளை மறக்காதவர்கள். அவர்கள் உயிர்களின் மீது மிகுந்த அன்பு செலுத்துவர். குற்றம் அற்ற குணப் பெருங்குன்று போன்றவர்கள் என்று கூறுகிறது பின்வரும் பாடல்.

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதுஒர் பாகர் மலர்த்தாள் மறப்புஇலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோது இலாத குணப்பெருங் குன்றுஅனார். (தி.கூ.சி. – 7)

கேடு, ஆக்கம் இரண்டும் அற்ற செம்மை மனம் கொண்டோர் ஓடு செம்பொன் இரண்டையும் ஒன்றாகக் கருதுவார். அவர் இறைவனை வணங்குதலைத் தவிர முத்தியைக் கூட வேண்டாத தன்மை உடையோர் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். (தி.கூ.சி. – 8)

உருத்திராட்சத்தை மாலையாகக் கொண்டோர், எளிமைமிகு ஆடை உடுத்துவோர். ஈசனுக்குப் பணி செய்தலைத் தவிர்த்த வேறு கடமை இல்லாதவர்கள், கசிந்து உருகும் அன்பினை உடையோர். எந்தக் குறையும் இல்லாத வர்கள். அவர்களின் உறுதிப்பாடு என்னால் சொல்லும் தகைமையானதோ என்று கேட்கிறார் தெய்வச் சேக்கிழார்.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலது ஒன்றுஇலார்
ஈர அன்பினர் யாதும் குறைவுஇலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ? (தி.கூ.சி. – 9)

Koviloor Digital Library

103. பெரியபுராணம் காட்டும் சமுதாயம்

ஓர் ஒப்பற்ற மிகப்பெரிய கவிஞனானவன் தான் வாழ்ந்த காலம் தனக்கு முற்பட்ட காலம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறான் என்று மேலை நாட்டுத் திறனாய் வாளர்கள் கூறுவர்.

தெய்வச் சேக்கிழார் தாம் வாழ்ந்த காலத்தில் இருந்த சமூகச் சூழலைச் சமுதாய அமைப்பை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

ஆதி சைவர் பெண் கேட்டல்

ஒருவர் தன் மகனுக்குத் திருமணம் செய்ய வேண்டும் எனில் தன் மனைவி மற்றும் குடும்பப் பெரியவர்கள் சகிதம் செல்வது இக்கால வழக்கம். ஆனால் இவ்வழக்கம் சேக்கிழார் காலத்தில் வேறு விதத்தில் இருந்தது. அதாவது சேக்கிழார் காலத்தில் ஒருவர் தன் மகனுக்குத் திருமணம் செய்ய வேண்டும் எனில் தாம் செல்லாமல் வேறு சில பெரியோரை அனுப்புவர் . இது ஆதி சைவர்கள் பெண் கேட்கும் முறையாக இருந்தது. இதனைத் தெய்வச் சேக்கிழார்.

குலமுதல் அறிவின் மிக்கார் கோத்திர முறையும் தேர்ந்தார்
நலம்மிகு முதியோர் செல்ல ...." (த.ஆ.பு. – 8)

எனும் அடிகளில் கூறுகிறார்.

மணம் பேசும் முறை

திருமணம் எவ்வாறு பேசப் பெறுகிறது என்பதனைத் தடுத்தாட் கொண்ட புராணத்தில் பதிவு செய்துள்ளார் சேக்கிழார் பெருமான்.

சான்றுகள்

1. உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றி
   கொற்றவர் திருவுக்குஏற்பக் குறித்து நாள் ஓலைவிட்டார்.
   (த.ஆ.பு. – 9)

2. மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
   அம்கயல் கண்ணினாரும் ஆடவர் பலரும் ஈண்டி
   கொங்குஅலர் சோலை மூதூர் குறுகினார். (த.ஆ.பு.–10)

Koviloor Digital Library

அ.ச.ஞா. கருத்து

தனி ஒருவனுடைய செயல்களில் அவனுடைய சுற்றத்தார் பங்கு கொண்டமையை அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

சமுதாயத்தில் வாழும் மக்கள் தம்முள் ஒருவனுக்கு வருகின்ற குறைவு நிறைவுகளில் தாமும் பங்கு கொண்டனர். சுற்றத்தார் என்பவர்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் தம்முள் ஒருவனுக்கு வரும் நன்மை தீமைகளில் தமக்கும் பங்கு உண்டு என்றும் கருதினர். இயற்பகையார் தம் மனைவியைப் பகைவற்கு ஈந்தார் என்ற செய்தி கேட்டு அனைவரும் திரண்டெழுந்து தங்கள் சமுதாயத்திற்கு வரும் அவமானத்தைத் துடைக்கப் புறப்பட்டனர் என்று காப்பியம் கூறுவதில் இவர்களிடையே உள்ள கட்டுப்பாடு தெரிகிறது. ஆனால் இதே சமுதாயம், உறவினர்கள் என்பவர்கள் ஏனாதி நாதருடன் தாயத்தான் போர் புரியவந்ததைத் தடுக்கவில்லை. உறவினர்களுள் ஒருவன் சம்பாதிப்பதை, அவன் சேர்த்து வைத்துள்ளதைச் சமயம் நேரும் போது அனைவரும் பகிர்ந்து உண்ணத் தயாராகவே இருந்தனர். பங்காளிகள் சொத்தைப் பங்கிட நினைப்பவர் இன்றும் உண்டு. கோட்புலியார் சேகரித்து வைத்துப் போன நெல்லை அவர் இல்லாத பொழுது எடுத்து உண்டதில் யாரும் மருட்சி கொண்டதாகத் தெரியவில்லை. பெருநகரங்களில சூதாடும் மக்கள் இருந்தனர். சிறந்த சூதாட்டக்காரர் முதல் ஒன்றிரண்டு ஆட்டங்களில் வந்தவரை வெல்ல வைத்து அடுத்தடுத்து வரும் ஆட்டங்களில் தாமே வெல்வது என்பது அன்றும் பரவலாக இருந்தது என்பதை மூர்க்க நாயனார் புராணத்தில்,

> முற்சூது தாம் தோற்று முதற்பணையம் அவர் கொள்ளப்
> பிற்சூது பலமுறையும் வென்று பெரும் பொருளாக்கி
> சொற்சூதால் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்தி
> நற்சூதர் மூர்க்கர் எனும் பெயர் பெற்றார் நானிலத்தில். (மூ. நா. – 9)

என்று கூறும் பொழுது அற்றை நாள் சமுதாயத்தின் ஒரு பகுதியைப் புரிந்து கொள்ள முடிகின்றது. முதல் இல்லாமல் அல்லது சிறு முதலை வைத்து வேறு எவ்வித முயற்சியும் செய்யாமல் பொருள் சேகரிக்க வேண்டும் என்று கருதுவோர் எக்காலத்தும் உளர். இவர்களை நம்பித்தான் சூதாடு கழகங்களும் பரிசுச் சீட்டுகளும், குதிரைப் பந்தயங்களும் நடை பெறுகின்றன.

Koviloor Digital Library

இன்றைய சமுதாயம் அன்றைய சமுதாயத்திலிருந்து அதிகம் மாறிவிடவில்லை.

நீதி பரிபாலனம்

நீதி எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை அக்கால மக்கள் அறிந்து இருந்துள்ளனர். எந்த ஒரு குற்றச் சாட்டை யார் மீது சுமத்தினாலும் அதற்குப் போதிய சான்றுகள் இருக்கவேண்டும் என்பது இக்கால நீதி இயலார் கருத்து. இது அக்காலத்திற்கும் பொருந்தும். அதனால் தான் தடுத்தாண்ட கொண்ட புராணத்தில் அவையினர்,

ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்று அயலார் தங்கள் காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய், என்று சுந்தரரைப் பார்த்துக் கேட்டனர்.

சாதிப் பாகுபாடு பார்க்காமை

சாதிப்பாகுபாடு இல்லாமல் திருமணம் நடத்த அக்காலத்தில் சிலர் உத்தேசம் கொண்டிருந்ததை நாம் அறிய முடிகிறது. அதனால்தான் செட்டியார் சமூகத்தைச் சார்ந்த சிவநேசர் பிராமண சமூகத்தைக் சார்ந்த திருஞானசம்பந்தரிடம், தம் மகளைத் தர விரும்பினார்.

சுற்றம் நீடிய கிளைஎலாம் சூழ்ந்துஉடன் கேட்பக்
கற்ற மாந்தர் வாழ் காழிநாடு உடையவர்க்கு அடியேன்

பெற்றுஎடுத்த பூம்பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் யான் என்று மொழிந்தார்.

(தி.ச.பு. 1053)

வணிகர் நிலை

அக்கால வணிகர்களின் நிலையைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

மானம்மிகு தருமத்தின் வழிநின்று வறுமையினில்
ஊனம்இல் சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டுஏறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகு திருக் காரைக்கால் (கா.அ.பு. – 1)

வாழ்க்கையில் எந்தத் துறையில் நின்றாலும் என்ன தொழிலைச் செய்தாலும் அதிலும் ஓர் அரிய குறிக்கோளை

Koviloor Digital Library

வைத்துக்கொண்டு வாழ்ந்து பெரியவர்களாக ஆக முடியும் என்பதை இவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையை மேற்கொண்டால் தான் உயர் நிலையை அடைய முடியும் போலும் என்ற ஐயத்திற்கு இடமே இல்லாமல், எல்லாத் துறைகளிலும் நின்று அன்றாட வாழ்க்கையை நடத்திச் சமுதாய மரபுகட்குப் பெரும் பாலும் கட்டுப்பட்டு வாழ்ந்து கூடப் பெருநிலையை அடைய முடியும் என்பதை இவர்கள் காட்டினர் . அதன் அருமைப் பாட்டை உணர்ந்த சேக்கிழார் தமிழ்ச் சமுதாயம் சீர் குலையாமல் வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் இடம் பெறவேண்டு மாயின், இவர்கள் வாழ்க்கை தக்க பாடமாகும் என்று கண்டு அதனைக் கூறவே இக்காப்பியத்தைப் பாடினார் என்ற அ.ச. ஞானசம்பந்தம் அவர்களின் கருத்து இங்குக்குறிப்பிடத் தக்கது.

1. சுந்தரர் சாதி வேறுபாடு பார்க்காது சங்கிலி, பரவையாரை மணந்தமை.
2. திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருநீலநக்கர் இல்லத்தில் தங்கியமை.
3. திருநீலநக்கர் துணைவியார் கணவருடன் கர்ப்பகிரகத்தில் வழிபாடு இயற்றியமை.
4. திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தரோடு திருக்கோயில் உள்ளே சென்று வழிபட்டமை.
5. திருநீலகண்ட யாழ்ப்பாணர் மதுரையம்பதியில் இறைவர் விருப்பால் கர்ப்பகிரகத்தில் சென்று பொன் தவிசிட்டு யாழ்மீட்டிப் பாடியமை ஆகியவை இணைத்துப் பார்க்கத் தக்கன.

Koviloor Digital Library

104. பெரிய புராணத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

சுந்தரர் திருவாய் மலர்ந்து அருளிய திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, திருமுறைப் பாடல்கள், கோவிலில் கிடைத்த கல்வெட்டுகள், பல செப்பேடுகள், பல சாசனங்கள், செவி வழிச் செய்திகள் இவற்றையே சான்றுகளாகக் கொண்டு தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்தினை எழுதினார். இச்சான்றுகளை இருவகைப் படுத்தலாம்.

1. புறச்சான்றுகள்

2. அகச்சான்றுகள்.

செவிவழிச் செய்திகளைப் புறச்சான்றுகளாகக் கருதலாம். ஏனையவற்றை அகச்சான்றுகளாகக் கருதலாம்.

பல்வேறு அகச் சான்றுகளையும் புறச்சான்றுகளையும் கொண்ட பெரிய புராணம் வாழ்வியல் சிந்தனைகள் பலவற்றைக் கூறியுள்ளது.

பெரிய புராணத்தில் அரசியல்

ஓர் அரசன் எங்ஙனம் நீதி பரிபாலனம் செய்ய வேண்டும் என்பதைத் தெய்வச் சேக்கிழார் விளக்கியுள்ளார்.

ஒரு மாநிலத்தில் ஆட்சி செய்கின்ற அரசன் பின்வரும் ஐந்தால் வரும் பயத்தைத் தீர்க்கும் கடப்பாடு உடையவன்.

1. தன்னால் இடையூறு
2. தன் பரிசனத்தால் இடையூறு
3. பகைவரால் இடையூறு
4. கள்வரால் இடையூறு
5. உயிர்களால் இடையூறு

இவற்றைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

Koviloor Digital Library

மாநிலம் காவலன்ஆவான் மன்உயிர்க் காக்கும்காலைத்
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனம்மிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர்கள் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லனோ?

(திருநகரச் சிறப்பு : 36)

மனைஅறம்

ஒரு மனை அறம் எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக இருப்பவை திரு நீலகண்ட யாழ்ப்பாணர், இளையான்குடி மாற நாயனார் போன்றோர் வரலாறுகளாகும்.

தற்காத்துக் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள் :56)

எனும் தெய்வப் புலவரின் கருத்துக்கு நல்ல சான்றுகளாகத் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் மனைவியையும் இளையான் குடி மாறநாயனாரின் மனைவியையும் கருதலாம்.

குறிக்கோள்

தெய்வச் சேக்கிழார் குறிப்பிடும் அடியார்கள் அனைவரும் ஒரு கொள்கை உடையவர்கள். தாம் கொண்ட கொள்கைக்கு ஏற்ப வாழும் புனிதர்கள். தமது கொள்கையை நடை முறைப்படுத்துவதில் தடைகள் ஏற்படின் அத்தடைகளை நீக்கியவர்கள். அத்தடைகள் நீங்காவிடில் அதற்காகத் தம் உயிரையும் கொடுக்கும் கொள்கை மறவர்கள்.

பெண் பெருமை

பெரிய புராணத்தில் மகளிர் பெருமைப் படுத்தப் பெற்றுள்ளனர். பெண்ணை அடிமைப்படுத்துவது என்பது தமிழ் நெறி அன்று. ஆண் ஆதிக்கம் செய்கின்றமையும் தமிழர் நெறி அன்று. பெண்ணுக்கு உரிய மதிப்பு தருவதே செந்தமிழ் நெறியாக இருக்கின்றது. தெய்வச் சேக்கிழாருக்கும் பெண்ணைப் பெருமைப் படுத்துகின்ற செந்தமிழ் நெறியே ஏற்றதாக இருந்தது. வாழ்க்கையில் ஒரு பகுதியாகிய இல்லத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண் டிருக்கிற பெண், குடும்பத்தில் விருந்தோம்பல், தானம் வழங்குதல் முதலிய உரிமைகள் பலவற்றையும் பெற்றிருந்தாள். இதனைப்

Koviloor Digital Library

பின்வரும் காரைக்கால் அம்மையார் புராணப் பாடலால் அறியலாம்.

> **நம்பர்அடியார் அணைந்தால் நல்ல திரு அமுதுஅளித்தும்**
> **செம்பொன்னும் நவமணியும் செழும்துகிலும் முதலான**
> **தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்**
> **உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகும் நாள்** (கா.அ.பு.–15)

ஒப்புரவு நெறி

ஒப்புரவு நெறி உயர்ந்த உன்னத நெறியாகும். ஏழைகளுக்கு உணவளிப்பதும் விரும்தோம்பலும் பெரிய புராணத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இளையான்குடிமாற நாயனார், அப்பூதி அடிகளார் போன்றோர் வரலாறுகள் நல்ல சான்றுகளாக உள்ளன. அடியார் களுக்கு உரிய ஆடைகளை அளித்த அமர்நீதி நாயனார் நேச நாயனார் மற்றும் ஆடைகளை வெளுத்துக் கொடுத்த திருக்குறிப்புத் தொண்டர் வரலாறுகள் படிப்பினையாக உள்ளன.

வணிக நெறி

இன்றைய வியாபாரிகள் கலப்படம் செய்தல் போன்ற செயல்கள் செய்து பொருள் ஈட்ட விழையலாம். ஆனால் இது முறையான வணிக நெறி ஆகாது.

> **வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
> **பிறவும் தம்போற் செயின்** (குறள் : 120)

என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறளை இங்கு நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒரு வணிகன் எப்படி வணிகம் செய்ய வேண்டும். வணிகம் எங்ஙனம் நடக்க வேண்டும் என்று காரைக்கால் அம்மையார் புராணத்தில் விளக்கி இருக்கிறார் தெய்வச் சேக்கிழார்.

> **மானம்மிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்**
> **ஊனம்இல் சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி**
> **கூனல்வளை திரை சுமந்து கொண்டுஏறி மண்டுகழிக்**
> **கானல் மிசைஉலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்.** (கா.அ.பு.1)

பெரியபுராணத்தில் பாடப்பெற்றுள்ள பெருமக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வெற்றிபெற்ற நற்றவச் சான்றோர்கள்

Koviloor Digital Library

பெரியபுராணத்தில் வருகின்ற அடியார்களுக்குப் பத்தி யுண்டு. ஆனால், பத்தியென்ற ஒரு தகுதி கருதியே சேக்கிழார் பாடிவிடவில்லை. சீலத்திலும் நோன்பிலும் செறிவிலும் அறிவிலும் ஆரா அன்பிலும் அருளிலும் சிறந்து விளங்கிப் பத்திமையும் கொண்டு ஒழுகியவர்களைத்தாம் சேக்கிழார் பாடினார். வாழ்க்கையைக் குறிக்கோளுடையதாகக் கொண்டு குறிக்கோளையடையும் உறுதியும் பூண்ட- இன்ப துன்பங் களைப் பொருட்படுத்தாது இலட்சியப் பயணம் செய்த தவச் செல்வர்களைத்தாம் சேக்கிழார் சிந்தை குளிர, உளம் குளிர வாழ்த்துகின்றார். பத்திமைப்பாங்கில் நின்றவர்களும் திருத் தொண்டின் நெறியில் நின்றவர்களுமே போற்றப் பட்டிருக் கிறார்கள். '' மாதேவர்க்கு ஏகாந்தராக'' ஒழுகித் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டவர்களாகிய அடியார் பெருமக்களின் வாழ்க்கையை எந்த வேறுபாடும் கருதாது திருத்தொண்டின் தகுதி ஒன்றையே தகுதியாகக் கருதிப் பெரியபுராணத்தைப் பாடியிருப்பதொன்றே அஃதோர் உலகப் பொதுநூல் என்பதற்குச் சான்றாகும் எனும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கருத்து அறியத்தக்கது.

நிறைவாக...

அறுபத்து மூவரும் வாழ்ந்து காட்டிய பெருமக்கள். தங்களால் இயன்ற தொண்டினை இடையறாது செய்து இறையருளைப் பெற்றவர்கள் நாயன்மார்கள்.

Koviloor Digital Library

105. பெரிய புராணத்தில் சைவ சித்தாந்தம்

தமிழில் தோன்றிய மிகச்சிறந்த மெய்ப் பொருள் கோட்பாடு சைவ சித்தாந்தம். தமிழ் மக்களின் நுண் அறிவின் மிகத் தேர்ந்த படைப்பாக விளங்குவது சைவ சித்தாந்தம் என்று ஜி.யூ.போப் அவர்கள் தம்முடைய திருவாசக மொழிபெயர்ப்பின் முன்னுரை யில் போற்றி இருக்கின்றார்.

சைவ சித்தாந்தம் வாழும் தத்துவம் ஆகும். இது தமிழர்களுக்கே உரிய நெறி என்பதற்குத் தமிழகத்திலும் தமிழர்கள் வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், உள்ளிட்ட நாடுகளிலும் இன்றும் நடைமுறையில் இம் மக்களால் பின்பற்றப்பட்டு வருதலே சான்றாகும். அன்றியும் இந்திய நாட்டின் வேறு பகுதிகளில் உள்ள மக்களில் ஒருவர் கூட, சைவ சித்தாந்தத்தினைத் தம் தத்துவம் என்று உரிமை கொண்டாடாமையையும் ஒரு சான்றாகக் கொள்ளலாம் எனும் பேராசிரியர் சோ.ந.கந்தசாமி அவர்களின் கருத்து குறிப்பிடத்தக்கது.

சித்தாந்தம் விளக்கம்

சித்தம்+அந்தம் - சித்தாந்தம் என்றாகும். சித்தம் என்ற சொல் நிலைநிறுத்தப் பெற்ற உண்மை என்றும் அந்தம் என்பது முடிவு என்றும் பொருள் தரும். இவ்விரண்டு சொற்களும் இணைந்து நின்று முற்ற முடிந்த மெய்ப்பொருட் கொள்கை என்னும் கருத்தினைக் குறிக்கும் என்று சித்தாந்தத்திற்குச் சிறப்பான விளக்கம் ஒன்றினை அளித்துள்ளார் பேராசிரியர் சோ. ந. கந்தசாமி அவர்கள்.

சைவ சித்தாந்தம் பதி,பசு,பாசம், எனும் முப்பொருள் உண்மையைக் கூறுகிறது. இவற்றை முறையே இறை உயிர், தளை, எனத் தமிழில் வழங்குவர். இறை,உயிர்,தளை மூன்றும் ஆதியும் அந்தமும் அற்றவை! இவை என்றும் உள் பொருள்கள் தளை என்பது மூன்று வகைப்படும். அவை ஆணவம்,கன்மம், மாயை ஆகும். மும்மலம் நீங்கினால் முக்தி கிடைக்கும். இருவினையொப்பு, மலபரிபாகம், திருவருள் வீழ்ச்சி எனும் சத்திநிபாதம் எய்தி வீடு பெறல் வேண்டும் என்பதே சைவசித்தாந்தம்.

Koviloor Digital Library

இருவினைப் பாசம்மும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளும் மெய் அஞ்செழுத்து, அரசை இக்கடல்
ஒருகல் மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ? (திரு. நா. பு. 129)

இப்பாடல் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் இருவினைப் பாசம் என்பது சைவ சித்தாந்தம் கூறும் இருவினை அதாவது காரிய கன்மம் (நல்வினை,தீவினை) என்பதைக் குறிக்கிறது. பின்னால் குறிப்பிடும் 'மும்மலம்' என்பதில் உள்ள கன்மம் காரண கன்மம். இது மூல கன்மம் என்றும் கூறப்படும்.

வினை:

உயிர்கள் தமது வாழ்க்கையில் இன்பங்களையும் துன்பங் களையும் அனுபவிக்கின்றன. அவற்றுக்குக் காரணம், முன்னைப் பிறப்பில் செய்த வினைகளே. வினைகளே உயிர்களுக்குரிய பிறவிகளுக்கும் தேகங்களுக்கும் நுகர்வுகளுக்கும் கருவிகளுக் கும் காரணம். சமணம் வினையை ஏற்கிறது. ஆனால் வினையை உயிர்கட்குச் சேர்க்கும் இறைவனை ஏற்பதில்லை.உயிர்கள் செய்யும் வினைகள் தாமாகவே சென்று அவர்களைச் சாரும் என்று சமணம் கூறுகிறது. ஆனால் சைவ சித்தாந்தம் வினை உயிரை நாடாது. உயிர் வினையை நாடாது. வினைப் பயனைச் செய்தவனிடம் எடுத்துக் கொண்டு சேர்ப்பவன் ஒருவன் வேண்டும். அவன் இறைவனே அன்றி வேறு யாரும் கிடையாது என்று கூறுகிறது.

தெய்வச் சேக்கிழார் சாக்கிய நாயனார் புராணத்தில் இக்கருத் தைக் கூறுகிறார்.

செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்குஆகும் விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்இயல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லைஎன
உய்வகையால் பொருள் சிவன் என்றுஅருளாலே உணர்ந்தறிந்தார். (சா.நா.பு.5)

செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வானும் உளன்என் றுணர் (திருவருட்பயன் 53)

எனும் உமாபதி சிவாச்சாரியாரின் கருத்தை அறிக.

பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்து அணைப்பர்ஆங்கு.

Koviloor Digital Library

எனும் சிவஞான போதம் உதாரண வெண்பாவைக் கருதுக.

நாயன்மார்கள் அனைவரும் சைவ நெறியையும் சைவ சித்தாந்த நெறியையும் கடைப்பிடித்தொழுகி வந்துள்ளனர். ஆதலால் பெரியபுராணத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகள் இரண்டு விதமாகக் காணப்படுகின்றன. ஒன்று வாழ்க்கை வரலாற்றின் நிகழ்வுகள் ஊடே பொதிந்து உள்ளவை. மற்றொன்று சேக்கிழார் பெருமானின் சொல்லாட்சியில் காணப்படுபவை. கயிலையில் சுந்தரர் பெருமான் அவராகவே இரு பெண்களையும் விரும்பிப் பார்க்கவில்லை. இறைவனே அவ்வாறு அவர் செய்யும்படி அருளிச் செய்தான். இங்கு ஒரு சைவ சித்தாந்த நுட்பத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். அஃதாவது அடியார் பெருமக்கள் இந்தப் பூவுலகில் இறைவன் திருவுள்ளக் கருத்துப்படியே அவதரிக்கிறார்களேயன்றி அவர்களாகவே விரும்பி எந்த வினையும் செய்பவரல்லர் என்பதே அந்த நுட்பம் ஆகும் எனும் வி. குமாரசாமி அவர்களின் கருத்தை நாம் அறிய வேண்டும்.

ஜீவன் முக்தி அடைந்தோர் இறைச் சிந்தனையோடே இருப்பர். ஜீவன் முக்தர்களாகப் பத்தராய்ப் பணிவார்கள் இருந்ததைப் பின்வரும் இரண்டு பாடல்களில் தெய்வச் சேக்கிழார் கூறுவார்.

ஈசனையே பணிந்துஉருகி இன்பம்மிகக் களிப்புஎய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசுஇலா நீறுஅழித்துஅங்கு அருவிதர மயிர் சிலிர்ப்பக்
கூசியே உடல் கம்பித் திடுவார் மெய்க் குணம்மிக்கார். (ப.ப. – 6)

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றுஆடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுஉடையார் தொண்டர்ஆம் குணம்மிக்கார். (ப.ப. – 7)

சைவ சித்தாந்தம் மூன்று அளவைகள் குறித்துப் பேசுகிறது. அவை : காட்சி அளவை, கருதல் அளவை, உரை அளவை. ஒரு விஷயத்தை ஒருவன் நிச்சயிக்க வேண்டுமென்று சொன்னால் ஒன்று, தானே கண்ணால் காணவேண்டும். இல்லையெனில் யூகத்தின் அடிப்படையில் நிச்சயிக்க வேண்டும். அதாவது புகை இருக்கும் இடத்தில் நெருப்பு இருந்திருக்கும் என யூகித்தல். மண் பானையாகாது.மண்பானையாக வேண்டுமென்றால் அதற்குக்

Koviloor Digital Library

குயவன் வேண்டும். அதுபோல் இந்த அற்புதமான உலகம் தானே உருவாகி இருக்காது. எனவே அதை உருவாக்க ஒருவன் இருக்க வேண்டும். அவனே இறைவன் என யூகித்து அறிதல். மூன்றாவது உரை அளவை. அதாவது ஒரு துறையில் அனுபவம் மிக்க ஒருவர் கூறும் கருத்தை ஏற்றுக் கொள்வது. சைவ சித்தாந்தம் கூறும் மூன்று அளவைகளை,

> **ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றுஅயலார் தங்கள்**
> **காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்** (த.கொ.பு. 56)

என்று அறங்கூர் அவையினர் கூறுவதாக அமைந்த பாடல் கருத்தோடு ஒப்பிட இயலும்.

சைவசித்தாந்தக் கருத்தினை முதன்முதலில் தெளிவாக எடுத்துரைத்தவர் திருமூலர்.

> **"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்**
> **பதியினைப் போல் பசுபாசம் அனாதி**
> **பதியினைச் சென்று அணுகா பசு பாசம்**
> **பதி அணுகின் பசுபாசம் நிலாவே"** (திருமந்திரம் : 115)

Koviloor Digital Library

106. பெரியபுராணத்தில் காப்பியச் சுவை

உலகின் மிகப்பெரிய பொருளையும் அதன் அருளையும் அதன் அருள் வீழ்ச்சியையும் இறை அருள் பாலிப்பையும் காப்பியச் சுவையோடு விளக்கிய கவின் மிகு நூல் பெரிய புரணம் என்றால் அது மிகையாகாது. இன்றளவிலும் சைவ அருளாளர்களின் வரலாற்றை அருள் பொலிவோடும் தமிழ்ச்சுவையோடும் பேசுகின்ற எந்த நூலும் பெரிய புராணத்திற்கு ஈடாகாது என்பதே இதன் சிறப்பாகும்.

அடியார்களின் இயல்பு கூற வந்த தெய்வச் சேக்கிழார் ஓர் இனிமையான பாடல் மூலம் அற்புதமாக அடியார்களின் இயல்பை விளக்குகிறார்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்; (தி.கூ.சி. – 8)

கேடு, ஆக்கம் இந்த இரண்டும் இல்லாதவர்கள் ஓடு பொன் இரண்டையும் ஒன்றாகக் கருதுபவர்கள் அன்போடு கூடும் அடியார் கூட்டத்தோடு சேர்ந்து இறைவனைத் துதித்தல் அன்றி வீடுபேற்றையும் விரும்பாதவர்களாக விளங்கினார் என இப்பாடல் கூறும்.

திருவொற்றியூரில் வாழ்ந்த கலிய நாயனாரைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர் வாழ்ந்த சக்கரபாடித் தெருவையும் குறிப்பிடுகிறார்.

எயில் அணையும் முகில் முழக்கும் எறிதிரை வேலையின் முழக்கும்
பயில்தரு பல்இய முழக்கும் முறை தெரியாப்பதி அதனுள்
வெயில் அணி பல் மணிமுதலாம் விழுப்பொருள் ஆவன விளக்கும்
தயில வினைத்தொழில் மரபில் சக்கரப்பாடித் தெருவு (க.நா.பு.–5)

என்று பாடித் தன்னுடைய வரலாற்று உணர்வையும் காவியத் திறனையும் வெளிப்படுத்துகிறார் தெய்வச் சேக்கிழார்.

நடை

ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்று அயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன, முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை படிஓலை, மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்; என்றனன் மாயை வல்லான்.

(த.ஆ.பு56)

Koviloor Digital Library

இந்தக் கவிதையின் நடை நன்னடை ஆகும். ஆட்சியில் காட்சியில்,மூட்சியில், மாட்சியில் என்ற, நான்கு சொற்களும் எதுகையும் சந்த நயமும் கொண்டு விளங்குகின்றன.

தலைவராகத் திரு அவதாரம் செய்த திருஞான சம்பந்தரின் பெருவாழ்வு இறைவனது திருஉள்ளக் குறிப்பின் வழி அமைந்தது என்பதை

அவம் பெருக்கும் புல்அறிவின் அமண்முதல்ஆம் பரசமயப்
பவம் பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல்ஊழி தொறும்
தவம் பெருக்கும் சண்பையிலே தாஇல் சராசரங்கள்எலாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார் (தி.ச.பு. 26)

எனும் பாடல் கூறும்.

இப்பாடலில் புல்லறிவு, புரைநெறி ஆகிய சொற்களுக் குச் தெய்வச் சேக்கிழார் கொடுத்த அடைமொழிகள் செம்மையும் எழிலும் ஏற்றமும் கொண்டவை ஆகும்.

திருஞான சம்பந்தர் பலவகை ஞானம் கொண்டவர் என்பதைப் பின்வரும் பாடல் கூறும். இப்பர்டல் இயைபுத் தொடையும் சந்த நயமும் கொண்ட இனிய கவிதை ஆகும்.

சிவன்அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவம்அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமைஇலாக் கலைஞானம் உணர்வுஅரிய மெய்ஞ்ஞானம்
தவம்முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில் (தி.ச.பு. 70)

பரவையாரின் புற அழகை விளக்கும் பெரியபுராணப் பாடல்கள் கவிதைச்சிறப்பு கொண்டவை ஆகும்.

மான்இளம் பிணையோ? தெய்வ வளர் இள முகையோ? வாசத்
தேன்இளம் பதமோ? வேலைத்திரை இளம் பவள வல்லிக்
கான்இளம் கொடியோ? திங்கள் கதிர்இளங் கொழுந்தோ? காமன்
தான்இளம் பருவம் கற்கும் தனி இளந் தனுவோ? என்ன ! (த.ஆ.பு. – 134)

சுந்தரர் பரவையாரைக் கண்டு அதிசயித்த விதத்தைத் தெய்வச் சேக்கிழார் இனிய சொற்கள் கொண்ட இனிய கவிதையால் விளக்குகிறார்.

கற்பகத்தின் பூங்கொம்போ? காமன் தன் பெருவாழ்வோ?
பொற்புஉடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
வில்குவளை பவளமலர் மதி பூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவன்அருளோ? அறியேன்என்று அதிசயித்தார்.

(த.ஆ.பு. – 140)

Koviloor Digital Library

ஐந்துபேர்அறிவும் கண்களே கொள்ள
அளப்புஅரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக,
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லைஇல் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேர்இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறுஇலா மகிழ்ச்சியில் மலர்ந்தார். (த.ஆ.பு. – 106)

இந்தப் பாடல் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நிலையைப் படம் பிடித்துக் காட்டிக் கவிதைச் சிறப்பைப் பெறுகிறது.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர்,சுந்தரர்,சேரமான் பெருமாள் நாயனார், திருமூலர் காரைக்கால் அம்மையார் ஆகிய அருளாளர்களின் தெய்வப் பாடல்களில் உடல் உருகி உள்ளம் உருகி ஈடுபட்டவர் . தெய்வச் சேக்கிழார் இவர்களின் பாடல்கள் பலவற்றுக்கு இவர் பாடல் களாலேயே உரை எழுதுவது எண்ணி வியந்து போற்றுதற்கு உரியது.

அந்தரத்து அமரர்போற்றும் அணிகிளர் ஆடைசாத்திச்
சந்தனத்து அளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியம் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேல்ஆம் எழில்மிக விளங்கித் தோன்ற
(த.கொ.பு – 184)

கையினில் புனைபொன்கோலும் காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளும்நூலும் நெற்றியில் விளங்கும் நீறும்
ஐயனுக்கு அழகிதுஆம் என்று ஆய்இழை மகளிர் போற்றச்
சைவ மெய்த் திருவின் கோலம் தழைப்ப வீதியினைச் சார்ந்தார்
(த.கொ.பு – 185)

இப்பாடல்கள் சுந்தரமூர்த்தி நாயனாரின் புறக்கோலத்தையும் தேகப் பொலிவையும் தெளிவாகக் காட்டும் கவின்மிகு கவிதைகள் ஆகும்.

பத்தராய்ப் பணிவார்களின் பக்திப் பரவசம் குறித்துத் தெய்வச் சேக்கிழார் பாடிய பாடல் ஒன்று அவர்களது பக்தி உணர்வை நமக்குக் காட்டும்.

ஈசனையே பணிந்துஉருகி இன்பம்மிகக் களிப்புஎய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசுஇலா நீறுஅழித்துஅங்கு அருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம்பித் திடுவார்; மெய்க்குணம்மிக்கார். (ப.ப..பு – 6)

இங்ஙனம் காப்பியப் புலமையும் கவிதைப் புலமையும் கொண்டு பெரிய புராணத்தைத் தெய்வச் சேக்கிழார் அருளி உள்ளார்.

Koviloor Digital Library

107. தெய்வச் சேக்கிழாரின் புதுமையும் புரட்சியும்

தெய்வச் சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்தில் பல புதுமைகளையும் புரட்சிகளையும் செய்தார். தமிழ்ப் புலமையும், கவிபாடும் தன்மையும் பெற்றிருந்தாலும், அவரின் குறிக்கோள் மக்களின் மனத்தில் அன்பு நெறியையும் தொண்டு நெறியையும் வளர்க்க வேண்டும் என்பதாகவே இருந்திருக்கின்றது. ஒரு பாடலைச் சுவையாகப் பாடினால் பாடலின் உட்பொருள் தானே சென்று மக்கள் மனத்தில் தங்கிவிடுமென்று அறிந்து இருந்தார். வானம் இருண்டது என்பதற்கு ஓர் உவமை கூற வந்தவர்,

அஞ்சு எழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான் (த.ஆ.பு. 159)

என்கின்றார்.

தமிழருக்குள் பேதமற்ற நிலைகாண முயல்கிறார். பிறப்பால் **அந்தணராகிய திருஞான சம்பந்தரைத் தெய்வச் சேக்கிழார் ஒரே ஒரு இடத்தில் கூட 'ஐயர்' என்று குறிப்பிடவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த திரு நீலகண்ட யாழ்ப்பாணரை இரண்டு முறை ஐயரே என்று அழைக்கின்றார்.**

தில்லைவாழ் அந்தணர்கள் திருநாளைப் போவாரை ஐயரே என்று அழைக்குமாறு தம் காப்பியத்தைப் படைக்கின்றார். இதன் மூலம் சாதி வேறுபாடு, சமய வேறுபாடு, இன வேறுபாடு ஆகிய எதுவும் அற்ற ஓர் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று அவர் சிந்தித்ததை அறிய முடிகிறது.

இயல்பாகவே தெய்வச்சேக்கிழார் மனத்தினுள் மனித நேயம் மண்டிக்கிடந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர் அடியார் பெருமையை அகம் குழைந்து அருளியிருக்கிறார்.ஒரு தனி மனிதன் தன்னுடைய வாழ்நாளில் சாதிக்க முடியாத மகத்தான பணிகள் பலவற்றைச் செய்தவர் தெய்வச் சேக்கிழார். இருந்தாலும் அவர் அந்தப் பணிகளையும் மிகுந்த அடக்கத்துடன் செய்தார். அதி அற்புதமான சாதனைகளை நிகழ்த்திய தகைமை பெற்றவர் அவர்.

காலத்தால் அழியாத மிகப்பெரும் காப்பியத்தையும் காலம்தோறும் மக்கள் சென்று தொழுவதற்கு உரிய கோயிலையும்

Koviloor Digital Library

கட்டிய குன்றத்தூர் கோமான்தான் நமது தெய்வச் சேக்கிழார் என்று சொன்னால் அது மிகையன்று. தமிழும் சைவமும் காலந்தோறும் கொண்டாட வேண்டிய தகுதி பெற்றவர் அவர். அடியார்களின் வரலாற்றை அழகுற எடுத்து விளக்கிய சேக்கிழார் சுவாமிகள் எந்த ஓர் இடத்திலும் எந்த ஒரு சைவனும் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வலியுறுத்தவில்லை. அறம் சார்ந்த கருத்துக்கள் பலவற்றையும் ஒழுக்க நெறி உண்மைகள் பலவற்றையும் தமது காப்பியத்தில் இலாவகமாகத் தமக்கே உரிய பாணியில் பதிவு செய்த பாங்கு பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியது ஆகும்.

கள ஆய்வுப் புதுமை

தெய்வச் சேக்கிழார் பெருமான் காப்பியக்கவிஞர்கள் பலர் செய்யாத புதுப்புரட்சி ஒன்றைச் செய்துள்ளார். பெரும்பாலான காப்பியக் கவிஞர்கள் கள ஆய்வு மேற்கொள்ளாதவர்களே என்று துணிந்து கூறலாம். சேக்கிழார் பெருமானோ திருத்தொண்டர் புராணம் பாடும் முன்பு அடியார்களோடு தொடர்புடைய திருத்தலங்களுக்குச் சென்றார். அங்குக் கள ஆய்வு செய்தார். அங்ஙனம் கள ஆய்வு செய்த பின்னரே பல கருத்துகளை அவர் பதிவு செய்துள்ளார். இதனைப் பெரிய புராணத்தை நுண்ணிதின் ஆராய்வோர் அறிவர்.

> **ஐயர் என்ற சொல் இறைவனைத் தவிர்த்துச் சேக்கிழாரால் ஆறு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திரு நீலகண்ட யாழ்ப்பாணரைக் குறித்து நான்கு இடங்களிலும் நந்தனாரைக் குறித்து ஓர் இடத்திலும் திண்ணனாரைக் குறிப்பிட்டு ஓர் இடத்திலும் இச்சொல்லை அவர் பயன்படுத்தியுள்ளார். இச்சொல்லை அவர் அந்தணர்கட்குப் பயன்படுத்தவில்லை. தாழ்ந்த குலத்தினர் எனப் பிறரால் பேசப்படுபவர்கட்கே பயன்படுத்தியுள்ளார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சேக்கிழாரின் இப்போக்கினை அவர் வாழ்ந்த காலச் சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சரிசெய்ய அவர் கையாண்ட உத்தி எனலாம்.**

என்னும் டாக்டர். சாமி தியாகராசன் அவர்களின் கருத்தை அறிக.

பக்திச் சுவை

தெய்வச் சேக்கிழார் செய்த மற்றொரு புரட்சியைச் சிந்தித்தல் தகும். நகை,அழுகை, இளிவரல்,மருட்கை, அச்சம், பெருமிதம்

Koviloor Digital Library

வெகுளி உவகை என்று இலக்கண நூலார் எட்டு வகை மெய்ப்பாடுகளைக் கூறுவர். ஒன்பதாவதாகச் சாந்தம் என்றொரு மெய்ப்பாட்டை வட நூலார் கூறுவர். இவற்றினும் மாறுபட்ட மேம்பட்ட ஒரு மெய்ப்பாடு உண்டு. அது பக்தி எனும் மெய்ப்பாடு ஆகும். பக்தி மெய்ப்பாட்டை அழகும் அற்புதமும் நிறைந்த பல்வேறு வகை விருத்தப்பாக்கள் மூலம் உணர்த்திய பெருமை தெய்வச் சேக்கிழாருக்கு உண்டு.

ஒன்பான் சுவைகளுள் அடங்காத பக்திச் சுவையினைச் சிறப்பாகப் புலப்படுத்திய பெருமான் தெய்வச் சேக்கிழார். இதனாலன்றோ திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் தெய்வச் சேக்கிழாரைப் பன்முக ஞானம்பெற்ற பாவலர் என்றும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ என்றும் போற்றிப் பரவுகிறார். குன்றை நகர்க்குலக்கவி என்று சிவஞான முனிவர் சிறப்பித்துப் பாடினார். பீடு செய்த பகீரதி குலத் திலகர் சேக்கிழார் புகழ்புனை குன்றை முனி, சேவையர் காவலனார், தொண்டர் சீர் பரவ வல்லார் என்று உமாபதி சிவமும் போற்றிப் பரவுகின்றார். பக்தியால் பரமனையே பரவசப் படுத்திய திருத்தொண்டர்களின் பேரன்புப் பெருஞ்சிறப் பினைப் பெரிதாக எடுத்துரைத்தவர் தெய்வச் சேக்கிழார்.

அனைத்து அருளாளர்களையும் தில்லைக்கு வருவித்த ஈசன், தெய்வச்சேக்கிழாரையும் தில்லைக்கு வரவழைத்து, காப்பியம் எழுத வைத்து அரங்கேற்றமும் செய்து, பின் அங்கேயே அவரை அரவணைத்துக் கொண்டார். இவரது இச்செயல் தெய்வச் சேக்கிழாருக்கு ஒரு நாயன்மார் தகுதியை இறைவன் வழங்கினான் என்றே துணிந்து கூற ஏதுவாகின்றது.

1. திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருநீலநக்கர் இல்லத்தில் தங்கியபோது வேள்வித்தீ முன்னிலும் மிக்கெழுந்து வலம்சுழித்து எழுந்தது.
2. தாய் இல்லாத இறைவன் காரைக்கால் அம்மையாரைப் பார்த்துத் தாயே என்று அழைத்ததாகக் கூறியுள்ளமை.
3. தந்தை இல்லாத இறைவன் கண்ணப்பரைப் பார்த்து கண்ணப்ப என்று கூறியதாகப் பாடியுள்ளமை.

Koviloor Digital Library

108. தெய்வச் சேக்கிழாரும் தெய்வத் தமிழும்

தெய்வச் சேக்கிழார் பெரியபுராணத்தை இயற்றியதற்குப் பல காரணங்கள் உண்டு. தொண்டின் மேன்மையைக் கூற வேண்டும். தொண்டர்களின் சிறப்பை விளக்க வேண்டும். சைவ சமயத்தின் பெருமையை உலகறியச் வேண்டும். சைவத்தின் பெருமையை உணர்த்த வேண்டும். பக்தர்களின் சிறப்பைக் கூற வேண்டும்.

திருவெண்ணெய் நல்லூர் கோயில் முன் இறைவனும் இறைவியும் காட்சி அளிக்கின்றனர். அப்போது இறைவன் சுந்தரரைப் பார்த்து, சுந்தரா நீ முன்பு எமக்குத் தொண்டனாக இருந்தாய். என்னுடைய ஆணையால்தான் நீ இந்தப் பூவுலகில் பிறந்தாய். இப்பூவுலக வாழ்வுத் துன்பம் உன்னைத் தொடரக்கூடாது என்பதற்காக யாம் உன்னைத் தடுத்து ஆட்கொண்டோம் என்று அருளினார். உடனே சுந்தரர் என்னைக் கூட ஒரு பொருட்டாகக் கருதி ஆட்கொண்ட எம் பெருமானே உன் அருள் திறத்தை என்ன வென்று விளம்புவேன் என்று உடலும் உள்ளமும் உருக, கூறியதாகப் பின்வரும் பாடலைத் தெய்வச் சேக்கிழார் பாடியுள்ளார்.

மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல்தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார். (த.ஆ.பு. 70)

சுந்தரர் வரலாற்றின் தொடக்கத்திலேயே அவரை நோக்கி இறைவன் தம்மைத் தமிழால் பாடுக எனச் சொல்வதிலிருந்து ஞானசம்பந்தர் நாவுக்கரசர் ஆகியோர் காலத்திற்குப் பின்னர் தமிழ் வழிபாட்டியக்கத்தில் ஒரு தொய்வு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதும் அவ்விருவர் பாடல்களில் மனம் மகிழ்ந்திருந்த ஆண்டவன் அதைப் போன்ற பாடல்கட்கு ஏங்கியிருக்கிறான் என்பதும் அதனால் தான் எடுத்த எடுப்பிலேயே,

சுந்தரர் பணி (தொண்டு) எதுவாக இருக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறான் எனவும் கருத வேண்டியுள்ளது

Koviloor Digital Library

என்று டாக்டர் சாமி. தியாகராசன் தம்முடைய பெரியபுராணச் சிந்தனை எனும் நூலில் கூறியிருப்பதை இங்கு நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தெய்வச் சேக்கிழார் தெய்வத்தமிழைத் தாம் இயற்றிய பெரிய புராணத்தில் பல இடங்களில் போற்றியுள்ளமை காணலாம். திருஞானசம்பந்தர்,திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய பதிகங்களைப் பாராட்ட வந்த சேக்கிழார் பெருமான் பின்வரும் சொற்றொடர்கள் மூலம் பாராட்டுகிறார்.

1. தமிழ் மாலை
2. தமிழ் மறை
3. தமிழ்ப் பதிகம்
4. செந்தமிழ்ப் பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் தெய்வச் சேக்கிழார் தரும் அடைமொழிகளும் அவரது தமிழ்ப்பற்றை நமக்குக் கூறுகின்றன.

சான்றுகள்

1. தமிழாகரர்
2. தமிழ் விரகர்
3. வண்டமிழின் மொழி விரகர்
4. தமிழ்வேதம் பாடினார்.
5. வேதம் தமிழால் விரித்தார்.
6. தமிழ் மறையாம் பதிகம் பாடினார்.
7. செந்தமிழால் சந்த இசை போற்றிசைத்தார்
8. இன்தமிழ் பாடிய ஞானசம்பந்தர்
9. தென் தமிழ் விளங்க வந்த திருக்கழுமலத்தான்
10. மொழிக்காதல் கொண்டவர்.

மேற்கண்ட சான்றுகளைத் தமிழ் அறிவுடையார் அறிந்து அகம் மகிழ்க. தமிழ் உணர்வுடையார் உணர்ந்து உவகை கொள்க. தமிழ்த் தெளிவுடையார் தெளிந்து விளக்குக

தமிழ்ப் புலமை

தெய்வத்தமிழில் புலமை பெற்றவர் தெய்வச் சேக்கிழார் என்பதற்கு ஒரு சான்று காண்போம்.

Koviloor Digital Library

தெய்வச் சேக்கிழாரின் தந்தை அரசவைக்குச் சென்றிருந்தார். அப்போது அரசன் அரசவையில் மூன்று கேள்விகள் கேட்டான். அவை; மலையைவிடப் பெரியது எது? மண்ணைவிடப் பெரியது எது? கடலைவிடப் பெரியது எது? இந்த மூன்று கேள்விகளுக்கும் மறுநாள் விடைகூற வேண்டும் என்று கூறியிருந்தான்.

(காண்க : சபாபதி நாவலர் எழுதிய சிதம்பர சபா நாத புராணம்)

மறுநாள் யாராலும் மன்னன் கேட்ட வினாக்களுக்கு விடை அளிக்க முடியவில்லை. இதனால் தெய்வச் சேக்கிழாரின் தந்தையார் கவலை அடைந்தார். இந்த மூன்று வினாக்களுக்கும் உரிய சரியான பதிலை மூன்று குறட்பாக்கள் மூலம் கூறினார் தெய்வச் சேக்கிழார்.

1. **நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
மலையினும் மாணப் பெரிது (குறள்:124)

2. **காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
ஞாலத்தின் மாணப் பெரிது (குறள்:102)

3. **பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்**
நன்மை கடலின் பெரிது. (குறள்:103.)

இவற்றைத் தந்தையார் அரசவையில் சொல்ல அரசனும் அவையினரும் மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சிதான் தெய்வச் சேக்கிழார் முதலமைச்சராகப் பணியாற்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. தெய்வச் சேக்கிழார் தமது இளமையிலேயே தமிழ் நூல்கள் பலவற்றைக் கசடறக் கற்றுத் தேறினார். தெய்வத் தமிழ் நூல்களான எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற பழைய இலக்கியங்களைப் பழுதறக் கற்ற புலமையாளர். தமிழ் இலக்கியங்களை அவர் கற்றுத் தேர்ந்ததுடன் அவற்றைப் பிறருக்குப் போதிக்கும் வல்லமையும் பெற்றிருந்தார்.

தெய்வச் சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணக் காப்பியத்தில் தமிழ் நூல்களின் தொடர்களை எடுத்தாண்டுள்ள திறத்தினால் இதனை அறிய முடிகிறது. தமிழர்களுக்குக் கிடைத்துள்ள முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தை நன்கு கற்றவர் என்பதை அவரது காப்பியத்தை ஆராய்வோர் அறியலாம். சான்று: **மாயோன் மேய காடுறை உலகம்** (அகத்திணை இயல் நூற்பா : 5) இக்கருத்தைச் சேக்கிழார் பெருமான் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் **முல்லையின் தெய்வம் என்றருந் தமிழ் உரைக்கும் செங்கண்மால்** (பா. 18) என்று விளக்கியிருத்தல் காண்க . இங்கு அருந்தமிழ் என்பது தொல்காப்பியத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

அருளாளர்களின் அருந்தமிழை உலகெலாம் கொண்டு சேர்க்கத் தணியாத தாகம் கொண்டவராக இருந்தார். இந்த எண்ணம் ஈடேற வேண்டி அவர் இறைவனிடமே வேண்டுதல் புரிந்தார்.

நாயன்மார்களின் பதிகச் செய்யுள்களின் தொடர்களைப் பல இடங்களில் தெய்வச் சேக்கிழார் எடுத்தாண்டு போற்றி யுள்ளார். தேவார ஆசிரியர்கள் பாடியருளிய பதிகங்கள், அவை பாடப் பெற்ற சூழல், பதிகத்தின் முதல் தொடர், ஆகியவற்றை மிகுந்த பொறுப்புணர்வோடு பதிவு செய்துள்ளார் தெய்வச் சேக்கிழார். மேலும் பல இடங்களில் தேவாரப் பாடல்களுக்குத் தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டு உரைசெய்திடும் திறத்தைக் காணலாம். வாழ்க அந்தணர் என்று தொடங்கும் திருப்பாசுரப் பதிகத்தில் உள்ள 12 பாடல்களுக்கு 24 பாடல்களில் உரை கூறுகிறார் தெய்வச் சேக்கிழார்.

இன்று தமிழர் அனைவரும் பயன்படுத்தும் நல்வரவு (Welcome) என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் தெய்வச் சேக்கிழார்.

மங்கலச் சொல்லைப் பயன்படுத்தும் பண்பாளர் தெய்வச் சேக்கிழார். மறந்தும் அமங்கலச் சொல்லைப் பயன்படுத்தாதவர். கண்ணப்ப நாயனார் புராணத்தில் **கொன்றருளி** என்றும் வேட்டை யாடுதலைத் **தனிப்பெருவேட்டை** என்னும் மங்கலக் குறிப்போடு குறிப்பிடுவார். அப்பூதியடிகள் புராணத்தில் **நன்று அருளிச் செய்திலீர்** என நயமாக உரைப்பார். மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் முத்தநாதன் செய்த கொலையை, **கருதிய அப்பரிசே செய்தான்** என நாகரிகமாகக் குறிப்பிடுவார்.

Welcome – **நல்வரவு**

By Pass – **மருங்குவழி**

Servant – **தொழிலர்**

Flight – **எழுவிமானம்.**

சிவலிங்கம் - **அருட்கரு**

பத்மாசனம் – **தேவிருக்கை.** (தே-தெய்வம்)

Shift – **பணிமாறல்**

இப்படிப் பல தமிழ்ச் சொற்களை உருவாக்கிய பெருமை சேக்கிழாருக்கு உண்டு. தமிழ்மொழிக்கு 314 அடைமொழிகள்* கொடுத்துச் சிறப்பித்த முதல் தமிழ்ச் சான்றோர் தெய்வச் சேக்கிழார்.

*முனைவர் அ. பாலறாவாயரின் முனைவர் பட்ட ஆய்வேடு.

Koviloor Digital Library

பெரியபுராணத்தை அறிய துணைபுரியும் நூல்கள்

I. மூலமும் உரையும்

1. சுப்பிரமணிய முதலியார், சி.கே., (உரை)., திருத்தொண்டர் புராணம், (எட்டுத் தொகுதிகள்), கோவைத் தமிழ்ச் சங்கம் கோயம்புத்தூர், 1937, 1950.
2. சுந்தரமூர்த்தி, கு., (உ.ஆ.) திருத்தொண்டர் புராணம் (இருபெரும் தொகுதிகள்), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை - 609 001, 2008
3. திருத்தொண்டர் புராணம் மூலம் மட்டும், காசித் திருமடம், திருப்பனந்தாள்-612 504, மு.ப. 1950, எட்டாம் பதிப்பு, 2002.
4. திருத்தொண்டர் புராணம், மூலமும் உரையும், ஸ்ரீநமச் சிவாய மூர்த்தி அச்சகம் திருவாவடுதுறை ஆதீனம், 1963
5. திருச்சிற்றம்பலம், சிவ., பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் தெளிவுரை, கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு,, தி. நகர், சென்னை-600 017, 2006.
6. சுப்பிரமணியம், இராம (ப.ஆ.), பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் தெளிவுரை- நான்கு தொகுதிகள், திருமகள் நிலையம், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை-600 017. 2004
7. ஞானசம்பந்தன், அ.ச., (ப.ஆ.), சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், 154, டி.டி.கே. சாலை, சென்னை-600 018., 1993.
8. மாணிக்கனார் அ., சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் மூலமும் தெளிவுரையும், (ஆறு தொகுதிகள்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-600 017. 2000
9. நடராஜன் பி.ர. (உ.ஆ.), திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் (4 தொகுதிகள்), உமா பதிப்பகம், பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை - 600 001.
10. சேக்கிழார், பெரியபுராணம், குமரகுருபரன் பிள்ளைப் பதிப்பு, ஸ்ரீவைகுண்டம், 1964.

Koviloor Digital Library

II. உரைநடை நூல்கள்

1. ராமநாதன் அரு, (ப.ஆ.), அறுபத்து மூவர் கதைகள், (பெரிய புராணம் வசன வடிவில்), பிரேமா பிரசுரம், 59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024, 1967
2. பட்டுசாமி ஓதுவார், தி., திருத்தொண்டர் புராணம் உரைநடை, காசித் திருமடம், திருப்பனந்தாள் - 612 504, தஞ்சை மாவட்டம், 2003
3. திரு.வி.க., '63 நாயன்மார்', மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600 108, 2001
4. முருகவேள் ந.ரா., அறுபத்து மூவர், அநுராகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 600 017.
5. அருணாச்சல முதலியார், பெரிய புராண வசனம், பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை. 1941.
6. கிருபானந்த வாரியார், பெரியபுராணம், குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், 107, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002, 2005
7. சிவப்பிரியா, சுந்தரர் போற்றிய அறுபத்து மூவர், தென்னவர் திருநெறிப் பதிப்பகம், 969, பாபா கரக்சிங் மார்கம், புதுதில்லி - 110 001, 2005

III. திறனாய்வு நூல்கள்

1. ஞானசம்பந்தன், அ.ச., 'பெரிய புராணம் ஓர் ஆய்வு', தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.
2. ஞானசம்பந்தன், அ.ச., சேக்கிழார் தந்த செல்வம், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 600 017. 1994
3. இராசமாணிக்கனார், மா., பெரியபுராண ஆராய்ச்சி, அலமு பதிப்பகம், 9, அய்யா தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014, 2002
4. சிவகுருநாதப்பிள்ளை, மா., நாயன்மார்கள் வரலாற்றில் பல்வகைச் செய்திகள், திருவரசு பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-17, 1999.
5. சிதம்பரம் மயில்வாகனன்,பெரியபுராணம் சமூகப் பார்வை (தொகுதி - 1), மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத் தெரு, சிதம்பரம் - 608 001, 2001
6. காமாட்சி, பி., பெரியுபுராணம் காட்டும் சமுதாய நிலை, இரத்தினா பதிப்பகம், திண்டுக்கல், 1993.

Koviloor Digital Library

7. இரத்தின கிருஷ்ணமூர்த்தி, பெரியபுராணத்தில் உருவக் காட்சி, தாயகம் வெளியீடு, பழனி, 1993.

8. தியாகராசன், சாமி., பெரிய புராணச் சிந்தனை, திருநெறித் தமிழ்ப் பதிப்பகம், கும்பகோணம், 1994.

9. பெரிய புராணச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, சென்னை, 1970.

10. பரமசிவம், சொ., சேக்கிழாரின் இலக்கியத் திறன், பட்டு பதிப்பகம், சென்னை, 1972.

11. கங்கை, ப., பெரிய புராணத்தில் முப்பொருள், வேமன் பதிப்பகம், நுங்கம்பாக்கம், சென்னை-34, 1998.

12. பரமசிவம், த.கோ., நல்ல நாயகி, ம., நல்ல சிவம், கோ.ப. பெரிய புராண ஆய்வு மாலை, வாரணாசி - 2001, திருப்பனந்தாள் - 2001.

13. சுப்புலட்சுமி, ந., பெரியபுராணத்தில் பெண்மை, செந்திற் பதிப்பகம், 84, நான்காம் வீதி, காந்திபுரம், கோயம்புத்தூர்-12, 1966.

14. வீராசாமி, தா.வே.பெரியபுராணச் சிறப்புப் பெயரகராதி (ஊர்ப் பெயர்கள்), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை, 1986.

IV. ஆய்வேடுகள்

1. பாலறாவாயன், அ., சேக்கிழார் ஒரு தமிழ் உணர்வாளர், (முனைவர் பட்ட ஆய்வேடு), தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005, 1996.

2. பரமசிவம், சொ., பெரியபுராணம் காட்டும் பண்பாடு, (முனைவர்பட்ட ஆய்வேடு), பட்டு பதிப்பகம், சென்னை, 1992.

3. நீலா செல்வராஜ், பெரிய புராணத்தில் வாழ்வியல் சிந்தனைகள், (முனைவர் பட்ட ஆய்வேடு-2007, தமிழ்த்துறை (தொ.க.நி.), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005.

4. சம்பந்தன், பெரியபுராணத்தில் இயற்கை, (எம்.ஃபில். ஆய்வேடு-2006),தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005, ஆய்வேடு எண். 4805

5. தமிழ்ச்செல்வி, பெரியபுராணம் காட்டும் வயலும் வாழ்வும், (எம்.ஃபில். ஆய்வேடு), தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005.

5. ராகவன், பெரிய புராணத்தில் உவமைகள், (முனைவர் பட்ட ஆய்வேடு), தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600 005. 1996. ஆய்வேடு எண் : 1765.

Koviloor Digital Library

V. மொழிபெயர்ப்பு (ஆங்கிலம்)

1. வன்மீகநாதன், ஜி., **Periyapuranam,** மகாலிங்கம், நா. (ப.ஆ.) இராமகிருஷ்ண மடம் வெளியீடு, சென்னை, 1985

2. Ramachandran T.N. **Periyapuranam,** Vol-I 510 Pages, Vol-II 700 Pages, Tamil University, Thanjavour, India. 1990.

3. ALASTAIR MCGLASHAN **The History of The Holy servants of the Lord Siva** (A Translation of the Periya puranam of Cèkkiḻar), Trafford Publishing (UK) Limited, 9 Park End street, 2nd Floor, Oxford, UK OX1 1HH United Kingdom, 2006.

4. **www.devaram.org** மறவன்புலவு க. சச்சிதானந்தன் முயற்சியால் உருவாக்கப் பெற்றுள்ள இந்த இணையதளத்தில் பன்னிரு திருமுறைகளையும் 12 மொழிகளில் மூலம் உரையுடனும் காணலாம்- படிக்கலாம் - ஒலியாகவும் கேட்கலாம்.

VI. வடமொழி (Sanskrit)

1. ரத்னகேட் சீனிவாச தீட்சதர், **சிவபக்த விலாசம்,** காஞ்சிபுரம், 1532.

VII. கன்னடம்

1. அரிஸ்வரர் (எ) அரிகரர் என்பவரால் **சிவகத பிரகலே சிவகத ரகலே கம்பியன்ன ரகலே** என்ற பெயரில் கன்னடத்திலும் பெரியபுராணக் கதைகள் எழுதப்பெற்றுள்ளன.

VIII. வரலாறு

1. உமாபதி சிவாச்சாரியார் **திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் புராணம்,** திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1967.

2. கா.சு. பிள்ளை, **சேக்கிழார்,** கழக வெளியீடு, 1928

3. இராசமாணிக்கம், மா.,**சேக்கிழார்** (ஆராய்ச்சி நூல்), எஜீகேஷ்னல் பப்ளிஷிங் கம்பெனி. சென்னை, 1945.

4. அருணாசலம், மு., **சேக்கிழார்,** காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம், 1972.

5. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை,**சேக்கிழார் பிள்ளைத் தமிழ்,** திருப்போரூர் தேவஸ்தான வெளியீடு.

6. கருணாநிதி, ந.,**சேக்கிழார் போற்றும் சிவனடியார்கள்** ஜோதி புத்தக நிலையம், நங்கநல்லூர், சென்னை-61, 2003

Koviloor Digital Library

7. சிவபாதசுந்தரம் சோ., சேக்கிழார் அடிச்சுவட்டில் அறுபத்துமூவர் வரலாறும் யாத்திரையும், வானதி பதிப்பகம், சென்னை-17. 1989

8. மகேஸ்வரி வேலாயுதம் தெய்வச் சேக்கிழார், இந்து சமய அலுவலர்கள், அமைச்சு-இலங்கை, ஐந்தாம் உலகச் சேக்கிழார் மாநாட்டு மலர் - 2005

9. இராமலிங்கம், அரங்க.,தெய்வச்சேக்கிழார், அநுராகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-17, 2005 & 2008.

IX. சித்திர நூல்கள்

1. மகாலிங்கம், நா., (பொ.ஆ.) சித்திரப் பெரியபுராணம், வசனம் - அரங்கசாமி, ஓவியம் எஸ். ராஜம், இராமலிங்கர் பணிமன்றம், 72, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032, 2000

* இந்நூல் இந்தி, ஆங்கில மொழிகளிலும் வெளிவந்துள்ளது.

X. சேக்கிழார், நாயன்மார், தொடர்பான நூல்கள்

1. வெள்ளைவாரணன், க.,பன்னிரு திருமுறை வரலாறு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1969.

2. கந்தசாமி, சொ.ந., பன்னிரு திருமுறை, மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம், 608 001, 2007.

3. சுப்பிரமணியன், நா., நால்வர் வாழ்வும் வாக்கும், கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை-17. 2002

4. தெ.பொ.மீ., சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், வர்த்தமானன் பதிப்பகம், 21, இராமகிருஷ்ண தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை-17, 1997.

5. சிவகுருநாதப்பிள்ளை, மா. தவமுதல்வர் சம்பந்தர், திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-17, 2001.

6. சிவகுருநாதப்பிள்ளை, மா. ஆயிரம் பிறை கண்ட அரசு, திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-17, 2001.

7. சோமசுந்தரம், பி.எஸ்., சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சிகள், எல்.கே.எம். பப்ளிகேஷன்ஸ், 14/4, ராமநாதன் தெரு, தி.நகர், சென்னை-17, 2006.

Koviloor Digital Library

8. இரத்தினசபாபதி, வை., திருஞானசம்பந்தர் - ஓர் ஆய்வு இரு தொகுதிகள், சென்னைப் பல்கலைக்கழகம், 1984, 1985.

9. இரத்தினசபாபதி, வை.,திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு, இரு தொகுதிகள், சென்னைப் பல்கலைக்கழகம், 1984, 1985.

10. இரத்தினசபாபதி, வை., சுந்தரர் - ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், 1986.

11. இரத்தின சபாபதி, வை., திருமுறைச் செந்நெறி, அரனருள் வெளியீடு, சென்னை-600 095, 2005.

12. குன்றக்குடி அடிகளார், சமய இலக்கியம், (15 தொகுதிகள்), மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108, 2001.

13. அறிவுடை நம்பி, ம.சா., டாக்டர், திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், கருமணி பதிப்பகம், 16ஏ, இராமையா தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை-625 011, 1986.

14. சிங்காரவேலன், சொ., திருஞானசம்பந்தர் வரலாற் றாராய்ச்சியும், தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு, சென்னை, 1969.

15. சோமசுந்தரம், பி.எஸ்., டாக்டர், சம்பந்தர் திருநெறி, வாணி பதிப்பகம்,95/45ஏ, பாரதி நகர் மெயின் ரோடு, ஜமீன் பல்லாவரம், சென்னை-43, 2003.

16. நடேசக் கவுண்டர், கு., அப்பர் வரலாற்றாராய்ச்சியும், தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு, சென்னை, 1972.

17. சீதா ராமதாஸ், முனைவர், திருஞானசம்பந்தர் தேவாரம் காட்டும் பன்முகக் கோட்பாடுகள், மங்களம் பதிப்பகம், 1ஏ/2, இளங்கோ தெரு, தண்டீஸ்வர நகர், வேளச்சேரி, சென்னை-600 042. 2007.

18. இராமலிங்கம், அரங்க., திருஞானசம்பந்தரின் ஆளுமைத் திறம், அநுராகம், 19, கண்ணதாசன் சாலை, சென்னை-17.

19. துரைசாமிப்பிள்ளை, ஔவை, சு., சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1978.

Koviloor Digital Library

ஆசிரியரின் நூல்கள்

1. பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை	60.00
2. சங்க இலக்கியத்தில் வேந்தர்	200.00
3. வெஞ்சினமும் வஞ்சினமும்	60.00
4. பௌத்தம் போற்றிய பெண்தெய்வங்கள்	60.00
5. திருவள்ளுவர் இறைநெறி	60.00
6. தாடகை	60.00
7. புரட்சிக் கவிஞரும் பொதுவுடைமையும்	75.00
8. அறிவே சோதி	75.00
9. திருவடி	60.00
10. ஒழுக்கம்	100.00
11. முருக பக்தி	40.00
12. சித்தர் வழி	40.00
13. சித்தர் நோக்கில் சைவ நெறி	12.00
14. The way of the Siddhars	12.00
15. Leadership qualities of Saivaite Saint THIRUGNANA SAMBANTHAR	8.00
16. வ.உ.சி. கண்ட மெய்ப்பொருள்	75.00
17. சித்தர் இறைநெறி	30.00
18. பயன்பாட்டுத் தமிழ்	85.00
19. மெய்ப்பொருள்	12.00
20. திருத்தொண்டர் வரலாறு	175.00
21. தெய்வப்புலவர் திருவாய்மொழி	200.00
22. தெய்வச் சேக்கிழார்	12.00

பதிப்பாசிரியர்:

23. திருவாசக ஆய்வு மாலை	140.00
24. நெஞ்சில் நிறைந்த அரங்கநாதர்	50.00

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 14765

Koviloor Digital Library

Koviloor Digital Library

அருள்மிகு சிவகாமி உடனுறை
தில்லை நடராசர்